நிகண்டுச் சொற்பொருட் கோவை

தெய்வப் பெயர்

மு. சண்முகம்பிள்ளை

பதிப்புத்துறை
மதுரை காமராசர்
பல்கலைக் கழகம்

நிகண்டுச் சொற்பொருட் கோவை

தெய்வப்பெயர்

உங்கள் வழிகளையும்
கிரியைகளையும்
சீர்ப்படுத்துங்கள்.
எரே.7:3

புலவர் மு. சண்முகம் பிள்ளை

தமிழியற்புலம்

பதிப்புத்துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை-21
1982

பதிப்புரிமை ©

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021

Publications Division
Madurai Kamaraj University
Madurai - 625 021

பதிப்பு எண் : **58**

பதிப்பு விவரங்கள் :

1)	நூலாசிரியர்	: புலவர் மு. சண்முகம் பிள்ளை *(Pulavar M Shanmugam Pillai)* ஆய்வாளர் (1980 – 1982) தமிழியற்புலம்
2)	தலைப்பு	: நிகண்டுச் சொற்பொருட் கோவை *[Terms and meanings in Nikandu]*
3)	பதிப்பு	
	1) இடம்	: மதுரை காமராசர் பல்கலைக்கழகம் *[Madurai Kamaraj University]* *Madurai - 625 021. Tamil Nadu*
	2) பதிப்பித்தோர்	: பதிப்புத்துறை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மதுரை - 625 021
	3) ஆண்டு	: 1982 (முதற் பதிப்பு)
4)	மொத்த பக்கங்கள்	: 391
5)	பொருள்	: சொற்பொருள்
6)	**விலை**	: ரூ. **29-00**
7)	அச்சும் அமைப்பும்	: டையோசிசன் வினாக்ஸ் பிரஸ், மதுரை.

முன்னுரை

தமிழ்க்கல்வியில் இலக்கியம், இலக்கணம், நிகண்டு என்னும் மூன்றும் மூன்று கண்கள். நிகணடு என்னும் உரிச்சொற்பனுவல்கள் சொற்பொருள் விளக்கும் நூல்களாகும். எனவே நிகண்டுக் கல்வியால் இலக்கிய இலக்கணப் பயிற்சி எளிதாகும். ஆதலின் நிகண்டு கற்பதற்கு நம் முன்னையோர் முதலிடம் தந்திருக்கின்றனர். இது நிகண்டுகளின் முதன்மைச் சிறப்பாகும்.

இன்றைய அகராதிகளின் நிலையில் பாடல் வடிவில் அமைந்த சொற்பொருள் விளக்கநூல்கள் நிகண்டுகளே. ஏறத்தாழ 1200 ஆண்டு களாக இவ்வகை நூல்கள் பல்வேறு காலங்களில் அவ்வக் காலத்திற்கு இயையத் தோன்றிப் பயன் தந்துள்ளன. இந்நிகண்டு வரலாற்றின் தொடக்கநூல் திவாகரம. அண்மையில் மறைந்த தமிழ்ப் பெரியார் கவி ராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் (மான்முருகனார்) இயற்றி வெளியிட்டுள்ள தமிழுரிச் சொற்பனுவல் இந்த இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நிகண்டுச் செல்வம்.

இலக்கியச் சொற்களைக் காலந்தோறும் கணித்தறிவது மொழி வளர்ச்சிக்கும் பயிற்சிக்கும எவ்வளவு இன்றியமையாததோ அது போன்றே நிகணடுச் சொற்பொருள்களை வரன்முறைபபடி தொகுத்துப் பயில்வதும் இன்றியமையாததாகும். நிகண்டுகளில் தெய்வப்பெயர் முதலாகப பல்வேறு பெயர்களையும் தனித்தனித் தொகுத்துத் தருவது மரபு. மேலும், ஒரு சொல்லுக்குரிய பல்வேறு பொருள்களையும ஒருஙகு தொகுத்துத் தரும் தொகுதி மிக முக்கியமாகக் கருதத்தக்கது. இது அகராதி போலப பயன்படுவதற்குரிய தனிப்பகுதியாகும். சிறசில நிகண டுகள் இந்த ஒருசொற்பல்பொருள் பற்றியே தனிப்படவும் தோனறி யுள்ளன.

நிகண்டுகளில் ஒவ்வொரு வகைப்பெயரும் தனித்தனித் தொகுப்பில் தரப்படுவதோடு அந்தந்த வகையுட்பட்ட பொருள்களையும ஒருவகை அடைவு முறையில் அமைத்துத் தருதலையும நிகண்டாசிரியர்கள் ஒருதனி மரபாகக் கொண்டுள்ளனர். இதுவரை தமிழில் அச்சாகியுள்ள நிகண்டு கள் இருபதுக்கும மேலுள்ளன. இவை குறித்த விளக்க அடடவணைகள் எட்டு இரணடாம் அததியாயத்தில் இணைக்கப்பட்டுள்ளமை காணலாம.

நிகண்டுச சொறபொருட் களஞ்சியம மிகமிகப பெரிது. அவற்றுள் தெய்வப் பெயர்களைப் பறறிய ஆய்வினைக் கொணடுள்ளது இந்நூல.

தெய்வப்பெயர் பற்றிய இம்முதல் நூலில் தமிழ் நிகண்டுகளின் தோற்றமும் வளர்ச்சி வரலாறுகளும் முதற்கண் விவரிக்கப்பட்டுள்ளன. அடுத்துத் தமிழ நிகண்டு நூல்களின் வரலாறு விளக்கமாகத் தரப்பட்டுள் ளன. எல்லா நிகண்டுகளின் அமைப்புப் போக்கும் நன்கு அறியப்பட்டால் தான் அவற்றுள் அடங்கிய பொருள்களை முறையே கண்டு தெளிய வாய்ப்பாகும். ஆகவே, நிகண்டுகளின் பொருட்பாகுபாடு பற்றி விரி வாக ஆராய்ந்து எழுதி அட்டவணை வழியாகவும் விளக்கம் தரப்பட டுள்ளது.

இதுவரை நமக்குக் கிட்டியுள்ள நிகண்டுகளுள் தெய்வப்பெயர் பற்றி விளக்கும் நிகண்டுகள் பத்து உள்ளன. அவையாவன : திவாகரம் பிங்கலம், உரிச்சொல் நிகண்டு, கயாதரம் பாரதிதீபம், சூடாமணிநிகண்டு ஆசிரியநிகண்டு, நாமதீப நிகண்டு, பொதிகை நிகண்டு, தமிழுரிச் சொற் பனுவல் என்பனவாம. இந்தப் பத்து நிகண்டுகளிலும் தெய்வப்பெயர்த் தொகுதி எந்த முறையில் அமைத்துத் தரப்பட்டுள்ளது, பொருள்வைப்பு முறை எவ்வாறு உள்ளது, தெய்வப்பெயர்ப் பாகுபாடு எவ்வாறு அமைக் கப்பட்டுள்ளது என்பனவற்றை ஆராய்ந்து விளக்கம் தந்துள்ளதோடு அவற்றை எளிதில் காணும வகையில் அட்டவணைகளும் சேர்க்கப் படடுள்ளன

தெய்வப்பெயர் விளக்கம் என்பது இந்நூலுள் நடுநாயகமாக உள்ளது. தெய்வப் பெயர்த் தொகுப்பினைக் கொண்ட பத்து நிகண்டு களிலும் ஒவ்வொரு தெய்வத்திற்கும் உரிய பெயர்களையெல்லாம் ஒருங்கு தொகுத்து அவறறால் தெரிய வரும் செய்திகளை விளக்குவதனை நோக்க மாகக் கொண்டு இப்பகுதி எழுதப்பட்டுள்ளது. இப்பெயர்கள் தொடர் பாக இலக்கியங்களில் காணப்படும் செய்திகளும் உரிய இடங்களில் இணைத்துத் தரப்பட்டுள்ளன. மேலும் நிகண்டுகளில் இடம் பெறாது இலக்கிய வழக்காயத் தெரியவரும் பெயர்களும் ஏற்ற இடங்களில் சுட்டிக் காட்டப்படடுள்ளன.

நிகண்டுத் தொகுப்புகளில் இலக்கியங்களில் உள்ள அனைத்துச் சொற்களும் இடம்பெறவில்லைம் என்பது தெய்வப்பெயர் விளக்கம பற்றிய பகுதியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பொதுவாக நிகண்டு களின் போக்கு ஒரு தன்மையவாய்க் காலத்திற்கேற்ற சிற்சில வளர்ச்சி நிலைகளுடன் காணப்படுகினறன; என்றாலும் இலக்கிய வழக்குகளை முதன்மையாய்க் கொண்டன என்று எந்த நிகண்டையும அறுதியிட்டுக் கூறுவதற்கிலலை. இது குறித்து எடுத்துக்காட்டுகளுடன இப்பகுதியில விளக்கம தரப்படடுள்ளது.

இலக்கிய வழக்கில் தெய்வப்பெயர்த் தொகுப்பில் அடங்கிய பொருள்கள் எவ்வெவ்வாறு உள்ளன என்பதனை ஒப்பு நோக்கிக் காணும வகையில் இலக்கிய அடிப்படையில் தெய்வப்பெயர் விளக்க ஆய்வுரைகள் இதன்கண இணைக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியத்தில் காணும்தெய்வங்கள்-வழிபாடும் மக்கட்பண்பாடும், எணவகை உருவநிலை தமிழ்நூல்களில் காலவகை விளக்கம் என்பன பெருமபாலும் தெய்வப் பெயர்த்தொகுப்பில் இடமபெறற பொருள்கள் பற்றிய இலக்கிய வழக்கு களை எடுத்துக்காட்டுவனவாகும்.

நூலின் இறுதிப் பகுதியாகத் தெய்வப்பெயர்த் தொகுப்பு அமையும் என எட்டாம் அத்தியாயத்தின் இறுதியில் குறிக்கப்பட்டது. இத் தொகுப்பு ஒரு தனி நூலளவுக்கு மிகுதியாக உள்ளது. நூலின் விளக்கப் பகுதிகளே மிக விரிந்துவிட்டமையால் இத்தொகுப்புத் தனி நூலாக அடுத்து வெளியிடப்பெறும். ஒவ்வொரு தெய்வமாக எடுத்துக்கொண்டு இலக்கிய நூல்கள், சமய சாத்திர தோத்திர நூல்கள் முதலியவறறையும் நன்கு துருவி ஆராய்ந்து பார்ப்பதற்குத் தூண்டுகோலாக இத்தெய்வப் பெயர்ச் சொற்பொருட்களஞ்சியம் அமைந்துள்ளது. இவ்வகையால ஆராய்ந்து பார்க்கும் முறைக்கு ஒரு முன்னோடி வழிகாட்டியாக இத்தெய் வப் பெயர்த் தொகுப்பு விளக்க நூல் திகழத்தக்கதாகும.

தமிழியற்புலத்தில் பணிபுரிய வாய்ப்பளித்த மதுரைக காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பெருந்தகைக்கும் ஆட்சிக் குழுவினருக் கும என் நன்றியும வணக்கமும உரியவாகுக

இந்நூலை விரைவாகவும் நன்முறையிலும் அச்சியற்றிய பசுமலைத் திருமண்டல விளக்ஸ் அச்சகத்தாருக்கு மிக்க நன்றி. அச்சுப்படிகளைத் திருத்த உடனிருந்து உதவிய திரு. த. சோமசுந்தரத்திற்கு நல்வாழ்த்துகள்.

நிகண்டுநூல்களின் பயிற்சி இந்நாளில் மிகவும் குறைந்துவிடடது. அச்சில் வந்துள்ள நிகண்டுகள் சில செம்மையாய்ப் பதிப்பிக்கப் பெறவும் இல்லை. இன்னும் வெளிவராமல் சுவடிகளில் மறைந்து கிடப்பனவும் சில உள. சொற்பொருள் வளர்ச்சி, தமிழ்மரபு முதலியவற்றைத் தெரி விக்கும் இத்தகு நூல்கள் நன்முறையில் வெளிவந்தால்தான் தமிழ்மொழி யின் வளர்ச்சியை உள்ளவாறு கணித்தறிய இயலும். நிகண்டு நூலா ராய்ச்சியும் பெருக வாய்ப்பாகும ஆகவே, நிகண்டுநூல் ஆய்வில தமிழறிஞர் உள்ளம் தோய்வதாக.

மதுரை
20—6—'82

மு. சண்முகம் பிள்ளை

பொருளடக்கம்

	முன்னுரை	...	3
1.	தமிழ் நிகண்டுகளின் பொதுவரலாறு	...	௧
2.	தமிழ் நிகண்டுகளின் தோற்றமும் வளர்ச்சியும்	...	௧௧
3.	நிகண்டு நூல்களின் வரலாறு	...	௪௧
4.	நிகண்டுகளில் பொருட் பாகுபாடு	...	௧௩௭
5.	நிகண்டுகளில் கடவுள் வாழ்த்து	.	௧௫௫
6.	தெய்வம் எனும் பெயர் வழக்கு	...	௧௫௮
7.	தெய்வப் பெயர் வகையும் வைப்பு முறையும்	...	௧௬௨
8.	தெய்வப்பெயர் விளக்கம்	...	௧௬௬
9.	சங்க இலக்கியத்தில் காணும் தெய்வங்கள் : வழிபாடும் மக்கட்பண்பாடும்	...	௨௮௨
10.	எண்வகை உருவ நிலை	...	௩௧௧
11	தமிழ் நூல்களில் காலவகை விளக்கம்	...	௩௨௨

1

தமிழ் நிகண்டுகளின் பொது வரலாறு

நிகண்டு என்பது இலக்கணம் போன்றதொரு கருவிநூல். நிகண்டு என்னும் சொல்லுக்குக் கூட்டம் அல்லது தொகுதி என்பது பொருள். உயர்திணை அஃறிணை பற்றிய பல்வேறு பெயர்களையும் வினை பற்றிய பெயர்களையும் பாகுபாடு செய்து, அவற்றைத் தொகுத்துக் கூறுதலோடு அச்சொற்கள் குறிக்கும் பொருள்களையும் வரையறுத்து உணர்த்துவது நிகண்டு நூல்களின் பொது இயல்பு. எனவே, மொழிப் பயிற்சிக்கு இன்றியமையாத கருவிநூல்களாக இந்நிகண்டுகள் அமைந்துள்ளமை தெளிவு.

முதன்முதலில் நிகண்டு என்பது வடமொழியில் வேதத்திற்கு அங்கமாய், வைதிகச் சொற்களின் பொருள்களை உணர்த்தும் கருவி நூலுக்கு மட்டும் சிறப்பாக வழங்கப்பட்டது. பின்னர் நாளடைவில் சொற்பொருள் உணர்த்தும் நூல்களுக்கு எல்லாம் இப்பெயர் வழங்கத் தலைப்படலாயிற்று. தமிழில் நிகண்டு நூலை, 'உரிச்சொல்' என்றும், 'உரிச்சொற்பனுவல்' என்றும் வழங்கும் வழக்கு முன்னர் இருந்தது. 'பிங்கலம் முதலாம் நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே' (நன் 460) என நன்னூலில் உரிச்சொல் என்ற பெயரைப் பவணந்தி முனிவர் ஆண்டுள்ளார். நன்னூலின் பழைய உரையாசிரியராகிய மயிலைநாதர் இச்சூத்திரத்தின் உரையில், பிங்கலம் முதலான உரிச்சொற்பனுவல்களுள்' என்று எழுதுவதனால், 'உரிச்சொற்பனுவல்' என்ற பெயர் வழக்கும் தெரியவருகிறது. கயாதரர் என்பவர் இயற்றிய 'கயாதரம்' என்னும் நிகண்டு நூலுள், 'ஓங்கு இடபகேதனன் பற்று மறவாத தேவைக் கயாதரன் தொல் வேதியன் செய்த உரிச்சொற் பனுவலும் மேம்படுமே' (2) என்றும் 'தண்டமிழோர் விரும்பிய

கோவை உரிச் சொற்பனுவல் விரித்துரைத்தான் பெரும் பொருள் கண்ட கயாதரன் தேவைப் பெருந்தகையே' (566) என்றும் வரும் இடங்களில் இவ்வழக்கினைக் காணலாம். இந்தத் தமிழ்ப் பெயர் யாது காரணத்தாலோ பெருக வழங்காது நாளடைவில் மறைந்து போயிற்று. இதற்குப் பிரதியாக 'நிகண்டு' என்னும் வடமொழிப் பெயர் தமிழாகி, தமிழுலகில் பெருக வழங்கி நிலைபெற்றுவிட்டது. காங்கேயர் செய்த நூலாகிய உரிச்சொல் நிகண்டு என்னும் நூற்பெயரில் இந்த இரண்டு பெயர் வடிவங்களையும் காணலாம்

கால அடைவில் நோக்குமிடத்துச் சொற்பொருள் உணர்த்தும் மரபைத் தோற்றுவித்தவர் ஆசிரியர் தொல்காப்பியனாரேயாவர் என்று தெரியவருகிறது. இவர் இயற்றிய பெருநூலாகிய தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்திலே உரிச்சொல்லியலில் உரிச்சொற்கள் பலவற்றின் பொருளை விளக்கி உரைத்துள்ளார். உரிச் சொல்லியலிற் போலவே பொருளதிகாரத்தின் இறுதியில் அமைந்த மரபியலிலும் விலங்கு பறவை முதலியவற்றின் இளமைப்பெயர், ஆண்பாற் பெயர், பெண்பாற்பெயர் முதலிய மரபுபெயர்களைக் கூறியுள்ள பகுதியும் சொற்பொருள் உணர்த்தும் நிகண்டுகளின் தோற்றத் திற்கு வித்தாய் அமைந்ததொன்றாகும். இங்ஙனமாகத் தொல்காப்பி-யர்தாம் சொற்பொருள் உணர்த்தும் முறைக்கு முதல் வழிகாட்டி யாகின்றார். தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர்தான் நிகண்டு நூல்கள் தமிழ்மொழியில் தோன்றலாயின.

இப்பொழுதுள்ள நிகண்டு நூல்களில் பழமையானவை திவாகரம், பிங்கலம் என்னும இரண்டுமே. இவை இடைக்கால நூல்கள் இவற்றுள் திவாகரம் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகலாம் எனச் சிலர் கருதுகின்றனர். வேறுசிலர் மேற்குறித்தன இரண்டும் கி.பி சுமார் 11 ஆம் நூற்றாண்டளவில் தோன்றியதாகலாம் என்பர். இவற்றிற்கு முன் நிகண்டு நூல்கள் தோன்றி வழங்கிவந்தனவா என்று திட்ட வட்டமாகக் கூறுவதற்குரிய சான்று யாதொன்றும் புலப்படவில்லை.

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய நற்றிணையின் 382 ஆம் பாடலைப் பாடியவர், 'நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார்' என்று குறிப்பிடப்படுகிறார். இறையனாரகப்பொருள் உரையாசிரியரும் நன்னூலின் பழைய உரையாசிரியராகிய மயிலைநாதரும் இடுகுறியாற்

பெயர்பெற்ற நூலுக்கு உதாரணமாக நிகண்டு, கலைக் கோட்டுத்-தண்டு ' என்பவற்றைக் காட்டியுள்ளனர். இந்த இரு குறிப்புக்களையும் இணைத்துப் பார்க்கும்பொழுது கலைக்கோட்டுத் தண்டனார் என்பவரால் இயற்றப்பெற்ற நிகண்டு ஒன்று வழங்கியதாதல் வேண்டும் என்று ஊகிக்கலாம் இந்நூலைப் பற்றி வேறு எவ்வகையான செய்தியும் தெரியக்கூடவில்லை.

பழைய நிகண்டு நூலாகிய திவாகரம் பன்னிரண்டு தொகுதியாகப் பிரிக்கப்பட்டுச் சூத்திர யாப்பில் அமைந்துள்ளது. திவாகரரது சூத்திர அமைப்புத் தொல்காப்பியரது முறையைப் பின்பற்றியதாகும். தொல்-காப்பியச் சூத்திரங்கள் சிலவற்றையும் இவர்தம் நூலுள் அமைத்துக் கொண்டுள்ளனர். இவரது அமைப்பு முறைதான் பிற்கால நிகண்டு களுக்கு எல்லாம் முன் அளவையாய் அமைந்து நிற்கின்றது.

திவாகரர் தமது நூலைத் தெய்வப்பெயர், மக்கட்பெயர், விலங்குப் பெயர், மரப்பெயர், இடப்பெயர், பல்பொருட்பெயர், செயற்கை வடிவப் பெயர், பண்புப்பெயர், செயல்பற்றிய பெயர், ஒலிபற்றிய பெயர், ஒரு சொல்பல்பொருட்பெயர், பல்பொருட் கூட்டத்து ஒருபெயர் எனப் பன்னிரண்டு வகையாகப் பகுத்துச் சொற்களைத் தொகுத்துள்ளனர்.

தெய்வப்பெயரில் சிவன், திருமால் முதலிய தெய்வப் பெயர்களோடு நாள் கோள்களின் பெயர், காலப்பெயர், பருவப்பெயர், மழை, மேகம் முதலியவற்றின் பெயர்களையும் தந்துள்ளனர். மக்கட் பெயர்த்தொகுதியில் மக்களின் உறுப்புக்களுக்கு உரிய பெயர்களையும் தொகுத்துள்ளார். விலங்குப் பெயரில் மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, இவற்றின் உறுப்புப்பெயர் ஆகியனவும், மரப்பெயர்த் தொகுதியில் மரம், செடி, கொடி, பூ, காய், கனி, தானியவகை முதலியனவும் இடம்பெற்றுள்ளன. இடப்பெயர்த்தொகுதி என்பது உலகம், நாடு ஊர், மனை, மலை, ஆறு, நீர்நிலை முதலியவற்றின் பெயர்களைக்கொண்ட தொகுதி. பல்பொருட் பெயர்த் தொகுதியில் பொன், மணி, விரைப்பொருள், உணவுவகை, முதலியன கூறப்பெற்றுள்ளன. செயற்கைவடிவப் பெயரில் ஆயுதங்கள், ஆபரணவகை, உடைவகை, ஊர்திவகை, விளையாட்டுக்கருவிகள் முதலியவற்றின் பெயர்களைக்காணலாம். பண்புபற்றிய பெயர்த்தொகுதியில் காட்சிப்பொருள், உணர்விற்குப் புலப்படும் உண்மைப்பொருள் இவற்றின் குணத்தொடர்புபற்றிய பெயர்கள் சேர்ந்துள்ளன செயல்

பற்றிய பெயர்த்தொகுதியில் வினைப்பெயர்கள் பலவும் இடம் பெற்றுள்ளன. ஒலிபற்றிய பெயர்த்தொகுதியில் சொல் வகை பாவகை, யாழ்வகை, இசைவகை, முதலியன பற்றிய பெயர்களைக் காணலாம். ஒருசொல் பலபொருட்பெயர்த் தொகுதியாகிய பதினொராந்தொகுதி யில் ஒரு சொல்லுக்கு உரிய பொருள்கள் எல்லாம் விரித்து உரைக்கப் பட்டுள்ளன. இறுதித்தொகுதியாகிய பல்பொருட் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதியில் இருசுடர், முக்குணம் என்றாற்போன்று எண்ணால் வரும் தொகைப் பொருள்களின் விளக்கத்தைக் காணலாம்.

திவாகரம் பாகுபடுத்து அமைத்த அமைப்பு முறையை அடி யொற்றியே 'பிங்கல நிகண்டு,' 'சூடாமணிநிகண்டு,' 'உரிச்சொல் நிகண்டு' முதலிய பிற நிகண்டு நூல்களும் அமைந்துள்ளன. சூடா மணி நிகண்டு முதலிய சில நிகண்டுகளில் சில தொகுதிப்பெயர்களை ஒன்றுடன் இணைத்து வகைப்படுத்தியபோதிலும் பொது அமைப்பில் பொருள்களை அமைத்த முறையில் மாறுபாடு இல்லை. கயாதர நிகண்டில் 'தெய்வப்பெயரியல்' 'மக்கட்பெயரியல்' என்று இவ்வாறு தொகுதி என்பதற்குப் 'பெயரியல்' என்று பெயர் சூட்டியுள்ளார். நாமதீப நிகண்டு இத்தொகுதிகளை 'வர்க்கம்' என்ற பெயரால் குறிப் பிடுகிறது மற்றும் இவர் அமைத்துள்ள முறை பழைய முறையைத் தெளிவாகக் கூறுபடுத்தி விளக்குவதாகவும் உள்ளது.

நாமதீபநிகண்டு நூலை இயற்றிய கல்லிடைக்குறிச்சிச் சிவசுப்பிர மணியக் கவிராயர் தமது நூலை உயர்திணைப் படலம், அஃறிணை உயிர்ப்பொருட்படலம் அஃறிணை உயிரில்பொருட்படலம், குணநாமப் படலம் என நான்கு படலமாகக் கொண்டு அவற்றின் உட்பிரிவுகளை 'வர்க்கம்' என்ற பெயரால் வழங்கியுள்ளனர். உதாரணமாக அஃறிணை உயிர்ப்பொருட் படலத்தை எடுத்துக்கொண்டால், அதனை நாற்கால் உயிர்ப்பொருள் வர்க்கம், பறவை உயிர்ப்பொருள் வர்க்கம், ஊருயிர்ப் பொருள் வர்க்கம், நீர்வாழ் உயிர்ப்பொருள் வர்க்கம், தாவர உயிர்ப் பொருள் வர்க்கம் என ஐந்து வகைகளாகக் கொள்ளுகின்றார். இவை பழைய நிகண்டுகளில் விலங்குப் பெயர்த்தொகுதி, மரப்பெயர்த் தொகுதி என்ற இரண்டில் அடங்கும் இங்ஙனம் படலமாகவும் வர்க்கமாகவும் பெயர்களை அமைத்துள்ள இவரது அமைப்புப் பழைய நிகண்டுகளின் பொருளமைப்பைவிடத் தெளிவான முறையை மேற் கொண்டது என்று கருதலாம்.

பன்னிரு தொகுதியாக அமைந்த பெயர்களையும் முக்கியமாக மூன்று தொகுதிகளில் அடக்கிவிடலாம். ஒன்று ஒருபொருட் பல் பெயர்த்தொகுதி. பல பெயர்களையும் ஒரு குறித்த நெறிமுறையில் அமைத்துக் கூறுவது இதன் இயல்பு. திவாகரத்துள் அமைந்துள்ள முதல் பத்துத் தொகுதிகளும் இவ்வகையினவாம். இரண்டாவது ஒருசொல் பல்பொருட் பெயர்த்தொகுதி. இது ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய பல பொருள்களையும் தொகுத்து உரைப்பது. திவாகரர் அமைத்த பதினொராந்தொகுதி இது பற்றியது. மூன்றாவது பல பொருட்கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி. இது இருவினை, முத்தீ என்றாற்போன்ற தொகைப் பெயர்களை விளக்குவது. இதனைத் திவாகரத்தின் 12-ஆம் தொகுதியில் காணலாம். இம்மூன்று வகையான பெயர்த்தொகுதிகளையும் திவாகரத்தைப் போலப் பெற்றுப் பூரண நிகண்டாக உள்ளன பல. இம்மூன்றனையும் தனித்தனியாக மேற்கொண்டு பிறந்த நிகண்டுகளும் உள்ளன. இவற்றிற்கு உதாரணமாக முறையே 'நாமதீபநிகண்டு' 'அரும்பொருள்விளக்க நிகண்டு,' 'பொருட்டொகை நிகண்டு' என்பனவற்றைக் கூறலாம்.

இம்மூன்று வகைகளிலும் ஒருசொல் பலபொருட்பெயர்த்தொகுதியாகிய பதினோராந் தொகுதிதான் சொற்பொருள் உணர்வுக்கு மிகவும் வேண்டப்படுவது. எனவே, சொற்பொருளை விரைவில் கவனத்தில் கொண்டுவரும் வகையில் இத்தொகுதியைச் செப்பஞ் செய்வதிலும், இதனை விளக்க வெவ்வேறு அமைப்பில் தனி நிகண்டுகள் யாப்பதிலும் பற்பலர் முயன்றுள்ளனர்.

முதலில் பதினோராந்தொகுதியைச் செப்பஞ் செய்யப்புகுந்தவர்களின் முயற்சியை நோக்குவோம். எதுகை நயம்பட திவாகரர் சூத்திரம் செய்த முறையைக் கைவிட்டு 11-ஆம் தொகுதியை ஆதியிற் பொருள் அந்தத்துப்பொருள் என்று இருவகைப்படுத்து ஒவ்வொரு பகுதியிலுள்ள சூத்திரங்களை அகராதி வரிசையில் அமைத்துக் கற்க முயன்றனர். இம் முறையைத் திவாகரத்தைப் பதிப்பித்தவர்களும் மேற்கொண்டிருக்கிறார்கள். பொருள் விளக்க எடுத்துக் கொண்ட சொல் ஒரு சூத்திரத்தின் ஆதியில் வருமாயின், அது ஆதியிற் பொருள் எனப்படும்.

'அங்கதந் தோணி அரவு மாகும்'
'வேளாண்மை உபகாரம் ஈகையும் விளம்பும்'

என்ற சூத்திரங்களில் பொருள் விளக்க எடுத்துக்கொண்ட 'அங்கதம்,'

'வேளாண்மை' என்ற சொற்கள் சூத்திர முதலில் அமைந்திருத்தல் காணலாம். இங்ஙனமே, பொருள் கூற மேற்கொண்ட சொல் இறுதியில் அமைந்தால், அது அந்தத்துப் பொருள் எனப்படும்

'ஆடவர் மயிரும் முசுவும் ஓரி'
'காடும் கூடும் கட்சி யாகும்'

என்பவை அந்தத்துப் பொருள்பற்றியவை. இங்ஙனமே பிங்கல நிகண்டை அச்சியற்றிய சிவன் பிள்ளை என்பாரும் ஒருசொல் பல பொருட் தொகுதியில், பிங்கலர் வகுத்த முறையைத தவிர்த்துச் சொற்களை அகராதிக் கிரமத்தில் நிறுத்தி, அவற்றிற்கு உரிய சூத்திரங்களையும் அம்முறையிலேயே முறைப்படுத்தியுள்ளனர். இவையெல்லாம அகராதி போன்று எளிதில் நிகண்டைப் பயன்படுத்தச் செய்த முயற்சிகள்.

மேற்குறிதத இரண்டு நூலகளிலும் செய்த மாற்றங்கள் பிற்காலப் பதிப்பாசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டவை. அவற்றின் ஆசிரியர்களோ எதுகை நயத்தால் சொற்பொருளை நினைவூட்ட முயன்றனர். எதுகை முறையில ககர எதுகை சகர எதுகை முதலியனவாகப் பாகுபாடு செய்து, இம்முறையில் சொற்களை எளிதில் காண முயன்றவா சூடாமணி நிகண்டு இயற்றிய மண்டல புருடர் இவர் அமைத்த வகையில் ஓர் எதுகையில் பிற எதுகைச் சொல விரவி வருதலும். செய்யுளுக்காக வேண்டாத அடைமொழிகளைப் புணர்த்தலும் ஆகிய குறைபாடுகள் உள்ளன ஒரு செய்யுளுக்கும வருஞ்செய்யுளுக்கும ஓர் இயைபு இன்றியும் அமைந்துள்ளது. எனவே இந்நிகண்டினைக கற்றோர், கலப்பு எதுகைச் செய்யுட்களைத் தனிப்படப் பிரித்தும், பிறவற்றை ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் எனப்பாகுபடுத்தியும உள்ள முறை சிற்சில பிரதிகளில் உள்ளன. சென்ற பத்தொன்பதாம நூற்றாண்டில் வாழ்ந்த வேதகிரியார் என்பவர் சூடாமணியிற் கூறப்பெறாத ஒருசொல் பலபொருட் பெயர்களையெல்லாம் தொகுத்து, இந்நிகண்டின் 11-ஆம் தொகுதியிலுள்ள 310 செய்யுட்களோடு இடையிடையே எதுகை முறைபற்றிப் பல புதுச் செய்யுட்களையும் பாடிச் சேர்த்து 583 செய்யுட்கள் கொண்ட தனி நூலாக உரையுடன் செப்பஞ் செய்தனர் இது, 'வேதகிரியார் சூடாமணி' என வழங்கும்.

சூடாமணி நிகண்டைப் போலவே பன்னிரு தொகுதியுமுடைய நூல்களைச் செய்து, 11-ஆம் தொகுதியில் பலவகையான முற்போக்கு முறைகளைப் பலர் கையாள முயன்றனர். இவ்வகையில் கூறத்தக்கது உரிச்சொல் நிகண்டு இது சிறு நூலாய் வெண்பா யாப்பில் உள்ளது. இதில் பல்பொருட் சொற்கள் வெண்பாவில் அமைதற்குத் தக்கபடி கொள்ளப்பட்டுள்ளதே தவிர, வேறு சிறப்பாகச் சொல்லத்தக்க இயல்பு எதுவும் இல்லை கயாதர நிகண்டு கட்டளைக் கலித்துறைச் செய்யுளால் அந்தாதியாக அமைந்துள்ளது. இதனால் இது சூடாமணி யிலும் சிறந்த அமைப்புடையது என்று கொளளலாம். இதன் பின்னர்த் தோன்றிய பாரதிதீபம் கட்டளைக் கலித்துறைச் செய்யுளால் அமைந்ததாயினும், அடைமொழியின்றிப் பெயர்களை அமைத்தும் பொருட் பெயர்களை மிகுதியாகத் திரட்டித் தொகுத்தும் செம்மையுற அமைந்துள்ளது. ஆண்டிப்புலவர் இயற்றிய ஆசிரிய நிகண்டு அடிமிக்க ஆசிரிய விருத்தத்தால் அமைந்து பொருட்பெயர்களையும் மிகுதியாகக் கொண்டு, எளிய நடையில் அமைந்துள்ளது. பதினோராந் தொகுதியில் சொற்பொருள்களை எண்ணால் வரையறுத்து உணர்த்தியிருத்தல் இதன் தனிச்சிறப்பாகும்.

இவ்வாறு அமைந்த எதுகைமுறை முதலியவற்றால் சொற்பொருளை எளிதில் கண்டு பயன்படுத்த இயலாது என்று கருதி, நிகண்டுகளில் பின்னர் அகராதி முறையை மேற்கொள்ளலாயினர். இவ்வகையில் எழுந்த முதல் நூல் புலியூர்ச் சிதம்பர ரேவணசித்தர் இயற்றிய அகராதி நிகண்டு. அகராதி என்ற பெயரைத் தமிழுலகுக்கு அறிமுகப்படுத்திய பெருமை இவரையே சாரும். பெயருக்கு ஏற்ப இது அகராதியாகவே அமைந்துள்ளது. இதில் முதல் எழுத்து மட்டும் அகராதியில் உள்ளதே தவிர இரண்டாம் எழுத்து முதலியன கவனிக்கப்படவில்லை- அம்முதல் ஒரு பெயர், அம்முதல் இருபெயர் என்று இவ்வாறு இந்நூற் சூத்திரங்கள் அமைந்துள்ளன.

பிங்கலந்தை முறையைப் பெரிதும் தழுவிச் செய்யப்பெற்ற கைலாச நிகண்டு என்பதின் பதினோராந் தொகுதியில் ஓரெழுத் தொருமொழி, ஓரெழுத்தொற்றொருமொழி, ஈரெழுத்தொரு மொழி, ஈரெழுத்தொற்றொருமொழி, மூவெழுத்தொரு மொழி, மூவெழுத்தொற்றொரு மொழி, நாலெழுத்தொரு மொழி என்று ஏழு பகுப்பு உடையதாக உள்ளது. ஓரெழுத்தொற்றொரு மொழியில் மட்டும் அகராதி முறை காண்கிறது.

இதன் பின்னர் மிகவும் எளிதான முறையைப் பின்பற்றிய 'பல்பொருட் சூடாமணி' என்ற நிகண்டு தோன்றியுள்ளது. இதனை இயற்றிய ஈசுர பாரதியார் அமரகோசம் என்னும் வடநூலைப் பின்பற்றி இதனைச் செய்துள்ளார். தமது நூலை மூன்று காண்டங்களாகப் பகுத்து முதல் காண்டத்தை ஒருசொல் ஒருபெயர்த் தொகுதியாகவும், இரண்டாம் காண்டத்தை ஒருசொல் பல்பொருட் பெயர்த் தொகுதியாகவும், மூன்றாம் காண்டத்தைப் பல்பொருட் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதியாகவும் அமைத்துள்ளார்.

இதன் பின்னர் வீரமாமுனிவரின் சதுரகராதி இயற்றப் பெற்றது. இது நிகண்டுகள் தரும் சொற்பொருளை அகராதி முறையில் தொகுத்துத் தந்துள்ளது. இவர் தமது நூலைப் பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி என்று நான்கு வகைப்படுத்தியுள்ளார். சதுரகராதி மிகவும் பயனுள்ள கருவிநூலாகும். இது தோன்றிய பின்னும் அகராதிக்கிரமத்தில் எழுந்த நிகண்டு நூல் பொதிகை நிகண்டு. இதில் மொழி முதல் எழுத்தில் அகராதிக்கிரமம் மேற்கொண்டதோடு, இரண்டாம் எழுத்துக்களும் ஒருமெய் அல்லது உயிர்மெய்யெழுத்தின் நியதியைப் பின்பற்றியிருக்கிறது. நிகண்டு நூலை அகராதியோடு ஒத்த நிலையிற் கொண்டு வருவதற்கு மேற்கொண்ட முயற்சியில் இது மிகவும் சிறப்பாக அமைந்த நூலாகும்.

அகராதி முறையில் நிகண்டுகள் செய்யப் பலர் முயன்றபோதிலும், வீரை மண்டலபுருடரின் சூடாமணி நிகண்டு கற்பாரிடையே மிகவும் போற்றப்பட்டு வந்தது. திவாகரம், பிங்கலம் முதலியன சூத்திர யாப்பில் அமைந்துள்ளமையால் புலவர்களால் அன்றிச் சாமானியரால் எளிதில் கற்றுப் போற்ற இயலாத வகையில் அமைந்துவிட்டன. சூடாமணியின் விருத்தயாப்பு மனனம் செய்வதற்கு உறுதுணையாய் அமையவே அது ஏனையவற்றினும் பெருகவழங்கத் தலைப்பட்டது. சூடாமணி நிகண்டில் அமைந்துள்ள பதினோராந் தொகுதியின் மரபில் எழுந்த நூல்களுள் காலத்தால் மிக முந்தியது அரும்பொருள் விளக்க நிகண்டு. இந்நூல் ஓரெதுகை வருக்கத்தில் பிற எதுகைச் சொல் கலவாதபடி அமைந்துள்ளது.

இது தோன்றிச் சுமார் ஒரு நூற்றாண்டு சென்றபின்னர், நாநார்த்ததீபிகை என்ற அரிய நூல் (சுமார் 1850) எழுந்தது. இது விருத்த யாப்பில் அமைந்த பெருநூலாகும். இந் நிகண்டு வடமொழிச்

சொற்களைப் பெரிதும் மேற்கொண்டுள்ளது. இதனை அடுத்து யாழ்ப்பாணத்து வைத்தியலிங்கம் பிள்ளை என்பவர் 'சிந்தாமணி நிகண்டு' என்னும் நூல் செய்தனர் (1874). இதுவும் நாநார்த்த தீபிகையைப்போல வடசொற்களை மிகுதியாகத் தந்துள்ளது. இருபதாவது நூற்றாண்டாகிய இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில்கூட நிகண்டு நூல் ஒன்று செய்யப் பெற்றிருக்கிறது. இந்த நிகண்டின் பெயர் 'விரிவு நிகண்டு' என்பது. இதனை இயற்றியவர் வீரவநல்லூர் நா. அருணாசல நாவலராவர். இவர் சூடாமணி நிகண்டினை ஆதாரமாகக் கொண்டு பல வழக்குச் சொற்களுக்கும் பொருள் தந்துள்ளனர். திருநெல்வேலிப் பிரதேசத்து வழக்குகள் இந்நூலில் மிகுதியாக உள்ளன.

ஒருசொல் பலபொருள் நிகண்டுகளில் வரவரச் சொற்பெருக்கமும் அதிகரித்துள்ளது. அரசியல் மாறுபாடுகளாலும், பிறமொழியார் கூட்டுறவினாலும் நிகண்டுகளில் புகுந்த புதுச் சொற்கள் மிகமிகக் குறைவு. வடசொற்கள்தாம் இவற்றில் அளவின்றிப் பெருகியுள்ளன. தமிழ்நூல் வழக்கிலும் உலக வழக்கிலும் புகுந்து, தமிழ் மயமாய் மாறிவிட்ட வடசொற்களை நிகண்டுகள் மேற்கொள்ளுதல் மிகவும் பொருத்தமே. ஆனால், இருவகை வழக்கிலும் இல்லாத வடசொற்களும், வடமொழியில்கூட மிக அருகி வழங்கும் சொற்களும், பிற்கால நிகண்டுகளில் காணப்படுகின்றன. இவ்வகை வடசொற்கள் வழக்கினுள் பயின்று வருதல் இயலாத காரியம். கால அடைவில் சொற்பொருள் சிலவற்றில் குறைந்தும், வேறு சிலவற்றில் பலவாறாகப் பெருகியும் ஆட்சியில் அமைந்துள்ளன. வடமொழிச் சொற்களின் உச்சாரண பேதத்தை ஒழித்துத் தமிழில் ஒருவடிவிற்றாகக் கொள்ளுதலிலும் பல பொருள்கள் ஏற்பட்டுள்ளன. நிகண்டு ஆசிரியர்கள் இருவகை வழக்குகளையும் அறிந்து நூல் இயற்றுதலில சிற்சில இடங்களில் பிழைபட்டும் உள்ளனர். இதனால் நிகண்டுகளில் பல சொல் வழுக்களும் பொருள் வழுக்களும் புகுந்துள்ளன. இவையெல்லாம நுனித்து நோக்கி உணரத்தக்கனவாகும்.

தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் நிகண்டுகள் சிறந்ததோர் இடத்தைப் பெற்றுள்ளன. திவாகரம், பிங்கலம் முதலிய பழைய நிகண்டுகள் நல்ல முறையில் பரிசோதித்து இன்னும் பதிப்பிக்கப் பெறவில்லை. அச்சேறாது உள்ள நிகண்டுகளும் உள்ளன. இந் நிகண்டுகளையெல்லாம்

நல்லமுறையில் பதிப்பித்தல் தமிழ் அகராதியைச் செம்மையுற இயற்று தற்குப் பெரிதும் உதவும் 'தமிழ் அகராதியின் ஆதார நூற்றொகுதி" என்னும் வரிசையில் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் 50 ஆண்டுகளுக்குமுன், நாமதீப நிகண்டு அரும்பொருள் விளக்க நிகண்டு பொதிகை நிகண்டு, கயாதர நிகண்டு ஆகியவற்றை நல்ல முறையில் பதிப்பித்துள்ளனர். கைலாச நிகண்டு, பிங்கல நிகண்டு ஆகியவைகளைச் சிற்சில பத்திரிகைகளில் சிறிதுசிறிது வெளியிடத் தொடங்கினர் அம்முயற்சி முற்றுப் பெறவில்லை. அச்சில் வந்துள்ள வேறுசில நிகண்டுகள் மீண்டும் ஆராய்ந்து பதிப்பிக்கும் நிலையில் உள்ளன. இலக்கியங்களிற் போலவே, வெண்பா, ஆசிரியம், விருத்தம், கட்டளைக் கலித்துறை முதலிய பாக்களில் எல்லாம் நிகண்டு நூல்களைச் செய்ய முயன்ற புலவர் பெருமக்களின் முயற்சிகளை அழியாது பாதுகாத்தல் மிகமிக அவசியம். தமிழ் மொழியில் சொற்பொருள் வரலாற்றைத் தெள்ளிதின் உணர இந்நிகண்டு நூல்களைப் போற்றிக் காத்தல் தமிழ் மக்களின் முதற்பெருங் கடனாம்.

2

தமிழ் நிகண்டுகளின் தோற்றமும் வளர்ச்சியும்

நிகண்டு கற்றலின் இன்றியமையாமை

இலக்கிய இலக்கணங்களைப் போலவே நிகண்டு' என்பதும் தமிழ் மொழியின ஒரு தனிக்கூறு ஆகும் இலக்கிய இலக்கணங்களின் பயிற்சிக்கு முன்பாகவே நிகண்டு படித்தல் வேண்டும் என்பர். அவற்றில் வரும் சொற்பொருள் விளக்கத்திற்குத் துணை நிற்கும் நூல் நிகண்டு ஆதலின் கல்வி நிலையில் அது முதலிடம் பெறுவதாகிறது

மாதவச் சிவஞான சுவாமிகள் நன்னூல் விருத்தியுரையுள் இலக்கணம் கேட்டற்குரியார் எத்தகையவராயிருத்தல் வேண்டும் என்பது பற்றிக்கூறுமிடத்து,

'யாவரும் உணர எனவே முன்னர் நிகண்டு
கற்றுச் செய்யுள் ஆராய்ச்சியுடையார்க்கே அவற்றை
ஆராய்வுழி அவற்றின் கண் உளவாகிய செய்கை
வேறுபாடுகளும் சொன்முடிபு பொருண் முடிபு
வேறுபாடுகளும் இன்னவென்று துணியப்படாமையின்,
அவற்றைத் துணிந்தறிய வேண்டி இவ்வியற்றமிழ்
நூல் கேட்டறிதலின்கண்ணே ஊக்கம் செல்லு
மாகலின் அவை ஆராய்ந்தபின்னர் இது கேட்டற்
பாற்றென்னும் யாப்பும் அவை யாராய்ந்தோர்
இது கேட்டற்குரியர் என்னும் கேட்போரும் "... ... ...

(நன்னூல் சிறப்புப் பாயிரஉரை)

என்று விளக்கம் தந்துள்ளார்கள். இதிலிருந்து தமிழ் பயிலத்தொடங்குவார் நிகண்டு நூல் கற்பது இன்றியமையாததாக முன்பு கருதப்பட்

டது என்பது விளங்கும். முன்னாளில் தமிழ் பயின்றார் முக்கியமாகச் சூடாமணி நிகண்டு நூலை மனப்பாடஞ் செய்து ஒப்பித்தலைப் பெரிதும் வற்புறுத்தி வந்துள்ளனர். திவாகரம், பிங்கலம் முதலிய பழைய நிகண்டுகளையும் மனப்பாடஞ் செய்வது அந்நாளைக் கல்வி முறையாம்.

நிகண்டுக் கல்விக்கு இத்துணை முதன்மை அளித்ததேன் என்று சற்றுச் சிந்திப்போம். சொற்களின் பொருள்களைத் தெளிவுற அறிவதற்கு நிகண்டு நூல் உறுதுணையாயுளது. இக்காலத்தில் பெருக வழங்கும் அகராதிகளின் நிலையில் அந்நாள் நிகண்டுகள் பயன் தந்துள்ளன. எனவே, பழம்புலவர்கள் நிகண்டு பயில்வதனைப் பெரிதும் வற்புறுத்தி வந்துள்ளனர்.

நிகண்டுப் பெயர் வரலாறு

'நிகண்டு' என்னும் சொல்லுக்குக் கூட்டம் அல்லது தொகுதி என்பது பொருளாம். உயர்திணை அஃறிணை பற்றிய பெயர்களையும் வினைபற்றிய பெயர்களையும் பாகுபடுத்தி அவற்றைத் தொகுத்துக் கூறுவதோடு அச் சொற்களின் பொருள்களையும் வரையறுத்து உணர்த்துவது நிகண்டு நூல்களின் பொது இயல்பாகும். எனவே, மொழிப் பயிற்சிக்கு இது ஏற்றதொரு கருவி நூலாய் அமைந்துள்ளமை விளங்கும்.

நிகண்டு' என்னும் பெயர் வடமொழிப் பெயரே; வட மொழியில் வேதாங்களுக்கு உரிய அங்கங்கள் ஆறனுள் இது ஒன்றாகும். அங்கே வேதச் சொற்களுக்குரிய பொருளை விளக்கும் பகுதியாக இது உள்ளது. இச்சொல் பின்னாளில் தமிழுலகில் எழுந்த சொற்பொருள் உணர்த்தும் நூல்களுக்கும் பெயராய் வழக்கில் நிலைபெற்றுவிட்டது.

நிகண்டு என்பதனை நிகழ்ந்தது என்னும் தலைச் சொல்லிருந்து மருவி வந்ததாகச் சிலர் கருதுகின்றனர். இது நேரான ஒலி மாற்று முறை அமைப்பாயில்லை. அதனைத் தமிழ்ச் சொல் என அறுதியிடும் துணிவின் அடிப்படையில் வலிந்து கூறும் ஒரு குறிப்பு எனலாம். இத்தகு விளக்கம் எல்லாரும் ஒப்பத்தக்கதன்று.

வேதாங்கம் ஆறனுள் ஒன்று நிகண்டு

வேதச் சொற்களை விளக்கும் நூலை நிருத்தம்' என்றும் வழங்குவர். மணிமேகலையில் சமயக்கணக்கர் தந்திறம் கேட்டகாதையில் வரும்,

'கற்பங்கை சந்தங்கால் எண்கண்
தெற்றென் நிருத்தம் செவி, சிக்கை மூக்கு,
உற்ற வியாகரண முகம் பெற்றுச்
சார்பில் தோன்றா ஆரண வேதக்கு
ஆதி அந்தம் இல்லை அரு நெறி எனும்
வேதியன் உரையின் விதியும்கேட்டு' (சமயக். 100–105)

என்னும் பகுதி வேதாங்கங்களாகிய கற்பம், சந்தோபிசிதி, சோதிடம், நிருத்தம், சிக்கை, வியாகரணம் என்னும் ஆறனையும் * உருவகமாகப் பேசுகிறது. இவற்றுள் நிருத்தம் என்பது வேதச்சொற்களின் விளக்கம் என்பதனை 'உலகியற் சொல்லையொழித்து வைதிகச் சொல்லை ஆராயும் நிருத்தமும்' என நச்சினார்க்கினியர் உரைப்பதனாலும் (தொல். புறத். 20 வரை) தெளியலாம். வேதச் சொல் விளக்கமாகிய நிருத்தம், அதாவது நிகண்டு பின்பு உலகியற் சொல் விளக்க நூல்களுக்கும் உரிய பெயராய் வழங்கத் தலைப்பட்டுள்ளது.

உரிச்சொல் என்பதுவே தமிழ்ப் பெயர்

தமிழில் நிகண்டு என்பதனை முன்பெல்லாம் "உரிச்சொல்" என்றே வழங்கி வந்தனர். 'பிங்கலம் முதலாம் நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே' என நன்னூலில் (460) பவணந்தி முனிவர் பிங்கல நிகண்டு நூலை 'உரிச்சொல்' எனவே குறிப்பிட்டுள்ளமை காணலாம். இந்த நன்னூலுக்கு உரை வழங்கிய பழைய உரைகாரராகிய மயிலைநாதர், இச்சூத்திரத்தின் உரையில, 'பிங்கல முதலான உரிச்சொற் பனுவல்களுள்' என்று எழுதுகின்றார். இதனால 'உரிச்சொற்பனுவல்' என்னும் வழக்கும் இதற்கு உள்ளமை தெரியவரும். கயாதரர் தாம் இயற்றிய நிகண்டு நூலாகிய கயாதரத்தில்,

'ஓங்கிடப கேதனன் பற்றுமறவாத்
தேவைக் கயாதரன் தொல்
வேதியன் செய்த உரிச்சொற்
பனுவலும் மேம்படுமே' (2)

என்றும்.

* 'ஆறு அங்கம் மந்திரம், வியாகரணம், நிகண்டு,
சந்தோ பிசிதி, நிருத்தம், சோதிடம்,'
— திவாகரம் 2371 (12 : 87)

' .. .. தண்டமிழோர்
விரும்பிய கோவை உரிச்சொற்
பனுவல் வியந்துரைத்தான்
பெரும்பொருள் கண்டகெயாதரன்
தேவைப் பெருந்தகையே' (566)

என்றும் வரும் இடங்களில் 'உரிச்சொற்பனுவல்' என்னும் வழக்குண்மை சுட்டப்படுதல் காணலாம். தமிழ்ப் பெயராய் அமைந்த இப் பெயர் வழக்கு எக்காரணத்தாலோ பெருக வழங்காது போயிற்று. 'நிகண்டு' என்பதே பின்னாளில் பெருவழக்காயிற்று காங்கேயர் செய்த 'உரிச்சொல் நிகண்டு' என்பதில் பழைய வழக்கும் புதிய வழக்கும் இணைந்து காணப்படுகிறது.

சொற்பொருள் விளக்கமுறை வழிகாட்டி

தமிழ் நிகண்டுகளின் சொற்பொருள் விளக்கமுறைக்கு வழிகாட்டிய முதல் நூல் தொல்காப்பியமேயாகும். இப்பெரு நூலின் ஒரு பகுதியாகிய சொல்லதிகாரத்திலே 'உரியியல்' என்னும் பகுதி உளது. இவ்வியலில் வெளிப்படப்பொருள் விளங்காத 120 உரிச்சொற்களின் பொருள்களை ஆசிரியர் தொல்காப்பியர் விளக்கியுள்ளார்

'உருவுட் காகும் புரையுயர் பாகும்' (உரி. 4)
குருவும் கெழுவும் நிறனா கும்மே' (உரி. 5)

இங்கே உரு, புரை, குரு கெழு என்னும் சொற்களின் பொருள் விளக்கப்பட்டுள்ளமை காணலாம்.

'செழுமை வளனும் கொழுப்பு மாகும்' (உரி. 56)
'விழுமம் சீர்மையும், சிறப்பும் இடும்பையும் (உரி. 57)

இங்கே 'செழுமை', 'விழுமம்' என்னும் சொற்களுக்குரிய பல பொருள்கள் உணர்த்தப்படுகின்றன. இவ்வாறு சொற்களின் பொருளை விளக்க அடுத்தடுத்து வரும் நூற்பாக்கள் எதுகை நயம் பொருந்த அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கது இவ்வகையான எதுகை நயமும் பொருளின் கூறுகளும் வளர்நிலையுற்று நிகண்டுகள் பலவாய்த் தோன்றலாயின.

நன்னூல் இயற்றிய பவணந்திமுனிவர், பிங்கலம் ஒன்றனையே குறிப்பிட, அதன் உரைகாரராகிய சங்கர நமச்சிவாயப்புலவர், பிங்கலம்,

திவாகரம், சூடாமணி என்னும் வரிசையில் இம்மூன்று நிகண்டுகளையும் முதன்மையாய் எடுத்துக்காட்டியுள்ளார் (நன் 460 உரை) முதன்மையான நிகண்டுகளாகிய திவாகரமும், பிங்கலமும் தொல்காப்பியத்தைப் போல நூற்பா அமைப்பில் உள்ளமை கவனிக்கத்தக்கது.

நிகண்டுப் பொருள்வரையறை

சொற்பொருள்களை வரையறுத்து உணர்த்தும் பகுதி நிகண்டு நூல்களில் ஒரு முக்கிய கூறாய் அமைந்து விளங்குகின்றது. இப் பகுதி நூலின் இறுதியில் அமைந்து, சொற்பொருள் விளக்கக் களஞ்சியமாய்க் காணப்படுகிறது. மேலும், தெய்வப்பெயர் மக்கட் பெயர் முதலியனவாக ஒரு பொருளுக்குரிய பல பெயர்களையும் தொகுத்துக்கூறும் பகுதி நூலின் முதற்பகுதியாகும் இங்ஙனமாகப் பொருள்களை வகைப்படுத்துவதற்கும் தொல்காப்பியம் உதவியுள்ளது.

தொல்காப்பியச் சொல்லதிகாரத் தொடக்கத்திலேயே சொற்கள் உயர்திணை, அஃறிணை என்னும் இரு பகுதியவாய்ப் பிரிந்து பொருள் விளக்கும் இயல்பு புலப்படுத்தப்பட்டுள்ளது உயர்திணை என்பதில் தெய்வப்பெயர் மக்கட்பெயர் என்பவையும் அடங்கும்.

'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே ;
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே.'
(தொல். சொல் 1)

'பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவுயும்
இவ்வென அறிவும அந்தந்தமக் கிலவே
உயர்திணை மருங்கின் பால்பிரிந் திசைக்கும்"
(தொல். சொல். 4)

என்னும நூற்பாக்கள் தெய்வப்பெயர், மககட்பெயர் ஆகியவற்றை உயர்திணை எனப் பாகுபடுத்திக் கூறுகின்றமை காணலாம்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் கருப்பொருள்களைக்கூறும்,

'தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப'
(தொல். பொருள். 18)

என்னும் நூற்பாவும நிகண்டின் தொகுதிக் கூறுபாடு அமைக்க

மூலமாயிருந் திருத்தல் வேண்டும் எனலாம். இங்கே தெய்வம் முதலில் சுட்டப்படுவது போலவே நிகண்டுகளில தெய்வப்பெயர்த் தொகுதி முதலிடம் பெறுகிறது. விலங்கின் பெயர்த் தொகுதி மரப் பெயர்த் தொகுதி என்பவற்றை மேற்படி நூற்பாவில் வரும் மா, புள், மரம், என்பன காட்டும் உணா, பறை, யாழ் என்பன பல்பொருட் பெயர்த்தொகுதி, செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி ஆகியவற்றிற்கு அடியெடுத்துக் கொடுத்தன எனலாம்.

வேறொரு வகையாய் நோக்கினால் உயிர்களின் பிறப்பு முறை கொண்டும் பொருள்களைக் கூறுபடுத்தியிருக்கலாம் என்றும் கருத இடமுண்டு. தேவர், மக்கள் விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைப்பிறப்பில் தேவர், மக்கள், விலங்கு, மரம் எனவரும் நான்கு தொகுதிகளின் பெயர்களுக்கான கரு உள்ளமை காணலாம்.

திவாகரத்தில் தொகுதிப்பாகுபாடு

ஆதி நிகண்டு நூல் எனப் போற்றப்பெறும் திவாகரம். நிகண்டு நூல்களுக்கு வழிகாட்டியாய் கி. பி 8 ஆம் நூற்றாண்டளவில் தோன்றியது. இந்நூலில் ஆசிரியர் திவாகரர் வகுத்துள்ள தொகுதிப் பெயர் அடைவு பின்வந்த நிகண்டுகளுக்கும் வழிகாட்டியாய் அமைந்து விளங்குகிறது. திவாகரத்தின் தொகுதிப் பாகுபாடு பின்வருமாறு:

1. தெய்வப் பெயர்த் தொகுதி
2. மக்கட்பெயர்த் தொகுதி
3. விலங்கின் பெயர்த் தொகுதி
4. மரப் பெயர்த் தொகுதி
5. இடப் பெயர்த் தொகுதி
6. பல் பொருட் பெயர்த்தொகுதி
7. செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி
8. பண்பு பற்றிய பெயர்த் தொகுதி
9. செயல் பற்றிய பெயர்த் தொகுதி
10. ஒலி பற்றிய பெயர்த் தொகுதி
11. ஒரு சொல் பல்பொருட் பெயர்த்தொகுதி
12. பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி.

எல்லாப் பொருள்களும் உயர்திணை, அஃறிணை என்னும் பெரும் பிரிவினுள் அடங்குமாதலின், இப்பன்னிரண்டில் முன்னிரண்டு உயர்திணை குறித்தும் ஏனையவை அஃறிணை குறித்தும் அமைந்தவை. உயர்திணைப் பகுதியில் தெய்வத்தின் முதன்மை கருதி முதலிலும், அடுத்து அறிவு வகையில் சிறப்புடைய உயிர் மனித இனமாதலின் மக்கட் பெயரை அடுத்தும் ஆசிரியர் திவாகரர் தொகுக்க லாயினர். அஃறிணைப் பெயர்கள் உயிருள்ளன உயிரற்றன என இரு கூறுபடுவன ஆதலின், உயிருள்ள ஈரறிவு முதல் ஐயறிவுவரை உள்ள விலங்கின் பெயர் மூன்றாவதாகவும், ஓரறிவுயிரினமான மரப்பெயர் அதனை அடுத்தும் வைக்கப்பட்டுள்ளன. பொருள்களுக்கு நிலைக் களமான இடவகைப்பெயர், ஐந்தவாதாக அமைகிறது. அடுத்து இடத்தின்கண் உளதாகும் பொருள்கள் கருதப்படுகின்றன. பொருள் கள் இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள் என இருவகைப்படு மாதலின் பல்பொருட்பெயர்த் தொகுதி, செயற்கைவடிவப் பெயர்த் தொகுதி ஆகியவை அடுத்தடுத்து வைக்கப்பட்டுள்ளன. பொருள் களின் தன்மை, இயக்கம் பற்றிய பெயர்க்கூறுகள் பண்பு பற்றிய பெயர்த்தொகுதி, செயல் பற்றிய பெயர்த்தொகுதி என அமைக்கப் பட்டுள்ளன. இறுதிப் பகுதியனவான மூன்று தொகுதிகளும் சொல் பற்றிய ஆராய்ச்சிகளாகும். ஒலி பற்றிய பெயர்த் தொகுதி என்பது சொற்களின் பற்பல கூறுபாடுகளையும் விளக்குவதாகும் ஒரு சொல் லுக்குரிய பல பொருள்களையும் வகுத்துரைக்கும் பதினொன்றாம் தொகுதி ஒரு முக்கியமான பகுதியாகும். இருசுடர், முக்குணம் என் றாற்போலத் தொகைப் பெயர் விளக்கமாயும் முன் சுட்டாது ஒழிந்த பல பொருள்களின் விளக்கமாயும் இறுதித் தொகுதி அமைந்துள்ளது. இவ்வாறாகச் சொற்பொருட் கூறுகளை நிகண்டாசிரியன்மார் காரண-காரிய முறையில் வகைப்படுத்தி முறைப்படுத்தியுள்ளனர்.

பன்னிருதொகுதிப் பாகுபாடு

இனி பன்னிரு தொகுதிகளிலும் பாங்குற அமைந்துகிடக்கும பொருட் கூறுகளையும் சற்றுக் காண்போம். தெய்வப் பெயரில் அருகன், சிவன், திருமால் முதலிய தெய்வப் பெயர்களோடு நாள் கோள்களின் பெயர், காலப்பெயர், பருவப்பெயர், மழை, மேகம் முதலிய வற்றின் பெயர்களைத் தந்துள்ளார். தெய்வப் பெயர்களுள்ளும் ஆண் தெய்வப்பெயர் முதலிலும் பெண் தெய்வப் பெயர் பின்னருமாக முறைப்

படுத்தி உரைக்கிறார் மக்கட் பெயர்த்தொகுதியில் முனிவர் முதலிய மக்களினத்தார் பெயர்களையும் மக்களின் உறுப்புகளுக்கு உரிய பெயர்களையும் தொகுத்துள்ளார். விலங்குப பெயரில் மிருகம், பறவை ஊர்வன, நீர்வாழ்வன, இவற்றின் இளமைப்பெயர் உறுப்புப்பெயர், ஆகியவை தரப்பட்டுள்ளன. மரப்பெயர்த் தொகுதியில் மரம், செடி கொடி, பூ, காய், கனி தானியவகை முதலியனவும் இடம் பெற்றுள்ளன இடப்பெயர்த்தொகுதி என்பது உலகம் நாடு, நகர், ஊர், மனை மலை, ஆறு, நீர்நிலை, முதலியவற்றின் பெயர்களைக் கொண்ட தொகுதியாகும் பல்பொருட்பெயர்த் தொகுதியில்பொன் மணி, விரைப் பொருள், உணவுவகை முதலியன கூறப்பட்டுள்ளன. செயற்கை வடிவப்பெயரில் ஆயுதங்கள் ஆபரணவகை, உடைவகை, ஊர்திவகை விளையாட்டுக் கருவிகள் முதலியவற்றின் பெயர்களைக் காணலாம் பண்பு பற்றிய பெயர்த் தொகுதியில் காட்சிப் பொருள் உணர்விற்குப் புலப்படும் உண்மைப் பொருள் இவற்றின் குணத் தொடர்பு பற்றிய பெயர்கள் ஆய்ந்து தொகுக்கப்பட்டுள்ளன. செயல் பற்றிய பெயர்த தொகுதியில் வினைப்பெயர்கள் பலவும் இடம்பெற்றுள்ளன ஒலி பற்றிய பெயர்த் தொகுதியில் சொல்வகை பாவகை, யாழ்வகை, இசைவகை முதலியன பற்றிய பெயர்களைக் காணலாம். ஒரு சொல் பல் பொருட்பெயர்த் தொகுதியில் ஒருசொல்லுக்குரிய பல்வேறு பொருள் களும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இறுதித் தொகுதியாகிய பல் பொருட் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதியில் இருசுடர், எண்குணம், என்றாற் போன்ற தொகைப்பொருள்களின் விளக்கத்தைக் காணலாம் இவற்றால் பன்னிரு தொகுதிகளிலும இடம் பெற்று விளங்கும் பொருட் கூறுபாடுகள் ஒன்றற்கொன்று இயைபுடைய முறையில் அமைக்கப்பட்டுள்ளமை தெரியவரும்

நிகண்டின் முப்பெரும் பகுதி

பொருள்களின் கூறுபாடுகள் எல்லாம் விளக்கமாகப் புலப்படும் வகையில் பன்னிரு தொகுதியாக ஆசிரியர் திவாகரர் முதலியோர் பகுத்துக் காட்டியபோதிலும் அவற்றின் பொது இயல்புகளைக் கருதுங்கால் மூன்று பெரும் பகுதியாக நிகண்டுப் பகுதிகளை அடக்கிவிடலாம் முதல் பத்துத் தொகுதிகளும் ஒவ்வொரு பொருளுக்குமுரிய பல பெயர் களையும் தொகுத்து உரைப்பனவாம். எனவே இவற்றை ஒரு பொருட் பல் பெயர்த் தொகுதி என்பர்

ஒவ்வொரு சொல்லுக்குமுரிய பல பொருள்களையும் விளக்கிச் சொல்வது பதினோராந் தொகுதி. இது அகராதிபோல ஒரு சொல்லின் பல பொருள்களையும் விளக்கும் பகுதியாதலின் இது மிகவும் முக்கிய மாகக் கருதப்படும். ஒரு சொல் பல்பொருள் விளக்கம் என்று இப் பகுதியைக் குறிப்பிடலாம்

மூன்றாவது பெரும் பகுதி பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர் விளக்கும் தொகுதி. இதில் தரப்பட்டுள்ள செய்திகள் பெரும்பான்மை யும் தொகைப் பெயர் விளக்கமே

இம் மூவகைக் கூறுகளும் நிரம்பப் பெற்றதாய், பன்னிரு தொகுதி களின் அமைப்பையும் உள்ளடக்கியதாய் அமைந்த நிகண்டு நூல்கள் பல. திவாகரம், பிங்கலம், உரிச்சொல்நிகண்டு, கயாதரம், பாரதிதீபம், சூடாமணி, ஆசிரிய நிகண்டு, கைலாச நிகண்டு பல்பொருட் சூடாமணி முதலியன இவ்வகையில் அமைந்தனவாகும்.

அன்றியும் மேலே சுட்டிய முப்பெருங் கூறுகளுள் ஒவ்வொன்றை-யும் தனித்தனியே கொண்டு விளக்கப்பெற்ற நிகண்டு நூல்களும் உள நாமதீப நிகண்டு என்பது ஒரு பொருட் பல் பெயர் மட்டும் கொண்டது.

ஒரு சொல் பல்பொருள் தொகுதி விளக்கமாக அமைந்த தனி நிகண்டுகள் அகராதி நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு, நாநார்த்த தீபிகை முதலியனவாம்.

தொகைப்பெயர் விளக்கமாக அமைந்த நிகண்டு நூல் பொருட் டொகை நிகண்டு.

ஒருசொல் பல்பொருள் தொகுதியில் மாற்றமும் ஏற்றமும்

இவற்றுள் ஒருசொல் பல்பொருள் தொகுதி சொற்பொருள் வளர்ச்சியினை ஆராய்வார்க்கு மிகமிக இன்றியமையாதது. ஆதலின், இப்பகுதியை நிகண்டாசிரியர்களும் நிகண்டுப் பதிப்பாசிரியர்களும் வெவ்வேறு வகையிற் சீர்த்திருத்தி அமைக்க முற்பட்டனர்.

திவாகரர் பல்பொருட் சொற்களை எதுகைமுறை அமைப்பில் இணையுமாறு ஒருவகை முறையில் நூற்பாக்களை ஆக்கியிருந்தார் அவற்றைக் கற்று மனனம் செய்வதற்கு இம்முறை ஏற்றதாயிருந்தது. ஆயினும் குறித்த ஒரு சொல்லை எளிதில் காண்பதற்கு இம்முறை பயன்படுவதாயில்லை.

பின்னாளில் அகராதி முறையின் பயன் உணரப்பட்டது. அகர வரிசையில் சொற்களை எளிதில் கண்டு பயன் கொள்ளுதல் எளிது. திவாகரர் அமைத்திருந்த எதுகை முறை நூற்பாக்களைப் பின்னையோர் ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் என இரு கூறு படுத்தினர்

அங்கதம் தோளணி அரவும் ஆகும்
அணடர் தேவரும் ஆயருமா ஆகும்.
அம்பரம் கூரையுமா கடலும் ஆகாயமும்.

இவ்வாறு வருவன ஆதியிற் பொருள் பற்றிய நூற்பாக்கள். விளக்க எடுத்துக் கொண்டுள்ள சொல் நூற்பா முதலில் இடம் பெறுவதாக இவ்வாறு குறிப்பிட்டனர்.

கடலும் நிலனும் சேறும் அளக்கர்
ஆடவர் மயிரும் முசுவும் ஓரி.
காடும் கூடும் கட்சி ஆகும்.

இவற்றைப்போல் விளக்கப்பெறும் சொற்கள் ஈற்றில் அமையுமாறு வருவனவற்றை அந்தத்துப் பொருள் என்பர். இங்ஙனம் இருகூற்றில் அமையும் நூற்பாக்களை அவ்வப் பகுதியில் வரும் சொற்கள் அகர வரிசையில் அமையுமாறு மாற்றி அமைத்தனர் கி பி 1702 ஆம் ஆண்டில் எழுதப்பெற்ற ஏடே இந்த வகையில் உள்ளது இம் முறையைப் பின்பற்றி அமைந்த ஏட்டுச்சுவடிகளும் பலவாம் திவாகரத்தை அச்சிட்டோர் பின்னாளில் மாறி அமைந்த வகையில ஆதியிற் பொருள் அந்தத்துப் பொருள் என்று பகுத்தே அச்சியற்றியுள்ளனர். ஆசிரியர் திவாகரர் அமைத்த முறையில் பதினொன்றாம் தொகுதி இதுகாறும் அச்சிடப்படவேயில்லை.

பிங்கலந்தையில் பலபொருள் ஒரு சொல்லை விளக்குவது பத்தாம் தொகுதியாகும். திவாகரர் அமைத்த முறையினை ஒட்டியே பிங்கலரும் இப்பகுதி நூற்பாக்களை எதுகைமுறை இயைபு கருதி அமைத்திருந்தனர். ஆனால் அதனை அச்சிட்ட சிவன்பிள்ளையவர்கள் பிங்கலர் கொண்ட அமைப்பைக் கைவிட்டுவிட்டார். அகராதிக் கிரமத்தில் சொற்களை நிறுத்தி அவற்றிற்குரிய நூற்பாக்களையும் நிரல்பட அமைத்து வெளியிட்டுள்ளார் இந்நிகண்டிலும் இத்தொகுதி ஆசிரியர் அமைத்த முறையில் இதுவரை அச்சிடப்படவில்லை

பிங்கலர் அமைத்துள்ள ஒருசொல் பல்பொருள் தொகுதிச் சூத்திரங்களை நோக்கினால் முந்திய ஒன்பது தொகுதிகளிலிருந்தும் குறித்த ஒரு முறை பற்றிச் சொற்களைத் தெரிந்தெடுத்து நிறுத்தி, அம்முறையில் அவற்றின் பொருள்களையும் விளக்கி நூற்பா இயற்றியுள்ளார் என்பர். இது குறித்துப் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் தந்துள்ள விளக்கம் ஊன்றிக் கவனிக்கத்தக்கது; பிங்கல நிகண்டு ஏட்டுப்பிரதியில் கண்டவாறு பதினொராந்தொகுதியின் முதன் மூன்று சூத்திரங்களை எடுத்துக்காட்டிப் பிள்ளையவர்கள் தரும் விளக்கம் வருமாறு:

"1. துங்க மலையு நிலையுந் தூணுஞ்
சங்கரன் பெயருந் தாணு வாகும்.

2 இரவியு மெனையா ளீசன் பெயரும்
ஒருநாண் மீனு மொழியுஞ் சோதி.

3 ஆதி பழைமையு மரனது நாமமு
முதலுநே ரோட்டமு மொழியப் படுமே.

இங்கே ஒரு நுண்ணிய விஷயம் நன்கு விளங்குகிறது. தாணு, சோதி, ஆதி முதலிய சொற்கள் பிங்கலந்தையிலுள்ள வானவர் தொகுதியில் சிவபெருமானுக்குரிய பெயர்களாக ஓதப்பட்டுள்ளன. இவற்றை நோக்கியவளவில் 10-வது தொகுதிக்குரிய சொற்களைத் தாம் இயற்றியுள்ள முதல் ஒன்பது தொகுதிகளினின்றும் குறித்த ஒரு முறை பற்றித் தெரிந்தெடுத்து நிறுத்து, நிறுத்த முறையில் அவற்றின் பொருள்களைச் சூத்திரித்துப் பிங்கலர் இத்தொகுதியை அமைத்துள்ளாராதல் வேண்டும்."

இதிலிருந்து முதலில் விளக்கிய ஒருபொருட் பல்பெயர்கள் ஒருசொல் பல்பொருள் தொகுதியில் வேறுவகையான முறையில் மாறி விளக்கம் பெற்று வருகின்றன என்பது கணித்தறியத்தக்க ஒன்றாகும் என்னும் குறிப்பு வெளிப்படுதல் காணலாகும்

பிங்கலர் ஒருசொல் பல்பொருட் தொகுதிச் சூத்திரங்களை எதுகை நயம்பட அமைத்துள்ளாரேனும் பொருள் விளக்கத்திற்குரிய பலபொருட் சொற்கள் எதுகை நெறியில் அமையவில்லை. இதனால் இவர்தம் முறை கற்று நினைவில் வைத்துப் போற்றுதற்கு எளிதாயில்லை. இவருடைய முறையைப் பின்வந்தார் பலரும் மேற்கொள்ளாமைக்கு இதுவும் ஒரு காரணமாதல் கூடும் என்று கருதலாம்.

சூடாமணி நிகண்டில் நேர்ந்த வளர்ச்சி

மண்டலபுருடர் இயற்றிய சூடாமணி நிகண்டின் ஒரு சொல் பல் பொருள் தொகுதி முற்றும் எதுகை முறையாய் அமைந்துள்ளது. ஒரே எதுகையுள்ள சொற்களைத் தொகுத்து ஒரே இடத்தில் அமைத்து விளக்கம் தரமுயன்றமை சிறப்பாகும்.

'நடைபெறு ககர மாதி னகரவீ றெதுகை யாகப்
படியிலோர் சொற்பொருட்பல் விதத்தொகை பகர லுற்றாம்'

எனக் ககரம் முதல் னகர எதுகை ஈறாகப் பாகுபாடு செய்துள்ளமையை மண்டலபுருடர் குறிப்பிட்டுள்ளார் எதுகை முறையில் மண்டலபுருடர் பாகுபடுத்தினராயினும் ஓரெதுகையில பிற எதுகைச் சொல்லும் விரவி வருதல் ஒரு சிறு குறைபாடே. எடுத்துக்காட்டாக, ககர வெதுகையில் முதற்செய்யுளின் மூன்றாவது அடி,

'மகரமே சுறாப்பூந் தாதாம் வசிகூர்மை வசியம் வாளே'

என்று உள்ளது. இங்கே ககரவெதுகையில் சகரவெதுகைச் சொல் லாகிய 'வசி' என்பதன் பொருளும் விரித்துணர்த்தப்படுகின்றது இவ்வாறே பல இடங்களிலும் ஓரெதுகைக் கூறுபாட்டில் பிற எதுகைக் கலப்பும் உள்ளது. இவ்வகைக் கலபபிற்கு விருத்தப்பாடல்களில் வரும் மோனை உறுப்புக் காரணமாதல் கூடும் என்பர்.

இதுவேயுமன்றி ஒரு செய்யுளுக்கும் அதனை அடுத்து வரும் செய் யுளுக்கும் ஓர் இயைபும் இல்லை எனவே எளிதில் நினைவில் முறைப்படக் கொள்வது இயலாது. அடைச்சொற்கள் சேர்த்துப் பெயர்கள் வருவதும மற்றொரு குறைபாடாம். தவிரவும் பலபொரு ளொருசொல் அனைத்தும் கூறப்படவுமில்லை இத்தகைய குறை பாடுகள் சூடாமணி பதினொன்றாம் நிகண்டைக் கற்பதில் தடையா யிருப்பதால இதனைச் செப்பஞ்செய்யப் பின்னையோர் முற்பட்டனர்.

முக்கியமாகக் கலப்பெதுகைச் செய்யுட்களைத் தனிப்படத் தொகுத் தும் ஏனையவற்றை ஆதியிற்பொருள், அந்தத்துப்பொருள் எனப் பிரித்தும் ஓர் ஏட்டுப் பிரதியில் காணப்படுவதாகப் பேராசிரியர் வையா புரிப்பிள்ளையவர்கள் அரும்பொருள் விளக்க நிகண்டு முன்னுரையில் (பக். 6) குறிப்பிட்டுள்ளார்கள். ஆதி அந்தப் பகுப்புகளில் எதுகை முறை பின்பற்றப்பட்டுள்ளதாம்

நிகண்டு சூடாமணியில் சொல்லப்படாத பல பொருளொரு சொற்களைத் தொகுத்து, அவற்றை எதுகை முறைபற்றிச் செய்யுளாக்கி, சூடாமணிப் பதினொராவது நிகண்டின் இடையிடையே இணைத்து அத்தொகுதியை ஒரு நிரம்பிய நூலாக ஆக்குவதற்கு முயன்றவர் களத்தூர் வேதகிரி முதலியார் ஆவர். இவர் சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் சென்னைக் கல்விச் சங்கத்திலே சிறந்து விளங்கிய பெரும் புலவராவர். தமிழ் நூல்கள பலவற்றை அச்சிட்ட பெருமையும் இவருக்கு உண்டு. வேதகிரியார் புதுக்கி அமைத்த சூடாமணி நிகண்டு 583 செய்யுள் கொண்டது. இதற்கு இவர் உரையும் எழுதியுள்ளார். இந்நூலை இவர் யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத்தார் வாயிலாக வெளியிட்டார் (1843). இது இவருடைய பெயரால் 'வேதகிரியார் சூடாமணி' என வழங்கும். ஆனால் ஆசிரியர் இட்ட பெயர் 'நிகண்டு' என்பதே.

சூடாமணியின் மரபினை அடியொற்றித் தோன்றியதும் காலத்தால் முற்பட்டதுமான நூல் அரும் பொருள் விளக்க நிகண்டு. இதன் ஆசிரியர் திருச்செந்தூரில் வாழ்ந்த வீர சைவமரபினராகிய அருமந்தைய தேசிகர். இவர் தமது ஞானாசிரியராகிய தில்லைவாசி பச்சைக் கந்தைய தேசிகருடைய ஆணையின்படி இந்நிகண்டு நூலைச் செய்தனர். இவர் தமக்கு முந்திய நிகண்டு நூலாகிய சூடாமணி நிகண்டு உரிச்சொல் நிகண்டு, அகராதி நிகண்டு, கயாதர நிகண்டு என்பவற்றில் உள்ள ஒருசொல் பல்பொருட் பெயர்களைத் தொகுத்து, எதுகை முறையில் அமைத்து 700 விருத்தங்களில் தம் நூலை இயற்றியுள்ளார். இந்த நூல் கி. பி. 1763 -ல் இயற்றப் பெற்றதாகும்.

தொண்டைநாட்டு ஊற்றங்கால் ஊரினராகிய ஆண்டிப்புலவர் அடிமிக்குவரும் ஆசிரிய விருத்தத்தால் தம் நிகண்டு நூலை ஆக்கியுள்ளார். இவர் தந்த ஆசிரிய நிகண்டு 11 தொகுதிகள் கொண்டதாகும். பொருட்பெயர்களை மிகுதியாய்க் கொண்டு எளிய நடையில் அமைந்துள்ளமையினால் இது சூடாமணி நிகண்டிலும் சிறப்பெய்தி விளங்கும் நூல் எனலாம். இந்நிகண்டில் சொல்லின் பொருள்கள் பெரும்பாலும் எண்களால் வரையறுத்துணர்த்தப்பட்டிருத்தல் ஒரு தனிச் சிறப்பாகும்.

நிகண்டுப் பாவகை

முதலில் வந்த நிகண்டு நூல்கள் நூற்பாவினால் அமைக்கப்பட்ட போதிலும், காலப் போக்கில் மனப்பாடஞ் செய்வதற்கு எளிதாக இருத்

தலைக் கருதி வெண்பா, கட்டளைக்கலித்துறை ஆசிரிய விருத்தம் முதலிய பாவகைகளாலும் நிகண்டு நூல் செய்வாராயினர். வெண்பா யாப்பில் அமைந்தவை உரிச்சொல் நிகண்டும் நாம தீப நிகண்டும் ஆகும். கட்டளைக் கலித்துறையில் இரண்டு நிகண்டுகள் உள. ஒன்று கயாதரம்; மற்றொன்று பாரதி தீபம. பொருள் விளக்கும் முறையில இவ்விரண்டு நூல்களும் திவாகர நூலை அடியொற்றி அமைந்துள் ளன. இவற்றுள் கயாதர நிகண்டு அந்தாதி முறை தழுவியிருப்பது தொடர்ந்து மனனம்செய்வதற்கு ஏற்ற கருவியாய் உள்ளது. விருத்தப் பாவில் அமைந்த நிகண்டுகளுள் சூடாமணி நிகண்டு முதன்மையாகக் கொள்ளத் தக்கது அரும்பொருள் விளக்க நிகண்டு, பொதிகை நிகண்டு, நாநார்த்த தீபகை போன்றவை இவ்வகையின. நிகண்டு வளர்ச்சியில் பொருள்களை விளக்க வந்த நூல்கள் கட்டளைக்கலித் துறை, ஆசிரிய விருத்தம் முதலிய பாவினங்களையும் மேற்கொண் டுள்ளன.

அகராதி முறையில் நிகண்டு நூலாக்கம்

அகராதி முறையில நிகண்டு நூலை ஆக்கும் முயற்சி கி.பி.16 ஆம் நூற்றாண்டில் தோன்றக் காணலாம் கி.பி 1594ல்சிதம்பரம் இரேவண சித்தர் ஆக்கிய நிகண்டு, 'அகராதி நிகண்டு.' பெயருக்கு ஏற்ப இந் நிகண்டு அகராதி முறையில் அமைந்திருககிறது அகராதி என இக் காலத்துச் சிறப்பாக வழங்கப் பெறும் பெயரை முதன்முதலாகத் தமி ழுலகிற்கு அறிவித்தவர் இரேவணசித்தரே. அகராதி என்னும் புதுச் சொல்லும் நிகண்டு என்னும் பழஞ்சொல்லும் ஒன்றாக இந்நூலின் பெயரில் அமைந்திருக்கக் காணலாம். நூற்பாவினால் இந் நூல் அமைந்துள்ளது.

அகராதி முறையைச் சொற்களின் முதலெழுத்தளவில்தான் அக ராதி நிகண்டு பின்பற்றியுள்ளது. இக்காலத்திற்போல இரண்டாம் எழுத்து முதலியன அகராதி நியமத்திற்கு உட்பட்டு வரவில்லை

'பொதிகை நிகண்டின் இரண்டாம் பாகம் அகராதிமுறை தழுவிய நிகண்டாகும். இது சதுரகராதி வெளிவந்து ஏறத்தாழ 40 ஆண்டுகள் சென்றபின் தோன்றியது இதனை இயற்றிவர் கல்லிடை நகரில் வாழ்ந்த சாமிதாஸ கவிராயர். இது அகராதி நிகண்டிலும் செம்மையுற வளர்ந்துள்ளது இதுவும் அகராதி நிகண்டு போல நூற்பா யாப்பில் அமைந்துள்ளது

காலந்தொறும் பெற்ற வளர்ச்சிநிலை

நிகண்டுகள் காலந்தோறும் புதுவழக்குகளையும் எடுத்துக்கொண்டு வரவர வளர்ச்சி பெற்று வந்துள்ளன என்பதனை நிகண்டின் பதினொராந் தொகுதியில் இடம் பெற்ற பாட்டு எண்ணிக்கை, சொற்களின் அளவு ஆகியவை கொண்டு ஓரளவு கணித்தறியலாம்

திவாகரம் என்னும் முந்திய நிகண்டில் பதினொராந் தொகுதி நூற்பா அளவு 383, பிங்கல நிகண்டின் ஒருசொல் பல்பொருள தொகுதி நூற்பா 1091 ஆக வந்துள்ளது. திவாகரத்தை அடுத்துவந்த பிங்கலந்தையில் சொற்பொருள் விளக்கம் ஏறத்தாழ இரண்டரை மடங்கு அதிகமே. உரிச்சொல் நிகண்டின் 11ஆம் தொகுதி 36 வெண்பாக்களையும் 151 சொற்களையும் கொண்டுள்ளது மேற்கூறிய இரண்டு நூல்களுக்குப் பின் வந்த இந்த நிகண்டில் மிக முக்கியமான சொற்களை மட்டும் கொண்டமையால் எண்ணிக்கையில முதல் நிகண்டினும பாதியளவாய்க் குறைந்து விட்டது.

சூடாமணி நிகண்டின் 11ஆம் தொகுதியில் 310 செய்யுள்கள். வேதகிரியார் சூடாமணியில் 583 செய்யுள்கள உள்ளன. அரும்பொருள் விளக்க நிகண்டின் எண்ணிக்கை 700, நாநார்த்த தீபிகையில் 1102 பாட்டு. விரிவு நிகண்டோ 1102-க்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்டுள்ளது எனவே, நிகண்டுகள் வரவர விரிவு பெற்றமைக்குக் காரணம் அவ்வவற்றில் இடம் பெற்ற சொற்பொருள்களின் பெருக்கமே என்பது தெளிவு

சொற்களின் பெருக்கம்

நிகண்டுகளில் பொருள் விளக்க எடுத்துக்கொண்ட சொற்கள் வர வரப்பெருகி வந்தமையைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவராயிருந்த சு. அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் தாம் பதிப்பித்த நாநார்த்த தீபிகையின் முன்னுரையில் முறைப்பட எடுத்துக் காட்டியுள்ளார்கள் அவர்கள் தரும் விளக்கவுரை பின் வருமாறு :

> " நிகண்டுகளுள் பழமையானது திவாகரம் அதில் ஒரு சொற் பல பொருளுரைக்கும பதினொராவது பல் பொருட் பெயர்த்தொகுதி 377 சொற்களுக்குப் பொருளுரைத்தது, அது ஆதியிற பொருள்

அந்தத்துப் பொருள் என இரண்டு பிரிவுகளையுடையது. பிங்கலந்தையில் பத்தாவது ஒருசொற் பல்பொருள் வகை 1091 சொற்களின் பொருளையுரைத்தது. சூடாமணி நிகண்டு ஒருசொற் பல்பொருட் பெயர்த் தொகுதி ககரவெதுகை முதல் னகரவெதுகையீறாகப் பதினெட்டு எதுகைகளையுடைய 310 விருத்தங்களாற் கூறியது. அதிற்காணும் சொற்கள் 1575. உரிச்சொனி கண்டில் பதினொராவது ஒருசொல் பல் பொருட் பெயர்த்தொகுதி 36 வெண்பாக்களையுடையது; அதில் 151 சொற்களின் பொருள்கள் உரைக்கப்பட்டன.

இவற்றின்பின் ஒரு சொற் பல்பொருள் மாத்திரம் கூறும் நிகண்டுகளும் பல தோன்றின. கி பி. 1594-ல் சிதம்பரம் இரேவண சித்தர் இயற்றிய அகராதி நிகண்டு 3368 சொற்களின் பொருள்களை அகராதிக் கிரமமாக உரைத்தது அருமருந்தைய தேசிகர் இயற்றி அரும்பொருள் விளக்க நிகண்டில் 700 விருத்தங்கள் உள்ளன. அதிற்காணும் சொற்கள் 3200. சுமார் கி. பி 1780-ல் கல்லிடைக்குறிச்சி சுவாமிநாத கவிராயர் இயற்றிய பொதிகை நிகண்டு முதற்பகுதியில் பத்தாவது ஒருசொற் பல் பொருட்பெயர்த் தொகுதி எதுகை முறை பற்றி 140 விருத்தங்களில் ஒரு சொற் பல்பொருள் உரைத்தது; இரண்டாம் பகுதி அகராதி முறையைப் பற்றி 2228 சொற்களின் பொருள்களை உரைத்தது முன் குறிக்கப்பட்ட நிகண்டில் (வேதகிரியார் சூடாமணி நிகண்டு) 583 விருத்தங்கள் உள்ளன அதிற்காணுஞ் சொற்கள் 2526 சூடாமணி நிகண்டு பதினொராவது தொகுதியின் முறையைப் பின்பற்றி எதுகைக்கிரமத்தில் அமைக்கப்பட்ட நிகண்டு நாநார்த்ததீபிகை 11(2 விருத்தங்களாலியன்ற இந்நூல் முழுதும் ஒரு சொற் பல் பொருளுரைப்பதே, இதிற் பொருளுரைக்கப்பட்ட சொற்கள் 5452. ”

மேலே தரப்பட்டுள்ள விளக்கத்தால் நிகண்டாசிரியர்கள் அவ்வக் காலத்திற்கு ஏற்பப் புதுப்புதுச் சொற்பொருள்களைத் தத்தம் நூல்களுள் ஆராய்ந்து சேர்த்துள்ளமை தெரியவரும்.

இன்னும் அச்சில வாராது இருக்கின்ற நிகண்டுகளுள் அகராதி மோனைக்ககராதி எதுகை, கைலாசநிகண்டு சூளாமணி, பல்பொருட் சூடாமணி, விரிவுநிகண்டு முதலியன குறிப்பிடத்தக்கன. இவைதவிர

வேறுசில நிகண்டுகளும் இருந்து காலப்போக்கில் அழிவுற்றனவோ என்று கருதும் வகையில் பண்டை உரையாசிரியர்களின் மேற்கோள் பல உள்ளன.

சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையில், 'மூவறு கணங்களாவார்' என்று விளக்கும் இரு வெண்பாக்கள் பின்வருமாறு :

'கின்னரர் கிம்புருடர் விச்சா தரர்கருடர்
பொன்னமர் பூதர் புகழியக்கர் — மன்னு
முரகர் சுரர்சா ரணர்முனிவர் மேலாம்
பரகதியோர் சித்தர் பலர்.'

'கந்தருவர் தாரகைகள் காணாப் பசாசகண
மேந்துபுகழ் மேய விராக்கதரோ — டாய்ந்ததிறற்
போகா வியல்புடைய போகபூமி யோருடனே
யாகாச வாசிகளா வார்.'

(சிலப். இந்திரவிழா. 176-178 உரை)

இவற்றை நோக்கும்போது வெண்பாவில் அமைந்த ஒரு நிகண்டு அவர் காலத்தில் வழங்கியிருத்தல் வேண்டும் எனக் கருதலாம். மேலும், அடியார்க்கு நல்லார் உரையில் எண்வகைக் கூலம், பஞ்ச வாசம பற்றிய நூற்பாக்கள் மேற்கோளாக எடுத்துத் தரப்பட்டுள்ளன.

'நெல்லுப் புல்லு வரகுதினை சாமை
யிறுங்கு தோரையோடு கழைவிழை நெல்லே.'

(சிலப். இந்திர. 22 . 23 உரை)

தக்கோலந் தீம்பூந் தகைசா லிலவங்கம்
கப்பூரம் சாதியோ டைந்து' (சிலப். இந்திர. 26 உரை.)

இவை ஏதோ ஒரு நிகண்டு நூலைச் சார்ந்தசூத்திரங்களாயிருத்தல் கூடும்.

'நேர்கட்டி செந்தே னிரியாசம் பச்சிலை
யார மகிலுறுப்போ டாறு'

(சிலப். இந்திர. 14 உரை)

என்பது புகையுறுப்புகளைத் தொகுத்துரைப்பது.

இதனையே நச்சினார்க்கினியரும் சீவகசிந்தாமணி உரையில்(534) எடுத்துகாட்டுகின்றார். இவையெல்லாம் இப்பொழுது வழங்கும் நிகண்டு நூல்களில் காணப்பெறாதவை. எனவே, இவை இடம் பெற்ற நிகண்டுநூல வேறு இருந்திருக்கவேண்டும் என்று ஊகிக்க இடமுண்டு.

நிகண்டு நூல் பதிப்பு

நிகண்டு நூல்களுள அழிந்தனபோக எஞ்சியிருக்கும் நூல்களை ஏற்ற முறையில் அச்சிட்டு வெளியிடுதல் தலைசிறந்த பணியாகும் அப்பொழுதுதான் நமது மொழியின் சொல்வளம் எவ்வளவு மிகுதியா யுள்ளது என்பது புலனாகும். எல்லா நிகண்டுகளையும் எளிதில் பயன்படுத்தும் வகையில் அகராதி முதலிய விளக்கங்களுடன் பதிப்பிக்கப் பெற்றால்தான் சொற்பொருள்கள் பல காலத்தும் வளர்ந்துவந்த வகையினை வரலாற்று முறையில் உணர்தல்கூடும். வரலாற்றுமுறை யில் அகராதி ஆக்குவதற்கும் இந்நிகண்டு நூல்கள் மிகமிக இன்றியமை யாத துணைக்கருவி நூல்களாகும்.

சென்ற நூற்றாண்டிலே 1839 ல் திவாகரத்தின் முதற்பத்துத் தொகுதிகளை முதன்முறையாகச் சென்னைக் கல்விச் சங்கத்தைச் சார்ந்த தாண்டவராய முதலியார பதிப்பித்து வெளியிட்டார். அதற்கு அடுத்த ஆண்டில் (1840) அக்கல்விச் சங்கத்து வித்துவானாகிய பு. நயநப்ப முதலியார் திவாகரததில் வெளிவராத எஞ்சிய இரு தொகுதி களையும் சேர்த்து 12 தொகுதியும் நிரப்பிய நூலாக அச்சில் தந்தனர். அதன்பின் இம்முதற் பதிப்புகளைப் பின்பற்றித் திவாகரத்திற்குப் பல பதிப்புகள் வந்துள்ளன. உரிச்சொல் நிகண்டு துத்தன் துரை என்பவ ரால் 1840–லும், யாழ்ப்பாணம் ரா. ரா. அருணாசலசதாசிவம்பிள்ளை யால் 1858 லும் வித்துவான் சிவன்பிள்ளையால் 1890–லும் சுன்னா கம் குமாரசாமிப் பிள்ளையால் 1905–லும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. பின்னரும் சில பதிபபுகளை இந்நூல் பெற்றுள்ளது

நிகண்டு சூடாமணியை யாழ்ப்பாணத்து நல்லூர், ஆறுமுக நாவலர் சீரிய முறையில் பதிப்பித்துள்ளார். இந்நிகண்டு தொடர்ந்து பல பதிப்புகளைப் பெற்றுளளது. பிஙகல நிகண்டு 1890-ல வித்துவான் சிவன்பிள்ளையால் பதிப்பிக்கப் பெற்றது, என்றாலும் இவர் ஒரு சொல் பல்பொருள தொகுதிச் சூத்திர அமைப்புகளை மாற்றி அகராதி முறை யைத் தழுவிப் பதிப்பித்தது ஒரு குறையாகும். இதன்பின் ரிப்பன்பிரஸ்

வழி 1917-ல் வந்த பதிப்பு இம்முதற்பதிப்பினை அடியொற்றி அமைந்துள்ளது கருதத்தக்கது கிடைக்கும் ஏடுகளைத் திரட்டி முந்திய நிகண்டு நூலாகிய திவாகாரத்தைப் போல இதுவும் ஆராய்ந்து பதிப்பிக்கவேண்டும் நிலையில் உள்ளது.

நிகண்டு நூல்களை அறிமுகம் செய்தவர்

இந்த இருபதாம் நூற்றாண்டின் முதற் பகுதியில் நிகண்டு நூல்களைத் தமிழுலகிற்கு அறிமுகம் செய்துவைத்தவர் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்களாவர். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியின் பதிப்பாசிரியராக 1926-ல் பதவியேற்ற இவர்கள் தமிழகராதி ஆக்கத்திற்கு நிகண்டுகள் துணை செய்வதனை உணர்ந்தார் முன்வந்த நிகண்டு நூல்களைச் செப்பமுறப் பதிப்பிக்கவும் வெளியிடப் பெறாத நிகண்டு நூல்களை அச்சில் பதிப்பித்து வெளிப்படுத்தவும இவர்கள் தம்முடைய அகராதிப் பணிகளுக்கிடையில் அயராது பாடுபட்டு வந்தார்கள். நிகண்டுச் சுவடிகள் பலவற்றைத் தேடித்தொகுத்து வைத்தும் ஆராய்ந்து வந்தார்கள்

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் வெளியிட்ட சூடாமணி நிகண்டு ஒன்று தவிர அச்சில் வநத ஏனைய நிகண்டுகள் சரிவரப் பரிசோதித்துப பதிப்பிக்கப்பெறாத குறையினைக் கண்டு தமிழுலகிற்குப் பேராசிரியர் பிள்ளையவர்கள் எடுத்துரைத்தார்கள். 'தமிழகராதியின் ஆதார நூற்றொகுதி' என்னும் தலைப்பில் நாமதீப நிகண்டு, பொதிகை நிகண்டு கயாதரம், அரும் பொருள் விளக்க நிகண்டு என்னும் நான்கையும் சுவடிகளிலிருந்து எடுத்து ஆராய்ந்து நன்கு பரிசோதித்து அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். இவர்கள் பதிப்பிக்கத் தொடங்கிய கைலாச நிகண்டு சூளாமணியும் பிங்கல நிகண்டும முதலில் சிறிதளவே அச்சாயின.

அச்சில் வாராத நிகணடுகளை அச்சிட்டால்தான் நமது மொழியில் 'அகராதிக்கலை' வளமுற இயலும் என்பது இவர்களுடைய கருத்து.

> "இன்னும் பல நிகண்டுகள் வெளிவரவேண்டுவனவாயுள்ளன. நிகண்டுகளனைத்தையும் பயன்படுத்தித் தொகுக்கப் பெற்ற அகராதி இதுவரை வெளிவரவில்லை. பலவகையாலும் நிரமபிய பேரகராதி வெளி வருவதற்குரிய முயற்சியைத் தமிழ்நாடு முழுவதும் ஒருமுகப்பட்ட உள்ளத்துடன் மேற்கொள்ளும்படி இறைவன் அருள் புரிவாராக !

என்று தாம் பதிப்பித்த அரும்பொருள் விளக்க நிகண்டு முன்னுரையில் குறிப்பிட்டுள்ளமை சிந்திக்கத் தக்கது. தமிழில் தோன்றிய நிகண்டு நூல்களைத் தக்க முறையில் பதிப்பிப்பதற்குப் பல்கலைக் கழகம் போன்ற கல்வி நிறுவனங்கள் முன்வருதல் வேண்டும். அவ்வாறு செய்தோமானால் நம்முடைய மொழிவளத்தை அளந்து கூறும் நிகண்டு நூல்களை நாம் பெற்றவர்களாவோம்.

அட்டவணைகள் :

1 நிகண்டு நூல்கள்

[அகராதி அடைவில்]

வரிசை எண்	நூல்	ஆசிரியர்	காலம்	பாவகை
1	அகராதி நிகண்டு	சிதம்பரம் ரேவண சித்தர்	1594	நூற்பா
2	அகராதி மோனைக் ககராதி யெதுகை			நூற்பா
3	அந்தாதித் தொடை நிகண்டு	அரசஞ் சண்முகனார்		
4	அபிதானந்தனிச் செய்யுனிகண்டு	கோபாலசாமி நாயகர்		
5	அரும்பொருள் விளக்க நிகண்டு	அருமருந்தைய தேசிகர்	1763	ஆசிரிய விருத்தம்
6	ஆசிரிய நிகண்டு	ஆண்டிப்புலவர்	17 அல்லது 18	ஆசிரிய விருத்தம்
7	ஆரிய நிகண்டு	(நீர்வேலிச் சங்கர பண்டிதர் குறிப்பு)		
8	இலக்கத் திறவுகோல்			
9	உரிச்சொல் நிகண்டு	காங்கேயர்	11 ஆம் நூற்றாண்டு	வெண்பா

வரிசை எண்.	நூல்	ஆசிரியர்	காலம்	பாவகை
10	ஏகபாத நிகண்டு			
11	ஒருசொற் பல்பொருள் விளக்கம்	அண்ணாசாமிப் பிள்ளை	1850	
12	கந்தசுவாமியம்	சுப்பிரமணியதீட்சிதர்	1844	
13	கயாதரம்	கயாதரர்	18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி	கட்டளைக் கலித்துறை
14	கைலாசநிகண்டு சூளாமணி	கைலாசம்		நூற்பா
14	(அ) சதுரகராதி	வீரமாமுனிவர்	1732	உரைநடை
15	சிந்தாமணி நிகண்டு	வைத்தியலிங்கபிள்ளை, யாழ்ப்பாணம்	1874	ஆசிரியவிருத்தம்
16	சூடாமணி நிகண்டு (நிகண்டு சூளாமணி)	மண்டலபுருடர்	16-ம் நூற்றாண்டு	ஆசிரியவிருத்தம்
	ஒருசொற்பல்பொருள் விளக்கம்	அண்ணாசாமிப் பிள்ளை	1850, 19-ம நூற்றாண்டு	ஆசிரியவிருத்தம் உரைவிளக்கம்
	வேதகிரியார் சூடாமணி	களத்தூர் வேதகிரிமுதலியார்	1843 யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்க வெளியீடு	ஆசிரியவிருத்தம்

வரிசை எண்	நூல்	ஆசிரியர்	காலம்	பாவகை
17	தமிழுரிச்சொற்பனுவல்	கவிராசபண்டிதர் ராமசுப்பிரமணிய நாவலர்	20ம் நூற்றுண்டு	நூற்பா
18	திவாகரம்	திவாகரர்	8ம் நூற்றாண்டு	நூற்பா
19	தொகைப்பெயர் விளக்கம்	வேதகிரி முதலியார்	1849	
20	நவமணிக்காரிகை நிகண்டு	அரசஞ்சண் முகனார்		கட்டளைக் கலித்துறை
21	நாநார்த்ததீபிகை	முத்துச்சாமிப்பிள்ளை	1849	ஆசிரியவிருத்தம்
22	நாமதீப நிகண்டு	சிவசுப்பிரமணியக் கவிராயர்		வெண்பா
23	பல்பொருட் சூடாமணி (வடமலை நிகண்டு)	ஈசுரபாரதியார்	1700	நூற்பா
24	பாரதிதீபம்	திருவேங்கடபாரதி	18ம் நூற்றுண்டு முற்பகுதி	கட்டளைக் கலித்துறை
25	பிங்கலம் (பிங்கலந்தை)	பிங்கலர்	9ம் நூற்றுண்டு	நூற்பா
26	பொதிகை நிகண்டு	சாமிநாத கவிராயர்		எண்சீர்விருத்தம், நூற்பா
27	பொருட்டொகை நிகண்டு			நூற்பா
28	விரிவு நிகண்டு	நா. அருணாசல நாவலர்	19ம் நூற்றுண்டு	விருத்தம்
29	வேதகிரியார் சூடாமணி	களத்தூர் வேதகிரிமுதலியார்	1843	ஆசிரியவிருத்தம்

2. பாவகையில் நிகண்டு ஒப்புமை

நூற்பா	ஆசிரிய விருத்தம்
திவாகரம்	நிகண்டு சூடாமணி
பிங்கலம் - பிங்கலந்தை	வேதகிரியார் சூடாமணி
அகராதி நிகண்டு	ஆசிரிய நிகண்டு
பல்பொருட் சூடாமணி (வடமலை நிகண்டு)	பொதிகை நிகண்டு
பொதிகை நிகண்டு	அரும்பொருள் விளக்க நிகண்டு
கைலாச நிகண்டு	சிந்தாமணி நிகண்டு
பொருட்டொகை நிகண்டு	விரிவு நிகண்டு
தமிழுரிச் சொற் பனுவல்	
வெண்பா	அபிதானந் தனிச்செய்யுணிகண்டு
உரிச்சொல் நிகண்டு	(ஆசிரிய விருத்தம் வஞ்சி விருத்தம் முதலிய பாவகை)
நாமதீப நிகண்டு	நாநார்த்த தீபிகை (பல்வேறுவகை விருத்தம)

கட்டளைக் கலித்துறை

கயாதரம்

பாரதிதீபம்

நவமணிக்காரிகை நிகண்டு

3. தொகுதி அடிப்படையில் நிகண்டு ஒப்புமை

12 – தொகுதி

1 திவாகரம்

2 சூடாமணி நிகண்டு

3. பாரதிதீபம்

பதினொராந்தொகுதி

ஒரு சொல் பல்பொருள் மட்டும் கொண்டவை

1. அகராதி நிகண்டு

2 அரும்பொருள் விளக்க நிகண்டு

3. பொதிகை நிகண்டு - இரண்டாம் பாகம்

4. நாநார்த்த தீபிகை

5. விரிவு நிகண்டு

11 – தொகுதி

1. கயாதரம்

2. ஆசிரிய நிகண்டு

10 – தொகுதி

1. உரிச்சொல் நிகண்டு

2 பிங்கலம்

3. கைலாச நிகண்டு சூளாமணி

4. தமிழுரிச் சொற்பனுவல்

ஒருபொருட் பல்பெயர் மட்டும்

1. நாமதீப நிகண்டு

2. சிந்தாமணி நிகண்டு

4. கால அடைவில் நிகண்டு நூல்கள்

	நூல்	ஆசிரியர்	காலம்	தொகுதி	பாவகை	பிற குறிப்பு
1	திவாகரம்	திவாகரர்	8	12	நூற்பா	
2	பிங்கலம் (பிங்கலந்தை)	பிங்கலர்	9	10	நூற்பா	
3	உரிச்சொல் நிகண்டு	காங்கேயர்	11	12	வெண்பா	
4	கயாதரம்	கயாதரர்	15	11	கட்டளைக் கலித்துறை	
5	பாரதி தீபம்	திருவேங்கட பாரதி	15	12	கட்டளைக் கலித்துறை	
6	சூடாமணி நிகண்டு	மண்டல புருடர்	16	12	ஆசிரிய விருத்தம்	
7	அகராதி நிகண்டு (சூத்திரவகராதி)	இரேவண சித்தர்	1594		ஒருசொல் பலபொருள் நூற்பா	
8	கைலாச நிகண்டு சூளாமணி	கைலாசம்	16	10	நூற்பா	பிங்கலந்தையின் அமைப்பு முறை தழுவிய நூல்
9	ஆசிரிய நிகண்டு	ஆண்டிப்புலவர்	17	11	ஆசிரிய விருத்தம்	
10	பல்பொருட் சூடாமணி (வட மலை நிகண்டு)	ஈசுர பாரதியார்	1700		மூன்றுகாண்டம் நூற்பா	அமரசிம்மரது அமரகோசம் என்னும் வடநூல் அமைப்பினை ஒத்துளது.

11	சதுரகராதி	வீரமாமுனிவர்	1732			நிகண்டு நூல்களைப் பின்பற்றிய முதல் உரைநடை அகராதி
12	அரும் பொருள் விளக்க நிகண்டு	அருமருந்தைய தேசிகர்	1769	ஒருசொல் பலபொருள்	ஆசிரிய விருத்தம்	
13	பொதிகை நிகண்டு	சாமிநாத கவிராயர்	18	முதற்பகுதி 10 இரண்டாம பகுதி ஒருசொல் பல பொருள்	ஆசிரிய விருத்தம் நூற்பா	திவகரத்துக்குள் பல பொருட் பெயர்த தொகுதி செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி என வரும் இரண்டும் இயற்கை செயற்கைப் பல்பொருட் பெயர்த்தொகுதி என ஒரு தொகுதியாகத் தரப் பட்டுள்ளது. முதற் பகுதியின் 10ஆம் தொகுதி சூடாமணி நிகண்டு 11-ஆம தொகுதி யமைப்பைப் பின் பற்றியுள்ளது.
14	நாமதீப நிகண்டு	சிவசுப்பிரமணியக் கவிராயர்	19	ஒருபொருட் பல்பெயர்	வெண்பா	
15	பொருட்டொகை நிகண்டு	சுப்பிரமணிய பாரதி	19	பல்பொருட் கூட்டத் தொகு பெயர் 12 மட்டும்	நூற்பா	

	நூல்	ஆசிரியர்	காலம்	தொகுதி	பாவகை	பிற குறிப்பு
16	நாநார்த்த தீபிகை	முத்துசாமிப் பிள்ளை	1850	ஒருசொல் பல்பொருள்	ஆசிரிய விருத்தம	
17	கந்தசுவாமியம்	சுப்பிரமணிய தீட்சிதர்	1844	ஒன்று, இரண்டு கட்டளை	நூற்பா	
18	தொகைப்பெயர் விளக்கம	வேதகிரி முதலியார்				
19	இலக்கத் திறவுகோல்					
20	அகராதி மோனைக் ககராதி யெதுகை					
21	சிந்தாமணி நிகண்டு	வைத்தியலிங்கம் பிள்ளை	1874			
22	அபிதானந்தனிச்- செய்யுள் நிகண்டு	கோபாலசாமி நாயக்கர்	1878			
23	விரிவு நிகண்டு	அருணாசல நாவலர்	19	11		
24	நவமணிக்காரிகை நிகண்டு	அரசஞ் சண்முகனர்	20			
25	தமிழுரிச் சொற் பனுவல்	கவிராச பண்டிதர் இராம சுப்பிரமணிய நாவலர்	20	10	நூற்பா	பிங்கல நிகண்டின் அமைப்பு முறை கொண்டது. தமிழ்ச் சொற்கள் மட்டுமே தெரிந்து தொகுககப்பட்டது

5. நிகண்டாசிரியர்களும் ஆக்கிய நூல்களும்

ஆசிரியர்	நூல்
அண்ணாசாமிப்பிள்ளை	ஒருசொற்பல்பொருள் விளக்கம்
அரசர் சண்முகனார்	அந்தாதித் தொடை நிகண்டு
	நவமணிக் காரிகை நிகண்டு
அருணாசல நாவலர்	விரிவு நிகண்டு
அருமந்தைய தேசிகர்	அரும்பொருள் விளக்க நிகண்டு
ஆண்டிப்புலவர்	ஆசிரிய நிகண்டு
இரேவணசித்தர்	அகராதி நிகண்டு
ஈசுரபாரதியார்	பல்பொருட் சூளாமணி
கயாதரர்	கயாதரம்
காங்கேயர்	உரிச்சொல்நிகண்டு
கைலாசம்	கைலாசநிகண்டு சூளாமணி
கோபாலசாமி நாயக்கர்	அபிதானந்தனிச் செய்யுள் நிகண்டு
சாமிநாத கவிராயர்	பொதிகை நிகண்டு
சிவசுப்பிரமணியக் கவிராயர்	நாமதீப நிகண்டு
சுப்பிரமணிய பாரதி	பொருட்டொகை நிகண்டு
திருவேங்கடபாரதி	பாரதிதீபம்
திவாகரர்	திவாகரம்
பிங்கலர்	பிங்கலம்
மண்டலபுருடர்	சூடாமணி நிகண்டு
முத்துச்சாமிப்பிள்ளை	நாநார்த்த தீபிகை
வீரமா முனிவர்	சதுரகராதி
வேதகிரி முதலியார்	வேதகிரியார் சூடாமணி
வைத்தியலிங்கம் பிள்ளை	சிந்தாமணி நிகண்டு

6 ஒருபொருட்பல்பெயர் விளக்கும் நிகண்டுகள்

1 திவாகரம்
2 பிங்கலம்
3 உரிச்சொல் நிகண்டு
4 கயாதரம்
5 பாரதிதீபம்
6 சூடாமணி நிகண்டு
7 கைலாச நிகண்டு
8 ஆசிரிய நிகண்டு
9 பலபொருட் சூடாமணி
10 பொதிகை நிகண்டு
11 நாமதீப நிகண்டு
12 சிந்தாமணி நிகண்டு
13 அபிதானந்தனிச் செய்யுள் நிகண்டு
14 விரிவு நிகண்டு
15 நவமணிக் காரிகை நிகண்டு
16 தமிழுரிச் சொற்பனுவல்

7. ஒருசொல் பலபொருள் விளக்கும் நிகண்டுகள்

1. திவாகரம்
2. பிங்கலம்
3. உரிச்சொல் நிகண்டு
4. கயாதரம்
5 பாரதி தீபம்
6 சூடாமணி நிகண்டு
7. அகராதி நிகண்டு
8. கைலாச நிகண்டு
9. பலபொருட் சூடாமணி (வடமலை நிகண்டு)
10. அரும்பொருள் விளக்க நிகண்டு
11 பொதிகை நிகண்டு
12 நாநார்த்த தீபிகை
13. விரிவு நிகண்டு
14 தமிழுரிச் சொற்பனுவல்

8 பல்பொருட் கூட்டத்து ஒரு பெயரைத் தனிப்பட விளக்கும் நிகண்டுகள்

1. திவாகரம்
2. உரிச்சொல் நிகண்டு
3. பாரதி தீபம்
4 சூடாமணி நிகண்டு
5. பல்பொருட் சூடாமணி
6. பொருட்டொகை நிகண்டு

3

நிகண்டு நூல்களின் வரலாறு

1 திவாகரம்

தமிழிலுள்ள நிகண்டுகளுள் மிகப் பழமையானது திவாகரம். இது முதல் நிகண்டு ; பின்னால் தோன்றிய நிகண்டுகளுக்கெல்லாம் முதல் வழிகாட்டி.

இதனை ஆக்கியவர் திவாகரர். திவாகரன் என்றால் பகலைச் செய்பவன், சூரியன் என்பது பொருளாகும். சூரியனைப்போல நிகண்டு என்னும் சொற்பொருள் விளக்க நூலை ஆக்கிப் புகழொளி படைத்து இவர் திகழ்கிறார். இவர் நூலையே அடியொற்றித் தாம் புதுநூல் செய்வதாகப் பின்னையோர் குறிப்பிட்டுச் செல்லுகின்றனர். பிங்கல நிகண்டுப் பாயிரம், 'செங்கதிர் வரத்தால் தோன்றும் திவாகரன் பயந்த பிங்கல முனிவன்' என்றும், சூடாமணி நிகண்டில் மண்டல புருடர், 'செங்கதிர் வரத்தால் தோன்றும திவாகரர்' என்றும் இவர் பெயரைத் திவாகரன், திவாகரர் என்று சுட்டுதல் காணலாம். எனவே, இவர் திவாகரர் என்னும் இயற்பெயர் பெற்றவர் என்பது தெளிவு.

திவாகரரின் ஊர்ப்பெயர் முதலிய செய்திகள் அறியக்கூடவில்லை. இவர் சோழநாட்டிலே அம்பர் என்னும் ஊரில் வாழ்ந்த சேந்தன் என்ற வள்ளலைத் தம் நூலுள் பல இடங்களில் புகழ்ந்து போற்றியுள்ளார். ஆதலால் அந்த வள்ளலின் ஆதரவில் இவரும் அம்பரில் வாழ்ந்திருந்தார் என்று ஊகிக்கலாம். திவாகரரை ஆதரித்த வள்ளல் சேந்தன் பெயருடன் இணைத்துச் 'சேந்தன் திவாகரம்' எனவும் இவர் செய்த நூற்பெயரை வழங்குவர். இப்பெயர் ஆசிரியரே சூட்டிய பெயரா என்பது ஐயத்திற்கிடமாயுள்ளது. இப்பெயரால் அமைந்த ஏட்டுச்

சுவடிகள் மிகச் சிலவாயுள்ளன. பெரும்பாலான ஏடுகளும் திவாகரம் என்றே நூற்பெயரைச் சுட்டியுள்ளன.

திவாகரர் பல்வேறு துறைகளிலும் பெரும்புலமை பெற்றிருந்தார் என்பதற்கு இவர்தம் நிகண்டு நூலே முதற் சான்றாகும். ஒவ்வொரு தொகுதியின் முடிவிலும் ஆசிரியர் தம் வரலாற்றுக் குறிப்புகள் பொதிந்த நூற்பா ஒன்றை அமைத்திருப்பது கொண்டு இவரைப்பற்றிய சிற்சில செய்திகள் தெரியவருகின்றன. இவர் அமைத்த முறையில தொகுதிதோறும் வரலாறு சுட்டும் பாவினைக் கயாதரம், பாரதிதீபம், அகராதி நிகண்டு, சூடாமணி நிகண்டு நூல்களை ஆக்கியோரும் படைத்துள்ளனர்.

திவாகரர் சமண சமயம் சார்ந்தவர் என்றே வரலாற்றாசிரியர் பலரும் குறிப்பிடுகின்றனர். திவாகரருடைய நூல் அருகன் பெயர் தொடக்கமாகவும் சிவன் பெயர் தொடக்கமாகவும் ஏடுகளில் காணப்படு கின்றன. ஆழ்வார் திருநகரி முதலிய இடங்களில் வாழ்ந்த வைதிக சமயத்தார் எழுதிய ஏடுகள் பல அருகன் பெயர் தொடக்கமாக அமைந் துள்ளன. திவாகரரின் பெருநூலைப் பதிப்பித்தற்காகப் படி எழுதி வைத்த பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை, பேராசிரியர் மு இராக வையங்கார் ஆகியோருடைய கைப்பிரதிகள் அருகன் தொடக்கமாகவே தான் உள்ளன. இலக்கிய வரலாறுகளை நூற்றாண்டு வரிசையில் எழுதி வெளியிட்டு வரும் அறிஞர் மு அருணாசலம் அவர்கள் ஒன்ப தாம் நூற்றாண்டு வரலாற்று நூலில் இவரைச் சைவ சமயத்தினர் என்று சிற்சில சான்றுகள் காட்டி எடுத்துரைத்தார்கள்.

திவாகர நிகண்டின் காலம் குறித்துப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் நாமதீப நிகண்டின் முன்னுரையில் தக்க ஏதுக்கள் காட்டி கி. பி. 8-ஆம் நூற்றாண்டு என நிறுவியிருக்கிறார்கள். திரு. பிள்ளையவர்கள் கூறும் செய்திகள் பின்வருமாறு :

> “ தமிழிலுள்ள நிகண்டுகளில் மிகப் பழமையானது சேந்தன் திவா கரம். அந்நூல் தோன்றிய காலம் இன்னும் நிச்சயிக்கப் பெற வில்லை. அதன்கண் மிகுதியாய்க் காணப்படும் வட நூற்பொருள் கள் அது சங்க காலத்திற்கு மிகப் பிற்பட்டதென்று உணர்த்து கின்றன. அதனைச் செய்வித்த அம்பர்கிழான் அருவந்தை புறநானூற்றுட் கல்லாடனார் பாடிய அம்பர் கிழான் அருவந்தை

யின் வழியிற் பிற்காலத்து விளங்கிய வொருவனாயிருத்தல் கூடும் தமிழ்நாட்டுப் பெருவேந்தர் மூவர் பெயர்களும், அவர்களையடுத்து, 'வேள்புலவரசர் சளுக்குவேந்தர்' என வேள்புலவரசர் பெயரும், பின்னர்க் குறுநில வேந்தர்கள் பெயர்களும் முறையே அந்நிகண்டிட் கூறப்படுகின்றன. தமிழ் வேந்தர்கள் கொடியோடு ஒப்பச்சளுக்கவரசர்க்குரிய கேழற்கொடியும் விதந்து ஓதப்படுகின்றது சளுக்க வேந்தர்க்கு 'வேறு பெயர்களில்லா திருப்பவும் அவர்கள் இன்னரென ஆட்சி புரிந்த நிலம் பற்றி வலிந்து உணர்த்தப்படுகின்றார்கள் இக்காரணங்களால் சளுக்கிய மரபினர் பிரபல மன்னராய் விளங்கிய காலத்து அஃது இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுதல் தகும் இக்காலம் கி. பி 7-ம் நூற்றாண்டு அல்லது 8 - ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகவேனும் 11 – ஆம் நூற்றாண்டாகவேனும் இருத்தல் கூடுமென்பது தென்னிந்திய சரித்திரத்தால் உணரலாகும் பிற்கூறிய காலத்தினராகக் கொள்ளத்தகும் இளம்பூரணர் அந்நிகண்டினை எடுத்தாளுதலின் (தொல். சொல். 390) அஃது அவர் காலத்திற்கு முற்பட்டது என்பது தேற்றம். குறுநில வேந்தர் பெயராக அரட்டர்' என்பது திவாகரப்பிரதி சிலவற்றிற் காணபபடுகின்றது ராஷ்டிரகூடர் (அரட்டர்) குறுநில வேந்தராயிருந்த காலத்து இப்பெயர் தோன்றியிருக்கலாகுமென்று ஊகித்தற்கிடமுண்டு இஃது உண்மையாயின், ராஷ்டிரகூடர் பிரபலராய் விளங்கிய கி.பி 750–ககு முன் அந்நூல் தோன்றியதாதல பெறபபடும். ஆகவே, கி. பி. 8-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி திவாகரம் இயற்றப்பெற்ற காலமெனக் கொள்வது பொருந்துமெனத் தோன்றுகிறது."

இககருத்தை அப்படியே தம் நூலுள் எடுத்துத் தந்து அறிஞர் மு. அருணாசலம் தாம் எழுதிய ஒனபதாம் நூற்றாண்டு வரலாற்றில், 'பிளளையவர்கள் கொள்ளுகின்ற நெறி கொள்ளததக்க தாயினும் முடிவு கொள்ளக்தக்கதன்று' என்று வேறுபல ஒத்த சான்றுகளை எடுத்துக்காட்டித் திவாகரர் காலம் 9–ஆம் நூற்றாண்டாதல் வேண்டும் என்கிறார்.

இந்நூலின் அமைப்பும் பொருட் பாகுபாட்டு முறைகளும் ஏனைய நிகண்டுகளுக்கு இது வழிகாட்டியாயிருக்கும் சிறப்பும் எல்லாம்

நிகண்டுப் பொருட்பாகுபாடுபற்றி விளக்கப்பெறும் பிந்திய அத்தியாயத்தில் காணலாம்.

நிகண்டுகளுள் அதிகமான பதிப்புகளைப் பெற்ற சிறப்புடைய நூல் திவாகரம். இதற்கு அடுத்த நிலையில் சொல்லத்தக்கது சூடாமணி. இனி, இத்திவாகர நிகண்டின் பதிப்பு வரலாற்றினை ஈண்டுக் காண்போம்.

திவாகர நிகண்டை முதன்முதலில் பதிப்பித்து வெளியிட்டவர் தாண்டவராய முதலியார். இவர் சென்ற நூற்றாண்டில் சென்னைக் கல்விச் சங்கத்தில் தமிழ்த் தலைமைப் புலவராய் விளங்கியவர். அட்டாவதானம் வீராசாமி செட்டியார், திருவேங்கடாசல முதலியார், விசாகப் பெருமாளையர், கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை, பு. நயநப்ப முதலியார் முதலியோர்களும் தாண்டவராய முதலியாரோடு இச்சங்கத்தில் தமிழ்ப்புலவராய்ச் சிறந்து விளங்கியவர்கள் ஆவர். கல்வித் துறைக்குப் பயன்படத்தக்க பல நூல்களையும் இச்சங்கத்தின் வாயிலாக இவர்கள் வெளியிட்டு வந்தார்கள். இந்த வகையில் அகராதிகளுக்கெல்லாம் மூலமாய் விளங்கியதும் சொற்பொருள் விளக்க நூலாய் அமைந்ததுமான திவாகரத்தைத் தலைமைப் புலவர் தாண்டவராய முதலியார் பதிப்பிக்க எடுத்துக்கொண்டார் என்று தோன்றுகிறது.

இவர் திவாகரச் சுவடிகளை ஒத்துப்பார்த்துப் பிழைகளைக் களைந்து செம்மைப்படுத்திப் பதிப்பிக்க முற்பட்டார். திவாகரப் பகுதிகளில் சில இடங்களில் புதுச் சூத்திரங்களையும் இவர் செய்து சேர்த்துள்ளார். தாம் சேர்த்த புதுச் சூத்திரங்களுக்கு உடுக்குறியிட்டுக் காட்டியுள்ளார்.

திவாகரம் தெய்வப் பெயர்த்தொகுதி முதல் பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த்தொகுதி ஈறாகப் பன்னிரண்டு தொகுதிகளைக் கொண்டுள்ளது ஆகும். இவை முழுமையும் தாண்டவராய முதலியாரால் பதிப்பிக்கப் பெறவில்லை. தாண்டவராய முதலியார் அச்சிட்டது முதல் எட்டுத் தொகுதிகளே. அவர் தமது வேலையின் நிமித்தம் விசாகப்பட்டினத்திற்குச் சென்று தங்க நேர்ந்தமையால் தொடர்ந்து அவரால் அச்சு வேலைகளைக் கவனிக்க இயலவில்லை. இச்செய்தி அவர் கல்விச் சங்கத்துப் புத்தக பரிபாலகராகிய கொற்றமங்கலம் இராமசாமிப் பிள்ளைக்கு விசாகப்பட்டினத்திலிருந்து 1839 ஆகஸ்டு 7-ல் எழுதிய பின்வரும் கடிதத்தால் தெரியவருகிறது.

"நாம் அச்சிற் பதிப்பிக்கத் தொடங்கிய சேந்தன் றிவாகரத்தி லொன்பான்றொகுதி தொடங்குவதற்கு முன்னெனக்கு வாய்த்த வேறு தேயத்திருக்கையாலும், பிறிது கருமத்தைக் கருத்தினாலுந் தீண்டவொண்ணாக் கருமந் தலைப்படலாலும், நான் கருதியவாறு முற்றுவித்தற்கியலாத மற்றைத் தொகுதிகளையுமொருவாறு புலக்குவித்துச் சேர்த்துப் புத்தகத்தை நிறைத்து வெளிப்படுத்துவீராக வென்றவென் வேண்டுகோளை மேற்கொண்டு அவற்றிலிரண்டாயினுஞ் சேர்த்தமைக் காக மகிழ்வுறாநின்றேன். மறவியால் விடுபட்ட சில பொருள்களும் சொற்களும் பின்னர்ச் சேர்ப்பித் தற்பொருட்டு நான் முன் குறித்ததிருந்த குறிப்பே டெனக்குக் காணப்பட்டாற் காலந்தாழ்க்காமற் பயன்படுத்துவேன்."

எட்டுத் தொகுதியைத் தொடர்ந்து ஒன்பது பத்தாம் தொகுதி களைக் கல்விச் சங்கத்து வித்துவானாயிருந்த பு. நயநப்ப முதலியார் பரிசோதித்து முதல் பத்துத் தொகுதிகள் வரையில் ஒரு தொகுதியாக 1839-ஆம் ஆண்டு வெளிப்படுத்தினர். 'மற்றை யிரண்டு தொகுதிகளும் பின்னர் வெளிப்படுத்தப்படும்' என்னும் குறிப்பும் இப்பதிப்பில் காணப் படுகிறது. இதன்படி எஞ்சிய இருதொகுதிகளும் இரண்டாம் தொகுதி யாக அடுத்து அச்சிட்டு வெளிப்படுத்தியிருத்தல் கூடும். அந்தப்பதிப்பு இதுவரை என் பார்வைக்குக் கிட்டாமையால் சரியான ஆண்டு விவரம் குறிக்க இயலவில்லை. முதல் தொகுதி வெளிவந்த சில காலத்திற் குள்ளாகவே எஞ்சிய பகுதிகளும் வெளிவந்திருத்தல் கூடும்.

1839 ல் வெளிவந்த முதற்பதிப்பு, 'சேந்தன்றிவாகரம்' என்னும் பெயரில் 245 பக்கங்கள் கொண்டதாய் அமைந்துள்ளது. நூலுள் இருபத்தியாக முதற்பத்தியில் சூத்திரமும் எதிரே மறுபத்தியில் அதற் குரிய பெயர் விளக்கமும் அமைக்கப்பட்டுள்ளன. எ, ஒ என்னும் குற் றெழுத்துக்கள் தொல்காப்பியர் சுட்டியபடி புள்ளியிட்டு அச்சிடப்பட் டுள்ளன. ஒவ்வொரு தொகுதிச் சூத்திரங்களுக்கும் தொடர் எண் இட்டுள்ளனர். ஆக, தொகுதி பத்துக்கும் சூத்திரம் 2286 என்று இறுதி யில் சுட்டப்பட்டிருக்கிறது. இறுதிப் பக்கமாகிய 245-ஆம் பக்கத்தில் 'பிழை திருத்தல்' என்னும் தலைப்பில் 17 பிழை திருத்தல்கள் காட்டப் பட்டுள்ளன. அதன் கீழ், 'சென்னைப் பட்டணத்தில்' — தி. விசாகப்

பெருமாளையரது கல்வி விளக்கவச்சுக் கூட்டத்திற் அச்சிற் பதிப்பிக்கப் பட்டது' என்னும் விவரமும் குறிக்கப்பட்டிருக்கிறது.

திவாகரத்துக்குக் கிட்டிய பதிப்புகளில அடுத்தபடியாகக் குறிப்பிடத் தக்கது கிரவுன் வடிவில் அமைந்த 242 பக்கங்கள்கொண்ட மற்றொரு பதிப்பு. இது தாண்டவராய முதலியார் பதிப்பினை அடுத்து 1840-ஆம் ஆண்டிலேயே வெளிவந்துள்ளது. இதில் பன்னிரண்டு தொகுதிகளும் அமையப்பெற்று நூல்முழுமை பெற்றது. இந்தப் பதிப்பிலும் எ, ஒ எழுத்துக்கள் புள்ளியிட்டே பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. தாண்டவ ராய முதலியார் பதிப்பில் புதிய சூத்திரங்கள் உடுக்குறியிட்டுக் காட்டிய படி இப்பதிப்பும் உள்ளது. தாண்டவராய முதலியார் பதிப்பின்படியே பத்துத் தொகுதிகளின் மூலபாடம் தந்து எஞ்சிய இரு தொகுதிகளின் மூல பாடங்களையும் சேர்த்துச சென்னைக் கல்விச் சங்கத்து வித்து வான்கள் பூர்த்திசெய்து தந்தனர்.

மர்டாக்கின் நூல் விவர அட்டவணையின் முன்னுரையில், சேந் தனார் என்பவரால் திவாகரம் பத்துத் தொகுதிகளில இயற்றப்பட்டுள் ளது. என்னும் விவரம் காணப்படுகிறது. இது திவாகரத்தின் மேற் குறித்த முதல் பதிப்பைப் பார்த்து எழுதியதாகலாம். திவாகரரை ஆதரித்த சேந்தனைத் திவாகரம் இயற்றினாரென்று தவறாக உணர்ந் ததன் விளைவே இக்குறிப்பு. பின்னர், அட்டவணையில் திவாகரம் பற்றிக் குறிக்குமிடத்தும இவ்வாறே இந்நிகண்டு பற்றிக் குறிப்புஎழுது கிறார். ஆனால், இங்குத் திவாகரம் பன்னிரண்டு தொகுதிகளை யுடையது என்று சுட்டப்பட்டுள்ளது. பல பதிப்புகள் வெளிவந்திருப்ப தாகவும் குறித்துள்ளார். இருதொகுதிகளாக இந்நிகண்டு வெளி வந்துள்ளதையும் முதல் தொகுதி 242 பக்கமும் இரண்டாம் தொகுதி 24 பக்கமும் கொண்டது என்னும் விவரமும் தரப்பட்டுளளது.

பிரிடடிஷ் மியூசியம கேட்லாக்கிலிருந்து திவாகரரின் திவாகரம் T. குப்பன் அய்யங்கார் என்பவரால் சென்னையிலிருந்து 1859 ல் பதிப்பிக்கப் பெற்ற விவரம் தெரியவருகிறது.

1886 ல் தஞ்சாவூர் சின்ன கன்னைய செட்டியார் என்பவரால் சென்னையில் வெளியிட்ட பதிப்பு ஒன்றுள்ளது. இதன் முதற்பக்கத் தில் பின்வரும் குறிபபுக் காணப்படுகிறது.

உ

கடவுள் துணை

சேந்தன் திவாகரம் மூலபாடம்

இஃது

சென்னைக் கல்விச் சங்கத்துத் தமிழ்த்தலைமைப்
புலமை நடாத்திய தாண்டவராய முதலியார்
அவர்களால் பதிப்பித்த
பத்துத் தொகுதிகளின் மூலத்தோடு
மேற்படி சங்க வித்துவான்களால்
பதிப்பித்த
மற்றவிரண்டு தொகுதிகளின் மூலத்தையும்
ஒன்றாகச் சேர்த்து
சிவாத்துவித சித்தாந்தியாகிய
திருமழிசை
முத்துசாமி முதலியார் அவர்களால்
அவைகட் கிணங்கப் பரிசோதித்து
தஞ்சாவூர்
சின்ன கன்னைய செட்டியாரால்
தமது
சகலகலா நிலைய அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1886.

இதற்குப் பின்வந்த பதிப்புகளின் முதற்பக்கத்திலும் பதிப்பாசிரியர் அச்சுக்கூடப் பெயர்கள் வேறுபட்ட போதிலும், 'இஃது சென்னைக் கல்விச் சங்கத்து', என்பது தொடங்கி, 'மற்ற இரண்டு தொகுதிகளின் மூலத்தையும் ஒன்றாகச் சேர்த்து' என்பது வரையுள்ள குறிப்பு அப்படியே காணப்படுகிறது. ஆதலால், பின்வந்த பதிப்பாசிரியர் எல்லாருமே முந்திய பதிப்பை அப்படியே பின்பற்றி வந்திருக்கிறார்கள், என்பது தெரியவருகிறது. எனினும் முதற்பதிப்பில் புதுச்

சூத்திரங்களுக்கு இடப்பட்ட உடுக்குறியைக் கைவிட்டுவிட்டனர். இதனால் எவை எவை திவாகரரின் சூத்திரம், எவை எவை தாண்டவ ராய முதலியார் உள்ளிட்ட கல்விச் சங்கத்து வித்துவான்கள் சேர்த்த சூத்திரம் என்பது தெரியாமல் ஆகிவிட்டது.

1886-க்குப் பின்னும், 1897-ல் சென்னை குருநாத சுவாமிகளின் பதிப்பு வந்துள்ளது. இந்த நூற்றாண்டில் கோ. லோகநாதமுதலியார் 1904-ல் தமது மனோன்மணிவிலாச அச்சுக்கூடத்தில் ஒரு பதிப்பு வெளியிட்டுள்ளார். பின்வரும், 1917, 1924 முதலிய ஆண்டுகளிலும் இவ்வச்சுக்கூடப் பதிப்புத் தொடர்ந்து வந்துள்ளது.

திருப்போரூர் டி. கோபால நாயகர் அவர்களின் சென்னை கோல்டன் எலெக்டிரிக் பிரஸ்ஸில் 1923-ல் ஒரு பதிப்பு வெளிவந்துள்ளது. 1958-ல் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் பதிப்பு வெளிவந்துள்ளது.

திவாகரத்தின் முதல் தொகுதியாகிய தெய்வப் பெயர்த் தொகுதி மட்டும் 1868-ல் ஊ. புஷ்பரதச் செட்டியாரால் பதிப்பிக்கப் பட்டது. பின்னரும் பல பதிப்புகள் இத் தொகுதிக்கு வந்துள்ளன. ஏறத்தாழச் சென்ற நூற்றாண்டில் மட்டும் 11 பதிப்புகள் வந்தமை தெரிய வருகிறது. சொற்பொருள் உணர்த்தும் சூடாமணி நிகண்டின் 11-ஆம் தொகுதியைப் பலரும் மனப்பாடம் செய்து வந்தது போலத் திவாகரத் தெய்வப் பெயர்த் தொகுதியையும் மனப்பாடம் செய்யும் பழக்கம் இருந்து வந்திருக்க வேண்டும். 1927-ல் மணி. திருநாவுக்கரசு முதலியார் பதிப்பு ஒன்று இத் தொகுதிக்கு உள்ளது. அதன் நூன் முகத்தில், 'இந்நூலின் முதற்பகுதி எல்லாப் பள்ளிகளிலும் வழிவழி படிக்கப்பட்டு வந்தலின் இதனை அச்சிட்டோம்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். பள்ளிப் பாடமாய் வழங்கினமையால் இத் தொகுதிக்கு மேலும் பல பதிப்புகள் அவ்வப்போது வெளிவந்திருத்தல் வேண்டும்.

உ. பிங்கலம்

திவாகரர் ஆக்கியளித்த முதல் நிகண்டாகிய திவாகரம் தோன்றி ஒரு நூற்றாண்டளவில் பிறந்தது பிங்கலம். பிங்கலர் என்பவரால் செய்யப் பெற்றது ஆதலின் ஆக்கியோன் பெயரால் பிங்கலம் என வழங்கலாயிற்று. இதனைப் 'பிங்கலந்தை' என்னும் பெயராலும் குறிப்பிடுவது உண்டு.

பிங்கல முனிவரைத் திவாகரரின் புத்திரர் என அந் நூலின் பாயிரம் தெரிவிக்கிறது.

'செங்கதிர் வரத்தால் திவாகரன் பயந்த
பிங்கல முனிவனெனத் தன்பெயர் நிறீஇ'

என்பது நூற் சிறப்புப் பாயிரம். இப் பிங்கலரும் திவாகரரைப் போலவே நூற்பாவினால் தம் நூலை அமைத்துள்ளார்.

'செங்கதிர் வரத்தால் தோன்றும்
திவாகரர் சிறப்பின் மிக்க
பிங்கலர் உரைநூற் பாவின்
பேணினர் செய்தார் சேர'

எனச் சூடாமணி நிகண்டின் தொடக்கத்தே மண்டலபுருடரும் இச் செய்தியினைத் தெரிவிக்கிறார்.

திவாகரருக்குப்பின் ஒரு நூற்றாண்டு சென்றபின் பிங்கல நூல் தோன்றியிருக்கலாம். 11-ஆம் நூற்றாண்டினராகக் கருதப்படும் சிலப்பதிகார அரும்பத உரைகாரரும் யாப்பருங்கல விருத்தியுரைகாரரும் பிங்கலந்தையை மேற்கோள் காட்டுகின்றனர் எனவே, இக்காலத்திற்கு முந்தியது இந்நூல் எனக் கொள்ளலாம். எனவே, இப் பிங்கலம் 9 அல்லது 10 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நூலாதல் கூடும்.

பிங்கலர் செய்த இந்நிகண்டு புலவர் பெருமக்களால் பெரிதும் போற்றப்பட்டு வந்தது.

'இன்னது இன்னுழி இன்னணம் இயலும்
என்றிசை நூலுள் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலின் பிங்கலம் முதலாம்
நல்லோ ருரிச்சொலின் நயந்தனர் கொளலே' (நன். 460)

என உரிச்சொற்பொருளைக் காணப் பிங்கலம் பெரிதுந் துணைபுரியும் என்று நன்னூலில் பவணந்தி முனிவர் கட்டுரைக்கின்றார். எனவே, இந்நூலின் பயிற்சி தமிழகத்தில் அந்நாளிலே மிக்கிருந்தது என்பது தெளிவாம்.

பிங்கல நிகண்டு திவாகர நிகண்டின் அடிப்படையைக் கொண்டிருப்பதோடு நூலின் பொது அமைப்பும் பெரிதும் அதனை ஒத்தேயுள்ளது. 10 தொகுதிகளில் பிங்கலர் தம் நூலை அமைத்துள்ளார். தொகைப்பெயர் விளக்கமான பல்பொருட் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி தனிப்படப் பிங்கலத்தில் இல்லை. மூன்றாவதான ஐயர் வகையில் முதல் 10 நூற்பாக்களே அத்தொகுதிப் பொருளுக்கு இயைபுடையவை. ஏனையவையெல்லாம் ஒருமை, இருமை முதலிய பெருள்களை விளக்கும் தொகைப் பெயர் விளக்கமேயாகும். இது பொருத்தமாயில்லை. இங்கு ஏதேனும் தவறு நிகழ்ந்திருத்தல் வேண்டும் ஏட்டின் பிறழ்ச்சியால் இவ்வாறு நேர்ந்தது போலும்

திவாகரத்தில் ஒருசொல் பல்பொருள் கூறுவது 11-ஆம் தொகுதி. பிங்கலத்திலோ 10-ஆம் தொகுதி. இவ்விருவரும் ஒருசொல் பல்பொருள் விளக்கும் நூற்பாக்களை எதுகை ஒப்புமைபற்றி ஒருவகை அடைவு முறையில் அமைத்துள்ளனர். எனினும் பிங்கல நிகண்டை முதன்முதலில் அச்சிட்ட சிவன் பிள்ளை நூலாசிரியர் முறை என நம்பத்தக்கதாய் ஏடுகளில காணுமாறு பதிப்பித்தாரில்லை. ஒரு சொல் பல்பொருள் விளக்கச் சொற்களை அகராதியமைப்பில் வைத்து அதற்கேற்ப நூற்பாக்களையும் அச்சில் மாற்றித் தந்தனர். இம்முறையிலேயே இதன்பின் வந்த இரு பதிப்புகளும் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

பிங்கலர் அமைத்த தொகுதிப் பிரிவு அமைப்பு ஒருவகைத் தனி முறையாயிருப்பினும் தெளிவான பகுப்பு முறையேயாம். தெய்வப் பெயரை வான்வகை, வானவர் வகை என இரு தொகுதிகளாகப் பிங்கலர் கொள்வர். சிவன், திருமால் முதலிய தெய்வப் பெயர்களைத் தொகுத்துத் தருமிடத்து அவ்வக் கடவுளர் பற்றிய பிற செய்திகளையும் இணைத்துத் தந்திருப்பது பிங்கலத்தின் தனிச் சிறப்பாகும்

பிங்கல நிகண்டு முதன் முதலாக 1890 ஆம் ஆண்டு சிவன் பிள்ளை என்பவரால் அச்சில் வெளியிடப்பெற்றது. நூற்பாக்களை ஒருபக்கத்திலும் அதற்குரிய உரை விளக்கத்தினை எதிர்ப் பக்கத்திலும் அமைத்து இந்நூலைப் பதிப்பித்துள்ளார் இதன்பின் 1917-ல் மதராஸ் ரிப்பன் பிரஸ் ஒரு பதிப்பினை வெளியிட்டது; இது முற்பதிப்பின் மறு படிவமேயாம். திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் முந்திய ரிப்பன் பிரஸ் பதிப்புப் போலவே 1968 ல் ஒரு பதிப்புக் கொண்டுவந்துள்ளனர்.

இவையெல்லாம் முந்திய பதிப்புகளை அப்படியே பின்பற்றி அமைந்தவை. ஏட்டுப் பிரதிகளின் துணைகொண்டு இந்நூல் முற்று மாய் நன்கு பரிசோதித்துச் செவ்விய முறையில் வெளியிடப்படுதல் இன்றியமையாதது.

இந்நிகண்டிற்கு ஓர் ஆராய்ச்சிப் பதிப்பு வேண்டும் என்பதை அறிஞர் மு. அருணாசலம் தாம் எழுதிய 10 ஆம் நூற்றாண்டு இலக் கிய வரலாற்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தம் கருத துரை வருமாறு :

> ''நூல் முழுமையும் நன்கு பரிசோதித்துத் தொடர்பின்றி யிருப்பவற்றை நன்கு தொடர்புபடுத்திய ஆராய்ச்சிப் பதிப்பு இன்றியமையாத தேவை. விங்க்விஸ்டிக்ஸ் என்ற பெயரில் மொழியியல் துறையில் ஆராய்ச்சி வளர்ந்து வரும் இன்றைய நாளில் நிகண்டு நூல்களுக்குச சிறந்த ஆராய்ச்சிப் பதிப்பு வெளிவராதது பெருங்குறை.''

(தமிழ் இலககிய வரலாறு 10-ஆம் நூற்றாண்டு - பக்கம் 208)

3. உரிச்சொல் நிகண்டு

தமிழில் தோன்றிய நிகண்டுகளுள் பழமையானவை திவாகரமும் பிங்கலமும் ஆகும. இவை இரண்டும நூற்பாவால் அமைக்கபபட்டுள் ளன. இவ்விரு நூல்களும் கி.பி 10 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவை.

பாட்டியல் நூல்களைக் காலமுறைப்படி நோக்கும்போது அவை முதற்கண் நூற்பாவாலும் பின்னர் வெண்பா, கட்டளைக்கலித் துறை, விருத்தம் என்னும் பாவகைகளாலும் அமைந்து விளங்கக் காணலாம். இந்த நிலை நிகண்டு நூல்களிலும் காண இயலுகிறது. நூற்பாவாலான பழைய நிகண்டுகளுக்குப் பின் வெண்பாவினால் உரிச்சொல் நிகண்டு செய்யப்பெற்றிருக்கிறது இதன்பின் கயாதரமும் பாரதிதீபமும் கட்டளைக் கலித்துறைப் பாவினால் அமைக்கபபட்டுள் ளமை காண்கிறோம். இறுதியாக விருத்தப்பாவைச் சூடாமணி நிகண்டு செய்த மண்டலபுருடர் மேற்கொண்டுள்ளார் இதன்பின்

வந்த நிகண்டுகளில் பெரும்பாலனவும் விருத்தயாப்பினவே நிகண்டு என்னும் வடமொழிச் சொல்லை வழக்கிற்குக் கொண்டுவந்தவரும் மண்டல புருடரே அதற்கு முந்திய திவாகரம் முதலியன எல்லாம் ''உரிச்சொல்'' என்றே வழங்கப்பட்டன. சூடாமணி நிகண்டு நாட்டில் பெருவழக்காகியபின் எல்லா நூல்களையுமே நிகண்டு என்று குறிப் பிடவே உரிச்சொல் என்னும் பெயர் வழக்குக் குன்றியது

'உரிச்சொல்' என்பதுவே இந்நூலுக்குரிய பழம் பெயர். 'முந்து காங்கேயனுரிச்சொல்' என்றே இந்நூலினை ஆண்டிப்புலவர் தாம் செய்த ஆசிரிய நிகண்டில் குறிப்பிடுகின்றார். உரிச்சொல் நிகண்டு என்னும் இன்றைய வழக்கில் பழம்பெயரும் புதுப்பெயரும் ஒருங் கிணைந்துள்ளமை காணலாம்.

உரிச்சொல் நிகண்டினை ஆக்கியவர் காங்கேயர் ஆவர் இவரைக் குறித்த வரலாறுகள் நன்கு அறியக்கூடவில்லை கொங்குமண்டல சதகம் இவரைக் கொங்கு நாட்டு மோருரைச் சார்ந்தவராகத் தெரிவிக் கிறது.

'அலைகடல்சூழும் அவனியில் செந்தமிழ் ஆய்பவர்கள்
நலனுறத் தக்க வகையாக உள்ளம் நனிமகிழ்ந்தே
இலகும் உரிச்சொல் நிகண்டு வெண்பாவின் இசைத்தகலை
வலஎழில் காங்கேயன் வாழும் மோரூர் கொங்குமண்டலமே.'
(91)

கொங்குமண்டலத்தாராகிய இவர் சிவபக்திபூண்டவர். தில்லை நடராசப் பெருமானிடத்துப் பேரீடுபாடு கொண்டவர்

'திருமாலும் செங்கமல மேயானும் காணாப்
பெருமான் பிறைசூடும் பெம்மான் - அருள்மூர்த்தி
நன்னெஞ்சின் நான்மறையோன் தில்லை நடம்புரிவோன்
என்னெஞ்சின் மேய இறை'

என வரும் சிவ வணக்கப்பாடல் இவர்தம் சமய உள்ளத்தைத் தெள்ளத் தெளியக் காட்டும் ஆனல் இப்பாடல் இவருடைய வாக்கா என்பது ஆய்வுக்குரியது.

உரிச்சொல் நிகண்டு திவாகரம், பிங்கலம் நூல்களுக்குப் பிற்பட்டு வந்த நூல்,

பெருத்த நூல் பலவும் சுருக்கித் தமிழில்
உரிச்சொல் நிகண்டெனா உரைத்த காங்கேயன்'

என்று பாம்பண்ணகவுண்டன் குறவஞ்சி கூறுமாறு போல இது சுருக்கமாய் அமைந்த நூல்.

முந்துள திவாகரம் பிங்கல நிகண்டு
முந்துகாங் கேய னுரிச்சொல்
முறைபெறு கயாதரம் பகருமக ராதியிவை
முற்றுமொன் றாய்த்திரட்டி'

என்று ஆசிரிய நிகண்டுப் பாயிரம் கூறுவது கொண்டு கயாதரத்திற்கு முந்திய நூல் இது என்பது தெரியவரும். ஆயினும் இதன் காலம் திட்டவட்டமாய்ப் பலகாலம் தெரிய வாராமலிருந்தது தமிழறிஞர் மு. அருணாசலம் அவர்கள் தாம் ஆக்கிய தமிழிலக்கியவரலாறு 14 ஆம் நூற்றாண்டு பற்றிய தொகுதியில் உரிச்சொல் நிகண்டின் காலத்தைத் திட்டவட்டமாகத் தக்க ஏதுக்கள் காட்டி வரையறுத்துள்ளார்கள். அவர்கள் தரும் கருத்துச்சுருக்கம் வருமாறு:

சைவ சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றான சிவப்பிரகாசத்துக்குச் சிவப்பிரகாசர் என்பார் பேருரை எழுதியுள்ளார் இவ்வுரையின் காலம் சகம் 1410; அதாவது 1488 ஆகும். 38-ஆம் பாடல் உரையில் உயிர் வாயு என்று சொல்லப்படும் என்பதற்குச் சான்றாக, 'உயிர் ஒலி வங்கூழ் சலனம் வாதம் வளி மாருதம்' என்னும் இலக்கணங்களானும் கண்டு கொள்க' என்று குறிப்பிடுகிறார். இலக்கணம் என்று இவர் கூறுவது ஈண்டு உரிச்சொல் நிகண்டே. எனவே, உரிச்சொல் நிகண்டின் காலம் உரையாசிரியர் சிவப்பிரகாசர் காலத்திற்கு முந்தியது என்பது தெரியவரும்.

' வந்தனை காணல் வணங்கல் பணிதலே
தந்தலை தாழ்தல் சலாம்செய்தல் - முந்தித்
தொழுதலே தண்டன் தொடர்ந்து முயங்கல்
தழுவலே விள்ளல்எனச் சாற்று'

என இந்நிகண்டின் செயல்பற்றிய பெயர்த்தொகுதி இரண்டாம் வெண்பாவில் வணங்கல் என்னும் பொருளில் 'சலாம் செய்தல்' என்று குறித்துள்ளது நோக்கத்தக்கது சலாம் என்னும் சொல் தமிழ்நாடு முகம்மதியப்படையெடுப்பாளர் வந்து ஆட்சியைக் கைப்பற்றிய காலத்தில் தமிழில் வழங்கத் தொடங்கியதாகும் அருணகிரி நாதர் இச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். 17 ஆம் நூற்றாண்டில் வடநாடு சென்ற குமரகுருபரரும் சலாம் என்ற சொல்லை மிகுதியும் பயன்படுத்தியுள்ளார். அருணகிரிநாதரின் காலம் 15ஆம் நூற்றாண்டின் தொடக்கமாகும். இச் சொல்லை எடுத்துக் காட்டும் உரிச்சொல் நிகண்டும் அருணகிரிநாதர் காலத்துக்குச் சற்று முந்தியதாகலாம். காங்கேயர் காலம் ஏறத்தாழ கி. பி. 1400 என்று கொள்ளலாம். இவ்வாறு அறிஞர் அருணாசலம் அவர்கள் கொண்டுள்ளார்கள். ஆகவே. இது 14 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நிகண்டு என்று துணியலாம்.

உரிச்சொல் நிகண்டில் இப்பொழுதுள்ள பதிப்புகளில் 12 தொகுதிகள் காணப்படுகின்றன முந்திய பதிப்புகளிலோ 10 தொகுதிகளே தரப்பட்டுள்ளன.

1840 - துத்தன்துரை பதிப்பித்த புதுச்சேரி குவர்னமா அச்சுக்கூடப் பதிப்பு.

1858 யாழ்ப்பாணம் சதாசிவம் பிள்ளை பதிப்பு
(இந்த இரு பதிப்புகளிலும் 10,12 ஆம் தொகுதிகள் இல்லை)

1890 - சிவன் பிள்ளை பதிப்பு. இவர் 10, 12 ஆகிய இரு தொகுதிகளும வழங்காதொழிந்தன என்கிறார்.

1905 – சுன்னாகம குமாரசுவாமிப் புலவர் பதிப்பு
இவர் பதிபபில 12 தொகுதிகளும் நிறைவாகத் தரப் பட்டுள்ளன. இதனை அடியொற்றி இதன்பின் வந்த பதிப்புகளும் 12 தொகுதியுடன் காணபபடுகின்றன.

1971 – திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம

4. கயாதரம்

தொல்காப்பியர் இயற்றிய நூல் தொல்காப்பியம் ஆதல் போலக் கயாதரர் இயற்றிய நூல் கயாதரம் ஆகும். இந்த நூலின் பெயரும்

ஆசிரியர் பெயரும் கயாகரர், கயாகரம் என்றும் சில பிரதிகளில் காணப்பெற்றன என்றாலும் இவ்வடிவங்கள் தவறானவை. கயாதரம் என்பதே இந்நூற் பெயர் என்பது தேற்றம்

கயாதரரும் திவாகரரைப்போல ஒவ்வொரு தொகுதியின் முடிவிலும் வரலாற்றுக் குறிப்புகள் பொதிந்த பாடல்கள் தந்துள்ளார். அவற்றின் வழி ஓரளவே இவ்வாசிரியரைப் பற்றிய செய்திகள் தெரியவருகின்றன. இவர், 'தேவை' எனும் இராமேச்சுரத்தில் வாழ்ந்தவர். தம்மைத் 'தேவைக் கயாதரன்' (2,3) என்றும், 'தேவையாதிபன்' (147) 'தேவை நன்னாடன்' (223) என்றிவ்வாறும் கூறிக்கொள்கிறார். 'தொல்வேதியன்' (2, மறையவர் வேந்தன்' (147). 'மறைபயில் நாவினன்' (157) என்றெல்லாம் இவர் தம்மைக் குறிப்பிடுவதனால் அந்தணர் மரபில வந்தவர் என்பது தெரியவரும். இவர் அம்மரபில் காசிபகோத்திரத்தைச் சார்ந்தவர் (223); சிவபக்தி நிறைந்தவர் நூலுள், 'இடப கேதனன் பற்று மறவாதவன்' என்றும் (27) 'வடக்குங்குமக் கொங்கை மங்கைதன் பங்கன் மலரடிக்கீழ்க் கிடக்கும் தனிநெஞ்சுடையோன்' என்றும் வருவதால் அம்மையப்பரிடம் இவர் வைத்துள்ள பத்தியின் பாங்கு புலனாம்

வடமொழி தென்மொழிகளில் இவர் வல்லவர் (187 223) தமிழில் அந்தாதி இலக்கிய நூல் ஒன்றினை இவர் பாடியுள்ளார் என்பது.

> மேவு மரும்பொருள் அந்தாதி கேட்டிந்த மேதினியோா
> தாவும் வினைகெடச் சாற்றிய கோன்' (402)

என்பதால் வெளிப்படுகிறது

> '... ... ... தமிழ்த் தேவை மன்னுங்
> கோவை யிராமீ சுரக்கோவை சொன்ன குருபரன்' (402)

என்று சுட்டிப் பேசப்படுவதால் இவர், 'இராமேச்சுரக்கோவை. என்னும் கோவைப் பிரபந்தமும் இயற்றியுள்ளமை தெரியவரும்.

நூலின் இறுதிப் பாடலில் ஓர் அரிய செய்தி காணப்படுகிறது

> 'அருமபொரு ளந்தாதி சூடிய சீதர னம்பிகையைத்
> தரும்பொருள் செய்த பராபரன்' (566)

என்னும் இப்பாடற்பகுதியில் சுயாதரரின் பரம்பரையைக் குறித்த அருமைச் செய்தி ஒன்று வெளிப்படுகிறது திருமால்தமது தங்கையைச் சிவபெருமான் மணம்புரிதற்குக் கொடுக்கும்படி இடைநின்று பேசி முடித்த பரமபரையை இவர் சார்ந்தவர் என்னும் பழம்பெருமை பளிச்சிடுகிறது. இவர் பாடியதாகத் தெரியவரும் அந்தாதியும் கோவையும் இப்பொழுது நமக்குக் கிடைக்கவில்லை.

இந்நிகண்டின் தொகுதிப் பெயர்கள் திவாகரம் போலிருந்தாலும் பல பெயர்க் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி இதில் இல்லை கயாதரத்தில் இடம் பெற்ற தொகுதிகள் 11. நூல் முழுமையும் 566 கட்டளைக்கலித்துறைச் செய்யுளைக் கொண்டு அமைந்துள்ளது மேலும், நூல்முழுமையும் அந்தாதித் தொடையால் அமைந்துள்ளமை இந்நிகண்டுக்குரிய ஒரு தனிச்சிறப்பாகும்

இந்நூலை முதன்முதலாகச் சுவடிகளிலிருந்து எடுத்து ஆராய்ந்து 1930 ஆம் ஆண்டு பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் சீரிய முறையில் பதிப்பித்துச் சென்னைப் பல்கலைக்கழக வாயிலாக வெளியிட்டுள்ளார். பாடபேதங்களை அந்தந்தப் பக்கங்களில் அடிக்குறிப்பாகச் சேர்த்திருப்பது சிறப்புக் கூறாகும். மேலும் செய்யுள் முதற் குறிப்பகராதி, முதற்பத்துத் தொகுதிகளின் பொருளடக்கம் ஆகியவையும் சேர்த்துள்ளார். இவையெல்லாம் ஆய்வாளருக்குப் பெரிதும் பயன்படுவனவாகும்

இந்நிகண்டுநூல் தோன்றிய காலம் குறித்து மிக நுணுகி ஆராய்ந்து பதிப்பாசிரியர் தம்முன்னுரையில் தெளிவுறக் கூறியுள்ளார்கள் அவர்தம் ஆய்வுரை பின்வருமாறு :

> ' இந்நூலின் காலத்தைத் திட்டமாக வரையறுத்தற்குரிய சான்றுகள் இல்லை, அரும்பொருள் விளக்க நிகண்டு சாலிவாகன சகம் 1685–ல் (அதாவது கி. பி. 1763) இயற்றப்பட்டது அந்நிகண்டிலே கயாதரரையும் அவருடைய நிகண்டையும் பற்றிக் கூறப்படுகின்றது எனவே, கி. பி. 1763–ல் கயாதர நிகணடு மிகப் பிரசித்தமாய் வழங்கிவந்தமை தெளிவாம். இக் கயாதரம் இன்னும் பழமையானதென்பது வேறொரு நூலால் விளங்குகின்றது மாறனலங்கார உரையில் (பாயிரம் 27 உரை), இலக்கண நூல்களை அகவலின் வெள்ளையின் அறைக' வென்று, முந்துநூல் விதித்தமையுளவாகவும், விதியாது நீக்கிய

கட்டளைக்கலித்துறை, ஆசிரிய விருத்தம் என்னும் பாவினத்தாற் பின்பு இலக்கண நூல் செய்தோர் இலக்கணங்களைக் கூறியதும் கற்றோரா லெடுக்கப்பட்டு உலகின்கண் வழங்குதலுக்கு' உதாரணமாக யாப்பருங்கலக்காரிகை, கயாதரம், நிகண்டு சூளாமணி யென்ற நூல்கள் தரப்பட்டுள்ளன. மாறனலங்கார நூலின் ஆசிரியர் திருக்குருகைப்பெருமாள் கவிராயர் என்பவர். இவர் தாமியற்றிய திருக்குருகாமான்மியத்தைக் கொல்லம் 723 ல் அரங்கேற்றினாரென்பது,

'அறந்திகழாண் டவையெழுநூற் றிருபான் மூன்றில்
அணிகிளர் கார்த்தி கைமாத மெட்டில் வாழ்வு
சிறந்திடுதிங் களினாளுத் தரத்தி லேகா
தெசியின் மகரமு கூர்த்தந் திருந்த முற்றத்
துறந்தவரெண் மகிழ்மாறர் திருமுன் னாதிச்
சுருதியுடன் மிருதியுஞ் சொற்றமிழின் வாய்மை
பிறந்த பெருங்காப்பியமும தெரிந்தோர் கேட்கும
பெற்றியுட னரங்கேற்றப் பெற்ற தன்றே'

என்று வருஞ் செய்யுளால் அறியக்கிடக்கின்றது. மாறனலங்காரத்திற்கு உரையிட்ட காரிரத்நகவிராயர் (மாறனலங்கார வரலாறு பக். 28) இத்திருக்குருகைப் பெருமாள் கவிராயருடைய சிஷ்யராவர் இவ்வுரையில் திருக்குருகாமான்மியத்தினின்றும் செய்யுட்கள் உதாரணமாக எடுத்துக்காட்டப்படுகின்றன. எனவே இவ்வுரை சுமார் கொல்லம் 750-ல் (அதாவது கி. பி. 1575) தோன்றியிருக்கலாம் காரிரத்நகவிராயர் தென்திருப்பேரை சுவாமி மகரநெடுங்குழைக்காதர் திருப்பணிமாலையை யியற்றியவரும் மதுரைத் திருமலை நாயக்கர் (கி.பி. 1623-1629) காலை வடமலையப்பபிள்ளையன முதலானோரது காலத்தவருமாகிய திருமேனிக்கவிராயரின் தந்தையாராவர்.

கல்விக் கடலைக் கரைகண்ட ரத்னகவி
செல்வக் குமாரன் திருமேனி — நல்ல
திருப்பணி மாலையிந்தத் தேசமெல்லாம் வாழ்த்த
விருப்பமுடன் செய்தான் விரைந்து

என்பது திருப்பணி மாலைச் செய்யுள்

"மேற்கூறியவற்றினின்று கயாதரம் சுமாராக கி. பி. 1575-ல் கல்வியாளர்கள் அங்கீகரித்து எடுத்தாண்ட நிகண்டு என்பது விளங்கும். இதற்கு எவ்வளவு காலத்துக்குமுன் இந்நூல் தோன்றியதென்பது விளங்கவில்லை. ஆனால், 'காரிகை யேரு மொரு நூலும் பெண்ணுங் கலித்துறையும்' (412) என்று இந் நூலில் வந்துள்ளது. ஒருநூல் என்றது யாப்பருங்கலக் காரிகையை. எனவே, காரிகை தோன்றிய 11-ம் நூற்றாண்டுக் குப் பிற்பட்டு இந்நூல் தோன்றியாதல் வேண்டும். காரிகை யென்னும் நூல் நீண்ட காலமாக வழக்கிலிருந்த பிற்பாடுதான் அதன்கண் பயின்றுவரும் கலித்துறைக்குக் காரிகையென்னும் பெயர் வந்திருத்தல்கூடும். 14-ஆம நூற்றாண்டின் பிற்பகுதி யில் அல்லது 15-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இப்புது வழக்கு ஏற்பட்டதெனக் கொள்ளலாம. இவ்வழக்கு நூலில் எடுத்தாளப் பெறுவதற்கு இது தோன்றி ஐம்பது வருஷ கால மேனும் ஆகியிருக்க வேண்டுமெனக் கொள்ளுதல தகும். ஆதலால் உத்தேசம் கி. பி. 1450-ல் சுயாதரம் இயற்றப் பட்டிருக்கலாமென வரையறுத்தல் தக்கதெனத் தோன்று கிறது இக்காலத்திற்கும் கற்றோர்கள் இந்நூலை எடுத்து வழங்கிய காலமெனக் குறித்த கி பி 1575-க்கும் 125 வருஷங் கள் இடைபட்டிருத்தல் பொருத்தமாதலுங் காணலாம். மாறனலங்காரவுரையில் நிகண்டு சூளாமணிக்கு முன்பாகக் கயாதரத்தை அமைத்துக் கூறுவதும் இங்கே அறுதியிட்ட காலத்தோடு பொருந்துகின்றது. நிகண்டு சூளாமணி யென் பது வீரை மண்டலபுருடரால் கிருஷ்ணதேவராயர் காலத்தில் (1509–1529) இயற்றப்பட்ட ஒருநூல் என்பது நன்கு அறியப் பட்டதே."

5. பாரதிதீபம்

'பாரதிதீபம்' என்பது திருவேங்கட பாரதியாரால் ஆக்கப்பெற்ற நிகண்டுநூல் ஆசிரியர் தம் பெயரைத் திருவேங்கடபாரதி, பாரதி என்று நூலுள் ஒவ்வொரு தொகுதியின் இறுதியாக அமையும் வரலாற்றுப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

'திருவேங் கடவன் ஏன்றாசு கூறுங் கவிவேந்தன்...
செப்பிய பாரதிதீபம்' (200)

திருவேங்கட பாரதி வண்டமிழின்
செழுமைய தாகு மிலக்கிய பாரதிதீபம்' (243)

'முந்துதமிழ்ப் பன்னிய பாரதி பாரதிதீபம்,' (293)

'பாரதி வாதுகவிக் கேறானவன் சொன்ன
பாரதிதீபம.' (319)

இவற்றால் பாரதி இயற்றிய நூல் பாரதி தீபம் என்பது தெரியவரும் இஃது ஆக்கியோன் பெயரால் அமைநத பெயராகும்.

தீபம், தீபிகை என்னும் பெயர்களால தமிழில் சில நூல்களின் பெயர்கள அமைந்துள்ளன.* தீபம், தீபிகை என்றால் 'விளக்கு' எனபது பொருளாம் இங்கே பொருள்களின் பெயர்கள் சொற் பொருள்கள் ஆகியவற்றைத் தெளிவுறத் தொகுத்து விளக்குவது என்னும் பொருளில் 'தீபம்' என்பதை ஆசிரியர் பயன் படுத்தியுள்ளார். அகராதி நிகண்டு, நாமதீப நிகண்டு முதலிய நூற் பெயர்களில் இணைந்துளள நிகண்டு என்பதுபோல இங்குத் 'தீபம்' என்பது வந்துள்ளது ஆகவே நிகண்டு என்னும பொருளில 'தீபம்' என்பது இவ்வாசிரியரால ஆளப்பட்டுள்ளது என்று கருதவும் இடமுண்டு.

தமிழிலே காலத்தால் முந்திய நிகண்டுகளாகிய திவாகரமும் பிங்கலந்தையும் நூற்பாவினால் இயன்றன. பின்னர் வந்த நிகணடு கள் நூற்பாவினால மட்டுமன்றி வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம் என்னும் யாப்பு வகைகளிலும் அமைந்துள்ளன. கட்டளைக் கலித்துறைப் பாவினால் ஆகிய நிகண்டுகள் கயாதரமும் பாரதிதீபமும் ஆகும்

கட்டளைக் கலித்துறை வகையான பாவினம் தமிழுலகில் முற் காலத்தில பெருவழக்காயிருந்தது யாப்பருங்கலக் காரிகை, வீர சோழியப நவநீதப் பாட்டியல் முதலிய இலக்கண நூல்களும் எண்

* அரிசமய தீபம், இலககிய தீபம், ஞானதீபம், தத்துவ தீப சங்கிரகம, ஆனந்த தீபிகை, கோளதீபிகை, சின்மய தீபிகை, நானார்த்த தீபிகை, பதார்த்த தீபிகை முதலியன.

ணிறந்த கோவைகளும் இதற்குச்சான்றாக அமைகின்றன இனிய ஓசையும், எண்ணினால் வரையறைப்பட்ட எழுத்தமைதியும், எதுகை மோனை முதலியவற்றின் நயமும் இவ்வகைச் செய்யுள்கள் கற்போர்க்குப் பெருவிருந்தாயின. இத்தகு நயங்களால் நினைவில் வைத்தற்கு ஏற்றதொரு பாவினமாக இது கருதப்பட்டது எனலாம.

கயாதரமும் பாரதிதீபமும் கட்டளைக் கலித்துறைப் பாவால் அமைந்திருப்பதோடு இரண்டும் முதல் நிகண்டு எனப் போற்றப் பெறும் திவாகரத்தை அடியொற்றியுள்ளன. திவாகரத்தில் ஒவ்வொரு தொகுதி இறுதியிலும் ஆசிரியர் தம்மைப்பற்றி வெளிப்படுத்தும் வரலாற்றுப் பாடல்கள் அமைந்துள்ளது போலவே இந்நிகண்டுகளிலும் உள்ளன. அன்றியும் பொருள்களின் அமைப்பு முறையிலும் பெரிதும் ஒற்றுமை காணப்படுகிறது. எனினும் கயாதரம சற்று வேறுபட்டுள்ளது. கயாதரம் 11 தொகுதியுடையதாய் அமையப் பாரதிதீபமோ திவாகரத்தைப் போல 12 தொகுதிகள் கொண்டுள்ளது. கயாதரத்தில் திவாகர நிகண்டில் ஐந்தாவதாக உள்ள இடப்பெயர் இரண்டாவதாக இடம் பெற்றுள்ளது அதோடு கயாதரர் தொகுதிகளைத் தெய்வப் பெயரியல், இடப்பெயரியல் என்றாற்போல 'இயல்' என்று பெயரிடுகின்றார்

பாரதிதீபமோ தொகுதிகளின் பெயரிலும் சரி. தொகுதிப் பொருளமைவிலும் சரி, சற்றும் மாறாமல் திவாகரத்தை அடியொற்றிச் செல்லுகிறது மேலும பொருள்களை விளக்கும் முறையிலும் திவாகரர் நூலின் அடைவையே பாரதிதீபம் எங்கும் தழுவிச் செல்லுகிறது. திவாகரத்தில் பல நூற்பாக்களில் காணும் பொருட் கூறுகள் இதன்கண் ஒரு பாடலில் சேர்ந்து காணப்படும் கயாதரம் திவாகரத்தைப் பெரும்பாலும் பின்பற்றி அமையினும் முற்றிலும் அதன் வழித்தாய் அம முதல் நூலின் பொருளடைவு முறையிலேயே செல்லுவது பாரதிதீபம்.

திவாகரர் பதினொராந் தொகுதியில் அமைத்திருந்த நூற்பா அடைவுமுறை தொல்காப்பிய உரியியலிற்போல எதுகைமுறை தழுவிய ஓர் அமைப்பாகும. இத்தொகுதி நூற்பாக்களை ஆதியிற் பொருள், அந்தத்துப் பொருள் என்று பாகுபடுத்திப் பிரித்து அகராதியடைவு படுத்தியதும், முற்றிலும் அகராதி முறைகொண்டு அமைத்ததும் பிற்காலத்தார் செய்த மாறுபாடுகள் திவாகரர் அமைத்த பழைய முறையோ இவற்றிற்கு முற்றிலும் வேறுபட்ட அமைப்பாகும்.

'சேமங் காவ லின்ப மிரவுபொன்
ஏமாப்பு மயக்க மேம மாகும்.'

'செழுமை வளனுங் கொழுப்பு மாகும்.'

'சிறப்புச் சீர்மை யிடும்பையிம் மூன்றும்
'விரிக்கின் மேலோர் விழும மென்ப.'

என்பவை திவாகரம் பதினொராந் தொகுதியின் முதல் மூன்று நூற்பாக்கள்.

சேமமே காவல்பொன் னின்ப
மேமாப் பிரவு செறி மயக்க
மேமம தாகுஞ் சிறப்பொடு
சீர்மை யிடும்பையிவை
தாமுரை செய்யில் விழுமம
தாகத் தருஞ்செழுமை
நாமம தென்னில் வளனே
கொழுப்பெனு நானிலமே'

என்பது பாரதி தீபத்தின் பதினொராந்தொகுதி முதற்பாடல். மேலே காட்டிய திவாகர நூற்பாக்கள் மூன்றன் செய்திகளையும் இப்பாடல் கொண்டிருத்தல் காணலாம். இந்த அளவு மிக நெருங்கிய ஒற்றுமை திவாகரத்தோடு இந்நிகண்டிற்கு உண்டு. இதனால் திவாகரத்தில் பின்னாளில் வந்து சேர்ந்த இடைச்செருகல்களான நூற்பாக்கள் எவை யெவை என்பதைக் கண்டுகொள்ளவும் இப் பாரதி தீபம் துணை செய்கிறது

கயாதர நிகண்டின் காலத்தைக் குறித்து அந்நூலின் முன்னுரையில் (பக் 11, 12) பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் மிக நுணக்கமாக ஆராய்ந்துள்ளார்கள் கயாதரம் யாப்பருங்கலக் காரிகை தோன்றிய கி. பி. 11 ஆர் நூற்றாண்டுக்குப் பிற்பட்டுத் தோனறியது என்றும், கி. பி. 1575-ல் அந்நூலைக் கல்வியாளர் அங்கீகரித்து எடுத்தாண்டிருப்பதால் இதற்கு முற்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். உத்தேசர் கி. பி. 1450-ல் கயாதரம் இயறறப் பட்டிருக்கலாமென்று வரையறுத்தல் தக்கது என்னும் முடிவுக்கு வந்துள்ளார்கள்

கயாதரம் யாப்பு வகையாலும் திவாகரத்தைப் பின்பற்றிச் செல்வதிலும் பாரதி தீபத்தை ஒத்துக் காணப்படினும் அந்நூல் முற்றும் அந்தாதித் தொடையில் அமைந்திருக்கிறது அந்தாதி முறை நினைவில் வைத்துப் பாடல்களை மனப்பாடம் செய்வதற்கு ஏற்றமுறை இத்தகு வளர்ச்சிநிலையை நோக்கப் பாரதிதீபம் அதற்கு முன்பே தோன்றிய நூலாதல் கூடும் என்று கருதலாம பாரதிதீபத்தையும அந்நிகண்டைப் போலவே 15 ஆம நூற்றாண்டில் தோன்றிய நிகண்டு நூலாகக் கொள்ளலாம்.

பாரதி தீப நிகண்டினைக் குறித்து யாழ்ப்பாணம் மானிப்பாய் சதாசிவம் பிள்ளை என்பார் (1820-1896) 1886-ல் எழுதி வெளியிட்ட ''பாவலர் சரித்திர தீபகம்'' எனனும் நூலின் 211 ஆம் பக்கத்தில பல செய்திகள் காணப்படுகின்றன இவர் தந்துள்ள வரலாற்றுச் செய்திகள் வருமாறு :

''கடம்பை ஊரில் இருந்த வித்துவ சிரோமணியாகிய இவர் குலத்தாற் பிராமணன். 'மாதவஞ் செய்த பாரதி' என்றும், 'கன்னல் குலாவும் வயல் சூழ் கடம்பையான்' என்றும், 'செழுமுனி பாரதி' என்றும் பற்பல விசேடணமொழிகள் சார்த்தி இவர் பேசப்படுகின்றார். இம் மாத்திரமின்றி இவரது சரிதம வேறே ஏதும் சொல்லப்படக் காணோம். தச நிகணடுகளுள ஒன்றை இவர் பாடியிருக்கின்றார் அது இவருடைய நாமதேயப்படி 'பாரதிதீபம்' எனப் பெயரியது. 12 தொகுதி கொணட அந்நிகணடிலே கலித்துறைப்பாவில 737 செய்யுட்கள் அடங்கியிருக்கின்றன அதன் 12 ம் தொகுதி இறுதிப பாவாகிய,

'விதிதரு வேதியன் வேங்கட
நாதன் விரகறியும்
அதிகுண வேள்பர மானந்த
பாரதி யாங்கடம்பைப்
பதிநிதி யோதிய பாரதி
தீபத்திற் பன்னிரண்டாம்
முதிரொரு சொற்பல் பொருட்பேர்த்
தொகுதி முடிந்ததுவே'

என்னும் கலித்துறை, அந்நூலுக்கு இவர் ஆக்கியோன் எனத் திருட்டாந்தப்படுத்துகின்றது இப்புலவரது பாடற்றிறமைக்குச் சாட்சியாக அந்த நிகண்டுக் காப்பை இதன்கீழ்த் தருகின்றோம்

சங்கரி மைந்தன் விநாயகன்
    சண்முகன் றன்முன் வந்தோன்
ஐங்கர னானை முகத்தோன்
    கணபதி யாகுபரிப்
புங்கவன் மான்மரு கனொரு
    கொம்பன் பொழிமதத்தோன்
பங்கய மோதக பாசாங்
    குசம்பயில் பாணியனே.”

இவர் எழுதியது கொண்டே இந்நிகண்டு வரலாற்றைப் பேராசிரியர் எஸ் வையாபுரிப்பிள்ளை அவர்கள் தமிழ்ப் பேரகராதியின் முன்னுரையில் எழுதியுள்ளார் (பக் 28). இந்நூலினை உவின்ஸ்லோ தம் அகராதியில் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார் என்னும் விவரத்தையும் அவர்கள் சுட்டியுள்ளார்கள். * இவற்றால் இந்நூலின் பிரதிகள் இலங்கையில கிடைத்தல் கூடும் என்றும் அவர்கள் சொல்வதுண்டு தமிழகத்தில் இந்நூலின் சுவடிகள் பரவலாக இல்லை. இப்பதிப்பிற்குப பயன்பட்ட சுவடி டாக்டர் உ வே சாமிநாதையர் தொகுப்பிலிருந்து கிடைத்த ஒரே சுவடி. இச்சுவடியினின்றும் சற்று மாறுபட்ட நிலையில் இலங்கைச் சுவடிகள் இருத்தல் கூடும் என்பதை மேலே சுட்டிய சதாசிவம் பிள்ளை தரும் குறிப்புக்கொண்டு தெளியலாம. இவா தம் உரையின் இறுதியில் எடுத்துக்காட்டிய காப்புச் செய்யுள் இப்பதிப்பிற்குப் பயன்பட்ட சுவடியில் முதலில் இல்லை. ஆனால் விநாயகன பெயர் உரைக்கும் 15ஆம் பாடலாகச் சிறிது பாடம வேறுபட்டுக் காணப்படுகிறது அன்றியும் பன்னிரண்டாம் தொகுதியின் ஈற்றுச் செய்யுள் என இவர் எடுத்துக் காட்டியதும் முற்றும் மாறுபட்டுள்ளது. இப்பொழுது கிட்டியுள்ள பாரதி தீப நிகண்டின் செய்யுள் தொகை 665. சதாசிவம்பிள்ளை 737 என்று குறிப்பிடுகின்றார். இவற்றையெல்லாம்

* உவின்ஸ்லோ அகராதியில் மேற்கோள் காட்டிய இடங்கள் : அருப்பம் [பக் 38], உசு [122], உண்டி [127], உருப்பு [142], உழிதரல் [152] உளைக்கிறேன் [154], ஒப்பம் [200], ஒப்பு [201], ஒருக்கு [204]: கனிசசி [231], சத்தியம் [239], குதலை [321]

பார்க்கும் போது தமிழகத்தில் தோன்றிய இந்நிகண்டு நூல் ஈழநாட்டில் சிற்சில சேர்க்கைகள் மாற்றங்கள் பெற்றுக் கால அடைவில் சற்று வேறுபட்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது அங்குள்ள சுவடிகள் கிட்டினாலன்றி வரையறுத்து உரைத்தல் இயலாததொன்றாகும்.

இனி, பாரதி தீபத்துள நூல் நூலாசிரியர் பற்றிய வரலாறு தரும் தொகுதியிறுதிப் பாடல்களில் காணும் குறிப்புகளின் வழி நூலாசிரியர் திருவேங்கட பாரதியின் வரலாற்றைக் காண்போம். இவருடைய ஊராகக் குறிக்கப்பட்டுள்ள கடம்பை என்பது திருக்கடம்பூர் என்னும் சிவதலமாகும். கடம்பை என்பது கடம்பூர் என்பதன் மரூஉ. திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் தென் கடம்பைத் திருக்கரக் கோயிலில் விளங்கும் சிவபெருமானைப் போற்றிப் பதிகம் பாடியுள்ளனர். திருஞான சம்பந்தர் பாடியது இரண்டாம் திருமுறையில் 68 ஆம் பதிகமாய் உள்ளது. திருநாவுக்கரசர் பாடியவை ஐந்தாம் திருமுறையில் 19, 20 ஆம் பதிகங்களாக உள்ளன கடம்பூரில் உள்ள திருக்கோயில் கரக்கோயில்' என்னும் அமைப்புடையது ரதம், சக்கரம், குதிரை அமைந்துள்ள சிற்ப முறையில் கருப்பக்கிரகம் காணப்படுகிறது இவ்வூர் சிதம்பரத்திலிருந்து 15 கல் தொலைவிலும் காட்டுமன்னார்குடியிலிருந்து 3 கல் தொலைவிலும் உள்ளது 'கடம்பூர்க் கரக்கோயிலே' எனப் போற்றும் திருநாவுக்கரசர்,

'நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

என்னும் திருப்பாடலில் 'தென்கடம்பை' என்று குறிப்பிட்டுள்ளார் எனவே 'தென்கடம்பை' என்றும் இவ்வூர் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வூரைச் சார்ந்தவராகிய திருவேங்கட பாரதியாரும் இந்நிகண்டில்,

'திதமா வுறைநளி னத்தடஞ் சூழ் தென்கடம்பை (74)
'மீன்றாவு வாவிக் கடம்பை' (200)

என்று தென்கடம்பை, கடம்பை என்று தம் ஊரினைக் குறிப்பிட்டுள்ளார் 'கடம்பாடவி' என்றும் (590, 665) இரண்டிடங்களில் சுட்டியுள்ளார். கடம்பூர் என்பதுவே கடம்பை, தென்கடம்பை, கடம்பாடவி என வழங்கப்பட்டுவருதல் தெளிவாம். இவர் வாழ்ந்த இவ்வூர் தேவாரம் பெற்ற பெருமையுடையது என்பதும் கண்டோம்.

தென் கடம்பையில் திரிவேங்கட பாரதி சிறந்த புலவராயும் பெரும் புகழ் வாய்ந்த தலைவராயும் திகழ்ந்தவர்.

'கடம்பைய ராதி (473)

'கடம்பைமன் கஞ்சமலர்
'மின்னுள வாகும்புய பாரதி திருவேங்கடவன்' (506)

'கடம்பா டவிவாழ் இந்திரன்' (665)

'செழியன் புகழண்ணல்' (423)

என வரும் தொடர்கள் இவர் அரசறிய வீற்றிருந்த பெருவாழ்வுடையவர் என்பதனைத் தெரிவிக்கும்

இவர் அந்தணர் குலத்தைச் சார்ந்தவர் என்பதனைப் பின்வரும வாக்குகளால் அறியலாம்.

'விழியருள் பூண்ட நவதாரணை முகில் வேங்கடவன்
வழியினுள் வாழ்திரு வேங்கடவன்' (243)

'மெய்ப்பூசுரர்தம் விழிநெஞ்ச மென்ன
வரும் பாரதி' (423)

'வெருவா துயரந் தமுமெய்
வீடுகண்டருள் வேங்கடவன்.' (590)

இவர் கொடையில் சிறந்த ஒரு வள்ளலாயும் திகழ்ந்தவர்.

'மின்செயற் காரிற் றருபாரதி' (365

'பொழிகொண்ட லென்ன
கரப்புண்டரிகன்' (423)

'பங்கயஞ்சே ரிருகைப் புயல்' (590)

'கந்தர மென்னக் கொடையுடையான்' (665)

மேகத்தைப்போலக் கைம்மாறு கருதாது பிறருக்குக் கொடுப்பவர் என்று இவர் போற்றப்படுகிறார்

இவர் இந் நிகண்டு நூலைச் செய்கின்ற காலத்துத் தவத்தினை மேற்கொண்ட ஒரு துறவியராயும் திகழ்ந்தார் என்பது,

'சேறாரளகப் புயன்செயங் கொண்டவன் சிந்தையன்பு
மாறாதுமாதவஞ் செய்தருள் பாரதி' (319)

என்பதனால் தெரியவரும்

திருவேங்கட பாரதியின் செந்தமிழ்ப் புலமை பற்றியும் புகழ்ச்சியான சில தொடர்கள் நிகண்டுப் பாடல்களில் உள்ளன

'தொகு புலமை மிக்கவன் பாரதி' (146)
'ஏன்றாசு கூறுங் கவிவேந்தன்' (200)
'முந்துதமிழ்ப் பன்னிய பாரதி' (297)
'வாதுகவிக் கேறானவன்' (319)
'கைக்கார் நிகரு மியறங்கு செந்தமிழ்ப்பாரதி (473)
'மேன்மலை வாழ்முனி போல விலக்கணத்தான
செந்தமிழ் நூல்தெரி பாரதி' (665)

இவற்றால் செந்தமிழ் நூல் பல ஆராய்ந்து இலக்கிய இலக்கணப் புலமை மிக்காராய்ப் பொதியமலை அகத்திய முனிவனைப்போல இவர் சிறந்து விளங்கினார் என்பது தெரியவரும்.

இத்தகைய பெரும் புலமையாளர் இயற்றிய நிகண்டும் புலவர் போற்றும் பெருமை வாய்ந்தது என்பது சொல்லவும் வேண்டுமோ?

'வணடமிழின் செழுமைய தாகு
மிலக்கிய பாரதி தீபம்' (243)

'இயல் தெரிந்தோன் தென்சிலைச் செந்தமிழ்ப்
பாரதி தீபம்' (365)

'பாவலர் ஏற்றரி தாமுயர்
செஞ்சொலாற் சொன்ன பாரதி தீபம்' (473)

என வருவனவற்றால் பாவலர் புகழ் பெருமை வாய்ந்த சிறப்புடைய நிகண்டு - இலக்கியமாக இவருடைய நூல் திகழ்கின்றது என்பது விளக்கமாம்.

இவர் பெரும்பான்மையும் அடைமொழி அதிகமின்றிப் பெயர்களைத் தொகுத்து அமைத்துச் செய்யுட்களை இயற்றியுள்ளார். சிற்சில இடங்களில் மகடூஉ முன்னிலைகளையும் தந்துள்ளார். நூலுள் இருபத்துமூன்று இடங்களில் 'ஆரணங்கே' என்பது முதல் 'விளங்கிழையே' என்பது ஈறாகப் பதினேழு வகையான முன்னிலைகளைப் பயன்படுத்தியுள்ளார் *

* 1 ஆரணங்கே 103; 2 ஏந்திழையே 64, 420, 422, 529; 3 ஒளிவளையே 63; 4 கோமளமே 89, 626; 5 சிறுகொடிப் பூவையரே 364; 6 திருந்திழையே 32; 7 துடியிடையே 67; 8 தெரியிழையே 175; 9 தோகையரே 1, 2; 10 நன்னுதலே 638; 11 நிரைவளையே 98; 12 நேரிழையே 23, 380; 13 பைந்தொடியே 526; 14 மதர் விழியே 545; 15 மொய்குழலே 207, 376; 16 வாணுதலே 100; 17 விளங்கிழையே 531

நூற்பொருளை எடுத்துரைக்குமிடத்து முந்தையோர் கருத்தாகப் - பழைய மரபுகளாகப் — பலவற்றையும் சுட்டி உரைப்பது திவாகரம், பிங்கலம் முதலிய நிகண்டு நூலார் மேற்கொண்டுள்ள முறையாகும். பாரதிதீபம் இயற்றிய திருவேங்கட பாரதியார் முந்தையோர் கருத்தாக ஏறத்தாழ 470 இடங்களில் குறிப்பிடுகிறார் என்ப, என்பர், என்பர்களே, என்பரே என்பவற்றைக் கிட்டத்தட்ட 350 இடங்களில் குறிப்பிட்டுள்ளார் 'நன்னூனெறி கற்றவரே' (84), 'நன்னூனெறி கற்றுயர்ந்தவரே' (498), 'பாடல் பயிலும் பனுவற்றமிழ் தெரி பார்த்திபரே' (472), 'செந்தமிழ் நூல் கற்றுயர்ந்தவரே' (491), 'இயற்றகு நாவலர்' (438) எனக் கற்ற புலவோர் போற்றிய மரபுகள் எனச் சுட்டிக்காட்டுவதும் கருதற்பாலது. 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்றபடி இவரும், 'உலகே' (338, 530) 'எழுபுவியே' (212), 'நானிலமே' (507, 533, 541). 'பூதலமே' (224), 'மகிதலமே' (600), 'உலகோர்' (363) என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார்.

பாரதிதீபத்தில் காணும் சிற்சில தனி ஆட்சிகளும் குறிப்பிடத் தக்கன. ரகரத்தை அடுத்து வல்லினம் வரும் வடசொற்களை எடுத்தாளும்போது வல்லினத்திற்கியைய றகரம் கொடுத்தே ஆளுகின்றனர் இரணியகெற்பன் (10), சற்பம் (180), கற்கடகம் (198). வடசொற்களிலுள்ள ரகரத்தைத் தமிழில் வல்லின றகரமாக வழங்குவதனைப் பசுந்தமிழ் என்பர் (தக்கயாகப். 35 உரை) எனவே, இவ்வாறு எழுதுதல் முற்காலத்து மரபு என்றே கொள்ளுதல் வேண்டும்.

சில சொற்களில் ககர தகரம் முதலிய வலலினம் றகரமாக மாறி வழங்குதல் காணலாம். தற்கோலம் (227), பற்பம் (237), பற்பநிதி (297), பற்பநாபன் (6), என வருவன போல்வன மேலே சுட்டிய வகையினவாம்.

வடமொழி ஒலிப்பு முறையில் பகரமிட்டுச சிலசொற்கள் எழுதப்பட்டுள்ளன. இரேபதி (63), வேட்கோபர் (92), தாபரம் (214) முதலியன காண்க

சில சொற்களின் உண்மை வடிவம் எது என்பதை அறியவும இந் நிகண்டு உதவுகிறது. நண்டின் பெயர்களுள் ஒன்று 'களவன்' என்பது. இச்சொல்லை எதுகையில் அமைத்துக் காட்டுதலால் (198) தெளிவாகும் முன்பு சிலர் இச்சொல்லைக் 'கள்வன்' என்று கொண்டது

சரியன்று என்பதனை இது காட்டும். இதுபோன்றே கொளற்பொருட்டு என்பதனைத் தெரிவிக்கும் உரிச்சொல் தேவுதான்; தெவு (தெவ்வு) அன்று என்பதனைத் தெரிவிக்கும் வகையில், 'தேவு கொளற் பொருட்டே' (443) என மோனைத் தொடையில் இவர் அமைத்துள்ளமையால் தெளிவுபெறும்.

ஒருசில தமிழ்ச் சொற்கள் தமக்குரிய நேரிய வடிவத்திலன்றிச் சிறிது உருவம் பிறழ்ந்து காணப்படுகின்றன மாதிரு (277), வல்லுழிஞ்ய (159). சிகாவலம் (153), திமிங்கிலகீலம் (195) கந்திருவர் (35). மாபெலன் (38), அணிகம் (130), துடை (133) மிதலை (134), குருக்கண் (135), இலோதம் (144) மேழகம் (157), இலாங்குலம் (175), இத்தீ (202) செண்பகம் (202 214), மாரோட்டம் (207) ஆம்பிலம் (207) வில்லுவம் (208), கரிக்காடு (216) எலவு (218)

அகரம் ஐகாரமாகப் போலி வடிவுடன் வழங்குதலும் சிலவிடத்துக் காணலாம். பிரளையம் (44) சதையம் (62), சமையத்தவர் (77), அபையன் (86) சையிந்தவம் (152). ஒருசில இடங்களில் சில எழுத்துப் பேதமும் இடம்பெறக் காணலாம திருவிக்கிரமன் (8), விரிச்சிகம் (52). உத்திரம் (58), ஒந்தி (165)

சிற்சில புதுவடிவ அமைப்புக்களும் காணப்படுகின்றன தானவர் கோமன் (11), குணதிசைக் காவன் (11) போல்வன கருதற்பாலன இதளியங்கன் (4), நீலகன் 83) என்பன போல ஒருசில இடங்களில் பொருள் விளங்காத சொல்வடிவங்களும் தென்படுகின்றன

'குலீனர் என்ப குல முள்ளோரே' என்னும் திவாகரத்திற்கு (மக்கட் பெயர்) நேர்மாறாகக் 'குலீனர் குலமில்லவர்' எனப் பாரதி தீபமுடையார் (105) கூறுகிறார் இச் சொல்லைக் 'குல ஈனர்' என்று பிரித்துக் கொண்டு அதன்பொருளை இவர் பிறழ உணர்ந்தார் போலும். கயாதரரும் இவரைப் போன்றே 'குலீனன் குலமில்லவன்' (113) என்று உரைப்பர். இதனாலும் இவ்விரு நிகண்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு எனக் கருதலாம்.

இதுவரையிலும் அச்சிடப் பெறாமல மிகவும் அருகியுள்ள இந் நூலின் சுவடி ஒன்று டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையத்தில் உள்ளமை தெரியவந்தது இதற்கு மாற்றுச் சுவடி எதுவும் இங்

குள்ள சுவடி நிலையங்களில் இருப்பதாகத் தெரியவில்லை இலங்கையில் இந்நூலின் பிரதிகள் கிட்டுமா என்பது இந்நூல் வெளிவந்து உலாவுகின்ற காலத்து ஒருகால் தெரியவரலாம். இலங்கையில் வழங்கிய சுவடி இச்சுவடிக்குச் சற்று மாறுபட்டது என்பதனைச் சதாசிவம் பிள்ளை எழுதிய குறிப்பிலிருந்து மேலே கண்டோம். இதற்கு இன்னும் சுவடிகள் இனிக கிட்டுமானால் இந்நூல் மேலும் செப்பமுற அமைதல் கூடும் இந்நிகண்டுநூல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் வெளியீடாக என்னால 1980-ல் பதிப்பித்து வெளியிடபெற்றது

6 சூடாமணி

சூடாமணி நிகண்டு பின்னாளில் தோன்றிய போதிலும் நிகண்டுகளுக்கெல்லாம் தலைமணியாய்த் தமிழுலகில போற்றப் பெற்றது. இந்நிகண்டு பிறந்த பின்னர் பண்டை நிகண்டுகளாகிய திவாகரம், பிங்கலம் எனபவற்றின் பயிற்சி குறையலாயிற்று. நன்னூலில் பவணந்தி முனிவர், 'பிங்கல முதலா நல்லோருரிச்சொல்' என்று பிங்கலத்திற்கு முதன்மைதந்து எடுத்துரைத்தார் உரைகாரராகிய சங்கரநமச்சிவாயப் புலவர், 'பிங்கலம், திவாகரம், சூடாமணி முதலிய நுற்களுள்' என்று திவாகரத்தையும் சூடாமணியையும் உடன் இணைத்துப் பேசுகிறார். எனவே, இம் மூன்றும் கல்வியாளரிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கியமை தெரியவருர்.

நிகண்டு நூல்களில் இன்றைய அகராதிபோலப் பயன்படுவது ஒரு சொல் பலபொருள் உரைக்கும் பகுதி. சொற்பொருள்களை நினைவில் எளிதாய்ப் பதியவைக்கும் முறையிலும் எளிதில் கண்டுகொள்ளும் கையிலும் சூடாமணியின் அமைப்புச் சிறப்பாகவுள்ளது. நூற்பாவாலமைந்த பழைய நிகண்டுகளைவிட விருத்தப்பாவில் எதுகைமுறைபற்றி அமைந்த சூடாமணி நிகண்டு கற்றுப் போற்றுவதற்கு எளிதாயிற்று. இதனைச் சூடாமணி நிகண்டின் ஆசிரியர் மண்டலபுருடரே

'செங்கதிர் வரத்தில் தோன்றும் திவாகரர் சிறப்பின் மிக்க
பிங்கல ருரைநூற் பாவிற் பேணினர் செய்தார் சேர
இங்கிவை யிரண்டும் கற்க எளிதல என்று சூழ்ந்து,
'வருமுறை திவாகரம்போல் வைத்துப்பிங் கலந்தை தன்னில்
ஒருங்குள பொருளும் ஓர்ந்திட் டுரைத்தனன் விருத்தம்
தன்னில்' (சி. பா 7,8)

என்று குறிப்பிடுவதனால் அறியலாம்

ஒருசொல் பலபொருள் நூலாக்கிய அருமருந்தைய தேசிகர் தாம் இயற்றிய அரும்பொருள் விளக்க நிகண்டில்

'மாவியல் சிறக்கும் வீரை
மண்டல வன்காங் கேயன்
ரேவண சித்தன் செஞ்சொற்
கயாகரன் இவராற் சொற்ற
பாவியல் நூற்கூ றோர்சொல்
பல்பொருட் டொகையெலாஞ் சேர்த்து
ஓவிலா வளஞ்சிறப்ப
ஒருபெரு நூல தாக' (பாயிரம் – 6)

இயற்றியமை குறிப்பிடுமிடத்துச் சூடாமணிக்கு முதன்மை தந்துள்ளார்.

சூடாமணி நிகண்டு நாட்டில் வழங்கத் தொடங்கியபின் தமிழ்ப் புலவர் பெருமக்கள் இந்த நிகண்டினையே விரும்பிக் கற்று மனனம் செய்வாராயினர். இளம்பருவத்தில் தமிழ் கற்பார் படித்துவந்த நூல் இதுவே. இதனால் நிகண்டு கற்பது என்றால் சூடாமணி நிகண்டைக் கற்பது என்பதே நாட்டில் பெருவழக்காயிற்று.

இத்தகு சிறப்புடைய சூடாமணி நிகண்டு செய்தவர் மண்டல-புருடர் ஆவார். தம் நிகண்டு நூலில் 13 இடங்களில் தம் பெயரை 'மண்டலவன்' என்று இவர் குறிப்பிடுகிறார். இவர் தொண்டை நாட்டிலுள்ள வீரை என்னும் ஊரில் பிறந்து வாழ்ந்தவர். இவ்வூரின் பெயர் 'வீரபுரம' எனவும் வழங்கும். இது இப்பொழுது வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள பெருமண்டூர் என இப்பொழுது வழங்கும் ஊராகும். தொண்டை மண்டல சதகம்,

'பண்டை நிகண்டு திவாகரம் பிங்கலம் பன்னுரிச்சொல்
எண்டிசை யின்சொல் வடமொழிச் செய்யுளெ ல்லாமுணர்ந்தே
தண்டமிழ் கொண்டு நிகண்டு சூளாமணி தானுரைத்த
மண்டல வன்குடி கொண்டது நீள்தொண்டை மண்டலமே'

என்று மண்டலவரின் பெருமை பேசுகிறது தொண்டை மண்டலத்-திற்குப் பெருமை சேர்த்த புலவர்களுள் இவர் ஏற்றமுடையவராவர். தாம் இயற்றிய நிகண்டு சூளாமணியை முந்திய தமிழ் நூல்கள் வட மொழி நூல்கள் முதலியன எல்லாம் ஆராய்ந்து ஆக்கியுள்ளார் என்னும் செய்தியும் இப்பாடலால் அறியவரும்.

மண்டலவரின் குருவாக வந்து வாய்த்தவர் குணபத்திர முனிவர். இவர் திருநறுங்குன்றை என்னும் ஊரில் இருந்தவர் இவ்வூர் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திருநறுங்கொண்டை என்று வழங்கும் திருத்தலமாகும் தமிழிலும் சோதிட நூலிலும் இவர் வல்லவராயிருந்தார் இவ்வாசிரியர் முன்னாளில் தமிழை வளர்த்த பாண்டிய மன்னரைப்போல விளங்கினார் புலவர்கள் இவரைப் போற்றிக் கவிமாலை சூடினர்

'சொல்லொடு பொருளு ணர்ந்தோன் சோதிட நீதி வல்லோன்
நல்லறி வாளன் எங்கள நறுங்குன்றை ஞான மூர்த்தி
பல்லுயிர்க் கொருதா யாகும் பரமன்மா முனிவன் மெய்ந்நூல்
வல்லுநர் வல்லார்க் கெல்லாம் வரையறத் தரையில் வந்து'

'பருதியொன் றுதயஞ் செய்து பங்கய மனேக கோடி
முருகெழ மலர்வித் தென்ன முகமுட னகமலர்த்தி
மருவுமுத் தமிழை முன்னாள் வளர்த்த பாண்டியனே போலக்
கருதிய எல்லாம் தந்து கவிமணி மாலை சூடி'

'செகமெனும பளிங்கு மாடத் திகிரிவேந் தரையே போலப்
புகழெனும் பஞ்சி சேர்த்திப் பொலிவுறு பேரத் தாணி
மகிழ்குண பத்ர னெங்கள் வழித்தெய்வம் போல்வான் சொல்ல
இகபரம இரண்டும் வேண்டி இயலிசை வல்லோர் கேட்ப'

(சி. பா. 4–6)

எனவரும் பாடல்களில் குணபத்திர முனிவரின் சிறப்புகளை மண்டலவர் எடுத்துரைத்துள்ளார். தம்முடைய ஆசிரியரின் தூண்டுதலாலேயே இவர் இந்நிகண்டு நூலை ஆக்கினார் என்பதனையும் பாயிரப் பகுதியில் தெரிவித்துள்ளார். பாயிரப் பகுதியில் மட்டுமன்றித் தொகுதி தோறும் இறுதிப்பாடலில் தம் ஆசிரியரைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்துரைக்கிறார். சூடாமணி நிகண்டு தவிர அருகனது புகழைக் கூறுகின்ற 'திருப்புகழ்ப புராணம்' என்னும் ஒரு நூலினையும் மண்டலவர் செய்ததாகத் தெரியவருகிறது.

மண்டலபுருடர் தாம் இயற்றிய நிகண்டு நூலுக்கு இட்ட பெயர் 'நிகண்டு சூடாமணி' என்பது. சூடாமணி என்பது முடிமணி. இதனைச் சூளாமணி எனவும் உரைப்பர். சூளாமணிக் காவியமும் கம்பராமாயணத்தில் வரும் சூளாமணிப் படலமும் இப்பெயரை நமக்கு நினைவூட்டும். நிகண்டுகளுள் தலையாயது என்னும் கருத்தில் இவர்தம் பெயரமைப்பு உள்ளது நிகண்டு என்னும் சொல்லை முதன்முதல் தமிழில்

வழங்கத் தலைப்பட்டவர் இவரே இவர் வழங்கிய இப்பெயர் தமிழ் நாட்டில் பெருவழக்காய் வேரூன்றிவிட்டது 'இயலிசை வல்லோர் கேட்ப' இந்நிகண்டு நூல் பிறந்தது என்பதனால் இவர்தம் நிகண்டு நூல் இயலிசைச் சொற்களையெல்லாம் உள்ளடக்கியது என்பது பெறப்படும்.

சூடாமணி நிகண்டு திவாகரத்தைப்போல 12 தொகுதிகள கொண்டுள்ளது.

'விரவிய தேவர் மக்கள்
விலங்கொடு மரம் இடம்பல்
பொருள் செயும் வடிவுபண்பு
போற்றிய செயல் ஒலிபபேர்
ஒருசொற்பல் பொருளி னோடும்
உரைத்தபல் பெயர்க் கூட்டந்தான்
வருமுறை திவாகரம் போல்
வைத்துப்பிங் கலந்தை தன்னில்
ஒருங்குள பொருளும் ஓர்ந்திட்டு
உரைத்தனன் விருத்தம் தன்னில்'

(சி. பா. 7–8)

எனவரும் இவர்தம் பாயிரப் பகுதி நூலின அமைப்பை நன்கு விளக்குகிறது. சூடாமணி நிகண்டின் பாடல்தொகை 1197 ஆகும்.

மண்டலபுருடர் நூல் செய்த காலம் கிருட்டிணராயர் விசயநகரத்தில் பெருஞ் சிறப்புடன் ஆட்சிபுரிந்து வந்த காலமாகும் (1509-1530) இவ்வரசர் தெலுங்கராய் இருந்தபோதிலும் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தவராவர். செயல்பற்றிய பெயர்த்தொகுதியில் இவ்வரசரைப் பற்றிய குறிப்பு வருகிறது கொடைமடம் பற்றி விளக்கும்போது,

'படைமயக் குற்ற போதும் படைமட மொன்றி லாதான்
மடைசெறி கடகத் தோளான் மதிக்குடை மன்னர் மன்னன்
கெடிமன்னர் வணங்கும் தாளான் கிருட்டிண ராயன் கைபோல்
கொடைமடம் என்று சொல்ப வரையாது கொடுத்த லாமே'

என்று கிருட்டிண ராயனைப்போல வரையாது கொடுக்கும் கொடையே கொடைமடம என்று எடுத்துக்காட்டுகிறார். எனவே, இவருடைய காலம் 16 ஆம் நூற்றாண்டென்பது தெளிவு.

சூடாமணி நிகண்டில் 11ஆம் தொகுதியாகிய ஒரு சொல்பல் பொருள் தொகுதி இக்கால அகராதி போன்று பயன்படும் ஒரு பகுதியாகும். எதுகை முறைபற்றி இவர் சொற்களை அமைத்துப் பொருள் கூறியது பயன்படுத்துவதற்கு எளிதாயிற்று இந்தத் தொகுதியையே முக்கியமாகத் தமிழ் பயில்வார் நெட்டுருச் செய்வது வழக்கம் 'பதினோராவது நிகண்டு' என்று தனிநூலாக உரையுடன் இதனைப் பலர் பதிப்பித்துள்ளனர். இப்பதினோராந் தொகுதியில் அமைந்த பாடல்கள் 310 : பொருள் விளக்கம் பெற்ற சொற்கள் 1575 ஆகும்

பதினோராம் நிகண்டிற்கு அமைந்த உரைகளுள் புதுவை நயநப்ப முதலியாரின் உரைப்பதிப்பு சிறப்பாகக் கூறத்தக்கது. நாதமுனி என்பாரின் வேண்டுதலால் இவர் இவ்வுரையை ஆக்கினார் என்று தெரிய வருகிறது. இவ்வுரை நூலைப் புகழ்ந்து புதுவைப் பொன்னுசாமி முதலியார் அளித்த உரைப்பாயிரம இவ்வுரையாசிரியரின் அருந் தொண்டைப் பெரிதும் போற்றியுரைக்கின்றது.

'வேங்கடம் குமரி மேற்கடல் கீழ்க்கடல்
ஆங்கவ் வெல்லையுள் அருந்தமிழ்ப் பெளவத்
திலகும் அமிழ்தென இயைந்திடும் ஒருசொற்
பல்பொருள் தொகுதி பகர்பொருள் அனைத்தையும்
வெளிப்படை யாக விதந்ததற் கோருரை
எளிதின் உணர இயற்றுதி என்னா
... .
நாத முனிமன் நவின்றன னாகத்
திவாகரம் அரும்பொருள் விளககத் தீபிகை
அவாவற உணர்த்தும் ஆசிரிய நிகண்டொடு
அகலாப் பிங்கலம் அமர்ந்திடும் உரிச்சொல்
நிகண்டு கயாதரம நிகழ்த்தும இரேவணர்
சூத்திரம் பொதிய நிகண்டெனும் தொன்னூல்
மாத்திர மன்றியும் மருவுதொல் காப்பிய
முதனூல் விதிகளை முழுதுணர் அறிவால்
இதமுள சொல்வழுப் பொருள்வழு இலாவகை
ஆராய்ந் ததனை அமைதிபெற விரித்து
ஏரார் இலக்கியம் ஏற்கும் படியுரை
மேற்கோள் காட்டி மேம்படச் செய்தனன்.

இந்த உரைப்பாயிரப் பகுதி உரையாசிரியரின் பேருழைப்பை நன்கு எடுத்துக்காட்டுகிறது. திவாகரம் முதலிய முந்து நூல்களைப் பற்றிய குறிப்பும் இங்குக் காணப்படுகிறது.

இப்பதினோராந் தொகுதியைக் காலத்திற் கேற்ற வகையில் விரிவு படுத்தி அமைக்கும் பணியைச் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த களத்தூர் வேதகிரி முதலியார் செய்துள்ளார். இவர் புதிய சொற்பொருள்கள் பற்றிய பாடல்களைப் பாடிப் பதினோராந் தொகுதியிலுள்ள 310 பாடல்களுடன் கலந்து 583 பாடல்கள் கொண்ட ஒரு தனி நூலாக விரிவாக்கினார் இந்நூலை. 'நிகண்டு' என்னும் பெயரால் யாழ்ப்பாணத்து தமிழ்ச் சங்கத்தார் 1843-ல் வெளியிட்டுதவினார். இது வேதகிரி முதலியார் விரிவாக்கிய நூலாதலின் 'வேதகிரியார் சூடாமணி' எனவுங் கற்றோர் குறிப்பாராயினர்.

அண்ணாசாமிப்பிள்ளை என்பார் 11ஆம் நிகண்டு மூலத்தை நூலின் இணைப்பாகத் தந்து அதில் விளக்கப் பெற்ற சொற்பொருள்களை அகராதியடைவில் எடுத்துக்காட்டி, அதற்கு விளக்கமும் தந்துள்ளார். சொல்-பொருள்-விளக்கம் என மூன்று பத்தியாய் இவர் வெளியிட்டுள்ளார் இதற்கு 'ஒருசொற்பல்பொருள் விளக்கம்' என்று பெயர் சூட்டியுள்ளார். இந்நூல் 1850 ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது இதன்படிகள் இப்பொழுது கிட்டுவதற்கு மிக அருமையாயுள்ளது

சூடாமணி நிகண்டிற்குத் திவாகரத்திற்கு அமைந்துள்ளதுபோலப் பல பதிப்புகள் வந்துள்ளன. சென்ற 19ஆம் நூற்றாண்டில் வந்த பதிப்புகள் சில உள.

1 தாண்டவராய முதலியார் பதிப்பு. திவாகரத்தைப் போல முதன்முறையாய்ப் பதிப்பித்து வழங்கிய பெருமைக்குரியவர் என்று பேசப்படுகிறது உரிய ஆண்டு தெரியவில்லை

2. ஆறுமுகநாவலர் பதிப்பு. இதனைச் சீரிய முறையில் இவர் அச்சிற்றியுள்ளார். இவருடைய பதிப்பு 20 க்கும் மேற்பட்ட பல பதிப்புகளைப் பெற்ற பெருமையுடையது.

3. ச. பொன்னம்பலம்பிள்ளை (யாழ்ப்பாணத்து நல்லூர்) இவருடைய முதற்பதிப்பு விவரம் தெரியவில்லை.
இரண்டாம்பதிப்பு வந்தது 1898.

4. அப்பாவுபிள்ளை பதிப்பு பாரிப்பாக்கம் முனியப்ப முதலியாரால் பார்வையிடப்பெற்றது. 1910

5. கணேச முதலியார் பதிப்பு 1933

பதினோராம் நிகண்டுக்குரிய தனிப்பதிப்புகள்

6. புதுவை நயநப்ப முதலியார் - திருவேங்கடாசல முதலியாரின் சென்னை சரசுவதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. 1836

7. ஆ. சென்னகேசவலு நாயுடு பரிசோதித்தது; கலைக்கியான முத்திராட்சர சாலைப்பதிப்பு 1897

8 தில்லை நடராசசுவாமி பதிப்பு 1910

7. அகராதி நிகண்டு

ஒருசொல் பல்பொருளை மட்டும் உணர்த்தும் நிகண்டுகளுள் இது ஒன்று. திவாகரம் பிங்கலம் முதலிய பல நிகண்டுகளையும் எடுத்து ஆராய்ந்து திரட்டப்பெற்றது இந்நூல் என்பதனை.

'வருமிதில் ஒருசொல் பலபொரு ளதனைத்
தெரிதரு பிங்கலம் திவாகரம் முதலாய்ப்
பரவிய நிகண்டு பலவெடுத் தாராய்ந்து
அதிற்சில திரட்டி அகரம் முதலாய்
மதித்தெழு வகார வர்க்க மீறாய்'

எனவரும் பாயிரப்பகுதி தெரிவிக்கிறது. இந்நூல் சகாத்தம் 1516-ல் இயற்றப் பெற்றது என்பது.

'அரிய சகாத்தம் ஆயிரத் தைஞ்ஞூற்று
ஒருபத் தாறென உரைக்கும் ஆண்டில்'

எனப் பாயிரப்பகுதி அறிவிக்கிறது. இதனால் கி. பி. 1594-ல் இந் நிகண்டு இயற்றப்பெற்றமை தெளிவு.

இந்நிகண்டு நூற்பாவால் ஆக்கப்பெற்றது. அகரவர்க்கம் முதலாக வகரவர்க்கம் ஈறாகப் பத்துப் பகுதிகளாய் இது அமைந்துள்ளது. ஒவ்வொரு பகுதியின் தொடக்கம் முடிவுகளில் ஆசிரியர் அதன் தொடக்

கத்தையும் முடிவில் அப்பகுதியில் உள்ள நூற்பாக்களின் எண் தொகையையும் சுட்டும் வரலாற்று நூற்பாக்களை அமைத்துள்ளார்.

அகரம் முதலாய் வகர வர்க்கம் ஈறாய் அகராதி அமையும் இயல்பினைக் கண்டு போற்றி, 'அகராதி' என்னும் பெயரைத் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்தியவர் இவரே. மேலும், அகராதி என்னும் புதுப்பெயரையும் நிகண்டு என்னும் பழம் பெயரையும் இணைத்து, 'அகராதி நிகண்டு' என பெயர் சூட்டிய திறமும் சீர்மையதாகும். பெயருக்கு ஏற்ப இந்நூலில் முதலெழுத்தளவில் அகராதிமுறை தழுவப் பெற்றிருக்கிறது. இரண்டாவது மூன்றாவது எழுத்துக்கள் கவனிக்கப்படவில்லை.

சொற்களை ஒருபெயர் முதலியவாக நாற்பத்தாறு பெயர்வரையில் முறைப்பட அமைத்துள்ளார். சூத்திர யாப்பில் அமைந்த இந்நூல் 'இரேவணாத்திரியர் சூத்திரம்' எனவும் 'சூத்திர அகராதி' எனவும் வழங்குவது உண்டு.

இந்நிகண்டில் அமைந்த சொற்பொருளமைதி குறித்துப் பதிப்பாசிரியர் முகவுரைப்பகுதியில் தரும் கருத்துரை இதன் இயல்பினை நன்கு புலப்படுத்துகிறது.

> "இதன்கண் பிற நிகண்டிலுள்ள சொற்களும் பொருளும் பெரும்பாலும் காணப்படினும் அவற்றிலில்லாத சங்கமருவிய சான்றோர் செய்யுட்களிலும் அவற்றின் உரைகளிலும் பிற்காலத் தமிழ்நூல்களிலும் வழங்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்களும் உலகவழக்கிலுள்ள வெளிப் படைச்சொற்களும் தெலுங்கு கன்னடம் முதலிய தமிழ் திரிபிறமொழித் திரிசொற்களும் ஆங்காங்குச் செந்தமிழ் நாட்டுள் வழங்கும் திசைச் சொற்களும் மருவியும் திரிந்தும் வழங்கும் வடசொற்களும் இடையிடையே மலிந்து கிடக்கின்றன."

சுன்னாகம் பெரு. புலவர் அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் இந் நிகண்டின் தன்மை குறித்து நூல் அச்சாகுமுன் பதிப்பாசிரியருக்கு எழுதிய கடிதக் குறிப்பு வருமாறு

"அகராதி நிகண்டும் அவசியம் வெளியிடப்பட வேண்டியதே படிப்போர் சொற்களின் பொருளை அறிவதேயன்றிப் பழந்தமிழ் நூற் பரிபாலனமுமாகும். அதிலே 'கச்சுரி', 'கம்பில்', 'கலவகம' முதலிய அருஞ்சொற்கள் வருகின்றன. சொற்களை அதிகம் திரிவாக்கிப் பாடினார் போலும். 'விலாழி' என்பதன்றி 'இலாழி' என்பது குதிரைவாய் நீர் என்கிறார். எங்கேயாவது பிரயோக மிருக்கலாம். வடமொழியிலே பலகறைக்குக் 'கௌடி' என்று பெயர் இவர் 'கவடி' என்பர். வேறு நூல்களிலும் கவடி என்று வருகின்றது. அது 'கவுடி' என வருதல நன்று. ஆயினும் முன்னோர் வழக்கு இருக்கட்டும். இக்காலத்திலே இவைகளைப் படிப்பார் அரியர்."

இத்தகு அருமையான பல குறிப்புகளைத் தரும் இந்நிகண்டு மிகவும் போற்றத்தக்கது.

நூலினிடையே வரும் தற்சிறப்புப் பாயிரங்களால் இந்நூலாசிரியரைப் பற்றிய சில குறிப்புகள் தெரியவருகின்றன. இந்நூலாசிரியரின் ஊர் புலியூர். இது சென்னையின் பகுதியான கோடம்பாக்கத்தில் ஒரு பகுதியாகும் இவர் சிதம்பரம் ரேவணசித்தர் என்று குறிக்கப் பட்டுள்ளார், சிதம்பரம் என்பது இவர்தம் தந்தையார் பெயரைச் சுட்டும். சிதம்பரம் என்பாரின் புதல்வராகிய இரேவணசித்தர் என்பது கருத்து. நூலினிடையில் ஆங்காங்கு வரும் குறிப்புகளால் இவர் பட்டீச்சுரத்தில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானிடம் ஆழ்ந்த பக்தி பூண்டவர் என்பது தெரியவரும் இவர் சைவ வேளாள மரபினராவர். திருப்பட்டீச்சுரப்புராணம், திருவலஞ்சுழிப்புராணம், திருமேற்றளிப்புராணம முதலிய பிற நூல்களையும் இவர் இயற்றியுள்ளார் என்பதும் தெரியவரும்.

இந்நூல் மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பிரசுரம் 42- ஆவதாக 1921 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது இதனை ஏட்டிலிருந்து எடுத்துப் பதிப்பித்துத் தமிழுலகுக்கு வழங்கியவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் செந்தமிழ்ப் பத்திராதிபராய் விளங்கிய திரு. நாராயணையங்கார் அவர்களாவர் இவர் சங்கத்துச் செந்தமிழ்க் கலாசாலைப் பேரா-

சானாகவும் திகழ்ந்தவர், செந்தமிழில் இவர் எழுதிவந்துள்ள ஆய்வுரைகள் பலவாகும் இவற்றுள் 'நியாயப் பிரவேச மணிமேகலை' ஆய்வு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

அகராதி நிகண்டுக்கு இவருடைய பதிப்புக்கு முற்பட்ட ஒரு பதிப்பு உண்டு என்று பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்கள் அரும்பொருள் விளக்க நிகண்டு முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்கள் (பக். 13) நான் தேடியவரையில் அப்பதிப்பு இன்னும் எனக்குக் கிட்டவில்லை.

8. ஆசிரிய நிகண்டு

ஆசிரிய விருத்தத்தால் அமைந்த நிகண்டுகளில் ஆதலின் ஆசிரிய நிகண்டு என்னும் பெயர் காரணப் பெயராயிற்று. அடி நிமிர்ந்து செல்லும் கழிநெடிலாசிரிய விருத்தத்தாலான இந்நிகண்டுப் பாக்கள் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் ஆசிரிய விருத்தம் போன்ற போக்கில் உள்ளன ஆற்றொழுக்கான நடை ஒரு சொல்லுக்குப் பலபொருள் வரும்போது அப்பொருள்களின் எண்ணிக்கையை எண் குறியீட்டால் தெரிவிப்பது இதற்குரிய ஒரு தனிச் சிறப்பாகும்.

ஆசிரிய நிகண்டின் ஆசிரியர் ஆண்டிப் புலவர் இவர் தொண்டை வளநாட்டுச் செஞ்சிப் பகுதியை அடுத்த ஊற்றங்கால் என்னும் ஊரில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் பாவாடை வாத்தியார் என்பதாம்

'மன்னுசெஞ் சிச்சீர்மை தொண்டை வளநாட்டில்
வாய்ந்த ஊற்றங்கால் எனும்
மாநகர்த் கதிபன் உயர்பாவாடை வாத்தியார்
மைந்தன் ஆணடிப் புலவனே ' (பாயிரம் - 1)

என்றும்,

'வேளம்பரவும் ஊற்றங்காற் பாவாடை வாத்தியார்
மைந்தன் ஆண்டிப் புலவனே ' (பாயிரம் - 3)

என்றும் பாயிரப் பகுதிப் பாடல்களில் இவர் குறிப்பிடுவதனால் இவருடைய ஊரும் தந்தையார் பெயரும் தெரியவருகின்றன

'மன்னுசெஞ் சிச்சீர்மை சூழ்தொண்டை வளநாட்டில்
வாய்த்த ஊற்றங்காலில் வாழ்
வளையறுப்போர் குலன் பாவாடை வாத்தியார்
மைந்தனாம் நக்கீரனே"

என்றும் வரும் சுவடிப் பாடவேறுபாடு கொண்டு இவரை வளையறுப்போர் குலத்தைச் சார்ந்தவர் என்பர்.

'கைலையான் வடிவெடுத் தைந்தெழுத்தின்
மந்த்ரோப தேசஞ்செய் ஞானப்பிரகாச குரு
வனசமலர் அடிசூடுவேன்" (பாயிரம் 2)

எனவரும் பாயிரப் பகுதியால் இவருடைய ஞானாசிரியர் ஞானப்பிரகாச குரு என்பது தெரியவரும். ஐந்தெழுத்து மந்திர உபதேசம் பெற்ற ஆண்டிப்புலவர் சைவ சமயத்தினர் என்பது வெளிப்படை.

'ஏரா சிரியநிகண் டென்னுமீ ரைந்தொன்று
சீரார் தொகுதியதாச் செப்புதற்கே - ஓராரைச்
சேரானைச் சேர்ந்தாரைச் சேரும் வினையகற்றுங்
காரானை மாமுகன்றாள் காப்பு"

எனக் காப்புச் செய்யுளில் விநாயக வணக்கம் செய்வதாலும் இவர் சைவ சமயத்தினரே என்பது உறுதியாகும்.

இவர் ஆசிரிய நிகண்டேயன்றி உரையறி நன்னூல் முறைமை என்னும் நூலையும் செய்துள்ளார் என்பது தெரியவரும்.

'இந்நிலந் தன்னுளோ ரெவருமறி யும்படிக்
கெண்ணி யாசிரியத் தினால்
இயம்பி நிகண்டு முறை யறிநன்னூல் முறைமையும்
இரண்டுமே செய்து வைத்தேன்'' (பாயிரம் - 1)

எனவரும் பாயிரப் பகுதி இவர் முறையறி நன்னூல் முறைமை செய்தமையைக் குறிக்கும்

ஆசிரிய நிகண்டுப் பாயிரத்தின் முதற்பாடலிலேயே தமக்கு முன் வழிகாட்டியாயுள்ள நிகண்டுப் பெயர்களைக் கால அடைவில் தொகுத்துரைத்து அவற்றைத் தாம் பயன்படுத்தியமையையும் தெரிவித்துள்ளார்

முன்னுள திவாகரம் பிங்கல நிகண்டுசீர்
முந்துகாங் கேய னுரிச் சொல்
முறைபெறு கயாதரம் பகருமக ராதியிவை
முற்றுமொ ன றாய்த் திரட்டி
இந்நிலந் தனிலுளோ ரெவருமறியும்படிக்
கெணணியா சிரியத்தினால
இயம்பிய நிகண்டு'

என அகராதி நிகண்டிற்குப் பின் தம் நிகண்டு தோன்றியது என்ப தனைத் தெரிவித்துள்ளார்.

அகராதி நிகண்டு சகாத்தம் 1516-ல் அதாவது கி. பி 1594-ல் செய்யப் பெற்றது என்பது திட்டவட்டமாகத் தெரியவரும் செய்தி. ஆகவே, ஆசிரிய நிகண்டு இதற்குப் பிற்பட்டது என்பது தெளிவு. எனவே, இவரை 17-ஆம் நூற்றாண்டினர் என்று கொள்ளலாம்.

ஆசிரிய நிகண்டு முழுமையும் கொண்ட நிறைவான பிரதிகள் இன்னும் அகப்படவில்லை. சிற்சில தொகுதிகளாக இந்நிகண்டு பல இடங்களில் சிதறுண்டு கிடக்கிறது. கிடைத்த வரையில் தொகுத்துத் தஞ்சாவூர்ச் சரசுவதிமகால் நூல்நிலையத் தமிழ்ப்பண்டிதர் வித்துவான் வீ. சொக்கலிங்கம் இந்நிகண்டினைப் பதிப்பித்துச் சரசுவதி மகால நூல்நிலைய வெளியீடாக 1975-ல் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். எட்டாவது தொகுதி வரையில் இப்பொழுது அச்சாகியுள்ளது. ஏனையவும் கிடைத்து இந்நூல் முழுமையாய் வெளிவரின் தமிழுக்கு வளம் சேரும். பதிப்பாசிரியர் பிற நிகண்டுச் சொற்களை ஒப்புமையாகக் காட்டியிருப்பது சிறப்பான தனிக்கூறு. ஆனால் ஆசிரிய நிகண்டு தரும் சொற்பொருள்களை வரையறை செய்து முதற்கண் தரப்படாமை ஒரு பெருங்குறையேயாகும்.

9. அரும்பொருள் விளக்க நிகண்டு

மண்டலபுருடர் இயற்றிய சூடாமணி நிகண்டின் 11 ஆம் தொகுதி யமைப்பைப் பின்பற்றிய நூல்களுள் காலத்தால் முந்தியது அரும் பொருள் விளக்கநிகண்டு. இதனை இயற்றியவர் அருமருந்தைய தேசிகர் இவர் சிவப்பிரகாசர் என்பவரின் புதல்வர்; வீரசைவ மரபினர்; திருச்செந்தூரில் வாழ்ந்தவர் இவர் தம்முடைய ஞானாசிரியரும்

தில்லை வாசியுமாகிய பச்சைக்கந்தைய தேசிகருடைய ஆணையை மேற்கொண்டு இந்நிகண்டினை இயற்றினார். இதில் சூடாமணி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு அகராதி நிகண்டு, கயாதர நிகண்டு என்பவற்றின் ஒருசொல் பல்பெயர்களைத் திரட்டித் தருகிறார். 700 விருத்தங்களில் ஆசிரியர் இந்நூலை யாத்துள்ளார்.

இந்நூல் அரங்கேறிய காலம் சாலிவாகன சகாப்தம் 1685-ஆம் ஆண்டு சித்திரபானு மாசி மாசம் சிவநிசி பொருந்திய வெள்ளிக்கிழமை ஆகும். எனவே 1763 ல் இந்நூல் இயற்றி முடிந்தது என்பது தெரிய வரும். அகராதி நிகண்டையும் இவர் பின்பற்றியிருப்பதால் அந்நூல் செய்த காலமாகிய 1594-க்குப் பிற்பட்டவர் என்பது பெறப்படும்.

அகராதி நிகண்டின் ஆசிரியராகிய இரேவணாத்திரியர் வீரசைவர் களுடைய பூர்வாசிரியர்களுள் ஒருவர். வீரசைவர் என்பார் பெரும் பாலும் கன்னட தேசத் தொடர்புடையவர். ஆதலினால் இவருடைய நிகண்டில் கன்னடச் சொற்கள் பல சேர்த்திருக்கின்றார். அகராதி நிகண்டினை அரும்பொருள் விளக்க நிகண்டு பல விடங்களில் அடி யொற்றிச் செல்லுகிறது.

இந்நூலுள் ஓரெதுகை வருக்கத்தில் பிற எதுகைச் சொற்கள் கல வாதபடி இனிய ஓசையுடன் பாக்களை ஆசிரியர் அமைத்துள்ளார்.

இந்நூலின் பல பிரதிகளையும் ஒப்பு நோக்கி நன்கு பரிசோதித்து அச்சில் வெளியிட்டவர் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்க ளாவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ்ப் பிரசுரம் 54- ஆவதாக இது 1931-ல் அச்சுருப்பெற்று வெளிவந்தது. பலபொருளொரு சொல் அகராதியையும் பதிப்பாசிரியர் தொகுத்துத் தந்திருப்பது இப்பதிப்பிற்கு ஒரு தனியழகைத் தருகிறது. ஆய்வாளருக்கு இவ்வகராதி பெரும் பயன் தருவதாகும்.

10. பொதிகை நிகண்டு

பொதிகை நிகண்டின் ஆசிரியர் சாமி கவிராயர் ஆவர். இவர் திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சி ஊரினர். நிகண்டே யன்றிச் சாமிநாதம் எனப்பெயரிய ஐந்திலக்கண நூல் ஒன்றும் இவர் செய்துள்ளார். இவருடைய மகனார் சிவ சுப்பிரமணியக் கவிராயர். இவர் நாமதீப நிகண்டு இயற்றியவர். இவ்வாசிரியர்,

'கோமாது விரிந்தனைய பலநிகண்டும் பார்த்துக்
கும்பன்மகிழ் பொதிகைநிகண் டென்றொருநூல்
பகர்ந்தான்
நாமாது புகழ்பொருநா நதிசூழ் கல்லிடையூர்
நதிகுலன் சுவாமிகவி ராசசிங்க நிதியே'

எனத் தற்சிறப்புப்பாயிரத்தில் கூறுவது கொண்டு இவர் சைவ வேளாள மரபினர் என்பது தெரியவரும். மேலும் இவர் முந்திய பல நிகண்டுகளையும் பார்த்துப் பொதிகை நிகண்டினை ஆக்கியதாக் குறிப்பிடுகிறார். எனவே, திவாகரம், பிங்கலம் முதலியன எல்லாம் இதற்கு முதல் நூல்களாகும்.

இவர் செய்த பொதிகை நிகண்டு இருவேறு வகைகளில் காணப்படுகிறது. விருத்தயாப்பில் சூடாமணி நிகண்டினை ஒத்தது ஒரு பகுதி. தெய்வப்பெயர் முதல் ஒருசொற்பல்பொருட் பெயர்வரை 10 தொகுதிகள் கொண்டது இறுதித்தொகுதி முழுமையாய்க் கிட்டவில்லை இதனை முதற்பாகமாகவும் நூற் பாவில் அமைந்த ஒரு சொற்பல்பொருள் விளக்கப்பகுதியை இரண்டாம் பாகமாகவும் இதனைப் பதிப்பித்த பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் அமைத்துத் தந்துள்ளார்கள். இரண்டாவது பாகம் அகராதி நிகண்டைப்போன்ற அமைப்புடையதாய் அகரவர்க்கம் முதல் வகரவர்க்கம் ஈறாகப் பத்து வர்க்கங்களைக் கொண்டுள்ளது. இந்நிகண்டினைச் சீரிய முறையில் பதிப்பித்துப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் 1934-ஆம் ஆண்டு வெளியிட்டனர். இஃது அவர்கள் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்த தமிழகராதியின் ஆதார நூற்றொகுதியில் மூன்றாவதாகும்.

11 நாமதீப நிகண்டு

முழுமையான தமிழ் நிகண்டுகளில் முத்திறக்கூறுபாடுகளைக் காணலாம். அவை யாவன: 1. ஒருபொருட்பல்பெயர்த் தொகுதி, 2. ஒருசொல் பல்பொருட்பெயர்த் தொகுதி, 3. பல்பொருட்கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி இவற்றுள் இந் நாமதீப நிகண்டு முதற்கூறாகிய ஒரு பொருட் பல்பெயர்த் தொகுதியாய் அமைந்துள்ளது ஒருபொருட் பல்பெயரை வடமொழியாளர் 'ஸமாநார்த்தபதம்' என்பர். நிகண்டுகளுள் பெரும்பாலனவும் திவாகரரின் அமைப்பு முறை தழுவியே அமைந்திருக்கின்றன. ஆனால், இந்நாமதீப நிகண்டு புதியதொரு முறையில் பொருட்பாகுபாடு செய்துள்ளது இதனைப் பதிப்பாசிரியர் தம் முன்னுரையில் விளக்க வரைபடமாய் அமைத்துக் காட்டியுள்ளார். அது பின்வருமாறு :



இந்நிகண்டு காலத்தால் முற்பட்ட உரிச்சொல் நிகண்டு போல வெண்பாயாப்பில் அமைந்துள்ளது. நூல் முழுவதும் 808 வெண் பாக்கள். இவற்றுள் பாயிரம் 8 செய்யுள், ஏனைய 800 செய்யுட் களும் பொருட் பெயர்களையே விரித்துரைக்கின்றன, இந்நூலில் கூறப்பட்டுள்ள பெயர்கள் ஏறத்தாழப் பன்னீராயிரமாகும்.

இந்நிகண்டு நூலுள் அமைந்த பெயர்களின் சிறப்புத்தன்மை குறித்துப் பதிப்பாசிரியர் முன்னுரையில் சுட்டிக் காட்டும் பகுதி மிக முக்கியமாகக் கவனிக்கத்தக்கது. அது வருமாறு :

> "பெயர்களுள் சங்ககாலம் தொட்டு ஆசிரியரது காலம் வரையும் தமிழிற் பயின்றுள்ள சொற்களைக் காணலாம். மலைநாட்டி லிருந்து தமிழிற் புகுந்த சில திசைச் சொற்களும் இதன்கண் உள்ளன. 'தை நாறு கன்று' என இந்நூல் கூறும். மலையாள மொழியில் மரக்கன்று 'தை' யென இன்றும் வழங்கப் படுகின்றது ஆட்சி என்பது வாரத்தின் பெயரென இந்நூலுணர்த்தும், மலையாளத்தில் இம்மொழி இன்றும் இப்பொருளில் வழங்குகின்றது. இவை போன்றனவும் பிறவும் அறிந்தின் புறுதற்குரியன. 'பல்லாயிர நிகண்டிற் பண்டிதர்கள் சொன்ன பொரு ளெல்லா மெளிதா யினிதுணர..... பன்னுதமிழ் நாமதீபம்' என்று பாயிரத்தில் வந்துள்ள

அடிகளை நோக்கும் போது இந்நூலை இயற்றுதற்கண் நெடுங்காலமாய் இதன் ஆசிரியர் உழைத்திருத்தல் வேண்டு மென்பது புலனாகின்றது.''

இந்நூல் தோன்றிய காலப்பகுதியிலேதான் கவிராயர் முத்துசாமி பிள்ளை இயற்றிய நாநார்த்ததீபிகையும் தோன்றியுள்ளது. அவர் முன்னோர் இயற்றிய பல நூல்களையும் ஒன்றாய்த் திரட்டித் தமது நூலைச் செய்வதாக உரைப்பது போலவே இந்நூலாசிரியரும் முந்திய நூல்கள் எல்லாவற்றையும் தழுவித் தாம் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார் ஒருசொற்பல்பொருளை எடுத்துரைப்பதில் நாநார்த்ததீபிகை எவ்வளவு விரிவும் விளக்கமுமாயுள்ளதோ அதேபோன்று ஒருபொருட் பல்பெயர்களைத் தொகுத்துத் தருவதில் நாமதீப நிகண்டு சிறப்பிடம் பெற்று விளங்குகிறது.

இந்நூலாசிரியர் கல்லிடை நகர் சிவசுப்பிரமணியக் கவிராயர் ஆவர் கல்லிடைநகர் என்பது திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கல்லிடைக்குறிச்சி ஆகும். இவர்தம் தந்தையார் சாமிநாத கவிராயர் இவர் 'பொதிகை நிகண்டு' எனப் பெரிய ஒருசொற் பல்பொருள் ஒன்றை ஆக்கியுள்ளதாக நூலாசிரியர் பாயிரத்தில் தெரிவித்துள்ளார். 'தொகை நிகண்டு' என ஒரு நூலும் தாமே செய்திருப்பதாகவும் இவர் தெரிவிக்கிறார். எனவே, நிகண்டின் முத்திறப் பகுதியையும் இவரும் இவருடைய தந்தையாரும் செய்து முடித்தனர் என்பது தெளிவாகும். இவர் திருவாவடுதுறை யாதீனத்து அருள்திரு சுப்பிரணிய தேசிகர் காலத்தவராவர்.

நாமதீப நிகண்டு 1930 ஆம் ஆண்டு பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்களால் பதிப்பிக்கப் பெற்று அவர்தம் சொந்த வெளியீடாகத் தமிழுலகிற்குக் கிட்டியது. இந்நூலிற்கு நான்கு மூலபாடப் பிரதிகளும் மூன்று உரைபாடப் பிரதிகளும் பதிப்பாசிரியருக்குக் கிட்டின. உரைபாடப் பிரதிகள் மூன்றும் குறைப் பிரதிகளாகும். அதோடு பல இடங்களில் பிழைபட்டுமிருந்தன. ஆகவே பதிப்பாசிரியர் உரைபாடத்தைத் தழுவி புதியதோர் உரை நூல்முழுமைக்கும் எழுதிச் சேர்த்துள்ளார். மேலே மூலபாடமும் அடிக்குறிப்பில் அம்மூல பாடங்களுக்குரிய உரைபாடமுமாக அமைத்து இந்நிகண்டு நூல் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது எனவே, பாட்டில் மேலே ஆசிரியர் தரும் பொருள்

களைக் கீழேயுள்ள உரைபாடத்தில் உடனுக்குடன் கண்டு தெளிய வாய்ப்பாயுள்ளது. விளக்க எடுத்த பொருள் தலைப்புகளைத் தடித்த எழுத்தில் அமைத்து அடுத்து உரைபாடமும் உரிய பெயர்களின் எண்ணிக்கை பற்றிய எண் குறிப்புமாக அமைத்துள்ள முறை சிறப்பான தாகும். நூலிறுதியில் அமைக்கப்பட்டுள்ள சொல்லகராதி இந்நூலுள் விளக்கப்பெற்ற பொருள்களை எளிதில் கண்டுகொள்ளத் துணை நிற்கிறது நிகண்டுப் பதிப்புகளுக்கு ஒரு முன்மாதிரியான வழிகாட்டியாய் விளங்குகிறது இந்நாமதீப நிகண்டின் அச்சுப் புத்தகம்.

12. பொருட்டொகை நிகண்டு

நிகண்டுகளின் முத்திறக் கூறுகளில் பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதியாகிய தொகைப்பெயர் விளக்கம் மட்டும் உரைப்பது பொருட்டொகை நிகண்டு. ஒருபொருள், இருபொருள் முதலியனவாக நூறு பொருள் வரையிலான தொகைப்பெயர் விளக்கம் இந்நூலுள் உள. இந்நூல் நூற்பாவால் அமைந்துளது.

நாமதீப நிகண்டு இயற்றிய சிவசுப்பிரமணியக் கவிராயர் 'முந்தியான் பன்னுந் தொகை நிகண்டிற் பார்க்கவிரிவாம்' (நாமதீப. பாயிரம் 7) எனக் குறிப்பிடுவதனால் 'தொகை நிகண்டு' எனப் பெயரிய நூலொன்றை அவர் செய்திருப்பது தெரியவருகிறது. ஆனால், அத்தொகை நிகண்டின் பிரதி நமக்கு இன்று கிட்டவில்லை. தொகைப் பெயர் விளக்கமாக இன்று நமக்குக் கிட்டியிருக்கும் ஒரே நிகண்டு பொருட்டொகை நிகண்டு.

இந்நிகண்டு நூலின் ஆசிரியர் சுப்பிரமணிய பாரதி. இவர் புதுக்கோட்டைச் சீமையைச் சார்ந்த குடுமிமாமலை ஊரைச் சார்ந்தவர். இவருடைய தந்தையார் வைத்தீசுர தீட்சிதர் என்பவராவார்.

பொருட்டொகை நிகண்டினை மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் தனி நூலாய் வெளியிட்டுள்ளனர்.

13 நாநார்த்ததீபிகை

நிகண்டுகளில் பொருள்களின் பெயர்களைத் தொகுத்துத் தரும் பகுதியைவிடவும் ஒருசொல் பல்பொருளுரைக்கும் பகுதியையே மாணவர் நெட்டுருச் செய்வது வழக்கமாகும். சூடாமணி நிகண்டின் பதினோ–

ராவது தொகுதியை மனப்பாடம் செய்வது தமிழ்ப் பாடசாலைகளில் முன்பு வழக்கம். இதனை விரிவுபடுத்தி அமைத்தவர் வேதகிரி முதலியாராவார். அவர் புதுக்கிப் பெருக்கிய ஒருசொற் பல்பொருள் நிகண்டு சூடாமணி நிகண்டின் விரிவாக்கமாகும் ஒருசொல் பலபொருளையே தனியாக விளக்க முற்பட்ட அகராதி நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு நூல்களைப்போல மிகவிரிவாய் அமைந்தது நாநார்த்த தீபிகை இப்பெருநூல் கி. பி. 1850 ஆம் ஆண்டளவில் தோன்றியதாகும்.

இந் நாநார்த்த தீபிகைக்கு முதல் வழிகாட்டியாய் அமைந்த முன்னூல் சூடாமணி நிகண்டு. இது ககரமுதல் னகரவீறாக எதுகையமைப்பில் ஒருசொல் பலபொருளை விரித்துரைத்துள்ளது. இவர்தம அமைப்பில் ஓரெதுகைச் சொற்பற்றிய பாடலில் பிற எதுகைச் சொற்களும் விரவி வருவது ஒரு குறைபாடாய் அமைந்தது மேலும் இந்நூல் ஒரே வகையான ஆசிரிய விருத்தத்தால் அமைந்தது. ஆனால் நாநார்த்த தீபிகையிலோ பல்வேறுவகையான விருத்தங்களில் ஓரெதுகையில் பிறவெதுகைச் சொற்கலவாமல் அமைந்த சிறப்புடன் திகழ்கிறது.

இநநாநார்தத தீபிகையின் தனிச் சிறப்புக் குறித்துத் தற்சிறப்புப் பாயிரப் பகுதியில ஆசிரியர் தரும் கருத்துரைகள் பல.

'வருகக ராதி னகரவீ றெதுகை
வைத்துஅதிற் கலப்பு உறாது அடைவே
பொருள்பெற எழுத்தின் முறையில் நாநார்த்த
தீபிகை எனஇது புகல்வாம்' (த. சி. 5)

என்றும,

'அடியொன்றில் இரண்டும ஒன்றும்
ஆக ஓர் தொடையிற் செய்யுள்
முடியஓர் சொல்நா நார்த்தம்
முறைதர மொழிகின் றேனால்' (த. சி. 6)

என்றும்,

'கற்பானா டுறும்மைந்தர்க்கோர்
பாடமாம் என்னக் கற்ற
விற்பனர் கொள்வ ராக
வேண்டுகொண்டு அடைசொற் கஞ்சிப்
பற்பல விருத்தத் தாலும்
பகர்ந்தவும் தள்ளார் என்றோர்
சொற்பல பொருள் விளக்கம்
சொல்லினன் நகைநா ணாமே'

என்றும் வருவன ஆசிரியர் இந்நிகண்டில் மேற்கொண்ட சிறப்புக் கூறுகளை நன்கு விளக்குவனவாம்.

இந்நாநார்த்த தீபிகை சூடாமணி நிகண்டு பதினோராவது தொகுதியின் முறையைப் பின்பற்றி எதுகை முறையமைப்பில் ஆக்கப் பெற்ற நிகண்டு ஆகும் என்பது முன்னர்ச் சுட்டப்பட்டது. இந்நூல் முழுமையும் ஒருசொல் பல்பொருள் உரைப்பதே. இதில் 1102 விருத்தப் பாக்கள் உள; 5452 சொற்களுக்குப் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. வேதகிரியார் சூடாமணியில் எதுகைக் கலப்பின்றி அமைந்ததுபோல இந்நூலும் எதுகைக் கலப்பின்றி உள்ளமை தனிச் சிறப்பாகும். மேலும் அடைச் சொற்களை நீக்கியிருத்தலும் இதில் சிறப்பாகப் போற்றற் குரிய ஒரு தனிக் கூறாகும்.

தீபிகை ஆசிரியர் தாம் நூலியற்றுதற்கு ஆதாரமான முந்திய நூல்களை வெளிப்படையாக உரைத்திலர்.

'........ முன்னோர் பன்னூலில்
சிலவெவ்வே றுரைத்த வெல்லாம்
சேர்த்தொன்றாத் திரட்டி யோர்சொல்
பலபொருள் எனும் நா நார்த்த
தீபிகை பகர லுற்றாம்' (த சி. 1)

எனப் பொதுவகையால் கூறினாரேயன்றித் திவாகரம், பிங்கலம், சூடாமணி நிகண்டு முதலாக விதந்து கூறினாரல்லர். ஆகவே ஆசிரியர் தம் காலத்திற்கு முற்பட்டு எழுந்த திவாகரம் முதலிய அனைத்து நிகண்டுகளையும் ஆராய்ந்து தமது பெருநூலை ஆக்கி-யுள்ளார் என்று கொள்ளலாம்.

நாநார்த்த தீபிகை ஆசிரியர் கவிராயர் முத்துசுவாமிப்பிள்ளை. இவர் திருநெல்வேலிச்சீமை பாவூரில் சைவ வேளாளர் குடும்பத்தில் பிறந்தவர். இவர்தம் முன்னோர் பழனிக்கடுத்த உடுமலைப்பேட்டையிலிருந்து இங்கு வந்து குடியேறினர். பழனியைப் போலவே இந்தப் பாவூருக்குச் சிறிது தூரத்தில் முருகன் கோயிலையுடைய சிறுமலை ஒன்று உள்ளது. கவிஞர் தம் சிறப்புப் பாயிரத்தில்,

'கந்தன் பழனிப் பதிக்குமரன்
 கருணைபெறு செண்பகக் கவிஞன்
மைந்தன் எழுதாயுதப் பெருமாள்
 எனும்நா வலர்கோன் வரமதால்
வந்த அடியேன் அவரிருதாள்
 வணங்கிப் புகல்வன் வடநூற்சொற்
செந்தமி ழினும் பொருள் தொகுத்துச்
 செயுநா நார்த்த தீபிகையே' (த சி. 7)

எனும் பாடலில் தம தந்தையும் பாட்டனாரும் இன்னின்னார் என்று குறித்துள்ளார். எழுதாயுதப் பெருமாள் என்பது இவர்தம் தந்தையார் பெயர். இவர் பாட்டனார் முதலியோர் யாவருமே கவியியற்றும் வன்மை படைத்தவராதலின் கவிராயர் என்று சிறப்பிக்கப் பெற்றனர்.

இக்கவிராயர் குடும்பத்தைப் பற்றிய செவிவழிச் செய்தி ஒன்று உண்டு. இவ்வாசிரியரின் முன்னோரெல்லாம் முருகப் பெருமானை வழிபட்டு வந்தவர்களாம். இக் குடும்பத்தில் தந்தை ஒருவருக்கு ஒரு பிள்ளையே பிறப்பது வழக்கமாயிருந்தது. அந்தப் பிள்ளையும் சிறு வயதிலேயே பழனிப்பதிக் குமரன் சந்நிதியிற் கொண்டுபோனவுடனே கவியியற்றும் வன்மை வாய்ந்து பாடத் தொடங்கிவிடுமாம். இதனால் இக்குடும்பத்தினர் பரம்பரையாகக் கவிராயர் என்றே வழங்கப்பட்டனர். ஆசிரியரின் தந்தையார் எழுதாயுதப் பெருமாள் பிள்ளை ஒருபிள்ளையோடு அமையாது தமக்குப் பிள்ளைகள் பல வேண்டுமென்று வரம் கிடந்து அங்ஙனமே பல பிள்ளைகளைப் பெற்றனராம். கவிராயர் என்ற பெயர் இந்நூலாசிரியருக்குப்பின் யாருக்கும் வழங்கியதாகத் தெரியவரவில்லை. இவர் இந்நூலைப் பதிப்பித்த சு. அனவரதவிநாயகம் பிள்ளையவர்களுடைய பாட்டனாரின் தமையனாராவர். பேராசிரியர் அனவரதவினாயகம் பிள்ளை சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராய் விளங்கிய பெரியாராவார்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பல ஊர்களில் கவிராயர் முத்துசுவாமிப் பிள்ளையின் சந்ததியார் இருந்து வருகின்றனர். இவ்வாசிரியர் இளமைக் காலத்தில் பாலூரில் வாழ்ந்திருந்தார். பின் திருநெல்வேலிக்கு வந்து வாழலானார் இவர் திருநெல்வேலியில் பிஷப் ஸார்ஜன்ற் உள்ளிட்ட ஐரோப்பியர் பலருக்கும் அரசு அலுவலர்களுக்கும் தமிழ் கற்பித்தார். திருவாடுதுறை மகாசன்னிதானமாய் விளங்கிய மேலகரம் அருள்திரு சுப்பிரமணிய தேசிகமூர்த்திகளுக்கு இளமையில் இவர் பாடம் சொன்னவர். தமிழ் மட்டுமன்று; வடமொழியிலும் இவ்வாசிரியர் மிகுந்த புலமை பெற்றிருந்தார். தெலுங்கு உருது முதலிய வேறு மொழிகளிலும் இவர் தேர்ச்சி பெற்றிருந்தனராம். 'இவர் செய்தனவாகச் சொல்லும் தமிழ் ஸம்ஸ்கிருத தெலுங்கு அகராதிகள் எல்லாம் செல்வாய்ப் பட்டொழிந்தன போலும்' என்கிறார் பதிப்பாசிரியர். இந்நூலுக்குச் சிறப்புப்பாயிரம் பாடியவர் ஆசிரியரின் மருமகனும் மகளை மணந்தவருமான தமிழறிஞர் சுவாமிநாதபிள்ளையாவர் இவருடைய புதல்வர் சோமசுந்தரம்பிள்ளை கையால் எழுதிவைத்திருந்த காகிதப் பிரதியே இந்நூல் அச்சிடுவதற்கு ஆதாரமாய்க் கிட்டியது நூலாசிரியர் கைப்பட எழுதிய ஓலைச் சுவடியோ காகிதப் பிரதியோ அகப்படவில்லை

இந்நார்த்ததீபிகை என்னும் நிகண்டுப்பெருநூலை சு. அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராய் விளங்கிய போது அப்பல்கலைக்கழக வெளியீடாக 1936 ல் அருமையாகப் பதிப்பித்துள்ளார். இந்நூலுக்குப் பதிப்பாசிரியர் பதவுரை எழுதியுள்ளார். அதுமட்டுமன்றிச் சொற்பொருள்களுக்கு ஆதாரமான குறிப்புகளை வடமொழி தமிழ் நிகண்டுகளிலிருந்து எடுத்துத் தந்துள்ளார். இதுகுறித்துப் பதிப்பாசிரியர் செய்த பெருமுயற்சியினை அவருடைய உரையிலேயே காண்போம்.

> "இதற்கு எளிதாக ஓர் உரை இயற்றி இதனைப் பதிப்பிக்கலாம் என்னும் நோக்கத்தோடு பதிப்பாசிரியர் இதனை ஆராய்ந்து பதவுரையும இயற்றியபின் சில ஐயங்களை ஒழித்துக்கொள்ளும் பொருட்டுத் தமிழ்ப் பலநிகண்டுகளையும் சில ஸம்ஸ்கிருத கோசங்களையும் ஆராயவேண்டியிருந்தது. 'மேற்கோள் நூல்கள்' என்னும் தலைப்பின் கீழ்ப பின் காணும் தமிழ்நூல்கள், வடநூல்கள் அனைத்தும் ஆராய்ந்த

பின்னரே இந்நிகண்டின் செய்யுட்பொருள்கள் நன்கு விளங்கின. அங்ஙனம் ஆராய்ந்தும பொருளுக்காதாரம் காணப் படாத சொற்கள் உண்டு உரையில் அவ்விடங்களில் பொருள் எண்கள் ஆதாரமின்றி வெறுமையாக விடப்பட்டன. சொற்பொருள்களுக்குத் தமிழ் நூல்களிலிருந்தும் வடநூல்களிலிருந்தும் ஆதாரங் காட்டுதலால் அவ்வாதாரங்களைக் கொண்டே ஆசிரியர் நூலியற்றினாரென்பது பதிப்பாசிரியர் கருத்தன்று. பொருள்களின்கண் ஐயந்தீர்த்துக் கொள்வதற்காக ஆராயப்பட்ட நூல்களில பொருள்கள் ஆங்காங்கே கண்ட விடத்து அங்ஙனமே காட்டியதாம்.''

பதிப்பாசிரியர் தரும் இக்குறிப்புகளிலிருந்து இந்நிகண்டு நூலைப் பதிப்பித்தற்கு அவர்எடுத்துக்கொண்ட பேருழைப்பு நமக்குத் தெரிய-வரும் பதிப்பாசிரியர் தாம் எழுதிய பதவுரையில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒப்பான பொருளுடைய நிகண்டுப் பகுதிகளையும் எடுத்துக்காட்டி நூலைப் பதிப்பித்துள்ள பாங்கு மிகவும் போற்றத்தக்கது நிகண்டு நூல்களை எவ்வகையில் பதிப்பித்தால் தமிழறிஞர்களுக்கும் ஆய்-வாளருக்கும் உறுதுணையாயிருக்கும் என்பதற்கு முன்மாதிரி வழிகாட்டியாய் விளங்குவது இந் நாநார்த்ததீபிகையின் பதிப்பு. இந்நிகண்டில் பொருள் விளக்கப்பெற்ற பலபொருளொரு சொற்களுக்கு அகராதியும் நூலிறுதியில் பதிப்பாசிரியர் தொகுத்துத் தந்திருப்பது எல்லாவற்றிலும் மிகுந்த சிறப்பாகும். இந்த அகராதியின் துணையால் நூலில் விளக்கப்பெற்ற சொற்களையும் அவற்றிற்குரிய பொருள்களையும் எளிதில் கண்டு கொள்ளலாம்.

14. கந்தசுவாமியம்

இந்நிகண்டின் ஆசிரியர் கீழ்வேளூரைச் சார்ந்த சுப்பிரமணிய தீட்சிதர் ஆவர் இவருடைய நூல் நூற்பாயாப்பில் அமைந்தது; ஒரு சொல்பல்பொருள் பற்றியது. முந்திய நிகண்டுகளை இவர் ஆராய்ந்து இப்புது நூலை ஆக்கியுள்ளார். இந்நூலினை 24 கட்டளைகளாக ஆசிரியர் பாகுபடுத்தியுள்ளார் இந்நூலாசிரியர் 1844 ஆம் ஆண்டு முதலிரண்டு கட்டளைகளையும் அச்சிட்டு வெளியிட்டார் முதற் கட்டளையில் 1318 சொற்களும் இரண்டாங் கட்டளையில் 1425 சொற்களும் இடம் பெற்றிருந்தன இச்செய்தி பேராசிரியர் எஸ் வையா

புரிப்பிள்ளையவர்கள் எழுதிய தமிழ்லெக்ஸிகன் முகவுரையிலிருந்து தெரியவருகிறது.

15 தொகைப் பெயர் விளக்கம்

சென்ற நூற்றாண்டில் பெரும்புகழுடன் விளங்கிய களத்தூர் வேத கிரிமுதலியாரால் இயற்றப்பெற்றது. இது பல்பொருட்கூட்டத்தொரு பெயர்த் தொகுதியாகிய தொகைப் பெயர்பற்றி விளக்குவது. 1849-ல் ஆசிரியர் இந்நூலை வெளியிட்டுள்ளார்

16 இலக்கத் திறவுகோல்

இதுவும் தொகைப்பெயர் விளக்கநூலே. ஒருமை இருமை முதலிய எண்தொகைகளை விளக்கியமைந்த ஒரு சிறுநூல் ஆகும் தொகைப் பெயர்கள் அகராதியடைவில் முறைப்படுத்தி இதில் தரப்பட்டுள்ளன. இந்நூல் பற்றிய குறிப்பு தமிழ் லெக்ஸிகன் முகவுரையில் காணப் படுகிறது.

17. சிந்தாமணி நிகண்டு

யாழ்ப்பாணத்து வைத்தியலிங்கப்பிள்ளை என்பவர் சிந்தாமணி நிகண்டு எனப் பெயரிய நூலொன்று இயற்றி 1874-ல் அச்சிட்டு வெளிபபடுத்தினார். இது பதினொராந் தொகுதி முறையில் அமைந்த சிறியதொரு நூல் ஆகும். இதில் 400 விருத்தங்கள் உள; ஆசிரியரே இதற்கு உரையும் வகுத்திருக்கின்றார்.

> 'நேர்செறி இளைஞ ரோர்சொற்கொருபொரு
> ளேரா யோரப்
> பார்செறி நிகண்டு சிந்தாமணியெனப்
> பகர்வ னொன்றே'

என்று ஆசிரியர் கூறுவதால் இஃது ஒருசொல் ஒருபொருள் உரைக் கும் நூல என்று அறியலாம். இது நாநார்த்ததீபிகையைப் போல வட மொழிச் சொற்களை மிகுதியாய்ச் சேர்த்துள்ளது.

18. அபிதானத் தனிச்செய்யுள் நிகண்டு

பல்வேறு வகையான பாக்களில் அமைந்துள்ளது இந்நிகண்டு. இதனை இயற்றியவர் கோபாலசாமி நாயக்கர்; கீழ்வேளூர் என்னும்

ஊரைச் சார்ந்தவர். இவருடைய தந்தையார் பெயர் வீராசாமிநாயகர் என்பது. ஆசிரியர் வாழ்ந்த காலத்தில் இந்நிகண்டின் முதல்தொகுதி மட்டுமே 1878-ல் வெளியிடப்பெற்றது எஞ்சிய பகுதிகளின் நிலைமை அறியக் கூடவில்லை. இச்செய்தியை பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் தமிழ் பேரகராதியாகிய தமிழ் லெக்ஸிகனின் முகவுரையில தெரிவித்துள்ளார்கள்.

19 தமிழுரிச் சொற்பனுவல்

தமிழ் நிகண்டுகளின் வரலாற்றில் தமிழ்ச் சொற்களை மட்டுமே தொகுத்துத் தருவது என்னும் குறிக்கோளுடன் ஆக்கப்பெற்றது தமிழுரிச் சொற்பனுவல். எனவேதான் நிகண்டு என்னும் பெயரை நீக்கி முந்திய தமிழ் வழக்கினைத் தமிழுலகிற்கு நினைவூட்டுவார் போலத் 'தமிழுரிச் சொற்பனுவல்' என்னும் பழர்பெயரை ஆசிரியர் சூட்டியுள்ளார். மேலும். பெயருக்கு ஏற்றாற்போல வடமொழிச் சார்பாய் வந்த வடிவங்களைத் தவிர்த்துத் தமிழ்ச்சொல் வடிவங்களைத் தம்முடைய நூலுள் தந்துள்ளார். ஆகவே தமிழ் என்னும் அடைமொழி பிறமொழிச் சார்பற்ற தமிழ்ச்சொற்களை உள்ளடக்கியது. இந்நூல் என்பதனைத் தெளிவுபடுத்தி நிற்கின்றது. இதனை,

'பயன்மிகு முரிச்சொல் பகர்நூல் பலவு
நயமுறத் தேர்ந்து நல்வகை நாடிப்
பிறமொழிச் சொற்களை நெறிப்பட நீக்கித்
தமிழுரிச் சொற்களின் றகுபொருள் விளங்கப்
பைந்தமி ழுரிச்சொற் பனுவல் தந்தனன்
முதிர்புல மொளிர்மான் முருகநா வலனே'

எனவரும் ஆக்கியோனின் பாயிரப் பாடல்வழி நன்கு உணரலாகும்.

தமிழ் சொற்களின் இயல்பையும் பாயிரப் பகுதியில் ஆசிரியர் வரையறுத்துள்ளார். தமிழ் நெறிப்படி பொருள் தரும் சொற்களும் வழிவழியாகத் தமிழ் நாட்டில் அடிப்பட்டு வழங்கிவரும் சொற்களும் தமிழ் எனக் கொள்ளுதற்குரியன என்கிறார் இவற்றுள் சில தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவாகக் காணப்படலாம் வடிவ ஒப்புமையால் வடமொழியோடு ஒத்துச் சில காணப்படினும் அவற்றின் தமிழ்மொழி வழக்கு வேறாகவும் உள்ளன. நாமம், நயம் என்னும் சொற்களை எடுத்துக்காட்டி இவ்வுண்மையை ஆசிரியர் நமக்கு விளக்கிக் காட்டு

கிறார். வடநூல்களில் கண்ட ஏற்புடைய சில சொற்களை மொழி பெயர்த்தும் ஆசிரியர் அமைத்துள்ளார். தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்ற சொற்கள் செந்தமிழ் மொழிகளே என்பதில் ஐயப்பாடில்லை. சொல் வடிவம ஒன்றாயினும் இடம், பண்பு செயல் முதலியன ஏதுவாகச் சில சொற்கள் பல திறத்தனவாம். ஆகவே, அச்சொல் இடம் பெறும தொகுதிக்கு ஏற்பப் பொருள் கொள்ளுதலும் வேண்டும்.

செந்தமிழ் நயம் உணர்வார் மகிழும் வண்ணம் ஆக்கப்பெற்றது இந்தத் தமிழுரிச்சொற்பனுவல். இதில் உலகியல் வழக்குச் சொற்கள் பலவாதல் கருதி விடுக்கப் பெற்றன. செய்யுள் வழக்கான சொற்களே இந்நூலுள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இந்த உண்மையையும்,

> 'உலகியல் மொழிக ளளவில வாகலின்
> செய்யுட் குரிய செப்புமிந் நூலே'

எனப்பாயிரப் பகுதியில் வரும் இறுதி நூற்பாவில் எடுத்தியம்பியுள்ளார். இவ்வாறாக ஆசிரியர் தாம் ஆக்கியுள்ள இப்புது நூலின் இயல்புகளை விளக்கியிருப்பது இந்நூலின் தனிச் சிறப்புகளை உணர வாயிலாகும். தக்க அடிப்படை நியமங்களுடன ஆக்கப்பெற்ற இந்தத் தமிழுரிச் சொற்பனுவல் செந்தமிழ் அழகில் திளைப்பவருக்கு இன்பம் பயப்பதாயுள்ளது.

இந்தத் தமிழுரிச் சொற்பனுவல் பிங்கலந்தையிற்போலப் பத்துத் தொகுதிகள் கொண்டுள்ளது. ஆயினும் பொது அமைப்பு மற்றும் தொகுதிப் பெயர்கள் திவாகரத்தை ஒத்துள்ளன. தொகைப் பெயர் விளக்கமாகத் திவாகரம் முதலியவற்றில் காணப்படும் இறுதித் தொகுதியில் இடம்பெற்ற பொருள்கள் பிங்கலந்தையிற் போல ஏற்றஇடங்களில் தொடர்புற விளக்கப்பட்டுள்ளன. பல்பொருட்பெயர், செயற்கை வடிவப் பெயர் என இரு தொகுதிகளில் அமைந்தவை இதில் பல்பொருட்பெயர் என ஒன்றாக அடக்கப்பட்டுள்ளன. ஒருசொல் பலபொருள் விளக்கம் அகராதி நிகண்டினைப்போல அகரவரிசையில் தந்திருப்பது பயன் படுத்துவதற்கு மிக எளிதாகும்.

காலத்தால் முந்திய திவாகரம் பிங்கலந்தைபோல இந்நூலும் நூற்பாவினால் ஆக்கப் பெற்றுள்ளது. நூற்பாவின் தொகையளவு முந்திய நூலகளினும் பார்க்க இருமடங்காகியுள்ளது. இது காலவகையினால் சொற்கள் பல்கிப் பெருகியமையால் நேர்ந்த விளைவு. இந்த

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்மொழி வளர்ந்துள்ள நிலையில் ஆக்கப்பெற்ற இப்பெருநூல் உரிச்சொற் பனுவல்களுள் சிறப்பிடத்தைப் பெற்றுத் திகழ்வதாகும்.

இந்த அருமையான தமிழ் நிகண்டினைத் தமிழுலகிற்கு வழங்கியவர் கவிராச பண்டித இராம சுப்பிரமணிய நாவலர் ஆவார். தமிழின் மேலுள்ள ஆராக் காதலால் தம் பெயரையே 'மான்முருகனார்' என மாற்றியுள்ளார் இப் பெரியார் இவர் கன்னியாகுமரி மாவட்டம் இராசாக்கமங்கலம் என்னும் ஊரில் பிறந்தவர். தம் ஓய்வு வாழ்வை நாகர்கோவிலில் இந்துக் கல்லூரிக்குத் தென்பால் தாம் கட்டிய நாவலரகத்தில் கழித்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பண்டிதர் பட்டம் பெற்றவர் இவர். தமிழாசிரியராய் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்த போதிலும் அவ்வப்போது கவிதையிலும் உரைநடையிலும் இவர் ஆக்கியளித்த நூல்கள் பலவாகும். மதுரைத் தமிழ்ச் சங்கத்து ஓர் உறுப்பினராயிருந்து அங்கு நடைபெறும் தமிழ்த் தேர்வுகளை நடத்துவதிலும் உதவிவந்தார் 'தமிழ் விளக்கு' எனப் பெயரிய பத்திரிகையையும் சிலகாலம் இவர் நடத்தி வந்துள்ளார். தமிழ் மருத்துவத்துறையும் கைவந்த வல்லாளராய் இவர் திகழ்ந்தார். இந்த வகையில் இவர் இயற்றி வெளியிட்டுள்ள உடற்கூற்றுப் படலம் நோயாராய்ச்சிப்படலம், மருந்துப்படலம், நோய்நீக்கற்படலம் என்பவை முக்கியமாகக் குறிப்பிடத்தக்கன 'செந்தமிழ் நிலையம்' என்னும் புத்தக வெளியீட்டுத்துறைவழி தம் நூல்கள் பலவற்றையும் வெளியிட்டுள்ளார் இறுதி மூச்சுவரை தமிழுக்காகத் தம்மாலியன்ற பணிகளைச் செய்துவந்த பெரியார் தாம் இறுதியாக அச்சிட்டுவந்த தமிழுரிச் சொற்பனுவல் முற்றுப்பெறுவதன்முன் சென்ற 1981 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மறைந்துவிட்டது தமிழுலகிற்குப் பேரிழப்பாகும். தம் தந்தையார் தொடங்கிய பணிகளை இவர் மகனார் ஆர். எஸ் இராசமோகன் என்பார் தொடர்ந்து செய்துவருவது போற்றுதற்குரியது. தமிழுரிச் சொற்பனுவல் முழுவுருப்பெற்று இவ்வாண்டில் வெளிவரும் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்

20 அச்சில் வாராத நிகண்டுகள்

நிகண்டுச் சுவடிகள் பலவற்றையும் தேடித் திரட்டி அவற்றுள் நான்கு நூல்களையும வெளியிட்ட பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் தம்மிடம் சுவடியாயிருக்கும் நிகண்டுளில் இரண்டினைப் பற்றிய விவரங்களை அரும்பொருள் விளக்க நிகண்டு முன்னுரை

யில் எடுத்துரைத்துள்ளார்கள் அவற்றுள் ஒன்று கைலாச நிகண்டு சூளாமணி; மற்றொன்று பல்பொருட் சூடாமணி.

1. கைலாச நிகண்டு சூளாமணி

இந்நூல பிங்கலந்தையின் அமைப்புமுறை தழுவியது. "இது பிங்கலந்தையின் வழிப்பட்டதென்பது விண்ணவர்வகை, விண்ணின் வகை, மண்ணின்வகை எனத் தொடங்கிச் சென்று ஊர்வன இறுதியாக வரும் 49 பகுப்புக்களாலும், இறுதியில் ஒருசொற் பல்பொருட் பெயர்-களை வைத்திருக்கும் முறைமையாலும் அறியப்படும்' என்கிறார் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை. கைலாச என்ற அடைமொழியால இதனை இயற்றியவர் சைவர் என்றும் கைலாசம் என்னும் பெயரினை யுடையார் என்றும் ஊகிக்கலாம். இந்நிகண்டு இற்றைக்கு ஏறத்தாழ 350 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டிருக்கலாம் எனக் கருதுவர். 'இதன் பிரதி ஒன்று தொன்னூற் கருவூலமென்று சொல்லத்தகும் திருமேனி இரத்தின கவிராயர் பரம்பரையினர் வீட்டிலிருந்து கிடைத்தது' என்று பிரதிபெற்ற விவரத்தையும் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

2 பல்பொருட் சூடாமணி

இந்நிகண்டினை ஆக்கியவர் ஈசுரபாரதியார். இவர் மடவை என்னும் ஊரைச் சார்ந்தவர். மடவை என்பது ஸ்ரீவில்லிபுத்தூரை யடுத்துள்ள மடவார் வளாகம் என்ற ஊராக இருக்கலாம். இவருடைய தந்தையார் பெயர் சிதம்பர பாரதி. இவர் இந்நூல் செய்த காலம் கி. பி. 1700. இவ்வரலாறுகள் நமக்கு நூலின் பாயிரச் செய்யுள்களால் தெரியவருகின்றன அமரகோசம் என்னும் வடநூலைப் பின்பற்றி இவ்வாசிரியர் தம்நூலை மூன்று காண்டங்களாகப் பகுத்துள்ளார். முதற்காண்டம் ஒருசொல்லொருபெயர்த் தொகுதி; இரண்டாங் காண்டம் ஒருசொற் பல்பொருட்டொகுதி; மூன்றாம் காண்டம் பல்-பொருட்கூட்டத்தொரு பெயர்த்தொகுதி.

'கொல்ல மெண்ணூற் றெழுபத்தாறெனக் கணிதப் பாவாணர்
குறித்த வாண்டின்
மல்குபுகழ் விக்கிரம வருடத்தா வணிமூல
வளஞ்சேர் நாளில்

நெல்லைநகர் வடிவுதந்த வேய்முத்தைப் பணிந்துலகி
னெடுநா ணிற்கப்
பல்பொருட்சூ டாமணியை யீசுரபா ரதிதமிழாற்
பாடி னானே'

என்னும் பாயிரச் செய்யுள் நூலின் காலத்தை நாம் திட்டவட்டமாய் அறியச் சான்றாக விளங்குகிறது

'இந்தப் பாடலின் ஈற்றடி,

'பல்கலைதேர் வடமலைநன் நிகண்டினையீ
சுரகவிஞன் பகர்ந்திட் டானே"

என்னும் பாடபேதத்துடன் 'வடமலை நிகண்டு' என்னும் சுவடியில் காணப்படுகிறது. டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகச் சுவடி-விளக்கத்தில் தரப்பட்டுள்ள பாயிரப் பகுதி பின்வருமாறு :

'பார்புகழ் திருநெல் வேலியம் பதிவாழ்
ஐங்கரத் தொருகோட் டானையை வடிவேற்
சிங்கந் தன்னைச் சிறப்புடன் ஈன்ற
பிடிவடி வுடைய பெண்கொடி பாகத்து
அடிகள் செம்பொன் அடிகளை வணங்கி
ஒருபெய ரொருபொருள் உரைக்கும் காண்டமும்
ஒருபொருள் பல்பெயர் ஓதுங் காண்டமும்
பலபெயர்க் கூட்டத் தொருபெயர்க் காண்டமும்
சொற்பொருட் காண்டத் தொகைமூன் றாக்கி
ஈட்டுபுக ழிரையூர் வடமலை நிகண்டென
நாட்டினன் மடசை நன்னகர் வாழும்
சிதம்பர பாரதி சேய்தின முமையாள்
பதம்பணி யீசுர பாரதி தானே.'

இந்தப் பாயிரப்பாடலிற் காணும் செய்திகளுக்கும் பல்பொருட் சூடாமணி பற்றி முதற்கண் குறித்த செய்திகளுக்கும் வேறுபாடு சிறிதும் இல்லை. எனவே, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையத்தில் உள்ள வடமலை நிகண்டு என்னும் சுவடி பல்பொருட்சூளாமணி நிகண்டே எனத்துணிய இடமுண்டு. இரண்டு பிரதிகளையும் ஒருங்கு-

வைத்து ஒப்பு நோக்கும்போதுதான் இக்கருத்தினை உறுதியாக நிலை நாட்ட இயலும்.

3. அகராதிமோனைக் ககராதியெதுகை

'அகராதிமோனைக் ககராதியெதுகை' என்னும் பெயரைப் பார்க்கும்போதே இது ஒருசொற்பலபொருள் உணர்த்தும் நூல் எனக் கருதலாம் இந்தச் சுவடியும பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்-களின் சுவடிகளில் ஒன்று. இப்பொழுது இச்சுவடி கல்கத்தா தேசிய நூலகத்தில் உள்ளது.

4. நவமணிக்காரிகை நிகண்டு

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெரும் புகழோடு விளங்கிய பெரும் புலவர் சோழவந்தான் அரசஞ் சண்முகம்பிள்ளையவர்களால் ஆக்கப்பெற்றது இந்நிகண்டு. பெயருக்கு ஏற்ப இது கட்டளைக் கலித்துறைச் செய்யுளால அமைந்தது என்பதும் ஒன்பது தொகுதியாக ஆசிரியர் இந்நூலை ஆக்கத்திட்டமிட்டிருந்தார் என்பதும் தெரிய-வருகின்றன. இலக்கிய இலக்கணக்கடல்களில் ஊறித் திளைத்துத் தம் கவிதைகளினாலும் ஆய்வுரைகளினாலும் தமிழ் வரலாற்றில் ஓர் இடம் பெற்றவர் இவர் இவருடைய நிகண்டுநூல் முற்றுப்பெற்றதா என்று சொல்லக்கூடவில்லை இவருடைய பேரன்முறையினரான திருவாளர் இராக்கப்பபிள்ளை சோழவந்தானில் இப்பொழுது முதியோராய் வாழ்ந்து வருகிறார். இவருக்கு அரசஞ்சண்முகனார் நூல்கள் பலவும் மனப்பாடம். நவமணிக் காரிகை நிகண்டின் தெய்வப்பெயர்த் தொகுதியை அப்படியே ஒப்பிக்கிறார் இப்பெரியார். 122 செய்யுட்-களைக் கொண்ட தெய்வப்பெயர் பற்றிய முதல் தொகுதி இவர் வாய்-மொழியால் கேட்டுப் பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது புலவர் பெருமான் அரசஞ்சண்முகனாரின் நூல்களை மீண்டும் வெளியிடும் பணியினைச் செய்துவரும் சோழவந்தான் கிண்ணிமடத்து அறங் காவலர்கள் இந்நிகண்டுப் பகுதியையும் வெளியிடுவர் என்று எதிர் பார்க்கலாம்.

5. விரிவு நிகண்டு

இந்நிகண்டின் பெயரிலிருந்தே இது ஒரு விரிவான பெரிய நூல் என்று எண்ணத் தோன்றும். இது ஒருசொற் பல்பொருள் விளக்கும்

நூலே. இது குறித்துப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் எழுதியுள்ள செய்திகள் பின்வருமாறு :

" இன்றைக்கு 12 வருடங்கட்கு முன்னர் * "வீரராகவபுரத்தில் பிரபல வக்கீலாயிருந்த பூமிநாத முதலியாரவர்களின் தந்தையாரும் வீரவநல்லூர் வாசியுமாகிய நா. அருணாசலநாவலரவர்கள் ' விரிவு நிகண்டு ' எனப் பெயரிய நூலொன்று விருத்தப்பாவால் இயற்றி உரையும் வகுத்திருக்கின்றார்கள். குறித்த நாவலரவர்கள் காலஞ்சென்று இப்பொழுது சுமார் 25 வருடங்கள் இருக்கலாம். * *

இந்நூற்பிரதி திருநெல்வேலி வக்கீல் திருவாளர் வி. எஸ். சங்கர சுப்பிரமணிய முதலியாரவர்களால் அன்புடன் உதவப்பட்டது. விரிவு நிகண்டு சூடாமணி நிகண்டினை ஆதாரமாகக்கொண்டு அதன் முறையையே பின்பற்றிப் பல வழக்குச் சொற்களும் பொருள்களும் கூட்டப் பெற்றுத் தன் பெயருக்கேற்ப மிகவிரிவாக அமைந்துள்ளது. இது பின்வரும் காப்புச் செய்யுளால் அறியலாம்.

'பொன் பொலி வீரை வேணிப் பூமிநாத தன்றன் றாசன்
முன்புறு நிகண்டோ டேனை முதுமொழிப் பொருள னேகம்
இன்புறு மெதுகையாக வியற்றுமிந் நிகண்டை மேலோர்
அன்பமை கருத்துட் கொள்ள வருள்செ யைங்கரமா தேவே.'

நூலின் இறுதிப்பகுதி பலவாறாகச் சிதைந்து காணப்படுவதனாலே செய்யுட்டொகை நிச்சயிக்கக்கூடவில்லை. தெளிவாக அறிவது 1036 செய்யுட்கள். பல செய்யுட்கள் எண்ணிடப்பெறாதுள்ளன ஆகவே 1100 செய்யுட்கு மேற்பட இந்நூலில் உள்ளனவென்று கொள்ளலாம். வழக்குச் சொற்கள் புக்கு இது மிக விரிந்த நூலாதலைக் கீழ் வரும் செய்யுட்களாலறிக.

'அகமிடம் பாம்பு தானி யம்புவி பள்ள முள்ளோ
டகலியப் பொதுவே தண்ட மாகாய மாழ மான்மா
பகலனே முருபு துக்கம் பாவமுள் ளிடமோர் தாரு
தகுதியில் குணம்வீ டோடு சாருபத் திரவம் நெஞ்சாம்.

* 1931-ல் பேராசிரியர் எழுதியது எனவே இப்பொழுது 73 ஆண்டுகள் என்னல் வேண்டும்.

** 76 வருடங்களுக்கு முன் 1904 அல்லது 1905 ஆம் ஆண்டாக இருக்கலாம்

'கம்மலே யிரும லோர்வ கைக்கடுக் கன்கா தோலை
பம்மல் மாசோடு மங்கல் குரலடைப் பென்பர் பாரோர்
பம்பல்மந் திப்புழுடல் பொருத்திக்கட் டுகைமந் தாரம்
செம்முத லைம்பே ரென்பர் சீமாட்டி தலைவி செல்வி.'

திருநெல்வேலிப் பிரதேசத்திலுள்ள வழக்குச் சொற்கள் இதன் கண் மிகுதியாயுள்ளமை இந்நூலின் சிறப்புகளுள் ஒன்றாம்."

(அரும்பொருள் விளக்க நிகண்டு முன்னுரை பக். 20-21)

21 கலைத்துறை நிகண்டுகள்

முன்னாளில் புலவர்கள் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் மட்டுமின்றி வடமொழி முதலிய பிறமொழிகளையும் கற்று வந்தனர். உடல் நலம் பேணும் மருத்துவத்துறை, தினசரி வாழ்வுடன் ஒன்றிவரும் சோதிடத்துறை ஆகியவற்றிலும் பலர் வல்லவராயிருந்தனர். மருத்துவ துறையிலும் சோதிடத்துறையிலும் கூட சிற்சில நிகண்டு நூல்கள் உள.

அகத்தியர் இயற்றியதாகச் சொல்லப்படும் 'ஏமதத்துவம் என்னும் பஞ்ச காவிய நிகண்டு' மருத்துவ நிகண்டுகளுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. போகர் இயற்றிய மருத்துவ நிகண்டு நூல் ஒன்றும் உளதாகத் தெரிய வருகிறது. சோதிடம் பற்றிய நிகண்டு நூல்களுள் கால நிகண்டு, காரக நிகண்டு என்பவை குறிப்பிடத்தக்கவை. இவை நாள் கோள் முதலியவற்றின் வெவ்வேறு பெயர்களைத் தொகுத்துத் தருவதாகும். சாதக சிந்தாமணி என்னும் நூலுள்ளும் இவ்வகை நிகண்டுப் பகுதிகள் உள்ளன.

இணைப்பு

நிகண்டு நூல்களில் காணும் வரலாற்றுக் குறிப்புகள்

திவாகரர் ஒவ்வொரு தொகுதியையும் முடிக்கும்போது தம்மை ஆதரித்த சேந்தனின் புகழைப் பேசித் தம் நன்றியுணர்வைத் தெரிவிப்பத்தோடு நூலைப் பற்றிய சில குறிப்புகளையும் கூறி முடிக்கின்ற ஒரு முறையையும் தோற்றுவித்துள்ளார். இம்முறையைப் பாரதி

தீபம், சூடாமணி நிகண்டுகளின் ஆசிரியர்களும் வேறு சிலரும் பின் பற்றியுள்ளனர். கயாதரத்தில் 1, 2, 8, 9 தொகுதிகள் தவிர ஏனைய வற்றிற்கு முடிப்புத் தொகுப்புரைப் பாடல்கள் உள. ஒவ்வொரு தொகுதியும் முடிந்த நிலை சுட்டப்படுவதால் அடுத்துப் புதிய தொகுதி தொடக்கமாகிறது என்பது எளிதில் புரிந்துகொள்ள வாய்ப்பாகும். ஏட்டுப்பிரதிகளில் தொடர்ச்சியாக எழுதிச் செல்லுகின்ற முன்னாளில் பொருளைப் பாகுபடுத்திக்காட்ட இம்முறையை ஆசிரியன்மார் மேற் கொண்டுள்ளனர் என்பதும் தெரியவரும்

மேலும், நிகண்டுகளில் சிலவற்றிற்குப் பாயிரப்பகுதி காணப்படு கிறது. இப்பாயிரப்பகுதிகளில் நூல் வரலாறு, ஆசிரியர் வரலாறு பற்றிய குறிப்புகள் உள நிகண்டுகளின் வரலாறு தெரிவிக்கும் இப் பாயிரப்பகுதி, தொகுதி வரலாறு பற்றிய பாடல்களை ஒருங்கு தொகுத்துக் காணின் அவ்வந்நிகண்டுகளைப் பற்றிய வரலாறுகள் தெளிவாகத் தெரிய வாய்ப்பாகும். வரலாற்றுச் சிறப்புடைய இவற்றையெல்லாம் இனி இங்குக் காண்போம்

திவாகர வரலாறு

1. வடநூற்கு அரசன், தென்தமிழ்க் கவிஞன்,
கவியரங்கு ஏறும் உபயகவிப் புலவன்,
செறிகுணத்து அம்பர் கிழவோன், சேந்தன்
அறிவுகரி யாகத் தெரிசொல் திவாகரத்து
முதலாவது தெய்வப்பெயர்த் தொகுதி முற்றும்.

2. கற்ற நாவினன், கேட்ட செவியினன்,
முற்ற உணர்ந்த மூதறி வாளன்,
நாகரிக நாட்டத்தன் ஆரியன் அருவந்தை
தேரும் காட்சிச் சேந்தன் திவாகரத்து
இரண்டாவது மக்கட்பெயர்த் தொகுதி முற்றும்.

3. காதல் ஈகையில் போதிப் பெருந்தவன்
தெவ்அடு கால வைவேல் எழினி,
அவ்வை பாடிய அம்பர் கிழவன்,
தேன்தார்ச் சேந்தன் தெரிசொல் திவாகரத்து
மூன்றாவது விலங்கின் பெயர்த் தொகுதி முற்றும்.

4 நாடே பிறர் நாட்டிற்கு உவமை, யாதே
காலம் அறிந்து உதவும் காவிரிதானே
ஆடவர் திலகன், அம்பர் மன்னன்,
நீடுஇசைத் தலைவன் அருவந்தைச் சேந்தன்
ஆய்ந்த திவாகரத்து அரும்பொருள் விளக்கும்
நான்காவது மரப்பெயர்த் தொகுதி முற்றும்.

5. ஒருவற்கு ஒருவன் ஆகி உதவினும,
பரிசில் மாக்கள் பற்பலர் ஆயினும்,
தான்ஒரு வன்னே தரணி மானவன்.
செந்தமிழ்ச் சேந்தன் தெரிந்த திவாகரத்து
ஐந்தாவது இடப்பெயர்த் தொகுதி முற்றும்.

6 வருநல் கங்கை வடதிசைப பெருமையும்
தென்திசைச் சிறுமையும் நீக்கிய குறுமுனி
குண்டிகைப் பழம்புனல் காவிரிப் பெரும்பதி
அம்பர்க்கு அதிபதி சேந்தன் திவாகரத்து
ஆறாவது பல்பொருள் பெயர்த்தொகுதி முற்றும்.

7. முன்தவப் பயனோ, கற்றஅப் பயனோ,
சாபத்து இழுக்கிய தேவ சாதரில்,
தோற்ற முடையன்என அம்பர்த் தோன்றிய
இயற்கைச் சேந்தன் திவாகரத்து ஏழாவது
செயற்கை வடிவின் பெயர்த்தொகுதி முற்றும்.

8 மறக்குறும்பு ஓட்டி அறத்தின்வழி நின்று,
கவிகைத் தண்ணளி புவிபெற ஆணையின்
ஐம்புலன் ஆறாம் அம்பர்க் கோமான்
திண்பெரும் சேந்தன் திவாகரத்து எட்டாவது
பண்புபற்றிய பெயர்த்தொகுதி முற்றும்.

9. அண்ணல் சம்பு ஆதிக் காணியாட்டியை,
பெண்ணணங்கை, மூவுலகும் பெற்ற அம்மையை,
செந்தமிழ் மாலை அந்தாதி புனைந்த
நாவலன், அம்பர்க் காவலன், சேந்தன்
உயர்வுற்ற திவாகரத்து ஒன்பதாவது
செயல்பற்றிய பெயர்த்தொகுதி முற்றும்

10. அரக்கரைப் பொருத முரட்போர் வில்லும்
பாரதம் பொருத பேரிசைச் சிலையும்
பாடிய புராண பாடகன் உணர்வொடு
தாருகற் கடிந்த வீரியத் தனிவேல்
பாடிய புலவன் பதிஅம்பர்ச் சேந்தன்
பயில்வுற்ற திவாகரத்துப் பத்தாவது
ஒலிபற்றிய பெயர்த்தொகுதி முற்றும்

11. புலவி நீக்கிய கல்விச் செல்விக்கு
அமிழ்துசுவை ஈந்த அரும்பெறல் இன்பத்து
ஒருபெருஞ் செல்வன் அருவந்தைச் சேந்தன்
பகர்சொல் திவாகரத்துப் பதினோராவது
ஒருசொல் பல்பொருட் பெயர்த்தொகுதி முற்றும்

12. செம்பொற் குடையான் அம்பர்ச் சேந்தன்,
நன்ன ராளன், நலமிகு நாட்டத்தன்,
பன்னிய சிறப்பின் பன்னிரண் டாவது
பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி முற்றும்

நூலிடையில் வரும் குறிப்புகள் :-

13 நல்இசை அம்பர்ச் செல்வச் சேந்தனின்
வரைவுஇல் கல்வியில் படையில் கொடையில்
வெல்லுநர் அணிவாகை வெற்றிப் பூவே.
(837/ மரப்பெயர் - 210)

14. செல்லல் தீர்க்கும் பலபுகழ்ச் சேந்தனில்
வல்லுநர் நாவலர் வாய்ந்த இடமும்
மல்லும் சூதும் படையும் மற்றும்
கல்விபயில் களமும் கழகம் ஆகும்.
(969/ இடப்பெயர் - 125)

15. செங்கைநிதி யம்பர்ச் சேந்தன் செங்கையின்
சங்கின் வடிவினது சங்க நிதியே.
(1035/ பல்பொருட்பெயர் - 11)

16. தேமலர் அலங்கல் சேந்தன் செங்கையின்
தாமரை வடிவினது பற்ப நிதியே.
(1036 / பல்பொருட்பெயர் - 12)

17. கெழுதகை அம்பர் கிழவோன் சேந்தனின்
விழைவுறு தியாகத்து வீரத்து வீக்கிய
கழலே ஆடவர் கால்மிசை அணிவடம்
(1194 / செயற்கைவடிவப் பெயர் - 56)

18. பெருஞ்சேந்தன் அம்பர்ப் பெருமானைப் போல
தெரிந்து பிறர் அறிவின் சோர்வு புறம்மறைத்து
அறிந்தும் அறியார் போறல் அறிமடம்.
(1468 / பண்புபற்றிய பெயர் - 124)

19. திடமொழி அம்பர்ச் சேந்தனை ஏய்ந்த
கொடைமடம் வரையாது கொடுத்தல் ஆகும்.
(1628 / செயல்பற்றிய பெயர் - 71)

20 பொறையே சுமத்தலும் பொறுத்தலும் புவியும்.
(2116 / ஒருசொல் பல்பொருட்பெயர் - 215)

பிரதிபேதம் (சில பிரதிகளில்)

மலைசுமை பாரம் அம்பர்ச் சேந்தனொடு
உலவிய பொறுமை பார் ஐந்தும் பொறையே.

பிங்கலம்

சிறப்புப் பாயிரம்

இருங்கடல் உடுத்தஇம் மாநிலம் விளங்க
அரும்பொருள் தெரிந்த அகன் தமிழ் வரைப்பில்,
இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று
அனைத்தே செய்யுகட்கு அணிகலன்; ஆதலின்,
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமல் இசைக்கும் இயற்சொல;
ஒருபொருள் குறித்த வேறுசொல் ஆகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல ஆகியும்
இருபாற்று என்ப திரிசொற் கிளவி;
செந்தமிழ் சேர்ந்த திசைதொறும் திசைதொறும

தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி;
வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்தான் ஆகும்;
சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்;
அந்நாற் சொற்றிறம் அரிலதப முழுதும்
செங்கதிர் வரத்தால் திவாகரன் பயந்த
பிங்கல முனிவன் எனத்தன் பெயர்நிறீஇ,
உரிச்சொல் கிளவி விரிக்குங் காலை
விருப்புடன் நிலைஇய வீறுசால் சிறப்பின்
வான் வகையும், வானவர் வகையும்,
வானினும் மண்ணினும் வழங்கல் வழாஅ
ஈனமில் ஐயர் இயல்புளி வகையும்,
அவனி வகையும், ஆடவர் வகையும்,
அவர்திறத்து அமைந்த அனுபோக வகையும்,
அவையவத் தடைத்த ஆனா இயல்பின்
பண்பிற் செயலிற் பகுதி வகையும்,
மாப்பெயர் வகையும், மரப்பெயர் வகையும்
ஒருசொற் பல்பொருள் ஓங்கிய வகையும் என்று
இருள்அற ஈரைந்து ஆக்கி
மருள் அற வகுத்தனன் மதியினின் விரைந்தே.*

கயாதரம்

பாயிரம்

1. ஆரணம் நான்கும் பரவமும் மூர்த்திகள் ஆகிநின்ற
காரணன் பாகம் கலந்துலகு ஈன்றருள் கன்னிபெற்ற
பூரணன் பாரதப் போர்வட மேருப் பொருப்பில்வைத்த
காரணன் வாரணப் போரில் வென்றோன்என் வழித்
[துணையே

2. பேதையர் பித்தர் அறியாத பாலர்சொல பேதம்கொள்ளார்
ஓதினும் குற்றம தெரியார் பெரியவர் ஓங்குஇடப
கேதனன் பற்று மறவாத தேவைக் கயாதரன் தொல்
வேதியன் சொற்ற உரிச்சொற் பனுவலும் மேம்படுமே.

---

* இச் சிறப்புப் பாயிரம் ஆசிரியர் பிங்கலரின் வாக்கன்று; அவர் காலத்தோ, அடுத்த பிற்காலத்தோ வேறொருவரால் பாடப்பெற்றதாகலாம்.

3. வளர்ந்த முதனூல் வழிநூல் வழிச்சென்று மற்றவையும்
அளந்து சிறியோர் அறியும் படிபெரி யோர்அருளால்
தளர்ந்தன நீக்கி உ ரித்தாய சொல்லைத் தமிழ்ப்படுத்தான்
கிளர்ந்த பெரும்புகழ்ச் சோமீசன் தேவைக் கயாதரனே.

4. வடக்குங் குமக்கொங்கை மங்கைதன் பங்கன் மலரடிக்கீழ்க்
கிடக்கும் தனிநெஞ் சுடையோன் உரிச்சொற் கிளர்பனுவல்
குடக்கும் குணக்கும் வடக்கும்தென் பாலும் குவலயத்து
நடக்கும்படியாக் கயாதர மென்றுபேர் நாட்டினனே.

கயாதரவரலாறு

1. வாரிய கேள்வி மறையவர் வேந்தன் வடகலைதேர்
ஆரிய நாடன் தமிழ்நாடன் தேவை அதிபன்என்னும்
ஓர்இயல் பான குணத்தான் கயாதரத் துள்ளமைத்தான்
பேர்இயல் பாலொரு மூன்றா வதுமக்கட் பெயரியலே.

2. தீட்டு மறைபயில் நாவினன் என்னும் செழுந்தமிழ்நூல்
கேட்ட செவியினன் கேளா அறிவன் கயாதரத்துள்
ஈட்டிய சொற்பொருள் எல்லாம் தொகுத்துசர் இரண்டாவது
காட்டிய தொல்லை விலங்கின் பெயரியல் கண்டுகொள்ளே.

3. காசிப கோத்திரம் வாழவந் தோன்தென் கலைத்தமிழ்தேர்
மாசில் பெருந்தகை மாறா அறிவன் மலரயனும்
கேசவ னும்புகழ் தேவைநன் னாடன் கயாதரத்துப்
பேசி அமைத்தனன் ஐந்தா வதுமரப் பெயரியலே.

4. நீடும் பதமும பொருளும் தெரிந்து நிலைபெறவே
நாடு மவர்க்கு நலந்தரு பாறு நயத்தொடென்றும்
கேடும் பெருக்கமும் இல்லாத தேவைக் கயாதரன்சீர்
பாடுந் தமிழில்ஆ றாவது பல்பொருட் பெயரியலே.

5. பொங்கிய முன்னூல் பொருள்தெரிந்து உண்மைப் பொருளனைத்தும்
தங்கிய ஞானம் தலைப்பெய்து உலகம் தழைக்க என்று
செங்கயல் போலும் விழியாய் கயாதரன் செய்தமைத்தான்
எங்கும் செயற்கைவடிவிற் பெயரியல் ஏழாவதே.

---

* 1, 2, 8, 9-ஆம் தொகுதிகளில் வரலாற்றுப்பாடல் இல்லை

6. மேவும் அரும்பொருள் அந்தாதி கேட்டுஇந்த மேதினியோர்
தாவும் வினைகெடச் சாற்றிய தென்தமிழ்த் தேவைமன்னும்
கோவை இராமீச் சுரக்கோவை சொன்ன குருபரன்மற்
றோவுத லின்றி அமைத்தான்பத் தாவ தொலியியலே.

7 அரும்பொருள் அந்தாதி சூடிய சீதரன் அம்பிகையைத்
தரும்பொருள் செய்த பராபரை யாநந தண்டமிழோர்
விரும்பிய கோவை உரிச்சொற் பனுவல் விரித்துரைத்தான்
பெரும்பொருள் கண்ட கெயாதரன் தேவைப்பெருந்தகையே

பாரதி தீபம்

பாரதிதீப வரலாறு

1. திதமா வுறைநளி னத்தடஞ் சூழ்தென் கடம்பையின் சொல்
விதமா னதுசெறி பாரதி யேத்தியென் னேதவிருள
விதமே வருந்தல வேவைத்த பாரதி தீபந்தன்னில்
முதலாவது தெய்வப் பேரந் தொகுதி முடிந்ததுவே.

2. சிக்கங் குடுமி சிமையஞ் சிகையுச்சி சேர்நவிரந்
தொக்கசெஞ் சூடி கடிகையுஞ் சூளி தொகுபுலமை
மிக்கவன் பாரதி பாரதி தீபத்தின் மெய்தெரிந்த
மக்கட் டொகுதி இரண்டா வதுமுற்றி வந்ததுவே.

3. மீன்றாவு வாவிக் கடம்பையில் வாழ்திரு வேங்கடவன்
ஏன்றாசு கூறுங் கவிவேந்தன் பாரதி யேற்றமலர்க்
தேன்றாழ் தொடைப்புயன் செப்பிய பாரதி தீபந்தன்னில்
மூன்றா வதுவிலங் கின்பேர்த் தொகுதி முடிந்ததுவே

4. விழியருள் பூண்ட நவதா ரணைமுகில் வேங்கடவன்
வழியினுள் வாழ்திரு வேங்கட பாரதி வண்டமிழின்
செழுமைய தாகு மிலக்கிய பாரதி தீபந்தன்னின்
மொழியொரு நான்கில் மரப்பேர்த் தொகுதி முடிந்ததுவே.

5 பின்னுழை கால்புறங் கீழ்மேல் கடைதலை பேணியசார்
முன்னிடந் தேவகை பால்வல மாமிட முந்துதமிழ்ப்
பன்னிய பாரதி பாரதி தீபம் பயில்தொகுதி
யன்ன விடப்பெய ரஞ்சா வதுமுடி வானதுவே

6. சேறா ரகளப் புயன்செயங் கொண்டவன் சிந்தையன்பு
மாறாது மாதவஞ் செய்தருள் பாரதி வாதுகவிக்
கேறான வன்சொன்ன பாரதி தீபத்தி லெண்ணுகின்ற
வாறா வது பல்பொருட்பேர்த் தொகுதிமுற் றானதுவே

7. மின்செயற் காரிற் றருபா ரதிதிரு வேங்கடவ
னின் செயற் சீருற்ற வேழாவ தென்ன வியல்தெரிந்தோன்
றென்சிலைச் செந்தமிழ்ப் பாரதி பாரதி தீபந்தன்னின்
முன்செயற் கைவடி வப்பேர்த் தொகுதி முடிந்ததுவே.

8. பொழிகொண்ட லென்ன கரப்புண் டரிகன்மெய்ப் பூசுரர்தம்
விழிநெஞ்ச மென்ன வரும்பா ரதிதிரு வேங்கடவன்
செழியன் புகழண்ணல் செப்பிய பாரதி தீபத்தெட்டாய்
மொழிபண்பு பற்றிய பேரி னியலு முடிந்ததுவே.

9. கயல்தங்கு வாவிக் கடம்பைய ராதிகைக் கார்நிகரு
மியறங்கு செந்தமிழ்ப் பாரதி பாவல ரேற்றரிதா
முயர்செஞ் சொலாற் சொன்ன பாரதி தீபத்தி
[னோரொன்பதாய்
முயலுஞ் செயல்பற் றியபே ரியலும் முடிந்ததுவே

10 கன்னல குலாவும் வயல்சூழ் கடம்பைமன் கஞ்சமலர்
மின்னுள வாகும் புயபா ரதிதிரு வேங்கடவன்
பண்ணிய பாரதி தீபத் திடை யினிற் பத்தெனவே
முன்னு மொலிபற் றியபே ரியலு முடிந்ததுவே.

11. வெருவா துயரந்தமு மெய்வீடு கண்டருள் வேங்கடவன்
பருதிக் கதிரொளி போல்வன பாரதி பங்கையஞ்சே
ரிருகைப் புயல்சொற்ற பாரதி தீபத்தி னேகாதசத்
தொருசொற் பலபொருட் பேரா னியல்முடி வுற்றதுவே.

12. கந்தர மென்னக் கொடையுடை யான்கடம் பாடவிவா
ழிந்திரன் மேன்மலை வாழ்முனி போல விலக்கணத்தாற்
செந்தமிழ் நூல்தெரி பாரதி பாரதி தீபந்தன்னின்
முந்திய பல்பொருட் பன்னிரண்டாமியல் முற்றியதே

சூடாமணி நிகண்டு

சிறப்புப் பாயிரம்

1. பொன்னும் நன்மணியும முத்தும் புனைந்தமுக் குடைநிழற்ற
மின்னுபூம் பிண்டி நீழல் வீற்றிருந் தவனை வாழ்த்தி,
மன்னிய நிகண்டு சூடா மணியென ஒன்றுசொல்வன்
இந்நிலம் தன்னில் மிக்கோர் யாவரும் இனிது கேண்மின்.

2 பூமலி அசோகின் நீழல் பொலிந்தஎம் அடிகள் முன்னாள்
ஏமமாம் முதல்நூல் சொல்லக் கணதரர் இயன்ற பாவால்
தாம்ஒரு வழிநூல் சொல்லச் சார்புநூல் பிறரும் சொல்லத்
தோம்இலா மூன்று நூலும் துவம்என உதித்த வன்றே.

3 அஙகது போய பின்றை அலகில்நூல் பிறந்த மற்றும்
செங்கதிர் வரத்தின் தோன்றும் திவாகரர் சிறப்பின் மிக்க
பிங்கலர் உரைநூற் பாவின் பேணினர் செய்தார் சேர
இங்குஇவை இரண்டும் கற்க எளிதல என்று சூழ்ந்து.

4. சொல்லொடு பொருள் உணர்ந்தோன் சோதிட [நீதி வல்லோன்
நல்லறி வாளன் எங்கள் நறுங்குன்றை ஞான மூர்த்தி
பல்லுயிர்க்கு ஒருதாய் ஆகும் பரமன்மா முனிவன் [மெய்ந்நூல்
வல்லுநர் வல்லார்க்கு எல்லாம் வரைஅறத் தரையில் வந்து.

5. பரிதிஒன்று உதயம் செய்து பங்கயம் அநேக கோடி
முருகுஎழ மலாவித் தென்ன முகமுடன்அகம் மலர்த்தி
மருவுமுத் தமிழை முன்னாள் வளர்த்தபாண் டியனேபோலக்
கருதிய எல்லாம் தந்து கவிமணி மாலை சூடி,

6. செகம்எனும் பளிங்கு மாடத் திகிரிவேந் தரையே போலப்
புகழெனும் பஞ்சி சேர்த்திப் பொலிவுறு பேரத் தாணி
மகிழ்குண பத்திரன் எஙகள் வழித்தெய்வம் போல்வான் [சொல்ல
இகபரம் இரண்டும் வேண்டி இயல்இசை வல்லோர் கேட்ப,

7. விரவிய தேவர் மக்கள் விலங்கொடு மரம்இடம்பல்
பொருள்செயும் வடிவு பண்பு போற்றிய செயல் ஒலிப்பேர்
ஒருசொல் பல்பொருளி னோடும் உரைத்தபல் பெயர்க்கூட்
[டந்தான்
வருமுறை திவாகரர்போல் வைத்துப் பிங்கலந்தை தன்னில்.

8. ஒருங்குள பொருளும் ஓர்ந்திட்டு உரைத்தனன் விருத்தம் தன்னில்
இருந்தவை நல்லோர் குற்றம் இயம்பிடார் என்பது
[எண்ணித்
திருந்திய கமல வூர்தி திருப்புகழ் புராணம் செய்தோன்
பரந்தசீர்க் குணபத் திரன்தாள் பணிந்த மண்டலவன் தானே.

நூலுள் வரலாற்றுக் குறிப்புகள்

9 பனிஇமம் துகின மும்பேர் பரிவேடம் ஊர்கோள் வட்டம்
தனிஇடு வான வில்லே இந்திர தனுஎன் றாகும்
இனையவை தேவர் ஈட்டச் செய்யுள் நூற்றொன்று இசைத்தான்
புனைகுண பத்தி ரன்தாள் போற்றுமண் டலவன் தானே.

10. தேன்அவிழ்த்து அளிகள் எல்லாம் செவ்வழி பாடாநின்ற
பூநகைத் திலங்கு கஞ்சப் பொகுட்டின் மீதே ஒதுங்கும்
நான்முகக் கடவுள் பாதம் நாவினான் நவிற்றி ஏத்தி
மானவர்க்கு இயன்ற பேரை வகுத்திடும் தொகுதி சொல்வாம்.

11. இருபதோடு இருபான் முப்பான் இருபான் ஈரைந்துமேலும்
மருவிய ஆறு செய்யுள் மக்கள்தம் பெயர்க்குச் செய்தான்
குறுநறுங் குன்றை வேந்தன் குணபத் திரன்தந்த நோன்மை
தருநெறி நோற்கும் வீரை தழைத்தமண் டலவன் தானே.

12. துலங்குமுக் குடைநிழற்றத் துந்துபி முழங்கத் தேவர்
நலம்பெறு கவரி வீச நல்மலர் மாரி தூவ
அலங்குளை அரியணைக்கீழ் அமர்ந்தநான் முகனைப்போற்றி
விலங்கின்பேர்த் தொகுதி தன்னை மேதினி வியப்பச் சொல்வாம்.

13. கிருமியே புழுப்பொட் டும்பேர் கீடம்கோற் புழு உலண்டாம்
பிரசம் கோற்றேன் இறாலே பேசிய தேனின் கூடாம்
விரவிய விலங்கி னீட்டம் விருத்தமோ ரெழுபத்தெட்டும்
வருமுறை உரைத்தான் வீரை மன்னன் மண்டலவன் தானே

14. திருக்கிளர் தேவர் கோமான் ஏவலின் குபேரன் செய்த
விருப்புறு பொன்னெயிற்குள் விளங்களன் எழுத்திரண்டும்
பரப்பிய ஆதி மூர்த்தி பங்கயப் பாதம் போற்றி
மரப்பெயர்த் தொகுதி தன்னை வருமுறை கூற லுற்றாம்.

15. பரப்புநீர் உலகு தன்னில் பாவலர் கிளைஞர் உற்ற
நிரப்புஅடும் குணபத்தி ரன்தாள் நித்தலும் போற்றிசெய்து
விருப்புறு விரதசீலன் வீரைமண் டலவன் செய்தான்
மரப்பெயர்க் கறுபத்தெட்டு மன்னிய கவிதை தானே

16. கடல்எழும் இரவி கோடி கால்சீத்துப் பொடித்த தென்ன
மடல்அவிழ் கமல வூர்தி வந்த வாமனையே போற்றி
அடைவுள திணைதேம் ஊர்வான் அம்புறம் ஆதிஆய
இடனுடைத் தாக வைத்த இடப்பெயர்த் தொகுதி சொல்வாம்

17. முன்னொடு மேலும் மற்றும் மொழியும்அஞ் ஞாங்கர்தானே
முன்னரே தலைத்தாள் ஆகும் முதலொடு புரமும் அப்போ
அன்னதுஇவ் இடப்பேர்க் கெட்டோடு அறுபது விருத்தம் செய்தான்
மன்னுசீர்க் குணபத்திரன்தாள் வணங்குமண் டலவன் தானே.

18 உலகுஎலாம் இறைஞ்சிஏத்த உலகுஎலாம் உணர்ந்த மூர்த்தி
அலகுஇலா ஞானவாரி ஆறுஇரு கணங்களோடும்
இலகுமூ வெயிலுள் யாளி எழிலணை இருந்தோன் பாதம்
பலமுறை வணங்கி ஏத்திப் பல்பொருட் பெயரும் சொல்வாம்.

19 மகர கேதனனை வென்ற வாமற்கே தொழும்பு [செய்வோன்
இகல்இலாக் குணபத் திரன்தன் இருசரண் இதயம் [வைத்தோன்
மிகுபுகழ் புனையா நின்ற வீரைமண்டலவன் செய்தான்
பகர்தரு முப்பத்தைந்து பல்பொருட் பெயர்க்குச் செய்யுள்

20 முழுமதி முக்குடைக்கீழ் மூர்த்திதாள் போற்றல் செய்தே
எழுவகை உலோகந் தன்னில் ஏற்றமண் மரங்கள் தம்மில்
பழுதுஅறு தோலின் நூலின் பற்பல விதங்க ளாக
வழுவுறா திடும்செய்ற்கை வடிவப்பேர்த் தொகுதி சொல்வாம்.

21. மற்றவற் கலையிறைஞ்சி மரவுரி சீரையும்பேர்
சுற்றலே உடுத்தல் என்ப தற்றலே இறுக்கல் ஆகும்
குற்றமில் எழுபத்தாறு தொடர் செய்தான் குணபத்திரன்தாள்
நிற்றலும் வணங்கி நீதி நிறுத்தமண் டலவன் தானே.

22 கடிமலர்ப் பிண்டி நீழல் காவலன் சரணம் போற்றி
வடிவினி லளவு தன்னில் வண்ணத்தில் காட்சி யாகும்
நெடியதோர் பொருளின் மற்றும் நீள்உணர் வாலேகாணப்
படுபொரு ளின்குணப்பேர்ப் பண்புதாம் தொகுதி சொல்வாம்.

23 தேங்கிய புகழான் குன்றைக் குணபத்திரன் திருத்தாள்
[போற்றி
வீங்குநீர்ப் பழனம் சூழ்ந்த வீரைமண் டலவன் செய்தான்
பாங்கினால் விளங்கு பண்பு பற்றிய பெயரின் ஈட்டம்
ஓங்கிய கவிதை எண்ணில் ஒன்பதற் றொன்பது ஒன்றே

24. வியன்மிக்க வைரத் தால்வேர் வீழ்த்துப்பொற் கவடுகொண்டு
மயமிக்க மரக தத்தால் வண்தழை பொதுளிப் பூந்தொத்து
இயலுற்ற பதும ராகம் எதிர்பிண்டி இறைதாள் போற்றிச்
செயல்பற்றும் பெயர்க் கூட்டத்தைச் செப்புவம் இப்பாற் கேண்மின்.

25. விம்மியே உமிழ்தல் கான்றல் மேவும் உற்காரம் சத்தி
தும்மலே சுவாசம் மூச்சுஆம் கொட்டாவியே ஆவித்தல்
அம்மவிச் செயல்பற்றுப்பேர்க் கறுபத்தேழ் விருத்தம் செய்தான்
மைம்முகில் குணபத்திரன் தாள் வணங்கும் மண்டலவன்
[தானே.

26 வலியுற்ற வெவ்வி னைப்பேர் மாற்றியே அநந்தஞானம்
பொலிவுற்ற கேவ லப்பெண் புணர்ந்துவீற்றிருந்த போதன்
மலருற்று நடந்தவாமன் மரைபுரை பாதம் போற்றி
ஒலிபற்றும் பெயர்க்கூட்டத்தை உணர்த்துவம் இப்பாற் கேண்மின்.

27. இறந்தது நிகழ்வும் மற்றை எதிர்வுமாம் புராணம் செய்தோன்
அறந்தரு குணபத் திரன்தாள் அரண்எனச் சரணம்
[ஆனோன்
மறந்தலைப் படாத வீரை மன்னவன் மண்டலவன்
[செய்தான்
சிறத்திடும் ஒலிபற்றும்பேர்ச் செய்யுளைம் பத்திரண்டே".

28 முடிவிலின் பத்து மூவா முதல்வனைப் போற்றி செய்தே
அடிதொறும் இரண்டும் ஒன்றும் ஆதியில் பொருள் அடக்கி
நடைபெறு ககரம் ஆதி னகரவீறு எதுகை யாகப்
படியி னோர்சொற் பொருட் பல்விதத் தொகை பகர லுற்றாம்.

29. அன்வினை யொடுபெயர்க்கும் விகுதிசா ரியையும் ஆகும்
மன்னிடுங் கனைத்த லென்பது இருள்ஓசை இருபேர்
[வைக்கும்
இன்னன ஒருசொல் பல்பேர்க் கியற்கவி முந்நூற் றோன்பான்
சொன்னவன் குணபத்தி ரன்தாள் சூடுமண் டலவன் தானே.

30. சொல்வகை எழுத்தெண் எல்லாம் தொல்லைநாள்
[எல்லையாக
நல்வகை யாக்கும் பிண்டி நான்முகன் நாளும் தீமை
வெல்வினை தொடங்கச் செய்து வீடுஅருள் வோன்தாள்
[போற்றிப்
பல்வகைப் பெயர்க்கூட் டத்தின் ஒருபெயர் பகர லுற்றாம்.

31 உரைத்தஇப் பல்பெயர்க் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதிதன்னில்
விருத்தம்மூ வைம்பதின் மேல் மிகுதியோ டிரண்டுசெய்தான்
திருக்கிளர் குணபத் திரன்தாள் சென்னியிற்
[சூடிக்கொண்டோன்
மருக்கிளர் பொழில்சூழ் வீரை மன்னன் மண்டலவன் தானே.

அகராதி நிகண்டு

1. தேன றாமகிழ்த் தொடையலும் மவுலியும்
திருக்கிளர் குழைக்காதும்
கான றாமலர்த் திருமுகச் சோதியும்
கயிரவத் துவர்வாயும்
மோன மாகிய வடிவமும் மார்பமும்
முத்திரைத் திருக்கையும்
ஞான தேசிகன் சரண தாமரையும்என்
நயனம்விட்டு அகலாவே

2 சோதி விநாயகர் பாத மெனமுடி
வோதிய நாவினார் நீதியு ளார்களே.

3. வெள்ளை வாரணப் பிள்ளையார் பதம்
உள்ளு வார்மனக் கள்ளம் மாறுமே. *

* மேலே தரப்பட்டுள்ள மூன்று பாடல்களும் கடவுள் வாழ்த்து நிலையில் அச்சுப புத்தகத்தில் காணப்படினும், இவை நூலாசிரியர் வாக்கன்று இவை ஏடெழுதுவோரால் பற்பல நூல் ஏடுகளின் தொடக்கத்திலும் எழுதப்பட்டுவருதலைச் சுவடி ஆய்வாளர் காணு தல் கூடும். இவற்றைப் பாடிய புலவர் யார் என்பது தெரியவரவில்லை.

பாயிரம்

உலகினர் பவம் அற மலைமகள் தவம்செயும்
தேசுகொள் பட்டீச் சுரன்பதம் பணிந்து
ஒலியெழு கடல்சூழ் உலகினில் தெரிக்கும்
இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்என்று
உரைதரு சொற்கள் ஒருநான் கதனில
திரிசொலின் பேதம் இருவகை யதுதான்
ஒருசொல் தானே பலபொருள் ஆகியும
பலசொல் தானே ஒருபொருள் நிலவியும்
வருமிதில் ஒருசொல் பல்பொரு ளதனைத்
தெரிதரு பிங்கலர். திவாகரம் முதலாய்ப்
பரவிய நிகண்டு பலஎடுத்து ஆராய்ந்து
அதில்சில திரட்டி அகரர் முதலாய்
மதித்தெழு அகார வர்க்கம் ஈறாய்
மொழிமுதல் எழுத்து நூற்றொரு நால்அடைவே
மொழிதரு சூத்திரம் முதற்பதம் தோறும்
வருபெயர் ஆதிப் பொருளாய் எடுத்தே
ஒருபெயர் முதல்நாற் பத்தாறு ஈறாய்
நிகழ்தர உரைக்கும் தொகைதனக்கு இப்பெயர்
அடைவினில் அங்கங் கமர்ந்துள பேரும்
இடையிடை அடை விலங் கில்லாப் பேரும்
மன்னு சூத்திரம் மூவாயிரத் துடனே
முந்நூற் றறுபத் தெட்டெனும் தொகையாய்
வந்திடும் தொகுதி ஈரைந்தான வகுத்தே
அரிய சகாத்தர் ஆயிரத் தைஞ்ஞூற்று
ஒருபத் தாறு என உரைத்திடும் ஆண்டினில்
ஐந்ததி காரம் அறுபத்து நாற்கலை
உந்திய அறிவால் ஒருங்குடன் உணர்ந்த
நாற்கவி வாணர் நகைதர யானும்
நூற்பா வதனால் நுண்ணிய அறிவினில்
ஆதர வால்அக ராதி நிகண்டு என
ஓதிட யாவரும் உணர்ந்திட நினைந்தே.

நூலுள் வரும் குறிப்புகள்

முதலாவது அகராதிப்பேர்த் தொகுதி

1 புலியூர்ச் சிதம்பர ரேவண சித்தன்
சொல்லும் அகராதி நிகண்டினில் தொடுத்த
வழுவில் அகராதிப் பெயர் முதல் தொகுதி
எழுநூற் றெழுபத் தாறுசூத் திரமே.

இரண்டாவது ககராதிப்பெயர்த் தொகுதி

2 பட்டிகை அன்பால் பணிந்து அருச்சனைசெய்
பட்டீச் சுரன்தன் பதமலர் வாழ்த்திக்
ககரா திப்பெயர்த் தொகுதிகட் டுரைப்போம்

3. திருப்பட் டீச்சுரச் செழுந்தமிழ்ப் புராணம்
தெரித்தநற் சிதம்பர ரேவண சித்தன்
ஓதிய தமிழக ராதி நிகண்டினில்
ககரா திப்பேர் இரண்டாத் தொகுதி
பகர்ந்த வைஞ்நூற்று முப்பத் தேழே.

மூன்றாவது சகராதிப் பெயர்த்தொகுதி

4. ஞான தீர்த்தம் நலம்பெறப் படைத்த
தேனு நாயகன் திருவடி வழுத்திச்
சகராதிப் பெயர்த் தொகுதி சாற்றுவாம்

5. தொண்டைநன் னாடு துலங்கிய புலியூர்
எண்தரும் சிதம்பர ரேவணன் உரைத்த
மூன்றாஞ் சகரா திப்பேர்த் தொகுதி
என்ற சூத்திரம் ஐம்பதிற் றேழஞ்சே

நான்காவது ஞகராதி பெயர்த்தொகுதி

6. மார்க்கண் டயரருச் சனைமகிழ்ந் தருள்தரு
நாற்புயத் தேனு நாயகற் பணிந்து
ஞகரா திப்பெயர்த் தொகுதியை நவில்வாம்.

7. இதம்தரு புலியூர்ச் சிதம்பர ரேவணன்
இதந்தரப் புகல் அகராதி நிகண்டினில்
பகரும் ஞகரா திப்பேர் நாலாம்
தொகுதியிற் சூத்திரம் இருபத் தாறே.

ஐந்தாவது தகராதிப் பெயர்த்தொகுதி

8. தன்ம சன்மனைச் சார்குணக் குருவினை
இம்மை அர்ச்சித்துப் பட்டீசரை இறைஞ்சித்
தகரா திப்பெயர்த் தொகுதியைத் தருவாம்

9 வரம்மிகு வலஞ்சுழி வாணர்தம் புராணம்
உரைதரும் சிதம்பர ரேவணன் இயம்பிய
வாய்த்த தகராதித் தொகுதிஐந் தாவதில்
சூத்திரம் முந்நூற் றெண்ணைந் தொன்றே.

ஆறாவது நகராதிப் பெயர்த்தொகுதி

10. மிடிஅகற்றி மிக்கசீர் நல்குபட் டீசரைத்
தொழுது நகராதிப்பெயர்த் தொகுதியைப் புகல்வாம்.

11. பகர்தரும் புலியூர்க் கங்கை குலாதிபன்
அருள்பெறு சிதம்பர ரேவணன் அறைதரு
நகரா திப்பெயர்த் தொகுதி ஆறாவதில்
சூத்திரம் முப்பதிற் றேழொன் றாமே.

ஏழாவது பகராதிப் பெயர்த்தொகுதி

12. சித்திர சேனன் தனக்கொரு நாலு
புத்தி ரர்தரும் புனிதனைப் போற்றிப்
பகரா திப்பெயர்த் தொகுதியைப் பகர்வாம்.

13. திருமேற் றளிக்குச் செழுந்தமிழ்ப் புராணம்
தெரிதரு சிதம்பர ரேவணன் பகர்ந்த
ஏழெனும் பகரா திப்பெயர்த் தொகுதி
தாழ்வர நானூற் றெண்பத் தைந்தே.

எட்டாவது மகராதிப் பெயர்த்தொகுதி

14. விசுவா மித்திரன் தனை வேதியன் ஆக்கும்
திசைபுகழ் பட்டீச் சுரன்அருள் வணங்கி
மகரா திப்பெயர்த் தொகுதியை வகுப்பாம்.

15. கலையா வையுமுணர் காவியத் தொடையாண்
புலியூர்ச் சிதம்பர ரேவண சித்தன்
பரவிய மகரா தித்தொகுதி எட்டாவதில்
இருநூற் றெழுபத் தெண்சூத் திரமே.

ஒன்பதாவது யகராதிப் பெயர்த் தொகுதி

16. மதவலி கீதம் இதமுடன் மகிழ்ந்த
தேனு தாண்டவன் திருவடி ஏத்தி
யகரா திப்பெயர்த் தொகுதி இசைப்பாம்

17. பவமறத் தெளிந்த சிவதெரி சனத்தோன
புவிமகிழ் சிதம்பர ரேவண சித்தன்
ஏத்திய யகராதித் தொகுதி ஒன்பானில்
சூத்திரம் முப்பத் தொன்றெனச் சொல்லுமே.

பத்தாவது வகராதிப் பெயர்த் தொகுதி

18. சதுத்த திமிளன் தனைச் சார்பிரம கத்தி
இதத்துடன் அகற்றுபட் டீசரைப் பரவியே
வகரா திப்பெயர்த் தொகுதியை வகுப்பாம்.

19. மேழித் துவசன் விளங்கிய புலியூர்
வாழ்நல் சிதம்பர ரேவண சித்தன்
நீதியில் தரும்அக ராதி நிகண்டினில்
பத்தாம் வகரா திப்பெயர்த் தொகுதி
ஏத்து சூத்திரம் முந்நூற் றெழுநான்கே.

ஆசிரிய நிகண்டு

காப்பு

ஏரா சிரிய நிகண் டென்னுமீ ரைந்தொன்று
சீரார் தொகுதியதாச் செப்புதற்கே — ஓராரைச்
சேரானைச் சேர்ந்தாரைச் சேரும் வினையகற்றுங்
காரானை மாமுகன் தாள் காப்பு

பாயிரம்

1 கன்னிஉமை பாலனைத் தெய்வானை வள்ளிபங்
காளனைச் சேவற்கொடிக்
கந்தனைத் தென்பழனி முருகனைச் சிந்தனையில்
கருதி அன்பொடு பணிந்தே,
முந்துள திவாகரம் பிங்கல நிகண்டு சீர்
முந்துகாங் கேய னுரிச்சொல்,
முறைபெறு கயாதரம் பகருமக ராதியிவை
முற்றுமொன் றாய்த் திரட்டி,

இந்நிலந் தனிலுளோர் எவரும் அறியும்படிக்கு
எண்ணி ஆசிரியத்தினால்
இயம்பிய நிகண்டுமுறை யறிநன் னூல் முறைமையும்
இரண்டுமே செய்து வைத்தேன்
மன்னுசெஞ் சிச்சீர்மை சூழ்தொண்டை வளநாட்டில்
வாய்த்தவூற் றங்காலெனும்
மாநகர்க் கதிபன் உயர் பாவாடை வாத்தியார்
மைந்தன் ஆண்டிப்புலவனே.

2 எண்ணருந் தெய்வமது முதலிரண் டாவது
எழில்மக்கள் மூன்றாவது
விலங்கிட்டு நாலாவது மரங்களைந் தாவதுஇடம்
இருமூன்று பல்பொருட்பின்
நண்ணும்ஏ ழாவது செயற்கை எட்டாவது
நயந்தபண்பு ஒன்பது செயல்
நவின்ற பத்து ஒலிஒழிவு பதினொன்று எனுந்தொகுதி
நாட்டித் திவாகரம்போல்,
மண்ணுளோர் அறியப் பகுத்தனன் கைலையான்
வடிவெடுத் தைந்தெழுத்தின்
மந்த்ரோப தேசஞ்செய் ஞானப்ர காசகுரு
வனசமலர் அடிசூடுவோன்
வண்ணமே கலைமாதர் ஆடல் புரி மண்டபம்
மதில் சிகர கோபுரம் தேர்
வளம்பரவும் ஊற்றங்கால் பாவாடை வாத்தியார்
மைந்தன் ஆண்டிப்புலவனே.

அவையடக்கம்

3 வாமதே வன்கங்கை வேணியன் கூற்றினை
மயங்கிட உதைத்த பாதன்,
மலைமாது கேள்வன்தன் விடை யினுக்கு ஒட்டகம்
வலியநடை காட்டியதுபோல்,
பூமிகொழு நன்திரு மடந்தைகேள் வன்றனது
பொன்னிறக் கருடனுக்குப்
புனமசக மிக்கதோர் பறவைகாட் டியதுபோல்,
பொல்லாத கரிய காகம்

நாமகட் கணவன்வே தக்கடவுள் புரவியெனும்
நரைஒதி மந்தனக்கு
நற்புனல் பிரித்தமுத முண்டுகாட் டியதுபோல்
நான்மறையும் ஆறங்கமும்
தோமில்பல நூலும் தெரிந்தவர் தமக்குயான்
தொகுதிஆ சிரியத்தினால்
சொல்லிய நிகண்டின் உரை அறிநன்னூல் முறைமையும்
தோன்றிட வகுத்தவாறே.

அரும்பொருள் விளக்க நிகண்டு

காப்பு

1. மகிழ்ந்துல கெவையும் போற்ற வன்புரம் குன்ற வென்ற
திகம்பரன் அணங்குஓர் பாகத் தெய்வநா யகன்சேய் தந்தி
முகன்தனது அடியை ஏத்தி மூது அரும் பொருள்விளக்க
நிகண்டுஎனும் மணித்தீ பத்தை நிலமிசை நிகழ்த்த லுற்றாம்

பாயிரம்

2. பொன்னொளிர் கமலப் புத்தேள் நறுந்துழாய்ப் பெருமான் [போற்றும்
கன்னியம் புரிசைத் தில்லை நாதன்தாள் கருத்தில் சேர்த்திப்
பன்னரும் பொருள் விளக்கத் தீபிகை பகர்வேன் பாரில்
செந்நெறி உளத்தோர் யாரும் செவிமடுத்து இனிது [கேண்மின்.

3. குளிர்மணி வடநீ ழற்கீழ்க் குலவும் எம் அடிகள் தொன்னாள்
எளிதிலா முதனூல் செப்ப இலக்கணர் இயையும் தூக்கால்
தெளியொரு வழிநூல் செப்பச் சிலர்சார்பு நூலும் போற்றத்
தளிர்பெற இந்நூல் மூன்றும் சகந்தனில் திகழ்ந்த தன்றே.

4. ஆங்கது நிற்கப் பின்னும் அலகில்நூல் உதித்த ஆற்றிற்று
ஆங்குஒரு சொற்பொருட்பல் விதத்தொகை தானொன் [றுக்கொன்று
ஓங்கிமிக் குங்கு றைந்தும் ஒத்திடா திருக்கை தன்னால்
பாங்குஉயர் சின்னூல் சேருப பொருள்கூட்டும் பண்பை [எண்ணி.

5. இலக்கணம் முழுது ணர்ந்தோன் இறையிருஞ்சி வாக மத்தின்
துலைக்கடல் முழுதும் கண்டோன் தொல்லைஆம் தில்லை [மூதூர்

கலக்கற விளங்கும் பச்சைக் கந்தநே சிகனார் எங்கோன்
சொலத்திகழ் இகபரத்தை வேண்டியே தொல்லோர் கேட்க,

6. மாவியல் சிறக்கும் வீரை மண்டல வன்காங் கேயன்
ரேவண சித்தன் செஞ்சொல் சுயாதரன் இவரால் சொற்ற
பாவியல் நூற்கூ றோர்சொல் பல்பொருட்டொகை எலாஞ் [சேர்த்து
ஓவிலா வளம் சிறப்ப ஒருபெரு நூல தாக.

7 நவைஅறு ககரர் ஆதி னகரவீறு எதுகை தன்னால்
நுவலடிக்கு இரண்டும் ஒன்று நுண்பொருள் ஒருங்கு சேர்த்திச்
சுவைதிகழ் சொல்விருத்தத் தொகையெழு நூறு தன்னால்
அவைநவோர் குற்றம் சொல்லார் என்பதை அகத்தின்எண்ணி

8. சொற்றனன் நறாத் துளிக்கும தோட்டலர் கடம்பின்திண்தோட்
கொற்றவேல் முருகன் செந்தில் குமரவேட்கு அடிமை பூண்ட
நற்றவ வீரா சார நற்சிவப் பிரகாசன் சேய்ப்
பெற்றிசேர் அருமருந்த தேசிகப் பெயரி னானே,

9. இருஞ்சகாத் தம்மீ ரைஞ்ஞூ றிருமுந்நூ றுடன்எண் பத்தஞ்
சொருங்குசித் திரபானுப்பேர்ச் சமைமகத் திங்க ளொப்பிற்
பொருஞ்சிவ நிசிவெள்ளிப்பேர் புணைதினம் தில்லை மன்றில்
பெருங்குணத் தோர்க்கு அரங்கே றற்றநூல் பெற்றி தானே.

நூலுள் காணும் குறிப்புகள்

ககரவெதுகை

1. வழுத்துறு மெய்ம்மூ வாறின் வருகின்ற ககரம் ஆதி
எழுத்தெது கையினில் செய்யு ளைம்பானென் றிசையச் [செய்தான்
பழுத்தசெஞ் சடைவே லால்சூர் பகவெறிந் தோன்பொற் பாதம்
அழுத்துறு மிதையன் செந்தில் அருமருந் தையன் தானே.

ஙகரவெதுகை

2. அலங்குபன் மணிகொ ழிக்கு மணிகிளர் சரவ ணத்தின்
இலங்குமூ விருமு கத்தோன் எம்பிரான் தேவர் சேனை
கலங்குறா வண்ணம் காத்த காரணன் பாதம் போற்றித்
துலங்கியே வருங கார வெதுகையின் தொடையைச் சொல்வாம்.

3 துதிபெறு மிரண்டா மெய்யாய்ச் சொற்பெற வருங கார
வெதுகையின் உற்ற செய்யுள் இசையசு ரெட்டாய்ச் செய்தான்
கதிர்விரி தடக்கை வேலான் கந்தவேள் மணிப் பொற் றண்டை
அதிர்கழல் வணங்கும் செந்தில் அருமருந் தையன் தானே

சகரவெதுகை

4 கொலைகிளர்ந் தொளிருஞ் செய்ய கூரிலை வடிவேல் தாங்கு
மலைசெறி கடகத் திண்தோள் மஞ்ஞைவா கனத்தெம்
[பெம்மான்
முலைமுகிழ்க் குறமின் கேள்வன் மூவிரு முகனைப் போற்றிக்
கலைவலோர் புகழ்ச கார வெதுகையின் கவியைச் சொல்வாம்.

5 வழுவிய ஒலிசி றக்கும் வல்லின மாஞ்ச காரம்
மொழியெது கையினிற் செய்யுள் மூவொன்ப தாகச் செய்தான்
கழுதுண வசுரர் சேனைக் கடல்தொலை குகனைப் போற்றும்
அழகியற் செந்தில் மேவும் அருமருந் தையன் தானே.

ஞகரவெதுகை

6. நற்றவ முனிவர் விண்ணோர் நான்முகன் நெடியோன் ஏத்தும்
பெற்றமூர் கடவுட் கன்று பேசரும் பொருள் உரைத்த
வெற்றிவேற் குருசில் செங்கேழ் மென்மலர்ப் பாதம் போற்றிச்
சொற்றிகழ்ந் திடுஞ கார வெதுகையின் தொடையைச்
[சொல்வாம்

7. விரியுறு மொளிசி றந்த மெல்லினந் தனிலி ரண்டாம்
வரியெது கையினிற் செய்யுள் மும்மூன் றாய் வகுத்தல் செய்தான்
திரிபுரம் தன்னைச் செற்ற செம்மலின் செம்மல் செந்தாள்
அருண்முடி சூடும் செந்தில் அருமருந் தையன் தானே.

டகரவெதுகை

8 வலிசிறந் தொளிர்ப ரசரை வரைச்சிற கரியும் கொற்றக்
குலிசிதன் மருக னாய குருபர முருக வேளின்
கலினொலி பரிபு ரப்பொற் கமலமென் பாதம் போற்றி
ஒலிசிறந் திடுட கார வெதுகையின் கவியோ துற்றாம்.

9 தகைசெறி டகர மாய வெழுத்தெது கையினிற் சார
நிகரறு கவிதை யேழொன் பானென நிகழச் செய்தான்
முகிழ் முலைக் குறமின் கேள்வன் மொய்ம்மலர்ப் பாதம் [போற்றும்
அகனில மேத்துஞ் செந்தில் அருமருந் தையன் தானே.

ணகரவெதுகை

10. வளங்கிள ரொளிப சும்பொன் வரையுறழ் தோளும் கண்ணும்
உளங்கிளர் பன்னி ரண்டோ டுரைக்குமீ ராறும் கொண்ட
தளங்கிளர் நெடிய வேலான் தண்மலர்ச் சரணம் போற்றிக்
களங்கற வருண கார வெதுகையின் கவியைச் சொல்வாம்.

11 நண்ணரு ணகார மாய வெதுகையின் நடாத்தும் செய்யுள்
எண்ணவை ஐயொன் பானாய் இசைத்தனன் ஈர்ங்க டற்சூர்
விண்ணடைந் திடவே றொட்ட வீரன்தாட் டுணையைப் [போற்றும்
அண்ணல்அஞ் செந்தில் மேவும் அருமருந் தையன் தானே.

தகரவெதுகை

12. பூங்கமு குறழ்கி ரீவப் புலோமிசை தடந்தோள் தோயும்
பாங்குயர் குலிசி துன்பம தடைத்தபன் னிருத டக்கைக்
காங்கயன் சிகியூர் செவ்வேள் கமலப்பொற் பாதம் போற்றி
ஓங்கிய வெழில்த கார வெதுகையின் தொடையோ துற்றாம்.

13. மணிதிகழ் வலித்த கார வெதுகையின் வழுத்துஞ் செய்யுள்
எணிலோரைம் பானொன் றென்ன இசைத்தனன் கமலத் [தோன்றல்
திணிதிகழ் முடிபு டைத்த சேவலங் கொடியோற் போற்றும்
அணிதிகழ் செந்தில் மேவும் அருமருந் தையன் தானே.

நகரவெதுகை

14 காமுறு மொளிர்வெண் திங்கள் கற்றையஞ் சடிலத் தண்ணற்
கோமுறு பொருளை ஓதும் உலகெலாம் உணர்ந்த மூர்த்தி
ஏமுறு மெழிற்க லாபத் திருஞ்சிகிக் கடவுட் போற்றித்
தோமறும் உயர்நகார வெதுகையின் தொடையைச் சொல்வாம்

15 தெளிவினி னுயர்ந கார வெதுகையிற் சிறக்குஞ் செய்யுள்
எளிதிலா வெண்ணி ரண்டென்று இன்புற உரைப்பச் செய்தான்
பளிதமார் தடந்தோட் செவ்வேள் பங்கயப் பாதம் போற்றும்
அளிதிகழ் பொழில்சூழ் செந்தில் அருமருந் தையன் தானே.

பகரவெதுகை

16. கண்கைகால முகம்வாய் செங்கேழ்க் கமலநேர் மலரின் மாது
கொண்கன் வார்கரா சலத்தைக் குறித்தடு பகுவாய்ச் செங்கண்
வன்கராச் செகுத்த ஆழி மான்மரு கோனைப் போற்றிப்
பண்பினா லுயர்ப கார வெதுகையின் றொடை பணிப்பாம்

17 தெள்ளிதா யுயர்ப கார வெதுகையின் உரைக்கும் செய்யுள்
உள்ளமா ரீரெட் டென்ன வுலகினிற் புகலச் செய்தான்
கள்ளறா மலர்ப்பூங் கொந்தார் கடம்பணி குகனைப் போற்றும்
அள்ளறாச் செந்தில் மேவும் அருமருந் தையன் தானே

மகரவெதுகை

18. மாண்கிள ரொளிசி றந்த மரகதக் கலாப மஞ்ஞைச்
சேண்கிளர் பரிது ரக்கும் தெய்வகுஞ் சரிம ணாளன்
பூண்கிளர் தாட்டு ணைப்போ துளத்திடை நினைந்து போற்றி
காண்கிளர் கவின்ம கார வெதுகையின் கவியைச் சொல்வாம்.

19. முரண்தொகும் எழில்ம கார வெதுகையிற் செய்யுள் முப்பான்
இரண்டுஎன உலகில் போற்றி இசைத்தனன் திட்ட மாகிக்
கரண்டகங் கவிழ்த்த வேழத்து இளவலாம் கடவுட் போற்றும்
அரண்தொகும் செந்தில் மேவும் அருமருந் தையன் தானே

யகரவெதுகை

20. மணிதிகழ் தரங்க வாரி சுவறிட வயங்கு செம்பொன்
திணிதிகழ் மேருக் குன்றம் குலுங்கிடச் சிறக டிக்கொள்
தணிதிகழ் மயூரம் ஊரும் சண்முகன் தாளைப் போற்றி
அணிதிகழ் யகார மாய வெதுகைப்பா அறைய லுற்றாம.

21. ஏய்ந்தசீர் பெறும்ய கார வெதுகையின் இசைக்கும் செய்யுள்
வாய்ந்தவொன் றொழிமூ வொன்பான் என்னவே வழங்கச்
[செய்தான்
காய்ந்தசூர் அறமு ருக்கும் கந்தவேள் பாதம் போற்றும்
ஆய்ந்தசீர்ச் செந்தில் மேவும் அருமருந் தையன் தானே.

ரகர வெதுகை

22. செகமுழுது இறைஞ்சும் தொலலைச் சிகரவெற் பரசன் தந்த
மகவுமை பயந்த செவ்வேள் வள்ளிநா யகிதன கேள்வன்
குகன்நெடு வடிவேல் தாங்கும் கொற்றவன் மலர்த்தாள் [போற்றித்
துகளறு ரகார மாய எதுகையின் தொடையைச் சொல்வாம்.

23. தெருண்டுளோர் உரைர கார எதுகையில் சிறந்த செய்யுள்
இரண்டோடொன் பதுபத் தென்ன இருநிலம் புகழச் [செய்தான்
கரண்டைவாள் இலங்கை வாட்டுங் கருமுகில் மருகற் போற்றும்
அரண்திரு விளங்கும் செந்தில் அருமருந் தையன் தானே.

லகர வெதுகை

24. அளந்திட வரிய வேத புராணஆ கமங்க ளாலும்
உளம்தெற இசைத்துப் போற்றும் ஒருவனாய் நின்ற சோதி
வளம்கிளர் வடிவேல் தாங்கும் வள்ளல்சீர் பாதம் போற்றிக்
களங்கற வரும்ல கார எதுகையின் கவிதை சொல்வாம்.

25. பண்டையோர் இசைல கார எதுகையில் பகரும் செய்யுள்
மண்டல மதனில் ஐம்பான் என்னவே வகுத்தல் செய்தான்
திண்திறல கொடிசெஞ் சேவல் திகழ்ந்தசெவ் வேளைப் [போற்றும்
அண்டர்கள் விளங்கும் செந்தில் அருமருந் தையன் தானே.

வகர வெதுகை

26. நாட்டுமன் பதைகட் கெல்லாம் நாதனாய் நலிவி லானாய்க்
கோட்டம்இல் குணத்து ஞானக் கொழுஞ்சுட ராங்கு கேசன்
பாட்டளி துதையும் செங்கேழ்ப் பங்கயப் பாதம் போற்றி
ஈட்டமார் நலவ கார எதுகையின் தொடையி சைப்பாம்.

27. மாவுய ரியவ கார வெதுகையின் வழுத்துஞ் செய்யுள்
தாவுயர் மூன்றி னோடெண் ணான்கெனச் சாற்றல் செய்தான்
பாவுயர் எழில்கூர் செவ்வேள் பங்கயப் பாதம் போற்றும்
ஆவுயர் செந்தில் மேவும் அருமருந் தையன் தானே.

ழகரவெதுகை

28 தடையில முமமு தற்கும் தனிமுத லாகி என்றும
உடை பயில் புவனம் ஏத்தும் ஒண்பொரு ளானோன் செங்கை
அடையுறும் அயில வேல் தாங்கும் அண்ணல்பொற் றாளைப் [போற்றி
இடையின மெனும்ழ கார எதுகையின் தொடையி சைப்பாம்.

29 இன்புயர்ந் திடுழ கார எதுகையில் சிறந்த செய்யுள்
முன்பெற ஒன்றொ ழிந்த மூவொன்ப தாகச் செய்தான்
பன்கிளர் விரிதோட் சூர்மாப் பகவயில் துரந்தோன் பாதம்
அன்புற வணங்கும் செந்தில் அருமருந் தையன் தானே.

ளகரவெதுகை

30. மாங்குயில் கிளவித் தீஞ்சொல் பிறைநுதல் கருங்கண் வம்பார்
கோங்கிள முலைப்பொன் தெய்வ குஞ்சரி வள்ளி கொண்கன்
காங்கயன் அன்பர்க் காத்த கடவுள்பொற் பாதம் போற்றி
ஓங்கியற் பெறுள கார எதுகையின் தொடையோ துற்றாம்.

31. விறலுயர்ந் திடுள கார எதுகையின் விரிக்கும் செய்யுள்
குறைவில் எண்ணான்க தென்ன உலகினில் கூறச் செய்தான்
மறைகள் நான் கேத்தும் செவ்வேள் மலரடி சென்னி சூட்டும்
அறவர்வாழ் செந்தில் மேவும் அருமருந் தையன் தானே.

றகரவெதுகை

32. குரங்கிமென் குழவி பூத்த கொழுஞ்சடை வள்ளல் தந்த
பரம்பரன் திணிதோள் கந்தன் பனிமலர்க்கடவுள் நான்கு
சிரம்துளங் கிடப்பு டைத்த சேவகன் தாளைப் போற்றி
உரங்கிளர்ந் திடுற கார எதுகையாப் பினையு ரைப்பாம்

33. பொற்புயர்ந் திடும்ற கார எதுகையில் போற்றும செய்யுள்
சொற்பெற ஒன்றோ டேநாற் பானெத் துலங்கச் செய்தான்
வெற்புறழ் நெடுங்க லாபச் சிகியிவர் விசாகன் பொற்றாள்
அற்பகல் வணங்கும் செந்தில் அருமருந் தையன் தானே.

னகரவெதுகை

34. வரைகிளர் அவுண மாரி சுவறிட வடிவேல தொட்டுத்
திரைகிளர் ஒலியின் எற்றும் தேவர்தம் சிறையை மீட்ட
நிரைகிள ராறி ரண்டு தோளவன் நிறததாள் போற்றி
உரைகிளர் னகார மாய எதுகைத்தூக் கோத லுற்றாம்

35. வடிவுயர்ந் திடுன கார எதுகையின் வழுத்தும் செய்யுள்
படிபுகழ் ஒன்றோ டேழுப் பான்எனப் பகரச் செய்தான்
துடியிடை மறமின் னாட்குத் தூய்மலர்க் கணியாய் நின்றோன்
அடியிணை இறைஞ்சும் செந்தில் அருமருந் தையன் தானே.

36. இருமையொன் றிய திருச்செந் தில்முரு கோனை ஏத்தும்
அருமருந் தையன் சொற்ற அரும்பொருள் விளக்கம் கற்றார்
பொருமுரண் தெறப்ப டுத்தும் புலமைநாற் றிறம்வி ளக்கும்
திருமருங் குறப்பொ ருத்தும் செருக்குடன் இருப்பர் தாமே.

பொதிகை நிகண்டு

தற்சிறப்புப் பாயிரம்

பூமாது புவிமாது போற்றுமுமை மாதும்
பொன்மலைவில் லியுமீன்ற கைம்மலையின் னுதித்தோன்
மாமாது குறமாது மணவாளன் செந்தூர்
வடிவேலன் அடிமலரை மனத்திடத்துள் நினைத்தே
கோமாது விரிந்தனைய பலநிகண்டும் பார்த்துக்
கும்பன்மகிழ் பொதிகைநிகண் டென்றொருநூல் பகர்ந்-
[தோன்
நாமாது புகழ் பொருநா நதிசூழ்கல் விடையூர்
நதிகுலன் சுவாமிகவி ராசசங்க நிதியே.

காப்பு

பொன்பூத்த வெள்ளிப் பொருப்பனும னோன்மணியு
முன்பூத்த வேழ முகத்தானே — இன்பூத்த
பூவணியல் போலப் பொதிகைநிகண் டைப்பாடப்
பாவணியல் ஈய்ந்துகாப் பான்

நாமதீப நிகண்டு

பாயிரம்

1. ஆனைமுக னைக்குகனை யாதிபுவ னேசொரியை
ஞானமுதல் கோரக்க நாதனையும் — மேன்மைபெறு
சாமிகவி ராசனையும் தாள்வணங்கிப் பேருரைப்பன்
பூமிதனி லுள்ள பொருட்கு.

2. ஒல்லு முயர்திணைப்பேர் அஃறிணையு யிர்ப்பொருட்பேர்
இல்பொருட்பேர் இப்பொருள்க ளின்குணப்பேர் — சொல் [படலம்
ஆம்ஒருநான் கிட்டிரண்டைந் தைந்துநால் வர்க்கமிட்டு
நாமதீ பம்பகர்ந்தேன் நான்.

3 தேவர்நரர் ஆமிரண்டும் சீர்பெறுநாற் கால்பறவை
ஊர்வன நீர் வாழ்வநிலை யோரைந்து — மேவியற்கை
செய்கையிடங் காலம் சினைஐந்தும் நாற்குணமும்
எய்துவர்க்கம் நாற்படலத் தே.

4. மனக்குணம்வாக் கின்குணமே மற்றுடலாற் செய்யும்
வினைக்குணம்இம் மூன்றுமுயிர் மேவும் — தனிப்பொருள்கட்
கேய்ந்தகுண மாகுமுயி ரில்பொருள்க ளின்குணமொன்
றாய்ந்தவிவை நாற்குணங்க ளாம்

5. பல்வடிவு நாற்றமிரண் டைந்துவண்ண மூறெட்டு
நல்ல சுவையாறு நான்களவை — வல்லோர்
புகலுமுயிர்ப் பில்லாப் பொருட்குணங்கள் ஆகும்
பகர்படல வர்க்கமுறை பார்.

6. திண்பார் புகழ்நாம தீபமோ ரெண்ணூறு
வெண்பாவும் சொற்செறிவான் மெய்த்தளையின் — பண்பு [சில்பா
வொற்றறுத்த லாதியகொண் டோர்கசில்பா தந்தொடைகள்
பற்றும் வகையுளியாற் பார்.

7 எந்தை பொதிகைநிகண் டென்றோர் சொற்பல்பெயரே
தந்தனன்காண் பல்கூட்டம் சாரொருபேர் — முந்தியான்
பன்னுந் தொகைநிகண்டிற் பார்க்கவிரி வாமவைகள்
இன்னசுருக் கத்தடங்கா வே.

8. பல்லா யிரநிகண்டிற் பண்டிதர்கள் சொன்னபொருள்
எல்லாம் எளிதா இனிதுணரக் - கல்லிடையூர்
மன்னுசிவ சுப்ர மணியன் கவிராயன்
பன்னுதமிழ் நாமதீ பம்.

பொருட்டொகை நிகண்டு

விநாயகர் துதி

அருட்கடல் விநாயகன் அடியினை இறைஞ்சிப்
பொருட்டொகை நிகண்டினைப் புகலுது மியாமே

நாநார்த்த தீபிகை

நூலாசிரியரின் மருகர் தமிழறிஞர் சுவாமிநாத பிள்ளை
இயற்றிய சிறப்புப் பாயிரம்

1. சீர்மருவு பாண்டிவளர் நாட்டினின் மலர்ப்பொழில்
செறிந்திலகு பாகையென்னும்
திவ்யநக ரதிபனுயர் கங்கைகுல திலகன்மிகு
சீர்த்திபெறு சைவரத்நம்
சிறந்திடு குணாகர னறக்கடன் மனர்க்குமுடி
செங்குவளை யணியன்மார்பன்
திகழ்கின்ற வடகலைக டென்கலைகண் முற்றுமுச்
சிக்கறுத் துளவு தேர்ந்தும்
ஏர்தரு தெலுங்குநா கரமுதல பாடைக
ளனைத்தையும் வரம்புகண்டும்
எல்லையில்லாதகலை வேட்கைய னனத்தைய
ரியற்றிய தவங்கடாமே
யெழில்கொளொரு வடிவுற் றெனப்பொறை தயங்குமெழு
தாயுதப் பெருமான்வரத்
தினிமைதரு மகவெனவு மாகிவளர் முத்துசுவா
மிக்கவி யிராசர் கோமான்
பார்மிசை யிலக்கிய மெனப்பல துறைக்கொடு
பரந்திய னிகண்டு முதலாப்
பற்பலகராதிகளை யுந்திரட் டியதிலுறு
பதரடைக ணீத்துநன் றாம்

பதங்களொடு சிற்சில்வட பதமுஞ் செறித்தழகு
பத்துற விருத்தவகையாற்
பகர்ந்தருளி நாநார்த்த தீபிகை யெனுஞ்சுவைகொள்
பாடலினை யாவரேனும்
ஓர்தலுற் றிடினுறு மனத்திரு ளிரித்தகல்
வுறும்பொருள் விளக்குசெயலால்
உயர்கலைக ளுக்குரிய பொருள்வகை யெணைத்தையு
முளற்குழ னளித்திடுதலா
லுலகுறு மிலக்கிய மெனுந்திரள்க ளுக்குமுத
லாயுறுதி பெற்ற செயலால்
உதயனென வுஞ்சுரர்க டருவதென வுங்கலைஞ
ருளமெனவு மொளிர்கின்றதே.

2. பற்பலநூல் கற்கினுமென் பாடித் தானென்
பயனிலவே யெழுத்தொடு சொற் பான்மை வந்த
வுற்பவமோர்ந் திலராயி னனைய தன்மைக்
குற்பவித்த முத்துசுவா மிக்க வீந்த்ரன்
அற்புதமாய்ப் பயில்பிரசங் கமதிற் சில்போழ்
தகப்படுபுல் லறிவரையு மாய்ந்த கேள்வி
விற்பனரும் வெல்லரிதென் றாலிந் நூலை
விண்டதவர் கொருவியப்போ விபுலை யீரே

3 புகழ்பெருகு கம்பனொடு மொட்டக் கூத்தன்
புகழேந்தி காளமுகின் முதல்வ ராய
முகமுறுநற் புலவர்கண்முன் மாய்ந்த தோரின்
முற்றவுநன் றிற்றைஞான் றுறினா வல்லீர்
தகவுளவிம் முத்துசுவா மிக்க வீந்த்ரன்
றன்முனெதிர்ப் பட்டவர்க டன்மை குன்றிப்
பகலவன்முன் மின்மினிபோ லாவா ரிச்சொற்
பயனுளவென் பதற்கவனூல் பகருஞ் சான்றே.

4 முன்னிலக் கிசைநூன் முதுவிலக் கியங்கள்
மொழிப்பிறழ் வடசொலான் முழுதுந்
துன்னிலக் கிதயத் துனிவட கலையாற்
சோதனை கண்டுசுத் தமதாப்

பன்னிலக் கியங்கட் இலக்கிய மௌவிப்
பதப்பொருள் பகர்ந்தனன் பாகை
தன்னிலக் கினில்வாழ் தருங்கவி முத்து
சுவாமியாந் தமிழ்ப்புர வலனே.

5. கம்பனுக்குங் கும்பனுக்குங் காளியொட்டக் கூத்தனுக்கும
கம்பனுக்கும் வாணி கருத்துருக்கும் — கம்பனுக்குங்
கொண்டனிகர் முத்து சுவாமிகுரு சாமிசெயுந்
தண்டமிழ்ப்ர சங்கமதிற் றான்.

தற்சிறப்புப் பாயிரம்

பரசிவம்

1. உலகமோர் மூன்று மேத்த வுயிர்க்குயி ராகி யெங்கும்
இலகிய கடவுள் பாதம் இறைஞ்சிமுன னோர்பன் னூலில்
சிலவெவ்வே றுரைத்த வெல்லாம் சேர்த்தொன்றாத் திரட்டி
[யோர்சொற
பலபொருள் எனுநா நார்த்த தீபிகை பகர லுற்றாம்.

திரிபுர சுந்தரி

2. தெரிதர நவினா நார்த்த தீபிகைக் கொருதீங் கின்றி
விரிவெலாஞ் சுருக்க மாக விளம்பிட வேண்டி யன்பாற்
றிரிபுவ நங்க ளீன்றத் தேவர்மூ வரையுந் தந்த
திரிபுர சுந்த ரித்தாய் சேவடி வணக்கம் செய்வாம்.

விநாயகர்

3. பதமார் பொருள்சொ னாநார்த்த தீபி கைப்பேர்ப் பனுவல்செயத்
திதமா விரும்பு மநமருண்டு தேம்பித் தளைபட் டுழலாமே
இதமாஞ் செம்பா கச்சொல்வள மீய மலர்ப்பொன் னடியேத்தி
மதமார் வெள்ளிக் கோட்டுமுக மாதங் கத்தை வணங்கு-
[வாம்.

முருகக் கடவுள்

4. கருங்கடற் சுருக்கி யுண்டு செந்தமிழ்க் கடல்வி ரிக்கும்
அருந்தவக் குறுமு நிக்கன் றருள்குரு பரன்றாள் போற்றி
வருந்துறா தையம் பேத மயக்கமு நீங்கப் பத்துத்
திருந்தழ கொடுநா நார்த்த தீபிகை செப்ப லுற்றாம்.

திருமால்

5. திருமறு மார்ப னுலகெலாம் புரக்குந்
திருநெடு மால்கல்வி பயிறற்
கொருமுத லென்னத் தொழத்தகுங் கடவுள்
உபயதா மரைப்பதம் பணிவாம்
வருககர ராதி னகரவீ றெதுகை
வைத்ததிற் கலப்புறா தடைவே
பொருள்பெற எழுத்தின் முறையினா நார்த்த
தீபிகை யெனவிது புகல்வாம்.

கலைமகள்

6. படிகவெண் ணிறத்த ளாய்ச்செம்
பதுமத்தோ னான்மு கத்தும்
குடிகொள்மெய்ஞ் ஞான மூர்த்தி
குசேசயப் பதம்வ ணங்கி
அடியொன்றி லிரண்டி லொன்று
மாகவோர் தொடையிற் செய்யுண்
முடியவோர் சொன்னா நார்த்த
முறைதர மொழிகின் றேனால்.

ஆசிரியர்

7. கந்தன் பழனிப் பதிக்குமரன்
கருணை பெறுசெண் பகக்கவிஞன்
மைந்தன் எழுதா யுதப்பெருமாள்
எனுநா வலர் கோன் வரமதனால்
வந்த வடியே னவிருதாள்
வணங்கிப் புகல்வன் வடநூற்சொற்
சேந்த மிழினும் பொருடொகுத்துச்
செயுநா நார்த்த தீபிகையே.

அவையடக்கம்

8. கற்பநா டுறுமைந் தர்க்கோர்
பாடமா மென்னக் கற்ற
விற்பன்னர் கொள்வ ராக
வேண்டுகொண் டடைசொற் கஞ்சிப்

பற்பல விருத்தத் தாலும்
பகர்ந்தவுந் தள்ளா ரென்றோர்
சொற்பல பொருளி னக்கம்
சொல்லின னகைநா ணாமே.

தமிழுரிச்சொற் பனுவல்

பாயிரம்

கடவுள் வணக்கம்

1. முத்தமிழ் முதுநான் முறைப்பட நாடி
மெய்த்தமி ழுரிச்சொற் பனுவல் விளம்புவன்
முத்தொழில் புரியு முதல்வன்
அத்தரு மாமல ரடியிணை தொழுதே.

— இது தற்சிறப்புப் பாயிரம்.

அடக்கியல்

2. பல்புல முற்ற பயமறி யாதேன்
சில்புலங் கொண்டிது செப்பின னேனும்
வெல்புல வாணர் விழுத்தமிழ் விருப்பால்
சொல்புலங் கொள்வர் தோமுண ராரே.

ஆக்கியோன்

3. பயன்மிகு முரிச்சொல் பகர்நூல பலவு
நயமுறத் தேர்ந்து நல்வகை நாடிப்
பிறமொழிச் சொற்களை நெறிபட நீக்கித்
தமிழுரிச் சொற்களின் றகுபுகழ் விளங்கப்
பைந்தமி ழுரிச்சொற் பனுவல் தந்தனன்
முதிர்புல மொளிர்மான் முருக நாவலனே.

பொது

4. தமிழ்நெறி வகையிற் றம்பொருள் படுநவும்
வழிவழித் தமிழக வழக்கிற் பயின்றவும்
தமிழெனக் கொள்வது தகுதி யாகும்.

மணி—இரத்தினம். இது வடமொழிக்கும தமிழ் மொழிக்கும் பொதுச்சொல். மண்ணப்பட்டு எடுப்பது மணி என்க. மண்ணல் என்பது கழுவித்தூய்தாக்கல், புனைதல், செப்பமிடல்

எனப்பொருள்தருமாதலின் தமிழ்ச் சொல்லுமாம். கலை கல்வி என்னும் பொருளில் தமிழ்ச் சொல், கல்-பகுதி. பிறவும் இவைபோல்வன காண்க வட்டு. பிட்டு, கஞ்சி என்றாற் போல்வன தமிழ்நாட்டில் அடிப்பட்டு வழங்கி வருவனவாத லின் தமிழ்ச் சொற்களாம்.

5. தென்மொழி வடமொழி யிரண்டிலும் பொருள்வே
றொன்றிய சொற்க ளொண்டமிழ் மொழிக்கும்
உரிய வாக லுணர்ந்து கொளலே.

நாமம்-பெயர். புகழ் என்னும் பொருளில் வட சொல்லாம்; அச்சம் என்னும் பொருளில் தமிழ்ச்சொல்லாம். நயம்-நீதி, நயித்தல என்னும் பொருளில் வடசொல்லாம், இன்பம், நலம், ஈரம், அன்பு என்னும் பொருட்களில் தமிழ்ச் சொலலாம் என்க,

6. எழில்வட நூல்களி னேற்புஉட மொழிசில
மொழிபெயர்த் தமைத்தனம் மொழிவளம் பெறவே.

7. இயல்புறு வழக்கிற் றமிழ்ச்சொ லருகிடத்
தியற்றமிழ் மரபின் வடித்தனம் சிலவே

அருகல் - குறைதல், இல்லையாதல்.

8 தமிழி னின்று வடமொ ழிக்கட்
சென்றன வெல்லாஞ் செந்தமிழ் மொழியே.

கேரள (சேரலன்), திரமிள (தமிழ்), க்ரமுக - (கமுகு) சீரா (கீரை) என்றாற்போல் எழுத்துத் திரிந்தும், குட (குடம்) பண (பணம்) என்றாற்போல எழுத்துத் திரியா தும் வடநூல்களில் வழங்குவனவற்றை வடசொற்கள் என்று மயங்கற்க. அவை தமிழ்ச் சொற்களேயாம் என்பது கருதிச் 'செந்தமிழ் மொழியே' எனத் தமிழைத் தமிழெனவே கூறலாயிற்று.

9. திகழ்தமிழ் மொழியி னின்றுவட மொழியிற்
புகலுறு சொற்களைத் தகுநெறி நோக்கி
வடசொல் லென்னார் தமிழெனக் கோடல்
கடன்முறை தெரிந்து கற்றோர் கடனே

10 வடமொழி தமிழ்மொழி யெனுமிரு மொழிக்கும்
பொதுவுற நின்றொரு பொருடரு சொற்கள்
தமிழ்மொழிக் கேற்குந் தகுதியு முடைய.

11 அடிச்சொ லொன்றா யமைந்துபல வடிவில்
இயலவன சொற்கள் பலவுள வவற்றுள்
புதுவோர் தமக்குப் புலனுற வேண்டித்
தொல்லோர் மரபிற் சொற்றனஞ் சிலவே.

அண்மை, அணிமை, அணுமை; நிலா, நிலவு; விழைச்சு, விழைவு; முரற்று, முயற்சி; விலகல், விலங்கல் என்றாற் போல்வன காண்க. முன்னோரும் இம்முறை கடைப் பிடித்துள்ளனர் என்பது 'திவாகரம்,' 'பிங்கலந்தை' முதலியவற்றிற் கண்டு கொள்க.

12 தொன்னெறி மரபு துணிதற்பொருட்டா
வழக்கினு ளருகின வழங்கின மேனும்
நடையியல் நோக்கி நவிலல் கடனே.

13 ஒருபொரு ளனவென வுரைதரு மொழிப்பொருட்
டிரிபுந் தத்தமிற் சிறிதுள வாகும்.

14 ஒருபொருட் பல்பெய ருரைத்தன வற்றுள்
வருபெயர்ப் பொருள்பட வருவன பிறவும்
மருவிய நெறியின் வழங்குதன் மரபே.

'கறைமிடற்றோன்' என்பதில் 'கறை' என்பது கருமையு நஞ்சுங்குறிக்கு மாதலால், 'கார்மிடற்றோன்,' 'நஞ்சணி மிடற்றோன்' என்பனவும் இறைவன் பெயராதற்குப் பொருந் தும் என்க 'அழலாடி' என்பதனொடு 'அனலாடி' என்ப தொக்கும். 'புலித்தோலன், என்பதனொடு 'உழுவை யுரி யான்' என்பதொக்கும் சித்திரை மீனுக்கு அறுவை என்ப தும் ஒருபெயராகலான், அறுவையொடு ஒருபொருளவாகிய 'ஆடை,' 'உடை' என்பனவும் அதற்குப் பெயராதல் ஒக்கும். வானும் விண்ணும் ஒருபொருளாயின், 'வானவர்' என்ப தனொடு 'விண்ணவர்' என்பதும் ஒக்கும். இவற்றுள், சில பகர்ந்தனம். பகராதனவும் இயைபுநோக்கி அமைத்துக் கொள்ளப்படும்

15 ஒருபொருட் கொருசொல் வருவன வற்றுள்
சிலகிளந் தனம்பொரு டெரிதற் பொருட்டே.

16 ஒருபொருட் கொருபெய ருரைக்க வேண்டினும்
பொருளது பெற்றி புகல வேண்டினும்
அப்பொருள் விளக்க மறையப் பெறுமே.

17 ஒருபொருட் பலசொலிற் பகரா தனவாய்ப்
பலபொரு ளொருசொலிற் பகர்ந்தன பலவும்
அருநெறி வழக்கென வறிதல் வேண்டும்.

18 பொருளிட முதலா வருவன பெயர்கள்
பண்பின் பெயராற் பகர நின்றுழி
வகுபெயர் பலவிட மருவலும் முளதே

19 கூறிய கூறினும் குற்ற மில்லை
வேறொரு பொருளை விளைக்கு மாயினென்
றோதிய நெறியி னுரைத்தன வெல்லாம்
ஏதமில் புலவ ரேற்பது கடனே.

20 வடசொல் லன்றென வகுத்தற் பொருட்டுந்
தமிழ்ச்சொல் வருநெறி தருதற் பொருட்டும்
அடிச்சொற் காட்டி யமைத்தன வுளவே.

'வாரி' என்பது 'நீர்' என்னும் பொருளில் வடமொழியிலும் வழங்குமாயினும், தமிழ்க்கும் உரியதென்பது காட்டுதற் பொருட்டு, 'வருநீர் மிகுதி வாரி' என்றனம். வருதலை (அல்லது மிகுதலை) உடையது 'வாரி' என்பது இதனால் பெறப்படும வாரி — அடிச்சொல்.

'வரிபட வேய்ந்த மலையி னுறுப்பு' என்றவிடத்து வரிவரியாக அடுக்கப்படுதலையுடை யது 'வாரி' என்பது பெறப்படும் 'வரி' என்பதன் றிரிபு வாரி என்பது.

21. ஒருபெயர்ப் பொருட்கப் பெயரே கூறின்
வழக்கியன் மிகுதியின் வகுத்தனர் கோடல்.

'வேய்தலும் வேய்தல்' என வேய்தலுக்கு வேய்தலையும் பொருளாகக் கூறின், வேய்தலின் பெரும்பான்மை வழக்கியற் பொருளாகிய 'மூடல்', 'மறைத்தல்', 'மிடைதல்'

என்பனவே பொருளாகக் கொள்க. 'வெறுப்பும் வெறுப்பே' என வெறுப்புக்கு வெறுப்பையே பொருளாகக் கூறின், பெரும்பான்மை வழக்கியற்பொருளாகிய 'உவர்த்தல்' என்பதே பொருளாகக் கொள்க.

22. உலகியல் வழக்கி னிலகுவ பலவும்
பிற்படு சொல்லாய்ப் பிறங்குவ பலவும
அருகிய வழக்கின் மருவிய பலவுந்
தக்க விடத்துத் தனிநூற் பாவிற்
கூறினந் தேர்ந்து கொள்ளுதல் கடனே.

23. இடமும் பொருளு மிடமும் பண்பும
பண்பும் பொருளும் பண்புஞ் செயலும்
ஒலியும் பண்பு மொலியுஞ் செயலும்
இயைந்தொருங் கியலும் பொருள்படு மொழிகள்
பலவிடத் துறினுந் தொகுதிக் கேற்பக்
குறித்த பொருளுட் கோடல் வேண்டும்.

'கட்டில்' என்பது படுப்பதற்குரிய இடமுமாகும், பொருளுமாம். எனவே, இடப்பெயர்த்தொகுதியிலோ பொருட்பெயர்த் தொகுதியிலோ அவ்விரண்டிலுமோ கொள்ளப்படலாகும் இடப்பெயர்த் தொகுதியில் வரின் இடமாகவும் பொருட்பெயர்த் தொகுதியில் வரின் பொருளாகவும் கொள்ளப்படும். பிறவும் இவ்வாறு காண்க.

'பரப்பு' என்பது பரந்த இடத்தைக் குறிக்கின் இடமாம். பரந்த தன்மையைக் குறிக்கின் பண்பாம். 'பச்சை' என்பது பசுமையைக் கருதின் பண்பாம். பசுமணியைக் கருதின் பொருளாம். 'சினத்தல்' என்பது சினத்தைக் கருதின் பண்பாம். சினக்குஞ் செயலைக கருதின் தொழிலாம். இது தொழிற் பண்பு 'அழைத்தல' என்பது அழைப்பொலியைக் கருதின் ஒலிப்பெயராம். அழைக்குஞ் செயலைக் கருதின் செயல்பற்றிய பெயராம்.

24 வடசொற் பலவுந் தமிழிடைப் புகுத்தல்
வேண்டா விடத்தும் வேண்டு மென்னுங்
கருத்துடை யவர்க்கு வருத்தந் தரினுஞ்

செந்தமி ழுழகிற் றினைப்பவர் தமக்கிப்
பனுவல் பெருமகிழ் பயப்ப தாமே.

25. சொற்றன வெல்லாங் கற்றவர் செய்யுளில்
பொருள்சிறி தகன்று பொருந்தலு மியல்பே.

26. உறுபொருட் பொதுமையி னொருபொருட் பலசொலென்
றுரைத்தன வெல்லா முணர்வுற நோக்கின்
செப்பிய பொருளிற் சிறிதுவேறு படுமே

27. இன்னிடத் தின்னசொ லியையுடைத் தென்று
முன்னி வழங்கன் மொழிமர பாகும்.

28. உலகியன் மொழிக ளளவில வாகலின்
செய்யுட் குரியன செப்புமிந் நூலே.

4

நிகண்டுகளில் பொருட்பாகுபாடு

தமிழ் நிகண்டுகளுக்கு எல்லாம் தாயாய்த் திகழ்வது திவாகர நிகண்டு. திவாகரர் தெய்வப்பெயர் முதலாகப் பன்னிரண்டு தொகுதியாகத் தம் நிகண்டினைப் பாகுபடுத்தியுள்ளார்; ஒவ்வொரு தொகுதியிலும் சேரத்தக்க பொருள்கள் எவையெவை என்பதையும் ஆராய்ந்து கண்டனர். மேலும், அப்பொருள்கள் பற்றிய உலகவழக்குச் செய்யுள் வழக்குகளை ஆராய்ந்து அறிந்த நுண்ணறிவின் துணையால அவற்றின் பெயர்களையும் ஒருங்கு தொகுத்துத் தருகின்றார். பற்பல பொருளுக்குமுரிய பெயர்களைத் தொகுத்துக்கூறுமிடத்து முன்னையோர் கூற்று இது என்று சுட்டிச் செல்வதை நூல் முழுமையிலும் அங்கங்கே காணலாம். 'அறைவர்' 'இசைப்பர்' என்று இவ்வாறு பொதுப்படச் சுட்டிச் செல்வது ஒருவகை இன்னும் சில இடங்களில், 'புகன்றனர் புலவர்' 'நவின்றனர் புலவர்,' 'விளம்பினர் புலவர்' என்று புலவர் மரபு இதுவாகும் என்றும் எடுத்துரைக்கின்றார். 'முந்தையோர்', 'மதிநூற் புலவர்' என்றுப்கூட முன்னோர் கருத்துகளை நினைவு கூர்ந்து குறிப்பிடுகிறார். *

இங்கே இவர் சுட்டிக்கூறும் முந்தையோர் தொல்காப்பியர் முதலாக வரும இலக்கிய இலக்கணம், இசை, நாடகம், மற்றும் அறிவியல்

* திவாகரத்துள் வரும் முந்தையோரைக் குறிக்கும் சொல் - தொடர்களாவன - அறைவர், இசைப்பர், என்ப, என்மனார் புலவர், கருதுவர், கூறுவர், செப்புவர், நவின்றனர்புலவர், நவின்றிசினோர், நிகழ்த்தினர், புகன்றனர் புலவர், மதிநூற்புலவர், முந்தையோர், வரையார், விளம்பினர்புலவர்.

துறைகள் ஆகியவற்றில் நூல்கள் செய்தளித்த ஆன்றோர்களை யெல்லாம் கருதுவதாகக்கொள்ளலாம். திவாகரர் மரபினை ஒட்டியே தான் பின்னால் வந்த நிகண்டு நூல்களும் அமைகின்றன. பின்னை யோரும் திவாகரரை அடியொற்றிப பல இடங்களில் முந்தையோர் வழக்கு எனச் சுட்டிக்காட்டும் மரபினை மேற்கொண்டுள்ளனர். தெய்வப்பெயர், மக்கட்பெயர் முதலிய ஒவ்வாரு தொகுதியிலும் திவாகரரின் அமைப்பினை அடிநிலையாகவைத்தே தான் ஏனையோரும் சென்றுள்ளனர்

திவாகரரை அடுத்து வந்தவர் பிங்கலர். திவாகரரின் புதல்வர் என்றே இவரைக் குறிப்பிடுவர்.

‘ செங்கதிர் வரத்தால் திவாகரர் பயந்த
பிங்கல முனியெனத் தன்பெயர் நிறீஇ ’

என்பது பிங்கல நிகணடின் சிறப்புப்பாயிரம். இன்னும் சிலர் ‘பயந்த என்பதுகொண்டு திவாகரரின் மாணாக்கர் இவர் என்பர். எவ்வாறு கொள்ளினும் திவாகரரை அடுத்து அவர் செய்ததுபோலவே நூற்பாவினால் தமிழ் நிகண்டு நூலைப் பிங்கலர் இயற்றியுள்ளார் என்பது தெளிவு திவாகர நூற்பாக்களை அடியொற்றியும் பிங்கல நிகண்டிற் பல நூற்பாக்கள் உள்ளன. என்றாலும் தொகுதிகளை அமைக்கும் முறையில சற்று வேறுபட்ட முறையில் பத்துத் தொகுதிகளாகப் பிங்கலர் கொள்வர். அங்கங்கே சிற்சில மாறுதல்களையும் விரிவையும் பிங்கலர் மேற்கொண்டாலும் மொத்தத்தில் திவாகரத்தைத் தழுவியதே அவருடைய நூல் என்பது நன்கு விளங்கும்

பிங்கலருக்குப் பின்வந்த நிகண்டாசிரியர்களுள் கைலாச நிகண்டு சூளாமணி இயற்றிய கைலாசம் என்பவர் மட்டுமே பிங்கலரின் அமைப்பு முறையைத தழுவி நூல் செய்திருப்பாகத் தெரிய வருகிறது. கைலாச நிகண்டு முழுமையாய் அச்சிடப்படாத நிலையில் இரண்டற்குமுள்ள ஒப்புமைகளைப் பற்றி எதுவும சொல்வதற்கில்லை. இவ்விருவரைத் தவிர ஏனையோர் எல்லாம் திவாகரரின் தொகுதி அமைப்பு முறையையே தழுவியுள்ளனர்.

திவாகரர் இயற்றிய திவாகரத்துள் பன்னிரண்டு தொகுதிகள் உள்ளன அவையாவன :

1. தெய்வப்பெயர்த் தொகுதி
2 மக்கட் பெயர்த் தொகுதி

3. விலங்கின் பெயர்த் தொகுதி
4 மரப்பெயர்த் தொகுதி
5. இடப்பெயர்த் தொகுதி
6. பல்பொருட் பெயர்த் தொகுதி
7. செயற்கைவடிவப் பெயர்த் தொகுதி
8 பண்புபற்றிய பெயர்த் தொகுதி
9. செயல்பற்றிய பெயர்த் தொகுதி
10. ஒலிபற்றிய பெயர்த் தொகுதி
11. ஒருசொல் பல்பொருட்பெயர்த் தொகுதி
12 பல்பொருட் கூட்டத் தொருபெயர்த் தொகுதி

இவ்வாறே உரிச்சொல் நிகண்டு பாரதிதீப நிகண்டு, சூடாமணி நிகண்டு ஆகியவையும் பன்னிரண்டு தொகுதி கொண்டனவாய்த் திவாகரர் நூற்பொருளை ஒட்டிய அடைவிலேயே அமைந்துள்ளன. முதல் தொகுதியைத் 'தேவப்பெயர்த்தொகுதி' என உரிச்சொல் நிகண்டும சூடாமணி நிகண்டும் குறிப்பிடுகிறது. இப் பெயர் தெய்வப பெயர்த தொகுதிக்கு மாற்றுப் பெயரே தவிர பொருளவேறுபாடு எதுவும் இல்லை.

சுயாதர நிகண்டு பொருட்பகுதிகள் ஒவ்வொன்றையும் 'தெய்வப் பெயரியல்' என்றாற்போல 'இயல்' என்னும் பெயரால் சுட்டியுள்ளது. திவாகரத்தில் ஐந்தாவதாக வைக்கப்பெற்றுள்ள இடப்பெயர்த்தொகுதியை இவர் இரண்டாவதாக வைத்துள்ளார். பன்னிரண்டாவதான பல்பொருட்கூட்டத் தொருபெயர்த் தொகுதி இந்நூலுள் இலலை. ஏனைய தொகுதிகளின் பொருள்களிலும் முந்திய திவாகரர் முதலியோருக்கு மாறுபடவில்லை.

'வளர்ந்த முதலூல் வழிநூல் வழிச்சென்று மற்றவையும்
அளந்து சிறியோ ரறியும் படிபெரி யோரருளால்
தளர்ந்தன நீக்கி யுரித்தாய சொல்லைத் தமிழ்ப்படுத்தான்
கிளர்ந்த பெரும்புகழ்ச் சோமீசன் தேவைக் கெயாதரனே'

என்னும் பாயிரப் பகுதியால் (2) இவர் முதனூல் வழிநூல்வழித் தம் நிகண்டை ஆக்கியுள்ளமை தெரியவரும். இங்கே இவர் குறித்த முதனூல் திவாகரமும், வழிநூல் பிங்கலம், உரிச்சொல் ஆகிய நிகண்டு களும் ஆதல் வேண்டும். இந்நிகண்டு பெரிதும் திவாகரத்தை தழுவிச் செல்லுகிறது. மொத்தத்தில் பதினொரு தொகுதிகள் கொண்டது இந்நூல். கட்டளைக்கலித்துறைப்பாவாலாகிய இந்நிகண்டு நூலில் பாடல்களை அந்தாதித் தொடை அமையச் செய்திருப்பது தொடர்ந்து மனப்பாடம் செய்வார்க்கு எளிதாகும்.

கயாதரத்தைப்போலவே பதினொரு தொகுதிகொண்டு அமைந்-துள்ளது ஆசிரிய நிகண்டு.

'ஏரா சிரியநிகண் டென்னுமீ ரைந்தொன்று
சீரார் தொகுதியதாச் செப்புதற்கே - ஓராரைச்
சேரானைச் சேர்ந்தாரைச் சேரும் வினையகற்றுங்
காரானை மாமுகன்றாள் காப்பு"

என நூல் முதலில் வரும் காப்புச் செய்யுளில் ஆசிரியர் ஆண்டிபுலவர் பதினொரு தொகுதி கொண்டதாகவே தம் நூலை ஆக்குவதாகக் குறித்துள்ளார்

முந்துள திவாகரம் பிங்கல நிகண்டுசீர்
முந்துகாங் கயனுரிச்சொல்
முறைபெறு கயாதரம் பகருமக ராதியிவை
முற்றுமொன் றாய்த்தி ரட்டி
இந்நிலந் தன்னுளோ ரெவருமறி யும்படிக்
கெண்ணியா சிரியத்தினால்
இயம்பிய நிகண்டுமுறை றறிநன்னூல் முறைமையும்
இரண்டுமே செய்துவைத்தேன்' (பாயிரம் – 1)

என்னும் பாயிரப் பகுதியால் திவாகரம், பிங்கலம், உரிச்சொல், கயா-தரம், அகராதி நிகண்டு என்னும் ஐந்து நிகண்டுகளுக்கும் பின்வந்தது ஆசிரிய நிகண்டு என்பது தெரியவரும். மேலும் இந்நூலில் திவாகரம் போலத் தொகுதியடைவு கொண்டமையையும் பின்வரும் பாயிரப் பகுதி தெளிவுற விளக்குகின்றது.

'எண்ணருந் தெய்வமது முதலிரண்டாவ
தெழின்மக்கள் மூன்றாவது
விலங்கிட்டு நாலாவது மரங்களைந் தாவதிட
மிருமூன்று பல்பொருட்பின்
நண்ணுமே ழாவது செயற்கை யெட்டாவது
நயந்தபண் பொன்பதுசெயல்,
நவின்றபத் தொலியொழிவு பதினொன் றெனுந்தொகுதி
நாட்டித் திவாகரம் போல்
மண்ணுளோ ரறியப் பகுத்தனன்.' (பாயிரம்-2)

திவாகரம்போல் நாட்டியவராகிய ஆண்டிப் புலவர் பத்துத் தொகுதிக்குமேல் 'ஒழிவு' என்று குறிப்பிடுகிறார். இதிலிருந்து திவாகரர் நூலிலுள்ள 11, 12 ஆம் தொகுதிகளை இவர் பதினொன்றாந் தொகுதியாகச் சேர்த்து அமைத்துள்ளனராதல் வேண்டும். எனக் கருதலாம் இந்நூலுள் முதல 8 தொகுதிகளே அச்சில்வெளிவந்துள்ளன ஏனைய பகுதிகளும் கிடைத்து அச்சில் வெளிவந்தால்தான் எட்டுத் தொகுதிக்கு மேல் இவர் நூல் அமைந்துள்ள நிலை தெரிய வாய்ப்புண்டு.

பின்னால் வந்த பொதிகை நிகண்டிலும் அண்மையில் உருவாய் வெளிவந்துள்ள தமிழுரிச் சொற்பனுவலிலும் பல்பொருள் கூட்டத் தொருபெயர்த் தொகுதி இல்லை. ஏனைய பதினொன்றையும் பத்துத் தொகுதிகளில் இவ்விருவரும் அடக்கிக் கொண்டுள்ளனர் பொதிகை நிகண்டுப் பாடல்களும் கயாதரத்தைப்போல் அந்தாதியாய் உள்ளன.

பொதிகை நிகண்டு இயற்றிய சாமிநாத கவிராயர் திவாகரம் 6, 7 ஆம் தொகுதிகளில் வரும் பொருள்களை ஒன்றாயிணைத்து, 'இயற்கை செயற்கைப் பல் பொருட் பெயர்த்தொகுதி' என்று ஒரு தொகுதியாக்கி யுள்ளனர். இதனால் இந்நூலுள் பத்துத் தொகுதிகள் அமைந்தன. செயல்பற்றிய பெயர், ஒலிபற்றிய பெயர் என்பவற்றைத் திவாகரர் 9, 10 தொகுதிகளாகக் கொண்டிருக்க இவர் தலைமாறி ஒலி, செயல் ஆகியவற்றை முறையே 8, 9 ஆகக் கொள்வர். என்றாலும் அவ்வத்தொகுதிப் பெயர்களும் பொருளடைவும் பெரும்பாலும் திவாகரம் போலவே அமைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் தமிழுரிச்சொற்பனுவல் இயற்றிய மான்முருக நாவலரும் பல்பொருட் கூட்டத்தொருபெயர்த் தொகுதியைத் தனிப்படக் கொண்டிலர். பிங்கலநிகண்டு, பொதிகை நிகண்டு போலவே இவரும்

பத்துத் தொகுதி கொண்டுள்ளார். செயற்கை வடிவப்பெயரெனத் தனியாகக் கொள்ளாது பல்பொருட் பெயருடன் அதனையும் அடக்கி 5-ஆவது தொகுதியாக வைத்துள்ளார். திவாகரத்தில் 5- ஆவதாகக் காணப்படும் இடப்பெயர் இந்நிகண்டில் 6 - ஆவதாக வருகின்றது. மேலும், செயல் பற்றிய பெயர் என ஏனைய நிகண்டுகள் கூறியதனைத் 'தொழிற் பெயர்' என்னும் பெயரால் இவர் தனித்தொகுதியாக்கியுள்ளார்.

ஒருபொருட்பல்பெயர் உரைக்கும் நிகண்டுகளுள் இன்னும் எஞ்சியவை பிங்கல நிகண்டும், நாமதீப நிகண்டுமாகும். இவ்விரண்டும் பொருள்களைப் பாகுபடுத்திய முறையில சிற்சில மாறுபாடுகள் உண்டு. திவாகரர் உரைத்த பொருட்பாகுபாட்டுக்குரியவற்றையே வேறொரு வகையில் இவ்விருவரும் முறைப்படுத்துவராயினர்.

தெய்வப்பெயர்த்தொகுதியில் திவாகரர் விவரித்துள்ள பொருள் களைப் பிங்கலர் வான்வகை, வானவர் வகை என்று இரண்டாகப் பிரித்துள்ளார் ஐயர்வகை என இவர் உரைக்கும் மூன்றாவது பிரிவுச் செய்தி திவாகரம் மக்கட்பெயர்த்தொகுதியில் உள்ளது. மேலும், அச்சிட்டுள்ள பிங்கல நூல்களில் இந்தத் தொகுதி பெரிதும் ஐயத்திற் கிடமாயுள்ளது. முதல் 10 நூற்பாக்களே இப்பெயருக்கு இயைபுடையன. ஏனைய எல்லாம் திவாகரத்தின் 12-ஆம் தொகுதியில் இடம் பெற்றுள்ள தொகைப்பெயர் விளக்கமாகும். இது ஐயர்வகையுள் கலந்து அச்சாகியிருப்பது ஏடுகளின் பிறழ்வினாலா என்பது ஆராய்ந்து துணியவேண்டிய ஒன்றாகும். திவாகரத்துள் இரண்டாவதான மக்கட் பெயர் பிங்கலத்தில் ஐந்தாவதான 'ஆடவர்' வகையுள் தரப்படுகிறது. திவாகரத்துள் ஐந்தாவதாய் இடம்பெற்ற இடப்பெயர்த் தொகுதி இந்நூலுள் நான்காவதாக 'அவனிவகை' என்று வைக்கப்பெற் றுள்ளது.

'அனுபோகவகை' எனப் பிங்கலத்துள் காணப்படும் 6-வது பகுதி திவாகரத்துள் 6,7-ஆம் தொகுதிகளாக வரும் பல்பொருட் பெயர், செயற்கை வடிவப் பெயர்த் தொகுதிகளில் தரப்பட்டுள்ள பெயர்களே. இந்த அனுபோக வகைப்பகுதியை உணவின்வகை தொடக்கமாக இல்லணிவகை ஈறாக இருபது வகைகளாகப் பகுத்துத் தந்துள்ளார். இது பொருட்பாகுபாடுபற்றிய ஒருதெளிவான விளக்கமாகவும் இந் நிகண்டில் உள்ளது. முதற்கண் உண்பன, அணிவன, உடுப்பன, பூசு வன, சூட்டுவனவற்றின் வகைகள் உள்ளன. இறுதியாக வைக்கப் பட்டுள்ள இல் லணிவகை இரண்டாவதான பூணின் வகையை

அடுத்து வருதல் பொருத்தமாகும். பூணின் வகையை அடுத்து இரத்தினவகை, உலோகவகை ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன. அடுத்து இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் பற்றிய விளக்கங்கள் 8, 9, 10-ஆம் வகைகளாகத் தரப்பட்டுள்ளன. இதன்பின் 11 முதல் 19 வரையுள்ளன எல்லாம் படைகள் பற்றிய செய்திகளை மிகுதியும் கொண்டுள்ளன.

பண்புபற்றிய பெயர், செயல்பற்றிய பெயர், ஒலி பற்றிய பெயர் எனத் திவாகரத்துள் வரும் 8, 9, 10-ஆம் தொகுதிகள் பிங்கலத்தில் 'பண்பிற்செயலின் பகுதிவகை' என ஏழாவதாக இடம்பெறுகிறது. இந்த ஏழாவது பிரிவின் உட்பிரிவுகளாக 12 வகைகள் உள. உள்ள நல்ல வகை, உள்ளத்தின் தீயவகை என்பன உள்ளப்பண்பு செயல் பற்றிய பெயர்களை விளக்குவன. அடுத்து மெய், வாய், கண், மூக்கு, செவி, ஆகிய ஐம்பொறிபற்றிய பண்பு செயல்கள் காணப்படுகின்றன. இதன்பின் கைவகை கால்வகை என்பன உள. இறுதியில் முயற்சி வகை, அளவின்வகை, காரணவகை பல் பொருள் வகை என்னும் நான்கும் அமைந்துள்ளன.

திவாகரத்துள் 3,4 ஆம் தொகுதிகளாகவுள்ள விலங்கின் பெயர், மரப்பெயர் ஆகியவை பிங்கலத்தில் மாப்பெயர் வகை மரப்பெயர் வகை, என 8, 9 ஆம் தொகுதிகளாய் உள்ளன. மாப்பெயர்கள் புள்வகை, விலங்கின் வகை, பாம்பின் வகை சலசரவகை என நான்கு வகைப் படுத்தி அமைக்கப்பட்டுள்ளன. விலங்கின் வகையில் அவை பற்றிய ஆண்மரபு பெண்மரபு, பிள்ளைமரபுகளும் விளக்கப் பட்டுள்ளன மரப்பெயர் வகையில் மரம், செடி, கொடி, புல், பூண்டு, அவற்றின் பூ, காய், கனி, விதை எல்லாம் இடம்பெற்றும் அவற்றைத் தனித்தனிப்பகுதியாகப் பிங்கலர் பிரித்திலர். இப்பகுதியையும் மரவகை, செடிவகை, மருந்துவகை, மரவுறுப்புகள், கொடிவகை, நறுமணமரவகை, பூவகை, தானியவகை, புல்வகை, நீர்த்தாவரவகை என்ற அளவில் முறையே வகைப்படுத்தலாம்.

திவாகரம் 11–ஆம் தொகுதியான ஒருசொல் பல்பொருள் உரைக்கும் பகுதி பிங்கலத்தில் 10-ஆவதான இறுதித் தொகுதியாய் உள்ளது. இவ்வாறாகப் பிங்கலத்தில் ஓரினப்பொருள்கள் ஒருங்கு தொகுத்து வகைப்படுத்திக் கூறும் பாங்கு காணப்படுகிறது.

நாமதீப நிகண்டு இயற்றிய சிவ சுப்பிரமணியக் கவிராயர் ஒரு பொருட் பல்பெயர்களை மட்டுமே எடுத்துத் தொகை வகைப்படுத்தித் தம் நூலை அமைத்துள்ளார் பெரும் பிரிவைப் ‘படலம்’ என்றும் அதனுள் வரும் சிறுபகுதிகளை ‘வர்க்கம்’ என்றும் கூறுபடுத்தியுள்ளார் உயர்திணை, அஃறிணை உயிர்ப்பொருள் அஃறிணை உயிரில் பொருள், அவ்விருதிணைகளின் குணம் என்னும் நான்கு பெரும் பிரிவுகள் இந்நிகண்டில் உள்ளன. முதற்பிரிவாகிய உணர்திணைப் படலத்தில் தெய்வ வர்க்கம், மானிட வர்க்கம என இரு பகுதிகள் உள.

அஃறிணைப் பொருள்களைப் பொறுத்தவரையில் அஃறிணையுயிர்ப்பொருட்படலம், அஃறிணையுயிரில் பொருட்படலம் என இரு பெரும் பிரிவுகள் உள்ளன முன்னதில் நாற்காலுயிர்ப்பொருள் வர்க்கம், பறவையுயிர்ப்பொருள் வர்க்கம், ஊருயிர்பபொருள் வர்க்கம், நீர்வாழுயிர்ப்பொருள் வர்க்கம், தாபரவுயிர்ப்பொருள் வர்க்கம் என ஐந்து கூறுகள். பின்னதிலும் ஐந்து கூறுகள காணப்படுகின்றன அவை யாவன: இயற்கைப்பொருள் வர்க்கம், செயற்கைப்பொருள் வர்க்கம், இடவர்க்கம், காலவர்க்கம், சினைவர்க்கம் என்பனவாம்.

உயிர் உயிரில் பண்புகளை விளக்கும் நானகாவது பெரும்பகுதி குணநாமப்படலம் என்பது. இதனை உயிர்ப் பொருள் குணவர்க்கம் உயிரில்லாபொருட் குணவாக்கம் என இருபகுதிகளாகப் பிரித்துள்ளனர். இவற்றுள் உயிர்ப்பொருள் குணவர்க்கம் மனக்குணவர்க்கம், வாக்குக் குணவர்க்கம், செயற்குணவர்க்கம் என மூவகையாகப் பகுக்கப்பட்டுள்ளது ஆகவே, குணநாமப் படலத்தில் நான்கு வர்க்கங்கள் இடம்பெறுதல் காணலாம்

நாமதீப நிகண்டில் ஒருபொருட்பல்பெயர் உயர்திணை அஃறிணை வகைப்பட்ட பலவேறு வர்க்கங்களாகப் பிரித்துள்ளமையை நோக்கினால், பொருள்களை வகைப் படுத்துவதில் ஆசிரியர் கொண்டுள்ள ஆய்வுத்திறம் நன்கு புலனாகும் இவர் தம் பொருட்பாகுபாடு சிந்தனைக்கு விருந்தாய்ப் பொருள்களைப் பற்றிய தெளிவான வரையறையும் கொண்டுள்ளது நிகண்டு ஆய்வில் இவர் செய்துள்ள பாகுபாட்டுமுறை நல்ல வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

நாமதீப நிகண்டில் வகுததுக் காட்டப்பெற்ற பெயர்ப்பாகுபாடுகள் எல்லாம் திவாகரர் முதலியோர் பகுத்துக் காட்டிய பொருள்களின அடிப்படையில் அமைந்தனவே திவாகரத்தின் முதலிரண்டு

தொகுதிகள் உயர்திணைப்படலத்தில் அடங்கியிருக்கின்றன. மக்கட் பெயர்த் தொகுதியில் மாந்தரின் உறுப்புகளுக்குரிய பெயர்களும் திவாகரத்துள் காணப்படும். மக்கள் உயர்திணையாயினும் அவர்தம் உறுப்புகளைத் தனித்தெண்ணும் போது அஃறிணையேயாம். அதனால் நாமதீப நிகண்டின் மூன்றாவது படலத்தின் இறுதி வர்க்கமாகிய சினை வர்க்கத்தில் அவை காணப்படும்.

தெய்வப் பெயர்த் தொகுதியில் காலவகைப் பெயர்களும் திவாகரம் முதலியவற்றில் காணப்படும். காலம் சொல்வகையால் அஃறிணையாய்ப் பொருள் வகையில் உயர்திணையாகப் போற்றப்படுவது தொல்காப்பியர் கிளவியாக்கப் பகுதியில், காலம், உலகம், உயிர், உடம்பு முதலியவற்றைத் தனியொரு நூற்பாவில் எடுத்துக்காட்டி இவை சொல்வகையால் பால்பிரித்துணரப்படாவிடினும் உயர்திணை மேலன என்று எடுத்துக்காட்டுதலும் ஈண்டுக் கருதத்தகும். எனவே, காலம் பற்றிய பெயர்களைத் தெய்வப் பெயர்த்தொகுதியில் அவர் இணைத்துள்ளார். நாமதீபத்தின் மூன்றாம் படலத்தில் 'காலவர்க்கம்' தனியாக வைக்கப்பட்டுள்ளது.

அஃறிணை உயிர்ப்பொருட் படலப்பகுதியில் திவாகரம் முதலிய நிகண்டுகள் வகுத்துக் காட்டும் விலங்கின் பெயர், மரப்பெயர்கள் இடம் பெறுதல் காணலாம்

அஃறிணை உயிரில் பொருட்படலத்தில் இயற்கைப்பொருள் வர்க்கம், செயற்கைப் பொருள் வர்க்கம் என வரும் இருபகுதிகளும் திவாகரர் முதலியோர் தரும் பல்பொருட்பெயர், செயற்கை வடிவப்பெயர்களை விளக்குவனவாம். இப்படலத்தில் வரும் 'இடவர்க்கம்' ஏனைய நிகண்டுகளில் இடப்பெயர்த் தொகுதியாக வரும் பகுதியேயாம்.

திவாகரம் முதலிய நிகண்டுகளில் காணப்படும் பண்புபற்றிய பெயர், செயல்பற்றிய பெயர் என்னும் இரண்டு தொகுதிப் பொருள்கள் இந் நிகண்டின் குணநாமப் படலத்தில் அடங்கிவிடுகின்றன.

இவ்வாறாக ஒப்பிட்டுப் பார்த்தோமானால் திவாகரர் முதலியோர் ஒருபொருட் பல்பெயர் பற்றி அமைத்த தொகுதிகளில் உள்ள பொருள்களையே நாமதீபம் தொகை, வகை, விரியில் மாற்றி உயர்திணை அஃறிணை என்னும் இருபேரச்சில் அமைத்துத் தந்துள்ளது என்பது விளக்கமாகும். நிகண்டுப் பொருள்களைத் தெளிவுபடுத்தி விளக்கும் வகையில் நாமதீப நிகண்டு இயற்றிய சிவசுப்பிரமணியக் கவிராயர் ஒரு புதுநெறி கண்டவர் என்னும் போற்றுதலுக்குரியவராவர்.

நிகண்டுகளில் ஒருசொற் பலபொருட் பகுதி

இனி, ஒருசொல் பலபொருள் தரும் நிகண்டுகளின் அமைப்பு ஒப்புமைகளைக் காண்போம். நிகண்டுகளில் ஒரு சொல் பல பொருள் தரும் பகுதி சொற்பொருள் தெரிவதற்கு மிகவும் துணை செய்யும் பகுதி. இந்தப் பகுதியை திவாகரரும் பிங்கலரும் தொல்காப்பிய உரி யியலின் அமைப்பில் ஒருவகை எதுகைமுறை தழுவி நூற்பாவால் செய்தனர். ஆசிரியர் அமைத்த முறையை இந்நூலைப் பதிப்பித் தவர்கள் மேற்கொள்ளாதொழிந்தனர். அகராதிமுறை வழக்கத்திற்கு வந்த பிற்காலத்தில் திவாகரம் பதினொன்றாம் நிகண்டுப்பகுதியை ஆதியிற் பொருள், அந்தத்துப் பொருள் என இருகூறுபடுத்து அமைத்தனர். இவ்விரு கூறுகளிலும் சொற்களை அகராதி முறையில் அமையுமாறு கொண்டு நூற்பாக்களை மாற்றித் தந்தனர். இம் மாற்றம் கி. பி. 1702-ஆம் ஆண்டுக்கு முன்பே நிகழ்ந்தது. எனவே, திவாகரர் அமைத்த முறை மாறி இப் புதுமுறைப்படியும் ஏடுகள் அமையலாயின. இம்முறையையே திவாகரப் பதிப்பாசிரியர்கள் பின் பற்றி வந்துள்ளனர். திவாகரப் பதினொன்றாம் தொகுதி முற்றுமே சொற்களை அகர வரிசையில் கொண்டு நூற்பாக்களை மாற்றி அமைத்த முறையும் ஏட்டுப்பிரதியில் காணப்படுகிறது

பிங்கல நிகண்டை முதல்முதல் பதிபித்த சிவன்பிள்ளை ஒரு சொற் பல் பொருள் வகையான பத்தாம் தொகுதியை ஆசிரியர் அமைத்த முறையில் பதிபபித்திலர். சொற்களை அகராதி முறையில் கொண்டு அதற்கேற்ப நூற்பாக்களை மாற்றி அமைத்து அகரவர்க்கம் முதல் வகர வர்க்கம் ஈறாகப் பத்துப்பகுதிகளாக அச்சிடலாயினர். இந்த இரு நூல் களிலும் பதினொன்றாம் தொகுதியாகிய ஒரு சொற் பல்பொருள் ஆசிரியர் அமைத்த முறையில் இதுவரை அச்சிடப்பெறவேயில்லை.

அகராதி முறையிலே இரேவணசித்தர் 1594-ல் 'அகராதி நிகண்டு' எனப் பெயரிய ஒருசொல் பல்பொருள் விளக்கநூலைத் தந்துள்ளார் இதில் ஒவ்வொரெழுத்திலும் ஒருபொருள் முதல் 46 பொருள்கள் வரை முறையே விளக்கம் தரும் நிலை உள்ளது முதலெழுத்து அகர வரிசையே தவிர அகராதி முறையை முழுமையாய்த் தழுவியமைந்த தன்று இந்நூல். திவாகரம், பிங்கலம் போன்று நூற்பாவால் அமைந்தது இந்நிகண்டு நூல். இதனை 'இரேவணாத்திரியர் சூத்தி ரம்' என்றும் 'சூத்திரவகராதி' என்றும் ஏடுகள் குறிப்பிடுகின்றன.

இது போன்று நூற்பாவில் அமைந்த ஒரு சொல் பலபொருள் விளக்க நூல் பின்னாளில் வந்த பொதிகை நிகண்டின் இரண்டாம்

பாகமாகும். இதில் அகராதி முறை பெரும்பகுதியிலும் தெளிவுற நன்கு அமைந்துள்ளது. அகரவர்க்கம், ஆகார வருக்கம் என எழுத்து வருக்கம் மாறும்போது வருக்கம் சுட்டும் தலைப்பும் காணப்படுகிறது.

நூற்பாவினாலியன்ற தமிழுரிச் சொற்பனுவலில் ஒருசொல்பல பொருள் விளக்கும் சொற்களை அகராதி முறையில் கொண்டு விளக்கம் அமைக்கப்பட்டுள்ளது.

நூற்பா அமைப்புடைய நூல்கள் மனப்பாடம் செய்வதற்கு எளிதல என்று கண்டு எதுகைமுறையில் சொற்களை அமைத்து, விருத்தப் பாவில் சொற்பொருள் விளக்க முற்பட்டார் சூடாமணி நிகண்டு இயற்றிய மண்டலபுருடர். ககரம் முதல் னகரம் ஈறாகப் பதினெட்டு எழுத்துகளும் எதுகையால் அமைய இவர்தம் சொற்பொருள் விளக்கப் பகுதி உள்ளது. இம்முறையில் பின்னாளில் களத்தூர் வேதகிரி முதலியார் சூடாமணி நிகண்டின் 310-பாடல்களுக்கு மேலாகப் புதிய சொற்பொருள்கள் பற்றிப் பாடி 583 பாடல்களில் ஒரு நூலை ஆக்கினார். இது அவர் பெயரால் 'வேதகிரியார் சூடாமணி' என வழங்கும்.

மண்டலபுருடரின் எதுகைமுறை அமைப்பில் சொற்பொருள் விளக்க நூல்கள் பின்னாளில் பல வந்துள்ளன. அரும்பொருள் விளக்க நிகண்டு, பொதிகை நிகண்டு நானார்த்ததீபிகை என்பன எதுகை முறை தழுவிய விருத்தப் பாவினால் இயன்ற நூல்களாகும்.

வெண்பாவில் அமைந்த உரிச்சொல் நிகண்டு, கட்டளைக்கலித் துறைப் பாவினாலான பாரதிதீபம் ஆகியவற்றில் ஒருசொல் பல் பொருட்பெயர் விளக்கமும் அவ்வப்பாவகையிலேயே அமைந்து காணப்படுகிறது.

எதுகைமுறை அமைப்பில் நூற்பாவில் அமைந்த இச்சொற் பொருள் விளக்கப்பகுதி, விருத்தமுறைப்பாடங்களில எதுகை அமைப்புக் கொண்டதாய் வளர்நிலையுற்றுள்ளது. அகராதி அமைப்பும் ஒருசார் பெருகி வந்துள்ளது.

அகராதி முறை பெருகி வரும் இந்நாளில் எல்லா நிகண்டுகளின் சொற்பொருள்களையும் அகராதி முறையில் அமைத்துக் கொண்டால் தான் எளிதில் சொற்களின் நிகண்டுப் பொருள்களை அறிதல் கூடும். இத்தகைய ஓர் நிகண்டு அகராதி தோன்ற வேண்டுமாயின் எல்லா நிகண்டுகளுமே தனித்தனி அகராதிகளுடன் தெளிவுறப் பதிப்பிக்கப் பெறல் வேண்டும்.

அட்டவணை

நிகண்டுகளில் பொருட்பாகுபாடு

திவாகரப் பொருட்பாகுபாடு



நிகண்டுகளின் பொருட்பிரிவு ஒப்புமை

	திவாகரம்	உரிச் சொல்	பாரதி தீபம்	சூடா மணி	கயாதரம்	ஆசிரிய நிகண்டு	பொதி- கை நிகண்டு	தமிழுரிச் சொற் பனுவல்
1.	தெய்வப் பெயர்த் தொகுதி	1	1	1	தெய்வப் பெயரில்	1	1	1
2.	மக்கட்பெயர்த் தொகுதி	2	2	2	இடப்பெயரியல்	2	2	2
3.	விலங்கின் பெயர்த் தொகுதி	3	3	3	மக்கட் பெயரியல்	3	3	3
4.	மரப் பெயர்த் தொகுதி	4	4	4	விலங்கின் பெயரியல்	4	4	4
5.	இடப் பெயர்த் தொகுதி	5	5	5	மரப் பெயரியல்	5	5	5 பல் பொருட் பெயர்
6	பல்பொருட் பெயர்த் தொகுதி	6	6	6	பல்பொருட் பெயரியல்	6	6 இயற்கை செயற்கை பல் பொருட் பெயர்	6 இடப் பெயர்

	திவாகரம்	உரிச்சொல்	பாரதிதீபம்	சூடாமணி	கயாதரம்	ஆசிரிய நிகண்டு	பொதிகை நிகண்டு	தமிழுரிச்சொற் பனுவல்
7.	செயற்கை வடிவப பெயர்த் தொகுதி	7	7	7	செயற்கை வடிவிற் பெயரியல்	7		
8	பண்பு பற்றிய பெயர்த் தொகுதி	8	8	8	பண்புப் பெயரியல்	8	7	7
9.	செயல் பற்றிய பெயர்த் தொகுதி	9	9	9	செயல் பற்றிய பெயரியல்	(9)	8 (ஒலி)	8 தொழிற் பெயர்
10	ஒலி பற்றிய பெயர்த் தொகுதி	10	10	10	ஒலிபற்றிய பெயரியல்	(10)	9 (செயல்)	9
11	ஒருசொல் பல பொருட் பெயர்த் தொகுதி	11	11	11	ஒருசொற் பல பொருளியல்	(11)	10	10
12	பல் பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி	12	12	12	—	—	—	—

குறிப்பு :

1. உரிச்சொல் நிகண்டிலும் சூடாமணி நிகண்டிலும் முதல் தொகுதிக்குத் 'தேவ'ப் பெயர்த் தொகுதி' என்று பெயர் காணப்படுகிறது.
2. உரிச்சொல் நிகண்டு 12 - ஆம் தொகுதியை 'பல்பெயர்க்கொருபெயர்' என்று குறிப்பிடுகிறது.
3. ஏனைய நிகண்டுகளில் 5 - ஆவதாக உள்ள இடப் பெயர் கயாதரத்தில் இரண்டாவதாக வைக்கப்பட்டுள்ளது.
4. கயாதரத்திலும் ஆசிரிய நிகண்டிலும் 12 - ஆம் தொகுதி இல்லை.
5. ஆசிரிய நிகண்டில் முதல் 8 தொகுதிகளே அச்சிடப் பெற்றுள்ளன.
6. பொருட் பிரிவைத் தொகுதி என்று ஏனையவை கூறக் கயாதரம் மட்டும் 'இயல்' என்னும் பெயரால் குறிப்பிடுகிறது.
7. பொதிகை நிகண்டு 6 – 7 தொகுதிகளை ஒன்றாக ' இயற்கை செயற்கைப் பல்பொருட் பெயர்த் தொகுதி எனக் கொண்டுள்ளது.
8. 8, 9 தொகுதிகள் பொதிகை நிகண்டில் மாறி ஒலி - செயல் என்னும் முறை வைப்புக் கொள்ளும்.
9. தமிழுரிச் சொற்பனுவல் - (அ) முதல் தொகுதிக்குக் ' கடவுட் பெயர்த் தொகுதி ' என்பது பெயர். (ஆ) திவாகரத்தில் 6, 7, ஆம் தொகுதிப் பொருள்கள் இதில் 5–ஆம் தொகுதியாகப் 'பல் பொருட் பெயர்த் தொகுதியில்' அடங்கும் (இ) திவாகரத்தில் 5 – ஆவதாக உள்ள இடப்பெயர் இந்நிகண்டில 7- ஆவதாக உள்ளது. (ஈ) செயல் பற்றிய பெயர் என்பதனை இந்நிகண்டு 'தொழிற் பெயர்' எனக் குறிப்பிடும். (உ) ஒருசொல் பல்பொருட் பெயர்த் தொகுதியில் சொற்களை அகர வரிசையில் அமைத்து விளக்கம தருகிறது.

பிங்கல நிகண்டின் பொருளடைவு

1. வான் வகை
2. வானவர் வகை (தெய்வப்பெயர்- 1)
3. ஐயர் வகை (12)
4. அவனிவகை (இடப்பெயர்-5)
5. ஆடவர் வகை

(மக்கட்பெயர்–2)

6. அனுபோக வகை (பல்பொருட் பெயர்-6 & செயற்கைவடிவப் பெயர்-7)
   - (உண்பன, அணிவன, உடுப்பன, தமிழ், பூன்சுவன, சூட்டுவன)
     1. உணவின் வகை
     2. பூணின் வகை
     3. இரத்தின வகை
     4. உலோக வகை
     5. ஆடை வகை
     6. பூச்சு வகை
     7. சூட்டு வகை
     8. இயல்வகை
     9. இசைவகை
     10. நாடகவகை
   - படைவகை
     11. மண்டிலவகை
     12. படைவகை
     13. காலாள்வகை
     14. தோற்கருவி வகை
     15. குடைவகை
     16. ஆயுதவகை
     17. செயற்கைவகை
     18. அக்குரோணிவகை
     19. வெள்ளவகை
   - 20. இல்லணி வகை
7. பண்பிற்செயலின் பகுதிவகை (பண்புபற்றிய பெயர்-8, செயல்பற்றிய பெயர் 9, ஒலிபற்றிய பெயர்-10)
8. மாப்பெயர்வகை (விலங்கின்பெயர்-3)
   1. புள் வகை
   2. விலங்கின் வகை
   3. பாம்பின் வகை
   4. சலசரவகை
      - (அ) விலங்கின் ஆண் மரபு
      - (ஆ) விலங்கின பெண் மரபு
      - (இ) விலங்கின் பிள்ளை மரபு
9. மரப்பெயர் வகை (மரப்பெயர்-4)
10. ஒருசொல் பல்பொருள் வகை. (ஒருசொல் பல்பொருட் பெயர் -11)

1 உள்ளநல்வகை	3. மெய்வகை	8. கைவகை	10. முறைமைவகை	1 அகரவருக்கம்
2. உள்ளத்தின் தீயவகை	4. வாய்வகை*	9. கால்வகை	11 அளவின் வகை	2. ககர வருக்கம்
	5. கண்வகை		12 காரணவகை-பல்பொருள் வகை	3. சகர வருக்கம்
	6. மூக்குவகை			4. ஞகரவருக்கம்
	7. செவிவகை*			5. தகர வருக்கம
				6 நகர வருக்கம்
				7. பகர வருக்கம்
				8. மகர வருக்கம்
				9 யகர வருக்கம
				10. வகர வருக்கம்

(* வாய், செவிவகைகள் மட்டும் ஒலி பற்றிய பெயர்)

குறிப்பு :— பிங்கல நிகண்டின் அச்சுப் பிரதியில் காணுகிறபடி அமைந்த அமைப்பு இது இந்த நூலின் பகுதிகள் 2, 10 மூலச் சுவடியிலிருந்து பிறழ்ந்துள்ளன. ஐயர் வகை என்பதில் முதல 10 நூற்பாக்கள் தவிர ஏனையவை பிற நிகண்டுகளில் வரும் 12–ஆம் தொகுதித் தொகைப்பெயர் விளக்கம். 10-ஆம் தொகுதியை அகராதி முறையில் அமைத்து வருக்கப் பிரிவு அமைத்தவர் பதிப்பாசிரியர். இத்தொகுதிச் சூத்திரங்கள் முழுமையும் ஒருவகை எதுகை முறை தழுவிய நிலையில் மூலப்படியில் உள்ளன. எனவே இந்நிகண்டு மூலச் சுவடிக் கொப்ப பதிப்பிக்கப்பெறவில்லை என்பது தெளிவு பழஞ் சுவடிகளுடன் ஆராய்ந்து பதிப்பிக்கவேண்டிய நிலையில்தான் இந்நிகண்டு உள்ளது.

நாமதீப நிகண்டின் பொருளடைவு

1. உயர்திணைப் படலம்

1. தெய்வ வர்க்கம்
2. மானிட வர்க்கம்

2. அஃறிணையுயிர்ப் பொருட் படலம்

1. நாற்காலுயிர்ப்பொருள் வர்க்கம
2. பறவையுயிர்ப்பொருள் வர்க்கம
3. ஊருயிர்ப் பொருள் வர்க்கம்
4. நீர்வாழுயிர்ப் பொருள் வர்க்கம்
5 தாபரவுயிர்ப் பொருள் வர்க்கம்

3. அஃறிணை யுயிரில் பொருட் படலம்

1. இயற்கைப் பொருள் வர்க்கம்
2. செயற்கைப்பொருள் வர்க்கம்
3. இடவர்க்கம்
4. காலவர்க்கம்
5 சினைவர்க்கம்

4. குணநாமப் படலம்

1. உயிர்ப்பொருள் : மனக்குணவர்க்கம
2. ,, : வாக்குக்குண வர்க்கம்
3. ,, : செயற்குணவர்க்கம்
4. உயிரில்பொருட்குணவர்க்கம்



5

நிகண்டுகளில் கடவுள் வாழ்த்து

கடவுள் வாழ்த்துப்பாடி நூலைத் தொடங்கும் முறை பின்னாளில் பெரு வழக்காயுள்ளது. முன்னாள் நூல்களில் அம்முறை வழக்கு மிக அரிதாயுள்ளது பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் கடவுள் வாழ்த்து இல்லை. முன்னூல்கள் சிலவற்றிற்குக் கடவுள் வாழ்த்தைப் பின்புள்ளோர் இணைத்துள்ளனர். சங்கத்தொகை நூல்களில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் அப்பாடல்கள் தொகுக்கப்பெற்ற காலத்து இணைக்கப்பட்டனவே என்பது யாவரும் அறிந்ததே.

திவாகரர் கடவுள் வாழ்த்து எனத் தனியாக நூலின் முதலில் எதுவும் பாடிச் சேர்க்கவில்லை. தெய்வப் பெயர்களையே முதலில் கூறுவதால் கடவுள் வாழ்த்துப் பாடல் என ஒன்றை அவர் பாடாது விட்டிருக்கலாம் ஆனால், பதிப்பாசிரியர்களோ,

‘ தந்திமுகத் தெந்தை சதங்கைப் பதம்போற்றிச்
சிந்தை விளக்காந் திவாகரத்துள் — வந்த
தொகுதியொரு பன்னிரண்டுஞ் சோராமல் நேரே
பகுதி யுறமனமே பற்று ’

என்னும் விநாயகர் வணக்கமான காப்புப் பாடல் ஒன்றைச் சேர்த்து அச்சிட்டுள்ளனர். பல்வேறு இடங்களிலுமுள்ள திவாகர ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து பார்த்தோமானால் இந்தப் பாடல் பல பிரதிகளிலும் இல்லாமலிருப்பதைக் காணலாம். பாடல் காணப்பெறும் சுவடிகளில் கூட இப்பாட்டுத் தனியோலையில் நூலுக்கு முன்பு சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது நூற்பகுதியோடு இணைத்து எந்தச் சுவடியும் தரவில்லை.

மேலும், இந்தப் பாடலின் போக்கைப் பார்ப்போமாயின் திவாகரத்தைப் பயில்வார் அந்நூற்பகுதிகள் நமக்கு நன்றாக மனம்பற்ற வேண்டும் என்று விநாயகரை வேண்டுதலாக உள்ளது. திவாகரர் காலம் 8-ஆம் நூற்றாண்டெனக் கருதப்படுகிறது அந்நாளைய நாட்டு நிலை சமுதாய நிலை, இலக்கியங்கள் ஆகியவற்றைக் கருதினால் விநாயகருக்கு அப்பொழுது பெருமுதன்மை இருந்ததாகவும் தெரியவில்லை. ஆதலால் திவாகர நிகண்டில் காப்புச் செய்யுளின்றி அருகன், சிவன், திருமால் முதலியோர் பெயர்களைத் தெய்வப் பெயர்த் தொகுதியில் தந்துள்ளார் என்பது தெளிவாம். இவ்வாறே பிங்கலம், உரிச்சொல், நிகண்டு, பாரதி தீபம் என்பனவும் காப்புச் செய்யுளின்றியிருத்தல் காணலாம்,

உரிச்சொல் நிகண்டின் காப்புச் செய்யுளாக அச்சுப்பிரதியில் தரப்பட்டுள்ள,

'மதிபாய் சடைமுடித்து மாசுணப் பைம்பூட்டுச்
சதிபாய் குறுந்தாட்டுத் தான — நதிபாய்
இருகவுட்டு முக்கட்டு நால்வாய்த் தென்னுள்ளம்
உருகவிட்டு நின்ற வொளி'

என்னும் வெண்பா ஐயத்திற்கிடமானதே. பல்வேறு இலக்கிய இலக்கணச் சுவடிகளிலும் இப்பாடல் எழுதப்பட்டிருக்கின்றது. ஏடெழுதுவோர் கடவுள் வணக்கமாக முதலில் எழுதும் சிற்சில பாடல்களுள் இதுவும் ஒன்றாகும்.

'திருமாலுஞ் செங்கமல மேயானுங் காணப்
பெருமான் பிறைசூடும் பெம்மான் — அருண்மூர்த்தி
நன்னெஞ்சி னுண்மறையோன் றில்லை நடம்புரிவோன்
என்னெஞ்சின் மேய இறை.

எனவரும் மற்றொரு வெண்பா சிவ வணக்கம் பற்றியது. இதுவும் ஆசிரியர் வாக்கெனல் ஐயமே. ஆகவே, இவ்வுரிச் சொல் நிகண்டின் கடவுள் வாழ்த்து இந்நூலாசிரியரே செய்தது என ஒருதலையாகத் துணிய இடமில்லை என்பது போதரும்

கடவுள் வாழ்த்துடன் ஆசிரியர் தாம் நூல் செய்த வரலாற்றையும் சேர்த்து உரைக்கும் பாயிரப்பகுதி கயாதரம், சூடாமணி நிகண்டு, ஆசிரிய நிகண்டு நாமதீப நிகண்டு ஆகியவற்றில் காணப்படுகின்றன.

கயாதரம், ஆசிரிய நிகண்டு நூல்களில் விநாயகர் வணக்கம் உள்ளது. பொதிகை நிகண்டின் காப்பும் விநாயகர் வணக்கம் பற்றியதே. ஆனால் இதில் பாயிரப்பகுதி இல்லை. நாமதீப நிகண்டு விநாயகர், முருகன் முதலியோர் பலருக்கும் வணக்கம் கூறுகிறது. அண்மையில் வெளி வந்த, தமிழுரிச்சொற்பனுவலின் ஆசிரியர் மான்முருகனார் முழுமுதற் கடவுள் வாழ்த்துடன் பாயிரப் பகுதியும் அமைத்துள்ளார்.

இவற்றுள் சூடாமணி நிகண்டு நூல் தந்த மண்டல புருடர் நூல் முதலில் அருகன் வணக்கம் கூறிப் பாயிரமும் தந்து, தெய்வப் பெயரை அருகன் முதலாக அமைத்துத் தருகிறார். முதல் தொகுதியில் மட்டு மன்றி ஏனைய தொகுதிகளிலும் அருகனை வாழ்த்தியே ஆசிரியர் மண்டலபுருடர் பொருட்பகுதிகளைக் கூறத் தொடங்குகிறார். எனவே இந்நிகண்டில் 12 தொகுதிகளுக்கும் 12 அருகன் வாழ்த்துப் பாடல்கள் உள்ளன. எல்லா நிகண்டுகளின் அமைப்பையும் உற்று நோக்கும் போது கயாதரர்தான் கடவுள் வாழ்த்துடன் பாயிரம் தந்து நூலைத் தொடங்க வழிகாட்டிய முதல்வர் என்று தெரிய வருகிறது.

இவ்வாறே ஒரு சொற்பல்பொருளைத் தனிப்படக் கூறும் எல்லா நிகண்டுகளிலும் கடவுள் வாழ்த்து இல்லை. அகராதி நிகண்டில் அச்சிடப்பட்டிருக்கும் 'தேனறாமகிழ்த் தொடையலும்' எனத் தொடங் கும் நம்மாழ்வார் துதியாகவுள்ள பாடலும், 'சோதிவிநாயகர்' வெள்ளை வாரணப்பிள்ளையார் எனத் தொடங்கும் விநாயகர் வணக்கப் பாடல்களும் ஆசிரியர் இரேவணசித்தர் வாக்கன்று. இப்பாடல்கள் பல்வேறு நூற்பிரதிகளிலும் தொடக்கத்தில் ஏடெழுதுவோரால் எழுதப் பட்டுவருவனவே. இந்நூலின் முதலிலுள்ள 'தேனறாமகிழ் என்ற பாசுரம் ஆழ்வார் திருநகரி ஏட்டில் மட்டும் இருப்பதால் அது அவ் வேடெழுதிய வைணவரால் எழுதிக்கொண்ட கடவுள் வாழ்த்தென்று தோன்றுகிறது' எனப் பதிப்பாசிரியர் திருநாராயண ஐயங்கார் முக வுரையில் எழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. 'ஒலியெழு கடல் சூழுலகிற்றெரிக்கும்' எனத் தொடங்கும் பாயிரம் தொடக்கமாகத்தான் இந்நூல் உள்ளது. நாநார்த்த தீபிகை ஆசிரியர் பரசிவம், திரிபுர சுந்தரி, விநாயகர், முருகக்கடவுள், திருமால், கலைமகள் ஆகியோர்க் கான வணக்கப்பாடல்கள் பாடியுள்ளார். இலக்கியங்களிற் போலவே நூல்களிலும் காலத்தால் கடவுள் வாழ்த்தும் பெருகிவந்துள்ளமை காணலாம்.

6

தெய்வம் என்னும் பெயர் வழக்கு

தெய்வம் என்னும் பெயர் கடவுளர் பொதுப்பெயராகச் சங்க காலத்திற்கு முன்பிருந்தே வழங்கிவருகிறது. தொல்காப்பியர் கருப் பொருள்களை விளக்குமிடத்து, 'தெய்வம் உணாவே' (தொல். பொருள். 1 : 20) என்று தொடங்கி நிலத்திற்குரிய தெய்வத்தையே முதலில் வைத்துள்ளார். மக்களைப் போலவே தெய்வம் சுட்டிய பெயரும் உயர்-திணை என்னும் விளக்கமும் அவர் தந்துள்ளார் (தொல். சொல். 1 : 4). மேலும், 'பால்வரை தெய்வம்' (தொல். சொல் 1 : 58) 'மொழிப் பொருள் தெய்வம்' (தொல். பொருள். 1 : 39 , 'உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலமெனக் கொள்ளும் (தொல். பொருள். 1 : 50)', வழிபடு தெய்வம் (தொல் பொருள். செய் 106) என்றாற்போலப் பல இடங்களில் தெய்வம் என்னும் பெயரைத் தொல்காப்பியர் மிகுதியும் ஆண்டிருக்கிறார்.

ஒத்தாழிசைக்கலி கடவுளை முன்னிலையாகத் துதிக்குமிடத்து வருமென்பார்,

' ஏனை ஒன்றே,
தேவர் பாரா அய முன்னிலைக் கண்ணே' (தொல் பொருள். செய்யுள்- 133)

என்னுமிடத்தில் 'தேவர்' என்று குறிப்பிடுகிறார்.

' காமப்பகுதி கடவுளும் வரையார்' (தொல். பொருள். புறத். 23)

' கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே' (தொல். பொருள். புறத். 27)

எனக் கடவுள் என்பதனையும் அவருடைய நூலுள் காண்கிறோம். என்றாலும் இச் சொல்லாட்சி தெய்வம் என்பதினும் குறைவே. சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரம் மணிமேகலைக் காவியங்களிலும் கூடத் தெய்வம் என்பதே ஆட்சி மிகுதிமுடையதாய்க் காணப்படுகிறது.

தெய்வம். கடவுள் என்னும் தெய்வப் பொதுப்பெயர்களுள் திருக்குறளின் முதல் அதிகாரப் பெயரில் 'கடவுள் வாழ்த்து' எனக் கடவுள் என்னும் சொல் உள்ளது. ஆனால், திருக்குறள் நூலுள் அச்சொல் இடம் பெறாதது வியப்பாயுள்ளது.

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை' (குறள். 55)

'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.' (குறள். 143)

'தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும், (குறள் 619)

'குடிசெய்வல் என்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும், (குறள். 1023)

எனவரும் குறட்பாக்களில் தெய்வம் என்னும் சொல்லையே திருவள்ளுவர் வழங்கியுள்ளார். சிலப்பதிகாரத்தின் இறுதியில் அமைந்த நூற்கட்டுரையில்,

'தெய்வந் தெளிமின், தெளிந்தார்ப் பேணுமின்'

என்று இளகோவடிகள் அறமுரைக்கிறார். மாணிக்கவாசகர் திருவாசகம் போற்றித் திருவகவலில்,

'தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததொர் பொருளது கருதலும்' (42 43)

என்று தெய்வ சிந்தனை எழுச்சி பற்றிப் பேசியுள்ளார்.

யாதொரு தெய்வங் கொணடீர்அத்தெய்வமாகி யாங்கே
மாதொருபாக னார்தாம் வந்தருள் புரிவர்'

என்று சைவப் பெரியாரும்,

'நும்மின்கவி கொணடுநும் மிட்டா தெய்வத்தை ஏத்தினால்
செம்மின் மணிமுடியெம் திருமாலுக்கே சேருமே'

என்று வைணவ ஆழ்வாரும் தெய்வம் என்பது எல்லாத் தெய்வத்திற்கு மான பொதுப் பெயர் எனக் கொண்டு பாடியிருத்தல் காணலாம். இவ்வாறாக இலக்கியங்களிலும் உலக வழக்கிலும் நீண்ட காலம் வாழ்வு பெற்றுவருகிறது இச்சொல் என்பது தெளிவு. எனவே, திவாகரர் தொடக்கமான நிகண்டாசிரியர்களும் இப்பொதுப்பெயரை முதல் தொகுதிக்குப் பெயராகக் கொண்டனர் என்னலாம்.

தெய்வப் பொதுப்பெயர்களாக நிகண்டு நூல்களுள் அணங்கு, இயவுள் கடவுள், சூர், தெய்வதம், தெய்வம், தேவதம் தேவு, புத்தேள் என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. இலக்கிய ஆட்சிபெற்ற இறை, இறையோன், இறைவன் என்னும் பெயர்களைத் தெய்வப் பொதுப் பெயராக நிகண்டுகள் அத்தொகுதியில் ஏற்கவில்லை. * இச்சொற்கள் அரசனையும் தெய்வத்தையும் குறித்துவரும் வழக்குத் தொல்காப்பியம் தொடக்கமாக உள்ளது.

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து அதிகாரத்திலேயே தெய்வப் பொதுபபெயராக 'இறைவன்' என்னும் சொல்லையே இரண்டு குறள்களில் எடுத்தாண்டுள்ளார்

'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.' (குறள். 5)

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.' (குறள் .10)

இறைவன் புகழ் பேசுதலும அவன் திருவடிகளை வணங்குதலும் கடமையாகும் என்று இங்கே அறிவுறுத்துகிறார். மேலும், தெய்வங்களைக் குறிப்பிடுவதற்கு 'வானோர்' என்ற சொல்லையும் வள்ளுவர் வழங்கியுள்ளார்.

'சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு' (குறள். 18)

என்பதனால் 'வானோர்' என்பதும் தெய்வப்பொதுப்பெயரேயாம். தேவர் பொதுப்பெயராக நிகண்டுகள் இதனைக் குறிப்பிடுகின்றனவே யன்றித் தெய்வப்பொதுப்பெயராக இதனை எடுத்துக்காட்டவில்லை என்பதும் கருதற்பாலது.

* ஒரு சொற்பலபொருள் விளக்கும் தொகுதியில் 'இறை என்பதற்கு உயர்ந்தோர்' எனத் திவாகரமும், 'அயனும் அரனும் ஆதியின் பெயரும்' என்று பிங்கல நிகண்டும் குறிப்பிட்டுள்ளன.

தெய்வம் என்பது வானோர் முதலிய தெய்வத் தன்மைபடைத்த எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு பெயராக நிகண்டு ஆசிரியர்கள் கொண்டுள்ளனர். ஐம்பெரும்பூதம், நவகோள்கள், பன்னிருராசிகள், நட்சத்திரங்கள் முதலியன எல்லாம் இத்தொகுதியுள் இடம் பெறுதல் காணலாம்.

உரிச்சொல் நிகண்டு இயற்றிய காங்கேயரும் சூடாமணி நிகண்டு படைத்த மண்டல புருடரும் 'தேவப் பெயர்த்தொகுதி' என்று முதல் தொகுதிக்குப் பெயரிட்டுள்ளனர். தமிழ்ச்சொற்களையே கொண்டதான 'தமிழுரிச்சொற்பனுவல்' என்னும் நிகண்டினை ஆக்கி அண்மையில் வெளியிட்ட மான்முருக நாவலர் முதல் தொகுதிக்குக் 'கடவுட்-பெயர்த்தொகுதி' என்று பெயர் சூட்டியுள்ளார் 'தெய்வம்' என்பது வடமொழிச் சொல்லெனக் கருதி இவர் அதனைத் தவிர்த்தனராதல் வேண்டும். பழங்கால முதல் மிகுதியான ஆட்சி பெற்றுள்ள இச்சொல் வடமொழியிலும் இருப்பதனால், அம்மொழிக்கேயுரியதென அதனை ஒதுக்கவேண்டுமா? இவ்விருமொழிக்கும் ஆதிமுதலே உரித்தான ஒரு பொதுச் சொல்லாய் இதனைக் கொள்ளுதல் நேரிது.

7

தெய்வப் பெயர் வகையும் வைப்பு முறையும்

தமிழ் நிகண்டுகளில் ஒருபொருட் பல்பெயர் உரைக்கும் பகுதியிலே முதன்மை தந்துள்ளது தெய்வப்பெயர் பற்றிய தொகுதிக்கே ஆகும். தெய்வங்களுள் யாருக்கு முதன்மை தருவது என்பது நூலாசிரியர் தம் சமயக் கொள்கையையும் சார்ந்துள்ளது என்னலாம். சமண சமயம சார்ந்த திவாகரர், மண்டலபுருடர் நிகண்டுகளாகிய திவாகரத்திலும் சூடாமணியிலும் அருகதேவனுக்கு முதலிடம் தந்துள்ளனர். அருகனை அடுத்த முதன்மை சிவபெருமானுக்கே மேலே சுட்டிய நிகண்டுகளிலும் தரப்பட்டுள்ளது. பிங்கல நிகண்டில் கணபதியை முதலில் வைத்து அடுத்துச் சிவபெருமான் முதலியோரின் பெயர்கள் காணப்படுகின்றன. இவை தவிர ஏனைய நிகண்டிகளில் சிவபெருமானுக்குரிய பெயர் தொடங்கியே பிற தெய்வங்களின் பெயர்கள் விளக்கப் பட்டுள்ளன.

சிவன் முதலாகத் தெய்வங்களை முறைப்படுத்தித் தரும் நிகண்டுகளில் பெருந் தெய்வங்களை அடுத்து அருகன், புத்தன் பெயர்கள் இடம் பெறுகின்றன. உரிச்சொல் நிகண்டு, ஆசிரிய நிகண்டு, பொதிகை நிகண்டு, நாமதீப நிகண்டு ஆகியவற்றில் அருகன், புத்தன், பெயர்கள் தரப்படவில்லை. இவ்விரு தெய்வங்களையும் வைதிக சமயத்திற்குப் புறம்பானவை என்று கருதி இவர்கள் விடுத்தனர் போலும்.

நிகண்டு நூல்களுக்கு எல்லாம் வழிகாட்டியாய் விளங்கும் திவாகரத்தில் தெய்வப் பெயர்கள் அடைவுபடுத்தப்பட்டுள்ள முறைவைப்பு

முதற்கண் காணத்தகும் திவாகரர் அமைத்துள்ள தெய்வப்பெயர் அடைவில் ஆண்தெய்வங்கள் முதலில் வைக்கப்பட்டு அதன்பின்னர்ப் பெண் தெய்வங்கள் பற்றிய பெயர் விளக்கங்கள் அமைகின்றன. இத் திவாகரர் அமைத்த முறையிலேயே ஆண் பெண் தெய்வங்களைத் தனித்தனி வைத்து விளக்கம் தருவன பாரதிதீபம். சூடாமணி நிகண்டு என்னும் இரண்டுமேயாம் ஏனையவற்றில் ஆண் தெய்வமும் பெண் தெய்வமும் கலந்து வரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளமை காண லாம். சிவனை அடுத்து உமையையும், திருமாலை அடுத்துத் திருமக ளையும் முருகனை அடுத்துத் தருமதேவதையையும் வைத்து முறைப் படுத்துவதும் ஏற்புடையதே

சிவன், திருமால் முதலிய தெய்வங்களின் பெயர்களோடு அவ்வத் தெய்வங்களுக்குரிய ஊர்தி, படை, கொடி, முதலிய பிறவிவரங்களையும் பிங்கல நிகண்டு தருகிறது. சிவன், திருமால் முதலியோரின் ஊர்தி, கொடி முதலியன பற்றிய விவரங்கள் திவாகரம், பாரதிதீபம், சூடாமணி என்னும் நிகண்டு நூல்களில் பல்பொருட் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதியில் காணப்படுகின்றன, தெய்வங்களின் ஆடல்கள் பற்றிய விவரம் இந்நிகண்டுகளின் செயல் பற்றிய பெயர்த்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. ஏனைய நிகண்டுகள் போலன்றித் தெய்வப்பெயர்களைத் தொகுத்துத் தருவதோடு அவ்வத் தெய்வங்கள் பற்றிய பிற செய்தி களையும் உடன் விவரித்தும் அமைவது பிங்கல நிகண்டு. 'ஒன்றின முடித்தல் தன்னினமுடித்தல்' என்னும் உத்திவகையால் பிங்கலர் ஒருங்கு தொகுத்த இந்நிகண்டு, பெயர்த் தொகுதியாக மட்டுமன்றி அவ்வப் பொருள்கள் பற்றிய பெருவிளக்கமாகவும் அமைந்துள்ளமை போற்றத் தக்கத்தாம். இவருடைய தொகுப்பு முறையில் இப்பகுதி பெயர்க்களஞ்சியமாகவன்றிப் பொருட்களஞ்சியமாகவும் அமைந் துள்ளமை நிகண்டுகளின் அமைப்பின் வளர்நிலையைக் காட்டுவதாயும் உள்ளது.

எல்லா நிகண்டுகளிலுமே முதற்கண் இடம்பெறுவது பெருந் தெய்வங்கள் பற்றிய பெயர்களேயாம். அடுத்துத் தேவகணத்தைச் சேர்ந்தோர் குறிக்கப்படுகின்றனர். தேவகணம் பதினெட்டு ஆகும். இப்பதினெண்மருள் தேவர், அசுரர், அரக்கர், வித்தியாதரர், கந்தருவர், பேய், பூதகணம் முதலியவற்றிற்குரிய பெயர்கள் விளக்கப்பெறுதல் காணலாம்.

இறைவன் உலகத்துப் பொருள்கள் எல்லாமாயும் விளங்குபன். உலகமோ, நிலம், தீ, நீர், வளி, வான் என்னும் ஐம்பூதங்களின்

சேர்க்கையால் உருவானதாகும். எனவே, ஐம்பூதங்களாகிய ஆகாயம், காற்று, நெருப்பு, நீர் என்பவற்றின் பெயர்களும் அவற்றின் வெவ்வேறு கூறுபாடுகளும் விளக்கப்படுகின்றன. ஐம்பூதங்களுள் ஒன்றான நிலம் பற்றிய பெயர்களை மட்டும் இடப்பெயர்த்தொகுதியில் பெரும்பாலாரும் சேர்த்துள்ளனர். ஆனால், பிங்கலர் மட்டும் சுவர்க்கம், மேலேழுலகம், மோட்சம் பற்றிய பெயர்களை வான்வகையுள் முற்பட வைத்துள்ளார். வான் என்பது வானுலகிற்கு மட்டுமன்றி ஆகாயத்திற்கும் உரிய பெயராகும். ஏனைய பூதங்களெல்லாம் பிறந்தது இந்த வானிலிருந்துதான். ஆகாயம், காற்று, நெருப்பு, நீர் என்பவற்றையும் சேர்த்து ஐம்பெரும் பூதங்களின் பேதங்களையெல்லாம் பிங்கலரின் வான்வகை என்னும் முதல்தொகுதி விளக்குகிறது. வான்வகைப் பெயர்களின் பின்னரே வானவர் வகைபற்றிய விளக்கப் பகுதியை இவர் அமைத்துள்ளார்.

நீருக்கு ஆதாரமாகிய மேகம் மழை பற்றிய செய்திகளையும் வான் வகையில் தானே நீரை அடுத்து இறுதியாக வைத்துப் பிங்கலர் விளக்கம் தந்துள்ளார். திவாகரம், பாரதிதீபம், சூடாமணி முதலிய ஏனைய நிகண்டாசிரியர்கள் மேகம், மழை பற்றிய செய்திகளை மட்டும் தெய்வப்பெயர்த் தொகுதியின் இறுதியில் அமைத்துத் தருகின்றனர்.

'வானின் றுலகம் வழங்கி வருதலான்
தானமிழ்த மென்றுணரற் பாற்று'

என்று மழையின் சிறப்பைத் திருவள்ளுவரும் கடவுள் வாழ்த்தினை அடுத்து வைத்ததுபோல் தெய்வப்பெயர்களின் ஈற்றில் தனியாக வைத்து அம்மழையின் முதன்மையைத் தெரிவித்தனரோ என்றும் கருத இடமுண்டு.

ஐம்பூதங்களோடு சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் மூன்றும் சேர்ந்த எட்டனையும் இறைவனின் அட்ட மூர்த்தம் என்பர். ஐம் பூதங்களை அடுத்துச் சூரியசந்திரர் பெயர் விளக்கம் எல்லா நிகண்டு களிலும் உள்ளது. ஆன்மாவைக் குறித்துப் பிங்கலர் வான்வகை முடிவில் அறிவித்துள்ளார்.

சூரிய-சந்திரர் இறைவனின் எண்வகை உருவங்களில் இணைவ-தோடு ஒன்பது கோள்களிலும் முதன்மையாக விளங்குபவரும் ஆவர். ஆகவே, ஐம்பூதங்களை அடுத்து நவகோள்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய பெயர்களும் தொகுத்து விளக்கப்படுகின்றன. நவகோள்களை

அடுத்து அனந்தன் பெயரை நிகண்டு நூலாருள் சிலர் (திவா., பிங்., பாரதி, ஆசிரிய.) தருகின்றனர் அனந்தன் உலகினைத் தாங்குவ தாகக் கருதப்படும் ஆதிசேடனாகும். ஆதிசேடன் ஆயிரம் தலை களையுடையது பூமுடி நாகர் என்ற பரிபாடல் ஆதிசேடனைக் குறிப் பிடுகிறது. பரிபாடல் திரட்டின் முதற்பாடலில் ஆதிசேடனைப் பற்றிய விளக்கம் உள்ளது. இருந்தையூரில் அமர்ந்த திருமாலின் திருக்கோயி லில் விளங்கிய ஆதிசேடனின் சிறப்புகளை,

‘திகழ் ஒளி முந்நீர் கடைந்த அக்கால், வெற்புத்
திகழ்பு எழ வாங்கித் தம்சீர்ச் சிரத்து ஏற்றி
மகர மறிகடல் வைத்து நிறுத்து,
புகழ்சால் சிறப்பின் இருதிறத் தோர்க்கும்
அமுது கடைய, இருவயின் நாண்ஆகி,
மிகாஅ இருவடம் ஆழியான் வாங்க,
உகாஅ வலியின் ஒரு தோழம் காலம்
அறாஅது அணிந்தாரும் தாம்;
மிகாஅ மறலிய மேவலி எல்லாம்
புகாஅ, எதிர்பூண்டாரும்தாம்;
மணிபுரை மாமலை ஞாறிய ஞாலம்
அணிபோல் பொறுத்தாரும் தாஅம்; பணிவுஇல்சீர்ச்
செல்விடைப் பாகன் திரிபுரம் செற்றுழிக்
கல்உயர் சென்னி இமயவில் நாண்ஆகித்
தொல்புகழ் தந்தாரும் தாம் ;
அணங்குடை அருந்தலை ஆயிரம் விரித்த
கணங்கொள் சுற்றத்து அண்ணலை வணங்கி,
நல்அடி ஏத்திநிற் பரவுதும்–’ (பரி. திரட்டு. 1:75-81)

எனப் பரிபாடல் போற்றிப் புகழுகிறது.

இராகு-கேதுக்களாகிய பாம்புக்கோள்களின் பின் ஆதிசேடன் பெயர் இடம் பெறுதல் பொருத்தமே. பொதிகைநிகண்டு நாமதீப நிகண்டுகளில் கேதுவை அடுத்துக், ‘குளிகன்’ என்பது இடம் பெறு-கின்றது. இதனைக் ‘கறைக்கோள்’ என்கிறார் தமிழுரிச் சொற்பனுவல் தந்த மான்முருகனார். குளிகனைச் சுட்டிய இந்நிகண்டுகளில் அனந்தன் பெயர் தரப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

கோள்களின் பெயர்களை அடுத்து மேடராசி முதலிய 12 இராசிகள், 27 நட்சத்திரங்கள் ஆகியவற்றின் பெயர்களுக்குரிய

தொகுப்பைக் காணலாம். சூரிய சந்திரர் முதலிய கோள்களினால் உளதாகும் காலவகைக் கூறுகள், சிறுபொழுது பெரும்பொழுது பற்றிய விளக்கங்கள், உகம் போன்ற பெருங்காலவகைக் கூறுபாடுகள் முதலியன எல்லாம் விளக்கப்படுகின்றன. பொதுவாக நோக்குமிடத்து எல்லா நிகண்டுகளிலும் இவ்வகையான பொருளமைப்புடனேயே தெய்வப்பெயர்த் தொகுதியை வகுத்து அமைத்து நிகண்டாசிரியர்கள் விளக்குதல் காணலாம்

இனி, எல்லா நிகண்டுகளிலும் வரும் இவ்வகையான தெய்வப்பெயர்க் கூறுபாடுகளை ஒருங்குவைத்து ஆராய்ந்தோமானால் சிற்சில பொதுக்கூறுகளிலும் இவற்றை அமைத்துக் காணலாம். சிவன், திருமால், பெண்தெய்வம், திசைகாவலர், சமண பௌத்தம், தேவகணம், அட்டமூர்த்தம், நவகோள்கள், இராசி, நட்சத்திரம், கால்வகை என்று இவ்வாறு பதினொரு வகையாகப் பாகுபடுத்தியும் உரைக்கலாம். இனி, இப்பாகுபாடுகளின் விளக்கத்தை இங்குக் காண்போம்.

தெய்வப்பெயர்களுள் முதற்கண் மிக விரிவாக விளக்கப்படுவது சிவனைக்குறித்த பெயர்களும் அப்பெருமான் தொடர்பான பற்பல செய்திகளும் ஆகும். பிங்கல நிகண்டு ஒன்றே ஒவ்வொரு தெய்வத்தோடும் தொடர்புடைய ஏனைய செய்திகளையும் உடன்கூட்டி உரைக்கும் பெற்றியது. ஏனையவெல்லாம் அவ்வத் தெய்வங்களுக்குரிய நாமங்களைத் தொகுத்துரைப்பதோடு அமைகின்றன.

சிவனது சத்தியாகிய உமை, அவன் தலையில் இடம்பெற்ற கங்கை ஆகியோரின் பெயர்களுக்கு முதன்மை தரப்பட்டுள்ளது. சிவன் வாயிலில் விளங்கும் நந்திகேசுவரருக்குரிய பெயர்களை வயிரவன், ஐயனார் பெயர்களுக்கு இடையில் வைத்து நாபதீப நிகண்டு மட்டும் எடுததுரைக்கிறது. சிவன் ஊர்தி, கொடி, படைபற்றிய செய்திகளைப் பிங்கல நிகண்டு வானவர் வகையுள் சிவன் பெயரை அடுத்து விளக்குகின்றது. திவாகரம். பாரதிதீபம், சூடாமணி நிகண்டு ஆகியவற்றில் சிவன் முதலிய சில கடவுளர்களின் ஊர்தி, படை கொடி பற்றிய செய்திகளைப் பல்பொருட் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதியில் காணலாம். ஆனால், சிவனுடைய மாலை, ஆடை, அணி முதலியனபற்றி இந்நிகண்டுகள் யாதொன்றும் தனிப்பட இப்பகுதியில் எடுத்துக் கூறவில்லை.

சிவன். திருமால முதலிய சில தெய்வங்களின் ஆடல்கள் பற்றிய செய்திகள் திவாகரம், பாரதிதீபம், சூடாமணி நிகண்டுகளில் செயல்-

பற்றிய பெயர்த்தொகுதியில் விளக்கப்பட்டுள்ளமை காணலாம். பிங்கல நிகண்டிலும் அனுபோக வகையுள் பத்தாவதான நாடகவகையிலே தெய்வங்களின் ஆடல்கள் பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது. சிவனோடு தொடர்புடைய சார்புச் செய்திகளை விளக்கிய இப்பிங்கல நிகண்டுடையார் பின்னால் நாடகவகையுள் சிவன் ஆடல்களைச் சுட்டியுள்ளமை கருதி வானவர்வகையுள் ஆடல்பற்றிய செய்திகளைத் தாராராயினர் என்று கருதலாம்.

இனி, இத்தெய்வங்களின் ஆடல்பற்றிய செய்திகளைச் சற்று நோக்குவோம். இவற்றுள் விவரிக்கப்பட்ட ஆடல் வகைகளாவன : சிவனாடல், மாயோனாடல், திருமகளாடல், முருகன் ஆடல், காமன் ஆடல், அயிராணி ஆடல், துர்க்கை ஆடல், சத்தமாதர்கள் ஆடல் என்பனவாம். இத்தெய்வங்களின் தொடர்புடைய ஆடல்களாக விவரிக்கப்பட்டவை 18 ஆகும் அவை வருமாறு : அணங்கு, அல்லியம், கடையம், கழங்கு, கபாலம், குடம், குடை, குரவை, கொட்டி, கொடு கொட்டி, துடி, துணங்கை, பாண்டரங்கம், பாவை, பேடு மரக்கால், மல், வெறி இவ்வாறாக நிகண்டுகளின் பிறபகுதிகளில் தெய்வங்களின் ஆடல்கள் விவரிக்கப்பட்டுள்ள போதிலும் இவற்றையும் அவ்வத் தெய்வப் பெயர்களோடு சேர்த்துத் தெய்வத்தின் சார்புப் பகுதிகளாகவே நாம் கணிக்கலாம்.

> ' கொட்டி குரவை குடங்குடை வெறியே
> மல்லுப் பேடு பாவை கடையம்
> பாண்டரங்க மரக்கா லீசர்பதி னோராடல்' (பிங்கலம். 1448)

என்னும் நூற்பாவில், 'ஈசர் பதினோராடல்' என்பதற்குப் 'பதினோரு ருத்திரர் ஆடல்' என்று தலைப்புத் தரப்பட்டிருக்கிறது. சிவன் ஆடலைக்கூறும் நூற்பாவுடன் தொடர்ந்துவரும் இந்நூற்பாவும் சிவசம்பந்தமான உருத்திரர் பதினொருவர் ஆடல் எனவருதல் இயையுடையதே. ஆயினும் சிலப்பதிகாரத்துள் வரும பதினோராடலுக்கும் உரிய விளக்கம் தருபபோது அடியார்க்கு நல்லார் தம் உரைவிளக்கத்தில் (சிலப். அரங்கேற். 14).

> ' கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
> குடைதுடிமா லல்லியமல் கும்பம் — சுடர்விழியாற்
> பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கம்
> கொட்டியிவை காண்பதினோர் கூத்து.'

எனப் பதினோராடலுக்குரியதாகத்தரும் மேற்கோள் பாட்டை நோக்கும் போது, திருமகள் ஆடிய பாவை, இந்திராணி ஆடிய கடையம் ஆகியவை இவற்றுள் சேர்ந்துள்ளமை தெரியவரும். எனவே, ஈசர் பதினோராடல் எனவருவது பிங்கலந்தையில் எவ்வாறு பொருந்தும்? இங்கே வேறு பாடபேதம் இருக்கலாம். ஈசர்களால் ஆடப்பெறும், ஈசர்பொருட்டும் ஆடப்பெறும் பதினோராடல் என்று கொள்ளப்படல் வேண்டும்போலும்.

முருகப் பெருமானுக்குரிய மாலையை மட்டும் பிங்கல நிகண்டு,

'நீபமும் செச்சையும் மாலை யாகும்' (பிங்கலம் - 113)

என்று தனி நூற்பாவில் விளக்குகிறது நீபமாவது கடம்பமாலை; செச்சையாவது வெட்சிமாலை. ஏனைய தெய்வங்களுள் சிவபெருமானுக்குரிய கொன்றைமாலை பற்றியும் குறிப்பிட்டுள்ளார். திருமாலுக்குரிய துழாய்மாலையோ, மற்றும் பிற தெய்வங்களுக்கு உவப்பான மாலைகளையோ சுட்டி இந்நிகண்டுகளில் யாதொன்றும் குறிப்பிடப்படவில்லை.

சிவனுடைய ஊர்தியும் கொடியும் இடபமாகும். பரசு, சூலம், பினாக வில் என்பன சிவன் தாங்கும் ஆயுதங்கள். சிவன் அழித்த முப்புரம் பற்றியும் பிங்கலம் விளக்கம் தருகிறது. மேலும், சிவனோடு தொடர்புடையதாக அவனுடைய எண்குணம் ஐம்முகம்பற்றிய செய்திகள் தரப் பட்டுள்ளன. சிவவழிபாட்டினால் அடையும் நிலையினைச் சிவபதம் நான்கு என எடுத்துக் காட்டியுள்ளனர்; சிவபூசை இயல்பையும் சிவாகம நூற்பலனையும் தெரிவித்துள்ளார்.

உமாதேவியாரின் பெயரை அடுத்து கங்கை நதிக்குரிய பெயர்களைக் கூறிய பிங்கல நிகண்டு அதன்பின் முப்பத்திரண்டு அறம்பற்றியும் கூறுகிறது உமையம்மையார் இருநாழி நெற்கொண்டு காஞ்சியில் எண்ணான்கு அறங்களையும வளர்த்தாள் என்பது புராண வரலாறு. இத்தகு புராண வரலாற்றை உளங்கொண்ட உமா தேவியார் பெயரை அடுத்து முப்பத்திரண்டு அறம் பற்றிய செய்திகளைப் பிங்கலர் வகுத்துரைத்தனர் என்று கருதலாம்.

விநாயகருக்குரிய ஊர்திபடைபற்றிய செய்திகளைப் பிங்கல நிகண்டு தனிப்பட விதந்து கூறாவிடினும் விநாயகர் பெயர்களில் ஆகுவாகனன், பாசாங்குசதரன் என்னும் பெயர்கள் தருதலைக்கொண்டு

அவற்றையும் வெளிப்படுத்தினாராதல் பெறப்படும். இவ்வாறு தெய்வப் பெயர்களோடு காரணப்பெயர்களாக வழங்கப்படும் சிறப்புப் பெயர் களிலும் பற்பல சார்புச் செய்திகளும் தெரியவருதல் கூடும்.

சிவகுமாரர்களுள் மூத்தவர் விநாயகர். இவரை மூத்த நாயனார் என காரைக்காலம்மையார் குறிப்பிடுவர் விநாயகரை அடுத்து என்றும் இளையானாகிய முருகனைப் பற்றிய செய்திகள் தரப்படுகின்றன. முருகனுடைய ஊர்தி ஆடு, யானை, மயில் என்னும் மூன்றுமாகும். இவற்றுள்ளும் மயிலே மிகுதியாக எடுத்துரைக்கப்படும். அருணகிரி நாதர் முதலியோர் முருகனின் மயிலைச் சிறப்பித்தும் புகழ்ந்தும் பல படியாய்ப் பாடியுள்ளனர். இவனை, 'மயிலேறும் பெருமாள்' என்பர். இவன் அணியும் தொடையல்கள் நீபமும் செச்சையுமாகும். ஆறு திருமுகத்தையுடைய இப்பெருமானை 'அறுமுகக் கடவுள்' என்பர் பிங்கலர். ஆறு திருமுகங்களையுடைய முருகன் பன்னிருகரத் தோனாவன். இவன் தாங்கிய ஆயுதங்களில் சிறப்புடன் திகழ்வது வேல். முருகனின் பன்னிரு கரங்களிலும் விளங்கும் ஆயுதங்களை நாமதீப நிகண்டு மட்டும் எடுத்துக்காட்டியுள்ளது வேல், சரம், வாள், தண்டு, மழு கொடி இவை முருகனின் வலக்கை ஆயுதம். வில், பரிசை, ஈட்டி, குந்தம் குலிசம், அங்குசம் என்னும் இவை இடக்கை ஆயுதம். இப்பன்னிரண்டினுள்ளும் இரண்டனைக் குறைத்து அபயம், வரதம், என்னும் இரண்டனையும் கூட்டிப் பன்னிரண்டு என்பதும் ஒரு வழக்காகும் என்றும் இந்நிகண்டில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. கடுவன் இளவெயினனார் பாடிய செவ்வேள் பற்றிய பரிபாடலில் (5),

'மறியும் மஞ்ஞையும் வாரணச் சேவலும்
பொறிவரிச் சாபமும் மரனும் வாளும்
செறியிலை ஈட்டியும் குடாரியும் கணிச்சியும்
தெறுகதிர்க் கனலியும் மாலையும் மணியும்
வேறுவேறு உருவின் இவ் ஆறுஇரு கைக்கொண்டு
மறுஇல் துறக்கத்து அமரர் செல்வதன்தன்
பொறிவரிக் கொட்டையொடு புகழ்வரம்பு இறந்தோய்'

(பரி. 5:64-70)

என முருகவேளின் பன்னிருகரங்களிலும் விளங்கும் ஆயுதங்கள் பற்றிய குறிப்பும் உள்ளது.

நானிலக் கடவுளரில் குறிஞ்சி நிலக் கடவுளாக முருகனை முன்னையோர் கொண்டுள்ளனர். இவன் பெயரொடு சேர்த்துக் குறிஞ்சி நிலத்தைக் 'சேயோன் மேய மைவரை உலகம்' என்பர் தொல்காப்பியர். முருகன் புகழ் பேசும் பழம் பாடல்கள் திருமுருகாற்றுப்படையும் பரி-பாடலும் ஆகும். ஏனைய சங்க நூல்களிலும் முருகனைப் பற்றிய சிற்சில குறிப்புகள் உள்ளன.

முருகனின் தேவியர்களாகத் தெய்வயானை, வள்ளியம்மை என்-னும் இருவர் பேசப்பட்டுள்ளனர். திருப்பரங்குன்றத்தில் தெய்வயானை அம்மையை முருகன் மணந்தான் என்பர். 'மறுவில் கற்பின் வாணுதல் கணவன்' (திருமுருகு. 11) எனவரும் திருமுருகாற்றுப்படை அடி, 'குற்றமற்ற கற்பினையும் ஒளியுடைய நெற்றியினையும் உடைய தெய்வயானையார்க்குக் கொழுநன்' என்பதை தெரிவிக்கிறது. 'முருகு புணர்ந்தியன்ற வள்ளிபோல' (அகம். 52:1. என முருகனுடன் வள்ளி உடன் சென்றதை உவமை வாயிலாகச் சங்கப்புலவர் ஒருவர் தெரிவித்துள்ளார். இவ்வாறாகவும் முருகனின் ஊர்தி, படை, கொடி முதலியவற்றை அறிவித்த பிங்கலம் அவனுடைய தேவியர்களைப்பற்றித் தனிப்படக் குறிப்பிட்டிலது. ஆனால் ஆறுமுகக் கடவுள் பெயர்களைக் கூறுமிடத்து, 'தெவ்வ குஞ்சரிமணாளன்', 'வள்ளி கேள்வன்' என்று குறிப்பிடுவதனால் முருகன் தேவியர்களைப் பற்றிய குறிப்பும் இந் நிகண்டில் உள்ளமை தெரியவரும் ஏனைய நிகண்டுகளிலும், 'வள்ளி மணாளன்' (திவா), 'வள்ளிநாயகன்' (பாரதி) 'வள்ளி துணைவன்' (கயாதரம்) 'வள்ளி மணவாளன்' 'தெய்வானை காந்தன்' (சூடாமணி) எனவரும் பெயர்க் குறிப்புக்களினால் அவன் தேவியரைப்பற்றிய செய்தி பழமையானது என்பது தெரியவரும். இங்ஙனமாகவும் பிங்கலந்தை முருகன் தேவியர் பற்றிய செய்தியைத் தனிப்பட எடுத்துக் கூறாமை கொண்டு அவர் சிற்சில முக்கியமான சார்புச் செய்திகளை மட்டுமே தனிப்பட எடுத்துக்காட்டினார் என்பது தெளிவாம்.

முருகனுக்குத் துணைவர்களாக வீரவாகு தேவர் உள்ளிட்ட ஒன்பதின்மரைச் சிவபெருமான் தோற்றுவித்தார். இந்த நவவீரர்களைப் பற்றிய குறிப்பும் வீரவாகு தேவர்க்குரிய பெயர்களும் நாமதீப நிகண்டில் மட்டும் காணப்படுகின்றன.

விநாயகர், முருகன் இருவரும் சிவபெருமானின் மூத்த பிள்ளையார், இளைய பிள்ளையார் என்று பேசப் படுபவராவர். இவ்விருவரைப்

போன்றே வயிரவன், ஐயனார், வீரபத்திரன் என்பாரையும் சிவ-பெருமான் தோற்றுவித்தமையால் இவர்களும் சிவகுமாரர்களே. வயிரவன், ஐயனார் பற்றிய பெயர்கள் உரிச்சொல் நிகண்டு ஒழிந்த ஏனைவற்றுள் காணப்படுகின்றன ஐயனாராகிய சாத்தனார் அரன்மால் புதல்வர் என்றும் சிறப்பிக்கப்படுவர்

சிவபெருமானின் தீக்கண்ணிலிருந்து தோன்றியவர் வீரபத்திரர்; தக்கனுடைய யாகத்தை அழிப்பதற்காகவே படைக்கப் பெற்றவர். இவருடைய பெயரைத் திவாகரம், உரிச்சொல், கயாதரம், பாரதிதீபம் என்னும் நிகண்டுகளை குறிப்பிடவில்லை. இவை தவிரவுள்ள பிங்கலம், சூடாமணி முதலிய நிகண்டுகளிலேயே இவருடைய பெயர்கள் காணப்-படுகின்றன.

சிவபெருமானுக்கு இணையான பெருந்தெய்வமாகப் போற்றப் படுபவர் திருமால். திருமாலின் தேவி திருமகள். திருமகளுக்குரிய பல பெயர்களையும் நிகண்டுகள் தருகின்றன திருமால் பெயர்களைச் சுட்டுமிடத்துத் திவாகரம் 'திருமகள் பூமி கொழுநன்' என்று குறிப்பிடு கிறது. எனவே, திருமகள் கொழுநன், பூமி கொழுநன் எனச் சீதேவி பூதேவி என்னும் இருபெருந் தேவியருடன் அவன் காட்சி தருதல் விளக்கமாகும்

திருமாலின் ஊர்தி கருடன், அவனுடைய கொடியும் கருடனே. திருமால் சக்கரம், தனு, வாள், தண்டு. சங்கம் என்னும் ஐந்து ஆயுதங் களைத் தாங்கியவனாவன் இவற்றுள் சக்கரம் சுதரிசனம் எனவும் வில் சார்ங்கம் எனவும், வாள் நாந்தகம் எனவும், தண்டு கௌமோதகி எனவும், சங்கு பாஞ்சசன்னியம் எனவும் பெயர்பெறும் இவற்றுள் சங்கு சக்கரங்கள் சிறப்புடைச் சின்னங்களாக வைத்துப் போற்றப் பெறும்

'பகை அணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையில் ஏந்தி

(சிலப் · காடுகாண் 47–48)

என இவர் கையில் விளக்கும் சங்கு சக்கரங்களைக் குறிப்பிடுகிறார் இளங்கோவடிகள்.

திருமாலின் பத்து அவதாரங்கள் பற்றியும் பதினைந்து அவதாரங்-கள் பற்றியும் பிங்கல நிகண்டு விளக்கம் தருகிறது. பலராமன் ஒழிந்த ஏனைய திருமால் மூர்த்தங்களுள் புத்தன் மட்டும் குறிக்கப்பட்டுள்ளான்.

பலதேவன் என்னும் பலபத்திரனுக்கு உரிய பெயர்களுடன் அவனுடைய பனைக் கொடியும் கலப்பையாகிய மழுவாயுதமும் குறிக்கப் பட்டுள்ளன.

திருமாலின் புதல்வர் பிரமன், காமன், ஐயனார் ஆகியோராவர். இம் மூவர்க்கும் வழங்கும் பல பெயர்களும் தனித்தனி நூற்பாக்களில் விவரிக்கப்பட்டுள்ளன இவருள் ஐயனார் அரிகரபுத்திர ஆதலின் சிவபெருமானைப் பற்றிய பகுதியிலேயே இத் தெய்வப் பெயரும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளமையை முந்திய பகுதியில் காணலாகும்.

மன்மதனுக்குரிய பலபெயர்களையும் தொகுத்து உரைத்தபின். அக்காமனுக்குரிய ஊர்தி, கொடி முதலிய பல்வேறு விவரங்களையும் பிங்கல நிகண்டு விளக்குகிறது. மன்மதனின் ஊர்தி - தென்றல், கொடி – மகரமீன்., வில் - கரும்புவில். இவனுடைய வில்லில் பொருந்தும் நாணாகிய வண்டுபற்றிய குறிப்பை இந்நிகண்டு தரவில்லை ஆசிரிய நிகண்டு, 'வண்டு நாண்' என்பதனை எடுத்துரைக்கிறது, மன்மதன் கரும்பு வில்லினை நாணேற்றி அதில் தாமரை, மாம்பூ அசோகம், முல்லை, குவளை என்னும் ஐந்து மலர்களை அம்பாக வைத்து எய்வான். பஞ்ச பாணங்களால் அம் மன்மதன் எய்யும்போது நேரும் சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம் என்னும் ஐந்து அவத்தைகளையும் பிங்கலம் சுட்டிக்காட்டி விளக்குகிறது.

மன்மதனின் மனைவி பெயர் இரதி. எனவே, மன்மதன், 'இரதி காந்தன்' என்னும் பெயர் பெறுகிறான். மன்மதன் தம்பியாகிய சாமனைப்பற்றிய குறிப்புச் சில நிகண்டுகளில் உள்ளது. இரதியின் தங்கை பெயர் 'தேவதாரி' என்பதாகும் என்னும் செய்தியை ஆசிரிய நிகண்டு மட்டும் எடுத்துக்காட்டியுள்ளது

நாராயணன் நான்முகனைப் படைத்தான்; நான்முகன் மும்மூர்த்திகளில் படைப்புத் தொழில் செய்யும் பெருந்தகையாவான். இவனுடைய ஊர்தி அன்னம்; ஆயுதம் பாசமும் தண்டமும் ஆம்; கொடி வேதம் ஆகும். இவனுடைய தேவி கலைமகள் கலைமகளுக்கு உரிய பெயர்களுடன் அவளுடைய ஊர்தி பூரம் என்பதாகும் எனப் பிங்கல நிகண்டு தெரிவிக்கிறது.

பல்வேறு பெண் தெய்வங்களைப்பற்றிய விவரங்கள் நிகண்டுகளில் உள்ளன சிவனைப் பற்றிய பகுதியில் அவனோடு இயைபுடைய

உமை கங்கை பற்றிப் பார்த்தோம். அங்ஙனமே திருமாலைப்பற்றிய பகுதியில் அவன் தேவியான திருமகளும், அவன் மகன் பிரமனின் தேவியாகிய கலைமகளும் கூறப்பட்டிருத்தலையும் கண்டோம். திருமக-ளுக்கு முன்பிறந்த மூத்த தேவியாம் மூதேவி பற்றிய பெயர்களும் தரப் பட்டுள்ளன மூதேவியின் ஊர்தி கழுதை, கொடி - காக்கை; அவளுக் குரிய ஆயுதம் துடைப்பம் ஆகும்.

போர்க்குத் துணை நிற்கும் தெய்வங்களாகிய காளி, துர்க்கை இவர்களின் பரிவாரங்கள் முதலியன பற்றிய செய்திகள் நிகண்டுகளில் தரப்பட்டுள்ளன. காடுகாள் என்னும் தெய்வம் பற்றிய குறிப்பும் நிகண்டுகளில் உள்ளது. சத்தி பேதங்களில் பத்திரகாளி, துர்க்கை என்னும் மூர்த்தங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தெய்வங்களின் ஊர்தி முதலிய விவரங்களைப் பிங்கல நிகண்டு சிறப்பித்து விளக்கம் தருகிறது. மாகாளியின் ஊர்தி சிங்கம்; கொடி – அலகை; இவளுக் குரிய படையோ சூலம.

துர்க்கையின் ஊர்தி கலை; படை கைவாள் ஆகும். காளிதேவிக்கு ஏவல் செய்வார் இடாகினி யோகினி என்னும் இருவராவர். இவருள் யோகினியின் ஊர்தி பேய் ஆகும்; கொடி ஓரியாகும்

இனி, சத்த மாதர்கள் பற்றிய விவரமும் பெண்தெய்வப் பகுதியில் காணலாகும். பிராமணி. நாராயணி, மாயேசுவரி கௌமாரி, வராகி, உருத்திராணி, இந்திராணி என்னும் எழுவரும் சத்தமாதர்களாவர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஊர்தியும் உள. பிராமணிக்கு அன்னம்; நாராயணிக்குக் கருடன்; மாயேசுவரிக்கு விடை; கௌமாரிக்கு மஞ்ஞை; வராகிக்கு ஏறு; உருத்திராணிக்கு அலகை; இந்திராணிக்கு களிறு. ஊர்தியை உரைத்ததோடு இவர்களுக்குரிய படைகளையும் போற்றிக் கூறுகின்றது பிராமணிக்கு வேதம்; நாராயணிக்குச் சக்கரம்; மாயேசுவரிக்குப் பினாகம்; கௌமாரிக்கு வேல்; வராகிக்குத் தண்டு; உருத்திராணிக்குச் சூலம்; இந்திராணிக்கு வச்சிராயுதம்

இவ்வெழுவகை மகளிரைத் தவிர அமர மாதர்களாகிய அரமகளிர், அரம்பையர், சூரரமகளிர் ஆகியோர்களின் பெயர்களும் இடம் பெற்றுள் ளன. பெண் தெய்வங்களுள் அருகன் அறங்காக்கும் தருமதேவதையின் பெயர்களும் சில நிகண்டுகளில் தரப்பட்டுள்ளன தருமதேவதையின் பெயர்கள் தரும் நிகண்டுகள் பிங்கலம், சூடாமணி, ஆசிரிய நிகண்டு, தமிழுரிச்சொற்பனுவல் என்னும் நான்குமே.

சமண பௌத்த சமய தெய்வங்களாகிய அருகன், புத்தன் பெயர்களும் பல நிகண்டுகளில் உள. அருகனுடைய ஊர்தி அம்புயம்; அவனுடைய படையும் அம்புயமே. அருகனின் கொடி காட்சி, ஞானம், சீலம் என்னும் மூன்றுமாம். இவ் விவரங்களைப் பிங்கல நிகண்டு மட்டுமே தனிப்பட எடுத்துரைக்கின்றது உரிச்சொல் நிகண்டு, ஆசிரிய நிகண்டு பொதிகை நிகண்டு, நாமதீப நிகண்டு என்னும் நான்கிலும் அருகதேவன், புத்ததேவன் பற்றிய பெயர்கள் இடம்பெறவில்லை.

திசை காவலர் என்பார் எட்டுத் திசைக்குமாக எண்மர் உளர். கீழ்த் திசையில் இந்திரன்; தென் திசையில் அக்கினி; தெற்கில் யமன்; தென் மேற்கில் நிருதி; மேற்கில் வருணன்; வடமேற்கில் வாயு; வடக்கில் குபேரன்; வடகிழக்கில் ஈசானன் இத்தெய்வப் பெயர்களையிட்டு இந்திரதிசை, யமன்திசை, என்றாற் போலத் திசைப்பெயர்களைக் குறிப்பதும் உண்டு பிங்கலர் வான்வகையுள் ஆகாயம் பற்றிக் கூறிய பின், திக்கு, திசைப்பாலர் பற்றிய செய்திகளை விவரித்துள்ளார். எண் திசைப்பாலரை அடுத்து எட்டு திசைக்குமுரிய யானைகள், அட்டமா நாகங்கள், எண்திசையோனி பற்றிய விளக்கங்களைப் பிங்கலர் தருகிறார்

இந்திரன் திசை காவலன் மட்டுமன்று, வானுலகின் அதிபதியுமாவன். எண்திசைப் பாலருள் முதல்வனாக வைத்துப் போற்றப் பெறும் இந்திரனைப் பெருந்தெய்வங்களுள் ஒருவனாகவும் வானவர் வகையுள் போற்றியுள்ளார் பிங்கலர் ஏனைய நிகண்டுகளும் இந்திரனுக்குரிய பெயர்களைப் பெருந் தெய்வங்களுடன் சாரவைத்தே தொகுத்துத் தருகின்றன. பெயர்த் தொகுப்புத் தவிர இந்திரனோடு தொடர்புடைய பல செய்திகளையும் பிங்கலர் விவரித்துள்ளார். இந்திரனைக் குறித்து இவர் விவரித்த செய்திகளைக் குடும்பவளம் நகர்வளம், படைவளம் நிதிவளம், மற்றும் ஊணும் பூணும் என்றெல்லாம் பகுத்து நோக்கலாம். இந்திரனைத் தவிர வடதிசைக் காவலன் குபேரன், தென்திசைக் காவலன் யமன் என்னும் இருவர்தம் பெயர்கள், அவர்களுக்குரிய பிற சிறப்புக்கள் ஆகியவற்றையும் நிகண்டுகள் விவரித்துள்ளன. நீரைப்பற்றிய செய்திகள் வருமிடத்து புனற்கடவுள் வருணனாவன் என்னும் குறிப்பினை நிகண்டுகள் சுட்டியுள்ளன. அக்கினி, வாயு பற்றிய பெயர்கள் பஞ்சபூதப் பெயர்களுடன் சேர்த்துப் பேசப்பட்டுள்ளன என்றாலும், திசைகாவலர் வகையில் நான்கு

பெருந்திசைக் காவலர் பற்றிய செய்திகள் சிறப்பாக எடுத்துப் பேசப் பட்டுள்ளன என்பது தெரியவரும்.

தெய்வப் பெயர்களுள் பெருந்தெய்வங்கள் தொடக்கமாகத் தனித்தனிப் பெயருடன் விளங்கும் தெய்வங்களைப் பற்றி உரைத்த-பின், ஒரு பெருங்குழுவாகத் தெய்வநிலையில் பேசப்படுவோரைப் பற்றிக் கூறத்தொடங்குகின்றனர். இத்தகைய குழுவினர் பதினெண்-மராவர். இவரைப் பதினெண்கணத்தேவர் என்பர். பதினெண் கணங்களாவார் அமரர், சித்தர், அசுரர், சாரணர், கருடர், கின்னரர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், இராக்கதர், பூதர், பசாசு, தாரகை, முனிவர், உரகர், நாகர், போகபூமியர் என்பாரவர். இக் கணத்தாருள் பெரும்பாலானவரைக் குறித்தும் நிகண்டுகள் தெரிவிக்கின்றன.

பதினெண் கணத்தாருள் தேவர் முதன்மையானவர் வானுலகில் அமுதமுண்டு மரணமின்றி வாழ்பவராதலின் இவருக்கு அமரர் என்றும் ஒரு பெயர் வழங்கும் தேவர்க்குரிய பொதுப்பெயர்களைத் தொகுத்து விளக்கவதோடு, இவருள் முப்பத்து மூவரைக்குறித்தும் சிலநிகண்டுகள் தெரிவிக்கின்றன. தேவர் முப்பத்து மூவராவார் ஆதித்தர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், அச்சுவினி தேவர் இருவர் ஆக முப்பத்து மூவராவர்.

‘நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரோடு
ஒன்பதிற் றிரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர், மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர், வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர், தீப்பட
உருமிடித் தன்ன குரலினர், விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை காண்பார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காண’

(திருமுருகு, 167-174)

எனவரும் திருமுருகாற்றுப்படைப் பாடற்பகுதி முப்பத்துமூன்று தேவர்களையும் பதினெண் கணத்தாரையும் சுட்டிக்கூறி, இவரெல்லாம் வானத்தில் சுழற்சியுடையராய் வந்து காணும்படியாக, முருகப்பெருமாள் ஆவினன்குடியில் எழுந்தருளியிருக்கும் காட்சியை எடுத்துரைக்கிறார்.

ஆதித்தர், உருத்திரர், வசுக்கள், அச்சுவினிகள் என நான்கு பெருங் கூறாய் அடங்குதலினாலே, 'நால்வேறு இயற்கைப் பதினொரு மூவர்' என்று குறிக்கப்படுகின்றனர்.

'ஒன்பதிற் றிரட்டி உயர்நிலை பெறீஇயர்' என்றது பதினெண் வகையாக உயர்ந்த தேவ கணத்தாரையாகும். இத்தேவருக்கும் மேலாகக் கடவுளர் என்பவர் குறிக்கப்படுகின்றனர் இவர் சுடரொடு திரிதரும் பெற்றியராய தெய்வ முனிவர் போலும்.

தேவருக்குப் பகையாயுள்ளவர் அசுரர் இவ்வசுரரைப்போன்றே பெருந்தீங்கு புரிந்து உழல்பவர் அரக்கர் ஆவர். இவரை இராக்கதர் என்றும் கூறுவர் அசுரரும அரக்கரும் வெவ்வேறினத்தார் என்பதனை,

'அண்டக் குலத்துக்கு அதிபதியாகி
அசுரர் இராக்கதரை
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த
இருடீ கேசன்தனக்கு'

எனவரும் திருப்பல்லாண்டுப் பாசுரத்தால்(5) உணரலாம். அசுரர்களில் 'மாவலி' என்னும் அசுரரின் பெயர்மட்டும் நிகண்டுகளில் தனிப்பட எடுத்துரைக்கப்படுகிறது.

வித்தியாதரர் பல்வேறுவகையான வித்தைகளிலும் வல்ல தேவசாதியார் ஆவர் இசையில் வல்ல கணத்தாராகக் கின்னரர், கந்திருவர், கிம்புருடர் என்னும் மூவகையினர் உளர். இம்மூவரும் ஒரு சாதியாரே என்றும் நாமதீப நிகண்டு தெரிவிக்கிறது.

'கின்னரர், கருந்திருவர், கிம்புருடர் என்னும்
மூவரும் ஒரு சாதி; அவர் யாழ்வாசினையாற்
கின்னரர் என்றும், அரசு ரிமையாற் கந்திருவர்
என்றும், வீரத்தாற் கிம்புருடர் என்றும்
கணங்களிற் பேதப்படுவர்'

என்பதனை இந்நிகண்டுடையார் எடுத்துக்காட்டியுள்ளார்.

போகபூமியில் இன்புறுவோர் ஒருபிரிவினர்; இவரைப் போகபூமியார் என்பர்., ஆகாயத்தில் சஞ்சரிப்போர் சாரணர் எனப்படுவர் தேவருக்கு ஏவல்செய்வோர் படர் என்னும் பெயரால் ஒரு கணமாகின்றனர்.

நரகலோக வாசிகளாகிய தீயுலகோரையும் நாகலோக வாசிகளாகிய பாப்புலகோரையும் தமிழ்ச்சொற்பனுவல் சுட்டியுள்ளது.

பதினெண் கணத்தாருள் பூதமும் பசாசமும் போர்க்களத்தோடும் காளி தேவியோடும் சார்த்திப் பேசப்படும். துர்க்கைக்கு ஏவல் செய்வோர் இடாகினி, யோகினி என்னும் இனத்தாராவர். போர்க்கள அழிவில் பேய்கள் கூழட்டு உண்டும், போர்த்தலைவனை வாழ்த்தியும் ஆடல் புரியும் செய்திகள் புறநானூறு முதலிய சங்கப் பாடல்களில் சில உள. காளி, பேய்களின் செயலடிப்படையில் பரணி இலக்கியம் என்பது பின்னாளில் வாய்ப்பதாயிற்று.

தாரகை என்பது நட்சத்திரகணமாகும். 27 நட்சத்திரங்களும் அருந்ததி முதலிய வேறுசில நட்சத்திரங்களும் பற்றிய விளக்கம் தெய்வப்பெயர்த் தொகுதியின் ஒரு பகுதியாக வைக்கப்பட்டுள்ளமையும் கருதற்பாலது.

இருபத்தேழு நட்சத்திரங்களின் பெயரைச் சிறப்பாக எடுத்து விளக்கிய பின்னர்ப் பொதுவாக வானமீனுக்குரிய பெயர்களையும் நிகண்டுகள் குறித்துள்ளன. அருந்ததி என்னும் நட்சத்திரத்திற்குரிய பெயர்களை உரிச்சொல் நிகண்டு, கயாதர நிகண்டு தவிர ஏனைய நிகண்டுகள் தொகுத்துத் தந்துள்ளன. அருந்ததி நட்சத்திரம் வானின் வடதிசையில் விளங்கும் எழுவகை மகளிருள் ஒன்றாகும். இந்த அருந்ததியைக் கற்புக்கு எடுத்துக்காட்டாகப் புலவர்கள் உரைத்துள்ளனர்.

‘ தடவு நிமிர் முத்தீப் பேணிய மன்எச்சில்
வடவயின், விளங்கு ஆல், உறை எழுமகளிருள்
கடவுள் ஒருமீன் சாலினி ஒழிய
அறுவர் மற்றையோரு மந்நிலை அயின்றனர்’

(பரிபாடல் 5 . 42-45)

எனவரும் பரிபாடற்பகுதி அருந்ததியின் ஏற்றம் எடுத்துரைக்கின்றது. ‘கடவுள் ஒரு மீன் சாலினி’ என அருந்ததி மீனின் கடவுள்

தன்மையைச் சிறப்பித்துள்ளார் பரிபாடல் புலவராகிய கடுவன் இள வெயினனார்.

> 'அங்கண் உலகில் அருந்ததி அன்னாளை
> மங்கல நல்லமளி ஏற்றினார்' (சிலப். மங்கல. 63-4)

எனக்கண்ணகியை அருந்ததிக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார் இளங்கோ வடிகள். முற்படக் கண்ணகியைக் குறிக்குமிடத்தும் 'சாலி ஒருமீன் தகையாளை' (மங்கல. 51) என்றே அவர் குறிப்பிடுகிறார். ஏனைய நூலாரும் அருந்ததியைக் கற்பின் சிகரமாகப் போற்றித் தாம் பாடும் காவியத் தலைவியர்க்கு ஒப்புக்கூறுதலை ஒருமரபாகவே கொண்டுள்ள மையும் காணலாகும்.

விடிவெள்ளி என இந்நாளில் வழங்கும் விடிமீனின் பெயர் வெடி என்பதாகும் எனத் தமிழுரிச்சொற்பனுவல் நூல் எடுத்தியம்பியுள்ளது.

> 'புனலாடு மகளிர் இட்ட பொலங்குழை
> இரைதேர் மணிச்சிரல் இரைசெத் தெறிந்தெனப்
> புள்ளார் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது
> கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த
> வேள்வித் தூணத்து அசைஇ யவனர்
> ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட
> வைகுறு மீனின் பையயத் தோன்றும்' (பெரும்பாண். 312-318)

எனவரும் பெரும்பாணாற்றுப்படைப் பகுதியில் பொற்குழையின் தோற்றம் வைகறைப் போதில் தோன்றும் வெள்ளிமீன்போலக் காணப் படும் என்னும் செய்தி காணப்படுகிறது இங்கே வைகுறுமீன் என்பது விடிமீனேயாம்.

இறைவனுடைய எண்வகை உரு என்று ஐம்பூதங்கள், சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் எட்டனையும் கொள்வர். சுவர்க்க உலகமும் தெய்வநிலைபெற்ற பெரும்பதமாகும். எனவே, இவைபற்றிய பல்வேறு வகையான கூறுபாடுகளையும், பெயர்களையும் அவற்றின் தொகுதி களையும் நிகண்டுநூல்கள் நன்கு விளக்குகின்றன.

ஐம்பூதம் என்பது ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் என்னும் ஐந்தையும் குறிக்கும் ஆகாயம் என்பதனை வெளி என்றும் திக்கு என்றும் இருகூறுபடுத்துவர். வெளி என்னும ஆகாயப் பெருவெளியில் பகிரண்டம், அண்டகோளகை, அண்டச்சுவர் பற்றிய பெயர் விளக்கம் தரப்படுகின்றன. நான்கு பெருந்திக்கு, நான்கு கோணத்திக்கு ஆக எட்டுத்திக்குப்பற்றிய பெயர் விளக்கம் திக்குப்பற்றிய பகுதியில் காணலாம். எட்டுத்திக்குப் பற்றிக் கூறும்போது எண்திசை யானை, அட்டமா நாகம், எண்திசையோனி, எண்திசைப் பாலர் பற்றிய செய்திகளையும் பிங்கலம் முதலிய சில நிகண்டுகள் தெரிவித்துள்ளன.

காற்று என்பதற்குரிய வேறு பெயர்களுடன் பல்வேறு வகையாய்ப் புலப்படும் காற்றுகளையும் நிகண்டுகள் விளக்குகின்றன. காற்றின் வகைகளாகப் பனிக்காற்று, வாடைக்காற்று, மேல்காற்று, கீழ்காற்று, தென்றல், சுழல்காற்று, தசவாயு என்பவை இடம்பெறுகின்றன.

காற்றினை அடுத்து நெருப்பு எடுத்துக்கொள்ளப்படுகிறது. நெருப்பில் சிறு தீப்பொறி முதல் பெருநெருப்பாகிய வடவாமுகாக்கினி வரையில் பல்வேறு வகையான நெருப்பின் தன்மைகளும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. நெருப்பை உண்டாக்க உதவும் தீக்கடைகோலின் பெயரையும் குறிப்பிடுகிறார். அனற்பொறி, அனற்றிரள், காட்டெரி, கொள்ளி பற்றிய பெயர்களின் மாற்றுப் பெயர்கள் நெருப்புவகை விளக்கமாம் எரியினால் நேர்வது கரி, சாம்பல் புகை என்பனவாம். எனவே, இவற்றின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. விறகுப்புகை போலுள்ள புகையேயன்றி மணக்கும் அகில் முதலிய நறும்புகையையும் உடன் சுட்டுவர் தீக்கடவுள், தீக்கடவுள் மனைவி பற்றிய பெயர்களும் காணப்படும். தவத்தோர் வளர்க்கும் புனிதத்தீ வேறு அதனை யாகத்தீ முத்தீ, பஞ்சாக்கினி எனப் பகுத்து விளக்கியுள்ளனர்.

நெருப்பின்பின் நீர்பற்றிய பெயர்களும் நிகண்டுகளில் மிகவிரிவாக அமைகின்றன. மழையினால்தான் நீரைப்பெறுகிறோம் எனவே, மழைபற்றிய பல செய்திகளும் தனிக்கூறாகப் பார்க்கத்தக்கன. பிங்கல நிகண்டு ஒன்றே நீர்ப்பெயர்வகைகளை அடுத்து மழைப்பெயர்வகைகளையும் எடுத்தியம்புகின்றது. ஏனைய நிகண்டுகளில் மழைதொடர்பான செய்திகள் தெய்வப்பெயர்த் தொகுதியின் இறுதியில் காணப் படுகின்றன

முதலில் நீர்பற்றிய செய்திகளை நோக்குவோம். நீரின் பொதுப் பெயர்களை முதற்கண் விளக்கிப் பின் நிறைபுனல், நீந்துபுனல், கலங்கல் நீர், நீரோட்டம், நீர்த்திரை, நீர்க்குமிழி, நீர்ச்சுழி, நுரை என்பவற்றின் பெயர்களும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. பள்ளத்தில் பாய்ந்தோடும் நீர் மிகுதியால் ஆறுகள் பல உளவாகின்றன. எனவே, நதியின் பெயர் விளக்கமும் உள்ளது. நதிகளுள் சிறப்புடைய கங்கைநதி பற்றிய பெயர்களையும் இத் தெய்வப் பெயர்க் கூட்டத்தில் காண்கிறோம் நீர்க்கடவுளாகப் போற்றப்பெறுபவன் வருணன் என்பதும இங்குக் குறிக்கப்படுகிறது. இத் தெய்வத்தின் வாகனம் சுறவு ஆகும் என்பதனை ஆசிரிய நிகண்டு மட்டும சுட்டுகிறது

இனி, மழைபற்றிய பகுதிக்கு வருவோம் மழைபற்றி நிகண்டுகள் தரும் செய்திகளை நான்கு பெருங்கூறாகப் பகுத்து நோக்கலாம். அவையாவன : ஒன்று மேகம்; மற்றொன்று மழைநிலை; மூன்றாவது நீரின் நிலை; கடைசியாக வானிலை. மேகத்தின் பொதுப்பெயர்கள் ஒருபாலாக, ஏழு மேகம், ஏழுமேகமும்பற்றிய விவரங்கள் காணலாகும். மேகத்துடன் தொடர்புடைய இடியேறும் இடம்பெறுகிறது. மழைநிலைபற்றிய பகுதியில பெருமழை விடாது சொரிதல், தலைப்பெயல் மழை மழைபெய்து விடுதல் என்பனபற்றிற்கான பெயர் விளக்கம் உள்ளன. துளி ஆலாங்கட்டி, துவலை என்பன நீரின் நிலைமைகளைக் குறிப்பன. வானிலை என்பதில் மின்னலும் இடியும் மழையுடன் தொடர்புடையவை இவற்றின் பெயர்களோடு சூரியனைச் சூழ்ந்து காணும் பரிவேடம், மழைநாளில் தோன்றும வானவில், இரட்டைவில் காட்சிகளின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன வானவில் பற்றிப் பேசியதை அடுத்துக் காமனுடைய வில்லையும் திவாகரம முதலிய பல நிகண்டுகள் குறிப்பிட்டுள்ளமை காணலாம்.

பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய மண் பூமியைக் குறிக்கும் மேலேழுலகம் பற்றிய விளக்கத்தைப் பிங்கலர் வான்வகையில் தருகிறார் பூமியைப் பெண்ணாகவே சொல்வது மரபு; பூமாதேவி என்பது உலகவழக்கு வள்ளுவர், ‘நிலம் என்னும் நல்லாள்’ என்று குறிப்பிடுகிறார். பிங்கல நிகண்டின் முதல் பகுதி வான்வகை என்பது வான்வகையில அவர் முதற்கண் எடுத்துக்காட்டுவது சுவர்க்கத்தின் பெயர்களையே. பின், மேலேழுலகம், மோட்சம் பற்றிய பெயர்களைத் தருகிறார் அதன்பின்னர் ஆகாய முதலிய பஞ்ச பூதங்களைச் சார்ந்த பெயர் விளக்கங்கள் இடம் பெறுகின்றன.

வானவர்வகை இறுதியில் அமுது, தெய்வவுணவு. ஆலகாலவிடம், ஆன்மா பற்றிய பெயர் விளக்கங்களைப் பிங்கலர் மட்டும் தருகிறார். தேவருலக வாழ்வை வான்வகை ஒழிபில் சுட்டிய பிங்கலர் வானவர் வகையை முடிக்கின்றபோது அவர்தம் உணவாம் அமுது முதலிய செய்திகளை ஒழிபுபோல ஈற்றில் வைத்துக் கூறினார் போலும்.

தெய்வப்பெயர்த் தொகுப்பில் ஒன்பது கோள்கள், பன்னிரண்டு ராசிகள், 27 நட்சத்திரங்கள் ஆகியவற்றின் பெயர்களும் இவற்றின் இயக்கங்களினால் நேரும் காலவகைப்பெயர் பற்றிய செய்திகளும் இத்-தொகுதியின் பிற்பகுதியாய் இடம்பெற்றுள்ளன. ஒன்பது கோள்-களாவன சூரியன், சந்திரன், செவ்வாய் புதன், வியாழன், வெள்ளி, சனி. இராகு, கேது என்பனவாம். இவற்றுள் உலகிற்கு ஒளிதந்து விளங்கும் சூரியனும் சந்திரனும் முதலிடம் பெறுகின்றனர்.

சூரிய மண்டிலம் ஒளிமயமானது; பகலைத் தோற்றுவிக்கும் இவனைப 'பகலோன்' எனக் குறிப்பிடுவர் சூரியனின் உதயம், அந்தி, நடுப்பகல், சாமம் முதலிய காலக்கூறுகளை இம்மண்டிலத்தின் இயக்கத்தைக் கொண்டு கணிக்கின்றனர். எனவே, உதயம் முதலிய காலக் கூறுகளையும் சூரியனைப்பற்றி உரைக்கும்போது உடன் கூறுகின்றனர். சூரியனின் பேரொளிக்கு முன்னால் எந்த ஒளியும் குறைவு பட்டிருக்கும். இவனிடமிருந்து வரும் ஒளிக்கதிர்கள் சூரிய கிரணம் எனப்படும். இவனால் நேரும் வெயில் முக்கியமாகக் கருதத்தகும். சூரியனின் ஊர்தி, புரவி, தேர்ப்பாகன் பற்றிய விவரங்களையும் நிகண்டுகளில் காணலாம்.

இரவில் ஒளி தரும் சந்திரனிடமிருந்து நிலவு வெளிப்படுகிறது. பிறை வளர்தலும் தேய்தலுமாய்ச் சந்திரன் உருமாறி வருதலால் காலம் கணிக்கப்படுதற்கு உதவியாயுள்ளது. சந்திரன் ஊர்தியாக விமானமும் எடுத்துரைத்துள்ளனர். சந்திரன் இரவு நேரத்தில் தோன்றுவதனால் இரவு, இருள் பற்றிய பெயர்களும் உடன் கருதப்படுகின்றன. சூரியன் முதல் சனிவரை வரும் ஏழு கோள்களும் ஏழுகிழமையாய் வாரப்பகுப்பை உலகிற்குத் தந்தன. இராகுவும் கேதுவும் பாம்புக் கோள்களாகும். இவற்றோடு 'குளிகன்' என்னும் ஒருகோளைப்பற்றியும் சில நிகண்டுகள் சுட்டியுள்ளன.

சூரியன் சந்திரன் முதலிய கோள்கள் திரியும் வழி மேடவீதி, இடபவீதி, மிதுனவீதி என மூவகைப்படும் என்பதும் நிகண்டுகளால் தெரியவருகின்றது. பாம்புக்கோள்களாகிய இராகு கேதுவை அடுத்து உலகைத் தாங்குவதாகக் கருதப்படும் அனந்தன் என்னும் ஆதி-சேடனுக்குரிய பெயர்களையும் நிகண்டுகளில் காணலாம்

மேடம் முதல் மீனம் வரை 12 இராசிகள்; அசுவதி முதல் இரேவதி வரை இருபத்தேழு நட்சத்திரங்கள். இவை ஒவ்வொன்றிற்-குரிய பெயர்களையும் முறையே நிகண்டு நூல்கள் தொகுத்துத் தருகின்றன. இருபத்தேழு நட்சத்திரங்களின் பின் அருந்ததி, விடிமீன் வானமீன் பற்றிய பெயர்கள் தரப்பட்டுள்ளன. நட்சத்திரம் என்பது பதினெண் கணங்களுள் ஒன்றாகவும் உள்ளது எனவே, தேவ கணம் பற்றிய முந்திய பகுதியில் இந்நட்சத்திரங்கள் பற்றிய செய்திகள் விளக்கப்பட்டுள்ளமை காணலாம்

சூரிய சந்திரர் முதலிய கோள்களின் இயக்கத்தால காலப்பகுப்புக் காணப்படுகிறது. காலவகை பற்றிய பல்வேறு வகையான விளக்கங்-களை நிகண்டு நூல்களில் காணலாம். மிகநுண்ணிய கால அளவை யாகிய மாத்திரைப் பொழுது முதல் பெருங்கால அளவையாகிய ஊழி வரையில் காலப் பாகுபாடுகள் பல திறத்தனவாம் சிறப்பாக நாழிகை, பொழுது, நாள், திதி, வாரம், பக்கம், திங்கள், யாண்டு, ஊழி என்றிவ் வாறு ஒன்றினைவிட ஒன்று பெரிதாகக் கால அளவு பெருகிவருதலைக் குறிப்பிடலாம். இப்பெரும் பிரிவுகளுக்கு உட்பட்ட தொடர்புடைய செய்திகளும் அவ்வவற்றோடு உடனிணைத்து விளக்கப்பட்டுள்ளன.

பொழுது என்பதில் அருேணாதயம் முதல் இரவுவரைப் பல காலப்பாகுபாடுகள் உள சந்தி, சாமம், பகல், வெயில், இரவு, இருள் என்பன பற்றிய பெயர்களை இதில் அடக்கியுரைக்கலாம். நாள் என்னும் பகுதியில முன்னைநாள், பின்னைநாள், பாதிநாள் என்ப வற்றிற்கான பெயர்வழக்குகளைக் காண்கிறோம். வாரம் ஏழு கிழமை களாகக் கோள்களின் பெயரைப் பெற்று அமைகிறது.

சந்திரனின் நிலைமாற்றத்தைக் கொண்டு திதி, பக்கம், மாதம் முதலிய காலப்பிரிவுகள் அமைகின்றன. சந்திரனின் நிலைமாற்றத்தால் மதிதெரி கலையிரா, மதிமறை கலையிரா, அமாவாசை, பூரணை என்பவை கருதப்படுகின்றன. 15 நாள்கள் கொண்ட பக்கம் நந்தை,

பத்திரை, சயை, இருத்தை, பூரணை என ஐந்து வகையாகப் பெருகி வருதலும் அருகிவருதலும் சந்திரனின் கதியைவைத்துக் கூறப்பட்-டுள்ளன. பக்கம் இரண்டு கொண்டது மாதமாத உருக்கொள்கிறது. மாதப்பிறப்பு முக்கிய நிகழ்ச்சி; எனவே, இதுபற்றிய பெயரும் சுட்டப் படுகிறது. இரண்டு திங்கள் சேர்ந்தகாலம் பருவமாகவும் 6 திங்கள் கொண்ட பகுதி அயனமாகவும் கணிக்கப்படுகின்றன.

காலவகை என்னும்போது நிகழ்காலம் இறந்தகாலம், எதிர்காலம் என மூன்று மாற்றங்கள் முக்கியமாகக் கருதப்படுகின்றன. பொழு தினைச் சிறுபொழுது, பெரும்பொழுது என இரு பெரும் பிரிவாகக் கூறுவர். இரண்டு இரண்டு மாத அளவு கொண்ட பருவம் பெரும் பொழுதாகும். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முது வேனில் என்னும் அறுவகைப் பொழுதிற்கும் உரிய பெயர்களை நிகண்டுகளில் காணலாம். ஒருநாளின் பகுதியவாய காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை என்னும் அறுவகைப் பிரிவுகள் சிறுபொழுது எனப்படும்.

பெருங்காலப் பகுப்பு ஊழி என்பதாகும் என முன்னர்ச் சுட்டி னோம். நால்வகை யுகம, உகமுடிவு பற்றிய விளக்கம் இப்பெருங்காலப் பகுப்பாகும் பிரமனுடைய வாழ்நாள் கற்பம் என்று வழங்கப்படும் செய்தியும் குறிக்கப்பட்டுள்ளது

மனிதனின் வாழ்நாள், அவன் வாழ்வை வழிநடத்தும் ஊழ் பற்றிய பெயர்களின் விளக்கமும் நிகண்டுகளில் காணப்படுகின்றன. ஊழ் என்பதைத் தொல்காப்பியர், 'பால்வரை தெய்வம்' என்று குறிபபிடுவர் காலவகைப் பெயர்களும் கடவுள் நிலைபெற்றனவாக முந்தையோர் கொண்டுள்ள மரபினைக் கருத்தில் கொண்டே நிகண்டாசிரியர்களும் காலவகைப் பெயர்களை இப்பகுதியில் குறித்தனராதல் வேண்டும்.

அட்டவணை

தெய்வப் பெயர்ப் பாகுபாடு



திருமால்



திருமகள்
ஊர்தி முதலியன
அவதாரம்
திருமால் புதல்வர்
ஊர்தி
கொடி
ஆயுதம் (பஞ்சாயுதம்)
சக்கரம்
தனு
வாள்
தண்டு
சங்கு
தசாவதாரம்
பதினைந் தவதாரம்
மூர்த்தம
பலராமன் (பலபத்திரன்)
பனை
கொடி
பிரமன்
கலைமகள்
ஊர்தி
ஊர்தி
படை
கொடி
காமன்
ஐயனார் (சிவனபுதல்வரும் ஆவர்)
ஊர்தி
கொடி
வில்
நாண்
கணை (ஐங்கணை)
மதன்
இரதி
இரதிதங்கை
செயல்
அவத்தை
சுப்பிரயோகம்
விப்பிரயோகம்
சோகம்
மோகம்
மரணம்


பெண் தெய்வம்
உமை
கங்கை
திருமகள்
கலைமகள்
மூதேவி
ஊர்தி
படை
கொடி
போர்த் தெய்வம்
சத்தமாதர்
ஊர்தி
படை
அமரமாதர்
தெய்வப்பெண்
காடுகாள்
பத்திரகாளி
ஊர்தி
கொடி
படை
துர்க்கை
ஊர்தி
படை
ஏவல்செய்வோர்
இடாகினி
யோகினி
கொடி
ஊர்தி

புறச்சமயம்

(சமணமும் பௌத்தமும்)



திசை காவலர்



இந்திரன்
குபேரன்
யமன்
கிழக்கு
தென்கிழக்கு
தென்மேற்கு
மேற்கு
வடமேற்கு
வடகிழக்கு
இந்திரன்
அக்கினி
யமன்
வருணன்
குபேரன்
படை
மந்திரி
காலன்
காலன் படை
செய்வது
குடும்பவளம்
தேவி
மகன்
நகர்
மண்டபம்
மாளிகை
நந்தவனம்
படைவளம்
யானை
குதிரை
படை
கொடி
பண்டாரம்
சேமநிதி
ஐந்துநிதி
உணவும்
உணவு
புனைவது



தேவகணம
தேவர்
அசுரர்
வித்தியாதரர்
இசை வல்லார்
பலவேறு உலகவாசியர்
பூதம்
பேய்
திணெண்கணம்
தேவர்
தேவா முப்பத்து மூவர்
கடவுளர்
அசுரர்
மாவலி
அரக்கர்
கினனரர்
கந்தருவர்
கிம்புருடர்
போகபூமியில இன்புறுவோர்
ஆகாயத்தில சஞ்சரிப்போர்
தேவருக்கேவல் செய்வோா
தீயுலக கோா
கோா
ஆதிததா பன்னிருவர்
உருத்திரர்
வசுக்கள்
அச்சுவினிகள இருவர்
அமரர்
சித்தர்
அசுரர்
சாரணர்
கருடர்
கின்னரர்
இயக்கர்
விஞ்சையர்
இராககதர்
பூதர்
பசாசு
முனிவர்
போக பூமியர்

அட்ட மூர்த்தம்



ஐம்பெரும்பூதம்
சூரியன்
சந்திரன
இயமானன் (ஆன்மா)
சுவர்க்கம்
பொனனுலகு
மோக்கம்
முத்தி
அமுது
தெய்வஉணவு
ஆலகாலவிடம்
ஆகாயம்
காற்று
நெருப்பு
நீர்
மண், மேலேழுலகம்
பனிக் காற்று
வாடைக் காற்று
மேல் காற்று
கீழ் காற்று
தென்றல்
சுழல் காற்று
தசவாயு
மழை
வெள்ள நீர்
நதி
கங்கை
வருணன்
வருணன் வாகனம்
நிறை புனல்
நீந்து புனல்
கலங்கல் நீர்
நீரோட்டம்
நீர்த் திரை
நீர்க் குமிழி
ஆழ நீர்
நீர்ச் சுழி
நுரை
வடவாமுகாக் கினி
விளக்கு
அனல் வகை
கரி சாம்பல
புகை நறும்புகை
தீககடவுள்
தவத்தீ
தீககடவுள் பாரி
அனற் பொறி
அனற் றிரள்
காட் டெரி
கொள்ளி
தீக்கடை கோல்
யாகத தீ
முத்தீ
பஞ்சாக கினி

- மேகம்
  - ஏழு மேகம்
  - ஏழு மழை
  - இடி யேறு
- மழைநிலை
  - பெரு மழை
  - விடாது சொரிதல்
  - தலைப் பெய் மழை
  - மழை பெய்து விடுதல்
- நீர்நிலை
  - துளி
  - ஆலாங் கட்டி
  - துவலை
- வானிலை
  - மின்னல்
  - இடி
  - பரிவேடம்
  - வான வில்
  - இரட்டை வில்
- காமன் காண்டம்

- வெளி
  - பகிரண்டம்
  - அண்ட கோளகை
  - அண்ட முகடு
  - அண்டச் சுவா
- திக்கு
  - எண் திக்கு
    - எண் திசை யானை
    - அட்டமா நாகம்
    - எண் திசை யோனி
    - எண் திசைப பாலகர்
  - கிழக்கு
  - தெற்கு
  - மேற்கு
  - வடக்கு
  - திசை நாற்கோணம்

நவகோளகள்

- சூரியன்
  - சூரிய மண்டிலம்
  - சூரியகிரணம்
  - வெயில்
  - ஊர்தி
  - புரவி
  - கோப்பானை
  - உதயம
  - கழிவுநாள்
  - அந்தி
  - நடுப்பகல
  - சாமம்
  - பகல்
- சந்திரன்
  - நிலவு
  - பறைநிரமபல
  - ஊர்கு
  - இரவு
- செவ்வாய
- புதன்
- வியாழன்
- வெள்ளி
- சனி
- இராகு
- கேது
- மூவகை வீதி
  - மேடவீதி
  - ஆடபவீதி
  - மிதுனவீதி
- குளிகன்
- அனந்தன்

இராசி

	1	2	3	4	
	மேடம்	இடபம்	மிதுனம்	கர்க்கடகம்	
12	மீனம்	இராசி வட்டம்		சிங்கம்	5
11	கும்பம்			கன்னி	6
	மகரம்	தனு	விருச்சிகம்	துலாம்	7
	10	9	8		

நட்சத்திரம்

- 27 நட்சத்திரம் (அச்சுவதி — இரேவதி)
  - 1 அச்சுவதி
  - 2 பரணி
  - 3 கார்த்திகை
  - 4 உரோகணி
  - 5 மகசிரம்
  - 6 திருவாதிரை
  - 7 புனர்பூசம்
  - 8 பூசம்
  - 9 ஆயிலியம்
  - 10 மகம்
  - 11 பூரம்
  - 12 உத்திரம்
  - 13 அத்தம்
  - 14 சித்திரை
  - 15 சோதி
  - 16 விசாகம்
  - 17 அனுடம்
  - 18 கேட்டை
  - 19 மூலம்
  - 20 பூராடம்
  - 21 உத்தராடம்
  - 22 திருவோணம்
  - 23 அவிட்டம்
  - 24 சதயம்
  - 25 பூரட்டாதி
  - 26 உத்தரட்டாதி
  - 27 இரேவதி
- அருந்ததி
- விடிமின்
- வானமீன்

காலம்



காலநுட்பம்
மாத்திரை
காலவிரைவு
நாழிகை
பொழுது
அருணோதயம்
சந்தி
சாமம்
பகல்
இரவு
வெயில்
இருள்
நாள்
வாரம் (கிழமை)
திதி
பக்கம்
திங்கள் (மாதம்)
யாண்டு
காலவகை
ஒருகலை மதிவரு நாள் (மதிதெரி கலையிரா)
மதிமறை கலையிரா
அமா வாசை
பூரணை
1 நந்தை
2 பத்திரை
3 சயை
4 இருத்தை
5 பூரணை
மாதப்பிறப்பு
பருவம்
அயனம
முன்னை நாள்
பின்னை நாள்
பாதிநாள்
முக்காலம்
சிறுபொழுது
பெரும்பொழுது
பெருங்காலம்
நிகழ்வு
இறப்பு
எதிர்வு
காலை
நண்பகல்
எற்பாடு
மாலை
யாமம்
வைகறை
நால் வகை
உக முடிவு
கற்பம்
வாழ் நாள்
ஊழ்
கார்
கூதிர் (சரத்காலம்)
முன்பனி அச்சிரம்)
பின்பனி
இன வேனில்
முது வேனில
கோடை
வெப்பம்

8

தெய்வப் பெயர் விளக்கம்

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பர் தொல்காப்பியர். இதனால் எவ்வகைப் பெயரும் தனித்தனிப் பொருள் பொதிந்தனவாயிருத்தல் இயல்பு என்பது போதரும். ஒரு பொருளுக்குப் பெயரிடுகின்றபொழுது அதன் வடிவம், வண்ணம் குணத்தன்மை, செயல் ஆகியவைப்பற்றிப் பெயரிடுதல் மரபாகும். ஆகவே, எல்லாப் பெயரும் காரணப்பெயர்களாகவே அமையும் என்றாலும் சிற்சில பெயர்களின் பெயர்க்காரணம் பின்னோருக்கு விளங்காது போயிற்று ஆனால், அவற்றை முநதையோர் வழங்கிய முறையிலேயே தாமும் வழங்கி வருவாராயினர். இவ்வனமாகப் பின்னாளில் காரணம் காண இயலாத பெயர்களை இடுகுறிப் பெயர் என வழங்கலாயினர். இடுகுறியாவது முந்தையோர் இட்டு வழங்கியமுறையிலேயே பயன்படுத்தப் பட்டுவரும் பெயர் என்பதாம்.

இனி, தெய்வப் பெயர்களின் வழக்கு முறைகளைக் காண்போம். ஏதேனும் ஒரு தெய்வத்தை எண்ணுகின்றபொழுது அத்தெய்வத்தின் திருவுரு நம் கண்முன் வந்து நிற்கும் அத்தெய்வத் திருவுருவுடன் அதன் தனிக்குணங்கள், அரிய செயல்கள், அத்தெய்வம் பற்றிய புராண வரலாறுகள் போன்ற அதனோடு இயைபுடைய எல்லாம் தெற்றெனப் புலனாகும். அத்தெய்வம் குறிதது ஆன்றோர்கள் பாடிய பாடல்கள், எழுதிய வரலாற்றுக் குறிப்புக்கள், புராணங்கள், முதலியன எல்லாம் அத்தெய்வம் பற்றிய செய்திகளை நாம் அறிவதற்குத் துணைநிற்கும். இந்த அடிப்படையில் நிகண்டுகளில் காணும் தெய்வப்பெயர்களை நோக்குதல் வேண்டும்.

அருகன்

அருகன் என்று எண்ணும்போதே அப்பெருமானின் திகம்பரவடிவம் கண்முன் வரும்.

'மற்றுந் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பு மிகை' (குறள் 345)

எனத் திருவள்ளுவர் எடுத்துக் கூறுவதுபோல உடம்பையே மிகையாகக் கருதும் முற்றுந் துறந்தவரே அருக பதவியை எய்துவர் திக்கையே ஆடையாகக் கொண்டவனாய் உடம்பில் ஆடை எதுவும் இன்றிக் காட்சி தருவன். எனவே 'திகம்பரன் என்பது அருகனுக்குரிய ஒரு பெயராகும். அப்பாண்டை நாதர் உலாப் பாடிய அனந்தவிசயர், 'ஆடையணியா தழகன்' என்று அருகதேவனைப் போற்றுகிறார். எவ்வகைச் சலனமும் அற்றவனாதலின் 'அசலன்' என்பதும் அவனுக்கு ஒரு பெயராயிற்று.

இவன் அசோகமர நிழலில் அமர்ந்திருப்பவன்; இதனைக் குறிக்கும் வகையில், அசோகமர் கடவுள், அசோகமர்நதோன், அசோகின் பெருந்தகை, அசோகுடைச் செல்வன், செயலையங் கடவுள் என்னும் பெயர்கள் நிகண்டுகளில் காணப்படுகின்றன.

'பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த
நான்முகற் றொழுது நன்கியம் புவன் எழுந்தே'

என அருகதேவனைப் பவணந்தி முனிவர் போற்றுகின்றார் இவர் குறிக்கும் 'நான்முகன்' என்ற பெயரை நிகண்டாசிரியர் எவரும் குறித்திலர் இதற்கு மாற்றுப் பெயராகச் 'சதுர்முகன்' என்பதைச் சூடாமணி நிகண்டு சுட்டுதல் காணலாம்.

அருகன் சிங்காசனத்தில் வீற்றிருப்பவன். அரியணைச் செல்வன், அரியாசனன் என்னும் பெயர்கள் இக்காரணத்தால் எழுந்தன.

அறத்தையே போதிப்பவனாதலின், அறவோன், அறத்தின் மன்னன், தருமராசன் எனப்படுகிறான் தருமசக்கரம் தரித்தவன் என்னும் கருத்தில் அறவாழியன், அறவாழியண்ணல, அறவாழி அந்தணன், நேமிநாதன் என்னும் பெயர்கள் அமைகின்றன.

'அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது' (குறள் 8)

என்கிறார் திருவள்ளுவர். கருணைக்கடலாய் விளங்குபவன் அருகன்; அவனுடைய கொடி அருட் கொடியாகப் போற்றப்படுகிறது. அருட்கொடி வேந்தன், அருட் கொடையாளன், அருளாழி வேந்தன்' என்பன இவன்தன் கருணை காரணமாகப் பிறந்த பெயர்கள்

முதற்கடவுள் என்னும் கருத்தில் ஆதி, ஆதியங்கடவுள் என்னும் பெயர்கள் இடம் பெறுகின்றன. வினைகளை வென்ற வீரன் ஆதலால் காதி வென்றோன், சினன், சினவரன், சினேந்திரன் என்னும் பெயர்களுக்குரியவனாகிறான்.

பூமேல் நடந்த பெருமாள் ஆதலால் பூமகன், பூமிசை நடந்தோன், போதினடந்தோன் எனப்படுகின்றான்

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்' (குறள். 3)

எனத் திருவள்ளுவர், 'மலர்மிசை ஏகினான்' என்று போற்றுவது காணலாம்.

அருகன் இருந்து அறமுரைக்கும் தானம் சமவசரணம் எனப்படும். இதனைப், 'பொன்னெயில்' என்பர் ஆகவே, அருகனைப் பொன்னெயில்நாதன், பொன்னெயிற்கோன் என்று போற்றுவர்.

காமம் முதலிய முக்குற்றம் கடிந்த முதல்வனாதலின் காமற்காய்ந்தோன், மதனை வென்றோன், வேளைவென்றோன் எனப் புகழுவர்.

தவநிலையில் சாந்தமே உருவாக அருகதேவன் காணப்படுதலின், சாது, சாந்தன், யோகி, ஆனந்தன், இன்பன், சித்தன், சுத்தன், நிருமலன், நின்மலன் முனிவன் என்னும் பெயர்களுக்கு உரியவனாகிறான்.

முக்குடை அருகதேவனுக்குரிய சின்னமாகும். முக்குடைச் செல்வன் முக்குடைப் புங்கவன், முக்குடையோன் என நிகண்டுகள் குறிப்பிடுகின்றன. 'முச்சகம் நிழற்றும் முழுமதி முக்குடை' எனப்போற்றுகிறார் பவணந்தி முனிவர்.

'திங்கள்மூன் றடுக்கிய திருமுக் குடைக்கீழ்ச்
செங்கதிர் ஞாயிற்றுத் திகளொளி சிறந்து
கோதைதாழ் பிண்டிக் கொழுநிழ லிருந்த
ஆதியில் தோற்றத் தறிவனை வணங்கி' (சிலப். காடுகாண். 1 4)

என இளங்கோவடிகள் திருமுக்குடைகீழ் விளங்கும் அறிவனாம் அருகனைப் போற்றுகின்றார்.

வேட்கையை அறவும் வென்றவன் ஆதலின் 'வேட்கை வென்றோன்' என ஒரு பெயரைத் தமிழ்நூரிச்சொற்பனுவல் தருகிறது இதே கருத்தில், 'வீதராகன்' என்னும் ஒரு பெயரை அப்பாண்டை நாதர் உலா குறிப்பிடுகிறது இப்பெயர் நிகண்டுகளில் இடம் பெறாத ஒன்றாகும்

அருகனுக்கு எண்குணம் உடையான் எண்குணத்தோன், எண்குணன் என்னும் பெயர்களும் உள அருகதேவனின் எண்குணங்களையும் திவாகரம், பிங்கலம், சூடாமணி என்னும் நிகண்டுகள் தனிப்பட எடுத்து விளக்கியுள்ளன. எண்குணத்தோடு அருகனின் படை' கொடி பற்றிய செய்திகளையும் பிங்கல நிகண்டு தனிப்பட எடுத்து விளக்குகிறது.

கொல்லாமை அறமே அருகன் போதித்த அறங்களுள் தலையாயது அதனால் கொல்லா மறையோன், கொல்லாவேதன் என்று இவன் போற்றப்பட்டுள்ளான்.

எல்லாவற்றையும் நீத்த அருகனிடம் ஆயுதம் எதுவும் இருப்பதும் இயல்பல்லவே, ஆதலின், நிராயுதன், படையிலி என்னும் பெயர்களுக்கு உரியவனாகிறான்.

ஞானம் நிறைந்த மூர்த்தி; எல்லாம் உணர்ந்தவன். எனவே, முழுதொருங்குணர்ந்தோன், மூவுலகுணர்ந்த மூர்த்தி, மூவுலகுணர்ந்தோன் என்னும் பெயர்கள் உளவாயின.

நற்கதியருளும் ஞானமூர்த்தியாகிய இவனை, 'சிவகதிக்கிறை' எனச் சூடாமணியில் மண்டலபுருடர் குறிப்பிடுகிறார். இளங்கோவடிகளும், 'சினவரன் தேவன் சிவகதி நாயகன்' (சிலப். நாடுகாண். 180) எனப் போற்றுதல் காணலாம்

இறைமையைக் குறிக்கும் பல பெயர்களும் அருகதேவனுக்கு உள்ளன. ஆண்டவன், ஆத்தன், இறைவன், சாமி, சோதி, நாதன், பண்ணவன், பரமேட்டி, முன்னோன், முனைவன், விநாயகன் என்னும் பெயர்களும் காணத்தக்கன.

அழிவிலன், இறுதியகன்றோன். ஆனந்தன், இன்பன், ஒள்ளியன், சுத்தன் சுயம்பு, தத்துவன், நாதன், நித்தன், பரமன், பரமேட்டி, புண்ணியமூர்த்தி, புண்ணியன், புனிதன், பூரணன், வரதன் போன்ற பலபெயர்கள் இவனுடைய இறைமைத் தன்மையை எடுததுக்-காட்டுவன இப்படியே ஒவ்வொரு பெயரிலும் அருகன் தொடர்பான செய்திகள் பல பொதிந்திருத்தல காணலாம். முதல் நிகண்டாகிய திவாகரம் 43 பெயர்களை அருகனுக்குக் கூறச் சூடாமணி நிகண்டு 90 பெயர்களைக் கொண்டதாயுள்ளது இப் பெயர்கள் காலந்தொறும் நிகழ்ந்த வளர்நிலை என்பதும் எண்ணிப் பார்க்கத்தகும்.

முதல் நிகண்டாகிய திவாகரத்துள் இடம்பெற்ற 43 பெயர்கள் வருமாறு :

அசலன்
அசோகுடைச் செல்வன்
அண்ணல்
அதிகுணன்
அதிசயன்
* அபயன்
* அமலன்
* அமைவன்
அரியணைச் செல்வன்
அருளாளிவேந்தன்
அறவாழியந்தணன்
* அறிவன்
அனகன்
ஆசான்
* ஆதியங்கடவுள்
எண்குணன்
* கடவுள் மூர்த்தி
* காமற்காய்ந்தோன்
சாந்தன்
சினவரன்
சினேந்திரன்
* தத்துவன்
திகம்பரன்
தேவன்
பகவன்
பண்ணவன்
புங்கவன்
புண்ணியன்
புனிதன்
பூமிசை நடந்தோன்
பூரணன்
பொன்னெயில் நாதன்
மாசேனன்
முக்குடையோன்
* முதல்வன்
* முழுதொருங்கு உணர்ந்தோன்
முனைவன்
* மூர்த்தி
வரதன்
விண்ணவன்
விளங்கொளி
விறலோன்
வீரன்

இவற்றுள் பதினொரு பெயர்கள் பின்வந்த நிகண்டுகள் எதிலும் இடம்பெறவில்லை அவை மேற்காட்டிய பெயர்த் தொகுப்பில் உடுக்

குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளன இவற்றுள் அபயன், அமலன் என்னும் இரண்டும் வடமொழிப் பெயர்களே. இவற்றிற்கு முறையே பயமற்ற-வன், அழுக்கற்றவன் என்பது பொருளாம் அமைவன் என்றால் பொறிபுலன்கள் அடங்கியவன், எல்லாம் பொருந்தப் பெற்றவன் என்பது பொருள் முற்றத்துறந்த முனிவனாகக் காட்சி தருபவன் அருகன் என்பதாம். அறிவன், முழுதொருங்குணர்ந்தோன் என்பது அவனுடைய மெய்ஞ்ஞான நிறைவைக் காட்டும் பெயர்களாம். காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களையும் கடிந்த பெருமானாதலால் இத்தீமைகள் அவனை அணுகுவதில்லை காம இச்சையை முற்றுமாய்த் துறந்தவனாதலின் காமற்காய்ந்தோன் என்று போற்றப் படுகிறான் மக்களுடைய வாழ்க்கை செம்மை நலம் பெறச் சீரிய உண்மைகளை எடுத்துரைத்தவனாதலால் தத்துவன் எனச் சாற்றப்படுகிறான். அருகதேவன் முதற்கடவுள் என்று போற்றப் பெறுபவன். ஆதலின் ஆதியங்கடவுள், முதல்வன், கடவுள்மூர்த்தி என்னும் பெயர்களால் சிறப்பிக்கப்படுகிறான்

பாவமற்றவன் என்னும்பொருளில் 'அனகன்' என ஒரு பெயர் திவாகரத்துள் காணப்படுகிறது. இவ்வடமொழி வார்த்தையை அம்மொழிக்குரித்தான 'ந' கரமிட்டு 'அநகன்' என்று சூடாமணி நிகண்டு குறிப்பிடுகிறது இது எழுத்துப்பேதத்தால் வந்த வடிவ-வேறுபாடேயன்றி பொருளில் வேற்றுமை இல்லை

திவாகரத்தில் இடம்பெற்ற பெயர்களுள் சில பொருளில் மாறுபாடின்றி வேறுவேறு மாற்றுச் சொற்களால் குறிக்கப்பட்டமையால் தனிப்பெயர்கள் போலப் பின் நிகண்டுகளில் தோற்றம் அளிக்கின்றன. 'அசோகுடைச்செல்வன்' என்பது திவாகரத் தொடர்ப்பெயர். இதே கருத்தில், 'அசோகமர் கடவுள்' (பிங்.) அசோகமர்ந்தோன் (க), அசோகின் பெருந்தகை (பா), செயலையங் கடவுள் (த) என்னும் பெயர்கள் வந்துள்ளன

'அரியணைச் செல்வன்' என்னும் பெயர் (தி. பி. சூ.) அரியாசனன் எனப் பாரதிதீபத்தில் இடம் பெறுகிறது

தருமசக்கரமுடையன் அருகனாதலின் 'அறவாழி அந்தணன்' எனத் திவாகரம் அருகனைக் குறிப்பிடுகிறது. இக்கருத்தமைய அறவாழிவேந்தன் (பி. சூ.) 'அறவாழியண்ணல்' (க) அறத்தினாழியன் (த) எனவரும் பெயர்களைப் பின் நிகண்டுகளில் காண்கிறோம்.

அருகதேவனைத் தாமரை மலரின் மேல் நடந்தவன் என்பர். இது பற்றிப் பூமேனடந்தான் (தி. பி சூ. த) என்னும் பெயர் திவாகரத்தும் பிற நிகண்டுகள் சிலவற்றிலும் காணப்படுகிறது. இக்காரணம் பற்றியே 'போதினடந்தோன்', மலரின் வந்தோன்,' (பா) மலரூர்தி (த) என்னும் பெயர்களைப் பின்னிகண்டுகளில் காண்கிறோம். இவ்வாறே 'எண்குணன்' (தி பி. க சூ) என்பது எண்குணத்தோன் (பா) என்றும், புண்ணியன் 'தி பி. சூ.) என்பது 'புண்ணியமூர்த்தி' என்றும் வடிவம் வேறுபட்டு வழங்குதல் காணலாம்'

இங்ஙனமாகப் பொன்னெயில் நாதன் '(தி பி., க , பா) பொன்னெயிற்கோன்' (சூ) என்றும், முக்குடையோன் (தி., பி , க) என்பது முக்குடைச் செல்வன் (சூ, த) முக்குடைப்புங்கவன்' (பா) என்றும், காமற்காய்ந்தோன் (தி) வேளைவென்றோன் (த) என்றும் வரும் மாற்றுப் பெயர்களைப் பின்னிகண்டுகளில் வரும் ஒரு புதுப்பெயர் என்று கொள்வதற்கில்லை.

திவாகரத்தில் இடம்பெறாத புதுப்பெயர்களாகப் பிங்கல நிகண்டில் அனந்தஞானி, கருத்தன், நிராயுதன், வென்றோன் என நான்கு பெயர்கள் உள. இவற்றுள் அனந்தஞானி என்பது 'முழுதொருங்கு உணர்ந்தோன்' எனத்திவாகரம் தரும் பெயரின் வடமொழி வடிவமே, வென்றோன் என்பது பொறிபுலன்களை வென்றடக்கியவன் என்பதைக் காட்டும்

அருகன் எவ்வுயிருக்கும் துன்பம் செய்யாக் கொள்கையை உருவாக்கியவன் எனவே பிறருக்கு ஊறு விளைக்கும் ஆயுதங்களை அவன் பெறவேண்டியதே இல்லை எத்தகைய ஆயுதமும் தொடாதவன் என்ற கருத்தில்தான் 'நிராயுதன்' என்னும் பெயர் தோன்றியது. இதனைப் படையிலி' எனத் தமிழ்ச் சொல்லாகத் தமிழுரிச் சொற்பனுவல் தருகிறது. கருத்தன் என்பது எல்லாவற்றிற்கும் மூலமுதற்காரணப் பொருள் என்பதாம். திவாகரத்தில் காணப்படும் 'முதல்வன்' என்னும் பெயரோடு இதனை ஒப்பிடலாம்

கயாதரத்தில் 'சுத்தன்' என ஒருபெயர் உள்ளது பாரதிதீபத்தில், கலையுணர்ந்தோன், காரணன், பரமன், புண்ணியமூர்த்தி, மலரின் வந்தோன், முனிவன், விரதன் என்னும் பெயர்கள் புதுமையானவை

அருகனுக்குரிய பெயர்களில் மிகுதியான பெயர்களைத் தொகுத்துத் தந்தவர் சூடாமணி நிகண்டு செய்த மண்டலபுருடரே, முன் நிகண்டு-

களில் இடம் பெறாதனவாய் இவருடைய நிகண்டில் மட்டும் காணப்பெறுபவை 56 பெயர்கள் அவை வருமாறு :

அத்தன்	நிரஞ்சனன்
அநகன்	நிரம்பரன்
அநாமயன்	நிருமலன்
ஆத்தன்	நின்மலன்
ஆதன்	நின்னாமன்
ஆனந்தன்	நீத்தவன்
எண்வகைச் சிறப்புமுள்ளோன்	பரமேட்டி
கமலவூர்தி	பிதா
காதிவென்றோன்	புத்தன்
குற்றங்களில்லான்	புலவன்
கொல்லாவேதன்	பூமகன்
சதுர்முகன்	பொன்னெயிற்கோன்
சமி	போதன்
சாத்தன்	மதனைவென்றோன்
சாதருபி	மாமுனி
சாது	மால்
சாமி	முத்தன்
சித்தன்	மூவுலகுணர்ந்த மூர்த்தி
சிவகதிக்கிறை	யுகாதி
சினன்	யோகி
சீபதி	வரன்
சீமான்	வாமன்
சுயம்பு	விதாதா
தருமராசன்	விநாயகன்
தீர்த்தன்	விமலன்
நாதன்	விராகன்
நிச்சிந்தன்	வீதசோகன்
நித்தன்	வேதாந்தன்

இவற்றுள் பெரும்பாலன வடமொழிப் பெயர்களேயாகும். ஒருசில பெயர்கள் முன் நிகண்டுகளில உள்ளவற்றின் மாற்று வடிவங்களாம்

தமிழுரிச் சொற்பனுவலின் ஆசிரியர் தமிழ்ப் பெயர்களை மட்டுமே தொகுத்துத்தரும் நோக்கினர். இவருடைய நிகண்டில் காணப்படும தனிப் பெயர்கள் 36 அவை பின்வருமாறு

அருட்கொடையாளன்	செல்வன்
அழிவிலன்	தலைவன்
அளவிலன்	திருமகன்
அறத்தின் மன்னன்	துறந்தோன்
அறத்தினாழியன்	தூயன்
அறவோன்	நலலோன்
அறிஞன்	படையிலி
ஆண்டகை	புகரிலாளன்
ஆண்டவன்	பெயரிலி
ஆழியன்	பெருந்தகை
இறுதியகன்றோன்	பொறிபுலன் கடந்தோன்
இறைவன்	பொறையன்
இன்பன்	மகிழ்நன்
எண்வகைச் சிறப்பினன்	மலரூர்தி
ஒள்ளியன்	மூவுலகுணர்ந்தோன்
குறையிலி	மேலோன்
கொல்லாமறையோன்	வீடுபெற்றோன்
சிறுமையில்லான்	வேட்கைவென்றோன்

தமிழுரிச் சொற்பனுவலில் காணும் இப்பெயர்களுள் பெரும்பாலனவும் திவாகரம், பிங்கலம் சூடாமணி முதலியவற்றில் வடமொழி வடிவாய் அமைந்த பெயர்களின் தமிழாக்கமாயுள்ளன.

சிலப்பதிகார காவியத்தில் அருகனைப் பற்றிய குறிப்புகள் பல உள அருகன் பெயர்கள் பலவும் கதை மாந்தர் வாயிலாகவும் பிறவாறும் ஆசிரியர் எடுத்துரைக்கின்றார் இக் காவியத்துள் காணப்படும் பெயர்களுள் பல நிகண்டு நூல்களிலும் காணப் படுகின்றன சிற்சில பெயர்கள் வடிவ மாற்றத்துடனும் அமைந்துள்ளன. என்றாலும் நிகண்டுகள் எடுத்துரையாத பெயர்கள் ஏறத்தாழ முபபது இக்காவியத்தில் உள அவையாவன :

அங்கம்பயந்தோன்
அருண்முனி
அருளறம் பூண்டோன்
அறிவுவரம்பிகந்தோன்
இயல்குணன்
ஈசன்
எம்கோன்
ஐவரைவென்றோன்
குணப்பெருங்கோமான்
குணவதன்
குரவன்
குறைவில் புகழோன்
சங்கரன்
சதுமுகன்
சயம்பு
சாதுவன்
சாரணன்
சிவகதிநாயகன்
செம்மல்
செறிவன்
தருமமுதல்வன்
தருமன்
திகம்ஒளி
பரத்திலொளியோன்
பாத்தில் பழம்பொருள்
புராணன்
பெரியவன்
பொருளன்
மலர்மிசை நடந்தோன்
மூன்றவித்தோன்
வேதமுதல்வன்

இங்ஙனமே பெருங்கதை சிந்தாமணி, சூளாமணி முதலிய சமணகாவியங்களையும் கூர்ந்து நோக்கினோமானால் அருகன் பெயர்கள் மேலும் பல காணப்பெறலாம். இவற்றை நோக்கும்போது இலக்கியத்தில் வந்துள்ள பெயர்களையெல்லாம் நிகண்டுகள் முற்றுமாய்த் தொகுத்துத் தந்துள்ளன என்று சொல்வதற்கில்லை என்பது தெரியவரும்.

சிவன்

தெய்வங்களுக்குள் சிவபெருமானுக்கே மிகுதியான பெயர்கள் நிகண்டுகளில் காணப்படுகின்றன. முதல் நிகண்டாகிய திவாகரம் 63 பெயர்களைத் தருகிறது. சிவசுப்பிரமணியக் கவிராயர் இயற்றிய நாம தீப நிகண்டில் 161 பெயர்கள் காணப்படுகின்றன இத்தனை பேரெண்ணிக்கை பிற தெய்வங்களுக்கு இல்லை.

சங்கச் செய்யுட்களில் சிவன் என்னும் பெயர் காணப்படவில்லை. சிவனைக் குறிக்க 'முக்கண்ணான்' என்னும் பெயரை அவ்விலக்கியங்களில் காணலாம். மழுவாள் நெடியோன், காரி உண்டிக் கடவுள், இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன், சலதாரி, மணிமிடற்றண்ணல், அருந்தவதோன் என்னும் பெயர்களாலும் சுட்டப்படுபவன் சிவபெருமானே

ஐங்குறு நூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடல்,

நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்ந்தன முறையே!

என்று உமையொரு பாகனாகத் திகழும் ஒப்பற்ற இப்பெருமானின் திருமேனிக் காட்சி வருணிக்கப்படுகின்றது. 'கார்விரி கொன்றை' எனத் தொடங்கும் அகநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடல் சிவபெருமானின் திருவுருவக் காட்சியினைப் பலபடப் புனைந்து போற்றுகின்றது. அப்பாடல் வருமாறு :

கார்விரி கொன்றைப் பொன்நேர் புதுமலர்த்
தாரன்; மாலையன்; மலைந்த கண்ணியன்;
மார்பினஃதே மைஇல் நுண்ஞாண்
நுதலது இமையா நாட்டம்; இகல்அட்டு
கையது கணிச்சியொடு மழுவே; மூவாய்
வேலும் உண்டுஅத் தோலா தோற்கே;
ஊர்ந்தது ஏறே; சேர்ந்தோள் உமையே-
செவ்வான் அன்ன மேனி; அவ்வான்
இலங்குபிறை அன்ன விலங்குவால் வையெயிற்று
எரியகைந் தன்ன அவிர்ந்து விளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடரும் சென்னி,
மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொல்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற்று அந்தணன்
தாவில் தாழ்நிழல் தவிர்ந்தன்றால் உலகே.

மூவகை உலகமும் வேதகீதம் பாடும் அந்தணனாகிய சிவபெருமான் திருவடிக்கீழ்த் தங்கியுள்ளதாம் செவ்வான் போன்று இலங்குகிறது அவனுடைய திருமேனி; அவ்வானில விளங்கும் பிறை போன்று வடிவுடைய பன்றிக் கொம்பையும் உடையன். நெருப்புக் கிளர்ந்தெழுந் தாற்போன்று செந்நிறமாகச் சடை மிளிருகிறது. அதன் மேல் இளம பிறை சுடர்விட்டு இலங்குகிறது. கொன்றைத் தாரும் மாலையும் கண்ணியும் அவன் அணிந்துள்ளான். கையில் கணிச்சியும் மழுவும் உள்ளன. முத்தலைச் சூலமும் அவன் கையில் உண்டு. இவ்வாறாகச்

சிவன் திருக்கோலமும் அவன் திருவடியிலிருந்து மூவகை உலகமும் தோன்றி நிலைபெறுகையும் எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

புறநானூற்றின் கடவுள் வாழ்த்தும் சிவன் திருக்கோலம் பற்றியதே. அது வருமாறு :

கண்ணி கார்நறுங் கொன்றை; காமர்
வண்ண மார்பில் தாரும் கொன்றை;
ஊர்தி வால்வெள் ஏறே; சிறந்த
சீர்கெழு கொடியும் அவ்வேறு என்ப;
கடைமிடறு அணியலும் அணிந்தன்று; அக்கறை
மறைநவில் அந்தணர் நுவலவும் படுமே;
பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று; அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்;
பிறைநுதல் வண்ணம் ஆகின்று; அப்பிறை
பதினெண் கணனும் ஏத்தவும் படுமே;
எல்லா உயிர்க்கும் ஏமம் ஆகிய
நீர் அறவு அறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே.

இப்பாடலில் பெருந்தேவனார் அருந்தவ முனிவராகச் சிவபெருமானை நமக்குக் காட்டுகின்றார். இப்பெருமானின் திருமேனி வண்ணம், அவனுடைய அணிகளாகத் திகழ்பவை, அவனுடைய உறுப்புக்களின் அழகு முதலியவை இப்பாடலில் உவமைகளால் சிறப்பித்து ஓதப்பட்டுள்ளமை காணலாம்.

இளங்கோவடிகள் ஆக்கிய சிலப்பதிகாரப் பெருங்காவியத்தில், 'நுதல்விழி நாட்டத்திறையோன்,' 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்று சிவபெருமானைச் சுட்டுகின்றார். இவற்றால் சிவபெருமானைப் பற்றிய செய்திகள் மிக அதிகமாய்ப் பழங்காலந்தொட்டே நாட்டில் பரவியிருந்தமை புலனாம்.

தேவாரம் முதலிய தெய்வத் திருமுறைகள் பிறந்த காலத்தில் சிவன் திருநாமம் நாடெங்கும் பரவியது. தேவாரம் பாடிய மூவர் முதலிகளும் திருத்தலங்கள் தோறும் சென்று சிவபெருமானைத் துதித்துப்பாடி மக்களிடையே சிவநெறியைப் பரப்பினர். ஆகவே தேவாரம் அடங்கன்முறைப் பாடல்களில் சிவனைப் பற்றிய திருப்பெயர்கள் பலவாக இடம்பெற்று விளங்கக் காண்கிறோம்.

தேவாரம் அடங்கன்முறை என வழங்கும் முதல் ஏழு திருமுறைப் பாட்டுகளுக்கும் முதன்முறையாகத் தொடர் எண் தந்து, 1953 - ஆம் ஆண்டு இரு தொகுதிகளாக வெளியிட்டவர் மயிலைகிழார் இளமுருகனார் என்னும் மா. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களாவர். இப் பதிப்பில், 'அரும்பொருளகராதி' என்னும் தலைப்பில் ஏழு திருமுறைகளிலும் உள்ள பொருள்களைப் பல்வேறு தலைப்புகளின் கீழ் 144 பக்கங்களில் அவர் வெளியிட்டுள்ளார். இந்த அகராதியில் இளமுருகனார் அவர்கள், 'சிவன் திருப்பெயர்களில் சில' என்னும் தலைப்பில் 448 பெயர்களை அகராதி அடைவில் தொகுத்துத் தந்துள்ளார். இத்தொகுப்புடன் நிகண்டுகளில் வரும் பெயர்களையும் ஒப்பிட்டு நோக்கும்போது 80 பெயர்களே தேவாரப் பெயர்களுடன் ஒத்துள்ளன. அவையாவன

அகண்டன்
அங்கணன்
அட்டமூர்த்தி
அண்ணல்
அத்தன்
அந்தணன்
அமலன்
அரன்
அரியான்
அழகன்
அனகன்
அனாதி
ஆதி
இறை
இறைவன்
ஈசன்
உமாபதி
உருத்திரன்
ஒருவன்
கங்காளர்
கண்ணுதல்
கபாலி
கறைக்கண்டன்
காலகாலன்
காவலன்
காளகண்டன்
குழகன்
கூத்தன்
சங்கரன்
சடையன்
சந்திரசேகரன்
சம்பு
சயம்பு
சித்தன்
சூலபாணி
சோதி
ஞானமூர்த்தி
தாணு
தான்தோன்றி
துணையிலி
நக்கன்
நடன்
நந்தி
நம்பன்
நல்லான்
நாதன்

நித்தன்
நிமலன்
நிருத்தன்
பகவன்
பசுபதி
பரமன்
பரன்
பவன்
பாசுபதன்
பிஞ்ஞகன்
பித்தன்
பிதா
பிறைசூடி
புண்ணியன்
புயங்கன்
புனிதன்
பூதநாதர்
பூதபதி
பூரணன்
பெம்மான்
பெரியான்
பெருமான்
பேரருளாளன்
மங்கைபங்கன்
மத்தன்
மாதேவன்
முக்கணன்
முதல்வன்
மூர்த்தி
மெய்யன்
மேலர்
வாமன்
விடையான்
விடையூர்தி

இத்தொகுப்பில் காணும் பெயர்கள் பலவும் சிவபெருமானின் பண்பு பற்றிய பெயர்களாயும் தத்துவக்கருத்துக்களை உள்ளடக்கிய பெயர்களாயும் உள்ளன. மேலும் இவையெல்லாம் ஒரு சொல்லாயும் இருசொற்கொண்ட தொடராயும் அமைந்த பெயர்களாகும்.

சிவபெருமானின் திருமேனிவண்ணம். அவன் மாய்த்தொழித்த பகைமைகள், வீரட்டநிலை, அடியார் பொருட்டாக அவன் நிகழ்த்திய பல திருவிளையாடல்கள், பல்வேறு புராண வரலாறுகள் முதலிய வற்றை உள்ளடக்கிய பெயர்கள் இப்பட்டியலில் இடம் பெறவில்லை. இவைகுறித்துத் தொடர்களாக அமைந்தவற்றையும் நோக்கின் அவை மிகப் பலவாகும்.

'நன்றுடையானை' என்று தொடங்கும் திருச்சிராப்பள்ளித் திருப்பதிக (1 : 98) முதற்பாடலிலேயே நன்றுடையான், தீயதிலான், நரைவெள்ளேறு ஒன்றுடையான், உமையொருபாகமுடையான் சென்றடையாத திருவுருடையான் என ஐந்து தொடர்கள் அமையக் காணலாம். முன்னிலைப்பரவல், படர்க்கைப்பரவல், போற்றி என்னும் வகைகளில் அமைந்த பதிகங்களிலே வரும் திருப்பெயர்கள் பலப்பல.

'அரியானை அந்தணர்தம் சிந்தையானை' என்பது தொடக்கமாக வரும் திருத்தாண்டகப் பாடல்களில் வரும் பெயர்த்தொடர்கள் அருச்சனை நாமமாய்த் தொடர்ந்துவரக் காணலாம். இவற்றை யெல்லாம் தொகுத்தால், 'பேராயிரமும் பரவி வானோர் ஏத்தும் பெம் மானை' (6 : 54 : 8) என்றபடி ஆயிரக்கணக்காய்த் திருமுறைகளில் உள்ளமை காணலாகும்.

இளமுருகனார் தந்துள்ள பெயர்ப்பட்டியலில் நிகண்டுகளில் இடம் பெற்றுள்ள பெயர்கள் 80 உள்ளமை மேலே கண்டோம். நிகண்டுப் பெயர்களில் செப்பாதி இந்தப் பட்டியலில் இல்லை. அவைகளுள் பல திருவாசகம் முதலிய ஏனைய திருமுறைகளில் காணப்படுதல் கூடும். இலக்கிய வழக்காய் வரும் சிவபெருமான் திருப்பெயர்களைத் தொகுத்து நோக்கினால் நிகண்டுப் பெயர்களிலும் பல மடங்கான பெயர்களைக் காணலாகும் பெரும்பான்மை நிகண்டுகளும் முந்தைய நிகண்டுகளை அடியொற்றியும் சிறிதளவு விரிவு கொண்டுள்ளன. இலக்கிய வழக்கு களை முற்றுமாய் நிகண்டாசிரியர்கள் தொகுத்தனர் என்று கொள்ள இடமில்லை

தெய்வம் பற்றிய பொது இயல்புகள் பல்வேறு தெய்வங்களுக்கும் பொருந்தி வருதல் இயல்பே. முதற்கண் நாம் ஆராய்ந்து கண்ட அருகனுக்குரிய பெயர்களுள் பல சிவன் பெயர்த் தொகுப்பிலும் இடம் பெற்றிருக்கின்றன. அவையாவன :

அசலன்	நிமலன்
அண்ணல	பகவன்
அத்தன்	பண்ணவன்
அமலன்	பரமன்
அனகன்	புண்ணியன்
ஆதி	புனிதன்
ஆனந்தன்	பூரணன்
இறைவன்	மகிழ்நன்
சாமி	மேலோன்
சித்தன்	வரன்
சோதி	வாமன்
திகம்பரன்	விண்ணவன்
நாதன்	விமலன்

ஏறத்தாழ 26 பெயர்கள் பொதுக்குணம் காரணமாக அருகனுக்கும் சிவனுக்கும் ஒத்துவருகின்றன மற்றும சிலபெயர்கள் பொருள் மாறுபாடின்றிச் சிறிது வடிவவேறுபாட்டுடன் காணப்படுகின்றன

அருகன்	சிவன
அழிவிலன்	அழிவிலி
அளவிலன்	அளவிலி
அறிவன்	அறிவுவடிவன்
எண்குணத்தினோன்	எண்குணன்
கடவுள்மூர்த்தி	கடவுள்
கருத்தன்	கர்த்தன்
காமற்காய்ந்தோன்	காமதகனன்
வேளைவென்றோன்	வேளையழித்தோன்

இவற்றையும் சேர்த்து நோக்குவோமாயின் அருகனுக்கும் சிவனுக்கும் 34 பெயர்கள் பொதுவாதல் காணலாம். அருகனை வேளை வென்றோன், காமற் காய்ந்தோன் என்னும்போது காமனின் ஆற்றலைப் போக்கியவன் அருகன் என்றாம் அதாவது காமனால் விளையும் தீங்குகள் எதுவும் அருகதேவனை அணுகுவதில்லை என்பது கருத்து. சிவனுடைய பெயரில் காமதகனன், வேளையழித்தோன் என்னும் போது அவன் காமனை முற்றுமாய் அழித்துவிட்டான் என்பதாகும். இவ்வாறு அருமையாய்க் காணும் செய்திகளும் பெயா வேற்றுமையால் நமக்குப் புலனாகின்றன.

நிகண்டுகளில் பழமையான முதல் நிகண்டாகிய திவாகரத்துள் காணும் சிவன் பெயர் அறுபத்துநான்கே (64). பிந்திய நிகண்டுகள் இப்பெயர்களுள் பெரும்பாலனவற்றை எடுத்துக்கொண்டு வேறும் புதுப்பெயர்களைச் சேர்த்துவந்துள்ளன. எனவே, முதலில் சிவன் பெயர்களாகத் திவாகரம் தந்துள்ள பெயர்களை ஈண்டு நோக்குவோம்.

அந்திவண்ணன்	ஆதி
அமலன்	ஆலமர்கடவுள்
அரவாபரணன்	ஆனந்தன்
அரன்	ஆனையுரித்தோன்
அழலாடி	இறையோன்
அழலேந்தி	ஈசன்
அனாதி	ஈமத்தாடி

உமாபதி
உருத்திரன்
ஏற்றுவாகனன்
ஐம்முகன்
கங்காதரன்
கங்காளன்
கண்ணுதல்
கபாலமூர்த்தி
கயிலையாளி
கறைமிடற்று அண்ணல்
காமதகனன்
காலகாலன்
குன்றவில்லி
கூற்றையுதைத்தோன்
கொன்றைசூடி
சங்கரன்
சடையோன்
சிவன்
சுடலையாடி
சோதி
ஞானமூர்த்தி
தற்பரன்
திரியம்பகன்
நக்கன்
நந்தி
நம்பன்
நாதன்
நாரிபாகன்
நீலகண்டன்
நீறணி கடவுள்
பகவன்
பசுபதி
பரசுபாணி
பரமன்
பாண்டரங்கன்
பிஞ்ஞகன்
பித்தன்
பிறைசூடி
பினாகபாணி
புரமூன்றெரித்தோன்
புலித்தோலுடையோன்
பூதநாதன்
பெருமான்
பேயோடாடி
மழுவாளி
மறைமுதல்
மானிடமேந்தி
முக்கட்பகவன்
மூர்த்தி
யோகி

இவற்றுள் ஒருபகுதிப் பெயர்கள சிவபெருமானின் திருவுருவக் காட்சி பற்றியன. மற்றொரு பெரும்பகுதிப் பெயர்கள் அப்பெருமானின் திருவிளையாடல்கள் பற்றி அமைவன. அவன் திருமால் பிரமனுக்கும் ஆராய்ந்தறிய முடியாத மேம்பட்ட பெருந்தெய்வம். அவன் பல்வேறு வகையான மூர்த்தி பேதங்களையுடையவன் என்பதைத் தெரிவிப்பன சில வடமொழி வழியால் இயைந்த பெயர்களும இடையிடையே வருகின்றன. பெருமானின் தெய்விகப் பண்பு நலம்பற்றிப் பிறந்த பெயர்களும் பலவாகும்.

திவாகர நிகண்டில் மட்டுமே இடம்பெற்றவை ஆனையுரித்தோன், கபாலமூர்த்தி, புரமூன்றெரித்தோன், முக்கட்பகவன் என்பன. ஆனால்

இப்பெயர்களின் மாற்றுப் பெயராகவுள்ள பெயர்கள் பின்வந்த நிகண்டுகளில் உண்டு ஆனையைக் காய்ந்தோன் (நா) கரியுரித்தோன் (ஆ), கரியையுரித்தவன் (பொ) என்றும், கபாலமேந்தி (நா) கபாலி (பி) என்றும், திரிபுராந்தகன் (பி) புரதகனன் (பா) புராந்தகன் (உ), புராரி (பி) என்றும், முக்கண்ணவன் (பா), முக்கண்முதல்வன் (த), முக்கணன் (பொ), முக்கணான் (நா) என்றும் மேலே சுட்டிய நான்கு பெயர்களும் பிந்திய நிகண்டுகளில் இடம்பெறுதல் காணலாம். இவ்வாறாக முன் நிகண்டுப் பெயர்களின் மாற்றுப் பெயர்கள் மிக்குவருவதாலேயே எல்லா நிகண்டுகளிலும் பெயர் எண்ணிக்கை மிக்குக் காணப்படு-கின்றது கவனிக்கற்பாலது

திவாகர நிகண்டினை அடுத்துத் தோன்றிய பிங்கல நிகண்டில் மட்டும் காணப்படும் சிவன் பெயர்களாக உள்ளவை பதினாறு. அவையாவன :

அநாதி	பாசுபதன்
அரூபி	பார்ப்பதிகொழுநன்
கொன்றைமாலையன்	பிதா
சசிதரன்	புண்ணியன்
திரிபுராந்தகன்	பூதேசன்
நாசமில்லோன்	மாலயற்கரியோன்
நாயகன்	வாமன்
நிருத்தன்	வேதமுதல்வன்

திவாகரத்துள் வரும் கொன்றைசூடி என்பதற்குப் பிரதியாகக் கொன்றை மாலையன். பிறைசூடி எனவந்தது இங்கே சசிதரன் என்றாகிறது புரமூன்றெரித்தோன் — திரிபுராந்தகன், நாரிபாகன் — பார்ப்பதிகொழுநன்; பூதநாதன் - பூதேசன் என்று இவ்வாறு பொருள் மாற்றமின்றி வடிவமாற்றம் பெற்றுள்ளன. இந்த வடிவமாற்றம் புதுப் புதுப்பெயர்கள் போன்று எண்ணிக்கையை மிகுவிக்கின்றன என்பது கூர்ந்து நோக்கின் புலனாகும்.

இவ்வாறே உரிச்சொல் நிகண்டில் மட்டும் காணப்படும் பெயர் வடிவங்கள் பின்வருமாறு :

ஆலதரன்
ஐந்து முகத்தோன்
கங்கை தரித்தோன்
கண்ணுதலோன்
கயிலை வெற்பன்
கிரிசன்
சோமதரன்
திரிசூலபாணி
நாசமிலாதோன்
நீறாடி
பன்னகப்பூணினான்
புலித்தோலோன்
விடையன்

இவ்வாறே கயாதரம், பாரதிதீபம், ஆசிரியநிகண்டு, பொதிகை நிகண்டு ஆகியவற்றில் மட்டுமே காணப்படும் பெயர்கள் சில பல உள்ளன. எல்லா நிகண்டுகளிலும் மிகுதியான பெயர்களைத் தருவது நாமதீப நிகண்டு. இதில் உள்ள 161 பெயர்களுள் 84 பெயர்கள் இந் நிகண்டில் மட்டுமே காணப்படுவன. இவற்றுள் பல முந்திய நிகண்டுகளில் காணும் பெயர்களின் மாற்றுவடிவங்கள். நாமதீப நிகண்டில் மட்டும் காணப்படும் பெயர் வடிவங்கள் வருமாறு.

அக்கம் அணிந்தோன்
அகண்டன்
அசலன்
அத்துவிதன்
அந்தமிலான்
அயனுக்கெட்டான்
அரியன்
அருள்வடிவன்
அளவிலான்
அறுகணிந்தோன்
அன்பருக்கெளியன்
அன்னையிலான்
ஆகமங்களோதினோன்
ஆமையோடணிந்தோன்
ஆரணிந்தோன்
ஆலமர்ந்தோன்
ஆனையைக் காய்ந்தோன்
இந்து இனன் தீ முக்கணான்
ஈமத்திலாடி
எண்ணெண் விளையாட்டான்
எருக்கு அணிந்தோன்
எழுத்தைந்தன்
என்பு அணிந்தோன்
ஐந்துமுகன்
ஐந்தொழிலான்
ஐயைந்து மூர்த்தி
கங்கையணிந்தோன்
கத்தன்
கபாலமேந்தி
கயிலைநாதன்
கரந்தை அணிந்தோன்
காமனைக் காய்ந்தோன்
காலனைக் காய்ந்தோன்
குகன்தாதை
குபேர சிநேகன்
சங்கக் குழையன்
சத்தியைந்தன்
சாட்சாத்காரன்

சாமப்பிரியன்
சாமி
சிங்கநகமணிந்தோன்
சுகன்
சுந்தரர்தூதன்
சுருதியோதினோன்
சூக்கன்
சூலமேந்தி
செம்மல்
சேய்க்கறியுண்டோன்
ஞானி
தந்திதாதை
தந்தையிலான்
திரிமூர்த்தி
தீயேந்தி
துடியேந்தி
தும்பையணிந்தோன்
தோலுடையன்
நகமூர்த்தி
நிட்களன்
நிர்க்குணன்
நிர்ச்சங்கன்
நிர்ப்பேதன்
நிரஞ்சனன்
நிரந்தரன்
நின்னாமன்
பங்கி
பன்றிக்கோடு அணிந்தோன்
பாம்பு அணிந்தோன்
பார்—தேர்; வேதம்—பரி;
அயன்—பாகன்; மால்—கணை;
தீ-அம்புமுனை; வாயு-கணை
விசை; மேரு-வில்; அரவு—
நாண்; ஞாயிறு மதி ஆழி;
பாற்கடல்-அம்புத்தூணி—
இவற்றைக் கொண்டோன்
பிறப்பிலான்
பிறை அணிந்தோன்
புலியைக் காய்ந்தோன்
பூணூலன்
பூரணன்
மத்தம் அணிந்தோன்
மலவயிரி
மழுவேந்தி
மனத்தினெட்டான்
மால்கண் அணிந்தோன்
மாலுக்கெட்டான்
மீன்கண் அணிந்தோன்
வன்னியணிந்தோன்
வாக்கினெட்டான்
விடையுயிர்த்தோன்
வில்வம் அணிந்தோன்

நாமதீப நிகண்டில் பற்பல தனிப்பெயர் வடிவங்கள் காணப்படுவது போலவே அண்மையில் தமிழுரிச்சொற்பனுவல் ஆக்கிய கவியராச பண்டிதர் இராமசுப்பிரமணிய நாவலரும் பற்பல புதுவடிவங்களைத் (86) தம் நூலுள் தந்துள்ளார் இவ்வடிவங்களுள் பல முந்திய நிகண்டுப் பெயர்களின் தமிழாக்கமாகவும் காணப்படுகின்றன தமிழுரிச் சொற்பனுவல் நூலுள்மட்டும் காணப்படும் பெயர்கள் வருமாறு :

அருளின் செல்வன்
அளவிலி
அறிவுவடிவன்
அறுகு சூடிய அண்ணல்
அனலமேந்தி
ஆரணிமுடியோன்
ஆறணிந்தோன்
இயவுள்
இன்பமருள்வோன்
உடையிலி
உலகத்தேரோன்
எண்ணிகந்தோன்
எண்பெருவடிவினன்
எண்வகைஇயல்பினன்
எருக்கமணிந்தோன்
எளியார்க்கெளியன்
ஐங்கருப்பொருளுமாளுந் தகையோன்
ஐந்தெழுத்தினன்
ஐயமேற்றோன்
ஐயன்
ஒருவன்
ஒளியோன்
கடவுள்
கரியமிடற்றோன்
களிற்றுரியோன்
கால்மறித்தாடிய கலைஞன்
குழகன்
குற்றமில்லோன்
கூத்தன்
செக்கர்வானிறத்தோன்
தந்தை
தலையோடேந்தி
தழலாடி
தானேதோன்றி
திருமாலம்பினன்
துடியுடைக்கையன்
துணையொன்றில்லான்
தும்பைசூடிய அண்ணல்
தூயன்
தேடுதற்கரியோன்
தோன்றல்
நஞ்சமுண்டோன்
நண்ணுதற்கரியோன்
நல்லோன்
நால்வர்க்கருளினோன்
நாலிருந்தோளன்
நான்மறைமாயன் மானண்ணற் கரியோன்
நிலைபெயராதான்
நிறைந்தோன்
நுண்ணியன்
பண்ணவன்
பலவுயிர்த்தலைவன்
பாம்பணிகலத்தோன்
பிறழா நிலையோன்
பெயரிலி
பெரியோன்
பேய்ப்படையாளன்
பேரருளாளன்
பேரிறை
மகிழ்நன்
மதிமிலைந்தோன்
மயலோன்
மயிர்க்கற்றையான்
மலைமடந்தைமணவாளன்
மலையன்
மறைகட்கரியோன்
மறைமுதல்வன்
மன்றவாணன்

மாலுக்காழியளித்திட்டோன்
முக்கண்முதல்வன்
முடிவிலன்
முதலிலி
முதலீறில்லோன்
முதுமலையாள்வோன்
முழுவெண்பாளன்
முன்னமைந்துடையோன்
மூவெயிலெரித்தோன்
மேலோன்
வடிவிலன்
வானவர்புரவலன்
விசும்பாடையன்
விடைக்கொடியுயர்த்தோன்
விண்ணவன்
வீட்டினன்
வேள்விசிதைத்தோன்
வேளையழித்தோன்

இவ்வாறாகச் சிவன்பெயர்களை நிகண்டுகள் நமக்குத் தொகுத்துத் தந்துள்ளன. பெயர்த்தொகுப்போடு சிவன் தொடர்பான பல செய்திகளுக்கான விளக்கத்தைப் பிங்கல நிகண்டில் மட்டும் காணலாகும். சிவன் ஆடல், சிவன் ஊர்தி, சிவன் கொடி, சிவன் படை, சிவன் இருப்பது, சிவன் தரிப்பது, சிவன் முடிப்பது, சிவன் உடுப்பது, சிவன் அட்டமூர்த்தம், சிவன் எண்குணம், சிவன் ஐம்முகம், சிவபதம் நான்கு, சிவபூசையியல்பு, சிவாகம நூற்பயன், சிவனழித்த முப்புரம் என்பவற்றிற்கான விளக்கங்கள் உள்ளன. சிவனுடைய ஊர்தியாகிய நந்திக்குரிய பெயர்களாகிய இடபம், இறைவாகனம், எருது, ஏறு, சிவகண முதல், புங்கவம், விடை என்பவற்றையும் பிங்கல நிகண்டு எடுத்துக் கூறுவது காணலாம். எருது என்பதற்குரிய பெயர்களை எடுத்து கூறும் மாப்பெயர்த் தொகுதியில்;

'பாறல், சே, விடை, பாண்டில், பெற்றம்
பூணி, குண்டை, புல்லம், காளை,
இறாலே, கொட்டியம், மூரி, எருதெனல்.' (பிங். 2470)

'குத்தமும், விடபமும், கூளியும் நந்தியும்,
உக்கமும், இடபமும், ஏறுஎன உரைப்பர்.' (பிங். 2471)

'பகடு, தூரியம், பாறல், பேரெருதே.' (பிங். 2472)

என்று எருது, ஏறு என்பவற்றிற்கான பெயர்களைப் பிங்கலர் கூறுகிறார். நந்தியின் பெயர்களுள் எருது, ஏறு என்பவற்றைக் கூறுவதானால் இவற்றிற்குரிய மாற்றுப் பெயர்களும் நந்தியைக் குறிக்கும் என்பது தெரியவரும்

திருமால்

திருமால் காத்தற் கடவுள்; கடல் வண்ண நிறமுடையன்; கையில் சங்கு, சக்கரம், வில் வாள், கதை என்னும் ஐந்து ஆயுதங்களையுடை-யவன். திருமகளும் பூமகளும் இருபாலும் திகழ விளங்குபவன். நின்றும் இருந்தும் கிடந்தும் காட்சிதரும் திருமேனியுடையவன். ஆதிசேடனாகிய படுக்கையில் பாற்கடலிலே பள்ளி கொள்பவன். திரு வேங்கட மலையில் திருமாலின் நின்ற கோலத்தையும் திருவரங்கத்-திலே கிடந்தவண்ணத்தையும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் மாங்காட்டு மறையோன் வாய்மொழியால் அழகுறச் சித்திரித்துள்ளார்.

நீல மேகம் நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்
வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக் கோடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
நலங்கிளர் ஆரம் மார்பில் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்
என்கண் காட்டென் றென்னுளங் கவற்ற
வந்தேன் குடமலை மாங்காட் டுள்ளேன்'

(சிலப். நாடுகாண். 35-53)

எனவரும் மாங்காட்டு மறையோனின் சொற்சித்திரம் இருபெருந்திருப் பதிகளிலும் எழுந்தருளியிருக்கும் திருமாலின் திருவுருவை நம் கண் முன் கொண்டுவந்து நிறுத்துகிறது.

பத்து அவதாரங்களை எடுத்த மூர்த்தி திருமால்.

மீனே ஆமை வராகம் நரசிங்கம்
வாமன னன்பரிசி ராமன் இராமன்
பலதேவன்வசு தேவன் வருகற்கியென்
றாகுர் ஈரைந்தும் அரியவ தாரம்'

எனத் திவாகர நிகண்டு திருமாலின் பத்து அவதாரங்களையும் குறிப்பிட்டுக் கூறுகிறது. இந்த அவதாரங்களில் அவன் தீயோரைப் போக்கி நல்லார்க்கு அருள்புரிய நிகழ்த்திய அருட்செயல்கள் பலப்பல.

பிரமனும் காமனும் இவனது மைந்தர்களாவர். திருமாலின் தங்கையே உமாதேவி. கருடவாகனத்திலே திருமால் காட்சி தருவான். அவனுடைய கொடி கருடக்கொடியே. முல்லை நிலத்தெய்வம் என்றும் இவன் சிறப்பிக்கப்படுவான். பரிபாடல் என்னும் சங்ககாலத் தொகை நூலில் 6 பாடல்கள் திருமாலின் சிறப்பினைப் புகழ்ந்து போற்றுகின்றன. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலே திருமாலின் வண்ணமும் வடிவமும் அருட்செயல்களும் அவதார நிகழ்ச்சிகளும் ஆழ்வார்களால் சிறப்பித்துரைக்கப்பட்டுள்ளமை காணலாம்

இத்தகு நூல்களில் காணும் செய்திகள் எல்லாம் நிகண்டுகள் திருமாலுக்குத் தரும் பெயர்களாலும் விளக்கமாதல் காணலாம். முந்திய திவாகரம் 38 பெயர்களைத் திருமாலுக்குத் தருகிறது. அவை வருமாறு :

அச்சுதன்	காவற்கடவுள்
அரவணைச் செல்வன்	கேசவன்
அரி	கோவிந்தன்
ஆதி	சக்கராயுதன்
உந்திபூத்தோன்	சங்கமேந்தி
உலகமுண்டோன்	சார்ங்கபாணி
உலகினையளந்தோன்	சீதரன்
உவணமுயர்ந்தோன்	தாமோதரன்
கடல்வண்ணன்	திருவிக்கிரமன்
கடற்றுயினறோன்	திருமகள்கொழுநன்
கண்ணன்	நாரசிங்கன்
கமலக்கண்ணன்	நாரணன்

பஞ்சாயுதன்	மாதவன்
பதுமநாபன்	மாயோன்
பிரமன் தாதை	முகுந்தன்
பீதாம்பரன்	முராரி
பூமிகொழுநன்	வராகன்
பெருமாள்	வாமனன்
மதுசூதனன்	விண்டு

இப்பெயர்களைக் கவனித்தால் முற்கூறிய திருமால் தொடர்பான செய்திகள் பலவும் தெளிவாகத் தெரியவரும் திவாகரத்தில் காணும் பெயர்களிலும் வேறான பலபெயர்களைப் பின் நிகண்டுகளும் குறிப்பிடுகின்றன. அருந்தமன் அலகைமுலையுண்டோன், இருடிகேசன்' உவணவூர்தி, சநார்த்தனன், சலசவிலோசனன், சௌரி, துளபமோலியன், நந்தகோபாலன், படிமுழுதிடந்தோன், புணரியிற்றுயின்றோன் மாயவன் என்னும் பெயர்கள் பிங்கல நிகண்டில் மட்டும் காணப்படுகின்றன. இவ்வாறே உரிச்சொல் நிகண்டு கயாதரம், பாரதிதீபம், சூடாமணி, ஆசிரிய நிகண்டு ஆகியவற்றில் மட்டுமே காணப்படும் பெயர்களாக ஒருசில உள்ளன.

அருகன், சிவன் ஆகியோருக்கு ஆயிரத்தெட்டுத் திருநாமங்கள் வழங்கிய போதிலும் ஆயிரம் பேருடையான் என நிகண்டுகள் திருமாலைப் போற்றுகின்றன ஆயிர நாமன், ஆயிரம் பெயரண்ணல், ஆயிரம் பெயரோன், ஆயிரம் பேரான் என்றெல்லாம் நிகண்டுகள் திருமாலைச் சுட்டுகின்றன.

திருமாலுக்குப் பன்னிரு நாமங்கள் சிறப்பாகப் பேசப்படுவதுண்டு' நம்மாழ்வார் திருவாய் மொழியில் 2 ஆம் பத்து ஏழாம் திருமொழி பன்னிருநாமப்பாட்டு என பன்னிரு பாடல்களில அந்நாமங்களுள் ஒவ்வொன்றையும் அமைத்துப் பாடியுள்ளார்.

> 'பன்னிய தமிழ்மாலை யாயிரத்துள் இவை பன்னிரண்டும்
> பன்னில் பன்னிரு நாமப்பாட் டண்ணல்தாள் அணைவிக்குமே'
>
> (2:7:13)

என்று ஒவ்வொரு பாடலில் ஒரு நாமத்தை அமைத்துப் பன்னிரு பாடல்களைப் பாடியுள்ளார். அவையாவன : கேசவன், நாரணன் (நாராயணன்) மாதவன், கோவிந்தன், விட்டு (விண்டு), மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், சிரீதரன் (சீதரன்), இருடிகேசன்,

பற்பநாமன், தாமோதரன் என்பனவாம். இவற்றுள் இருடிகேசன், பற்பநாமன் நீங்கலான பத்துப் பெயர்களையும் திவாகரமும் வேறுசில நிகண்டுகளும் தந்துள்ளன. இருடிகேசன் என்னும் பெயர் பிங்கலத்திலும், பற்பநாபன் என்னும் பெயர் பாரதிதீபத்திலும் மட்டுமே காணப்படுகின்றன.

மிகுதியான பெயர்களை நாமதீப நிகண்டு தருகிறது. அதிலும் ஏனைய நிகண்டுகளில் இடம்பெறாத எத்தனையோ பெயர்கள் இந் நிகண்டில் உள. அவை வருமாறு :

அசோதை புதல்வன்
அவனியைப் புணர்ந்தோன்
ஆய்ச்சியரைப் புணர்ந்தோன்
ஆயிரநாமன்
ஆலிற்றுயில்வோன்
ஆழியான்
இராகவன்
இராமன்
இலங்கேசனை வென்றோன்
எண்மரைப் புணர்ந்தோன்
ஐவர்தூதன்
கஞ்சனை வென்றோன்
கயிடவனை வென்றோன்
கரனை வென்றோன்
கவந்தனை வென்றோன்
கன்றாற்கனியெறிந்தோன்
காரி
காலகேயரை வென்றோன்
காவற்றேவன்
கிட்டினன்
குதிர வடிவன்
கும்பகன்னனை வென்றோன்
கூர்மவடிவன்
கோசலை புதல்வன்
கோலிற்றுயில்வோன்
சங்கன்
சாத்தூலியை வென்றோன்
சாலமெய்தோன்
சீதைசிறைகடிந்தோன்
சீதையைப் புணர்ந்தோன்
சுமாலியை வென்றோன்
சுரர்க்கமுதநல்கினோன்
செங்கண்ணான்
சோமுகனை வென்றோன்
சோரன்
ஞானத்துயிலோன்
தந்தவக்கிரனை வென்றோன்
தாடகையை வென்றோன்
திரிசிரனை வென்றோன்
துந்துபியை வென்றோன்
துழாய்ப்புயன்
தூடணனை வென்றோன்
நந்தகோன் புதல்வன்
நரசிங்கவடிவன்
நாற்கையன்
நீண்டோன்

பண்டியட்டோன்	மலைக்குடை செய்தோன்
பரசன்	மறுப்புயன்
பலதேவன்	மாரனத்தன்
பாம்பாடி	மாலியை வென்றோன்
பாம்பிற்றுயில்வோன்	மீன்வடிவன்
பாரளந்தான்	முகில்வண்ணன்
பாரிடந்தோன்	முரனைவென்றோன்
பாருண்டோன்	மூலனைவென்றோன்
பிரமனத்தன்	வசுதேவன் புதல்வன்
புள்வாய் கீண்டோன்	வஞ்சமானை வென்றோன்
புள்ளுயர்த்தோன்	வராகவடிவினன்
புள்ளூர்ந்தோன்	வாளனை வென்றோன்
பூபாரந்தீர்த்தவன்	வாரிகடைந்தோன்
பேய்முலையூடுயிர் தின்றோன்	வாரியடைத்தோன்
பொற்கண்ணனை வென்றோன்	வாரிவரம்பிட்டோன்
பொன்னனை வென்றோன்	வாலியை வென்றோன்
பொன்னைப் புணர்ந்தோன்	வாளன்
மணிப்புயன்	வில்லன்
மதுவை வென்றோன்	வேலையிற்றுயில்வோன்
மருதிடந்தோன்	வைகுண்டன்

இவற்றுள் பலவும் இராமாயண, பாரத, பாகவதச் செய்திகளின் அடிப்படையில் அமைந்த பெயர்களாகும.

இவ்வாறே தமிழுரிச் சொற்பனுவலும் தமிழாக்கமாகப் பல பெயர்களைத் தொகுத்துள்ளது இப்பெயர் வடிவங்கள் ஏனைய நிகண்டுகளுள் காணக் கூடவில்லை. தமிழுரிச் சொற்பனுவல் வழங்கும் தமிழ்ப் பெயர்கள் வருமாறு :

அண்ணல்	ஆழியிற்றுயின்றோன்
அரவிடையாடினோன்	ஆழியேந்தினோன்
அரவிற்றுயின்றோன்	ஆனைக்கருளினோன்
அருமறைத்தலைவன்	உலகமளந்தோன்
அழகன்	உன்னியதருள்வோன்
அழிவிலன்	எங்கும நிறைந்தோன்
ஆமையானோன்	ஐம்படை முதல்வன்

ஐயன்
ஐவர் துணைவன்
ஒருபதுபிறப்பினன்
கடனிறத்தோன்
குல்லைமுடியோன்
கொண்டல் நிறத்தோன்
செல்வன்
தடியேந்தி
திருமகள் கணவன்
தோன்றல்
நாற்றோளன்
பண்ணவர்பகைஞர் பகைஞன்
பழையோன்
பன்றியானோன்
புணரிகடந்தோன்
புரவலன்
புன்ஞர்தி
பூவை நிறத்தோன்
பெம்மான்
பெருமகன்
பேரருளாளன்
பொறிக்கிறை
பொன்னினாடையன்
மகவிலங்காகி மன்னவற் செகுத்தோன்
மறைகடந்தோன்
மறைத்தலைவன்
மறைபுகன்றோன்
மாதிருவர்கொழுநன்
மாலவன்
மீனமானோன்
முடியிலன்
முல்லைக்கடவுள்
முளரியிற்றோன்றிய முதியவன் தந்தை
வாளின் வலவன்

இவ்வாறாகக் காலப்போக்கில் பெயர்கள் பெருகிய வகையும் ஒரே பொருள் நோக்கில் வெவ்வேறு வகையான பெயர்ப் படிவங்கள் வருதலும் நிகண்டுப் பெயர்களில் எங்கும் காணக்கூடிய பொதுத் தன்மைகளாகும்.

திருமாலின் ஆடல் பற்றித் திவாகரம் விளக்குகிறது குடமாடல், மல் மரக்கால் என்பவை திருமால் ஆடலாகும். திருமாலின் ஊர்தி, கொடி, பஞ்சாயுதம் பற்றிய விளக்கங்களைப் பிங்கல நிகண்டு தருகிறது.

திருமாலின் பத்து அவதாரங்கள் பற்றிய விளக்கம் திவாகரம், பிங்கலம், சூடாமணி ஆகியவற்றில் காணலாகும் மேலும் திருமாலின் பதினைந்தவதாரம் பற்றிய செய்தி பிங்கல நிகண்டில் மட்டுமே காணப்படுகிறது.

பலதேவன்

திருமாலின் பத்து அவதாரமூர்த்தங்களுள், பலதேவ அவதாரமும் ஒன்று; இவனைப் பலபத்திரன் என்றும் கூறுவர் இவன் கண்ணனுக்கு மூத்தோனாய் வந்தவன்; கலப்பை ஆயுதமுடையவன். எனவே,

இவனை அலாயுதன், அலப்படை கொண்டோன் என்பர். முசலம் என்னும் ஆயுதமும் இவனுக்கு உண்டு ஆதலின் முசலி என்றும் இவனைக் குறிப்பிடுவர்.

இவனுடைய கொடி பனைக்கொடி; நீலநிற ஆடை அணிபவன் பனம்பூ மாலையும் அணிவன்; ஒற்றைக் குண்டலமுடையன்.

பலராமனின் தாய்பெயர் உரோகணி; மனைவி பெயர் இரேவதி. எனவே உரோகணி தநயன், இரேவதி கொழுநன் என்னும் பெயர்களைப் பெறுகிறான். தன்னைப் பின்பற்றுகிறவர்களின் விருப்பங்களை இவன் நிறைவேற்றி வைப்பதனால் 'காமபாலன்' என்றும் இவனுக்கு ஒரு பெயர் வழங்கும். இவ்வரலாறுகளை யெல்லாம் வெளிப்படுத்தும் வகையில் நிகண்டுகளில் இவன் பெயர்கள் அமைந்துள்ளன.

பிரமன்

உலகத்தைப் படைக்கின்ற கடவுள் பிரமன். எனவே இவனை, 'உலகியற்றியான்' என்கிறார் திருவள்ளுவர். உலகத் தோற்றத்திற்கு காரணமான முதல்வன் இவனே. இவனைத் 'தொடங்கற்கண் தோன்றிய முதியவன்' என்று கலித்தொகை குறிப்பிடுகிறது இன்பமும் துன்பமும் இணையவே இவனுடைய உலகியற் படைப்புக் காணப் படுகிறது என்பர்.

'ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப
புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்
பைத லுண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றஅப் பண்பி லாளன்
இன்னா தம்மவிவ் வுலகம்
இனிய காண்கிதன் னியல்புணர்ந் தோரே'

என்னும் பக்குடுக்கை நன்கணியார் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்று பிரமனின் படைப்பு விநோதத்தைப் பேசுகிறது.

இவன் திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றியவன்; 'நான்முகனை நாராயணன் படைத்தான்' என்கிறார் திருமழிசை யாழ்வார். மலரில் பிறந்தவன், மலரில் வீற்றிருப்பவன் ஆகிய இவன் மலரோன் ஆகிறான் மலர்மிசையோன், மலர்மகன் என்னும் பெயர்

களும் இவனுக்கு உள. பொன் முட்டையிலிருந்து பிறந்தவன் என்னும் கருத்தில் 'இரணிய கருப்பன்' என்றொரு பெயரும் இவனுக்கு உண்டு. இவன் பொன்மயமான உருவினன்.

நான்கு முகங்கள், எட்டுக் கண்கள், எட்டுத் தோள்கள் உடையவன். இவனுடைய வாகனமும் கொடியும் அன்னயாகும். மறைகளை அருளியவன்; ஆதலின் இவன் மறையவன், மறையோன் எனப்படுவான். தேவர்களில் இவன் முதன்மை படைத்தவன்; முதலாமவன். ஆதலால், வானவர் முதுவன், வானவர் முதல்வன் எனப்படுகிறான். இவன் கலைமகளின் கணவனாவான். விரிஞ்சன், விதாதா, சதானந்தன் என்னும் பெயர்களும் இவனுக்கு உண்டு.

இந்திரன்

இந்திரன் வானுலகத் தேவர்களின் அரசன்; இவனது நகரத்தின பெயர் அமராவதி என்பதாம். இதனைப் 'பொன்னகர்' என்றும் கூறுவர். அமுதம் உண்டு மரணமின்றி அமரராய் வாழ்பவர் தேவர்.

தேவருலகத்தில் மந்தாரம், சந்தானம், தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிசாதம் என்னும் ஐந்து மரங்கள் உண்டு. இவை வேண்டியார்க்கு வேண்டியதைத் தரும் வண்மை படைத்தவை. காமதேனு என்னும் தெய்வப் பசுவும் இவை போன்றதே. புண்ணியப் பயனாய்த் தேவப்பிறவியை எய்திய உயிர் இன்பத்தில் மூழ்கி மகிழும். நூறு யாகம் செய்தவன் இந்திரப் பேற்றைப் பெறுவான். 'இந்திரலோக மாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே' என்கிறார் தொண்டரடிப்பொடியாழ்வார்.

'முந்திரிமேற் காணி மிகுவதேல் கீழ்தன்னை
இந்திரனா எண்ணி விடும்'

என நாலடியார் இந்திரனது செல்வமிகுதியைப் புலப்படுத்துகிறது.

தேவருக்குப் பகையாயினார் அசுரர். அதனால் இந்திரனுக்கு 'அசுரவயிரி' என்னும் ஒரு பெயருமுண்டு. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம் நிகழ்ந்தது குறித்துப் புராணங்கள் கூறும். பாற்கடல் கடைந்தாரும் இவ்விரு இனத்தவருமே.

ஐவகை நிலத்துள் மருதநிலத்திற்குத் தலைவனாகப் போற்றப் பெறுவன் இந்திரன். இவனுக்கு வேந்தன் என்றும் ஒரு பெயருண்டு. 'வேந்தன் மேய தீம்புனலுலகம்' என்று மருதநிலத்தைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். முன்னாளில் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரனுக்கு 28 நாள்கள் விழா எடுக்கப்பெற்ற செய்தி சிலப்பதிகார மணிமேகலைக் காவியங்களால் தெரிய வருகின்றது.

எட்டுத் திக்குகளுள் கீழ்த்திசைக் காவலனாக இந்திரன் குறிக்கப் படுகிறான். இதனால் கீழ்த்திசைக்கு 'இந்திரதிசை' என்றும் பெயருண்டு. 'அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய் அகன்றது' என்கிறார் மாணிக்க வாசகர். 'குணதிசைக் காவலன்' என்று பாரதிதீபம்தான் இச் செய்தியைக் குறித்து அவனுக்கு ஒரு பெயரைச் சூட்டியுள்ளது. தமிழுரிச்சொற்பனுவல் நூலுடையார் 'கீழ்பாற் கிழவன்' என்கிறார்.

இந்திரன் திருமாலைப் போலக் கருநிறமுடையான். இதுபற்றியே இவனைக் கரியவன், கரியோன் என்று நிகண்டுகள் கூறும். இவன் ஆயிரங்கண்ணுடையனாதலின் ஆயிரங்கண்ணன் என்று சிறப்பிக்கப் பெறுகிறான்.

இவனுடைய மனைவி பெயர் அயிராணி. அயிராணி கேள்வன் என்கிறது திவாகரம். அயிராணியை இந்திராணி எனப் பின்னாளில் வழங்குவர். சசிபதி, சசிமணாளன் என்று பிற நிகண்டுகள் கூறும். சசி- என்பது இந்திராணியின பெயரே. இந்திரனின் மகன் சயந்தனாவன்.

இந்திரனுடைய வாகனம் நான்கு தந்தங்களையுடைய வெள்ளை யானையாகும். இதனை ஐராவதம் எனவும் வழங்குவதுண்டு. இந்தப் பெயரை நிகண்டுகள் கொள்ளவில்லை. மேகமும் இவனது வாகனமாம். இவனுடைய கொடி இடி. இந்திரன் ஊரும் குதிரை உச்சியிற்சிரவம் எனப்படும். இவன் 'கடுமணிப்படை' என்னும் வச்சிரப்படையை யுடையவன்.

விருத்திராசுரன், வலன் என்னும் அரக்கர்களைக் கொன்றழித் தவன் இந்திரன். எனவே, விருத்திராரி, வலாரி என்னும் பெயர்கள் இவனுக்கு உளவாயின மலைகளின் சிறகுகளை அரிந்த காரணத்தால் 'வரைசிறகரிந்தோன்' எனப் பேசப்படுகிறான்.

அரி, ஆகண்டலன், காமன், கோசிகன், கோபதி கோமகன், கௌசிகன், சுநாசி, சுனாசீரன், தருமன், பாகசாதனன், புரந்தரன்,

புருகூதன், போகி, மகவான், வாசவன் என்னும் பெயர்களும் காரணப் பெயர்களே இவற்றின் உட்பொருள் கூர்ந்து நோக்கி அறியத்தகும் இவையெல்லாம் வடமொழிவழி வந்த பெயர்களே. இவற்றின் பெயர்க் காரணம் எல்லாவற்றிற்கும் விளங்க வில்லை. தமிழ்ப் பேரகராதியின் துணைகொண்டு ஆராய்ந்ததில் சிலவற்றிற்கான காரணங்கள் தெளிவு பெற்றன. ஆகண்டலன் என்னும் பெயர் வரை சிறகரிந்தோன் என்னும் பொருளுடையது. சுவர்க்க நாட்டுத் தலைவனான காரணத் தால் கோபதி, கோமகன், என்று கூறப்படுகிறான். தருமன் என்ற பெயருக்கு இந்திரன் என்னும் பொருளை அப்பேரகராதி தரவில்லை. ஆசிரிய நிகண்டு அண்மைக் காலத்தில் அச்சிட்ட நூலாதலின் இப் பெயர் அந்த அகராதியில் இடம் பெறவில்லை என்பது புலனாயிற்று யாகங்களில் மிகுதியாக அழைக்கப்படுபவன் என்னும் கருத்தில் 'புரு கூதன்' என்னும் பெயர் வந்தது. இன்பம் நுகர்ந்து வாழ்பவனாதலின் 'போகி' எனப்படுகிறான். வசுக்களின் தலைவன் என்னும் கருத்தில் 'வாசவன்' என்னும் பெயர் உளதாயிற்று. ஏனைய பெயர்களின் காரணத்தை எடுத்துக் காட்டாது அவற்றிற்குப் பொருள் 'இந்திரன்' என்று மட்டுமே குறித்துச் செல்கிறது தமிழ்ப் பேரகராதி.

இப்பெயர்களுள் இலக்கிய ஆட்சி பெற்றவை சிலவே. 'பாக சாதனன்றனைப் பாசத்தார்த்து' (கம்ப. திருவவ 10), 'புரந்தரன்றன் னொடு வானோர்' (தேவாரம்) 'புருகூதன் காதலம் புதல்வன்' (பாரத. அருச்சுனன்றவ. 56) 'போகிதரு காளை' (கந்தபு. அமரர்சிறை 31) 'மகவான் மகளி ரிரங்கின ரற்ற' (பாரத. பதின்மூன். 168), 'வாசவன் விழாக்கோள் (மணி 24 : 69) ஏனைய பெயர்களைத் தந்து இந்திரன் என்று பொருள்மட்டுமே சுட்டிச் செல்லுதல் காணலாம். சிலவற்றிற்கு ஆதாரமாகப் பிங்கலம் முதலிய நிகண்டுகளை எடுத்துக் காட்டி யுள்ளனர். எனவே இவற்றை நிகண்டுச் சொல் என்றே கூறலாம்.

பிங்கல நிகண்டில் இந்திரனுக்குரிய பெயர்த் தொகுப்புடன் அவனுடைய தேவி, மகன், நகர், யானை, குதிரை, படை, கொடி, மண்டபம், மாளிகை, பண்டாரம், மண்டபம், நந்தவனம், சேமநிதி, கோ, உணவு, ஐந்துநதி ஆகியவை பற்றிய விளக்கம் காணப்படுகிறது.

திவாகர நிகண்டில் இந்திரனுக்குப் பின் வரும் 21 பெயர்கள் காணப்படுகின்றன.

அமரர்கோன்	மகவான்
அயிராணி கேள்வன்	மருத்துவன்
ஆகண்டலன்	மால்
ஆயிரங்கண்ணன்	முகிலூர்தி
இமையவர்வேந்தன்	வச்சிரபாணி
சதக்கிருது	வலாரி
பாகசாதனன்	வாசவன்
புரந்தரன்	விண்முழுதாளி
புனிதன்	விருத்திராரி
பொன்னகர்க்கிறைவன்	வெள்ளைவாரணன்
	வேள்விநாயகன்

பிங்கலம் முதலிய பின்வந்த நிகண்டுகளில் இப்பெயர்களில் பெரும்பாலன வற்றிற்கான மாற்றுப்பெயர்களே காணப்படுகின்றன என்பது அவற்றையும் இணைத்து வைத்து நோக்கும்போது நன்குபுலனாகிறது.

கணபதி

கணபதியின் பெயர்களாக ஆகுவாகனன், ஐங்கரன், ஒற்றைக் கொம்பன், பாசாங்குசதரன். யானைமுகவன், விநாயகன் என்னும் 6 பெயர்களைத் திவாகரம் தருகிறது இவை விநாயகரின் திருவுருவம், வாகனம், படை என்பவை பற்றிப் பிறந்தவையாம் பின்வந்த நிகண்டுகளோ இவற்றின் மேலும் பற்பல பெயர்களைத் தந்துள்ளன.

பிங்கல நிகண்டில் மட்டும் அத்தி முகத்தோன், அரி திருமருகன், கங்கைசுதன், தந்திக்கடவுள் என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. அத்தி முகத்தோன் என்றது 'யானைமுகவன்' என்பதன் மாற்றுப் பெயர். அரிதிருமருகன் என்றது புதுமை. சூடாமணி அம்பிகை தனயன் என்றும், நாமதீபம் கவுரிசேய் என்றும் கூறும், முன்னவன் என்பதற்கு உமாதேவியின் முதற்புதல்வன் என்பது கருத்தாம். மேலும், ஈசன் மைந்தன் என்று சூடாமணியும, கண்ணுதல் சேய் என்று கயாதரமும் இப்பெருமானைச் சுட்டுகிறது

'பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே' (தேவாரம். 1:123:5)

என்று தேவாரம் சிவனும் உமையும் களிறு பிடி என்னும் வடிவத்தைக் கொண்டபோது பிறந்தவர் யானைமுகப் பெருமான் என்பதனை நமக்குத் தெரிவிக்கிறது.

ஒற்றைக்கொம்பன் என்னும் பெயருக்கு மாற்றுப் பெயர்களாகப் பின் நிகண்டுகளில் ஏக தந்தன், ஒரு தந்தன் ஒரு மருப்பன், ஒற்றை மருப்பினன் என்னும் பெயர்கள் காணப்படுகின்றன.

பெருவயிற்றண்ணல், பெருவயிற்றுக்குறுந்தாளெந்தை என்னும் தமிழ்ப் பெயர்களுக்கு மாற்றாக இலம்போதரன் என்னும் வடமொழிப் பெயரைப் பொதிகை நிகண்டு நாமதீப நிகண்டு ஆகிய பிற்கால நிகண்டுகள் தருகின்றன. சூற்ப கன்னன் என்னும் வடமொழிப் பெயரைப் பொதிகை நிகண்டு தர, அதன் பொருள் விளங்கும் வகையில் முறக்கன்னன் என்று நாமதீப நிகண்டு கூறுகிறது.

பெருச்சாளி விநாயகரின் வாகனம். பெருச்சாளி என்பதற்கு 'ஆகு' என்றும் ஒரு பெயர் உண்டு. ஆகுபரிப்புங்கவன், ஆகுயர்த்தோன், ஆகுவாகன், ஆகுவாகனன், ஆகூர்ந்தோன் என்று இவ்வாறு ஒரே பொருளில் வெவ்வேறு பெயர்களை நிகண்டுகள் சுட்டுகின்றன

சிவனைப் போன்றே விநாயகப் பெருமானுக்கும் முக்கண் உண்டு. முக்கண்ணன், ஆமை முதுகோடணிந்தோன், சடையன் என்னும் பெயர்கள் இப் பெருமானுக்கும் உளவாகின்றன. காகமாகினோன் என்ற பெயர் காகவுருவில் சென்று அகத்தியரின் கமண்டலத்தை விநாயகர் கவிழ்த்த செய்தியைத் தெரிவிக்கிறது

பிள்ளையார் என்பது விநாயகருக்கு இந்நாளில் பெருவழக்காயுள்ள பெயர். இப்பெயர் பழைய நிகண்டுகள் எதிலும் காணப்படவில்லை. அண்மைக் காலத்ததாகிய தமிழூரிச் சொற்பனுவல்தான் 'பிள்ளை' என்று இவருக்கு ஒரு பெயருண்டு என்பதனைத் தெரிவிக்கிறது. உமாபதி அருளிய திருக்குமாரர்களுள் இவர் மூத்தவர் ஆதலின் இவரை மூத்த பிள்ளையார் என்பர். பதினோராந் திருமுறையில் அதிராவடிகள், 'மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை' என்றொரு பிரபந்தம் பாடியுள்ளார். இங்கே மூத்த பிள்ளையார் என்றது கணபதியையே. இளைய பிள்ளையார் முருகப் பெருமான் ஆவர்.

மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை என்பது பதினொராந் திருமுறையில் கபிலதேவநாயனார் அருளிய ஒரு பிரபந்தம் இங்கே

மூத்த நாயனார் என்றது கணபதியை. சிவபெருமானுக்கே நாயனார் என்னும் ஒரு பெயருண்டு என்பது, ' சிராப்பள்ளிமேய நாயனார் என நம் வினை நாசமே ' எனத் திருக்குறுந்தொகையில் திருநாவுக்கரசர் அருளிச் செய்வதால் தெரியவரும். நாயனார் என்பது சிவனுக்கும் மூத்த நாயனார் என்பது கணபதிக்கும் உரிய பெயர் என இலக்கியங்களில் காண்கிறோம் நிகண்டாசிரியர் எவரும் இப்பெயரைக் குறித்திலர் என்பது சிந்தனைக்குரியதாகும்.

முருகன்

முருகன் என்றாலே அழகன் என்பது பொருள் இறைமகனாரில இவன் இளையவன். 'என்றும் இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே' என்பது நக்கீரர் வாக்கு இளையோன், அழகன் என்னும் இரு பொருளிலும் முருகனுக்குக் 'குழகன்' என்னும பெயரும் உள்ளது.

குன்றுதோறும் வீற்றிருந்தருளும் பெருமான் முருகன். 'சேயோன மேய மைவரை உலகமும்' என்று குறிஞ்சி நிலக்கடவுளாகத் தொல் காப்பியர் முருகனைச் சுட்டியுள்ளார். இது பற்றியே குறிஞ்சிமன், குறிஞ்சிநாதன், குறிஞ்சிக் கிழவன், குறிஞ்சி வேந்தன், குறிஞ்சிக் கடவுள் என்றெல்லாம் நிகண்டுகள் குறிப்பிடுகின்றன.

சங்க நூல்களுள் ஒன்றாகிய குறுந்தொகையின் கடவுள் வாழ்த்து முருகப்பெருமானைப் பற்றியதாகும்

'தாமரை புரையும் காமர் சேவடி
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கை குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே'

என்னும் இவ்வாழ்த்தைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இதில் முருகனுடைய செந்நிறமேனியும் தாமரை மலர் போன்ற திருவடிகளும் குன்றிமணி நிறமுடைய செவ்வாடையும் சிறப்பித்தோதப் பட்டுள்ளன. அவனுடைய ஒளிபடைத்த வேலாயுதமும் சேவற்கொடியும் குறிப்பிட்டுள்ளார். அவன் கிரவுஞ்ச மலையை வேலால் எறிந்து பிளந்த வரலாறும சுட்டியுள்ளார். இக்கடவுள் வாழ்த்துப் பாடலே யன்றிச் சங்க நூல்களில் இப்பெருமானைப் பற்றிய குறிப்புகள் பல

உள வீரப்பெருந்தெய்வமாக, வீரத்திற்கு எடுத்துக்காட்டாக முருகனைப் புலவர் பலர் போற்றியுள்ளனர்.

பரிபாடலிலே எட்டுப் பாடல்கள் செவ்வேள் பற்றியுள்ளன. இப் பாடல்களில் முருகனின் திருவவதாரம், அப்பெருமானின் திருவுருவக் காட்சிகள், அவன் நிகழ்த்திய அரும்பெருஞ் செயல்கள், அவனுடைய திருவிளையாடல்கள் முதலியன எல்லாம் பலபடியாக விரித்துக் கூறப் பட்டிருத்தல் காணலாம். திருமுருகாற்றுப்படை முருகன் எழுந்தருளி வீற்றிருக்கும் திருப்பரங்குன்றம் முதலிய திருத்தலங்களில் வீற்றிருக்-கும் பெருமானின் சிறப்புகளை எடுத்தியம்புகிறது. இவ்வாறாக முருகனைப் பற்றிய செய்திகள் சங்கப் பாடல்கள் தொடக்கமாக மிகுதி-யாய்க் காணப்படுவது முருக வழிபாட்டு மிகுதியின் விளைவு என்னலாம்.

சிவபெருமானின் அழற்கண்ணிலிருந்து பிறந்தவன் முருகன். இதுபற்றித் தமிழுரிச் சொற்பனுவல் 'இறைநுதல் விழியிடைத் தோன்றிய விறலோன்' என்று குறிப்பிடுகிறது. அழற்கண்ணில் பிறந்து, கங்கையில் சரவணத்தில் தவழ்ந்து, அறுமீன் எனப்படும் கார்த்திகைப் பெண்களால் பேணப்பெற்றவன். எனவே, சரவணத் துதித்தோன், சரவணபவன், கங்கை மகன், அறுமீன் காதலன், கார்த்திகேயன் என்னும் பெயர்கள் பிறந்துள்ளன. விசாக நாளில் தோன்றியவனாதலின் 'விசாகன்' என்னும் பெயருடையவன் ஆயி-னான். ஆறு திருவுருவமும் உமையம்மையார் அணைத்தெடுத்தபோது ஒன்றாயிணைய இவன் அறுமுகனானான். கந்தன், அறுமுகக் கடவுள் என்னும் பெயர்களையும் பெறலானான். முருகன் விநாயக-ருக்கு இளையவராதலின். யானைமுகவற்கிளையோன், தந்திக்கிளை-யோன் என்று குறிப்பிடப்படுகிறான்

அயன்குரு, ஈசன்குரு, கும்பன் குரு என்று முருகன் போற்றப்-படுகிறான். இவற்றால் பெருமான் பிரமனுக்கும், சிவபெருமானுக்கும் அகத்தியனுக்கும் உபதேசம் செய்த திறம் விளங்கும்,

மயில் வாகனமுடையவன்; ஆடும் இவனுக்கு வாகனமாதலின் ஆடூர்ந்தோன் என்றும் சொல்லப்படுகின்றான். பிணிமுகம் என்னும் யானையை வாகனமாகக் கொண்டிருக்கும் செய்தி திருமுருகாற்றுப படையில் சொல்லப்படுகிறது

'வைந்நுதி பொருத வடுஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றருங் மொய்ம்பின்
கால்கிளர்ந் தன்ன வேழம்மேல் கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
... ...
மனன்நேர் பெழுதரு வாள்நிற முகனே' (திருமுருகு. 78-90)

எனவரும் திருமுருகாற்றுப்படை பெருமான் ஏறிவரும் யானை எத்தகையது என்று வருணித்துரைத்தல காணலாம்.

சேவற்கொடியுடையவன்; ஆண்டலைக் கொடியும் இவனுக்கு உண்டு எனவே, சேவலங்கொடியோன், ஆண்டலைக கொடியுயர்த்தோன் என்னும் பெயர்கள் இவனுக்கு உளவாயின

முருகன் அணிந்துள்ள கடப்பு வெட்சி முதலிய மலர் மாலைகளைச் சுட்டிப் பிறந்த பெயர்கள் சில உள. கடம்பன், காந்தளந்தாரோன், குராவணிவோன, நீலமணிவோன, மராவலங்கலான், வன்னிப் பூக்குமரன், வெட்சியணிவோன், என்றெல்லாம் நிகண்டு நூல்கள் இவனுக்குச் சிறப்புப் பெயர்கள் சூட்டியுள்ளன

இப்பெருமான் தன் பன்னிரு கையிலும் வேல் முதலிய படைக்கலங்களைத் தாங்கி அசுரப் பகையைப் போக்கித் தேவர்களைக் காத்தான் தேவர் சேனைகளுக்கு அதிபதியாய் விளங்கினான். ஆகவே, அமரர் தளவாய், தேவர் சேனாபதி, உம்பர் சேனைமன் என்று நிகண்டுகள் பெயர் சூட்டியுள்ளன.

கிரவுஞ்சம் எனப் பெயரிய மலையினை வேலோச்சிப் பிளந்தான். சூரன், சிங்கமுகன், தாருகன் முதலான அசுரர்களை வென்று கொன்றொழித்தான். சூரன் மாமர வடிவில் வர அதனை அழித்தமை கருதி, 'மாமுதல் தடிந்தோன்' என்னும் ஒரு பெயரை நிகண்டு குறிப்பிடுகிறது. இவனுக்குத் துணைவர்களாக வீரவாகுதேவர் முதலிய ஒன்பதின்மர் விளங்கினர் எனவே, இவனை 'ஒன்பதின்மர் முன்னோன்' என்று குறிப்பிடப்பெறுகிறான். முருகனுக்குத் துணை நின்ற நவவீரரையும்; அவர்களுள் முதல்வனாகிய வீரவாகு தேவரையும் குறித்து நாமதீப நிகண்டு மட்டுமே தனித்தனி விளக்கம் தருகிறது. அதில் வீரவாகு தேவருக்கு 21 பெயர்கள் தரப்பட்டுள்ளன என்பதும் கருதத்தக்கது.

தேவருக்காகப் போரிட்டு அசுரப்பகையைப் போக்கி, இந்திரன் மகளாகிய தெய்வயானையை மணந்தான்; தெய்வயானை காந்தன் ஆயினான் தெய்வயானையை முருகன் திருமணம் கொண்டது திருப்பரங்குன்றத்தில் என்று திருமுருகாற்றுப்படை முதலிய நூல்கள் தெரிவிக்கின்றன. இந்திரன் மகளை மணந்தது காரணமாக வாசவன், மருகோன், இந்திராணி மருகோன் என்று நிகண்டுகள் போற்றும். திருமாலின் மகள் எனப்படும் குறக்குடியில் வளர்ந்த வள்ளி நாச்சியாரை மணந்த காரணத்தால் வள்ளிகேள்வன், அரிதிருமருகன் என்னும் பெயர்களைப் பெறலானன். உமாதேவி திருமாலின் தங்கையாதலின் அம்முறையிலும் இவன் திருமால் மருமகனாவான்.

முருகப் பெருமான் கடைச் சங்கப் புலவருள் ஒருவனாயுமிருந்தவன் ஆகவே இவன் 'கலையறி புலவன்' என்னும் போற்றுதலைப் பெற்றுள்ளான். புலவனாக விளங்கிய முருகன் நக்கீரனைக் காத்து அப்புலவருக்கு அருள் செய்த காரணத்தால், 'கீரனைக்காத்தோன்', என்பர். அருணகிரிநாதரின் திருப்புகழ்ப்பாடல்களைப் பெற்றுத் 'திருப்புகழன்' ஆயினான். 'அருணகிரிக்கருள்வோன்' என்று அப்புலவர்க்கு அவன் காட்டிய கருணை விளங்கப் பெயரிடுவர்.

வெறியாட்டு என்பது முருகனை முன்னிட்டு செய்யப்பெறும் ஆடல் இந்த ஆடலை உடையவன் என்னும் கருத்தில் 'வெறியாட்டாளன்' என இவனைப் போற்றுவர்.

'மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவத்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவல்அம்
கொடியன் நெடியன் தொடியணி தோளன்
நரம்பார்த் தன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணை தழீஇ தலைத்தந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே'. (திருமுருகு. 205-217)

எனவரும் திருமுருகாற்றுப்படைக் குன்றுதோறாடல் பகுதியில் முருகப்பெருமான் ஆடல்திறம் அழகுற வருணிக்கப்பட்டிருத்தல் காணலாம்.

சங்ககாலந்தொட்டுக் கந்தபுராண காலம் வரையிலும் அதற்குப் பின்னரும்கூட முருகன் திருவிளையாடல்களைக் கூறும் நூல்களில் காணப்பெறும் பற்பல வரலாறுகள் தழுவிய பெயர்கள் பலப்பல-வாயுள்ளன. முருகனுக்குத் திவாகரம் 26 பெயர்களைத் தர நாமதீப நிகண்டோ 64 பெயர்களைத் தருகிறது. இப்பெயர்களுள் பல ஒருபொருளில் வரும் வேறுவேறு பெயர்களாக உள்ளன என்பதும் நோக்கத்தக்கது.

ஒருசில பெயர்கள் சுருக்கமாயும் முருகப்பெருமானின் தெய்விக நலன்களை வெளிப்படுத்துவனவாயும் காணப்படுகின்றன. இவ் வகையில் அண்ணல், அடிகள், இளையன், ஐயன், சந்தன், காங்கேயன் கார்த்திகேயன், குகன், குமரன், குரவன், ஆசான், குழகன், சாமி, சுப்பிரமணியன், செட்டி, சேய், செவ்வேள், சேந்தன், பண்ணவன், முருகன், விசாகன், வேலன், வேள் என்னும் பெயர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவையாகும்.

காமன்

காம இச்சையைத் தோற்றுவிக்கும் கடவுளாக இக்காமன் கருதப்படுகிறான். விருப்பத்தைந் தோற்றுவித்தல் பற்றி வேள் எனவும இவன் கூறப்படுவான். மன்மதன் என்பது பெருவழக்கான பெயர், மதன், மதனன், மன்மதன் என்றெல்லாம் நிகண்டுகளில் இப்பெயர் உருமாற்றம் கொள்கிறது. மோகத்தை உயிர்களிடத்து மிகுவிக்கும் செயலால் 'மோகன்' என்றும் இவன் கூறப்பெறுகிறான். 'அறிவு மயக்குவோன்' எனத் தமிழுரிச்சொற்பனுவல் இவனுக்கு ஒரு பெயர் தருகிறது.

இக்காமன் திருமாலின் மைந்தனாவான் திருமகள் மைந்தன் பூமகள மைந்தன் என்றும் இவன் பேசப்படுகிறான். இவனும் திருமாலைப் போன்றே கருநிறமுடையவன். இவனுடைய தம்பி பெயர் சாமன் என்பதாம். நுகத்தடியிற் பூட்டிய இரு எருமைகளின் உருவத்தையும் அளவையும் குறிக்க வந்த திருத்தக்கதேவர்,

'மாமனும் மருகனும் போலு மன்பின்
காமனும் சாமனும் கலந்த காட்சிய' (சீவக. 43)

என்று பேசுகிறார்.

மன்மதனின் மனைவி பெயர் இரதி. எனவே, இவனுக்கு இரதிகாதலன், இரதி காந்தன் முதலிய பல பெயர்கள் உண்டு

காம இச்சை உள்ளத்தேயிருந்து தோன்றுவது ஆதலால் காமனின் பிறப்பிடம் உள்ளமாகும். இதுபற்றியே சித்தசன், மனோசன் மனோபவன், மானதன், உள்ளத்தோன்றல் என்னும் பெயர்கள் இவனுக்கு உளவாயின.

சிவனுடைய சினத்திற்கு ஆளாய மன்மதன் தன் உருவை இழந்தான். அதுபற்றி, 'இறைவிழித் தீயி னெழில்வடி விகந்தோன்' என்று தமிழுரிச் சொற்பனுவல் கூறும். உருவிலான் எனபதனைச் சுட்டும் வகையில் உருவிலி, அநங்கன், வடிவிலி என்னும் பெயர்கள் இவனுக்கு உளவாயின.

இவனுக்குரிய சின்னங்களின் ஏதுவாக வழங்கும் பெயர்களும் பலவாக உள்ளன. இன்பத்தைத் தோற்றுவிக்கும் பொருள்கள் எல்லாம் இவனுக்குரிய ஆட்சியிடங்களாகின்றன.

காமன் பொழிலையே பாசறையாகக் கொண்டிருக்கிறானாம். அவனுக்குரிய படை பெண்படையே. கரும்பு வில்லில் வண்டினை நாணாகக் கோத்து வளைத்து மலரம்புகளினால் எய்து காமத்தை மிகுவிப்பான். இவனுக்குரிய மலரம்பு ஐந்து: அவை தாமரைப்பூ, மாம்பூ, அசோகம், முல்லை, குவளை என்பனவாம். பஞ்சபாணம் என்றும் இவற்றைக் குறிப்பிடுவர். இந்த ஐந்து அம்புகளின் செயல் களையும் அவற்றால் தாக்குண்டோருக்கு உளவாகும் அவத்தை-களையும் பிங்கல நிகண்டு விவரிக்கிறது. கரும்புவில்லான் என்பது போலவே கமுகம்பூவில்லான் என்றும் நாமதீபம் இவனைக் கூறும். இவனுக்குரிய முரசு கடல்; குடை சந்திரன் இருளாகிய யானையை இவன் உடையவன். கிளி இவனுக்குரிய குதிரை; குயில் இவனுக்-குரிய காகளச் சின்னம்; தாழம்பூவாகிய வாள் தாங்கியவன்; இவனுக்குரிய தேர் தென்றலாகும். கொடி மீன்கொடி; மகிழமலர் மாலையை இவன் அணிபவன்

இளவேனிற் காலமே இவனுக்குரிய விழாக்காலம். இதுபற்றி வேனிலாளி, வேனிலான் வேனில் விழவோன், வசந்தன் என்னும் பெயர்களால் இவன் குறிக்கப் பெறுகிறான்

திவாகர நிகண்டு இக்காமனுக்குப் பின்வரும் பதினான்கு பெயர்களைத் தருகிறது.

அனங்கன்	மகரமுயர்த்தோன்
இரதிகாதலன்	மதன்
கந்தர்ப்பன்	மன்மதன்
கருப்புவில்லி	மாரன்
திருமால்புதல்வன்	வயந்தன்
பஞ்சபாணன்	வேள்
பூவாளி	வேனிலாளி

இவற்றின் விரிவாகவே ஒப்புப் பெயர்களாகவே ஏனைய நிகண்டுப் பெயர்களும் உள்ளன.

'வேள்' என்னும் பெயர் முருகப் பெருமானுக்கும் உண்டு. முருகப் பெருமானின் நிறம் கருதிச் செவ்வேள் என்னும் சிறப்புப் பெயரிட்டுக் கூறுதல்போல மன்மதனைக் 'கருவேள்' என்பர். மன்மதனைப் பற்றிய வருணனைகளும் செயல்களும் இலக்கியங்களில் பலபடியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளமை காணலாம்.

வயிரவன்

சிவ மூர்த்தங்களுள் ஒன்று வயிரவன்.

'வயிரவன் காரி வடுகக் கடவுள்'

எனத் திவாகரம் இக்கடவுளுக்கு இருபெயர்களைத் தந்துள்ளது. காரி எனபது கருநிறமுடையவன் என்பது பற்றிவந்த பெயர். வடுகன் என்பதற்குப் பிரமசாரி என்றும ஒரு பொருளுண்டு. பிரமசாரி நிலையிலிருப்பவள் என்ற காரணத்தால் இப்பெயர் வந்திருக்கலாம் போலும். காளிதேவிக்கு 'வடுகன்றாய்' என்றொரு பெயரைத் திவாகரம் கூறுகிறது. பராசத்தியின் உக்கிர வடிவமான காளியிடமிருந்து பிறந்த இந்த மூர்த்தியும் அச்சந்தரும் வடிவமும் செயலும் கொண்டிருத்தல் இயல்பே 'உறுதிப் பேற்றினன்', 'கடியோன்' என இருபெயர்களைத் தமிழரிச் சொற்பனுவல தருகிறது.

இளமைத் தோற்றமுடையனாதலில் இளையான், குமரன் என்னும் பெயர்களை பிந்திய நிகண்டுகள் தருகின்றன. இவன் கருங் குதிரை வாகனத்தையுடையவன். எனவே இவன் கருங்குதிரையாளி, கரும்பரிப்பெருமான் என்று பேசப்படுகிறான். 'காலனையூர்ந்தோன்' என்பதனால் காலனும் இவனுக்குரிய வாகனமாவன் என்பது தெரிய வரும். கோழிக் கொடியை உடையனாதல்பற்றிக் கோழிக் கொடியோன் எனப்படுகிறான். கஞ்சுகன், சட்டையன் என்னும் பெயர்கள் இவன் தன் உடம்பில் சட்டையணிந்தவன் என்பதனைச் சுட்டும். 'மெய்யம் மறையணிந்தோன்' எனத் தமிழுரிச்சொற்பனுவல் கூறுகிறது. சூலம் ஏந்தியவன்; கபாலம் தரித்தவன். எனவே கபாலன், கபாலி, சூலி, திரி சூலன் என்னும் பெயர்களுக்குரியவனாகிறான்.

பிங்கலநிகண்டு இவன் ஆடையின்றியிருப்பவன் என்பதனை 'நிருவாணி' என்னும் பெயரால் குறிப்பிடுகிறது. 'நக்கன' எனப் பொதிகை நிகண்டும், 'உடையிலி' எனத் தமிழுரிச் சொற்பனுவலும் குறிப்பது இதுபற்றியேயாம். சிவபெருமானைப் போலவே இவனுக்கும் முக்கண் உண்டு. ஆதலால் முக்கணன் எனப்படுகின்றான். செம்மை நிறமாலை அணிபவன் என்பது 'செந்தொடைக்குரிய கோமான்' என்பதால் தெரியவருகிறது. நாயை வாகனமாகக் கொண்டவன். ஆகவே, 'நாயூர்தி' என நாமதீப நிகண்டு கூறுகிறது.

'சீராடை யற்ற வயிரவன் வாகனம் சேரவந்து
பாராகு நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கௌவி
நாரா யணனுயர் வாகன மாயிற்று நம்மை முகம்
பாரா னுமைவாகனன் வந்தே வயிற்றிற் பற்றினனே.

என்பது அந்தகக்கவி வீரராகவ முதலியாரின் தனிப்பாடல் இப்பாடலில் கவிஞர் வயிரவனின் தோற்றத்தையும் அவன் வாகனமாகிய நாய் சோற்றுமுட்டையைக் கவ்விக் கருடன்போல விரைந்து போயிற்று என்பதனையும் அதனால் ஆட்டுவாகனான அக்கினி வயிற்றிற் பற்றினன் என்றும் தாம் உணவிழந்து பசியோடிருந்தலை வேடிக்கையாகப் பாடியிருக்கும் பாட்டு இங்குக் காணத்தக்கதாம். நாய் வயிரவனுக்கு ஊர்தி மட்டுமன்று படையும் அந்நாய்தான். முடுவற்படையோன், 'முடுவற் சேனையன்' என நிகண்டுகள் கூறுவதன் கருத்து இதுவே.

கயத்தோலுரித்தோன், அயன்சென்னியறுத்தோன் எனச் சுட்டப் படுவதால் யானையின் தோலை உரித்ததும் பிரமன் தலையை அறுத்-ததுமாகிய செய்திகள் புலப்படுகின்றன.

'பிள்ளை' என்னும் பெயரைச் சூடாமணி முதலிய சில நிகண்டுகள் இக் கடவுளுக்குத்தான் குறிப்பிடுகிறது. 'கேத்திரபாலன்' எனப் பிங்கலம் முதலிய நிகண்டுகள் குறிப்பிடுவதால் திருக்கோயில்களைக் காக்கின்ற காவல் தெய்வமாக வைரவன் உள்ளான் என்பது தெரிய வரும். சாதவாகனன என்றும் ஒருபெயர் ஆசிரிய நிகண்டில் மட்டும் காணப்படுகிறது. இதற்குக் குதிரைவாகனமுள்ளவன் என்பது பொரு ளாம். திவாகரம ஐயனாருக்கு இந்தப் பெயரைக் குறிப்பிடுதலும் ஒப்பு நோக்கத் தக்கது. சித்தன், வித்தகன், விறலோன் என்னும் பெயர்கள் வயிரவனின் அறிவாற்றல் பற்றி அமைந்த பெயர்களாம்.

நந்திகேச்சுரன்

சிவபெருமானின் கயிலைவாயிலைக் காபபோனாகிய நந்திகேச்-சுரனைப் பற்றிய பெயர்களை நாமதீப நிகண்டுமட்டுமே எடுத்துரைக் கிறது. அந்நிகண்டில் சிலாதரன்சேய், சுதேதைமன், பூதத்தலைவன், விடைமுகன், வெள்ளிவரை காப்போன், வேத்திரக்கையன், வேதாகமக் குரலன் என ஏழுபெயர்கள் நந்தியெம்பெருமானுக்குத் தரப்பட்டுள் ளன.

சேக்கிழார் பெருமான் திருமலைச் சிறப்புப் பாடும்போது,

'பூதவே தாளப் பெருங்கண நாதர்
போற்றிடப் பொதுவில்நின் றாடும்
நாதனார் ஆதி தேவனார் கோயில்
நாயகன் நந்தியெம் பெருமான்'

'நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர்
நீறணி மேனியர் அநேகர்
பெற்றமேல் கொண்ட தம்பிரான் அடியார்
பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்
மற்றவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும்
மலர்க்கையில் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான்'

(பெரியபுர, திருமலைச் 10, 11)

என்று கயிலையைக் காத்துநிற்கும் இப்பெருமானை நமக்குச் சித்திரித்துக்காட்டுகிறார். திருநாவுக்கரசர் கயிலைக்காட்சி கண்டபோதும் நந்தியெம்பெருமானை அவர் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளதும் காணத்தகும்.

'முந்தை மாதவப் பயன்பெறு முதன்மையால் மகிழ்ந்தே
நந்தி எம்பிரான் நடுவிடை யாடிமுன் நணுக'

'வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனஇடப் பாகம்
கொள்ளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின் மன்னவனார்'.

(பெரிய. திருநாவுக்கரசர், 378, 379)

இவற்றால் நந்தியெம்பெருமான் சிவகணத் தலைமை பெற்று விளங்குதல் தெரியவரும்.

ஐயனார்

சிவன், திருமால் இருவருடைய கூறுகளினின்றும் உதித்தவர் ஐயனார். அரிகர குமரன், அரிகரபுத்திரன், அரியரன் சேய் என்று நிகண்டுகள் சுட்டுகின்றன.

ஐயனாருக்குக் காரி, கோழிக்கொடியோன், சாத்தன், சாதவாகன் என நான்கு பெயர்களையே திவாகரம சுட்டுகிறது. காரி என்பது திருமேனி நிறம் பற்றி வந்த பெயர். பின்னிகண்டுகள் கடல்வண்ணன், கடனிறவண்ணன் முதலிய பெயர்களால் குறிக்கப்படுவதும் இக் கருநிற மேனியைத்தான். சாதவாகன் என்னும் பெயர் வயிரவனுக்கும் உள்ளமையை முன்னரே பார்த்தோம் சாத்தன் என்பது பழமையான ஒரு பெயர் சிலப்பதிகாரத்தில் பாசண்ட சாத்தன் கோயில் பற்றியும் சிற்சில செய்திகள் வந்துள்ளமை காணலாம்.

'பார்த்தனுக் கருளும் வைத்தார்
பாம்பரை யாட வைத்தார்
சாத்தனை மகனா வைத்தார்
சாமுண்டி சாம வேதம்
கூத்தொடும் பாட வைத்தார்
கோளரா மதியம் நல்ல
தீர்த்தமும் சடைமேல் வைத்தார்
திருப்பயற் றூர னாரே'

(தேவாரம். 4:32:4)

எனத் திருநாவுக்கரசர் சிவபெருமான் 'சாத்தனை மகனா வைத்தார்' என்று பாராட்டியுள்ளமை காணலாம். இதுபற்றியே 'சிவன்மகன்' என ஒரு பெயரைப் பாரதிதீபம் சுட்டுகிறது எனலாம்.

சாதவாகனத்தான், சாதவாகன் என்பது இவனுடைய ஊர்தியைச் சுட்டியமைந்த பெயர். சாதவாகனத்தான், சாதவாகனன் எனவும் பின்னிகண்டுகள் கூறும். பச்சைநிறக் குதிரையுடையவன் என்பது பச்சைப்பரியுள்ளோன், பசும்பரியாளன், பரியூர்தி என்னும் பெயர்களால் அறியலாம். நெய்தல் பூண்டோன், பானலணிவான் என்பதனால் இவனணியும் மாலை பற்றிய விவரம் தெரியவருகிறது. வயிரவனைப் போலவே இவனுக்கும் கோழிக் கொடியுண்டு. கயாதரம் இவனை 'வாரணக் கொடியோன்' என்று கூறும்; வாரணமாவது கோழி. வெள்ளையானையை ஊர்ந்து செல்பவன் என்பதனைப் பிங்கலம் 'வெள்ளையானை வாகனன்' என்பதனால் புலப்படுத்தியுள்ளது. பின்னிகண்டுகள் வெள்ளையானையுள்ளோன், வெள்ளையானையூர்தி, வெள்ளைவாரணமூர்த்தி என்றெல்லாம் பெயர் சூட்டியுள்ளன. 'முடுவலாளி' என்னும் ஒரு பெயரைப் பொதிகை நிகண்டு தருகிறது. எனவே, நாயையும் இவன் அடக்கியாள்பவன் என்பது பெறப்படும்.

சாத்தன் நீண்ட வடிவுடையன் என்பதும் பொதிகை நிகண்டு நீண்டோன் எனக் குறிப்பதால் அறியலாகும். எட்டுக்கையுடையவன் இவன் என்னும் செய்தியை 'எண்கரன்' என நாமதீப நிகண்டும், 'எண்கையன்' எனத் தமிழுரிச் சொற்பனுவலும் சுட்டுவது கொண்டு அறியலாம்.

செண்டு, தண்டு, என்னும் ஆயுதங்களை இவன் தரித்திருப்பான். இதனை விளக்கும் வகையில் செண்டாயுதன், செண்டணிந்தோன், செண்டின் படையோன், செண்டேந்து கைக்கோதண்டன், தண்டணிந்தோன், தண்டதரன் என்னும் பெயர்களை நிகண்டுகள் குறிப்பிட்டுள்ளமை காணலாம்

'கச்சி வளைக்கைச்சிக் காமக்கோட் டங்காவல்
மெச்சி இனிதிருக்கும் மெய்ச் சாத்தன் — கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு'

என ஒரு பாடலை அடியார்க்கு நல்லார் தம் உரையில் எடுத்துக் காட்டியுள்ளார். கரிகாலனுக்குக் காஞ்சிமா நகரில் காமக் கோட்டத்தில் வீற்றிருக்கும் காமாட்சியின் திருக்கோயிலில் உள்ள சாத்தனால் செண்டு கொடுக்கப்பெற்றது என்பதனை இப்பாடல் தெரிவிக்கிறது.

அடிமதிக்குடி ஐயனார் பிள்ளைத் தமிழ் நூல் சாத்தனாரின் பெருமையைப் பலபடப் புகழ்ந்து பேசும் இலக்கியமாகும். இதில் ஐயனார், 'அருகனறங்காப்பவன்' என்று குறிக்கப்படுகிறான். பிங்கலமும் சூடாமணியும் 'அறத்தைக் காப்போன்' என்னும் ஒரு பெயரை இவனுக்குத் தந்துள்ளது. ஏனைய நிகண்டுகளும் அறங்காப்பவன், அறங்காப்பான், அறத்தவன் என்று ஐயனாரைப் போற்றுகின்றன. சாத்தனை யோகி என்று பிங்கலம் முதலிய நிகண்டுகள் குறிப்பிடு- கின்றன. 'யோக சாத்தையன்' என்றே அடிமதிக்குடி அய்யனார் பிள்ளைத் தமிழ் பல இடங்களில் போற்றி உரைக்கின்றது.

அருகதேவனை யோக சாத்தையன் வழிபடும் பாங்கினை,

'சீதள சினபதி பாத சரோருக
சேவித மாவீர ' (அடிமதி. பி. 7)

என்று போற்றுகிறார். அருகதேவனுக்குச் சாத்தன் உறவாக விளங்குவதையும் அருகதேவன் நவக்கிரகங்கள், எழுமுனிவர் முதலாக இந்திரன் வரையில் கைதொழுது துதியோதும் பெருமைக்குரியார் என்பதையும் ஒரு பாடல் நமக்கு எடுத்தியம்புகிறது

'சந்திரன் முதல்நவக் கிரகங்க ளெழுமுனிவர்
தருபநவ நாத சித்தர்
சட்சக்கிர வர்த்திகள் நவகோடி முனிபதிகள்
தையலர்க ளெழுகன்னிமார்
மந்திர மிருகண் ஞானநா சனத்துட்ட
வயிரவன் வீர காளி
வரையிலர மகளிர்கள் தேவரம் பையர்நீல
பஞ்சுதவழ் கிரியில் வாழும்
கந்தருவர் கின்னரர் யட்சர்வித் தியாதரர்
கன்னா பிரத்த யரர்கோன்
கைதொழுது துதியோது கடவுளர்க் குறவனே
கமலா சனத்தி வாளுர்

செந்திரு விளங்கடிசை மூதூரு காவலா
சிறுதே ருருட் டி யருளே!
சினநா யகர்க்குரிய யோகசாத்தையநீ
சிறுதே ருருட்டி யருளே ! (அடிமதிக். 46)

இந்திரனும் வந்து போற்றும் கடவுளராகிய அருகதேவர்க்குறவான சாத்தையன் அடிசை என்னும் அடிமதிக்குடியைக் காவல்புரியும் பணி செய்து வருவது இப்பாடலில தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருகைப் பருவத்தில் வரும் மற்றொரு பாடல் இச் சாத்தையனின் தெய்விக நலங்களைப் போற்றியுரைக்கக் காணலாம்.

விண்ணி லமரர் துதிபகரும்
வீரன் வருக, வருகவே !
விளங்கும் சகல கலைஞான
வேதன் வருக, வருகவே !
வண்ண மலர்கள் புனையுமுயர்
வடிவோன் வருக, வருகவே !
மாங்காய் வாளைதனிற் காய்க்க
வைத்தோன் வருக, வருகவே !
எண்ணு மடியார் வினையகற்றும்
இறைவன் வருக, வருகவே !
இமையோர் துதிக்க வீற்றிருக்கும்
ஏகன் வருக, வருகவே !
அண்ணல் வருக தென்னடிசை
அய்யன் வருக, வருகவே !
அழகு வளரும் யோகசாத்
தையன் வருக, வருகவே ! (அடிமதிக். பிள்ளைத் 30)

புட்கலை, பூரணை என்னும் இருதேவியர்களையுடையவன். இது குறித்துப் புட்கலை மணவாளன், புட்கலைமன், பூரணை கேள்வன், பூரணைமன், பூரணைபுட்கலை சேரிறை பூரணைபுட்கலைப் பெண்ணிருவர் கணவன் என்றெல்லாம் நிகண்டுகள் பெயர் சூட்டுகின்றன.

ஐயனார் கோயில்கள் ஊருக்குப்புறம்பான சோலைகளிலேயே காணப்படும். சிலப்பதிகாரத்தில் மாசாத்தன் கோயிலைப் 'புறம்பணையான் வாழ்கோயில்' என்கிறார் இளங்கோவடிகள். இது குறித்து 'வனமூர்த்தி' என்றும் 'பொழிற் கடவுள்' என்றும் சாத்தனை நிகண்டுகள

கூறுகின்றன. ஐயனார் கோயில்களைத் தமிழகத்தில் உள்ள பல ஊர்களிலும் ஊருக்குவெளியே காணலாம். மலையாள தேசத்தில் சாத்தாங்கோயில் என்னும் பெயரில் ஊர்தோறும் ஊருக்குப் புறம்பாகக் கோயில்கள் உள்ளன.

வீரபத்திரன்

முருகனைப்போலச் சிவபெருமானின் அழற்கண்ணிலிருந்து பிறந்த தெய்வம். எனவே, 'அழற்கண்வந்தோன், அங்கிவிழிவந்தவன்' என்கின்றனர். மேலும், ஈசன் மைந்தன், இறைமகன், அம்பிகைமகன், உமைமகன், உமைசேய் என்னும் பெயர்களால் சிவபெருமானிடத்திலிருந்து தோன்றிய ஓர் உக்கிரமூர்த்தியாயுள்ளவன் வீரபத்திரன் என்பது தெரியவரும், 'உக்கிரன்' என்றே ஒரு பெயரைப் பிங்கலம் முதலிய நிகண்டுகள் குறிப்பிடுகின்றன. 'குரோதன்' என்னும் பெயரைச் சூடாமணி நிகண்டு முதலியன சுட்டுகின்றன. சினத்தன், திறலோன், முரணினன், விறலோன் என்றெல்லாம் தமிழுரிச்சொற் பனுவல் உரைப்பதும் இதுபற்றியேயாம்.

இவனுடைய உக்கிரத்தன்மைக்கு ஏற்ப இவனுடைய உருவமும் தோற்றமளித்தல் இயல்புதானே. ஆயிரந்தலையுள்ளான், ஆயிரமுகத்தோன், ஆயிரமுகமுள்ளான், ஆயிரமுன்னத்தவன் என்பதனால் ஆயிரம் தலைபடைத்த மூர்த்தியாவன் எனவே ஈராயிரங்கையுள்ளான், ஈராயிரஞ்செவியுள்ளவன், ஈராயிரந்தோளுள்ளான் என நாமதீப நிகண்டு கூறுகிறது. சிவபெருமானைப் போலவே இவனுக்கும் முக்கண் உண்டு, எனவே முக்கணன் என்னும் பெயரைப் பிங்கலம் முதலிய நிகண்டுகள் கூற நாமதீபம் மூவாயிரங்கண்ணுள்ளோன் என்கிறது. இவனுடைய நிறமும் சிவனெனும் நாமந் தனக்கேயுரிய செம்மேனியம்மானைப் போன்ற செந்நிறமே. எனவே, செக்கர் வானிறத்தான் என்று குறிக்கப்படுகிறான். செஞ்சடையான் என்னும் ஒரு பெயரும் உண்டு. சடாதரன், சடையன், சடையோன் என்னும் பெயர்களை நிகண்டுகள் தருகின்றன.

வாளாயுதம் ஏந்திய வீரப்பெருந்தகை வீரபத்திரன். இது கட்கதரன், கட்கன் என்பதனால் விளங்கும். இவன் ஒப்பற்ற பெருவீரன் என்பதனை 'ஏகவீரியன்' எனப் பிங்கலந்தை கூறுவதனால் அறியலாம்.

தக்கனுடைய யாகத்தை அழிப்பதற்காகவே இம்மூர்த்தம் தோன்றியது. தக்கன் தொடங்கிய யாகத்தை அழித்ததோடு அங்குள்ள பலருக்கும் அவன் அளித்த தண்டனைகளும் விநோதமானவை. தக்கனுக்குச் சிறுவிதி என்று ஒரு பெயருண்டு. சிறுவிதி மகம் சிதைத்தோன், சிறுவிதி மகாரி, சிறுவிதி மகத்தைப் பொருதழித்தான் என்று நிகண்டுகள் கூறுகின்றன.

வீரபத்திரன் சூரியனின் பல்லை உடைத்துச் சந்திரனைத் தரையில் தேய்த்தான். ஆகவே, இரவிதந்தமழித்தோன், இந்துவைத் தேய்த்தோன் என்னும் பெயர்களைச் சூட்டியுள்ளனர். மால்சார்ங்கமட்டான், மால்தண்டழித்தான், மால்திகிரி நுங்கினான், மாலாற்றலட்டான் என்பதனால் திருமாலின் ஆயுதங்களை அழித்து அவனுடைய வலிமையையும் போக்கியவன் என்பது தெரியவரும். 'தீயின் கையுடனெழுநா வறுத்தோன்' என்பதனால் வேள்வியில் முதன்மையிடம் பெறும் தீக்கும் தண்டனை கிட்டியது. தக்கன் தலையையே போக்கியதால் தக்கன் சென்னியறுத்தோன் என்று போற்றப்படுகிறான்.

இவனுடைய தேவிபெயர் பத்திரை. பத்திரைக்கு நாயகன், பத்திரை கேள்வன், பத்திரைக்குக் கேள்வன் என்றிவ்வாறு நிகண்டுகள் கூறும். பானுகம்பனைப் பெற்றோன் என்பதனால் பானுகம்பன் இவனது புதல்வன் என்பது தெரியவரும்.

விநாயகனையும் முருகனையும் போன்றே வீரபத்திரனும் உமாபதியின் புதல்வனே என்பதனையும் நிகண்டுகள் குறிப்பிட்டுக் காட்டியுள்ளன. இதற்கு 'கணபதிக் கிளையோன்' (பி), யானைமுகவனுக்கிளையோன்' (நா), செவ்வேள் துணைவன் (த) என்னும் பெயர்கள் சான்றாம்.

ஒட்டக்கூத்தர் பாடிய தக்கயாகப் பரணியில் வீரபத்திர தேவரின் போராற்றல் பலபடியானும் விளக்கமுறுதல் காணலாம். இப்பரணிக்கே 'வீரபத்திரப்பரணி' என ஒருபெயர் வழங்குதலும் உண்டு.

வயிச்சிரவணன்

வயிச்சிரவணன் என்பது குபேரனைக் குறிக்கும். இதுவரையில் சிவன் திருமால் தொடர்புடைய ஆண்தெய்வங்களை பற்றிய செய்திகளை நிகண்டுகளில்-சிறப்பாக திவாகரர் அமைத்துத் தந்துள்ள

அடையில் பார்த்து வந்தோம். இக் குபேரனும் இதன்பின் பேசப்படுகிற நமனும் சிவசம்பந்தம் உடையவர்களே. ஆயினும் இவ்விருவரும் திசை காவலர்களாகக் கருதப்படுபவர் ஆவர். குபேரன் வடதிசைக் கதிபதி; நமன் தென்திசைத் தலைவன். இவ்விருவரையும் ஆண்தெய்வங்களின் வரிசையில் இறுதியில் அமைத்துள்ளார் திவாகரர்.

குபேரன் என்னும் பெயரைக் கேட்டமாத்திரையிலேயே அவனுடைய செல்வச் செழிப்புதான் முதற்கண் நம் கண்முன் நிற்கும். இவனை 'நிதிக்கோன்' என்று திவாகரமும் 'அதிதனச் செல்வன்' என்று பிங்கலமும் குறிப்பிடுகிறது. ஆக்கமுடையோன், இருநிதிக்கிழவன், இருநிதிக்கோன், இருநிதியாளி, இருநிதியான், கனகன், கனசெல்வன், செல்வக்கிழவன், செல்வன், தனதன், தனபதி, திருநிறை கோமான், திருவன், நிதியிறைவன் நிதியோன், நிறைசெல்வன், பாக்கியன், பொக்கிஷன், பொருளிறை எனப் பிற நிகண்டுகள் இவனுடைய செல்வமிகுதி பற்றி இப்பெயர்களைத் தந்துள்ளன.

குபேரன் வடதிசைக் காவலனாய்ச் சிறப்புற்று விளங்குபவன். எனவே, வடதிசைத் தலைவன், வடபாற்றலைவன், உத்திரகோன், உத்திரதிக்கன் எனப் பெயரிட்டுள்ளனர். இவன் வாழும் நகரம் அளகாபுரி எனவும் அளகையெனவும் கூறப்படும். அளகாபுரி என்பதன் சுருக்கவடிவமே அளகை. அளகையாளி, அளகேசன், அளகைப்பிரான், அளகையர்கோன், அளகைமன் என்று திவாகரம் முதலிய நிகண்டுகள் குறிப்பிடுகின்றன.

பதினெண் தேவகணத்தாருள் ஒருவராகக் கருதப்படும் இயக்கர்களின் அரசன் குபேரன். ஆகவே இவனும் ஓர் இயக்கனே. இத்தேவகணப் பெயரால் இயக்கன், இயக்கர் வேந்தன், இயக்கர் கோமான், இயக்கர்காவலன் என்றெல்லாம் நிகண்டுகள் இவனைப் போற்றியுள்ளன. 'கின்னரேசன்' என ஒரு பெயரைப் பொதிகை நிகண்டும் நாமதீபநிகண்டும் தருகிறது. கின்னரரும் பதினெண்கணத் தேவருள் ஒருவரே.

பொன்னிறம் படைத்தவனாதலின் 'பிங்கலன்' என ஒரு பெயரைத் திவாகரம் முதலிய நிகண்டுகள் இவனுக்குச் சூட்டியுள்ளன. 'மரகதன்' என்னும் ஒரு பெயரைத் திவாகரநிகண்டு முதலியன குறிப்பிடுகிறது. இது இவன் பசுநிறத்தன் என்பதனைக் காட்டும். 'பச்சையன்' என்கிறது தமிழுரிச்சொற்பனுவல். மாயோன், மரகதன் என இரு பெயர்-

களைக் கயாதர நிகண்டு மட்டுமே தருகிறது சூடாமணி நிகண்டு 'ஏகபிங்கலன்' என ஒருபெயரை இவனுக்குத் தருகிறது 'இதற்குப் பசுப்படைந்த ஒற்றைக் கண்ணையுடைய குபேரன்' என்று தமிழகராதி கூறுகிறது. சீரகத்தார் அணிந்தவன். இதுபற்றிச் சீரகத்தாரோன்' எனப் பிங்கலந்தையும், 'சீரகத்தாரினன்' என ஆசிரிய நிகண்டும் சுட்டுகிறது

குபேரனின் விமானம் புட்பகம் எனப்படும்; நரவாகனமும் இவனுக்கு உண்டு இவனுடைய ஊர்தி காரணமாகப் புட்புகவூர்தி, புட்பகத்தான், புட்பகத்தேரோன், புட்பகமூர்பவன், புட்பகவிமானமுள்ளோன், புட்பகன், நரவாகனன், நரவூர்தி, புருடவாகனன் மகனூர்தி என்னும் பெயர்களைப் பெற்றுள்ளான்

முட்கரம், முற்கரம் எனப்படும் ஓர் ஆயுதமாகும். இதனைப் பெரிய தடி, சம்மட்டி என்றும் கூறுவர் இந்த ஆயுதத்தையுடைமையால் 'முட்கரன்' 'முற்கரன்' என்னும் பெயர்களைப் பிந்திய நிகண்டுகள் தரும்.

சிவபெருமானின் உயிர்நண்பன் குபேரன். எனவே, அரற்குத் தோழன். அரனுடைத் தோழன், அரனுயிர் நண்பன், சப்புநண்பன், சிவனுக்கு நண்பன் என நிகண்டுகளில் குறிப்பிடப்படுகிறான். 'மந்திரி' என்றொரு பெயரும் இவனுக்குள்ளமையினால் இவன் சிவனுக்கு அமைச்சன் நிலையிலும் உள்ளான் என்று கருதலாம். இக்கருத்துப்படச் 'சூழ்வோன்' என்னும் பெயரால தமிழுரிச் சொற்பனுவல் குறிப்பிடுகிறது.

நமன்

இறப்பினை உயிர்களிடத்தில் உரியகாலத்திலே இயற்றிவருபவன் நமன். இவனை இயமன், எமன், ஞமன், அந்தகன் என்றும் குறிப்பிடுவர். எமனுடைய வரவு பற்றி நினைத்தாலே உயிர்களுக்கு அச்சம் தோன்றுவது இயல்பு. 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்கிறார் திருநாவுக்கரசர் (தேவா. 6 : 98 : 1). அழித்தலாகிய இறப்பினை நிகழ்த்தும் தெய்வமாகிய இவனை 'நாசவன்' என்று குறிப்பிடுகிறது பிங்கலம். சங்காரன், அழிப்போன், அருளிலன், கொடியன் என்றும் இவனைக் குறிப்பிடுகின்றனர்.

இவனுடைய ஆட்சிக்குரிய திக்குத் தென்திசையாகும். இது-பற்றியே தென் திசை முதல்வன், தென் றிசைக் கிழவன், தென்பாற் கிழவன், தென் றிசைக்கோன், தென்னவன், தென்னன், என்னும் பெயர்களைப் பெறுகிறான். யமனுடைய நகரம் வைவச்சுதபுரம் எனப்படும். அந்நகர்த்தலைவனாகிய இவனுக்கு வைவச்சுதன் என்பது ஒரு பெயராயிற்று. சைமினி நகரோன் எனப் பிங்கலந்தை குறிப்பிடு-வதனால் சைமினி என்றும் இதற்கோர் பெயருண்டு என்பது தெரியவரும். இயமனுடைய உலகத்திலுள்ள ஆற்றின் பெயர் வைதரணி என்பது. அதனால் இவனை வைதரணி யாற்றினோன் என்பர் எமனுலகத்துக்குச் செல்லுமுன் இந்த ஆற்றைக் கடந்து செல்லவேண்டும் என்பர்.

கருநிறம் படைத்தவனாதலின் யமனைக் கரியன், கரியோன் என்கின்றனர். இவன் வலிமை படைத்த உடற்கட்டுடையவன். சண்டன், மறலி மீளி என்னும் பெயர்கள் இவனுடைய வீரத் தன்மைபற்றி அமைந்தவை. மாறுபட்டு ஒழுங்கின்றி விளங்கும் பற்களையுடையவன் என்பது கருதி நாமதீபநிகண்டு 'வக்கிரதந்தன்' என ஒரு பெயரைத் தருவதால் அறியலாகும்.

எமன் ஊர்ந்து செல்லும் வாகனம் எருமைக்கடா. எனவே எருமையூர்தி, கடாவூர்தி, காரானூர்தி, கிடாவூர்தி என்று பேசப்படு-கிறான். நாமதீபநிகண்டு 'கிடாயுயர்த்தோன்' என ஒரு பெயரைச் சுட்டுவதால் கிடா இவனுடைய கொடிச் சின்னமுமாகும் என்பது தெரியவரும். கணிச்சி, சூலம், தண்டு, பாசம்முதலியன இவனுக்குரிய ஆயுதங்களாம். இக்காரணம்பற்றிக் கணிச்சியன், சூலன், தண்டதரன், தண்டன், பாசகரன், பாசன் என்னும் பெயர்களை நிகண்டுகள் கூறுகின்றன.

'கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை இரங்குவிர் மாதோ'

எனப் புறநானூறு (195) குறிப்பிடுவது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

உரிய காலத்தில் வந்து உயிர்களைக் கவர்ந்து செல்பவனாதலின் காலன், கால் என்று கூறப்படுகின்றான். உடலினின்று உயிரைப் பிரித்து எடுத்துச்செல்வதால் இவனைக் கூற்று, கூற்றவன் என்பர்.

'உயிர்கோடு போவான் உடல்கோடு போகான்
ஏதுக் கழுவீர் ஏழை மாந்தர்காள்'

என்று வினவுகிறார் கபிலர்.

உயிர்களுக்கு இறப்பைத் தருவதில் பிழையின்றிக் கடமை செய்தல் பற்றி இவன் அறவன், சமன், செங்கோற்கடவுள், செங்கோலன், நடுவன் என்று போற்றப்படுகிறான் எமனது மந்திரி பெயராகக் 'காலன்' என்பதை ஒரு நிகண்டு குறிப்பிடுகிறது. யமனுடைய கணக்கர்களாகச் சித்திரன், குத்தன் என இவருரைப் பொதிகை நிகண்டும் நாமதீப நிகண்டும் தெரிவிக்கின்றன

காலன்

எமனுக்கே காலன் என ஒரு பெயர் உண்டு என்பது பார்த்தோம். யமனுடைய ஏவலர்களைக் காலன் என்று பிரித்துக் கூறுதலும் உண்டு. நமன் பெயர்களை அடுத்துக் காலன் பெயர்களாகத் திவாகரம் கூற்று, சமன், சண்டன், மறலி என்னும் பெயர்களைச் சுட்டியுள்ளது.

'சண்டனும் மறலியும் கூற்றும் சமனுமென்று
இந்த வகைப்பெயர் காலற்கு மாகும்'

என்பது திவாகரம். ஆகவே எமனுக்குரிய பெயர்களாகிய இவை அவனுடைய ஏவலர்க்கும் உரியவாதல் பெறப்படும் மடங்கல் மறல், மறலி முதலிய பெயர்களைப் பிங்கலர் முதலியோர் எடுத்துக்கூறும். யமனுடைய தொழிலைத்தானே அவர்களும் செய்கின்றனர். யமனுக்குரிய பெயர்களுள் பல யமபடர்களுக்கும் உரியவாதல் காணலாகும் காலனுடைய படை கணிச்சியாகும் எனப் பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது.

புத்தன்

திவாகரம் அருகனில் தொடங்கிச் சிவன், திருமால் முதலியோரை ஆண்தெய்வ வரிசையில் விளக்கி, அதன் முடிவில் புத்ததேவன் பெயரை அமைத்துத் தந்துள்ளது. அரசமரத்தடியிலிருந்து தவமியற்றி உண்மை ஞானம் கைவரப்பெற்றவன் புத்த பெருமான். ஆகவே அரசு நீழலிருந்தோன், அரியேந்திய நீழலன், அரசடி அமர்ந்தோன், போதி வேந்தன், போதியான், போதியவன் என்னும் பெயர்களால் இப்பெருமான் போற்றப்படுகிறான் 'போதி' என்பதற்கு ஞானம், அரசமரம்

என்னும் இருபொருளும் உண்டு ஞானத்தைக் குறிக்கும் 'அறிவன்' என்னும் பெயரும் இவனுக்குத் தரப்பட்டுள்ளது.

கருணையே உருவமாகச் சமைந்தவன் புத்தபிரான். எனவே, இவனை அருள் நெறி சுரக்கும் செல்வன் எனத் திவாகரம் கூறுகிறது. அவன் வடிவமே அருளின் வடிவம்தான். அருளிடுவோன், அருளின் வடிவினன், தண்ணளியான், அனுக்கிரகன் என்று நிகண்டுகள் இவனைச் சிறப்பித்துக்கூறும். ஆதி, ஆதிதேவன், ஆதிமுதல்வன், ஒருதனித்தலைவன், கடவுள் என்றெல்லாம் இவனை நிகண்டுகள் போற்றுகின்றன. இவையெல்லாம் இவனுடைய இறைமைத் தன்மையைச் சுட்டியபடியாம்.

சினத்தை முற்றுமாய் விட்டவன் என்னும் கருத்தில் சினம் தவிர்ந்தோன், சினமது தவிர்ந்தோன், சினவரன், சினன் என்றெல்லாம் சிறப்பித்துரைப்பர் இவனுடைய தவநிலை கருதித் தவன், சாந்தன் என்னும் பெயர்களால் குறிக்கப்படுகிறான். காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களையும் போக்கியவன் புத்தபெருமான். இதனை இவனுக்குரிய முக்குற்றம் கடிந்தோன், முக்குற்றம் கடிந்தபிரான், முக்குற்றமில்லோன் என்னும் பெயர்களிலிருந்து அறியலாம். 'அகளங்கன்' என்னும் பெயரும் 'தூயன்' என்னும் பெயரும் இவனது மாசற்ற தன்மையை எடுத்தியம்புகின்றன.

இவன் அளவிறந்த கண்களையுடையவன் என்னும் காரணத்தால் அனந்தலோசனன் அனந்த விலோசனன், எண்ணில் கண்ணினன் என்னும் பெயர்களைத் திவாகரம் முதலியவை தந்துள்ளன. புனிதனாய்ப் புண்ணிய மூர்த்தியாய்ப் புத்த தேவன் விளங்குகிறான். எனவே புங்கவன் புண்ணியமூர்த்தி, புண்ணிய முதல்வன், புண்ணியன் எனக் கூறப்படுகிறான்.

'பூமிசை நடந்தோன்' என்பது இவனது தெய்விகத்தன்மையைக் காட்டும். சிங்காதன மேற்றவன் என்பது முன்பு அரசனாயிருந்த காரணத்தால் வந்த பெயர்போலும். சாக்கியன், கோதமன் என்பன இவனுடைய குலம்பற்றி வந்த பெயர்களாம். காமனைக்காய்ந்த பெருமான் இவன் இவனைக் 'காமன் பகைவன்' என்கிறது திவாகரம்.

அறத்தை உலகிற்கு அருளிச் செய்தமையால் அறவன், அறத்தின் வேந்தன் எனச் சொல்லப்படுகிறான். தருமன், தருமராசன் என்றும் பிங்கல சூடாமணி நிகண்டுகள் கூறும் ஆதிக்கடவுளாகப் புத்த தேவன்

விளங்குகிறான். ஆதி, ஆதிதேவன், ஆதிமுதல்வன், ஏகதேவன், ஒருதனித்தலைவன், நாதன், முதல்வன், உயர்ந்தோன், மேலோன், விநாயகன் என்பன இப்பெருமானின் தெய்விகத்தலைமையை விளக்குவன. சினன் (பி), சைனன் (சூ) என்னும் பெயர்களும் இவனுக்கு உண்டு என்று தெரியவருகிறது. 'பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்' எனவரும் சூடாமணி தரும் விளக்கத்தால் பகவன் என்பது ஈசன் முதல் புத்தன் வரை கடவுளர் பலர்க்கும் பொருந்தும் பொதுப்பெயராய் உள்ளமை காணலாம். திருவள்ளுவரும் முதற்குறளில் 'ஆதி பகவன்' என்று இறைவனைக் குறிப்பிடுதல் ஈண்டுக் கருதத்தகும்

'மறைவயிரி' என்னும் ஒரு பெயரைப் பாரதி தீபம் புத்த தேவனுக்குத் தந்துள்ளது. அப்பெயர் வேத வேள்வியை இவன் கடிந்த தால் வந்த பெயராம். புறநானூற்றில் வேள்வியைச் சிறப்பித்துப் பாடும் கவுணியன் விண்ணந்தாயனை ஆவூர் மூலங்கிழார் பாடிய பாட்டில்,

நன்றாய்ந்த நீணிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகாது
ஒன்றுபுரிந்த ஈரிரண்டின்
ஆறுணர்ந்த ஒருமுதுநூல்
இகல் கண்டோர் மிகல் சாய்மார்
மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய்யோராது மெய்கொளீஇ
... ...
நீர்நாண நெய்வழங்கியும்
எண்ணாணப் பல வேட்டும்
மண்ணாணப் புகழ்பரப்பியும்   (புறம். 166 : 1-23)

என்று சொல்லப்பட்டுள்ளது இங்கே, 'இகல்கண்டோர்' என்றது சமண பௌத்த சமயத்தாரைக் குறிப்பிட்டுக் கூறியவாறாம். வேள் வியை அந்நாளில் மறுத்துக் கடிந்துரைத்த சமயங்கள் இந்த இரண்டுமேயாம்.

மேலும், புத்ததேவனுக்குக் கருமமுத்தன், ததாதகன், பஞ்சதாரை விட்டோன், பண்ணவன் என்னும் பெயர்களும் உள்ளன. இவற்றுள் கருமமுத்தன், பஞ்சதாரை விட்டோன் என்னும் பெயர்கள் தமிழ்ப்பே ரகராதியில் இடம்பெறவில்லை பண்ணவன் என்பதற்கு அருகன்

என்னும் பொருள் தரப்பட்டிருக்கிறது. ஆனால் புத்தன் என்பது குறிப்பிடப்படவில்லை

புத்ததேவன் அருளிய வேதத்திற்குப் 'பிடகம்' என்பது பெயர். அது மூன்று பெரும்பகுதி கொண்டதாதலின் 'திரிபிடகம்' என்பர். இது குறித்து 'முப்பிடகன்' என்னும் பெயரைக் கயாதர நிகண்டு மட்டும் தருதலும் கூர்ந்து காணத்தக்கது. அருங்கலைத் தலைவன் (த) கலை நாயகன் (தி. பா) என்னும் பெயர்களும் இவனுக்கு உள்ளன.

புத்த சமயம் பற்றிய இலக்கியங்களுள் இன்று நமக்குக் கிட்டியுள்ள பெருநூல் மணிமேகலைக் காவியம். புத்த மித்திரர் செய்த வீரசோழியம் பௌத்த மதத்தார் வழங்கிய இலக்கண நூல். இதற்கு உரை எழுதிய பெருந்தேவனார் புத்தரைப் புகழும் பல பாடல்களை உதாரணமாக நூலுள் எடுத்துக் காட்டியுள்ளார் புத்த சமயத் தமிழ் நூல்கள் பல மாய்ந்தொழிந்தன இப்போது நாம் மணிமேகலைக் காவியம் ஒன்றினாலேயே அந்தச் சமயத்தின் கொள்கைகளையும் புத்த தேவன் பெருமைகளையும் அறிய இயலுகிறது. இக்காவியத்தில் புத்த தேவனைக் குறித்துத் துதியாக வரும் பகுதிகள் சிற்சில உள.

சங்கதருமன் என்னும் முனிவன் சுதமதிக்குத் துயரம் நீங்க ஆறுதல் மொழிந்தபோது,

'எங்கோன் இயல்குணன் ஏதமில் குணப்பொருள்
உலக நோன்பிற் பலகதி உணர்ந்து
தனக்கென வாழாப் பிறர்குரியாளன்
இன்பச் செவ்வி மன்பதை எய்த
அருளறம் பூண்ட ஒருபெரும் பூட்கையின்
அறக்கதி ராழி திறம்பட உருட்டிக்
காமற் கடந்த வாமன்.........' (மணி. 5 : 71-77)

திருப்பாதங்களையே என்னுடைய நாவானது இடைவிடாமற் பாராட்டு மேயல்லாமல் வேற்றொன்றையும் சொல்ல அறியாது என்று புத்ததேவனிடத்துள்ள பேரீடுபாட்டை எடுத்துரைத்தாள்.

'புலவன் தீர்த்தன் புண்ணியன் புராணன்
உலக நோன்பின் உயர்ந்தோய் எங்கோ!
குற்றம் கெடுத்தோய் செற்றம் செறுத்தோய்
முற்ற உணர்ந்த முதல்வா எங்கோ!

காமற் கடந்தோய் ஏம மாயோய்
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் எங்கோ!
ஆயிர வாரத் தாழியந் திருந்தடி
நாவா யிரமிலேன் ஏத்துவ தெவன். (மணி. 5 . 98-105)

மணிமேகலா தெய்வம் மாறுவேடத்தில் வந்து பளிக் கறையிலுள்ள புத்தரின் பாத பீடிகையை வலங்கொண்டு துதித்தபகுதி இது. மந்திரம் கொடுத்த காதையில், மணிமேகலாதெய்வம் புத்தப் பீடிகையைக் கண்டு அதனைப் புத்த தேவனாகவே எண்ணித் துதித்த பகுதி பின் வருமாறு :

உயிர்க ளெல்லாம் உணர்வு பாழாகிப்
பொருள் வழங்கு செவித்துளை தூர்ந்தறி விழந்த
வறந்தலை உலகத்து அறம்பாடு சிறக்கச்
சுடர்வழக் கற்றுத் தடுமாறு காலையோர்
இளவள ஞாயிறு தோன்றிய தென்ன
நீயோ தோன்றினை நின்னடி பணிந்தேன்.
நீயே யாகிநிற் கமைந்த விவ்வாசனம்
நாமிசை வைத்தேன் தலைமிசைக் கொண்டேன்
பூமிசை ஏற்றினேன் புலம்பறுக! (மணி. 10 : 7-15)

மணிமேகலை மணிபல்லவத் தீவில் கோமுகி என்னும் பொய்கையில் அமுதசுரபி என்னும் தெய்வப் பாத்திரத்தைப் பெற்ற போது புத்த தேவனைக் குறித்து அவள் துதித்த பகுதி ஒரு முன்னிலைத் துதி மாலையாயுள்ளது :

மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கறம் முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய இறந்தோய் நின்னடி
கண்பிறர்க்கு அளிக்குங் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்னடி
வணங்குதல் அல்லது வாழ்த்தல்என் நாவிற்கு
அடங்காது......!' (மணி. 11 : 61-72)

அமுதசுரபி பெற்றுப் புகார் நகரம் வந்த மணிமேகலை அறவணர் என்னும் அடிகளாரைத் தொழுதபொழுது, அவர் மணிமேகலையை நோக்கிப் புத்தர் தோற்றத்தால் உலகம் பெறும் வளததினை எடுத்துரைத்துள்ள பகுதி அப்பெருமானின் அறப்பெருமையை நன்கு காட்டும்.

புத்த ஞாயிறு தோன்றுங் காலைத்
திங்களும் ஞாயிறு தீங்குறா விளங்கத்
தங்கா நாண்மீன் தகைமையின் நடக்கும்;
வானம் பொய்யாது மாநிலம் வளம்படும்;
ஊனுடை யுயிர்கள் உறுதுயர் காணா;
வளிவலங் கொட்கும்; மாதிரம் வளம்படும்;
நலியிரு முந்நீர் நலம்பல தரூஉம்;
கறவைகன் றார்த்திக் கலநிறை பொழியும்;
பறவை பயன்துய்த் துறைபதி நீங்கா;
விலங்கும் மக்களும் வெரூஉப்பகை நீங்கும்;
கலங்கஞர் நரகரும் பேயும் கைவிடும்;
கூனும் குறளும் ஊமும் செவிடும்
மாவும் மருளும் மன்னுயிர் பெறாஅ;
அந்நாட் பிறந்தவன் அருளறம் கேட்டோர்
இன்னாப் பிறவி யிகந்தோ ராதலின்
போதி மூலம் பொருந்திய சிறப்பின்
நாதன் பாதம் நவைகெட ஏத்துதல்
பிறவி தோறும் மறவேன் மடக்கொடி !' (மணி. 12.86-103)

இங்கே மணிமேகலைக் காவியத்திலிருந்து நாம் கண்ட புத்ததேவன் புகழ்மாலைகளிலிருந்து தெரியவரும் பெயர்களை நோக்குவோம் :

அருளறம்பூண்ட
ஒருபெரும் பூட்கையன்
அருளறம் பூண்டோன்
அறக்கதிராழியுருட்டுவோன்
ஆயிரவாரத் தாழியந்
திருந்தடியன்
இயல்குணன்
இளவளஞாயிறன்னன்

உரகர் துயரமொழிப்போன்
உலகநோன்பின் உயர்ந்தோன்
எங்கோன்
எண்பிறக்கொழிய விறந்தோன்
ஏதமில் குணப்பொருள்
ஏமமாயோன்
கண்பிறர்க்களிக்கும் கண்ணன்
காமற்கடந்தவாமன்

குணப்பொருள்	பிறர்க்கறமுயலும் பெரியோன்
குற்றம் கெடுத்தோன்	புண்ணியன்
செற்றம் செறுத்தோன்	புத்தஞாயிறு
தனக்கெனவாழாப்பிறர்க்குரியாளன்	புராணன்
தீநெறிக் கடும்பகை கடிந்தோன்	புலவன்
தீமொழிக் கடைத்த செவியன்	போதிநாதன்
தீர்த்தன்	மாரனைவெல்லும் வீரன்
துறக்கம் வேண்டாத்தொல்லோன்	முற்றவுணர்ந்த முதல்வன்
நரகர் துயர்கெட நடப்போன்	வாமன்
நாதன்	வாய்மொழி சிறந்த நாவன்

இப்பெயர்களுடன் நிகண்டுப் பெயர்களை ஒப்பிட்டு இரண்டற்கு முள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டு அவற்றால் விளக்கமாகும் புத்தபெருமானின் பெருமைகளை அறிவது இன்பம் பயப்பதாகும்.

தருமதேவதை

இதுகாறும் ஆண்தெய்வங்களைப்பற்றிய செய்திகளைப் பார்த்தோம். இனிப் பெண் தெய்வங்களைப் பற்றிய விவரங்களைக் காண்போம.

அருகனோடு தொடர்புடைய தெய்வம் தருமதேவதை. அருகனைப் போற்றி அவனுக்குரிய தொண்டுகளைச் செய்யும் கடமை பூண்டவள். பிங்கலந்தை நிகண்டுதான் அருகன் பெயருக்கு முன்பாகத் தரும தேவதையின் பெயரை முதன்முதலாகத் தந்த நூல். இந்நிகண்டு இத்தேவதைக்குத் தந்துள்ள பெயர்கள் எட்டு. அவையாவன :

அம்பாலிகை	பகவதி
அருகனைத் தரித்தாள்	பரமசுந்தரி
அறத்தின் செல்வி	பூக நிழலினள்
இயக்கி	மரகதவல்லி

ஐயனாராகிய இயக்கனுடன் இணைந்து இயக்கியாகிய தரும தேவதை அருகனது அறத்தைக் காத்து நிற்பாள் என்று கூறுவர் பின்வந்த நிகண்டுகளுள் சூடாமணி, ஆசிரிய நிகண்டு, தமிழுரிச் சொற்பனுவல் என்னும் மூன்றுமே இத் தேவதைக்குரிய பெயர்களைத் தந்துள்ளன தமிழுரிச் சொற்பனுவலுடையார் 'அறச் செல்வி' என்று

இத்தேவதையைக் குறிப்பிடுகிறார். அம்பாலிகை என்றால் தாய் என்பதுதான் பொருள். இதனோடு அம்பிகை, அம்மை என்னும் பெயர்களைப் பின்நிகண்டுகள் தந்துள்ளன. பகவதி, பரமசுந்தரின் என்னும் பெயராலும் போற்றப்படுகிறாள்.

தருமதேவதை பசுமை நிறமுடையாள். எனவே, மரகதவல்லி என்னும் பெயர் பெறலானாள். பூகநிழலில் வீற்றிருப்பாள். அருகனை முடிதரித்து அறத்தின் செல்வியாய் அப்பெருமானின் அறங்காத்து நிற்பாள். ஆகவே இவள் அறத்தின் செல்வி, அறத்தின் மூர்த்தி, நடுநிலையாட்டி, நல்லறத்தள் என்று போற்றப்படுகிறாள்.

'தருமதேவி சோபனமாலை' என்னும் நூல் இத்தேவியின் பெருமைகளைப் புகழ்ந்து கும்மி நடையில் ஆக்கப்பெற்றுள்ளது. இதில் இவ்வம்மையின் பல்வேறு சிறப்புகளும் மிக விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

அனகளை மாமுடி வைத்தவள்
அருகர் திருவறங் காத்தவள்
மனமகி முஞ்சறு வானயக்ஷின்
மருவுபூ மாதுக்குச் சோபனம்!

கன்னிக் கமுகின் நீழலுறை
கமலத் தாட்சிக்குச் சோபனம்!
பொன்னுல காளவே வந்துதித்த
பொற்கொடி மாதுக்குச் சோபனம்!

மரகத வல்லிக்குச் சோபனம்!
வரசுந் தரிக்குச் சோபனம்!
அருள்பரஞ் சோதிக்குச் சோபனம்!
ஆனந்த வல்லிக்குச் சோபனம்!

நித்தியகல் யாணிக்குச் சோபனம்!
நீள்கலை வாணிக்குச் சோபனம்!
பத்தர்கள் நாளும் பணிந்திடவே
பாலிக்கும் அம்மைக்குச் சோபனம்!

அம்பா லிகைக்குச் சோபனம்!
அருள்பரா சத்திக்குச் சோபனம்!
உம்பர்க் கிறைவிக்குச் சோபனம்!
உத்தமி யாளுக்குச் சோபனம்!

கானங்கள் கின்னரர் பாடவே
    காந்தரு வர்துதி நீடவே
வானமக ளிரேவல் செய்யவே
    வரசுந் தரிக்குச் சோபனம்! (சோபனமாலை 33-38)

இச்சோபனமாலைப் பாடல்களில் தருமதேவதைக்குரிய நிகண்டுகள் சுட்டிய பெயர்களெல்லாம் வந்திருக்கக் காணலாம்.

உமையவள்

'உமையவள் இறைவர் பாகத்தொடுக்கம்' என்னும் ஔவை வாக்கிற் கிணங்க அவள் சிவபெருமானின் இடப்பாகத்தே பொருந்தியிருப்பவள். இதனால் இவளைப் 'பாகம்பிரியாள்' என்பர். இவளுடைய சேர்க்கையினால் சிவபெருமான் உமையொரு பாகமுடையனாயினான். உமையவள் பெயர்களாகத் திவாகாரம் பின்வரும் எட்டு பெயர்களைத் தருகின்றது.

அம்பிகை	கவுரி
அயிராணி	காமக்கோட்டி
ஆரியை	சத்தி
இமையவல்லி	பார்ப்பதி

இந்த எட்டுப்பெயர்கள் அடுத்துத் தோன்றிய பிங்கலத்தில் 33-ஆகி வளர்கின்றன. இதனினும் அதிகமான பெயர்தரும் நிகண்டு தமிழுரிச் சொற்பனுவல். இதன்கண் உள்ள பெயர் 44. எல்லாவற்றிலும் மேம்பட 99 பெயர்களை நாமதீப நிகண்டு தருகிறது. சிவன் பெயர் கூறும் போதும் எல்லா நிகண்டுகளிலும் அதிகமான பெயர்களைத் (161) தந்த இந்த நிகண்டு உமாதேவிக்கும் அதிகமான பெயர்களைத் தருவது பொருத்தமே. நிகண்டுச் சொற்பொருள் வளர்ச்சியில் நாமதீபம் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் வந்த நூல். இதில் உச்ச அளவிலான பெயர்களை ஒவ்வொரு பொருளுக்கும் தருவது இதன் தனிச் சிறப்பு என்னலாம். உமாதேவியின் பெயரைப் பொறுத்தவரையில் திவாகரத்தை விடவும் 12 பங்குக்கு மேற்பட்ட சொற்கள் இதில் வந்துள்ளமை கவனிக்கற்பாலது. ஆகவே, நிகண்டுச் சொற்பொருள் வளர்ச்சியில் நாமதீபநிகண்டு ஒரு சிறப்பிடம் பெற்று விளங்குகிறது என்பது தெரியவரும்.

பிங்கல நிகண்டில்மட்டும் காணப்பெற்ற பெயர்கள் குமரி, சமய-முதல்வி தற்பரை, நிமலி, வேதமுதல்வி என்னும் ஐந்துமாம். உரிச்-சொல் நிகண்டில் 'இமயவல்லி' என்ற ஒருபெயர் உள்ளது. கயாதர நிகண்டில் மட்டும் அறஞ்செய்மின், அன்னை, அன்னையில்லவன் காதலி, தாரணிக்கு முன்னன்னை, வேள்தன்னன்னை என ஐந்து பெயர்கள் வருதல் காணலாம். பாரதிதீபத்திலோ அகண்ட பூரணி, அம்பிகையாள், அரன்பாரி, இமையமடந்தை, எண்ணான்கறஞ்செய்த பார்வதி, பார்வதி, புராதனி முப்புவியளித்தாள், வல்லி என ஒன்பது பெயர்கள் வந்துள்ளன. சூடாமணியில் மட்டும் அரனிடத்தவள், தருமத்தின்செல்வி, மலைமடந்தை என்னும் 3 பெயர்கள் உள. மருதவி, மலைமாது என்னும் இருபெயர்கள் ஆசிரிய நிகண்டில் மட்டும் உள. பொதிகை நிகண்டில் வரும் அறம் வளர்த்த செல்வி, அன்னபூரணி, ஈசனிடப்பாகி, உலகாயி, ஏழை, தவசதானந்தி என்னும் ஆறுபெயர் வடிவங்கள் வேறு நிகண்டுகளில் காணப்படவில்லை.

மிகுந்த அளவிலான பெயர்களைத் தொகுத்துத் தந்துள்ள நாம தீப நிகண்டில் மட்டும் காணப்படும் பெயர்களாவன:

அஞ்சனி
அம்பணத்தி
அமரி
ஆயி
ஆவரணி
ஆனந்தி
ஆனைமுகனன்னை
இமவான்புதல்வி
உத்தமி
உலகீன்றாள்
கங்காளி
கல்யாணி
கவுமாரி
காத்தியாயினி
காமக்கோட்டத்தாள்
காளி
சக்கரம், பாசம், அங்குசம்,
வாள், வேல், வரதம்,
அபயம், இக்குவில், பூவாளி-
இவை ஒன்பதுங்கொண்டாள்
சடாதரி
சண்டிகை
சவுரி
சிங்காருடி
சுகந்தரித்தாள்
சூரி
தாருகசங்காரி
திகம்பரை
துர்க்கை
நாராயணி
பகவதி
பஞ்சமி

பயிரவி
பாலைநிலத்தாள்
மதுபதி
மயிடாரி
மாதங்கி
மாயை
மால்தங்கை
மாலினி
மேனைமகள்
யாமளை
யாழ்சரித்தாள்
யோகினி
லளிதை
வல்லணங்கு
வல்லபி
விட்சேபி
விந்தை
விமரிசை
வீரி
வேதாளி

இப்பெயர்களை நோக்கியவளவில் உமாதேவியின் திருவுருவம், அவள் கொண்டருளும் மூர்த்தி பேதங்கள், அவளுடைய வெற்றித் திறம், அருளின் திறம், தெய்விகப்பெருநலன் முதலியன எல்லாம் நன்கு விளங்குதல் காணலாம்.

இந்நாமதீபம் போலவே அண்மையில் வெளிவந்த தமிழுரிச்சொற் பனுவலும் பற்பல பெயர்களை உமாதேவிக்குத் தந்துள்ளது. அவை வருமாறு :

அணங்கு
அந்தணி
அரில்சிறிதில்லாள்
அருங்கலைச்செல்வி
அருள்
அருள்வடிவினள்
அறத்தின் செல்வி
அனைத்துலகீன்றாள்
இளையோள்
இறையிடப்பாலள்
குறைவிலள்
செல்வி
தந்தைசெய்வேள்வி தகைந்தோள்
தலைவி
திருநிறைசெல்வி
திருமால்தங்கை
தூயள்
நல்லோள்
நாடுபுரந்தாள்
நிலைமகள்
பசுநிறத்தாள்
பேரழகி
மலைவில்லிதன் மணவாட்டி
மறையின் முதல்வி
மாசிலள்
மாது
முக்கண்மடந்தை
முப்பத்திருவகை மூதறம் புரிந்தோள்
முன்னோன் பயந்தாள்
முனிவில்லாள்
மூவிலை வேலினள்
மேலவள்
யாழ்முதலுடையாள்
வடிவாள்
வல்லோள்

இத் தமிழுரிச் சொற்பனுவலுள காணும் மேலே தரப்பட்டுள்ள பெயர்களுள் பலவும் முந்தையோர் தந்த வடமொழிப் பெயர்களின் மாற்றுவடிவங்களாகக் காணப்படுதலும் நோக்கத்தகும். பெரும்பாலான நிகண்டுகளும் எடுத்துரைக்கும் உமை பெயர்கள் தனிப்படத் தொகுத்து நோக்கும் தன்மையன. நிகண்டுகள் இரண்டோ, இரண்டிற்கு மேற்பட்டோ உள்ள நூல்கள் எடுத்துக் கொண்டுள்ள பெயர்கள் வருமாறு :

அத்தை
அந்தரி
அபிராமி
அபினை
அம்பிகை
அம்மை
அமலை
அயிராணி
அருள்
ஆரியை
இமையவதி
இமையவல்லி
ஈச்சுரி
உமை
உருத்திரை
எண்டோளி
ஐயை
கவுரி
கன்னி
காமக்கோட்டத்தி
கௌரி
சங்கரி
சத்தி
சாம்பவி
சிவை
சுந்தரி
செவ்வேளன்னை
தருமச்செல்வி
தாய்
திரிபுரை
தேவி
நாயகி
நாரி
நீலி
பரை
பவானி
பார்ப்பதி
புவனை
பூங்கணைக்கிழத்தி
மலைமகள்
மலைமான்
மனோன்மணி
மாதா
முக்கண்ணி
வாமி
வாலை
விமலை

உமாதேவியாருக்குரிய பெயர்களுள் இந்த பெயர்களும் மிக முக்கிய மான சிறப்புடைய பெயர்கள் என்பது நோக்கிக் காணத்தக்கதாம்.

உமாதேவிக்கு அறத்தின் செல்வி, அறம்வளர்த்த செல்வி என்னும் பெயர்களும் உள. இந்நாளில், 'அறம் வளர்த்தாள்' என்றும்

மக்கள் வைத்துக் கொள்ளுகின்றனர். தமிழுரிச்சொற்பனுவல் 'முப்பத் திருவகை மூதறம் புரிந்தோள்' என்று உமாதேவி முப்பத்திரண்டு அறம் செய்தாள் என்பதைத் தெரிவிக்கிறது. பிங்கலநிகண்டு மட்டும் வானவர் வகையில் உமை பெயரை அடுத்து முப்பத்திரண்டு அறங்கள் எவையெவை என்பதனை எடுத்துக் காட்டுகிறது. ஆனால் இந்த முப்பத்திரண்டு அறம் பற்றிய விளக்கம் திவாகரத்தில் ஒருசொல்பல்பொருள் கூட்டத்தொருபெயர்த் தொகுதியில் உள்ளது. பிற நிகண்டுகளில் இச்செய்தி விளக்கப்படவில்லை.

கங்கை

சிவபெருமானின் சடாமகுடத்திலே கங்கை அடங்கியிருப்பதாக உரைப்பது மரபு. கங்கையைக் கங்காதேவி என்பர். கங்கையின் பெயர்த்தொகுப்புத் தமிழுரிச் சொற்பனுவல் தவிர ஏனைய நிகண்டுகளில் உள்ளது. திவாகரத்தில் சானவி, சுரநதி, திரிபதகை, பகீரதி, மந்தாகினி, வரநதி என ஆறுபெயர்களே கங்கைக்குத் தரப்பட்டுள்ளன. பின்னாளில் தோன்றிய சூடாமணி நிகண்டும் இந்த ஆறு பெயர்களையேதான் தந்துள்ளது. ஆனால், பிங்கலம் முதலியவற்றில் வெவ்வேறு பெயர்கள் காணப்படுகின்றன.

வானுலகத்திலிருந்து இறங்கிவந்த நதியாதலினாலும் இறைவனுடைய சடாமகுடததிலிருந்து வெளிப்படுவதனாலும் தெய்வத் தன்மை பெற்ற நதியாகிறது. சிரநதி சீநதி, சுரநதி, சுரராறு, தேவநதி, வானதி என்னும் பெயர்களால் பிங்கலம் முதலிய நிகண்டுகள் போற்றியுள்ளன. மந்தாகினி என்பதற்கும் ஆகாச கங்கை என்பதே பொருள்.

'தசமுகநிதி' என்று பிங்கலநிகண்டு கூறுகிறது. கங்கை ஆயிரமாமுகத்தொடு இழிந்து பெருகி வருகிறது என்றும் சொல்லுவதுண்டு. இதுபற்றிச் 'சகத்திரமுகி' என்னும் ஒரு பெயரைப் பொதிகை நிகண்டு தருகிறது. இச்சொல் தமிழ்ப் பேரகராதியில் இடம் பெறவில்லை. சிந்துநதி என்று கயாதரமும் பாரதிதீபமும் கங்கையைக் குறிப்பிடுகிறது. இந்தப பொருள் தமிழ்ப் பேரகராதியில் தரப் பெறவில்லை.

'உமைகரநதி' என்பதனால் கங்கை பார்வதிதேவியின் கையிலிருந்து பெருகி வருவதாகவும் உரைப்பதுண்டு என்பது தெரிய வரும். பகீரதனுடைய பெருமுயற்சியால் மண்ணுலகிற்குக் கங்கை

வந்த காரணத்தால் பகீரதி, பாகீரதி என்னும் பெயர்களைப் பெறுவதாயிற்று. சன்னுமுனிவருடைய செவிவழியாகப் பிறந்து வந்தமையால் சானவி என்று இதற்கு ஒரு பெயர் சனுவி என்றும் பொதிகை நிகண்டு கூறும்.

> 'சன்னுவின் செவிவழி வரலா லிகரில்
> சானவி யெனப்பெயர் படைத்தது' (கம்ப. பால. அகலிகை. 62)

என்கிறார் கம்பர். தன்னிடத்தே வந்து முழுகினார் பாவங்களைப் போக்கிப் புனிதப்படுத்தும் இவளும் பரிசுத்தமானவளாய்த்தானே யிருத்தல் வேண்டும். விமலை என்னும் பெயரால் நாம் இதனை அறியலாம்

தீபவதி, நளினி என்னும் பெயர்களும் கங்கைக்கு உண்டு என்பதனைப் பொதிகை நிகண்டு நாமதீப நிகண்டு ஆகியவற்றால் அறியலாகும். இவற்றிற்குத் தமிழ்ப் பேரகராதி நதி, தடாகம் என்னும் பொருள்களைத் தருகிறது இப் பொருள்கள் பிங்கல நிகண்டினை ஆதாரமாகக்கொண்டு தரப்பட்ட பொருள். ஆனால் பொதிகை நிகண்டும் நாமதீப நிகண்டும் தரும் கங்கை என்னும் பொருள் இச்சொற்களுக்குத் தரப்படவில்லை. தமிழ் நிகண்டுகளை முற்றுமாய் ஆராய்ந்து அவற்றில் இடம்பெற்ற சொற்பொருள்களுக்கு ஒரு தனி அகராதிவரும்போது எத்தனையோ புதுப்புதுச் சொற்களும், புதிய புதிய பொருள்களும் நமக்குத் தெரியவருதல் கூடும் அத்தகைய ஓர் அகராதி அவசியம் என்பதற்குக் கங்கைபற்றிய ஓரிரு சொற்கள் பேரகராதியில் இடம் பெற்ற தன்மை கொண்டே நாம் துணியலாம். நிகணடுச் சொற்பொருள்களுக்கு எனத் தனி அகராதி வரும்போது அதனால் தமிழ்ப் பேரகராதி எத்தனையோ சொற்பொருள் வளங்களைப் பெறுவதோடு பற்பல திருத்தங்களையும் பெறுதல்கூடும்.

காடுகாள்

காட்டுக்குரிய தெய்வம் காடுகாள். காடுகிழாள் என்பதன் திரிபே இது. இவள் கொடிய தன்மை படைத்தவளாதலின் கொடியை எனப்படுகிறாள். வலிமையும் வீரமும் உடையளாதலின் சூரி, முரணுடையாட்டி என்னும் பெயர்கள் உளவாயின. பருத்த உடம்புடையளாதலின் மோடி எனவும் பெயர்பெறுகிறாள். அம்மை என்னும் மாரிநோயைத் தோற்றுவிப்பாளாதலின் மாரி எனப்பட்டாள். உலக வழக்கில் மாரியாத்தா என்பர் முதுமையான பெண் தெய்வம்

என்பார் மூதணங்கு என்கின்றனர். இவள் வயிரவனை ஈன்ற அன்னை யாவாள் இதுபற்றியே காரிதாய், காரியைப் பெற்றகொடி, வடுகன்றாய், வடுகி, வயிரவன் அன்னை என்னும் பெயர்களைப் பெறுகிறாள். 'குத்திரி' என ஒருபெயரைப் பொதிகை நிகண்டு தருகிறது. வஞ்சகச் செயல்களைச் செய்தலாலோ குரூரமான தன்மையாலோ இப்பெயர் இவளுக்கு அமைந்திருக்கலாம். இச்சொல் தமிழ்ப் பேரகராதியில் இடம்பெறாத ஒன்று. ஐயை, சூரி, மாரி முதலியன சில காளி தேவிக்கும் துர்க்கைக்குங்கூடப் பெயராய் வழங்குவதுண்டு.

காளி

காடுகாள் வேறு, காளி வேறு என்று கொள்வதற்கில்லை; சத்த மாதாக்களுள் ஏழாவதாக வைத்து எண்ணப்படும் இளையாள காளி. சத்தமாதாக்கள் என்பதனை சத்தமாதர்கள் எனவும பின்னோர்க் கூறலாயினர். இந்த ஏழு மாதர்களும் சிவசத்தியின் பேதங்களாய் அமைந்தவரே அவராவார் பிராமணி, நாராயணி, மாகேசுவரி, கவுமாரி, வராகி, இந்திராணி, உருத்திராணி என்போராவார். இவருள் உருத்திரனின் அழிப்பாற்றல்களைப் பெற்ற இவளே காளியாவாள்.

ஊரின் வடபுற எல்லைக்காவல் தெய்வமாகக் காளிகோயில் பெரும் பாலான ஊர்களிலும் அமைந்திருக்கக் காணலாம். 'வடக்குவாசற் செல்வி' என்று மக்கள் இவளைப் பேசுவர். இக்கருத்தில் வடக் கொண்டொடி' என ஒரு பெயரைப் பாரதிதீபம் தருகிறது. இந்நிகண்டு ஏட்டுச்சுவடியிலிருந்து அண்மையில் அச்சுக்கு வந்த நூலாதலின் இந்தப் பெயர் தமிழ்ப் பேரகராதியில் இடம பெறாமை இயல்பே.

காளம் என்றால் கருமை நிறத்தைக் குறிக்கும். கரிய திருமேனியை படைத்தவளாதலின், 'காளி' எனப்பட்டாள். இக்கருத்தில் மாகாளி, சாமளி, நீலி என்னும் பெயர்களை நிகண்டுகள் தந்துள்ளன. இளமைத் துடிப்புள்ளவளாதலின். இவளை இளையாள், குமரி என்று குறிப்பிடுவர். சிவபெருமானைப்போல இவளுக்கும் முக்கண் உண்டு. எனவே, இவள் முக்கண்ணி எனப்படுகிறாள். கையில் சூலமும் தமருகமும் தாங்கியுள்ளாள். சூலம் முத்தலைவடிவான ஆயுதம். சூலத்தையுடைமையால் இவளைச் சூலி என்பர். மூவிலை வேலாள், மூவிலை வேற்குமரி என்பதும் இதனால்தான். தமருகமுடைமை காரணமாகத் தமருகி யாயினாள் இவளை மறைவடிவாயினாள் என்றும் கூறுவர்

காளியைச் சிவன் கழுத்திலிருந்து தோன்றினாள் என்றும் கூறுவர். 'மன்மிடற்றிடைப் பிறந்தாள்' என ஒரு பெயரைத் தமிழுரிச் சொற்பனுவல் தருகிறது. சிவ சத்தியாகிய இவளைச் 'சிவை' என்கின்றனர். வாளும் ஏந்தியிருப்பவளாதலின் பத்திரி, பத்திரை எனப் படுகிறாள். குண்டலி, கங்காளி என்னும் பெயர்களால் இவள் காதில் குண்டலம் பூண்டவள், கையில் கபாலமேந்தியவள் என்பது தெரிய வரும்.

காளிக்கு ஏவல் செய்வார் பேய்களே பேய்களின் கூத்தினை இவள் உவந்து காண்பாள். ஆகவே, இவளைப் 'பேய்க்கூத்துகந்தாள்' என்பர் இவளுடைய கொடியும் பேய்க்கொடியே. இதுபற்றி 'அலகைக் கொடியுயர்த்தாள்' என ஒரு பெயர் கூறுவர். பெம்மான் பேய்களோடு கூட ஈமப்புறங்காட்டில் அண்டமுற நிமிர்ந்தாடுகிறாள் எனத் திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகத்தில் காரைக்காலம்மையார் பாடியுள்ளார். அதில் ஒருபாட்டில் தம் தலைவி காளிதேவியின் பெயரை ஒருபேய் தம் பிள்ளைக்குச் சூட்டி முலைகொடுத்துப் புறங்காட்டில் தூங்கவைக்கின்ற காட்சியைக் காரைக்காலம்மையார் எடுத்துக்காட்டுகின்றார்.

' விழுது நிணத்தை விழுங்கியிட்டு
வெண்தலை மாலை விரவப் பூட்டி
கழுதுதன் பிள்ளையைக் காளி யென்று
பேரிட்டுச் சீருடைத் தாவளர்த்துப்
புழுதி துடைத்து முலைகொடுத்துப்
போயின தாயை வரவுகாணாது
அழுதுறங் கும்புறங் காட்டி லாடும்
அப்பனிடந்திரு ஆலங்காடே" (5)

என்பது ஆலங்காட்டுப் புறங்காட்டில் அப்பனாடுகின்ற காட்சியாம். இங்கே பேய்த்தலைவி தன் பிள்ளைக்குக் காளி பேரை இட்டு வளர்த்த செய்தி காளி தேவியின் தலைமையை எடுத்துக்காட்டும்.

காளி வீரப்பெருமிதமுடையவள்; கோரமான அச்சம் விளைக்கும் வடிவுடையாள். இதனால் இவளை 'மாகோரி' என்பர். இவளுடைய வீரத்தன்மை கருதி இவளை வீரி, வல்லணங்கு, வல்லாள், வலவை, சூரி என்றெல்லாம் பெயர் சூட்டியுள்ளனர்.

காளியின் வாகனம் சிங்கம், வேதாளத்தையும் வாகனமாக இவள் கொள்வதுண்டு இவ்வாகனங்களில் ஏறிவரும் காரணத்தால் அரியூர்தி,

ஆளியூர்தி, சிங்கவாகினி, மடங்கலூர்தி, யாளிஊர்தி, வேதாளி என்றெல்லாம் நிகண்டுகள் போற்றுகின்றன

அசுரப்பகைகளை வென்றொழித்தவள் போரணங்கு எனறும் இவளுக்கு ஒரு பெயருண்டு தாருகன் எனனும அசுரனைச் சினந்து அழித்து வெற்றிகொணடாள் இதனைக் குறிப்பிடும் வகையில் தாருக விநாசினி, தாருகற்காய்ந்தவள் தாருகற்காய்ந்தாள், தாரகற்காய்ந்தாள், தாரகற்செற்றதையல், தாரகாரி என்றெல்லாம் நிகண்டுகள் இவளுக்குப் பெயர்களைத் தந்துள்ளன

சிவனோடு கூத்தாட வல்லவள் காளி. ஆனதுபற்றி 'அரனோடாடி' என ஒருபெயரைப் பொதிகை நிகண்டு தருகிறது. தமிழ்ப் பேரகராதியின்' ஆக்கத்திற்குப்பின் பதிப்பிடப்பெற்ற இந்த நிகண்டுச் சொல் அந்த அகராதியில் இடம் பெறாமை குற்றமன்று. ஆனால் முன்பு விடுபட்ட சொற்களுக்காக வெளிவந்துள்ள அனுபந்தத்தொகுதியிலும் இது இல்லை. இதனை நோக்குமபோது தமிழ்ப்பேரகராதியில் இடம் பெறவேண்டிய நிகண்டுச் சொற்பொருள்கள் பலவாதல் கூடுமெ என்றே கருத இடமாகிறது

'அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடமேறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்
அறுவர்க் கிளைய நங்கை ; இறைவனை
ஆடல்கொண் டருளிய அணங்கு, சூருடைக்
கானக முகந்த காளி தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்' (சிலப், 20, 34-40)

கண்ணகி தலைவிரிகோலமாக ஒற்றைச் சிலம்பேந்திய கையளாய் மிகுசினங் கொண்டவளாய்ப் பாண்டியனின் அரண்மனை வாயிலில் வந்த அவளைக் கண்ட வாயிற்காவலன் மன்னனுக்கு அவள் வருகையை அறிவிக்கும் போது மேற்கண்டவாறு கூறுகிறான் வாயிற்காவலன் பேச்சில் முதலில் கொற்றவையல்லள் என்று மயிடாசுரனது தலைமீது நின்ற தையலாகிய துர்க்கையைக் கூறி அவளல்லள் என்று சொல்லி, அடுத்துக் காளியல்லள் என்று பேசுகிறான். எனவே காளியும் துர்க்கையும் வெவ்வேறான மூர்த்த வடிவங்கள் என்பது இதனால் நன்கு விளங்கும்.

யோகினி என்பது காளிக்குப் பெயர். இதனால் இவள் யோக நிலையிலும் இருப்பவள் என்று குறிப்பிட்டவாறாம். இப்பெயரை திவாகரம் முதலிய நிகண்டுகள் தருகின்றன. 'யோகி' என்னும் ஒரு பெயர் பொதிகை நிகண்டில் காணப்படுகிறது. ஆகவே, இங்கு வரும் யோகினி காளியின் யோகநிலை மூர்த்தம் என்னலாம். 'இத்திறம் யோகினி இசைத்து' எனக் கந்தபுராணத்தில் (கந்தபு. அக்கினிமுகா. 132) காளி குறிப்பிடப்படுகிறாள்.

பின்னர்க் காளியின் ஏவல் செய் மகளிராகவும் யோகினியார் குறிக்கப்படுகின்றனர். இது ஒருவகை இனத்தவரைச் சுட்டியமைந்த பெயராகும் என்பதும் கருதற்பாலது. 'வீர யோகினி வெள்ளமோடு' என வரும் பிரபுலிங்கலீலைத் தொடர் (பிரபுலிங்க : கைலாச. 42) இதனை வலியுறுத்தும். காளிக்கு ஏவல் செய் மகளிர் என்று தமிழகராதி பொருளுரைத்தலும் கண்டு நோக்கத்தகும்.

இடாகினிக்குச் சண்பனி, சன்மினி, சாகினி சூர், சூர்மகள், மாயவள், வஞ்சனி, வலவை முதலிய பெயர்களை நிகண்டுகள் தருகின்றன. இவ்வாறே யோகினியைக் காளியேவல் செய்மகள் எனறே சூடாமணியும் ஆசிரிய நிகண்டும் கூறுகிறது. இவளுடைய ஊர்தி நரி என்பதாம் என்றும், இவளுக்குப் பேய்க்கொடி உண்டென்றும் பிங்கல நிகண்டு மட்டும் குறிப்பிடுகிறது. இடாகினிக்குரிய பெயர்களாகிய சண்பனி, சன்மி, சூர், சூர்மகள், வஞ்சப்பெண், வஞ்சனி என்னும் பெயர்களை நிகண்டுகள் இவளுக்கும் கூறுகின்றன. எனவே ஏவல் செய் மகளிராகிய இவ்விருவகையோரும் தோற்றம், தன்மை, செயல்களில் பெரிதும் ஒத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. கலிங்கத்துப்பரணியில் கோயில்பாடிய பகுதியில் காளியின் பரிவாரமான சாதகர், யோகினியர். பேய், கொள்ளிவாய் பேய்களின் நிலைமைகளை வருணித்துள்ளமையும் காணத்தகும்.

காளியின் தெய்விகப் பண்புநலன்களைப் போற்றியுரைக்கும் வகையில் அமைந்துள்ள பெயர்களும் பலவாகும். அவை வருமாறு :

அகோரி	குண்டலினி
ஆரணி	சண்டி
ஆரியை	சண்டிகை
ஐயை	சாமுண்டி
கவுமாரி, கௌமாரி	தேவி
கவுரி, கௌரி	பஞ்சமி

பதுமை
மதுபதி
மாதரி
மாதிரு
மாயை
மாரி
மாலினி
யாமளை
யோகினி

கலிங்கத்துப்பரணி, தக்கயாகப்பரணி, போன்ற பரணி நூல்கள் காளிதேவியின் மகிமை, அவள் வீற்றிருக்கும் திருக்கோயில், திரு-வுருவக்காட்சி, அவளுக்கு ஏவல் செய்யும் கூளிப்பேய்களின் நிலை முதலியன எல்லாம் பலபடியாக வருணிக்கப்படுதல் காணலாம். காளி தேவியைப் பற்றிய குறிப்புத் திருமுறைகளிலும் ஆங்காங்கே வருகிறது.

'ஏழில்பெறும் இமயத் தியல்புடை அம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்
கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு
அருளிய திருமுகத்து அழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கைலை உயர்கிழ வோனே!

என்று மாணிக்கவாசகர் கீர்த்தித் திருவகவலை முடிக்கும் போது புலியூராம் சிதம்பரத்திலே பொன்னம்பலத்தில் நடனம் புரியும் பெருமான் உமைக்கும் காளிக்கும் அருள் செய்த அவனது அழகுறு சிறு நகையைப் போற்றியுரைத்தல் காணலாம்.

துர்க்கை

பகவதி என்னும் பெயராலும் துர்க்கையைக் குறிப்பிடுவர். இவள் பாலை நிலத்தின்கண் விளங்கும் கொற்றவையாவாள். கொற்றவை என்றால் வெற்றி தரும் அன்னை என்பதாம். 'பாலைக் கிழத்தி' என்றே இவளைத் திவாகரம் முதலிய பல நிகண்டுகளும் சுட்டுகின்றன கொற்றவையும் காளியைப போலவே வீரப் பெருந்தெய்வமாவாள். தொல்காப்பியர்,

மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே ' (தொல். புறத். 4)

என்னும் நூற்பாவில கொற்றவையின் வெற்றிதரு நிலையை நமக்கு

எடுத்துக் காட்டியுள்ளார் இக்கொற்றவை நிலைக்கு எடுத்துக்காட்டாக இளம்பூரணர்,

' ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி வலிபடைக் கொற்றவை — மீளி
அரண்முருங்க ஆகோள் கருதின் அடையார்
முரண்முருங்கத் தான்முந் துறும் '

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாடலைத் தந்துள்ளார். இதில் வீரர்க்கு முந்தி நின்று கொற்றவை அவருக்கு வெற்றி படைத்தல் குறிப்பிடப் பட்டுள்ளமை காணலாம்.

காளியைப் போல இவளுக்கும சிங்க ஊர்தி உண்டு. எனவே, அரியேறி, கேசரியூர்தி என்னும் பெயர்கள் தரபபடுகின்றன. எனினும் இவளுக்குச் சிறப்பாகவுள்ள ஊர்தி கலைமான் ஊர்தியாகும் கலை யாணத்தி, கலையூர் சுந்தரி, கலையூர்தி என நிகண்டுகள் துர்க்கையைப் போற்றுகின்றன.

தாருகனைக் காளி வென்றது போலத் துர்க்கை கொன்றொழித்தது மகிடாசுரனையாகும். மயிடற் காய்ந்தாள், மகிடற் காய்ந்தாள், மகுட சங்காரி, மயிடற்பகை, மயிடனைக் காய்ந்தாள், மயிடாரி, மேதிப் பகைஞனைக் காதிய தலைவி என்றெல்லாம் நிகண்டுகள் சுட்டுகின் கின்றன இந்த மகிடாசுரனின் தலையின்மேல் அவள் நின்றருளுகின்றாள். எனவே இவளை, மேதித்தலைமிசை நின்றவள், மேதித்தலைமிசை நின்றாள், மேதித் தலையவள் என்றெல்லாம் நிகண்டுகள் துர்க்கையின் புகழ் பாடிப் போற்றும். இவ்வாறாகத் துர்க்கை எருமைத் தலை மேலும், கலையின் மேலும், சிங்கத்தின் மேலும் காட்சி தருகின்றாள். சிலப்பதிகாரத்தில் வரும் வேட்டுவரிக்காதை முற்றும் துர்க்கையின் சிறப்புகளை எடுத்துரைப்பதேயாம். இவ் வேட்டுவ வரியில் முன்னிலைப் பரவலாக வரும் பாடல்கள் துர்க்கை நிற்கும் திருக்கோலத்தை தம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றன.

' ஆனைத்தோல் போர்த்துப் புலியி னுரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்—
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யே நிற்பாய்!

'வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்—
அரியரன் பூமேலோன் அகமலர்மேல் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யே நிற்பாய் !
'சங்கமுஞ் சக்கரமுந் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்—
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறையேத்த வே நிற்பாய் ! (சிலப். வேட்டுவ 8-10)

கானத்தெருமை கருந்தலைமேல் நின்றாய் எனத்துர்க்கைக்கே சிறப்பாக உள்ள நிலையையும் கலைமான் ஊர்ந்து வரும் காட்சியையும் கூறி, 'அரிமான் சினவிடைமேல் நின்றாய்' எனச் சிங்கவேற்றின் மேலும் காளியைப் போல அவள் வருவதனை இறுதியாக வைத்து இளங்கோவடிகள் பாடியிருக்கும் அழகு கண்டு மகிழத்தகும்.

'ஆனைத்தோல் போர்த்துப் புலியினுரியுடுத்து' என்பதால் சிவபெருமானுக்குரிய இத்தோற்றம் துர்க்கைக்கும் ஏற்றிக் கூறப்படுதல் பெறப்படும். இவளுக்கும் 'எண்தோளி', 'எண்டோளழகி' என்னும் பெயர்களை நிகண்டுகள் சுட்டும் துர்க்கை நெடிய திருமேனி படைத்தவள். ஆதலால், 'நெடிய காத்திரி' என ஆசிரிய நிகண்டும், 'நெடுங்காத்திரி' எனப் பொதிகை நிகண்டும் கூறுகிறது. இவளை நெடுமாலின் தங்கை என்பதால் இவளும் அத்திருமாலைப் போலவே நீண்டு உயர்ந்த திருவுருப் பெற்றிருப்பது பொருத்தமே. மாலினுக்கிளைய நங்கை, மாலுக்கிளைய மாது மாலுக்கிளையவள் என நிகண்டுகள் அறிவிக்கின்றன

திருமாலைப் போலவே சங்குச் சக்கரங்களை இவள் ஏந்தி நிற்பாள் 'சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்தி' எனச் சிலப்பதிகாரம் சுட்டியதனை முன்னரே கண்டோம சக்கராயுதி, சக்கரபாணி என்னும் பெயர்களும் இவளுக்குக் கூறப்பட்டுள்ளன. வாளையும் இவள் கையில் ஏந்தியிருப்பாள் எனவே, வாள்கைக் கொண்டாள் வாட்கையாள், வாட்படையாள் என்னும் பெயர்கள் உளவாயின சூலி' என்னும் ஒன் பெயர் இவளுக்கு உள்ளமையால் சூலமும் ஏந்தியிருப்பாள் என்பது தெரியவரும.

துர்க்கையும் காளியைப் போன்று கருநிறமேனியளே. எனவே இவளைத் திவாகரம் முதலிய நிகண்டுகள் 'நீலி' என்று குறிப்பிடு

கிறது. இவள் இளையளாய், அழகிய தோற்றமுடையளாய்க் காட்சி தருகின்றாள். இளையோள், கன்னி, குமரி, சுந்தரி என்னும் பெயர்கள் இவளுடைய அழகிய இளந்தோற்றத்தைக் கண்முன் நிறுத்துகின்றன.

போர்களில் வீரர்களுக்கு வெற்றி நல்கும் கொற்றவை சயமகள், சயை வெற்றியவள் என்னும் பெயர்களைப் பெறுகின்றாள். செயமகள், செயை என்றும் சில நிகண்டுகள் கூறும் இவளுடைய வீரநிலை குறித்து அமைந்த பெயர்களும் பலவாக உள்ளன. அமரி இகலாட்டி, சமர வல்லவை, விறலி, வீரச் செல்வி என்னும் பெயர்கள் கருதற்பாலன.

துர்க்கையின் தெய்விகப் பெருநலம் பற்றியமைந்த பெயர்களும் பலவாகும். அவையாவன :

அந்தரி
அம்பணத்தி
அபிராமி
ஆரியை
ஐயை
ஓலப்பணிலத்தி
கவுரி — கௌரி
காத்தியாயனி
கார்த்திகை
சண்டிகை
நாரணி
நாராயணி
பகவதி
விமலை

காளிதேவியும் துர்க்கையும் வீரத்திருமகளிராயினும் காளிதேவி ஊர்க்காவல் தெய்வமாகப் போற்றப்படுகிறாள். திருவொற்றியூர், திருவெண்காடு போன்ற சில தலங்களில்தான் சிவன் திருக்கோயிலுள்ளாக 'காளிக்குத் தனிச் சந்நிதி உண்டு. ஊருக்கு வடபுறத்தில் வடக்கு நோக்கி வீற்றிருப்பாள் காளி. பெரும்பாலும் எல்லாச் சிவன் திருக்கோயில்களிலும் உள்வெளிப் பிராகாரத்தில துர்க்கைக்குத் தனிச் சந்நிதியிருக்கக் காணலாம். துர்க்கையும் வடதிசை நோக்கி நின்றவண்ணம் காட்சி தருகிறாள். சிவபெருமானின் வீரசக்திகளாகிய இவ்விருவர் பெயரையும் நாமதீப நிகண்டு மட்டும் பார்ப்பதி பெயருடன் இணைத்துத் தந்துள்ளது

காளிக்கும் துர்க்கைக்கும் நிகண்டுகள் தருகின்ற பெர்களுள் பல இருவருக்கும் பொதுவாக அமைந்துள்ளமையும் காணலாம்.

அரியேறி
ஆரியை
இகலாள் — இகலாட்டி
இளையோள்

எண்டோளி
ஐயை
கவுரி
குமரி
சண்டிகை
சூரி
சூலி
நீலி

பெருமிதமுடையாள்—
பெருமிதச்செல்வி
போரணங்கு-பொருபடைமுன்னவள்
மூவிலை வேலாள்—
முத்தலைப்படையாள்
வலவை
வீரி—வீரச்செல்வி

இவற்றால் காளியும் துர்க்கையும் வீரப்பெருஞ் சக்திகளாயும் பல வகையிலும் ஒப்புடையராயும் விளங்குதல் பெறப்படும்.

சிலப்பதிகாரத்திலே வேட்டுவ வரியில் துர்க்கையின் உருவையும் செயல்களையும் படம்பிடித்துக் காட்டியதுபோல இளங்கோவடிகள் சித்திரித்துள்ளனர். அத்தெய்விகக் காட்சி வருமாறு.

'மதியின் வெண்டோடு சூடுஞ் சென்னி
நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி தவளவா ணகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்
தரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளையெயிற் றுரகக் கச்சுடை முலைச்சி
வளையுடைக் கையிற் சூல மேந்தி
கரியி னுரிவை போர்த்தணங் காகிய
வரியி னுரிவை மேகலை யாட்டி
சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை
இரண்டுவே றுருவின் திரண்டதோ ளவுணன்
தலைமிசை நின்ற தையல் பலர் தொழும்
அமரி குமரி கவுரி சமரி
சூலி நீலி மாலவற் கிளங்கிளை
ஐயை செய்யவள் வெய்யவாட் டடக்கைப்
பாய்கலைப் பாவை பைந்தொடிப் பாவை
ஆய்கலைப் பாவை அருங்கலப் பாவை
தமர்தொழ வந்த குமரிக் கோலத்து
அமரிளங் குமரியும் அருளினள்'. (சிலப். வேட்டுவ 54-73)

கொற்றவையாம் துர்க்கையின் திருக்கோல வருணனையில் வரும் பெயர்களும் செய்திகளும் நிகண்டுப் பெயர்களிலும் இடம்பெற்றிருத்தல் காணலாம்.

தமிழ்ப் பேரகராதியில் துர்க்கைக்கு நிகண்டுகள் சுட்டிய பல பெயர்கள் இடம்பெறவில்லை என்பதும் சிந்தித்தற்குரியதொன்றாம். அப்-பெயர்கள் வருமாறு :

ஓலப் பணிலத்தி	மகுடசங்காரி
கங்கை	மயிடாரி
கபாலி	மாலுக்கிளையவள்
கருநிறமேனியள்	மாலுக்கிளையமாது
காமி	முத்தலைப்படையாள்
கார்த்தியை	முரணுடையாட்டி
சயத்தி	மேதித்தலைமிசை நின்றவள்
சவுரி	மேதித் தலையள்
செயமகள்	மேதிப்பகைஞனைக் காதிய தலைவி
செயை	யாமினி
சௌரி	யாழிக்கையள்
நாமினி	வலவை
நெடியகாத்திரி	வாட்கையாள்
நெடுங்காத்திரி	வாட்படையாள்
பண்ணம்பணத்தி	விறலி
பணிலத்தி	வெல்லுதற்கரியாள்
பெருமிதச் செல்வி	வெற்றியள்
பொருபடை முன்னவள்	

இப்பெயர்கள் எல்லாம் பொதிகை நிகண்டு, ஆசிரிய நிகண்டு, பாரதிதீபம், தமிழுரிச் சொற்பனுவல் நூல்களுள் காணப்பட்டுள்ளவை. இவையெல்லாம் தமிழ்ப் பேரகராதி உருவானபின் வெளிவந்த நிகண்டுகள். எனவே, இவற்றைத் தமிழ்ப் பேரகராதி தொகுத்தவர் விடுத்தனர் என்று சொல்வது முறையன்று. இங்கே இத்தொகுப்பினை எடுத்துக் காட்டியதன் நோக்கம் பின்வந்த நிகண்டுச் சொற்களும் பொருள்களும் தமிழ்ப் பேரகராதியில் இடம்பெற வேண்டுவனவாயுள்ளன என்பதனைச் சுட்டிக்காட்டுதற்கேயாம்

திருமகள்

செல்வங்களைத் தரும் சீருடையாள் திருமகள். இலக்குமி என இவளைக் குறிப்பது பெருவழக்கு. தேவரும் அசுரரும் இணைந்து பாற்கடலைக் கடைந்தபோது அமுதத்தோடு பிறந்தவள் இவள் பிறந்த இடமோ இனிய இடம்; இவளுடன் பிறந்த பொருளோ அரிய பொருள். கடற்பிறந்தாள், கடற்பிறந்த கோதை எனப் பிங்கல சூடாமணி நிகண்டுகள் கூறும். பிற நிகண்டுகளோ திருமகள் அமுதத்துடன் பாற்கடலில் பிறந்தாள் என்று போற்றுகின்றன. பாற்கடற் பிறந்தாள் பாற்கடற்பிறந்த பாவை, பயவுததிமகள், பானிறவாரி யமுதத்துள் வந்தவள் என்றெல்லாம் இப்பெருமகளின் தோற்றம் பற்றிப் பெயர் பெறுகிறாள்.

இவள் 'இளையாள்' எனனும் பெயருக்கும் உரியவளாகிறாள். மூதேவிக்குப் பின்வந்தவளாதலின் இப்பெயர் இவளுக்கு ஏற்பட்டது. அழகிய செந்நிறத் திருமேனி படைத்தவள்; கண்டார் உள்ளம் கவரும் பேரழகியாவாள் எனவே இவளை அணிமெய்யாள், அழகி, இரமை, செய்யவள், செய்யாள், மா என்று நிகண்டுகள் குறிப்பிடுகின்றன.

செய்ய மேனியளாகிய இவள் செந்தாமரை மலரில் சேர்ந்திருக்கும் இயல்பினள். இவள் சார்ந்திருக்கும் தாமரை மலரின் சார்பு கருதி நிகண்டுகள் தந்துள்ள பெயர்கள் பல அலர்மகள், கமலை, கோகனகை, சலசை, தாமரையாள், பதுமை பூநலனுற்றவள், பூமகள் பூமான், பூமின் பூவின், கிழத்தி, மலர்மகள், மலராள் என்றெல்லாம் திருமகள் போற்றப்படுகிறாள். இவள் திருமாலின் தேவியாவாள். ஆதலால் அரிதேவி, அரிப்பிரியை திருமால் மனைவி, மாலபாரி என்னும் பெயர்களுக்கு உரியவளாகிறாள். திருமாலின் திருமேனியில அவனுடைய மார்பிலே வீற்றிருக்கும் பெருமையுடையாள் மாறிருமார்பினள், பைந்துழாயோன் மேனியில் வாழும் விபுதபுராதனி என்று பேசப்படு கிறாள், மறைத்தலைவி எனறும் இவள் குறிக்கப்படுகிறாள்.

மன்மதனைத் தந்தவளாதலின் மதன்றாய் என்றும், மலரம்பன்றாய் என்றும் சிறப்பித்து ஓதுவர் பெண் தெய்வங்களுக்குப் பொதுவாக வழங்கும் அணங்கு, தாக்கணங்கு என்னும் பெயர்களும் இவளுக்குள்ளன. இந்திரை, பொறி, விந்தை, விந்தைமகள் விமலை, என்றும் சிறப்பிக்கப்படுகின்றாள்.

செல்வத்துக்குரிய தெய்வமான இவளைச் செலவி, திரு, திருமகள், சீதேவி, பொருட்செலவி, பொருள்மகள், பொருளின்செல்வி, பொன், பொன்னி எனவெல்லாம் நிகண்டுகள் விவரிப்பது பொருத்தமாம். இவள் அருளும் செல்வத்தால் ஆக்கம் பலவும் வரும். அதனால் இன்பத்தைத் தருபவளுமாகிறாள். இதனை ஆக்கம், இன்பமான நல்கும் அயிராமி என்னும் பெயர்கள் விளக்கும் 'ஆறிடு மேடும் மடுவும் போல் ஆம் செல்வம்' என்பர். இதுகுறித்து 'நிலையில்லாள்' என ஒரு பெயரைத் தமிழுரிச்சொற்பனுவல் திருமகளுக்குத் தருகிறது.

> ' கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
> போக்கும் அதுவிளிந் தற்று ' (குறள். 332)

எனத் திருவள்ளுவர் நிலையாமை அதிகாரத்தில் உரைக்கும் கருத்து உள்ளத்தே பதியும் பான்மையது. கூத்தாடும் நாடக அரங்கில் கூட்டம் கூடுகிறது. அதுபோலவே நல்லூழால் செல்வம் வந்து திடீரெனச் சேருகிறது. நாடகம் முடிந்ததும் கூட்டம் கலைந்து போவது போலச் செல்வமும் போங்காலம் வரும்போது மாயமாய் மறைந்து விடுகிறது என்று மக்களின் வாழ்க்கை நிகழ்ச்சியுடன் வள்ளுவர் இயைத்து விளக்கம் தருகிறார்.

விருந்தோம்பும் கடமை தவறாதவன் இல்லத்தில் திருமகள் மன மகிழ்வுடன் வீற்றிருப்பாள் என வள்ளுவர் ஒரு குறளில் குறிப்பிட்-டுள்ளார்

> ' அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
> நல்விருந் தோம்புவான் இல் ' (குறள் 84)

என்பது வள்ளுவர் வாக்கு. இங்கே திருமகளைச் 'செய்யாள்' என அவர் குறித்துள்ளார். மேலும், செய்யவள் (குறள். 167) திரு (குறள் 179) என்றும் திருவள்ளுவர் திருமகளைச் சுட்டியுள்ளார்.

> ' திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
> திசை தெய்வ மான பலவும்
> அருநெதி நல்லநல்ல அவை நல்ல நல்ல
> அடியாரவர்க்கு மிகவே ' (தேவா. 2:85:3)

எனத் திருஞான சம்பந்தர் கோளறு திருப்பதிகத்தில் செல்வம் வெற்றி முதலியன எல்லாம் அடியவர்க்கு நன்மையாகவே அமையும் எனக்

குறிப்பிட்டுள்ள இடத்தில் திருமகளை முதலில் வைத்துப் போற்றுவது இவளுடைய முதன்மையைக் கருதியதேயாகும்.

கலைமகள்

கல்வி, கலைகளுக்கு எல்லாம் முதல்வியாகிய அறிவுத்தெய்வம் கலைமகள். சரசுவதி என உலகவழக்கில் இத்தெய்வத்தை இன்று குறிபபிடுவது பெருவழக்கு. இந்தப் பெயரைச் 'சரசோதி' என பின்னாள் நிகண்டாகிய நாமதீபம் மட்டுமே குறிப்பிடுகிறது. திவாகரம் முதலிய பழைய நிகண்டுகள் 'கலைமகள்' என்றே போற்றுகின்றன எனவே 'கலைமகள்' என்பது பழமையான பெயர் என்பது தெரியவரும்

கலை, அறிவு சார்பாக இவளைக் கலைச்சி, கலைச்செல்வி, கலைமான், புலமாமகள், அறிவாட்டி. அறிவினுக்கிறைவி, அறிவு வடிவினள், கண்ணாள் என நிகண்டுகள் போற்றியுரைக்கின்றன. ஞானமூர்த்தி ஞானி எனவும் குறிப்பிடுகின்றனர். புலவர்களுக்குத் துணைநின்று நல்ல வாக்குதவும் தெய்வமாவாள் இவள் ஆகவே, புலவர் துணைவி, சொல்லின் கிழத்தி, சொற்பயில் முதல்வி, சொற்பொருளின் மங்கை, மாண்மொழிமங்கை, மொழிமங்கை, வாக்காள், வாக்கி, வாக்கின் செல்வி என்றெல்லாம் நிகண்டுகள் புகழ்ப்பெயர் சூட்டுகின்றன.

சொல்லுக்கு அடியான ஓசையை எழுப்புபவளும் இவளே. இதனால் இசைமகள் இசைமடந்தை. இசைமான், எனப்போற்றியுள்ளனர். அறிவு கருவியாய்ப் படைக்கப்படுகின்ற நூல்கள் எல்லாம் இவள் அருளால் வருவனவே. அதனால் நூன்மடந்தை, பனுவலாட்டி, பனுவலாள் எனப்படுகின்றாள். 'தமிழ் மடந்தை' எனப் பாரதிதீபம் இவளைத் தமிழ்த் தெய்வமாகவே போற்றியுள்ளது. பாமகள், பாமடந்தை எனப் பாவினைத் தரும் செல்வியாகவும் பழைய நிகண்டுகள் குறிப்பிடுகின்றன.

கலைமகளின் திருவுருவம் முழுமையும் வெண்மை மயந்தான்.

'வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் — வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.'

என்று காளமேகப்புலவர் கலைமகளின் திருவுருவைப் போற்றுகிறார். வெள்ளை நிறத்தினள், வெள்ளைமெய்யாள், வெள்ளைமேனியள், வெள்ளைமேனியாள், வெள்ளையுருவாள் என்று நிகண்டுகள் சுட்டுகின்றன. அவளுடைய கை அறிவு தெரிவிக்கும் கை என்பர், 'அறிவு தெரிக்கும் குறிதரு கையாள்' எனத் தமிழுரிச் சொற்பனுவல் தெரிவிக்கிறது. கலைமடந்தையின் கையில் ஏடு பொருந்தியிருக்கும். அவளும் என்றும் ஓதிக்கொண்டிருக்கும் இயல்பினளாம். எனவே ஏடு கையுடையாள், ஓதி என்னும் பெயர்களைத் தமிழுரிச்சொற் பனுவலும் தந்துள்ளது. வெண்மை தூய்மையைச் சுட்டுவது. எனவே, இவளைத் துய்யாள், தூயமேனியள் என்கின்றனர்.

கலைமகள் வெள்ளைத் தாமரைப்பூவில் வீற்றிருப்பவள் இவளுறையும் இருப்பிடத்தைச் சுட்டி நிகண்டுகள் தரும் பெயர்களும் பலவாகும். அவையாவன : தாமரையாசனி, வெண்கமலை, வெண்சலச முற்றாள் வெண்டாமரையாள், வெண்டாமரை மேல்மாது, வெண்-பூமான், வெண்மலர் மேலாள், வெள்ளை நளினவல்லி. பூரமும் இவருடைய வாகனமாம். ஆகவே பூரப்பரியாள், பூரவாகனி, பூரவாகினி என்பர்.

இவள் பிரமதேவனின் மனைவியாவாள். அதனால் அயன்பாரி, அயன்மனைவி. நான்முகன் கிழத்தி, பூமகன் தேவி, மலரோன் கிழத்தி என நிகண்டுகள் பெயரிட்டு போற்றும் பிரமதேவன் நாவில் கலைமகள் வீற்றிருப்பாள் என்றும் சொல்லுவர். இதுபற்றியே நாமகள், நாமான், நாவின்கிழத்தி, நான்முகன் கிழத்தி என்னும் பெயர்கள இவளுக்கு உரியவாயின. பிரமனுடைய சத்தியான இவள் 'பிராமி' என்னப்படுகிறாள்.

'பாகத்தில் ஒருவன் வைத்தான்
பங்கயத் திருத்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான்
அந்தணன் நாவில் வைத்தான்'

என்று கம்பர் மும்மூர்த்திகளும் தத்தம் தேவியரை எங்ஙனம் வைத்துப் பெருமைப்படுத்தியுள்ளனர் என்று தெரிவித்துள்ளார். இங்கே அந்தணன் என்றது பிரமனை. பிரமன் கலைமகளை நாவில் கொண்டுள்ளான் என்று கம்பரும் இங்குக் குறிப்பிட்டுள்ளமை காணலாம்.

மக்களின் அறிவுத்துணையாய் உயிர்களுக்கு நலம்புரியும் இக் கலைமகளின் பல்வேறு சிறப்புகளைத் தெரிவிக்கும் வகையில் நிகண்டுகள் தரும் பெயர்களும் பலவாம். இவற்றுள் உயிர்த்துணைவி, உலகமாதா, காயத்திரி, கீர்வாணி, வேதமுதல்வி, சாவித்திரி, தாய், பரமாது, பாரதி, புராதனி வாணி, விமலை என்பன சிறப்பாகக் கருதத்தக்கன

'இமையவர்கள் மோலி இணைமலர்த்தாள் சூடச்
சமயந் தொறுநின்ற தையல் — சிமைய
மலைமடந்தை வாச மலர்மடந்தை என்னென்
கலைமடந்தை நாவலோர் கண்'

என ஒருபழம்பாடல் இக்கலைமகள் எல்லாச் சமயத் தவரும் போற்றும் பெருந்தெய்வமெனக் கூறுகிறது.

மதுரையில் கலைமகள் கோயில் முன்னாளில் சிறப்புடன் திகழ்ந்ததை மணிமேகலைக் காவியம் நமக்குத் தெரிவிக்கிறது. ஆபுத்திரன் இத்தேவியின் கோயில் முற்றத்தில் வந்து தங்கினான் என்று சொல்லவந்த இடத்து,

'மிக்க செல்வத்து விளங்கியோர் வாழும்
தக்கண மதுரை தான்சென் றெய்தி
சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்து
அந்தில் முன்றில் அம்பலப் பீடிகைத்
தங்கினன்... ... ... (மணி. 13 : 105-108)

என்கிறார். இதனால் கலைமகள் விளங்கிய திருக்கோயில், 'கலை நியமம்' என வழங்கியது என்பதும், கலைமகள் 'சிந்தா விளக்கு' எனப் போற்றப்பட்டாள் என்பதும் தெரியவரும் 'சிந்தா விளக்கு' என்றால் யாவருக்கும் சிந்தையில் தோன்றிச் சொற்பொருள் உணர்த்துபவள் என்பது பொருள் மேலும் இக்காவியத்தில், 'நாமிசைப்பாவாய்' (25 ; 139), 'செழுங்கலைப்பாவாய்' (25 ; 139), உணர்விற்றோன்றி உரைப் பொருளுணர்த்தும் மணிதிகழ் அவிரொளி மடந்தை' (25 : 148-149) என்றும் கலைமகளைச் சாத்தனார் போற்றியுள்ளார்.

இக்கலைமகள் ஆபுத்திரனுக்கு அமுதசுரபியை அளித்தவளாவள். செழுங்கலை நியமத்துள்ள சிந்தாதேவி ஆபுத்திரனை நோக்கி,

'கேளிது மாதோ கெடுகநின் தீயென
யாவரும் ஏத்தும் இருங்கலை நியமத்துத்

தேவி சிந்தா விளக்குத் தோன்றி
ஏடா அழியல் எழுந்திது கொள்ளாய்
நாடுவறங் கூரினும் ஓடுவறங் கூராது
வாங்குநர் கையகம் வருந்துத லல்லது
தான்தொலை வில்லாத் தகைமையது என்றே
தன்கைப் பாத்திரம் அவன்கைக் கொடுத்தலும் (மணி 14 : 9-16)

அந்த அமுத சுரபியை ஆபுத்திரன் ஏற்றான்; அத்தேவியைப் புகழ்ந்து,

'சிந்தாதேவி! செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்!
வானோர் தலைவி! மண்ணோர் முதல்வி!
ஏனோர் உற்ற இடர்களைவாய்! (மணி. 14 : 17-20)

என்று அவன் போற்றினான். இப்பெருங்காவியம் போற்றிய கலைமகள் பெயரான 'சிந்தா விளக்கு' என்னும் பெயர் நிகண்டுகள் எதிலும் இடம்பெறவில்லை என்பது சிந்தனைக்குரியதாகும்.

சேட்டை

சேட்டை என்றால் மூத்தவள் என்பது பொருள். மூத்ததேவி என்னும் கருத்தில் மூதேவி என்றும் உரைப்பர். இவள் பாற்கடலிலிருந்து திருமகளுக்கு முன்பாகப் பிறந்தவள். எனவே இவளை இந்திரைக்கு மூத்தாள். திருவின் முன்னர்ச் செழுங்கடற்பிறந்தாள், திருவினுக்கு மூத்தாள், சேட்டை, சேட்டையள், தவ்வை, தௌவை, முதியள். முதியாள், மூதணங்கு என்றெல்லாம் நிகண்டுகள் சுட்டியுரைக்கின்றன,

இவள் ஒற்றையான சடையுடையவள். அதனால் ஏகவேணி, ஒற்றையோதிக் கற்றையாள், ஓர்சடையாள் என்று குறிப்பிடுகின்றனர்.

மூதேவியின் வாகனம் கழுதையாகும். கரவாகி, கரவூர்தி, கழுதையூர்தி, கழுதையூரி, கழுதைவாகனி, கழுதைவாகினி, வாலேயமூர் பெற்றியள் என்னும் பெயர்கள் நிகண்டுகளில் காணப்படுகின்றன. இவள் தாங்கியிருக்கும் கொடி காக்கைக்கொடியாகும். இதனைக் குறிப்பிடும் வகையில கரடக்கொடி மங்கை. காக்கைக்கொடிச்சி, காக்கைக் கொடியாள், காக்கைக்கொடியினாள், காகமுயர்த்தாள் கொடித்துவசி என்னும் பெயர்கள் காணப்படுகின்றன.

மூதேவியை ஊறு விளைவிக்கும் இயல்புடையவள் என்பர். கெடலணங்கு, கேட்டை, கேடி, சீர்கேடி, சிறப்பிலாதாள், சிறப்பிலாள், தூயர் வைத்திடுங் கொண்டலணங்கு, முகடி, வறுமையணங்கு என்றிவ்வாறு காணும் பெயர்கள் எல்லாம் இத்தேவியால் விளையும் சீர்கேட்டையும் தொல்லைகளையும் விளக்கும் தகைமையன.

‘ சீதேவி தான்பிறந்த செய்யதிருப் பாற்கடலுள்
மூதேவி ஏன்பிறந்தாள் முன்’

எனவரும் புலவர் ஒருவரின் தனிப்பாடல் இம்மூதேவியால் விளையும் தீமை கருதிப் பிறந்ததாகும் என்பது கருதற்பாலது ‘தவ்வை’ (167), முகடி (617, 936) என்னும் பெயர்களாலும் மூதேவியைத் திருவளளுவர் சுட்டியுள்ளார்.

‘ அவ்வித் தழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். (குறள். 167)

மடியுளாள் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள். (குறள். 617)

அகடாரார் அல்லல் உழப்பர் சூதென்னும்
முகடியால் மூடப்பட் டார் ’ (குறள். 936)

எனவரும் குறள்களில் திருவள்ளுவர் மூதேவியைத் தவ்வை முகடி எனக் குறிப்பிட்டுள்ளமை காணத்தகும்

திருமாலேயன்றித் தெய்வம் வேறு இல்லை என்று ‘திருமாலை’ப் பாசுரங்களில் வலியுறுத்திக் கூறுமிடத்துத் தொண்டரடிப்பொடி- யாழ்வார், எல்லாம்வல்ல அப்பெருமானை அணுகாது பிற தெய்வம் நாடுதல் பயனின்று என்பதனை எடுத்துக் காட்டுமுகத்தான்,

‘ பேட்டிரே நம்பிமீர்காள்
கெருடவா கனனும்நிற்கச்
சேட்டைதன் மடிய கத்துச்
செல்வம்பார்த் திருக்கின் றீரே’
(திருமாலை - 10)

என்று பேசுகிறார். திருமாலின் தேவியாகிய திருமகளே செல்வத்திற் குரிய தெய்வம் ; செல்வம் செழிக்கச் செய்பவள். கெருடவாகனனாகிய திருமாலை அடுத்தால்தானே சீதேவியின் திருவருளால் செல்வம்பெற இயலும் அதனை விடுத்து மூதேவியின் மடியில் செல்வத்தை

எதிர்பார்த்துப்போதல் எவ்வளவு பேதைமை என்று எடுத்துரைக்கின்ற பகுதியில் சேட்டைபற்றிய குறிப்பைக் காண்கிறோம்.

இந்திராணி

இந்திராணி என்பது இந்திரனின் மனைவி பெயராகும். இவளுக்கு அயிராணி, சசி, சுந்தரி, புலோமசை புலோமிசை என்னும் பெயர்களும் உண்டு. தேவருலகிலுள்ள மரங்களுக்கு இவள் உரியவளாதலின் 'ஐந்தருச் செல்வி' என்று கூறுவர். கற்பகமலரை இவள் அணியும் காரணத்தால், 'கற்பகத்தின் போதுற்ற வல்லி' என்பர். இவளுடைய ஆடல் 'கடையம்' எனப்பெயர் பெறும். இந்திரன்—இந்திராணியர் மைந்தனின் பெயர் சயந்தன் என்பதாம்.

சத்தமாதர்களுள் ஒருத்தியாகவும் இவள் குறிப்பிடப்படுகிறாள். இவளுக்குரிய வாகனம் இந்திரனுக்குரிய யானையே; ஆயுதமும் அவன் ஏந்தும் வச்சிரப் படையே.

தேவர் கணம்

தனித்தனி தெய்வங்களைப் பற்றிய பெயர்களை அடிப்படையாக வைத்து, அவற்றோடு இலக்கியச் செய்திகள் முதலியவற்றையும் இணைத்து ஒப்பிட்டு, இதுவரையில் அருகன் முதலிய தெய்வங்களைப் பார்த்தோம். திவாகரரின் தெய்வப்பெயர் அடைவை அடியொற்றி ஆண் தெய்வங்களும் அடுத்துப் பெண் தெய்வங்களும் பற்றிய விளக்கங்களைக் கண்டோம். இத்தெய்வங்களின் தனித்திருவுரு, பண்புகள், செயல்கள் முதலியன கிட்டிய ஆதாரங்களைக் கொண்டு ஒருவாறு விரித்து எழுதப் பெற்றன.

தனித்தனியாகச் சிறப்பித்துப் பேசப்படும் தெய்வப்பெயர் விளக்கம் பற்றிய முதற்பகுதியை அடுத்துக் கூட்டங்கூட்டமாய் வாழும் பல்வேறு இனங்களாயுள்ள தேவ கணத்தாரைப் பற்றிய பெயர்களை நிகண்டாசிரியன்மார் தருகின்றனர். பொதுவாகத் தேவ இனத்தவர்களைப் பதினெட்டு வகையாகப் பகுத்து ஓதுவர். இக்குழுவினரைப் பதினெண் தேவகணத்தார் என்பர். சத்தமாதாக்கள் பற்றி வரும் செய்திகளும் இதுபோன்று ஒரே குழுவாகக் கருதபபடும் தெய்வங்களே.

பதினெண் கணத்தாருள் தேவர், அசுரர், வித்தியாதரர், பலவேறு உலகவாசிகள், பூதம், பேய், என்பவை பற்றிய பெயர்கள் தரப்பட்டுள்

ளன இக்கூட்டத்தார் பற்றிய பெயர்த் தொகுப்புகளைப் பார்க்கும் போது அவ்வப்பெயர்கள் அமைந்ததற்கான காரணமும் எளிதிற் புலனாகும் வகையில்தான் பெரும்பாலனவும் எளிமையாயுள்ளன. பொதுவாக இத்தெய்வங்களைச் சிறு தெய்வங்கள் என்றும் குறிப்பிடலாம்.

தெய்வப் பெயர் தொடர்பானவை

நிகண்டுநூல் பக்தி இயக்கமும் சமயவெழுச்சிகளும் மிகுந்த காலத்தில்தான் முதன்முதல் தோன்றத் தொடங்கியது. இக்காலத்திற்கு முற்பட்டவை சங்க இலக்கியங்கள். பண்டைய அந்த இலக்கியங்களிலும் பல்வேறு தெய்வங்களைப் பற்றிய குறிப்பு உண்டு. அவற்றை நாம் நன்கு அறிந்து கொண்டால்தான் வரலாற்று முறையில் தெய்வங்களும் அவற்றின் பெயர்களும் வளர்ந்தமையைக் காணுதல் கூடும். எனவே, சங்க இலக்கியங்களில் காணும் தெய்வங்களைப் பற்றிய செய்திகள் அடுத்துவரும் 9-ஆம் அத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ளன.

தேவ கணங்களின் பின் இறைவனின் அட்டமூர்த்தங்கள் கருதப் பட்டுள்ளன. ஐம்பெரும்பூதம், சூரியன், சந்திரன், இயமானன் முதலியனவும் அவை சார்ந்த பொருள்களும் இங்கு இடம் பெறுகின்றன. இறைவனே இவ்வகையான எண்வகை உருவில் காட்சி தருகிறான் எனப் பெரியோர் போற்றுவர். இறைவனின் எண்வகை உருவ நிலை பற்றித் 'தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளிலும் திவ்வியப்பிரபந்தங்களிலும் காணும் குறிப்புகள் பலவாகும். இத்தகைய இறைவனின் எண்வகை உருவ நிலைபற்றிய இலக்கிய விளக்கம் 10 ஆம் அத்தியாயத்தில் அமைந்துள்ளது.

தெய்வப்பெயர்த் தொகுதியின் இறுதியில் ஏறத்தாழ அத்தொகுதியின் மூன்றிலொரு பங்கை எடுத்துக் கொண்டிருப்பது காலவகை பற்றிய செய்திகளாகும். காலம், உலகம் முதலிய சொற்கள் சொல்லளவில் அஃறிணை போற் காணப்படினும் பொருளளவில் அவையெல்லாம் உயர்திணையே எனத் தொல்காப்பியர் ஓரிடத்தில் விளக்கம் தந்துள்ளார்.

> ' தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
> நலியாத வண்ணம் உரைசெய் ஆன சொல்மாலை'

என்று கோளறு பதிகத்தைத் திருஞான சம்பந்தர் குறிப்பிடுகிறார். ஆகவே, நாள்கோள்கள் மனிதர்க்கு நலிவுதரும் ஆற்றல் பெற்றவை

என்பது தெரியவரும். திருக்கோயில்களில் நவக்கிரக் கோயில்கள் காணப்படுவது இந்த நம்பிக்கையால் பின்னாளில் புகுந்த ஒன்றேயாம். முன்னாளில் சூரிய சந்திரர்களுக்கே தனிக் கோயிலிருக்கக் காண்கிறோம். நவகோள்களில் இவர் முதன்மையாய் விளங்குபவராவர்.

நவகோள்கள், பன்னிருராசிகள், 27 நட்சத்திரங்கள், மாத்திரை முதல் ஊழிவரையிலான பல்வேறு வகைக் காலபபாகுபாடுகள் பற்றிய செய்திகளும் விளக்கங்களும் தமிழிலக்கியம், இலக்கணம் முதலிய எல்லாவற்றிலும் விரவிக் காணப்படுகின்றன. இவை பற்றிய நிகண்டுப் பெயர்களுடன் இலக்கிய வழக்குகளையும் ஒப்பிட்டுக் காணும வகையில் தமிழ் நூல்களில் காலவகை விளக்கம் 11-ம் அத்தியாயமாக அமைக்கப்பட்டுள்ளது ஆகவே தெய்வப்பெயர் விளக்கம் தொடர்பாகவே இதன் பின்னருள்ள மூன்று அத்தியாயங்களும் அமைக்கப்பட்டுள்ள என்பதும் கருதற்பாலது

நூலின் இறுதிப்பகுதியாக அமைவது தெய்வப் பெயர்த தொகுப்பு. இததொகுப்பில் நிகண்டுகளில் காணும் தெய்வப் பெயர்கள் அனைத்தும் உள. எனவே, இத்தொகுபபு தெய்வபபெயர் பற்றிய பல்வேறு ஆய்வுகளுக்கும் நிலைக்களமாய் விளங்கும் தனிச்சிறப்புடன் சிறப்புடையதாகும்.

9

சங்க இலக்கியத்தில் காணும் தெய்வங்கள் வழிபாடும் மக்கட் பண்பாடும்

தோற்றுவாய்

சங்க இலக்கியங்களாவன பத்துப்பாட்டும் எட்டுத் தொகையுமே. இவ்விரு பெருந் தொகுதியுள்ளும் அமைந்துள்ள பதினெட்டு நூல்களுள் ஒருசில நூல்களைப் பிற்சங்க நூல்கள் என்று ஆராய்ச்சியாளர் சிலர் கொள்வர். பண்டை உரைகாரர்கள் பாட்டு தொகைகளை ஒரு தொகுப்பாகவே கொண்டு கூறுவர். இம்மரபினை மேற்கொண்டு பாட்டு – தொகை நூல்கள் பதினெட்டும் இவ்வாரய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆனால் சில நூல்களுக்கு அமைந்துள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்களும் வேறு சில நூல்களுக்குப் பிற்சேர்க்கையாகவுள்ள வெண்பாக்களும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. திணை துறைக் குறிப்புகள், பாடல் பாடிய சூழ்நிலை முதலியவற்றை விளக்கும் அடிக் குறிப்புகள் ஆகியவையும் ஆதாரமாகக் கொள்ளப்படவில்லை. பாட்டு – தொகைப் பாடல்கள் மட்டுமே கருவியாகக் கொள்ளப்பட்டன.

துணை நூல்கள்

ஏடு எழுதுவோராலும், படிப்போராலும் எத்தனையோ நூற்றாண்டுகளாக இவ்விலக்கியங்கள் சுவடிகளில் உருமாறி வந்திருந்த போதிலும், அச்சுப் பொறியில் வெளிவந்தபோது இவை ஒரு வகையான நிலைத்த உருவைப் பெற்றுவிட்டன எனலாம். எங்கோ ஒருசில பாடபேதங்களில் ஆராய்ச்சியாளர்களிடையே கருத்து

மாறுபாடு நிகழலாம் அதுவன்றி இன்று நமக்குக் கிடைத்துள்ள அச்சுப்படிகளே ஆதார நூல்களாகின்றன பொருள் விளக்கத்திற்குப் பண்டை உரையாசிரியர்களின் உரைகளும் துணையாக அமைந்தன.

மாலும் முருகனும்

இந்திரன் முதலிய தேவர்களுக்கும் ஏனைய உயிர்த் தொகுதிகளுக்கும் எல்லாம் முதல்வராகப் போற்றப்படும கடவுளர் மால், பலராமன், கண்ணன், முருகன், முக்கண்ணன் முதலியோராவர். தெய்வங்களைக் குறித்த பாடல்களைக் கொண்ட பரிபாடல் தொகுதியில் மாலுக்கு ஆறும் செவ்வேளுக்கு எட்டும் ஆகப் பதினான்கு பாடல்கள் நமக்குக் கிட்டியுள்ளன. பத்துப் பாட்டின் கடவுள் வாழ்த்துப் பாடல் போன்று விளங்கும் முதற் பாட்டாகிய முருகாற்றுப் படையும் முருகன் புகழ் பேசுகிறது. பரிபாடல் தொகுப்பில் மாலைக் குறித்த பாடல்கள் முதலில் அமைகின்றன. அதன் பின்னரே செவ்வேள், வையைபற்றிய பாடல்கள் வைக்கப்பட்டுள்ளன எனவே, பரிபாடல் மாலுக்கு முதன்மைத் தானம் தருவது சிந்தனைக்குரியது.

‘ மாயோன் மேய காடு உறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும் ’ (தொல் பொரு. 5)

எனத் தொல்காப்பியர் கொள்ளும முறைவைப்பும் ஈண்டு ஒப்புநோக்கத் தகும்.

மால் முல்லை நிலத்துப் பொதுவர்களாலும், முருகன் மலைவாழ் குறவர்களாலும் சிறப்பாகப் போற்றப்படுதலைச் சங்கப் பாடல்களில் காணும் பல குறிப்புகளாலும் உணரலாகும் ஆயினும், இத் தெய்வங்கள் எல்லா நிலத்து வாழ் மக்களாலும் போற்றப்படுகின்றனர் மதுரையை அடுத்த பரங்குன்றில் முருகனையும் மாலிருங்குன்றத்தில் மாலையும் காண்கிறோம். திரை அலைக்கும செந்திற் பதியிலும் முருகனைக் காண்கிறோம்.

ஊர் ஊர்கொண்ட சீர்கெழு விழவினும்,
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்,
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும், கவின்பெறு துருத்தியும்,
யாறும் குளனும், வேறுபல் வைப்பும்,

சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்,
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்

முருகன் உறைந்து விளங்குகிறான் என முருகாற்றுப்படை கூறும். ஆல் அமர் செல்வனாகிய முக்கண்ணனும், கடம்பு உறை காளையாகிய முருகனும், மற்றும் பல்வேறு இடங்களில் போற்றப்படும் தெய்வங்களும் மாலே என்று பரிபாடல் குறிப்பிடுகின்றது.

ஆலமும், கடம்பும், நல்யாற்று நடுவும்,
கால்வழக்கு அறுநிலைக் குன்றமும், பிறவும்,
அவ்வவை மேவிய வெவ்வேறு பெயரோய் !

என மாலைப் போற்றுகிறது பரிபாடல்.

திருமால் பெருமை

மால் வேதம் போற்றிப் புகழும் விழுப்பொருள். நாவல் அந்தணர் அருமறைகளில் அவன் பலபடியாகப் போற்றப்படுகிறான். வேத முதல்வன் அவன். வேத வேதாங்களுக்குள்ளே அடங்கிவிடுவதன்று அவன் பெரும் புகழ். நூல்களாலும், உளத்தாலும், உணர்வாலும், மற்று எல்லாவற்றாலும் வனப்பும் எல்லையும் அறியப்படாத எல்லை கடந்த பரமபொருள். அவன் எங்குமாய் எல்லாமாய் நிறைந்துள்ளான். ஐம்பூதங்களும் ஞாயிறு திங்கள் முதலிய கோள்களும், தேவரும், அசுரரும், மூவேழ் உலகின் உயிர்த் தொகுதிகள் அனைத்தும் மாலினிடத்திலிருந்து தோன்றிப் பரந்த பொருள்களே. அவ்வப் பொருள்களின் உள்ளுறு பண்புகளாகவும் அவன் பரந்து ஒளிர்கின்றான். எல்லா உலகு உயிர்களிலும் அவன் பரந்து ஒளிர்கின்றான். எல்லா உலகு உயிர்களின் தோற்றமும், நிலைபேறும், ஒடுக்கமும் ஆக எல்லாமாய் நிற்கும் ஏகபரம்பொருள் மாலே. இவ்வாறாகப் பல்வேறு வகையில் மாலின் பெருமையைப் போற்றிக் கூறுகிறது பரிபாடல்.

திருவுருவக் காட்சி

'மாலின் திருமேனி நீலவண்ணம்; அவன் கண்கள் தாமரையை ஒக்கும் செவ்வண்ணம் அவனது வாய்மை தப்பாது வருகின்ற நாள்; பொறையோ நிலத்தை நிகர்க்கும். அவன் அருள் நீர் நிறை மேகத்தைப் போன்றது' என்றெல்லாம் வேதங்கள் புகழ்கின்றனவாம்,

அவன் நெடியோனாய், நீலநிற வண்ணனாய், மார்பிலே தார் தாங்கித் திருமகளையும் அதில் உடன்கொண்டு, சங்கு சக்கரக் கையனாய்க் காட்சி வரும் திருமேனி வண்ணங்கள் கவிஞர்களால் புகழ்ந்து பேசப்பட்டுள்ளன.

மால் தந்த நான்முகன்

நான்முகனைத் திருமால் தனது உந்தித் தாமரையில் தோற்றுவித்து, அவனைக்கொண்டு படைப்புத் தொழில் நடைபெறச் செய்கிறான். நீருள் அமிழ்ந்துபோன நிலமகளை வராக உருவனவாய்ச் சென்று எடுத்துவந்து, அதில் உயிர்த் தொகுதிகளை உண்டுபண்ண, நான்முகனைப் படைத்தனனாம் மால் அதனால் நான்முகன், 'தொடங்கற்கண் தோன்றிய முதியவன்' (கலி. 2 : 1) என்று போற்றப் படுகிறான். நான்முகனின் படைப்பு விநோதங்கள் அவன் வேதத்தை உலகிற்கு அருளியது முதலிய செய்திகளும் உள.

காமனும் சாமனும்

பிரமனைப் போலவே, காமனும், அவன் தம்பி சாமனும் மாலின் மக்களே காமன் கொண்டுள்ள சுறாக்கொடி அவனுக்கு உரிய ஐந்து மலர்-அம்புகள், அம் மலர்க்கணைகளால் அவன் காதலர்களை வருத்துதல் முதலிய பல செய்திகள் உள. இரதியும் காமனும் இணையாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். இளவேனிற் காலத்தில் இக் காமவேளுக்கு விழா எடுப்பர். காமவேள் விழா ஆடவரும் மகளிரும் ஆனந்தமாகப் பொழுதுபோக்கும் ஓர் இன்ப விழா.

மாலின் ஊர்தி கருடன்

மாலின் ஊர்தியாகவும் கொடியாகவும் அமைந்தது கருடப்புள். இது பல் நிறம் வாய்ந்த விரிந்த சிறகுகளைக் கொண்டது ; இது பாம்பிற்குப் பகையாய் உள்ளது. ஆயிரம் தலையைக் கொண்ட ஆதிசேடனையே தன் வாயில் கௌவிக் கொண்டிருக்கும் ; பாம்புகளையே அணியாகப் பூண்டிருக்கும். இது உண்ணுவதும் அப் பாம்புகளையே

மாலின் படுக்கை ஆதிசேடன்

மாலின் படுக்கையாக உள்ளது ஆதிசேடன் ; இதன் மேல் மால் பள்ளிகொண்டிருக்கும் காட்சியைக் கவினுறக் கவிஞர்கள் பாடியுள்ளனர்

(பெரும் 371—373). ஆயிரம் தலையையுடைய இந்தப் பூமுடி நாகருக்கு இருந்தையூரில் அமைந்திருந்த திருக்கோயிலைப் பரிபாடல் சுட்டியுள்ளது. பரிபாடல் திரட்டின் முதற்பாடல் முற்றும் இப் பூமுடி நாகரைப்பற்றியதே. மகளிரும் மைந்தரும் பூமுடி நாகருக்கு வழிபாடு செய்த வகைமையையும் அப் பாடலில் காணலாம்.

அவதார சரிதங்கள்

மால் தன் இச்சையால் எடுத்த அவதார சரிதங்கள் பலவும் உவமை வாயிலாகவும் பிறவாகவும் கொண்டு கூறப்பட்டுள்ளன. வராக அவதாரம், புனல வறள அன்னம் ஆனது, பிருங்கலாதனுக்கு அருள்செய்ய நரசிங்கமாய்த் தூணில் தோன்றியது, மன்னர் குலம் மாய்க்க மழுவாள் நெடியோன் ஆனது முதலியன குறிக்கப்பட்டுள்ளன. இராமாவதாரச் செய்திகளும் கண்ணன் தொடர்புடைய பாரதச் செய்திகளும் சங்கப்பாடல்களில் சில உள.

மாலின் வியூகநிலை மூர்த்தங்கள்

மாலின் வியூகநிலை மூர்த்தங்களும் குறிக்கப்பட்டுள்ளன. சங்கருடணன் பிரத்தியும்நன் அநிருத்தன், வாசுதேவன் என்னும் நான்கு மூர்த்தங்களுடனும் பாற்கடலிலே பள்ளிகொளல், நாஞ்சில் படை கொண்டு வாலியோனாகிய பலராமனாக நிற்றல், வராகமாய் வந்து நிலமகளைக் காத்தல் என்னும மூவுரு நிலையிலும், வாலியோனாகிய பலராமனுடன் இணைந்து நிற்கும் ஈருருநிலையிலும் எல்லாம் இவன் காட்சி தருகிறான். மாலிருங்குன்றக்கோயில்,

> 'எல்லாம் வேறுவேறு உருவின் ஒருதொழில் இருவர்த்
> தாங்கும் நீள்நிலை' (பரி. 15 : 13-14)

கொண்டது ஆகும். கச்சிப்பதியிலே இவன் கண்வளர் கோலத்தில் உள்ளான்

முருகன் திருக்காட்சி

முருகன் மாலின் மருகன்; ஆல் கெழு கடவுளின் புதல்வன்; மலைமகள் மகன்; குறிஞ்சிக் கிழவன்; குன்றுதொறும் பொலிவுறும் மலைக்கடவுள். செந்நிறம் படைத்தவன்; இதனால் 'சேஎய்' (முருகு. 61, குறு. 1:3), 'சேயோன்' என்று வழங்கப்படுவன்; மாலைப்போன்றே இவனும் நீண்ட திருவுரு உடையான். அதுபற்றி

'நெடுவேள்' (புற 55 : 19, நற் 288 10) என்று சிறப்பிக்கப்படுகிறான். நீலக்கடலில் எழும் இளஞ் சூரியனை ஒத்துச் செந்நிற ஒளி வீச, ஆறு திருமுகங்களும் அருட்காட்சி நல்க, பன்னிருகையும் பல தொழில் புரிய, மயிலின்மேல் வீற்றிருக்கும் இப்பெருமானின் காட்சி அழகினை முருகாற்றுப்படை பலபடப் பாராட்டிப் பேசிகிறது.

'உடையும் ஒலியலும் செய்யை; மற்று ஆங்கே
படையும் பவழக் கொடிநிறம் கொள்ளும்;
உருவும் உருவத்தீ ஒத்தி; முகனும்
விரிகதிர் முற்றா விருசுடர் ஒத்தி' (பரி 19 : 97 — 100)

என்று சேயோவின் செந்நிற அழகைப் பாராட்டுகிறது பரிபாடல் இவன் பிடித்திருக்கும் திருந்துவேல் (பரி. 19 : 102) கூடப் பகைவரை மாய்த்தலின் செவ்வேல் ஆகிவிடுகிறது 'செவ்வேற் சேஎய்' (முருகு. 61) என்பது முருகாற்றுப்படை இவனது செந்நிற மார்பிலே முத்துமாலை, கடப்பமாலை, வள்ளிப்பூமாலை ஆகியவை புரளுகின்றன. கடம்பு காந்தள் இவற்றின் மலராலாகிய கண்ணியும் சூடியுள்ளான் மயில் ஊர்தியாதலேயன்றிக் கொடியாகவும் அமைகிறது கோழிக் கொடியும் உண்டு. 'பிணிமுகம்' என்னும் யானையையும் ஊர்தியாகக்கொண்டு செலுத்துவன்.

முருகன் திருவவதாரம்

முருகன் அவதரித்த பான்மையை ஐந்தாம் பரிபாடல் நன்கு விவரித்துள்ளது. முக்கண்ணன் உமையொடு கூடிய காமவதுவையுள் இவன் தோற்றம் செய்கிறான். இந்திரன் குறுக்கீட்டால் அத்தெய்வக் கரு சிதைக்கப்படுகிறது. சிதைந்த கரு. பின் அறுமுனிவர் வேள்வியுள் புகுந்து அவர்தம் பததினியரின் கருப்பத்துள் வளருகிறது இமயத்து உச்சியில் உள்ள சுனையில் மலரும் தாமரைப் பள்ளியில் கார்த்திகை மாதர் கருவுயிர்க்கின்றனர். இதனை உட்கொண்டே முருகன். 'மணி மிடற்று அண்ணற்கு மாசிலோள் தந்த செல்வன்' (பரி 8 : 126-127) என்றும், 'அறுவர் பயந்த ஆறு அமர் செல்வன்' (முருகு 255) என்றும், 'மணி-மிடற்று அண்ணற்கு மதி ஆரல் பிறந்தோன்' (பரி. 9 : 6-7) என்றும் சிறப்பிக்கப்படுகிறான்.

கார்த்திகை மாதர் கருவுயிர்த்த அன்றே இந்திரன் பகையையால் தன் வச்சிராயுதம் கொண்டு குழவிகளின்மேல் எறிகிறான். அப்போது

அறுவேறு உருவும் ஓர் உருவாகி ஆறு முகங்களோடும் பன்னிருகரங்களோடும் காட்சியளிக்கிறான் முருகன். படையின்றி வெறுங்கையுடன் இந்த அறுமுகனிடம் இந்திராதி தேவர்கள் தோல்வியுறுகின்றனர். இந்திரன், அனலன், யமன் முதலியோர் கோழி, மயில், மறி முதலியவற்றையும், ஈட்டி குடாரி, கணிச்சி முதலிய ஆயுதங்களையும் அவனுக்கு கொடுக்கின்றனர். அவ்வாயுதங்களைத் தமது பன்னிரு கைகளிலும் தாங்கி, சீற்றமும் வலிமையும் மிக்கோனாய், முருகன் தேவர்களில் சிறந்து திகழ்ந்தான்.

ஆஅங்கு அவரும் பிறரும் அமர்ந்து படை அளித்த
மறியும், மஞ்ஞையும், வாரணச் சேவலும்,
பொறிவரிச் சாபமும், மரனும், வாளும்,
செறிஇலை ஈட்டியும், குடாரியும் கணிச்சியும்,
தெறு கதிர்க் கனலியும், மாலையும், மணியும்,
வேறுவேறு உருவின் இவ் ஆறு இரு கைக்கொண்டு
மறுஇல் துறக்கத்து அமரர் செல்வன்தன்
பொறிவரிக் கொட்டையொடு புகழ்வாரப்பு இறந்தோய்!

என்று பரிபாடல் அப்பொழுது முருகன் விளங்கும் காட்சியைத் தருகிறது.

முருகன் தேவர் துயர் தீர்த்தல்

இந்திரன் முருகனைத் தனது தேவப்படைக்குச் சேனாதிபதியாகக் கொள்கிறான். முருகன் தேவர்க்குத் தலைமை பூண்டு, அவர்களுக்கு இன்னல் இழைத்த அரசுரர்களை மாய்க்கின்றான். அவ் வசுரர்களுள் சூரன் முக்கியமாகக் குறிப்பிடுதற்குரியான். இவன் மாமர உருவில் கடலுள் ஒளிந்து நின்று போர் தொடுக்கிறான். இவனை அமரில் உழக்கி முருகன் அழித்துவிடுகிறான். கிரவுஞ்ச மலையை வேலால் பிளந்து போகட்ட செய்தியும் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது.

தெய்வயானை — வள்ளி திருமணம் :

தேவர் துயர் தீர்த்த பெருமானுக்கு இந்திரன் தன் மகள் தேவசேனையைத் திருமணம் செய்து கொடுக்கிறான். பின், குறவர் குடிப் பிறந்த வள்ளியையும் பூவுலகிலே பரங்குன்றத்தில் மணந்து கொள்கிறான் 'முருகு புணர்ந்து இயன்ற வள்ளிபோல' என ஒப்புக்கூறுமாறு வள்ளியைக் களவு முறையால் உடன்கொண்டு சென்று மணந்தான்

முருகன் திருப்பதிகள்

முருகன் விளங்கும் தலங்களுள் பரங்குன்றம், அலைவாய், ஆவினன்குடி, ஏரகம், குன்றுதோறாடல் பழமுதிர் சோலை என்னும் ஆறு இடங்களை முருகாற்றுப்படை குறிப்பிடுகிறது இவற்றுள் பிற்கூறிய 'குன்றுதோறாடல்', 'பழமுதிர்சோலை' என்னும் இரண்டும் ஒரு குறிப்பிட்ட தலத்தைச் சுட்டுவன அல்ல. 'காடும் காவும் கவின் பெறு துருத்தியும்' எங்குமாய் உறையும் இயல்பினைக் குறிக்கும் குறிப்பே அவை. ஆகவே, எல்லாக்குன்றமும், சோலையும், மலையும் எல்லாம் அவன் விளங்கும் கோயிலே என்பது கருத்து. திருப்பரங்குன்றத்தையும் திருச்சீரலைவாயையும் முருகாற்றுப்படையொழிந்த பிறசங்க நூல்களும் குறிப்பிட்டுள்ளன. 'வேலூர்' என்பதும முருகன் வேலால் வந்த பெயர் என்று சிறுபாணாற்றுப்படைக் குறிப்பினால் பெறப்படும்.

முக்கண்ணன்

முருகனைத் தந்த பெருமான் முக்கண்ணன் இவன் அந்திவானும் தழலும் போன்ற செவ்வண்ணமும், சண்பகமலர் போன்ற பொன்வண்ணமும் படைத்த வடிவுடையான். சிவன் திருமுடிச் சடையும் செந்நிறமே. சடையில் பிறையும் நீருப கொன்றையும் தாங்கியுள்ளான். முக்கண்ணும் கறைக்கண்டமும் உடையான்; ஆனேற்றை ஊர்தியாகவும் கொடியாகவும் கொண்டவன். கணிச்சி என்னும் மழுப் படை தாங்கியவன். முப்புரம் எரிச்செய்த காலத்து விற்படை தாங்கியமையின் வில்லும் இவனுக்குரிய போர்ப்படையே. நஞ்சம் உண்டு கறுத்த கண்டனானமையின் இவன் கழுத்து 'கறை மிடறு,' 'மணி மிடறு' என்று போற்றப்படுகிறது. 'காரி உண்டிக் கடவுள்' என்னும் பெயரும் பெறுகிறான். உமை இவன் திருமேனியோடு ஒன்றித் திகழ்கின்றாள். இதனால் இவன், 'பசுங்கட் கடவுள்' என்று போற்றப்படுவன். கயிலை மலையில் இவன் உமையோடு வீற்றிருந்தருளுவன். உமையோடு கூடி இவன் முருகனை அளித்த செய்தியை முன்பு கண்டோம்

இவனே ஆலின் கீழ் அருந்தவ முதல்வனாய் அமர்ந்து, அறமுரைக்கும் முனிவனாயும் காட்சி தருகிறான். ஆதிரை நாள் இவனுக்குச் சிறப்பாகக் குறிக்கப்படும். இவன் வீற்றிருக்கும் கயிலையை

இராவணன் பெயர்த்தெடுக்கலாற்றாது. அவன் அருள் பெற்ற வரலாறு குறிக்கப்பட்டிருக்கிறது.

முக்கண்ணான் முப்புரம் எரிசெய்த நிகழ்ச்சியைச் சங்கப் பாடல்கள் விரிவாகவே கூறுகின்றன. முப்புரத்தை மாய்த்தாற்போன்று மூவுலகையும் ஊழியில் அழிக்கும் ஆற்றல் படைத்த பெருஞ் சத்தியும் இவனே. உயிர்களை உண்ணும் கூற்றுவனை மாய்த்து இவன் உயர்வு பெறுகின்றான்.

கொற்றவை

கொற்றவை முக்கண்ணனின் போர்ப்பெருஞ் சக்தி முருகனை 'உமைபாலன்' என்பதுபோலவே, 'கொற்றவை சிறுவன்', 'பழையோள் குழவி' என்று கொற்றவையின் குமரனாகவும் கூறுவர். இக் கொற்றவை காட்டுள் வாழும் மறக்குடி மக்களால் போற்றப்படுபவள், இவளுக்கும் முக்கண்ணும் சூலமும் உண்டு. பேய், பூதங்களாம் பரிவாரங்கள் புடைசூழக் கானில் உறைபவள். 'கான் அமர் செல்வி' (அக 345 : 4), பெருங்காட்டுக் கொற்றி (கலி. 89 : 8) என்று இவள் பேசப்படுகின்றாள். இவளைச் சூழ்ந்துள்ள பேய்கள் நொடி முதலிய விநோதப் பேச்சுகளாலே இவளை மகிழ்விக்கும் மயிடனைச் செற்ற விறல்கெழு சூலி; அசுரப்பகை களைந்து வெற்றிகொண்ட வெற்றி மகள். உலகத்திற்கு வெற்றியளிக்கும் வெற்றி மடந்தையும் இவளே. அயிரைமலையில் உறையும் கொற்றவையையும், அவளைச் சேரமன்னர் பணிந்து பரவுக்கடன் கொடுத்தமையையும் பதிற்றுப்பத்து விளக்கி உரைக்கின்றது.

இருபெருந் தெய்வம்

இதுவரை நாம் கண்ட பெருந்தெய்வங்களுள் சிலரை ஒரு தொகுப்பாகவும் கவிஞர்கள் கொண்டு போற்றியுள்ளனர் பலராமன், பருதி அம்செல்வன், காமன், சாமன், ஆன் ஏற்றுக்கொடியோனாம் முக்கண்ணன் ஆகிய ஐவர்கள் நிலையை உவமையாகக் கலித்தொகைப் பாடல் ஒன்று காட்டுகிறது (கலி. 26 : 1-6). இந்திரன், யமன், வருணன், குபேரன் என்னும் நால்வரையும் ஒருசேர 'நாற்பெருந்தெய்வம்' என முருகாற்றுப்படை ஓர் இடத்து உரைக்கின்றது (முருகு. 160-161). முத்தொழில் புரியும் முதல்வர்களாக நான்முகன், மால், முக்கண்ணன் மூவரும் குறிப்பிடப்படுகின்றனர் (பரி. 1 : 41-51) பனைக்கொடியோனாம் பலராமனையும் கண்ணனையும் சேர்த்து, 'இருபெருந்

தெய்வம்' என்று புறநானூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது (58 : 14-16). அகநானூற்றுப் பாடல் அந்திவானுக்கும் கடலுக்கும் ஒப்பாக இருபெருந் தெய்வத்தைச் சுட்டுகிறது இங்கே குறித்த இருபெருந் தெய்வமாவார் செந்நிறம் வாய்ந்த கடவுளும் கருநிறம் வாய்ந்த கடவுளும் ஆதல் வேண்டும் முருகன், முக்கண்ணன் இருவருமே செந்நிறத்தார் ; கருநிறக் கடவுள் மாயோனும் அவன் மகன் காமனுமே. இவருள் எந்த இருவர் சேர்க்கையை இப்பாடல் சுட்டுதல் கூடும் ? அரியும் அரனும் ஒரு சேரக் காணும் காட்சியையே இது குறித்ததாகக்கொள்ளுதல் பொருத்தமாகலாம்.

முதற்பெருங் கடவுள்

மதுரைக்காஞ்சி மழுவாள் நெடியோன் தலைவனாகப் பிற தேவர்கள் உள்ளனர் என்று கூறும்.

மழுவாள் நெடியோன் தலைவன் ஆக
மாசுஅற விளங்கிய யாக்கையர், சூழ்சுடர்,
வாடாப் பூவின், இமையா நாட்டத்து,
நாற்ற உணவின் உருகெழு பெரியோர் (மதுரைக். 455-458)

என்பது மதுரைக்காஞ்சி. இங்கே சுட்டிய மழுவாள் நெடியோன் யார் ? 'மன் மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்' (அக. 220 : 5) என்று பரசுராமன் குறிப்பிடப்படுகிறான் மழுப்படை தாங்கியோர் முக்கண்ணனும் ஆகலாம் ; மாலும் ஆகலாம். ஆகவே, மாலும் முக்கண்ணனுமே முதற்பெருங் கடவுளாவர் என்று கொள்ளலாம். ஆயினும் அடைபெறாது, 'மழுவாள் நெடியோன் தலைவன் ஆக' என வருவதனால் முக்கட்பெருமானாம் சிவபெருமானே முதற்பெருங் கடவுள் என்பதே மாங்குடி மருதனார் கருத்தாதல் வேண்டும்.

உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இத்தொடருக்கு 'மழுவாகிய வாளையுடைய பெரியோன் ஏனையோரின் முதல்வனாகக்கொண்டு' என்று உரைவகுக்கின்றார் (மதுரைக். 455 உரை). இளங்கோவடிகளும் சிலப்பதிகாரத்தில், 'குழவித்திங்கள் பெரியோன் தருக' (மனையறம். 38-41) எனவும், 'பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்' (இந்திர விழவு. 169) எனவும், சிவபெருமானைப் 'பெரியோன்' எனக் கூறுதலும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது மேலும், அடிகள் ஊர்காண் காதையில் மதுரைமாநகர்க் கோயில்களில் எழுந்த காலை முரசொலியைக் குறிப்பிடும்போது, 'நுதல்விழி நாட்டத்து இறையோன்

கோயிலும்' (ஊர்காண். 7) என முக்கண்ணான் கோயில் முரசொலியை முதற்கண் கூறுகிறார்.

'நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக
வேறு வேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறறி மரபின் அறிந்தோர் செய்யுமின்'

(மணிமேகலை : விழாவறை. 54-57)

என வரும கூலவணிகன் சாத்தனார் வாக்கும் தெய்வங்களுக்கு எல்லாம் முதல்வன் சிவபெருமானே என்பதனைத் தெளிவுற உணர்த்துகின்றது மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் பாடிய 56ஆம புறப்பாட்டில்,

'ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்' (புறம் 56:1-2)

என முதற்கண் சிவபெருமானைச் சுட்டி, பலராமன், மாயோன், முருகன் ஆகியோரை அடுத்து முறையே உவமையாக எடுத்துக் காட்டியிருப்பது கொண்டும் முதற்பெருங்கடவுள் முக்கட் பெருமானே என்னும் கொள்கை அந்நாளில் சிறந்தோங்கியமை செவ்விதிற் புலனாம்

வேத நெறி

வேத விதிமுறைப்படி வேள்வி செய்து வழிபட்ட முறைகளும் இவ்விலக்கியங்களால் நமக்குத் தெரியவரும். நால் வேதமும் ஆறு அங்கமும் உபநிடதம் முதலியனவும் மக்கள் பயின்றமை புலனாகிறது. 'வேதம்' என்பதற்கு 'மறை' 'கேள்வி'. 'எழுதாக் கற்பு', 'வாய்மொழி', 'முதுமொழி' என்னும் பெயர்களும் வழங்கப்பட்டுள்ளன 'அருமறை' என்றும் 'அந்தணாளர் நான்மறை' என்றும் இவை போற்றப்படுகின்றன. இவ் வேதங்களையும் இவற்றை உணர்வதற்குக் கருவியான ஆறங்க நூல்களையும், இவற்றின் மறைபொருளை விளக்கும் உபநிடதங்களையும் அந்தணர் பயின்றனர்.

வேள்வி செய்தல்

இவ்வந்தணர் தீவேட்டு, தெய்வங்களுக்கு அதில் அவிசொரிந்து வழிபட்டனர். மூவேந்தரும் வணிகர் முதலிய பிறரும் வேள்விக்கு வேண்டும் பொருள் முதலியன கொடுத்துப் போற்றினர் வேள்வி செய்த முறையும், அதனை நடத்தும் 'வேள்வி ஆசான்', அதற்கு

உடனிருந்து உதவும் யாக பத்தினியர் முதலியோரைப் பற்றிய குறிப்புகளும் உள. வேள்விச் சாலையின் அமைப்பு, வேள்வித்தூண், வேள்வியின்போது அணியும் அணிவகை, வேள்வித் தீயில் போடப்படும் அவி உணவு ஆகியவையும் விளக்கப்பட்டுள்ளன. வேள்விக் களங்களுக்கு மக்கள் சென்று வழிபட்டனர். மால் வேள்வியின் உருவில் வெளிப்படுவதாகப் பரிபாடல் கூறுகிறது

நீர் நாண நெய் வழங்கியும்
எண் நாணப் பல வேட்டும்
மண் நாணப் புகழ் பரப்பியும் (புற 166:21-23)

நெய்ம்மலி ஆவுதி பொங்க, பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி.
யூபம் நட்ட வியன்களம் பலகொல் (புற. 15:19-21)

எனவரும் குறிப்புகள் வேள்வி வழிபாட்டின் மிகுதியைப் புலப்படுத்துவன. வேள்வி பல செய்வித்தமைபற்றி 'பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' என்னும் சிறப்பெய்தினான் ஒரு பாண்டிய மன்னன். சேர, சோழ, பாண்டியரில் வேள்விக்குத் துணை நின்றாரைப் பதிற்றுப் பத்து புறநானூறு முதலியவற்றில் காணலாம்.

வேதகாலக் கடவுளர்

வேதகாலக கடவுளரில் இந்திரன் சிறப்பாகப் போற்றப்படுகிறான். இவன் வானுலகத் தேவர்களின் அதிபதி இவனும் பிற தேவர்களும் அமுது உண்டு வானுலகில் இன்பம் துய்க்கின்றனர். பேரூர்களில் இந்திரனுக்கு விழா எடுத்தனர். இந்திர விழாவில் பூக்களை மிகுதியாகப் பயன்படுத்தினர். 'இந்திர விழவிற் பூவின் அன்ன' (ஐங் 62:1), 'பல பூ விழவு' (பதிற். 30.15) என வருவன இதற்குச் சான்றாகும். மேருமலையும் தேவர்கள் வாழ் இடமாம் 'இமையவர் உறையும் சிமையச் செவ்வரை' (பெரும். 429) என்று மேரு போற்றப்படுகிறது இந்த மலையைக் காப்பவனும் இந்திரனே (பரி. 9.13). துவாதசாதித்தியரும், மருத்துவர் இருவரும். வசுக்கள் எண்மரும், ஏகாதச ருத்திரர்கள் ஆக தேவர் முப்பத்து மூவர் உளர் இவரை உள்ளிட்டு அசுரர், கருடர், கந்தருவர் முதலிய பதினெண் தேவகணத்தாரும்

உளர் இத் தேவகணத்தாரை முருகாற்றுப்படை.

> நாலிரு வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு
> ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர் (167-168)

என்று குறிப்பிடுகிறது. உலகின் எட்டுத் திக்கிலும நின்று காவல் புரியும் கடவுளரும் உளர். இவருள் மேலே சுட்டிய இந்திரன் கீழ்த் திசைக் காவலன் ஏனைய திசை காவலரில் அக்கினி, யமன், குபேரன் ஆகியோரைப் பற்றிய குறிப்புகள் உள அக்கினியும் யமனும் கொடுமைமிக்க அழிவுத்தொழில் புரியும் கடவுளர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். கூற்று, கூற்றம், காலன், மடங்கல் என்றெல்லாம் யமன் அழைக்கப் பெறுகிறான். காலனும் மடங்கலும் கூற்றுவனது ஏவலர் என்றும் கொள்வர் இந்த யமன் நீதிக்கே நிலையமாய்த் 'தருமன்' என்றே போற்றப்படுகிறான்

பௌத்தமும் சமணமும்

வேதநெறிக்கு மாறுபட்ட பௌத்த சமண சமயத்தினரும் அந் நாளில் சிறந்திருந்தனர். புறநானூற்றில் வரும் ஒரு குறிப்பு இதற்குத் தக்க சான்றாகும்.

> 'ஆறு உயர்ந்த ஒருமுதுநூல்
> இகல்கண்டோர் மிகல் சாய்மார்' (புறம். 166.4-5)

என்பதில் முதுநூலுக்கு இகல் கண்டோர் என்பது வேதநெறிக்கு மாறுபட்ட நெறியாளரைக் குறிக்கும். பௌத்த சமணப் பள்ளிகள் 'தவப்பள்ளி' என்று பெயர்பெறும் இப்பள்ளிகளில் துறவிகள் வாழ்ந்து வந்தமையின் இப் பெயர் பெறுவதாயிற்று கூடலிலும் காவிரிப்பூம்பட்டினத்திலும் விளங்கிய புத்த சமணப் பள்ளிகளையும், அங்கு நிகழ்ந்த வழிபாடுகளையும் மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை பாடல்களிலே காணலாகும்.

சிறு தெய்வங்கள்

பெருந் தெய்வங்களுக்குள் பெருந் தெய்வமாக மாலும் முக்கண்ணனும் சிறந்து நிற்பதை முன்பு கண்டோம். மக்கள் அச்சத்தால் வணங்கிய சிறு தெய்வங்களோ பற்பலவாக உள்ளன மலை முதல் கல் வரையிலும், காட்டிலும் நாட்டிலும், வீட்டிலும ஊர் வெளியி

லுமாக இவை பரந்து காண்கின்றன. இத்தெய்வங்களில் பெருபால னவும் மக்களுக்கு அச்சத்தை விளைவிப்பனவாகவும், அவர்களுக்கு வருத்தம் தரும் இயல்பினவாயும் அமைந்தன. மலைகள் யாவுமே மக்களின் காட்சிக்கு வருத்தும் தெய்வங்களைக் கொண்டனவாகவே தோற்றுகின்றன காட்டு வழிகளில் செல்வார் காடு உறை கடவுட்கு உரிய கடமை புரிகின்றனர். காவிலும் மரங்களிலும் தெய்வம் போற்றி னர். மரங்களில் முக்கியமாக ஆலமரம், மராமரம், கடம்பு வேங்கை, ஓமை, வேம்பு மருது, பனை, கள்ளி ஆகியவற்றில் கடவுள் உறைதல் குறிப்பிடப்பட்டுள்ளது

இனி, நீர்த்துறைகளாகிய சுனை, குளம், ஆறு, ஆற்றுத்துருத்தி கடல் கழிமுகம் ஆகியவற்றிலும் கடவுள் உறைவதாக நம்பினர். அணங்கு, சூர், பேய், பிசாசு பூதம் என்பன வருத்தும் தெய்வங்களில் குறிப்பிடத்தக்கவை அணங்கு என்பது ஆண் பெண் தெய்வங்களுக் குப் பொதுவாக வழங்கும் பெயர். இது ஆண் தெய்வத்தைக் குறித்தல் சிறுபான்மை; பெண் தெய்வத்திற்கே பெரும்பான்மையும்' அணங்கு என்பது வழங்கும் பெண்களையே ‘ அணங்கு ’ எனக் குறிப்பிடுதல் உண்டு சூர் என்பது இவ்வகையாக வரினும், பெண் தெய்வத்தைக் குறிக்கும்போது சூர்மகள், சூரரமகளிர் என்று குறிப்பிடப்பெறுதல் பெரும்பான்மை. யாழ், முரசு, பிற ஆயுதங்கள் முதலியவற்றில் உறையும் தெய்வங்களும் அணங்கு என்றே கூறப்படும்.

மன்னர்களின் போர்க்கள நிகழ்ச்சிகளைக் கூறுமிடத்துப் பேய், பிசாசு, பூதங்கள், பெரும்பான்மையும் இடம் பெறுகின்றன. பாசம், கழுது, பழு, அணங்கு, கூளி என்பன பேயினத் தெய்வங்களாம். இவையாவும் குட்டை வடிவினவாயினும், அவற்றிற்குள்ளும் குறியவை நெடியவையாய்ப் பல உருவில் காட்சி தரும். பூதங்கள் பேய்களை விடவும் பருத்த உடம்பு படைத்தவை. இவற்றிடையே ஆண் பெண் வேற்றுமையும் உண்டு. பேய் ஏறி நடத்தும் ஊர்தியாக அமைவதும் பேய்தான் பேய்கள் கண்ணுக்கினிய காட்சியை உடையவை அல்ல; அச்சம் தரும் வடிவின. இவற்றின் உருவங்களையும் உறுப்புகளையும் சங்கப்பாடல்கள் பல்வேறு வகையாக வருணித்துள்ளன. ஊர் எல்லாம் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் நள்ளிரவில் இவை நடமாடித் திரியும் சிறப்பாகப் பிணங்களை எரித்தலும் புதைத்தலும் செய்யும் புறங்-காட்டில் இவை கூட்டங்கூட்டமாகத் திரிந்துகொண்டிருக்கும். போர்க் களத்தில் இறந்துபடும் பிணங்களைத் தின்று, குடர்மாலைகளை

அணிந்து கொண்டு அங்கே மகிழ்ச்சிக் கூத்தாடும் பிணக்கூழ் சமைத்து சிறப்பு விருந்தும் நடத்தும் பூதங்கள் போர்க்களத்தைக் காவல் புரியும் காளிதேவிக்குப் பணிசெய்யும் பரிவாரங்கள் இப்பேய், பூதங்களே காளி கோயிலின் வாயிலில் காவல் புரிவன பூதங்கள்., பிற

பணிகள் செய்வன பேய்கள்.

வீரர் வழிபாடு

போரில் மாய்ந்த பெருவீரர்களுக்குக கல்நாட்டி வழிபாடாற்றினர். வீரக்கல்லில் மறவர்களின் பெயரும அவர்தம் சிறப்புகளும் பொறிக்கப் பட்டன. எனவே இவற்றை 'எழுத்துடை நடுகல' (ஐங் 352 2, அக. 53:11) என்பர் இவை பெரும்பாலும் மக்கள் நடமாட்டமுள்ள வழிகளை அடுத்தே நாட்டப்பட்டன

> செல்லும் தேஎத்து, பெயர் மருங்கு அறிமார்,
> கல் எறிந்து எழுதிய நல் அரை மரா அத்த
> கடவுள் ஓங்கிய காடு ஏசு கவலை (மலைபடு 394-396)

என்பதனால் வழிப்போவார் செல்லும் இடங்களில் காணும் நடுகற்கள் தெய்வமாகக் கருதிப் போற்றப்பட்டமை பெறப்படும். மாய்ந்த மறவர்களைப் புதைத்து, அம் மேட்டின்மேலே இட்டு மூடிவைத்த கற்களிலும் கடவுள் உறைவதாகக் கருதுகின்றனர். போரில் இறவாது வடக்கிருந்து உயிர் நீத்த கோப்பெருஞ்சோழனின் நடுகல்லைப் புறப்பாட்டு குறிப்பிடுகிறது. இது இக்காலத்து நிகழ்த்தப்பெறும் கல்லெடுப்புப் போன்றதொரு சடங்காகுமோ என்பது சிந்தித்தற்குரியது.

ஊர்ச் சிறு தெய்வங்கள்

ஊர்களில் அமைந்துள்ள சதுக்கம், சந்தி மன்று, பொதியில்களில் தெய்வங்கள் போற்றபபட்டன. இவற்றுள் சதுக்கம் என்பது நாற்சந்தி; சந்தி என்பது முச்சந்தி, ஐஞ்சந்திகளைக் குறிக்கும் ஊர்க்கு நடுவாய் எல்லோரும் வந்து கூடும் மரத்தடியே மன்றமாகும். இது திறந்த வெளியிடமே. பொதியில் என்பது ஊர்ப்பொதுவாக உள்ள அம்பலம்; சுவர் எழுப்பி அமைக்கப்படுவது. இச்சுவர்களில் சித்திரங்கள் தீட்டப் பட்டிருக்கும். 'எழுது எழில் அம்பலம்' (பரி. 18:28) என்பது பரிபாடல். பொதியிலில் 'கந்து' எனப்படும் தறியை நட்டு வழிபாடாற்றினர். இதுபோலவே பொதியிலின் சுவரில் கடவுளின் உருவத்தை எழுதியும் வழிபட்டனர் இச் சுவர்த் தெய்வம் 'எழுது அணி கடவுள்' எனப்படும்.

பொதியிலில் ஊருக்குப் புதிதாய் வருவோர் தங்குதலும், அங்கே மகளிர் முதலியோர் வந்து, கந்திற்கு வழிபாடு செய்தலும் உண்டு.

> 'கொண்டி மகளிர், உண்துறை மூழ்கி
> அந்தி மாட்டிய நந்தா விளக்கின்,
> மலர் அணி மெழுக்கம், ஏறிப் பலர் தொழ,
> வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில் (பட்டினப். 246-249)

என்னும் பட்டினப்பாலை அடிகள் இதற்குத் தக்க சான்றாகும்.

இல்லுறை தெய்வம்

ஊர்களில் உலவும் அணங்குகள் இல்லுறை தெய்வங்கள் எனப்படும் வீட்டினுள்ளும் வீட்டின் வாயிற் கதவு நிலையிலும் கடவுளைக் காண்கின்றனர் இல்லுறை தெய்வம் மகிழும் பொருட்டு வாசலில் மலர் அணிந்து, கொடிகளும் கட்டியிருப்பர்; மகளிர் மாலை வேளையில் விளக்கு வைத்து, நெல்லும் மலரும் தூவி, பலி படைத்து வழிபாடாற்றுவர். இல்லத்தில் மகளிர் வழிபடும் தெய்வங்களுள் ஒன்று பாவை. இது சுவரில் ஓவியமாகத் தீட்டப்பெற்று வழிபடப்பெற்ற தெய்வம்

> தாழியுள் மலர் பல அணியா; கேழ் கொளக்
> காழ்ப்புனைந்து இயற்றிய வனப்பு அமை நோக்குசுவர்ப்
> பாவையும் பலி எனப் பெறாஅ ... (அக. 369.6-8)

என ஒரு தலைவி வழிபட்ட பாவைத் தெய்வத்தைக் குறித்து அவளைப் பிரிந்த செவிலித்தாய் பேசுகிறாள். இங்கே, 'கேழ் கொளக் காழ் புனைந்து இயற்றிய பாவை', 'வனப்பு அமை பாவை' 'சுவர்ப் பாவை, எனப் பாவையின் இயல்பு விளக்கப்படுதல் காணலாம்.

கொல்லிப் பாவை

மனையில் விளங்கும் சுவர்ப் பாவையேயன்றி, மன்றப்பாவை, தெற்றிப் பாவை, அல்லிப் பாவை, கொல்லிப் பாவை எனப்படும் பாவைத் தெய்வங்களும், மகளிர் விளையாட்டில் அமைந்த 'தாதுசெய் பாவை' 'வண்டற் பாவை', 'பைஞ்சாய்ப் பாவை' 'மணலின் எழுதிய பாவை, எனப் பல விளையாட்டுப் பாவைகளும், யவனர் இயற்றிய வினைமாண் பாவையும் ஆகப் பல பாவைகளைச் சங்கப் பாடல்களில் காண்கிறோம்.

பாவைத் தெய்வங்களிலே 'கொல்லிப் பாவை' புலவர் பலராலும் பெரிதும் பாராட்டிப் பேசப்பட்டுள்ளது. இது சேர மன்னனுக்குரிய

கொல்லி மலையின் மேல்புறத்தில் அமைந்திருந்ததாம் தெய்வத்தால் இந்தப்பாவை எழுதிவைக்கப்பட்டது; மிக்க அழகு வாய்ந்தது. மகளிரின் அழகுக்கு இப்பாவையை ஒப்புக் கூறுதல் புலவர் மரபு. பூதம் என்னும் தெய்வத்தால் எழுதி வைக்கப்பட்ட தனாலே இதற்கு எவ்வகையான இடையூறும் நேர்வதில்லை. எனவே, இதனைத் 'திரு நல உருவின் மாயா இயற்கைப் பாவை' என்று போற்றுகின்றார் ஒரு கவிஞர்.

நாளும் கோளும் : சுடர்ச் சக்கரம்

வானவீதியில் உலவும் கோள் நாள்களும வணக்கத்திற்கு உரியவையாகின்றன. ஞாயிறு திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்னும் ஏழும், இராகு கேது என்னும் இரு பாம்புக் கோளும் ஆக ஒன்பதும் கோள்களாம். நட்சத்திரங்கள் என வழங்கும் நாள்களோ எண்ணற்றவை அசுவினி, பரணி, கார்த்திகை முதலிய இருபத்தேழு நட்சத்திரங்கள் சிறப்பாகக் கொள்ளப்படும். சூரியனை முதலாகக் கொண்டு பிறகோள்களும் நாள்மீன்களுடன் கலந்து, வான வீதியில், மேருமலையை வலமாகச் சூழ்வருகின்றன. இவை இயங்கும் நெறி இடப வீதி, மிதுன வீதி, மேட வீதி என மூன்றாம். இவற்றின் இயக்க அமைபபு 'சுடர் நேமி' என்று அழைக்கப்பெறும். இந்தச் 'சுடர் நிலைச் சக்கரம்' பரங்குன்றத்து எழுத்து நிலைமண்டபத்துள்ள ஓவியங்களுள் ஒன்றாகவும் எழுதப்பட்டிருந்தது எனப் பரிபாடல் கூறும் ஆதித்த மண்டிலம் வெள்ளி மலைக்கு அப்பாலுள்ள உலகத்திற்கு இடைகழியாகிய அற்ற வாயின்கண் தேவர்களால் நிறுத்தப் பட்டதாம். இந்த அறைவாய் மோரியரது சக்கரம் இயங்குவதற்காகக் குறைக்கப்பட்டதாம் இங்கே குறித்த மோரியர் சக்கரவாளச் சக்கர வர்த்திகள் எனப்படுவர். 'ஓரியர்' என்றும் இவர்க்குப் பெயர் உண்டு.

கோள்களுள் சிறந்தவை ஞாயிறும் திங்களும்

கோள்களுள் மைம்மீன் எனப்படும் சனி, இராகு, கேது என்னும் மூன்றும் தவிர, பிற எல்லாம ஒளி படைத்தவை. இவற்றுள்ளும் பேரொளி தருபவை பகலைச் செய்யும் செஞ்ஞாயிறும், இரவைச் செய்யும் வெண்திங்களும் ஆம் இவை இரண்டையும், 'ஞாயிற்றுப் புத்தேள், 'திங்கட் புத்தேள்' என்பர். இளஞ்சூரியனையும் பிறைத் திங்களையும் மக்கள் தொழுது போற்றினர். ஞாயிறு ஒற்றைச் சக்கரம் கொண்டதும் ஏழு குதிரைகள் பூட்டப்பெற்றதுமான தேரில் உலகு தொழத் தோன்றி உயிர்க்குலத்தை வாழ்விக்கிறது இது கண்கண்ட

தெய்வமாகப் போற்றப்படுகிறது. நிறைமதி நாளில் இருசுடரும் ஏக காலத்தில் தோன்றுதலும் மறைதலும் செய்யும். மதியைப் பாம்பு பற்றும் கிரகணச் செய்தி அங்கங்கே உவமையாக எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. மதியைப் பாம்பின் பிடியினின்றும் விடுவிக்கிறான் மால்; சான்றோர்களோ கிரகண காலத்தில் மதியின்பால் தமக்குள்ள பரிவைத் தம் செயல்களால் காட்டுவர்.

மழைக்கோள்

பதினொன்றாம் பரிபாடல் மழை பெய்வதற்குரிய கோள் நிலையை அறிவிக்கின்றது. இப்பகுதியில் கோள் நாள்களின் இடநிலை விளக்கப் படுதல் காணலாம். 'வெள்ளி' வெண்ணிறமும், 'செவ்வாய்' செந்நிறமும் வாய்ந்தவை இவற்றை முறையே 'வெண்மீன்' 'செம்மீன்' என்பர். சனிக்கோள் 'மைம்மீன்' எனப்படும் பல்மீன் நடுவண் பால்மதிக் காட்சி புலவர்தம் புகழ்ச்சிக்கு இலக்காகிறது.

தெய்வ சம்பந்தம் பெற்ற நாள்களும் பிறவும்

நாள்களுக்குள்ளே தெய்வ சம்பந்தம் பெற்றவை ஓணமும் ஆதிரையும் கார்த்திகை நாளுக்குத் தெய்வத் தொடர்பும் அருந்தவர் தொடர்பும் உண்டு. இது 'அறுமீன்' எனப்படும். எழுமீன் கூட்டம் ஒன்றும், அருந்ததியும் தொழத்தகும் நாள்கள். இவற்றை,

> 'மை அற விளங்கிய மணிநிற விசும்பில்
> கை தொழு மரபின் எழுமீன் போல (நற். 231 : 1-2)
>
> வட வயின் விளங்கு ஆல் உறை எழு மகளிருள்
> கடவுள் ஒரு மீன் சாலினி (பரி. 5 : 43-44)

என்று பாராட்டுவர். கற்பிற்கு எடுத்துக்காட்டாக அருந்ததியைக் குறிப்பிடுவர் அகத்தியன், மகவெண்மீன் என்பனவும் தனியாகச் சுட்டிப் பேசப்பட்டுள்ளன. 'உற்கம்' எனப்படும் 'விசும்பு வீழ்கொள்ளி' யின் வீழ்ச்சியை உற்பாதமாகக் கருதுவர். இதனால் பயிர்களும் அழிவுறுமாம். நாள் கோள்களால் நலமும் தீங்கும் உளதாதல் கருதப் படுகிறது. இவற்றின் நல் நிலையால் மழை வளம் சுரத்தலும், நிலை மாற்றத்தால் மழை பெய்யாது போதலும் சில இடங்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. நாள்கோள்களின் இயக்கங்களை நுட்பமாக அறிந்து கூறவல்ல வானநூற் புலவர்களும் வாழ்ந்தனர் வானநூற்

புலவரின் இயல்பினை, 'செஞ்ஞாயிற்றுப் பரிப்பும்' எனத் தொடங்கும் புறப்பாட்டு நன்கு விவரித்துக் கூறுகின்றது

வழிபாட்டு முறைகள்

இனி, இப்பொழுது கண்ட சிறு தெய்வங்களுக்கும் முதலிற் பேசிய பெருந் தெய்வங்களுக்கும் மக்கள் ஆற்றி வந்த வழிபாட்டு முறைகளை நோக்குவோம். நித்திய வழிபாடுகளேயன்றிச் சிறப்பான பெரு விழாக்களும் கொண்டாடப் பெற்றன. தெய்வக் கோயில்கள் சிறப்புற எடுக்கப்பெற்றன மன்னர் காடுகொன்று நாடு ஆக்கும் போது, கோயிலும் குடிகளின் உறையுளுமாக அமைந்த ஊர்களை உண்டாக்கினர் தெய்வத் திருக்கோயில் ஊரின் நடு நாயகமாக விளங்கியது. அன்றி மலைமுதல் மனைவரைப் போற்றப்பட்ட கடவுளர்களும் பலராவர் என்று கண்டோம் இவருள் சில தெய்வங்களுக்குக் கோயில் எடுத்திருக்கலாம். நடுகல்லுக்குக்கூடத் துணிப் பந்தலிட்டு வழிபடுபவர் பிற தெய்வங்களுக்கும் கோயில் போன்றதொரு அமைப்பை மேற்கொண்டிருக்கலாம்.

தனக்கு ஓர் உருவமும் பெயரும் இன்றித் தன்னை வழிபடுபவர் மனங் கொண்டவகையால் எல்லாம் கடவுள் காட்சியளிக்கிறானாம்.

> 'மனக்கோள் நினக்குஎன வடிவு வேறு இலையே' (பரி. 4 : 56)
>
> 'இனைத்து என எண் வரம்பு அறியா யாக்கையை' (பரி 3 : 45)
>
> 'வேறுபல் உருவின் கடவுட் பேணி' (குறிஞ்சி 6)

என்பனவற்றால் மேற் குறித்ததன் உண்மை புலனாம். பற்பல தெய்வங்கள் தொழப்படினும் தம்தம் வழிபடு தெய்வமாகவும் ஒரு கடவுளைப் பேணுதல் உண்டு.

வழிபாட்டிற்குப பல் வகைச் சாந்து, புகை, விளக்கு, மலர், தெய்வத்திற்கு ஏற்ற பால் மடை, பலிச்சோறு முதலியனவும் கொண்டு செல்லுதல் மரபு பலவகை மலர்களால் மாலை கட்டித் தெய்வத்திற்கு அணிந்தும், பூக்களைக் கொண்டு அருச்சித்தும் வழிபட்டனர். பூக்களில் தாமரைப் பூவைத் தெய்வத் தன்மையுடன் கூடிய சிறந்த பூ எனக் கொண்டனர். தெய்வ உருவிற்கு நீராட்டி மலர் அணிந்து, விளக்கேற்றி, அகில், சந்தனம் முதலிய நறும்புகைகளைப் புகைத்து, உயரிய பொருள்களைப் பலியாகப் படைத்தனர். மன்றங்களிலும் வெறியாடும் களங்களிலும் வழிபட்ட சிறு தெய்வங்களுக்குக் குருதிப்

பலியும் கொடுத்தனர் அரிசியைப் பலியாகச் சிதறுதல், ஆட்டு மறியை அறுத்தல், மறியின் குருதியைச் சோற்றுடன் கலந்து திரளையாகச் செய்து பலிதூவுதல், கள் வைத்தல் முதலியனவும் உண்டு. பலியிடுதற்குப் பலிபீடமும் அமைக்கப்பட்டிருந்தது. பலி கொடுக்கும் காலத்தில் முழங்கும் மந்திரங்கள் ஓதிக் கடவுட்குரிய பிண்டப் பலியைச் செலுத்தினர். மறையவர்கள் வேள்வி மூலம் கடவுட்கு அவி உணவு அளித்தமையை முன்பு வேள்வி பற்றிப் பேசிய பகுதியில் கண்டோம். வழிபாட்டுக் காலத்தில் இனிய இசைக் கருவிகளையும் இயக்குவர்.

காலை மாலை கடவுளைப் போற்றுதல்

கோயில்களிலே காலை மாலைகளில் தெய்வத்திற்குச் சிறப்புகள் செய்யப் பெற்றன இவற்றை முறையே 'நாட்பலி' 'அந்தி விழவு' என வழங்குவர் சுற்றத்தாருடன் கோயிலுக்குச் சென்று மக்கள் வழிபாடாற்றினர் கோயில் வழிபாட்டில் திருக்கோயிலை வலம் வந்து வணங்குவர். தாம் வேண்டும் பயன்களையும் தெய்வத்தின் முன் முறையிடுவர். 'தீது இன்றிப் பொலிக,' 'நசி புனல் பெருகுக,' 'கரு வயிறு உறுக', 'ஐ அமர் அடுக' என்பன இவர் வேண்டும் வரங்களுள் சில குறவர்கள் மழை பெய்யவும், பெய்யும் பெருமழை நிற்கவும் தெய்வம் போற்றிய செய்தி கேட்கப்படுகிறது. மேலும், கடவுட்குப் பல பொருள்களைக் காணிக்கை செலுத்தல், நேர்த்திக்கடன் செய்தல், தெய்வத்தை முன்னிட்டுச் சூளுரைத்தல் என்பனவும் உள.

திருவிழாக் கொண்டாடுதல்

பேரூர்களிலும் சிற்றூர்களிலும் பெருவிழாக்கள் கொண்டாடியும் மக்கள் மகிழ்ந்தனர் விழா எடுக்கும் ஊர்களில் அதனைக் கண்டுகளிக்க உள்ளூர் மக்களும் வெளியூராரும் வந்து திரளுவர் இவர்கள் நல்ல ஆடை ஆணிகளால் தம்மை ஒப்பனை செய்து கொண்டு செல்வர். விழாக்கள் பெரும்பான்மையும் வளர்பிறைக் காலத்திலேயே நடை பெற்றன. நிலவொளியில் மக்கள் தூக்கத்தையும் விடுத்து, விழா நிகழ்ச்சிகளில் ஈடுபடுகின்றனர். மாடங்களின் மேலிருந்து மகளிர்களில் சிலர் விழாக் காண்கின்றனர்

விழா நிகழும் ஊர்கள் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தன. விளக்கு களும் பூக்கள் முதலியனவும் அழகிய காட்சிகளைத் தந்தன விழாத் தொடக்கத்தை உலகுக்கு அறிவிப்பது ஊர்க் குயவனது கடமையா-யிருந்தது. விழாத் தொடக்கத்தில் கொடி எடுத்தலும் ஏழாம் நாள்

விழாவில் தீர்த்த மாடுதலும் மரபு விழாவில் ஆடல் பாடல்கள் நிகழ்ந்தன இதன்பொருட்டு வெளியூர்களிலிருந்தும் பாணர், கூத்தர், விறலியர் ஆகியோர் வருகின்றனர். போர் மறவர்களும் விழாவில் குழுமி விளையாட்டுப் போர் நிகழ்த்தி மக்களை மகிழ்வித்தனர். இவர்களுக்கெல்லாம் விழாவில் சோறு வழங்கப்பட்டது. குன்றக் குறவர் எடுக்கும் முருக பூசையிலும், வேலனது வெறியாட்டத்திலும் ஆயர்களின் வழிபாட்டிலும் துணங்கைக் கூத்து குரவைக்கூத்து என்னும் கூத்துகள் தெய்வத்தின் பொருட்டு நிகழ்த்தப்பெற்றன.

தமிழகத்தில் சிறப்புடைய பெரு விழாக்கள்

வேங்கடம், உறையூர், கூடல் (மதுரை), திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களில் நடைபெறும் விழாக்களைக் குறிப்பிட்டுப் புலவர் போற்றியுள்ளனர் 'உறையூர்ப் பங்குனி விழா', 'கருவூர் உள்ளி விழா' என்பன குறிப்பிடத் தக்கவை மாயோனுக்கு ஓண நாளிலும், முக்கண்ணுக்கு ஆதிரை நாளிலும் பெருவிழா எடுத்துச் சிறப்பித்தனர். 'இந்திர விழா', 'காமவேள் விழவு' எனபனவுப் குதூகலமாகக் கொண்டாடப் பெற்றன. கார்த்திகை விளக்கீட்டு விழா' எல்லா ஊர்களிலும் சிறப்புடன் போற்றப் பட்டதொரு பெருவிழாவாம். வினைவயிற் பிரிந்து சென்ற தம் தலைவர் கார்த்திகை விழாக் கொண்டாட மீண்டுவந்து சேரட்டும் என்று விரும்புகிறாள் ஒரு தலைவி.

> 'குறுமுயல் மறுநிறம் கிளர, மதி நிறைந்து,
> அறுமீன் சேரும் அகல் இருள் நடுநாள்,
> மறுகு விளக்குறுத்து, மாலை தூக்கி
> பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
> விழவு உடன் அயர, வருகதில் அம்ம' (அக. 141 : 7 - 11)

என்பது அத்தலைவியின் பேச்சு.

சடங்குகள்

இவ் விழாக்களைப் போன்றே ஊர்களில் நிகழும் சிறப்பு நிகழ்ச்சிகளும் உள. அவையாவன : புதுப்புனல் விழா', ஏறு தழுவுதல்', பூந்தொடை விழா', பெருஞ்சோற்று விழவு' முதலியனவாம். இங்ஙனமே மகப் பேறு, திருமணம் முதலியனவாக மக்களின் அன்றாட வாழ்க்கையை ஒட்டிய சிறப்பு நிகழ்சசிகளும் பலவாம. இச்சிறப்பு நிகழ்ச்சிகளை விழா எனபதிலும 'சடங்குகள்' என்று கொள்ளலாம்.

இவை நூல் முறையாலும் சான்றோர் நெறியாலும் வழிவழியாகக் கொண்டாடப் பெற்று வருவனவாம். இவை 'முறை' அல்லது 'முறைமை' என்றும் கூறப்படும். மக்களின் பிறப்புத் தொடங்கி வாழ்க்கை முற்றிலும், பல்வேறு நிலைகளில் இச்சடங்குகள் இடம் பெற்றுள்ளன இவை யாவற்றையும் இங்கு விரித்துரைப்பதாயின், அது மற்றொன்று விரித்தலாய் விளைந்து விடுமோ என்று தோன்று கிறது. எனவே, பெயரளவால் அவற்றைச் சுட்டி, ஒரு சிலவற்றையே விளக்கமாகக் கூறக் கருதுகிறேன்.

கருவுற்றார் மகப்பெற்றார் செய்யும் சடங்குகள்

இம்மை வாழ்வின் பயனை விரும்பித் தெய்வம் தொழுதலை முன்பு குறிப்பிட்டேன் மகளிர் தமக்குக் கருவாய்க்க வேண்டும் என்று தெய்வக் கடம் பூணுதல், கருக்கொண்ட காலத்துத் தேவராட்டியுடன் நின்று தெய்வத்திற்கு மடைகொடுத்தல் என்பன குழந்தை பிறக்குமுன் செய்பவை. பின, கணவர் உவப்பப் புதல்வர்ப் பயந்த காலத்து பேய் முதலியன வருத்தா வண்ணம் நெய்யுடனே வெண்சிறு கடுகை மாளிகையிடத்தே பூசி வைப்பர். ஈன்றணிமை நீங்கிய பின் மகப்-பெற்றார் குளத்திற்குச் சென்று குளிர்ந்த நீரில் குளிப்பர்

குழந்தைமை நிலையில் கொண்டாடப் பெறுபவை

புதல்வன் பிறந்தவுடன் அவன் முகத்தைத் தந்தை வந்து பார்த்து மகிழ்தல் முறை. குழந்தைக்குத் தன்னைப் பெற்ற தந்தையின் பெயரைச் சூட்டுவது வழக்கம். புலிப்பல்லைக் கோத்துச் சிறுவர்க்கும், அதனோடு பொன்னைச் சேர்த்துக் சிறுமியர்க்கும் 'தாலி' என்னும அணி பூட்டுவர்., காலுக்குக் கிண்கிணி பூட்டுவர் ஐம்படைத் தாலியும், அரையில் பவளத்தால் ஆன இடைப் பூணும் கட்டுவர். இடைப் பூணொடு வெட்டாத வாளும் மழுவும் இருபுறத்தும் கோக்கப்பட்டிருக் கும் குழந்தை பிறந்தநாளும் கொண்டாடப்படும், நன்னன் என்-பானின் பிறந்த நாள் விழா மதுரைக்காஞ்சியில் சுட்டப்படுதல் காணலாம் தவிரவும் ஒவ்வொருவர்க்கும் ஒரு நாள்மீன் வானில் உறைவதாகவும் நம்பினர் மீனின் வாழ்வுடன் அதற்குரியார் வாழ்வும் முடிவுபெறும் ஒருவன் பிறக்கின்ற வேளைக்குத் தக்கபடி அவனுடைய குணம் செயல்கள் அமையும் என்னும் நம்பிக்கையும் காணப்படுகிறது. ஆண் குழந்தையின் நுதல் மயிர் களைதலும் ஒரு சடங்காகும்

மாணவ வாழ்க்கை

தந்தை தன் மகனைச் சான்றோனாக்க ஆசிரியரிடம் அனுப்புகிறான். மாணவர் ஆசிரியர்க்கு ஊழியம் செய்தும் பொருள் கொடுத்தும் கற்கின்றனர். மூன்று தமிழும் முறைப்படக் கற்றல் மரபு ஓலைச் சுவடிகளும் கல்விக்குப் பயன்பட்டன. யானைக்கு வடமொழி பயிற்றுதலிலிருந்து பிறமொழியான வடமொழி அறிவும் சிலர் பெற்றிருத்தல் கூடும் என ஊகிக்கலாம். மாணவ வாழ்க்கை கட்டுப்பாட்டுடன் இயங்குகிறது.

குமரப் பருவம்

குமரப் பருவத்தில் காளையர் காலில் கழல் ஒலிக்க, போர்ப் பயிற்சி முதலிய தொழில் துறையில் புகுவர் மகளிர் 'அம்பா வாடல்' நிகழ்த்துவர். இது மார்கழி மாதத்து நிறைமதி நாளில் தொடங்கப் பெறும் இதற்கு முதுபார்ப் பனிமார் முன்னின்று சடங்கு காட்டுவர். 'தைந் நீராடல்' என்றும் இது குறிக்கப்படும் பாவை நோன்பில் நீர்த்துறையில் மடை கொடுத்தல், வண்டல் பாவை இழைத்துக் குரவைக் கூத்தாடுதல் வழக்கர் வழிபாட்டின்பின் நோன்பு உணவு உண்பர். உலகம் மழை பொழிந்து செழிப்புறவும் தமக்கு நல்ல கணவர் வாய்க்கவும் வேண்டி மகளிர் இந்நோன்பை ஆற்றுகின்றனர். முருகன் ஊர்தியாம் யானையைப் பூசித்து, அது உண்ட கவள மிச்சிலை இவர் உண்பர்

மணவாழ்க்கை

காதலர் மனமொன்றிக் கலக்கும் களவு மணம், பின் உலகறிய நடக்கும் கற்புத் திருமணம் பற்றிப் பேசும் பகுதிகள் இலக்கியச் சுவைபட உள்ளன. ஆனால் இவை அனைத்தும் உண்மை நிகழ்ச்சியன்று. அடியோர், வினைவல்லோரிடை நிகழும் இராக்கத மணமும் பற்றிக் கலித்தொகை பேசுகிறது ஆகவே, இவை தொல்காப்பியர் சுட்டுமாறு புலனெறி வழக்கம்' என்னும் கண்ணோட்டத்தில் பார்க்கத் தக்கவை

குறிபார்த்து உண்மை தெளிதல்

களவு மணத்தால் தலைவி வேறுபட்ட காலத்துக் கட்டுவிச்சியை அழைத்தும், வேலனை அழைத்தும் குறி கேட்பர். கட்டுவிச்சி நெல்லைக் கொண்டும் வேலன் கழங்கைக் கொண்டும் குறிபார்த்து உரைப்பர்

மற்றும் மேல் நிகழப் போகும் செய்திகளை அறிதற்கும் இக்குறிகள் பார்க்கப்படும். இவ்விருவரும் தெய்வம் போற்றியே குறியுரைக்கின்றனர் தலைமகன் தனது காதல் கைகூடாதபோது, 'மடலேறுதல்' நிகழ்த்தி, உலகோர்க்கு அறிவித்து, சான்றாரை முன்னிட்டுத் தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வான். காதல் கைகூடாதபோது மலை ஏறிப் பாய்ந்து உயிரை மாய்த்தலும் உண்டு.

கற்புத் திருமணம்

காதல் மணம் கற்பு மணமாக மலரும். தலைவனின் பெற்றோர் மகட்பேசி வருதலும் தகுதியற்றார்க்கு மகட்கொடை மறுத்தலும் உண்டு. மகளைக் கொடுக்க முன்வந்தபோது, ஏற்றுக் கொள்ளாது தவிர்க்கின்றாரையும் காணமுடிகிறது. பாரி மகளிரை ஏற்றுகொள்ளு மாறு கபிலர் வேண்டியபோது விச்சிக்கோவும் இருங்கோவேளும் மறுத் தமை இதற்குச் சான்றாம்.

திருமணம் ஒரு பெருவிழாவாகக் கொண்டாடப் பெற்றது. அக நானூற்றின் 86, 136 - ஆம் பாடல்கள் மணவினைச் செய்திகள் பலவற்றை உள்ளடக்கியுள்ளன வேறுசில பாடல்களிலும் மணவினை மரபுகள் தென்படுகின்றன மணத்தின் முன்பு மணப் பெண்ணுக்கு மணமகன் பரிசம் அளித்தலும், மணமகளின் காலில் கிடக்கும் கன்னிப் பருவத்து அணிந்த சிலம்பை நீக்குதலும் இரு முக்கிய நிகழ்ச்சிகள். தலைமகளின் சிலம்பு நீக்கதலைச் ' சிலம்பு கழி நோன்பு ' என்பர். மண நாள் பார்த்தல், மணப்பந்தல் அலங்காரம், கடவுட் பேணுதல், வந்தார்க்கு விருந்தளித்தல், மண நாளின் இரவில் மணமக்கள் தனித்த ஓர் அறையில் கூடுதல் முதலிய சடங்குகள் இடம் பெறுகின்றன. மணவிருந்தில் உளுந்து கலந்த சோறும், இறைச்சி கலந்து நெய் பெய்து ஆக்கிய வெண்சோறும் வழங்கப்பட்டன மணத்தின் அறிகுறி யாக மகளிர்க்கு அணியும் இழை ஒன்றும் உண்டு. இதனை 'ஈகை அரிய இழை' எனப் புறநானூறு கூறும். எனவே, இது தாலி கட்டுதல் போன்ற ஒரு வழக்கினைப் புலப்படுத்தும் தீவேட்டு மணம்புரிதலும் உண்டெனக் கருதற்கும் சில குறிப்புகள் உள (குறு. 106). புதுமணப் பெண் புக்ககத்தில் தலைவனுக்கு உணவாக்குதல் ஒரு சடங்காகும். அவள் பாலை உலையாக வைத்துச் சமைத்த உணவை மணமகன் உண்டு மகிழ்வன். கற்புடை மனைவியால் கணவனின் வாழ்வு சிறக்

கிறது, விருந்தினரை உபசரித்தல், விருந்துவரக் கரைந்த காக்கைக்குப் பலியிடுதல், மாலையில் மகளிர் மனையில் விளக்கு ஏற்றி வணங்குதல் முதலியன மகளிர் செயல்களாம்.

பொருள் முயற்சியும் போரும்

மக்கள் மேற்கொள்ளும் பொருள் முயற்சிகளில் போரும் ஒன்று. போர்க்கு முன் அறிவிப்பு செய்தல், பசுவைக் கவர்தல் என்பன இதன் முன் நிகழ்ச்சிகள். அரசன் பாசறையில் தங்கிப் போர்புரிவன். பகைவன் ஊரைத் தரைமட்டமாக்கி, அதில் கழுதை ஏரால் உழுது வெள்ளை வரகும் கொள்ளும் வித்துவர். போரில் புண்பட்ட வீரரின் புண்களைப் பேயணுகாமல் காப்பதற்குச் சில சடங்குகள் செய்வதுண்டு. 'சிறு சோற்று விழவு' 'பெருஞ்சோற்று விழவு' என்பன போரை ஒட்டி அரசன் வீரர்க்கு வைக்கும் விருந்துகளைக் குறிக்கும். வீரர்க்குக் கள் வழங்குதலில் வழிவழிப் போர்த்தொண்டு புரிவார்க்கு முதலில் அரசன் அளிப்பான்.

நாள்கோள் பார்த்தலும் நற்சொல் கேட்டலும்

போர் நிகழ்ச்சிகளின்போதும், பிற முயற்சிகளில் ஈடுபடும்போதும் நாள்கோள் பார்த்து வினை தொடங்குதல், பல்வகை நிமித்தங்கள் பார்த்தல் வழக்கம். நிமித்தம் 'புள்' என்றும் கூறப்படும். நிமித்தங்களில் நன்னிமித்தம் தீநிமித்தம் என்பனவற்றைச் சில பாடல்கள் விவரிக்கின்றன. முதுபெண்டிர் நெல்லும மலரும் தூவி மனையிடத்தே விரிச்சி கேட்டலும் உண்டு. விரிச்சி என்பது நற்சொல்லாம். பல்லியின் சொல்லும் அவர்க்கு நிமித்தமாகிறது. கனவும போற்றினர். கனவில் தெய்வங்களும் காட்சி நல்குகின்றன.

மரணத்தின்பின் நிகழும் சடங்குகள்

வாழ்வில் மட்டும் அன்றிச் சாவிலும், அதன்பின்பும் கூடச் சடங்குகள் தொடர்கின்றன. பிணத்தை எரித்தலும், தாழியிற் புதைத்தலும் மரபு. வீர மன்னர்க்கும் மறவர்க்கும் போரில் புண்பட்டு மாய்தலே புகழ். நோயால் அவர் இறந்துவிடின், அந்தத் தீது போக அவர்தம் உடம்பைத் தருப்பையில் கிடத்தி, மார்பில் வாளால் வெட்டி, பின் அடக்கம் செய்வர். இவ்வுலக வாழ்வை வெறுத்தோர் உயிர்விடுவதற்கு வடக்கிருத்தலை மேற்கொள்வர். கணவன் இறந்தது கேட்டதும் உயிர் நீத்தார் சிலர்; வேறுசிலர் கணவருக்கு வைக்கப்பெற்ற ஈமத்தீயில்

புகுந்து உயிரை மாய்த்தனர் மற்றும் பலர் கைம்மை நோன்பு நோற்றனர் இறந்தோர்க்கும் கல் நாட்டி வழிபட்டனர்; அவர் பொருட்டுப் பிண்டம் வைத்தனர். இறந்த முன்னோர்க்கு மைந்தன் நீர்க்கடன் முதலிய செய்தலும் உண்டு.

தவ வாழ்வும் வீடுபேறும்

இங்ஙனமாக மாய்ந்துவிடும் உலகில் மாயாப் பெரு வாழ்வு பெற, மனைவியுடன் உடன் உறைந்தும் முற்றத் துறந்தும் தவவாழ்வு கொள்ளுதலைச் செய்தனர். உயர்நிலை உலகமாம் வீடுபேறு பெறுதலும் அவர்க்கு இலட்சியமாக இருந்தது. இங்ஙனமாக மக்கள் வாழ்க்கையொடு பின்னிப் பிணைந்து தெய்வ வழிபாடும் சடங்கு முறைகளும் அமைந்திருத்தலைச் சங்கப் பாடல்களில் பார்க்கக் காணலாம்.

சான்றோர் செந்நெறி காட்டுதல்

உலகம நிலைபெறவும நல்வழியிலே செல்லவும் உதவுவார் சான்றோர் ஆவர் சான்றோர், ஆன்றோர் என்பன நிறைவு என்னும் பண்படியாக வந்த பெயர்கள். நற்குண நற்செயல்களால் அமைந்தார் என்பது பொருளாம். ஆன்றோர்களால்தான் அறநெறியும் நல்வாழ்வும் உலகிற்கு உளவாகும். யாண்டு பல ஆகவும் நரையிலாமல் வாழ்ந்ததற்கு ஒரு காரணமாகத் தாம் வாழும் ஊரில் சான்றோர் பலர் வாழ்தல் தான் என்கிறார் பிசிராந்தையார். அந்தச் சான்றோர் நற்குணங்களால் அமைந்து, பணியவேண்டுமிடத்துப் பணிந்து, ஐம்புலனும் அடங்கிய நிலைமையினராய் உள்ளனராம்.

> ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
> சான்றோர் பலர் யான் வாழும் ஊரே (புற. 191 : 6-7)

என்பது பிசிராந்தையார் வாக்கு மேலும், இவர்கள் 'மன்பதை காப்ப அறிவு வலியிறுத்தும் நன்று அறி உள்ளத்தினராயும். 'தனக்கென வாழாது பிறர்க்கென வாழும்' பெற்றியராயும் விளங்கினர். இத்தகைய சான்றோர்களே 'அறங்கூறு அவையம்' முதலியவற்றில் அமர்ந்து நீதி வழங்கினர் வேள்வி செய்யும் அந்தணர்களும் அரசர்களாலும் பிறராலும் நன்கு மதித்துப் போற்றப்பட்டனர். இவர் தம் தூய வாழ்வு பிறர்க்கு எடுத்துக்காட்டாய் அமைந்தது. அருந்தவர்கள் உலகிற்கு ஆற்றும் தொண்டும் பயன் கருதாப் பெருந்தொண்டு, சுடரொடு திரிதரும முனிவர் சூரியனின் வெம்மையினின்றும் உலகைப் புரக்கின்

றனர் முக்கோல் அந்தணர் தம்மை அடுத்தார்குறை கேட்டுத் தக்கவண்ணடம் ஆறுதல் மொழி தருகின்றனர். புலவர் பெருமக்கள் மன்னர்க்கும் மற்றையோர்க்கும் தக்க சமயத்தில் அறிவுரை வழங்கி, அவர்களை நன்னெறிப்படுத்திய நிகழ்ச்சிகளும் உள்ளன.

பல்வேறு இனமும் மொழியும்

தமிழ் வழங்கும் மாநிலத்தில் பல்வேறு வகைப்பட்ட நிலைபடைத்த மக்களும், பற்பல சமயக் கோட்பாடும் வழிபாடும் கொண்டோரும் வாழ்ந்தனர் என்பது மேலே குறித்தவற்றால் நன்கு புலனாம். மன்னர்கள் வீரப் பெருந்தகைமையால் தாம் மேம்படப் பிறரை வென்றடக்கும் தொழிலில் ஈடுபட்டனர். வீர வாழ்வை மதித்துப் போற்றும் பண்பு நிலைபெற்றிருந்தது. அதனால், மக்களுக்கு இடையூறின்றி அறப்போர் நடைபெற்றமையை முன்பு கண்டோம். தொழில் பற்றி அமைந்த நாற்குல அமைப்பும் கொல்லன், குயவன் முதலிய பல பாகுபாட்டாளர்களும் மக்கள் வாழ்வுக்கு இடையூறாக அமையவில்லை. தவிரவும், பிறநாட்டாரோடும் கடல் கடந்து வந்த மக்களோடுந் தொடர்புகொண்டு வாழ்ந்ததோடன்றித் தாமும் அவரிடங்களுக்குச் சென்றனர். காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, முசிறி என்னும் பெருங் கடல்துறைப் பட்டினங்களில் பல்வேறு இனத்தாரும் இனிதே ஒத்து வாழ்ந்தனர்.

> மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்து
> புலம்பெயர் மாக்கள் கலந்து, இனிது, உறையும்
> முட்டாச் சிறப்பிற் பட்டினம் (பட்டினப். 216 - 218)

என்று காவிரிப்பூம்பட்டினத்தின் அமைதி வாழ்வு போற்றப்படுகிறது. அங்கே பல்மொழி பேசுவோர் கலந்து இனிது உறைகின்றனராம். மொழிகூட அவர் உறவுக்குத் தடையாக இல்லை. படம்புகு மிலேச்சர் நாவால் உரையாடாது கையாலும் முகத்தாலும் காட்டும் சைகையாலே வார்த்தையாடுகின்றனர் என்று முல்லைப் பாட்டில் கூறப்பட்டிருக்கிறது (முல்லைப். 65 - 66).

பிறநாடுகளில் தமிழர்

தமிழக மன்னரும் மக்களும் தமிழ் வழங்கும் வேங்கட எல்லை தாண்டி மொழிபெயர் தேசங்களின் வழியே இமயம் வரையிலும், அதற்கு அப்பாலும்கூடச் செல்லுகின்றனர். கடல் கடந்த நாடுகளான

ஈழம், காழகம், யவனம் என்னும் தேசத்தாருடனும் கலந்து உறவாடி வாணிகத் தொடர்பு கொள்கின்றனர் 'கங்கை வங்கம் போகுவர் கொல்லோ' என்பதனால் கங்கை முதலிய பேராறுகளிலும் கப்பலில் சென்றனர் என்பது தெரியவரும் ஒருசில மன்னர்கள்,

தென்குமரி, வடபெருங்கல்
குணகுட கடலா எல்லை
குன்று, மலை, காடு, நாடு
ஒன்றுபட்டு வழிமொழிய
கொடிது கடிந்து கோல் திருத்தி (புற 17 : 1-5)

ஆட்சி புரிந்தனர்.

தமிழ் கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை இறந்தே (புற. 31 : 13-15)

என்பதனால் மொழி வேறுபட்ட தேசங்களிலும் மூவேந்தர் ஆட்சி சென்றிருந்தது என்பது தெளிவு சேரர் இமயத்து விற் பொறித்த செய்தி பிரசித்தமானது. பட்டினப்பாலை நீரிலும் நிலத்திலும் சென்று வணிகம் செழிக்கச் செய்த மக்கள் முயற்சியைப் பாராட்டுகின்றது.

யாதும் ஊரே ! யாவரும் கேளிர் !

இமயத்திற்கு அப்பாலும் இவ்வணிகத் தொடர்பும் தமிழ் மன்னர் ஆட்சித் தொடர்பும் அமைதலையே மக்கள் கருத்துள் கொண்டனர். மேருமலையில் அமைந்த உலக இடைகழியாம் அறைவாயைத் தாண்டி மக்கள் பொருள்வயிற் சென்றனராம் (அக 69 : 10–12., 251 : 12–19) பாண்டியனது ஆணை இமயத்திற்கு அப்பாலும் செல்லவேண்டும் என்று ஆயர் தாம் ஆடிய குரவையுள் திருமாலை வேண்டுகின்றனர்.

பாடு இமிழ் பரப்பகத்து அரவணை அசைஇய
ஆடுகொள் நேமியாற் பரவுதும் – நாடுகொண்டு
இன்இசை முரசின் பொருப்பன் மன்னி
அமைவரல் அருவி ஆர்க்கும்
இமையத்து உம்பரும் விளங்குக எனவே (கலி. 105 : 71–75)

என்பது ஆயர்தம் பெருவிருப்பம் ஆகவே தமிழ்ப் பெருமக்கள் 'யாதும் ஊராய், யாவரையும் கேளிராய்த் தழுவிக்கொண்டு வாழும் பெருங் குறிக்

கேளினர் என்பதில் சிறிதும் ஐயமில்லை

'யாதும் ஊரே ! யாவரும் கேளிர் !
தீதும் நன்றும் பிறர்தர வாரா ! (புற 191 . 1-2)

என்னும் கணியன் பூங்குன்றன் வாக்கு உபசார மொழியன்று. இஃது உணர்ச்சியொடு அமைந்ததோர் வாய்மொழி

நெல் பல பொலிக ! பொன் பெரிது சிறக்க !
விளைக வயலே ! வருக இரவலர் !
பால் பல ஊறுக ! பகடு பல சிறக்க !
பகைவர் புல் ஆர்க ! பார்ப்பார் ஓதுக !
பசி இல்லாகுக ! பிணி சேண் நீங்குக !
வேந்து பகை தணிக ! யாண்டு பல நந்துக !
அறம் நனி சிறக்க ! அல்லது கெடுக !
அரசு முறை செய்க ! களவு இல்லாகுக !
நன்று பெரிது சிறக்க ! தீது இல்லாகுக !
மாரி வாய்க்க ! வளம் நனி சிறக்க ! (ஐங்குறு 1-10)

இவையெல்லாம் தமிழ்ப் பெருமக்களின் நனிசிறந்த நாகரிக வாழ்வினை உலகிற்குப் பறைசாற்றிக் கூறும் பொன்மொழிகளாம்.

10

எண்வகை உருவ நிலை

தெய்வம் உண்டு என்னும் கொள்கை மிகுபழங் காலந்தொட்டே இருந்து வருவதாகும். தொல்காப்பியரால் உலகத்துக் கருப்பொருள்களுள் முதன்மையாக வைத்துப் போற்றப்படுவதும் அதுவே. அந்தத் தெய்வம் உலகம் எங்கும் பரந்து கரந்தும் வேறாய் வெளிப்பட்டும் விளங்கும் தனிப்பெருஞ் சிறப்புடையது. இதனை,

> ‘அகரம் முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு’

எனத் திருவள்ளுவர் முதற்குறளிலேயே தெரிவித்துள்ளார். எழுத்துக்களுக்கு எல்லாம் அகரம் முதலாவது போல உலகமும் ஆதிபகவனாகிய இறைவனை முதலாகக் கொண்டு விளங்குகிறது என்பதாம். அகரம் தனித்து நிற்கவும் பிற எழுத்துக்களை இயங்கச் செய்யவும் ஆற்றல் பெற்றுளது. அதுபோலவே இறைவன் உலகப்பொருள்களின் வேறாய் நின்றும், அவற்றின் ஊடாகக் கலந்தும் அவற்றை எல்லாம் இயங்கச் செய்யும் பேராற்றல் பெற்றவனாக விளங்குகிறான். ஆகவே, உலகம் வேறு அவன் வேறு என்று எண்ண இடமின்றி எங்கும் நிறைந்த பரம்பொருளாக அவன் திகழ்கின்றான்.

உலகம் என்பது நிலம், தீ, நீர், வளி, வான் என்னும் ஐம்பெரும் பூதங்களின் கூட்டமாய் அமைந்ததொன்றாகும்.

> ‘நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
> கலந்த மயக்கம் உலக மாதலின்’ (தொல். மரபு. 91)

என்று தொல்காப்பியர் விவரிக்கின்றார்.

> ‘மண்டிணிந்த நிலனும்
> நிலனேந்திய விசும்பும்

விசும்பு தைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சிய தகலமும்
வலியும் தெறலும் அளியும் உடையோய் :

(புறநானூறு 2 : 1 - 8)

என்று ஐம்பெரும் பூதங்களின் இயல்புகளை அரசனுடைய குணங்களோடு பொருத்திப் பேசுகிறார் முரஞ்சியூர் முடிநாகராயர். ஐம்பெரும் பூதங்களுள் ஒவ்வொன்றுமே தனித்தனிப் பேராற்றல் படைத்ததாம். இந்தப் பேராற்றல் படைத்த பூதங்கள் இறைவனின் கூறுகளாக மிளிர்கின்றன.

எல்லாப் பூதங்களும் வான்வெளியிலிருந்து தோற்றம் பெறுகிறது 'அகல் இரு விசும்பின் பாயிருள் பருகி' எனவரும் பெரும்பாணாற்றுப்படையின் முதலடிக்கு உரைவிளக்கம் தர முற்பட்ட நச்சினார்க்கினியர், 'எல்லாம் பூதங்களும் விரிந்து செல்லுதற்குக் காரணமாயுள்ள ஆகாயம்' என்று பொருள் கூறுவர். ஏகவெளியாய் ஒன்றாயிருந்த ஆகாயத்திலிருந்து காற்றுத் தோன்றுகிறது அதன்பின் தீப்பிறக்கின்றது. அடுத்து நீர். நீரிலிருந்து பாராகிய உலகம் உண்டாகிறது இறுதியாகத் தோற்றிய பாரில் நிலம், தீ, நீர், வளி, வான் என்னும் ஐந்து மூலக் கூறுகளும் இணைந்து காணப்படும். இக்காட்சியை,

'பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி !
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி !
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி !
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி !
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி !

(திருவாசகம், போற்றித் திரு 137 - 141)

என மாணிக்கவாசகர் போற்றிப் புகழ்கிறார்.

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் மேலே காணும் பெற்றியை விளக்குவார்போல

'வானின் றிழிந்து வரம்பிகன்ற
மாபூதத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும் போல்
உள்ளும் புறம்பும் உளனென்ப
கூனும் சிறிய கோத்தாயும்
கொடுமை யிழைப்பக் கோல்துறந்து
கானுங் கடலுங் கடந்திமையோர்
இடுக்கண் தீர்த்த கழல்வேந்தே!

என அயோத்தியா காண்டம் கடவுள் வாழ்த்தில் ஆகாயத்திலிருந்து ஏனைய பூதங்கள் தோன்றிப் பெருகுதலை உணர்த்தியுள்ளார். உலகம் என்பதோடு திக்குகளும் அண்டகோளங்களும் எல்லாம் அடங்கிவிடும்.

ஐம்பூதங்களாலாகிய உலகிற்கு ஒளிசெய்வன ஞாயிறும் திங்களும் ஆகும். ஒளிப் பொருளாய் விளங்கும் இவையும் இறைவன் திருவுருவத்தைக் காட்டுவனவே இவையெல்லாவற்றிற்கும் உள்ளே விளங்குவது ஆன்மாவாகிய உயிர், இவ்வாறாக நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டனையும் இறைவனுடைய எட்டுவகையான வடிவங்கள் என்பர் இவற்றை வடமொழியாளர் 'அட்டமூர்த்தம்' என்று குறிப்பிடுவர். அட்டமூர்த்தமாய் விளங்கும் தெய்வம் 'அட்டமூர்த்தி' என்று போற்றப்படுகிறது.

இறைவன் அட்ட மூர்த்தமாய் விளங்குகிறான் என்பதனைத் தேவாரம் முதலிய திருமுறைப் பாடல்களிலும் பிரபந்தப் பாசுரங்களிலும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் பல்வேறிடங்களில் போற்றி உரைக்கின்றனர். எனவே, இவை தெய்வ மூர்த்தமாய் உள்ளன என்னும் கருத்து நாயன்மார் ஆழ்வார்களின் காலத்திற்கு முன்பிருந்தே நிலவிவரும் கருத்தாகும் என்பது புலனாகும். எனவேதான் நிகண்டாசிரியர்களும் இவற்றைத் தெய்வமாகக் கொண்டு தெய்வப் பெயர்த்தொகுதியில் சேர்த்துள்ளனர்

இனித் தேவார திவ்வியப் பிரபந்தங்களில் அட்டமூர்த்தம்பற்றி வரும் பகுதிகளுள் ஒரு சிலவற்றை ஈண்டு நோக்குவோம். ஐம்பூதங்களாய் ஆண்டவன் விளங்குகிறான் என்பதனைக் குறித்துப் பேசும் பகுதிகள் மிகப்பல

'ஈறாய்முதல் ஒன்றாய்இரு ஆண்பெண் குணம்மூன்றாய்
மாறாமறை நான்காய் வரும்பூதம்மவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொடு எட்டுத்திசை தானாய்
வேறாயுடன் ஆனானிடம் வீழிம் மிழலையே' (தேவா. 1 : 11:2)

என்பது திருஞான சம்பந்தர் வாக்கு. திருநாவுக்கரசர்,

'தேசனைத் தேசங்கள் தொழநின்ற திருமாலால்
பூசனைப் பூசனைகள் உகப்பானைப் பூவின்கண்
வாசனை மலைநிலம் நீர் தீவளி ஆகாசம் ஆம்
ஈசனை எம்மானை என்மனத்தே வைத்தேனே.' (தேவா, 4 : 7:6)

என்கிறார்,

சுந்தரர் திருவாக்கிலும்,

'மண்நீர் தீவெளி கால்வரு பூதங்கள் ஆகிமற்றும்
பெண்ணோடு ஆண்அலியாய்ப் பிறவாவுரு வானவனே
கண்ணா ருண்மணியே கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அண்ணா என்னமுதே எனக்கார்துணை நீயலதே'
(தேவா 7 : 28,6)

என்றும்,

'ஒருமேக முகிலாகி ஒத்துலகம் தானாய்
ஊர்வனவும் நிற்பனவும் ஊழிகளும் தானாய்ப்
பொருமேவு கடலாகிப் பூதங்கள் ஐந்தாய்ப்
புனைந்தவனைப் புண்ணியனைப் புரிசடையி னானைத்
திருமேவு செல்வத்தார் தீமூன்றும் வளர்த்த
திருத்தக்க அந்தணர்கள் ஓதுநகர் எங்கும்
கருமேதி செந்தா மரைமேயும் கழனி
கானாட்டு முள்ளூரில் கண்டுதொழு தேனே'

(தேவா 7 : 40:2)

என்றும் வரும் பாடல்கள் நோக்கத்தக்கன.

'போற்றிஇப் புவனம் நீர்தீக் காலொடு வானம் ஆனாய்
போற்றிஎவ் வுயிர்க்கும் தோற்றம் ஆகிநீ தோற்றம் இல்லாய்'

(திருவா. திருச்சத. 70)

'பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனை'

(திருவா. கண்டப். 10)

என்றாற்போல மணிவாசகரும் இறைவன் ஐம்பூத உருவினனாய் விளங்குதலைப் போற்றுந்திறம் காணத்தகும்

நிலம், தீ, நீர், வளி, வான் என்னும் ஐம்பெரும் பூதங்களோடு சூரிய சந்திரர்களாகிய இருசுடர்களாகவும் இயமானனாம் ஆன்மாவாகவும் திகழ்ந்து எண்பேர் வடிவினனாக விளங்குதலும் இத்திருமுறைகளில் குறிக்கப்பட்டுள்ளன

'பற்றுமாகி வானுளோர்க்குப் பல்கதிரோன் மதிபார்
எற்றுநீர்தீக் காலுமேலை விண்ணிய மானனோடு
மாற்றுமாதோர் பல்லுயிராய் மாலயனும் மறைகள்
முற்றுமாகி வேறுமானான் மேயது முதுகுன்றே'

(தேவா. 1 : 53;2)

என்கிறார் திருஞானசம்பந்தர்.

'இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமான னாய்யெறியுங் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி ஆகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருவும் தம்முருவும் தாமே ஆகி
நெருநலையாய் இன்றாகி நாளை ஆகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே (தேவா. 6 . 94;1)

என்றும்,

தீயாகி நீராகித் திண்மை ஆகித்
திசைஆகி அத்திசைக்கோர் தெய்வம் ஆகி
தாயாகித் தந்தையாய்ச் சார்வும் ஆகித்
தாரகையும் ஞாயிறும்தண் மதியும் ஆகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தின் நின்ற
இரதங்கள் நுகர்வானும் தானே ஆகி
நீயாகி நானாகி நேர்மை ஆகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே'

(தேவா. 6 . 94 : 5)

என்றும் வருவன திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய திருத்தாண்டகம்.

இங்கே 'அட்டமூர்த்தி ஆகி' என்று 'அட்டமூர்த்தி" என்னும் நாமத்தையும் குறித்துள்ளார்.

'எட்டுமூர்த் தியாய் நின்றியலும் தொழில்
எட்டு வான்குணத் தீசனெம் மான்தனை
எட்டு மூர்த்தியும் எம்மிறை எம்முனே
எட்டு மூர்த்தியும் எம்முள் ஒடுங்குமே

(தேவா. 5 : 89 : 8)

எனவரும் தனித்திருக்குறுந்தொகையில் 'எட்டுமூர்த்தி" என்று திருநாவுக்கரசர் சுட்டியுள்ளமையும் காணத்தக்கது.

'தரிக்குந் தரைநீர் தழல்காற் றந்தரம்
சந்திரன் சவிதா இயமானன் ஆனீர்"

(தேவா. 7 : 3 : 9)

என்கிறார் சுந்தரர்.

'நிலர்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பஃதெனத் தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ."

(திருவா. தோணோக்கம் - 5)

எனவரும் மாணிக்கவாசகரின் திருத்தோணோக்கம் பற்றிய பகுதியில் உள்ள இப்பாடலில் எண்வகையாய் இயைந்து விளங்கும் ஈசன் திறம் போற்றப்பட்டுள்ளது.

ஆழ்வார்களின் திருப்பாசுரங்களிலும் திருமால் ஐம்பெரும் பூதங்களாயும் பிறவாறும் கலந்து விளங்குதலை எடுத்துரைக்கும் பகுதிகள் பலவாயுள்ளன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

'இறையும் நிலனும் இருவிசும்புங் காற்றும்
அறைபுனலும் செந்தீயும் ஆவான் - பிறைமருப்பின்
பைங்கண்மால் யானை படுதுயரம் காத்தளித்த
செங்கண்மால் கண்டாய் தெளி

(இயற்பா - முதல் - அந். 29)

'உலகும் உறகிறந்த ஊழியும் ஒண்கேழ்
விலகு கருங்கடலும் வெற்பும் - உலகினில்
செந்தீயும் மாருதமும் வானும் திருமால்தன்
புந்தியில் ஆய புணர்ப்பு

(இயற்பா - முதல், அந். 61)

இவை இரண்டும் பொய்கையாழ்வார் திருவாக்கு.

'உலகமும் ஊழியும் ஆழியும் ஒண்கேழ்
அலர்தரும் செந்தீயும் ஆவான் - பலகதிர்கள்
பாரித்த பைப்பொன் முடியான் அடியிணைக்கே
பூரித்தென் நெஞ்சே புரி.

(இயற்பா மூன். அந் 44)

என்கிறார் பேயாழ்வார் முதலாழ்வார்கள் காலத்திலேயே இத்தகு கருத்துத் தோன்றியுள்ளது என்பதைக் காணும்போது இது ஒரு பழமையான கொள்கையேயாம் என்னலாம்.

'நீயே உலகெலாம் நின்னருளே நிற்பனவும்
நீயே தவத்தேவ தேவனும் - நீயே
எரிசுடரும் மால்வரையும் எண்டிசையும் அண்டத்
திருசுடரும் ஆய இறை.

(இயற்பா நான்முகன் - 20)

'வானுலவு தீவளி மாகடல் மாபொருப்பு
தானுலவு வெங்கதிரும் தண்மதியும் - மேனிலவு
கொண்டல் பெயரும் திசையெட்டும் சூழ்ச்சியும்
அண்டம் திருமால் அகைப்பு.

(இயற்பா - நான்முகன். 37)

இப்பாசுரங்கள் திருமழிசைப்பிரான் அருளிய நான்முகன் திருவந்தாதியில் காணப்படுகின்றன இவ்வாழ்வார் பாடிய திருச்சந்தவிருத்தப் பிரபந்தத்தின் தொடக்கமே திருமால் ஐம்பெரும் பூதங்களாய் நிற்கின்ற காட்சிதான். அம்முதற் பாடல் வருமாறு :

'பூநிலாய ஐந்துமாய்ப்
  புனற்கண் நின்ற நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய்ச்
  சிறந்தகா லிரண்டுமாய்

மீநிலாய தோன்றுமாகி
  வேறு வேறு தன்மையாய்
நீநிலாய வண்ணம் நின்னை
  யார்நினைக்க வல்லரே'

என ஐம்பூதங்களின் வளர்நிலை, கிடக்கைமுறைகளையும் தெளிவு படுத்திப் பாடியுள்ளார்.

திருமங்கை மன்னன் அருளிய பெரிய திருமொழியில் திருமால் ஐம்பெரும் பூதங்களாயும பிறவாயும் விளங்குதலைப் பல இடங்களில் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். இவர் அருளிய திருநெடுந்தாண்டகப்பிரபந்தத்தின் தொடக்கமே எம்பெருமான் பல்வேறு உருவநிலைகளில் காட்சியளிப்பதை எடுத்துக்காட்டுவதாயுள்ளது.

'பவ்வநீர் உடையாடை யாகச் சுற்றிப்
  பாரகலம் திருவடியாப் பவனம் மெய்யா
செவ்விமா திரமெட்டும் தோளா அண்டம்
  திருமுடியா நின்றான்பால் செல்லகிற்பீர்'

(பெரியதிரு 6 6 : 3)

'திருவாழ் மார்வன் தன்னைத் திசைமண்நீர் எரிமுதலா
உருவாய் நின்றவனை ஒலிசேரும் மாருதத்தை
அருவாய் நின்றவனைத் தென்னழுந்தையில் மன்னிநின்ற
கருவார் கற்பகத்தைக் கண்டுகொண்டு களித்தேனே

(பெரியதிரு. 7 6 : 7)

'நீரழல் வானாய் நெடுநிலம் காலாய்
நின்றநின் நீர்மையை நினைந்தோ!,

(பெரிய. 10 : 9 : 9)

இனித் திருநெடுந்தாண்டகப் பாசுரங்களில் வரும் திருமால் திருவுருவக் காட்சியை நோக்குவோம்

'மின்னுருவாய் முன்னுருவில் வேதம் நான்காய்
  விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தானாய்,
பின்னுருவாய் முன்னுருவில் பிணிமூப் பில்லாப்
  பிறப்பிலியாய் இறப்பதற்கே எண்ணாது எண்ணும்
பொன்னுருவாய் மணியுருவில் பூதம் ஐந்தாய்ப்
  புனலுருவாய் அனலுருவில் திகழும் சோதி,
தன்னுருவாய் என்னுருவில் நின்ற எந்தை
  தளிர்புரையும் திருவடி என்தலை மேலவே'

'பாருருவில் நீர்எரிகால் விசும்பும் ஆகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவில் மூவருமே என்ன நின்ற
இமையவர்தம் திருவுருவே றெண்ணும்போது
ஓருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ
ஒன்றுமா கடலுருவம் ஒத்து நின்ற
மூவுருவும் கண்டபோது ஒன்றாம் சோதி
முகிலுருவம் எம்மடிகள் உருவம் தானே

(திருநெடுந் 1-2)

திருவாய்மொழி ஆயிரத்திலும் சடகோபர் எம்பெருமான் ஐம்பூத வடிவினனாயும் பிறவுருவாயும் திகழ்தலை உளமாரப் போற்றியுள்ளார்.

'திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசைப்
படர்பொருள் முழுவது மாய்அவை யவைதொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவை உண்ட சுரனே.

(திருவாய். 1 : 1 : 7)

'கரவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை
வரனவில் திறல்வலி அளிபொறை யாய்நின்ற
பரனடி மேல்குரு கூர்ச்சட கோபன்சொல்
நிரனிறை ஆயிரத்து இவைபத்தும் வீடே.'

(திருவாய். 1 : 1 . 11)

'காண்கின்ற நிலமெல்லாம் யானே என்னும்
காண்கின்ற விசும்பெல்லாம் யானே என்னும்
காண்கின்ற வெந்தீயெல்லாம் யானே என்னும்
காண்கின்ற இக்காற்றெல்லாம் யானே என்னும்
காண்கின்ற கடலெல்லாம் யானே என்னும்
காண்கின்ற கடல்வண்ணன் ஏறக்கொலோ
காண்கின்ற உலகத்தீர்க் கென்சொல்லுகேன்
காண்கின்ற என்காரிகை செய்கின்றவே.

(திருவாய் 5 : 6 . 3)

'நீராய் நிலனாய்' எனத் தொடங்கும் *திருவாய்மொழிப் பாசுரங்கள்* **இறைவன் அட்டமூர்த்தமாய் அனைத்துப்பொருளினும் விளங்குதலை**

அழகுற எடுத்துக்காட்டுகின்றன.

'நீராய் நிலனாய் தீயாய்க்
காலாய் நெடுவானாய்
சீரார் சுடர்கள் இரண்டாய்ச்
சிவனாய் அயனானாய்
கூரார் ஆழி வெண்சங்
கேந்திக் கொடியேன்பால்
வாராய் ஒருநாள் மண்ணும்
விண்ணும் மகிழவே!' (திருவாய் 6 9 1)

'விண்மீ திருப்பாய்! மலைமேல்
நிற்பாய்! கடல்சேர்ப்பாய்!
மண்மீ துழல்வாய் இவற்றுள்
எங்கும் மறைந்துறைவாய்!
எண்மீ தியன்ற புறவண்
டத்தாய்! எனதாவி,
உண்மீ தாடி உருக்காட்
டாதே ஒளிப்பாயோ!' (திருவாய். 6 9:5)

'உலகில் திரியும் கரும
கதியாய் உலகாய்
உலகுக் கேயோர் உயிரும்
ஆனாய் புறவண்டத்து
அலகில் பொலிந்த திசைபத்
தாய அருவேயோ,
அலகில் பொலிந்த அறிவி
லேனுக் கருளாயே!' (திருவாய் 6:9.7)

சடகோபர் அருளிய திருவாசிரியத்தின் இறுதிப் பாசுரம் மும்மூர்த்திகளும், ஐம்பூதங்கள் முதலிய அனைத்துமாய் விளங்குபவன் திருமாலே என்று அவர்தம் பரத்துவம் எடுத்து இயம்புவதாயுள்ளது.

'நளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும்
தளிரொளி இமையவர் தலைவனும் முதலா
யாவகை உலகமும் யாவரும் அகப்பட
நிலநீர் தீகால் சுடரிரு விசும்பும்
மலர்சுடர் பிறவும் சிறிதுடன் மயங்கி

ஒருபொருள் புறப்பா டின்றி முழுவதும்
அகப்படக் கரந்துஓர் ஆலிலைச் சேர்ந்தஎம்
பெருமா மாயனை யல்லது
ஒருமா தெய்வம்மற் றுடையமோ யாமே!'

இவ்வாறாகச் சைவ, வைணவ பத்திப் பாடல்கள் பல்கிப் பெருகிய காலத்திற்கு முன்பிருந்தே இறைவன் ஐம்பெரும் பூதங்களாயும், அட்டமூர்த்தமாயும், உலகில் உள்ள சராசரம அனைத்துமாயும் விளங்குப கருத்து நாட்டில் நடையாடத் தொடங்கியிருத்தல் வேண்டும். இப்பத்தி இலக்கியங்களை அடுத்துப் பிறந்த நிகண்டு ஆசிரியர்களும் இறைவனின் அட்டமூர்த்தமாய் விளங்கும் நிலம், நீர், தீ, வளி, வான், சூரியன், சந்திரன், இமயமானன் என்பவை குறித்து வழக்கிலிருந்துவரும் பெயர்களுக்கும் தெய்வப் பெயர்த் தொகுதியில் இடமளித்தனர் என்று கருதலாம் திவாகரர் பல்பொருட்கூட்டத் தொரு பெயர்த்தொகுதியில்,

'பார், நீர், தேயு, வாயு ஆகாசம்,
சூரியன், மதி, இயமானன் அட்டமூர்த்தம்'

என அட்டமூர்த்தம் குறித்து விளக்கந்தந்துள்ளமையும் நோக்கத் தக்கதாம்.

11

தமிழ் நூல்களில் கால வகை விளக்கம்

முப்பெருங்காலம்

காலம் என்பதைப் பொதுவகையாக நோக்கின், முன்சென்ற காலமும், இப்பொழுது நிகழும் காலமும், இனி வருங்காலமும் ஆக மூன்று கூறுபட்டுள்ளமை தெளிவு.

> 'காலம் தாமே மூன்றென மொழிப.'
>
> 'இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
> அம்முக் காலமும் ... ... (தொல். சொல். வினை. 2,3)

எனத் தொல்காப்பியர் தமக்கு முன்பும் நீண்ட நெடுங்காலமாக இப் பாகுபாடு உள்ளமையை எடுத்துக் காட்டுகின்றார். இவ்வாறு இறந்தும் பிறந்தும் எதிர்நோக்கியும் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் காலவெள்ளத்தையும் அணையிட்டு அளந்து பார்க்கத் தமிழ்நாட்டு அறிஞர் பெருமக்கள் முயன்றுள்ளனர்.

மிக மிகச் சிறிய காலக்கூறாகிய நொடிப்பொழுது முதற்கொண்டு அளவுபடாது மிகப்பெருகிய ஊழிக்காலம் வரையில் நம் மூதாதையரின் மதிப்பீடு சென்றிருக்கிறது. இவற்றிற்கு இடையில்தான் எத்தனை எத்தனை காலக் கணிப்புகள் ! தமிழகத்து வழங்கிய - தமிழ்நூல்களில இடம்பெற்ற - காலக்கணிப்புகள் எல்லாவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாக ஆழ்ந்து நோக்குவோம்.

மாத்திரை

மாத்திரையின் பொது இயல்பு

கால அளவில் மிகச் சிறிய பொழுது மாத்திரை ; கண் இமைக்கும் காலம், கையால் நொடிக்கும் காலம் ஒரு மாத்திரையாம்

> 'கண்இமை, நொடி என அவ்வே மாத்திரை
> நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறே' (தொல் நூல் 7)

என்பது தொல்காப்பியம் தொல்காப்பியர் குற்றெழுத்து முதலிய எழுத்துக்களின் மாத்திரை வகுக்குமிடத்து மாத்திரையின் பொது இயல்பை மேற்குறித்த சூத்திரத்தால் விளக்கியுரைத்தார்.

மாத்திரை என்பது எழுத்துக்களின் ஒலி அளவு

எழுத்துக்களுக்குரிய மாத்திரை அளவைக் குறிக்குமிடத்து, மாத்திரை என்பதற்கு 'அளபு' 'அளவு' என்னும் பெயர்களை அவர் ஆண்டுள்ளார் 'ஓரளவு இசைக்கும் குற்றெழுதது' (தொல். நூல் 3) 'ஈரளவு இசைக்கும் நெட்டெழுத்து' (தொல். நூல். 4) 'மெய் தெரிவளி இசை அளவு நுவன்றிசினே' (தொல். பிறப். 20) என்று இவ்வாறு பல இடங்களில் சுட்டியுள்ளமை காணலாம்

செய்யுள் உறுப்பு - மாத்திரை

செய்யுளுக்குரிய ஓர் உறுப்பாகவும் 'மாத்திரை' என்பதனைப் பொருளதிகாரத்தில் செய்யுளியலிலே குறிபபிட்டுள்ளார் தொல்காப்பியர்.

> 'மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ'
> (தொல். பொரு. செய். 1)

> 'மாத்திரை அளவும் எழுத்தியல் வகையும்
> மேற்கிளந் தன்ன என்மனார் புலவர் (தொல் பொரு. செய் 2)

என்பன செய்யுளியல் முதற்கண் உள்ள சூத்திரங்கள். இங்கே 'மேற்கிளந்தன்ன' என்பது தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் முதல் இயலாகிய நூன்மரபில் கூறிய எழுத்துக்களின் மாத்திரை அளவினையும் எழுத்துக்களின் வகைகளையும் குறிப்பிட்டவாறாம்.

மாத்திரை சொற்பொருள்

'மாத்திரை' என்பதனை அளவு என்னும் பொருளில் சங்க இலக்கியம் முதலியனவும் குறித்துள்ளன.

'முலைக்கோள் விடாமாத்திரை' (பொருந. 14)
'கேட்டல் மாத்திரை அல்லது, யாவதும்
காண்டல் இல்லாது யாண்டு பல கழிய' (புற. 216 : 1-2)

என வருவன இதற்குச் சான்றாம்

மிக விரைவில் நிகழும் செயலை மாத்திரை அளவில நிகழ்ந்ததாக உரைத்தல் மரபு

'மாத்தி ரைக்குள் அருளு மாற்பேறரே' (தேவா 5 : 60:3)

என்றும்,

'நொடிப்பது மாத்திரை நீறு எழக் கணை நூறினார்'
(தேவா. 7 . 44:1)

என்றும் பல இடங்களில் மாத்திரை என்னும் சொல்லைத் தேவார ஆசிரியர்கள் ஆண்டுள்ளனர்.

நொடியும் கணமும்

மாத்திரை என்பதனை, 'நொடி', 'கணம்' எனவும் வழங்குவர்.

'நொடிதரு பாணிய பதலையும்' (மலைபடு. 11)
'மாத்திரையைச் சொல்லும் தாளத்தையுடைய
ஒருகண் மாக்கிணை' (மலைபடு. 11, நச். உரை)
நொடி வரையின் மூளாரி செய்து' (தேவா 3 : 69.2)
'நொடியாம் அளவும் எய்தான்' (பெரிய திரு. 5 : 10:5)
'மனமே வாக்கே கருமமே,
ஒருமா நொடியும் பிரியான்' (திருவாய். 10 7:8)

முதலியனவாக நொடி' என்பது இங்கு மாத்திரை என்னும் பொருளில் வருகிறது.

'குணம் என்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது' (திருக்குறள், 3.9)

கணம் படித்துஏத்தி, கங்குலும் பகலும்
கருத்தினால் கைதொழுது எழுவேன் ' (தேவார. 7:14:8)

இவ்விடங்களில் 'கணம்' என்பது மாத்திரை என்னும் சிறிய கால அளவையைச் சுட்டுதல் காணலாம்.

கால நுட்பம்

கடிகை நாழிகையின் மூலக் கூறு

கடிகை, நாழிகை என்பன மாத்திரையை அடுத்து வரும் சற்றுப் பெரிய கால அளவை. இதுவே பொழுதை அளவிடும் சிறிய மூல அளவை 'அல்லும் பகலும் அறுபது நாழிகையும்' என்பது உலக வழக்கு

'யாண்டும் மதியும், நாளும் கடிகையும்' (சிலப் 27:1)

என்பதனால் கடிகைகள் சேர்ந்து 'நாள்' என்னும் காலவரையறை உளவாதல் பெறப்படும்.

'நாழிகையும் பல ஞாயிறு ஆகி' (3 107:7)

என்பது தேவாரம்

நாழிகைகள் சேர்ந்து ஆகும் கால அளவை யாமம்.

'ஊழியும் யாண்டு எண்ணி யாத்தன; யாமமும்
நாழிகையானே நடந்தன '

என்பது நான்மணிக்கடிகை (71).

நாழிகைக் கணக்கர்

நாழிகையை அளவிட்டு உரைப்போர் 'நாழிகைக் கணக்கர்' எனப் படுவர் இவர்கள் நீர்க் கன்னலின் உதவியால் நாழிகையைக் கணக்கிடுவர் இவருக்குக் 'கடிகையார்' என்னும் பெயருமுண்டு. நாழிகை அளவிடும் கருவியாகிய கன்னல் என்பது 'நாழிகை வட்டில்' என்று கூறப்படும். இதனால் இவரை நாழிகை வட்டிலிடுவார்' என்ப. நாழிகைக் கணக்கராகிய கடிகையார் பொழுது அறிந்து உரைக்கும் மரபினைப் பின்வரும் நூற்பகுதிகள் புலப்படுத்துகின்றன:

'பொழுது அளந்து அறியும் பொய்யா மாக்கள்
தொழுதுகாண் கையர், தோன்ற வாழ்த்தி,
எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்! நின்
குறுநீர்க் கன்னல் இனைத்து என்று இசைப்ப ' (முல்லை. 55-58)

'நேமகள் கோயில் குறுநீர்க் கன்னலின்
யாமம் கொள்பவர் ஏத்தொலி அரவமும்.' (மணி 7.64-65)

கடிகை ஆரம்

பெருங்கதையில் கழுத்தில் அணியும் ஓர் அணியைக் 'கடிகை ஆரம்' என்று குறிப்பிடுகிறார்.

'கடிகை ஆரம் கழுத்தில் மின்ன' (பெருங். 38:123)

என்பது பெருங்கதை. இதற்கு, 'நாழிகையைப் புலப்படுத்தும் கருவியையுடைய ஆரம். 'கடிகைவாள் ஆரம் மின்ன' (சீவக 2808) கடியாரம் என இக்காலத்து இப்பெயர் வழங்குகின்றது' என்று டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் குறிப்பு வரைந்துள்ளார்.

இடைக்கால நூல்களில் நாழிகை வழக்கு

தேவாரம், திவ்ய பிரபந்தம், முதலிய நூல்களும் நாழிகைப் பொழுதினைக் குறிப்பிடுகின்றன. இந் நாழிகையானது 'மணி' என்றாற் போல, ஒரு நாளின் சிறுகாலக் கூறு என்பது தெளிவாம்.

'காலமும் நாழிகையும்
நனிபள்ளி மனத்தின் உள்கி' (தேவார 7 97:10)

'ஊழியின் பெரிதால் நாழிகை என்னும்' (திருவாய். 2:7:4)

'தொண்டை மன்னவன் திண்திறல் ஒருவற்கு
உளங்கொள் அன்பினொடு இன் அருள் சுரந்து
ஓர்நாழிகை ஏழுடன் இருப்ப' (பெரியதிரு. 5:8:9)

'கரிய நாழிகை ஊழியின் பெரியன' (பெரியதிரு 8:5.6)

'முத்துஆர் கொங்கை புணர்ந்து இராநாழிகை
மூவேழு சென்றபின் வந்தாய்' (பெரியாழ்வார். 3:1:10)

'நாழிகை கூறுஇட்டுக் காத்து நின்ற
அரசர்கள் தம் முகப்பே
நாழிகை போகப் படைபொருதவன் (பெரியாழ்வார் 4:1.8)

'பலபல ஊழிகள் ஆயிடும்; அன்றி ஓர் நாழிகையைப்
பலபல கூறிட்ட கூறு ஆயிடும்.' (திருவிருத்தம். 16)

முழுத்தம் (முகூர்த்தம்)

குறித்த ஒரு பொழுதை முகூர்த்தம் என்பர். இதுவே 'முழுத்தம்' என இலக்கிய ஆட்சி பெற்றுள்ளது. இது $3\frac{3}{4}$ நாழிகை அல்லது $1\frac{1}{2}$ மணி அளவு கொண்டது என்பர். ஆனால் சைனர்கள் 2 நாழிகை கொண்ட காலப்பகுதியை முகூர்த்தம் என்பர். இந்தக் கால அளவு தமிழ்ப் பேரகராதியில் மேலே சுட்டியவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'இருநில மருங்கின் மன்னர் எல்லாம், நின்
திருமலர்த் தாமரைச் சேவடி பணியும்
முழுத்தம் ஈங்கிது' (சிலப. கால்கோள். 28-30)

என்பது செங்குட்டுவனுக்குக் கணி வடநாடு செல்வதற்குக் குறித்த காலமாகும்.

'ஊழ்வினை துரப்ப ஓடி ஒன்றுமூழ்த் தந்திருள்ளே"
(சீவக சிந் 13 : 165)

என முழுத்தம் என்பது மூழ்த்தம் என்றும் வழங்கப்படுதல் காணலாம். இது 'ஓரை' எனவும் வழங்கும்

'மங்கலப் பெருங்கணி வகுத்த ஓரையான்" (சீவக சிந். 2411)
'ஊழி யன்றியும் உறுவினை ஓரையின் முடிப்பான்
வேழவேந்தற்கு விழுப்பெருங்கணி எடுத்து உரைப்பான்'
(சீவக. சிந். 12 : 9)

எனவரும் இடங்களில் 'ஓரை' என்பது குறிப்பிட்ட ஒரு காலப்பொழுதினைச் சுட்டுகின்றன.

ஓரை என்பது இராசியைச் சுட்டல்

'மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை" (தொல். களவு 44)

எனத் தொல்காப்பியர் கூறுகிறார். இங்கே குறித்த 'ஓரை" என்பது நட்சத்திரம் பொருந்தி வரும் மூகூர்த்த காலத்தைக் குறித்ததாதல் வேண்டும். 'இரேவதி வியாழ ஓரை" (சீவக சிந் 3 : 14) எனவரும் சிந்தாமணித் தொடரும் ஈண்டு ஒப்பு நோக்கத்தகும்.

தொல்காப்பியர் சுட்டும் ஓரை என்பது கோள் எனப்படும் இராசியைக் குறித்ததாம் எனக் கொள்வர் பேராசிரியர் 'தீய இராசியின் கண்ணும் தீயநாளின் கண்ணும் கூட்டத்தைத் துறந்த ஒழுக்கம் தலைவற்குக் களவொழுக்கத்தின்கண் இல்லை எனவே, கற்பின்

உள என்றவாறு' எனப் பேராசிரியர் மறைந்த ஒழுக்கத்து" எனத் தொடங்கும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு விளக்கம் எழுதியுள்ளார்

யாமம்

யாமம் – இரவின் கால்கூறு

'யாமம்' என்பதனை ஓர் இரவின் காற்கூறாக மதுரைக்காஞ்சி கூறும் மதுரைமாநகரில் இரவின் ஒவ்வொரு யாமத்தும் நிகழ்ந்த செயல்களை விரிவாக இப்பாடல் தருகிறது (615 – 686).

முதல் யாமத்தை 'முந்தை யாமம்' (620) என்கிறார். முந்தை யாமம் சென்றபின், மக்கள் தம் தொழில் முடித்துப் படுக்கைக்குச் செல்லுதலை உணர்த்துகின்றார் இந்த யாமம் 'பானாள் கொண்ட கங்குல் இடையில' முடிவுறுகின்றது. இங்கே பானாள் என்பது நடு இரவைக் குறிக்கும்

அரைநாள்

இரவின் நடுப்பகுதியை 'அரைநாள்" (பெரும்பாண். 111), (நடுநாள்" (முல்லை 50 என்றும் கூறுவர் இங்கே அரைநாள், நடுநாள் என்பன இரவுப் பொழுதின் நடுப்பகுதியைக் குறித்ததாகவே கொள்ள வேண்டும். நண்பகல் பொழுதை, ஒருதிறம் சாரா அரைநாள் அமையத்து' என நெடுநல்வாடை (74) குறிப்பிடுகிறது, எனவே, பகலின் நடுப்பகுதியும் அரைநாள் என வழங்கப்பெற்றமை பெறப்படும்.

மூன்றாம் யாமம்

இதன்பின் மூன்றாம் யாம நிகழ்ச்சிகளில் ஊர்காப்பாளர் துயிலின்றிக் காவல் புரிதலைக் கூறி இங்ஙனம் இந்த யாமமும் பகுத்து அறியும் வகையில் சென்றது என்று குறிப்பாராய் மற்றை யாமம் பகல் உறக் கழிப்பி' (653 என்பர். பகல் உறக்கழித்தலாவது யாம அளவைப் பிரித்து உணரும் வகையில் போக்கி என்பதாம். மூன்றாம் யாமத்து உலவுபவர் ஊர்காப்பாளர் மட்டும் அல்லர்; பேயும், அணங்கும் பிற தெய்வங்களும் திரிவதும் இந்த யாமத்தில்தானாம். எனவே, இம் மூன்றாம் யாமம் 'கடவுள் வழங்கும் கையறு கங்குல்' (651) எனப்படுகிறது இடையாமத்து உலவும் ஊர்காப்பாளரை, 'யாமங் கொள்பவர்" (புறம் 37 : 9) எனப் புறநானூறு கூறுகிறது

இரவின் கடையாமம்

மூன்றாம் யாமம் கழிந்ததும் மதுரைமாநகரம் துயிலுணரத் தொடங்கி விடுகிறது. முதலில் 'ஓதல் அந்தணர் வேதம் பாடும் (655) ஒலி எழுகிறது. யாழோர் முதலிய இசைகாரர் இசை எழுப்புகின்றனர். கடை, மனை முதலிய இடங்களில் மெழுகுதல் முதலிய பணிகள் தொடங்கப்படுகின்றன. சூதர் மாகதர், வேதாளிகர் வாழ்த்தெடுக்கின்றனர். நாழிகை சொல்லுவார் நாழிகையின் அளவைச் சொல்லுகின்றனர்.

'வேதாளிகரொடு நாழிகை இசைப்ப' (மதுரை 678) எனகிறார் மாங்குடி மருதனார். இங்கே நாழிகை என்பது, நாழிகைப் பொழுது சென்றது அறிந்து கூறும் கடிகையாரைக் குறிக்கும். ஆகவே, இவர் ஒவ்வொரு நாழிகையும் சென்றதும், அவ்வந் நாழிகை கழிந்த பொழுதை யாவரும் உணர வெளிப்படுத்திவந்தனர் என்பது போதரும். இதனை,

'பூமென் கணையும் பொருசிலையும் கைக்கொண்டு
காமன் திரியும் கருவூரா! - யாமங்கள்
ஒன்றுபோய், ஒன்றுபோய், ஒன்றுபோய் நாழிகையும்
ஒன்றுபோய், ஒன்றுபோய், ஒன்று'

(அடியார்க்குநல்லார் மேற்கோள். சிலப் 5 : 49)

எனவரும் பழம்பாட்டாலும் உணரலாம்.

வைகறை

கடையாமத்தின் இறுதியே வைகறைப் பொழுது 'வைகறை யாமம் துயில் எழுந்து' என்பது ஆசாரக்கோவை (4). மக்கள் வைகறையில் துயிலெழுவதற்கு உதவியாக வைகறை நெருங்கிவிட்டது என்பதனைக் கோழிகள் கூவி அறிவித்துவிடுகின்றன.

'பொறிமயிர் வாரணம் வைகறை இயம்ப' (673) என்பது மதுரைக் காஞ்சி. மேலும், இவ் வைகறைப் பொழுதை இரவு நீங்கிச் செல்லும் காலம் என்றும் இம் மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.

'இரவுத் தலைப்பெயரும் ஏம வைகறை.' (மதுரை 686)

இதன் பின், காலைப்பொழுது தோன்றுகிறது.

'வைகறை யாமம் வாரணம் காட்ட
வெள்ளி விளக்க, நள்இருள் கடிய'

என்பது சிலப்பதிகாரம் (6 . 116 117)

சிலப்பதிகாரம் முதலியவற்றில் இரவு யாமங்கள்

இரவில் காதலர்களைத் துயிலவிடாதபடி காமதேவன் கருப்பு-வில்லேந்தித் திரிந்தான் என இளங்கோவடிகள், 'அந்திமாலைச் சிறப்புச் செய்காதை'யில் கூறுமிடத்து, 'யாமப் பொழுதும்' இடம் பெற்றுள்ளது.

'புள்வாய் முரசமொடு பொறிமயிர் வாரணத்து
முள்வாய்ச் சங்கம் முறைமுறை ஆர்ப்ப
உரவுநீர்ப் பரப்பின் ஊர்துயி லெடுப்பி,
இரவுந் தலைப்பெயரும் வைகறை காறும்,
அரை இருள், யாமத்தும், பகலும் துஞ்சார்,
விரைமலர் வாளியொடு கருப்புவில் ஏந்தி
மகரவெல் கொடி மைந்தன் திரிதர,
நகரம் காவல் நனிசிறந்தது என்'. (சிலப். 4 : 77-84)

இங்கே வைகறை, யாமம் என்பது வருதல் கவனிக்கத்தகும் இங்கே வைகறை என்றது வைகறை யாமமாகிய நான்காம் யாமத்தை அரைஇருள் என்பது இரண்டாம் யாமம். யாமம் — ஓர் யாமம். பகல் — அரையாமம் அதாவது மூன்றாவது யாமம்.

இராப் பொழுதின் கூறாக இங்குக் குறித்த யாமத்தைப் பற்றிய குறிப்பு மற்றைய இலக்கியங்களிலும் உண்டு.

'யாயும் பிறரும் அறியாத யாமத்து' (பெரியாழ் 10 : 5-8)
'சேண்பட்ட யாமங்கள் சேராது இரங்குதியால்'
(திருவாய்மொழி 2 : 1-2)
'யாமங்கள் தோறும் எரிவீசும் நம் கண்ணன்' (திவ்விய)
'யாமத்து எல்லைஓர் யாண்டு ஒத்து இறந்ததே'
(சீவக சிந்தா. 5 . 150)
'யாமமும் பகலும் அறியாமையால்
பூமி மாநகர் பொன்னுலகு ஒத்தவே.' (சீவக சிந்தா. 1 : 106)

சிறுபொழுது

அறுவகைச் சிறுபொழுது

மேலே குறித்தபடி யாமம், வைகறை, காலை என்றாற்போன்று வரும் பகல் இரவுப்பொழுதுகளின் சிறுகூறுகள் சிறுபொழுது என்று

கூறப்படும். காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை என அறுவகைச் சிறு பொழுதுகளாகக் காலைப் பொழுது தொடங்கிப் பகுத்துக் கூறுதல் மரபு

தொல்காப்பியத்தில் சிறுபொழுது

தொல்காப்பியர் தமது நூலில் பின்வரும் சிறுபொழுதுகளைக் குறித்துள்ளார் மாலை (தொல், பொருள். அகத். 6). 'வைகுறு விடியல்' (தொல். பொருள். அகத் 8), எற்பாடு (தொல். பொருள். அகத். 8) நண்பகல் (தொல். பொருள். அகத். 9) என்னும் சிறுபொழுது களைத் தொல்காப்பியத்துள் காணலாம். இவற்றுள் 'வைகுறு விடியல்' என்பதனை வைகறைப் பொழுதும், விடியல் ஆகிய காலையும் எனவும் இருசிறு பொழுதுகளைக் குறிப்பதாகவும் கருதுவது உண்டு.

ஐவகைச் சிறுபொழுது

> 'காலையும் பகலும், கையறு மாலையும்,
> ஊர்துஞ்சு யாமமும், விடியலும் என்றிப்
> பொழுது இடைதெரியின் பொய்யே காமம்'

எனவரும் குறுந்தொகைப் பாடலில் ஐவகைச் சிறுபொழுதுகள் இடம்பெற்றுள்ளன. இச் சிறுபொழுதுகளின் இயல்பினைத் தனித்தனியே சிறப்பித்துக் கூறுதலைச் சங்கப் பாடல்களிலும் பிற்பட்ட பாடல்களிலும் அங்கங்கே காணலாகும்.

பகல் இரவு

காலைமுதல் மாலை வரை உள்ள காலத்தைப் பகல் என்கிறோம். இது சூரியன் விளங்கும் காலம். எனவே, இவனைப் பகலை ஆக்குவோன் என்னும் பொருளில் 'பகலவன்' என்றும் கூறுவர். இங்ஙனமே இரவின் இருளை நீக்கி ஒளி செய்கிறான் சந்திரன்.

> 'பகற் செய்யும் செஞ்ஞாயிறும்,
> இரவுச் செய்யும் வெண்திங்களும்' (மதுரைக். 7–8)

எனவரும் மதுரைக்காஞ்சி அடிகள் சூரிய சந்திரரைப் பகல் இரவு ஆக்குவோராகக் கூறுகின்றன.

> ''அகல் இரு விசும்பினானும்
> பகல் விளங்குநியால் பல்கதிர் விரித்தே' (புற. 8 : 9–10)

எனச் சூரியன் பகலில் விளங்குதலைப் புறநானூறும் சுட்டுகிறது.

பகலில் ஒளிசெய்வதனால் 'எல்' என்னும் ஒளிப்பெயர் சூரியனுக்கும் 'எல்லை', எல்லி' என்னும் பெயர்கள் பகற்பொழுதுக்கும் வழங்கும்.

'எல்லையும் இரவும் எண்ணாய்' (புறம். 7 : 7)
'எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி' (பொருந. 118)
'பன்மாண் எல்லை தருநன் பல்கதிர் பரப்பி' (பொருந. 232-233)
'எல்படக் கண்போல் மலர்ந்த' (திருமுருகு. 74)
'இரவொடு எல்லியும் ஏத்துவார்' (தேவாரம்)

இவற்றுள் எல்லை தருநன்' என்பது பகற்பொழுதைத் தரும் கதிரோனைக் குறிக்கும்.

'பறவை பாட்டு அடங்கினவே, பகல்செய்வான் மறைந்தனனே'
(சிலப். கானல். 7 : 42)

'பையுள் நோய் கூரப் பகல்செய்வான் போய்வீழ'
(சிலப். கானல். 7 : 50)

எனச் சிலப்பதிகாரம் சூரியனைப் 'பகல் செய்வான்' என்று குறிப்பிடுதல் காணலாம்.

இன்ப துன்பம் போலப் பகலும் இரவும் மாறிமாறி வருகிறது என்கிறார் ஒரு புலவர்.

'இன்பமும் இடும்பையும், புணர்வும் பிரிவும்
நண்பகல் அமையமும் இரவும் போல,
வேறுவேறு இயல ஆகி, மாறு எதிர்ந்து
உள என உணர்ந்தனை ஆயின்' (அகம் 327 : 1-4)

என்பது அப் புலவர் வாக்கு.

இரவிலிருந்து பிரித்தலினால், பிரித்தல் என்னும் பொருள்படும் பகல் என்பது சூரியன் விளங்கும் காலப்பகுதிக்குப் பெயராயிற்று.

இதற்குக் காரணமான சூரியனையே 'பகல்' என்னும் பெயரால்,

'பல்மலர்ப் பூம்பொழில்
பகல் முளைத்ததுபோல்' (மணி. 4 : 92)

என மணிமேகலை கூறுகிறது.

எல்லி

'எல்லி' என்பது பகலைக்குறித்தல் ஒருபுறமிருக்க இச்சொல், இரவு என்னும் பொருளிலும் வழங்கப்பெறுகிறது.

'எல்லி வருநர் களவிற்கு' (குறுந். 47 : 3)
'எல்லி வந்து நில்லாது புக்கு' (புறம். 305 : 3)

சூரியனது ஒளி குறைந்தது என்னும் பொருளில், 'பெய்தற்கு எல்லின்று பொழுதே' (புறம். 319 : 7, எனப் புறநானூற்றில் வந்துள்ளது ஆகவே, ஒளி குறைந்து இருள் பரவி இராப்பொழுது ஒளியின்மையாதல் கருதி 'எல்லி' எனக் குறிக்கப்பட்டதோ என்பது சொல்வரலாற்று ஆய்வாளர்களின் ஆராய்ச்சிக்குரியதொன்றாகும்.

'எல்லும் எல்லின்று' (குறுந். 179 : 2) என்பது குறுந்தொகைத் தொடர், பகற்பொழுதும் மங்கியது என்பது இதன் பொருள்

அல்

எல் ஒளி இல்லாத இரவுப்பொழுதை 'அல்' என்றும் வழங்குவது உண்டு.

'அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி' (மலைபடு. 158)
'அல்சேர்ந்து அல்கி, அசைதல் ஓம்பி (மலைபடு 256)

இரவில் நடைபெறும் கடைத்தெருவை,

'அல்லங்காடி அழிதரு கம்பலை' (மதுரை. 544)

என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது இதற்கு எதிராகப் பகலில் பொருள் விற்கும் கடைகளை 'நாளங்காடி' என்பர்.

'நாளங்காடி நனந்தலைக் கம்பலை' (மதுரை. 439)

என வருதல் இதற்குச் சான்றாகும்.

அந்தி

பகற்பொழுதின் காலை, நண்பகல், மாலை என்னும முப்பகுதியும் கூறப்பட்ட இடங்களும் பல உள. பொதுவாக, 'அந்திமாலை என்று மாலைப்பொழுதை அந்தி என்று குறிப்பிடுதலேயன்றி, காலை நண்பகற்பொழுதுகளையும் 'அந்தி' என்று குறித்தலும் உண்டு. இங்கே அந்தி என்பது இருபொழுதுகள் சந்திக்கும் காலத்தைக் குறிக்கின்றது.

'காலை அந்தியும் மாலை அந்தியும்' (புறம். 34 : 8)

'நண்பகல் அந்தி நடைஇடை விலங்கலின்' (பொருந. 46)

இவற்றுள் காலை அந்தி', மாலை அந்தி' என்பன இரவும் பகலும், பகலும் இரவும் சந்திக்கும் பொழுதுகளாம். பகலும் இரவும் சேர்ந்த காலப்பகுதியே நாள் எனப் பெயர் பெறுகிறது.

நாள்

பகலும் இரவும்

'நாள் என ஒன்றுபோல் காட்டி' (குறள். 33 . 4)
'ஒருநாள் எழுநாள் போல் செல்லும்' (குறள். 126 : 9)

எனவரும் குறட் பகுதிகள் பகல் இரவு சேர்ந்த காலப் பகுதியை 'நாள்' எனக் குறிப்பிடுகின்றன

'நாள்போல் கழியல ஞாயிற்றுப் பகலே' (புறம். 65 : 12)

எனவரும் புறநானூற்றுச் செய்யுள் அடிக்குச் 'சூரியனைக் கொண்டுள்ள பகற்பொழுது முன்பு கழிந்த நாள் போலக் கழியா' என்பது பொருள். இங்ஙனம் 'நாள்' என்பது வருதல் சங்கப் பாடல களில் சிறுபான்மையே பெரும்பான்மையும் சங்கப் பாடல்களில் இப பொருளிலே வைகல்', 'பகல்' என்னும் சொற்கள் பயின்று-வந்துள்ளன.

வைகல், பகல்

வைகல் என்பது தங்குதல் என்றும் 'கழிதல்' என்றும் பொருள் தரும் சொல்லாகும். 'பகல்' என்பது பகுத்தல் என்னும் பொருள் தரும். ஒளியும் இருளும் தங்குதலும் ஒளியும் இருளும் அகலுதலும் கருதி வைகல்' என்றும், பொழுதைப் பாகுபாடு செய்தல் கருதிப் 'பகல்' என்றும் வழங்கும் வழக்கம் தோன்றியதாதல் வேண்டும்

'வைகல் வைகல் கைகவி பருகி' (பொருந. 158)

எனவும்,

'ஒல்வ கொடாது ஒழிந்த பகலும்' (நாலடி. 16:19)
'ஒன்பது குடையும் ஒருபகல் ஒழிந்தவன்' (சிலப். 27:121)

எனவும்,

'வைகலும் வைகல் வரக்கண்டும், அஃது உணரார்
வைகலும் வைகலை வைகும் என்று இன்புறுவர்—
வைகலும் வைகற்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்து உணரா தார்' (நாலடி 4:9)

எனவும் வரும் பாடற்பகுதிகளால் மேற்குறித்த செய்திகள் புலப் படுகின்றன

நாள் திங்கள் ஆகும்

மேலும், இந் நாள் என்னும் பொழுது திங்களின் அங்கமாகவும் உள்ளது. ஔவையார், அதிகமான் நெடுமான் அஞ்சியைப் பாராட்டிப் பேசும்பொழுது, 'ஒருநாளில் எட்டுத் தேரைச் செய்யும் தச்சன் ஒரு மாதம் கொண்டு செய்த தேர்ச் சக்கரத்தை ஒத்த வலிமை உடையான்' என்று அவனைப் பாராட்டுகின்றார் :

'எம்முளும் உளன்ஒரு பொருநன்; வைகல்
எண்தேர் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த கால் அன்னோனே' (புறம் 87.2-4)

என்பது ஔவை வாக்கு. இங்கே 'வைகல்' என்பது நாளையும் 'திங்கள்' என்பது மாதத்தையும் குறிக்கும். திங்களின் கூறாக அமைவன திதி, வாரம் பக்கம் என்பன. இவற்றுள் திதியும், பக்கமும் சந்திரனுடைய கதியைக் கொண்டு அறியப்படுபவை

நாளின் தொடக்கம்

இரவுப்பொழுது நீங்கிப் பொழுது விடிதலே ஒரு நாளின் தொடக்க மாகும் நாளின் தொடக்கத்திற்குக் கோழியும் பிற பறவைகளும் கட்டியங்கூறி வரவேற்றலைப் புலவர் பெருமக்கள் அழகுற வருணித் துள்ளனர். பாண்டியனுடைய அரண்மனையிலே காலை முரசம் ஒலிக்கும் ஓசை கேட்ட மாதரி, தன் மகள் ஐயையைக் கூவி, அரண் மனைக்கு நெய் கொடுக்கும் முறை இந்நாளில் நமக்குளது என்று உரைத்துத் தயிர்கடை மத்தும் கயிறும் கொண்டு அவள் தயிர் கடைய முற்படுதலைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது :

'மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலில்
காலை முரசம் கனைகுரல் இயம்பும்; ஆகலின்,
நெய்ம்முறை நமக்கு இன்றுஆம்' என்று
ஐயை தன் மகளைக் கூஉய்க்
கடை கயிறும் மத்தும் கொண்டு
இடைமுதுமகள் வந்து தோன்றுமன்., (சிலப். ஆய்ச்சியர். 5-10)

இங்கே, 'நெய்முறை நமக்கு இன்று' என்று காலை முரசு இசைகேட்டு மாதரி கூறினளாதலான் சூரியன் உதிக்கும் காலமே ஒரு நாளின் தொடக்கம் எனல் தெளிவு.

மேலும், பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் உரிய காலமாக இருப்பதும் பகற்போதுதான். நாட்காலை, நாட்சோறு நாள்மோர், நாட்பலி, நாளிருக்கை முதலியனவாக வரும் தொடர்களும் இக் கருத்தை அரண் செய்வனவாக உள்ளன.

'ஒருநாள் செல்லலம்; இருநாள் செல்லலம்;
பலநாள் பயின்று, பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ' (புறம். 101:1-3)

'ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்;
பல்நாள் வந்து பணிமொழி பயிற்றி' (குறுந் 176 1-2)

என்றாற்போன்று வரும் தொடர்களும் நாள் என்னும் கால அளவைப் பகல் தொடங்கி இரவு இறுதிகாறும் உள்ள பொழுது என்பதனைக் குறிப்பிடுகின்றன

நாட்கணக்கு

நாட்கணக்குத் தெரிவதற்குச் சுவரில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கோடாக இட்டு அவற்றை எண்ணி வந்தனர் என்றும் தெரிய வருகிறது. சுவரில் நாட்கணக்கு எழுதப்படுதலால், 'நாள் இழை நெடுஞ்சுவர்' (அகம். 61;4) என்று சுட்டுகிறார் ஒரு புலவர். தலைவனைப் பிரிந்துறைமகளிர், சுவரில் தாம் இழைத்த கோடுகளை எண்ணி, அவன் சென்ற கால இடையீட்டை நினைந்து, வருந்தி நிற்கும நிலையையும் சங்கபபாடல்கள் குறிப்பிட்டுள்ளன.

'வீங்கு இழை நெகிழ, விம்மி ஈங்கே
எறிகண் பேதுறல்; 'ஆய் கோடு இட்டுச்
சுவர்வாய் பற்றும்நின் படர்சேண் நீங்க
வருவேம் என்ற பருவம் உதுக்காண்.' (குறுந் 358:1-4)

சேண் உறை புலம்பின் நாள்முறை இழைத்த
திண்சுவர் நோக்கி நினைந்து கண்பனி,
நெகிழ் நூல் முத்தின், முகிழ்முலைத் தெறிப்ப.' (அகம் 289:9-11)

'செல்சுடர் நோக்கிச் சிதர் அரிக்கண் கொண்டநீர்
மெல்விரல் ஊழ்தெரியா, விம்மி, தன்மெல் விரலின்,
நாள் வைத்து, நங் குற்றம் எண்ணுங்கொல், அந்தோ! தன்
தோள்வைத்து அணைமேல் கிடந்து!' (நாலடி. 40 4)

இவற்றினால் சுவரில் குறியிட்டு நாட்கணக்குப் பார்த்து வந்ததொரு வழக்கமும் முன்பு இருந்தமை புலனாம்

வாரம், கிழமை

பாட்டு, தொகை நூல்களில் ஏழு நாட்கள் கொண்ட வாரம் அல்லது கிழமை என்னும் கால அளவு காணப்படவில்லை ஆனால், ஒன்றுக்கு ஏழு என்னும் ஒரு வழக்குச் சங்கப் பாடல்களில் உளது.

'எழுகளிறு மிதித்த ஒருபழம் போல' (குறுந். 24 : 4)

'ஏழ்ஊர்ப் பொதுவினைக்கு ஓர்ஊர் யாத்த
உலை வாங்கு மிதி தோல்' (குறுந். 172 : 5-6)

இவ்வாறு குறிப்பிடும் இடங்கள் இன்னும் பல உள இங்கே 'ஏழு' என்பது 'பல' என்னும் பொருள் பயப்பதாகும். பரிமேலழகர் 'ஒரு நாள் எழுநாள் போல் செல்லும்' (குறள் 127 : 9) என்னும் குறட் பகுதிக்கு விளக்கம் தரும்போது,

"ஏழ் என்பது அதற்கு மேலாய பன்மை குறித்து நின்றது.
'ஒருவர் கூறை எழுவர் உடுத்து' என்றாற்போல"

என்று குறிப்பிடுதல் கவனிக்கத் தக்கது.

நாளும் கோளும்

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என இப்பொழுது வாரப் பெயர்களை வழங்கி வருகிறோம் இவை கோள் களின (கிரகங்களின்) பெயர்கள் ஆகும் சம்பந்தர் தாம் பாடிய கோளறு பதிகத்தில்.

'ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி,
சனி, பாம்பு இரண்டும் உடனே
ஆசு அறும்: நல்லநல்ல; அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே, (சம்பந்தர், 2 : 85 : 1)

என நவகோள்களைக் கூறுமிடத்து ஞாயிறு முதலாக எண்ணுதல் காணலாம்.

'இன்றையது அன்று கேண்மை
எமர் தமர் எழுவர் காறும்

நின்றது கிழமை நீங்கா
வச்சிர யாப்பின் ஊழால்' (*சீவக.* 544)

என்பது *சீவக* சிந்தாமணி. இங்கே, 'வச்சிர யாப்பு' என்றது வச்சிரத்தால் தலையில் இட்ட எழுத்தினை. கேண்மை இன்று உளதாயது அன்று; வச்சிர யாப்பின் நீங்காத விதியினாலே எமர் எழுவர் நுமர் எழுவர் அளவும் ஏழு கிழமையும் போல எற்றழிவு இன்றி நின்றது அக் கேண்மை' என்பது பொருள். இங்கே வாரத்தின் ஏழு நாள்களை ஏழு தலைமுறைக்கு உவமை கூறுகின்றார்.

மேலும், சிந்தாமணியில், 'கோளுடைக் கிழமை ஒப்பாய்' என்றும் உள்ளது. இதற்கு விளக்கம் தரும்பொழுது பதிப்பாசிரியர் உ. வே. சாமிநாதஐயர் அவர்கள்,

> 'கோளுடைக் கிழமையாவது ஞாயிறு முதலாகிய கிழமைகள். ஏழு கோளுக்கும் அவற்றிற்கும் மிக்க உரிமை உண்டு என்பர், கிழமை என்பதன் பொருளே இதனைப் புலப்படுத்தும்'

என்று எழுதியுள்ளார்.

ஏழு கிழமைப்பெயர்

திருநாவுக்கரசர், 'இறைவன் ஏழு கிழமையாகவும் உள்ளான்' என்று புகழ்கின்றார்.

'குருகு ஆம், வயிரம் ஆம், கூறும் நாள் ஆம்;
கொள்ளும் கிழமை ஆம்; கோளே தான் ஆம்' (தேவா. 6 : 15:1)

'கொள்ளும் கிழமை ஏழ்
ஆனாய் போற்றி' (தேவா. 6 : 56 : 6)

என்பன நாவுக்கரசர் வாக்குகள்.

சிலப்பதிகாரம் கட்டுரை காதையில் மதுராபதி தெய்வம், ஆடி மாதத்துக் கிருட்டின பட்சத்து அட்டமி திதியில் வெள்ளி வாரத்தன்று மதுரை எரிந்துபடும் என்னும் ஓர் உரை முன்பே உள்ளமையைக் கண்ணகிக்கு எடுத்துக் கூறுவதாக ஒரு நிகழ்ச்சி உள்ளது.

'ஆடித் திங்கள் பேரிருட் பக்கத்து,
அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று,
வெள்ளிவாரத்து ஒள்ளெரி உண்ண

'உரைசால் மதுரையோடு அரைசு கேடுறும் எனும்
உரையும் உண்டே நிரைதொடி யோயே!'

(சிலப் கட்டுரை 23 136-137)

என்பது அத் தெய்வத்தின் வாக்கு. இங்கே 'வெள்ளிவாரம்' குறிப்பிடப்படுதல் காணலாம்.

நாள், கிழமை, பக்கம்

சீவகசிந்தாமணியில் ஒரு பாட்டு நாள், கிழமை, என்பனவற்றை முறையே குறிப்பிடுகிறது. மண்டபம் ஒன்றை நிர்மாணிப்பதற்குரிய காலமாற்றிச் சோதிடர் வகுத்துரைத்த முகூர்த்தத்தை அப் பாடல் தெரிவிக்கிறது. அது வருமாறு

'நானக் கிடங்கு ஆடைநகர் நாகத்திடை நன்பொன்
வானத்திடு சிரிப்பது ஓர் மண்டபம் செய்கென்ன
மீனத்திடை நாள்; கிழமை வெள்ளி, சயைய பக்கம்
கானத்திடை வேங்கை எழக், கணிகள் கண்டாரே! (சீவக. 590)

இப்பாடலுக்குரிய நச்சினார்க்கினியர் உரையும் கிழமைக் கருத்தை நன்கு விளக்குதலினால் அதுவும் ஈண்டு ஒப்பு நோக்குதல் பொருத்தமாகும். நச்சினார்க்கினியர் தரும் உரைவிளக்கம் வருமாறு :

'நானக்கிடங்கை ஆடையாகவுடைய நகராகிய சுவர்க்கத்தின் நடுவே பொன்னையுடைய வானைச் சிரித்திடும் அழகினையுடையதொரு மண்டபத்தைச் செய்க என்று கூறினானாக, கணிகள் வெள்ளிக்கிழமையும் திருதியையும் பெற்ற உத்திரட்டாதி நாள் சிங்கம் உதயமாக முகூர்த்தம் குறித்தார் என்க. நானம்--புழுகு நளித்தலில் புழுகு உடைத்தாயிற்று. வானைத் தீண்டும் என்றும் ஆம். பூரட்டாதியின் நாலாங்காலும் உத்திரட்டாதியும் ரேவதியும் மீனராசியாதலால் உத்திரட்டாதி நடுநாள் ஆதலின், 'மீனத்திடை நாள்' என்றார். திருதியை, அட்டமி திரயோதசி என்பவற்றில் திருதியை சிறத்தலின் 'சயைய பக்கம்' என்றார். மேடத்தின் முற்கூறு, மேடராசியின் கூறு; இரண்டாம கூறு சிங்கராசியின் கூறு. மூன்றாம் கூறு தனுராசியின் கூறு. ஆதலால் மேடத்தின் நடுக் கூற்றைச் சிங்கத்தின் உதயமாக விதித்தார். இது கூறிற்று. சிங்கத்தே பிருகஸ்பதியாதலின், வெள்ளி முதல் வியாழம் ஈறாகக் கிழமை ஏழாயவாறும், உத்திரட்டாதி முதல் உரோகிணி ஈறாக நாள் ஆறாயவாறும் கூடுமாறு என்னை எனின், இத்

திங்களில் சதயம் முதல் ஆயிலியத்தளவும் சந்திரன் வர்த்தித்து வருதலின், வியாழக் கிழமைக்கு உரோகிணி கூடிற்று. இதனானே மேல், 'ஒள் நிற உரோணி ஊர்ந்த ஒளிமதி ஒண்பொன் ஆட்சு'(சீவக 620) என்று வியாழக் கிழமையிலும் சிறிது நாழிகை உரோகிணியாகக் கூறினார்.

திதி-பக்கம்

பிறைக்கணக்கு

பிறை தோன்றி வளரும் வளர்பிறைப் பக்கமும், முழுமதிக்குப்பின் மதி தேய்ந்து வரும் தேய்பிறைப் பக்கமும் எனப் பக்கம் இரண்டு. இவற்றை முறையே வளர்பிறை, தேய்பிறை (சுக்கில பட்சம், கிருஷ்ண பட்சம்) என இப்பொழுது வழங்குவர். திங்கள் நிறைமதிநாள் தவிர, மற்றைய நாள்களில் எல்லாம் மாற்றம் பெற்று வரும் இயல்பினை உடையது.

திங்களின் மாறுதல் நாள் ஒவ்வொன்றும் 'திதி' என்று கூறப்படும். திதியாவது திங்களின் நிலைமை என்று கொள்ளலாம். இம் மாறுதல் நிலை இரு பக்கத்தும் உள்ளதே. ஒன்று வளரும் நிலைமை; மற்றொன்று தேயும் நிலைமை. இந்நிலைமை பற்றிப் பாட்டுதொகை நூல்களில் காணும் குறிப்புக்கள் வருமாறு:

முதற்பிறை

'பிறை பிறந்தன்ன பின் ஏந்து கவைக்கடை' (பெரும்பாண், 11)

மூன்றாம்பிறை

'தொழுதுகாண்பிறை.' (குறுந். 178 : 5)

'ஒள் இழை மகளிர் உயர்பிறை தொழூஉம்
புல்லென் மாலை.' (அகம். 239 : 9 10)

எட்டாம்பிறை

'எண்-நாள் திங்கள் வடிவிற்று ஆகி
அண்-நா இல்லா அமைவரு வறுவாய்' (பெரும்பாண். 11-12)

'எண்-நாள் திங்கள் அனைய கொடுங்கரை' (புறம். 118 : 2)

வளர்பிறை

'குடமுதல் தோன்றிய தொன்று தொழு பிறையின்
வழிவழி சிறக்க நின் வலம்படு கொற்றம்' (மதுரைக். 193-194)

'சிறுகோட்டுக் குழவித் திங்கள்' (பெரும்பாண். 383-384)

தேய்பிறை

'குணமுதல் தோன்றிய ஆர்-இருள் மதியின்
தேய்வன கெடுக நின் தெவ்வர் ஆக்கம்.' (மதுரைக். 195-196)

நிறைமதி (பதினைந்தாம் நாளில்)

பிறையின் இருகோடும் (முனையும்) பொருந்தி வட்டவடிவம் திருந்திக் காணப் பெறுவதே நிறைமதி (பூர்ணச்சந்திரன்).

'கோடு கூடு மதியம் முகிழ்நிலா விளங்கும்' (புறம். 67 : 4)

'மணிநிற மையிருள் அகல நிலா விரிபு,
கோடுகூடு மதியம் இயலுற்றாங்கு' (பதிற். 31 : 11-12)

'மாக விசும்பின் வெண்திங்கள்
மூ-ஐந்தான் முறை முற்ற,
கடல் நடுவண் கண்டன்ன' (புறம். 400 : 1-3)

உவாப்பதினான்கு

'உவாப்பதினான்கு' என உம்மைத் தொகையாக வழங்கப்பெறும் ஒரு பழந்தொடர் உவாவும் பதினான்கு திதியும் எனப்பொருள் பயந்து, பதினைந்து நாள் கொண்ட பக்கத்தினை உணர்த்தும். 'அட்டமியும்' ஏனை உவாவும் பதினான்கும்' என்னும் ஆசாரக் கோவை அடிகள் (47 : 1) 'உவாப்பதினான்கு' என்னும் தொடரை விளக்கி நிற்றல் காணலாம்.

வளர்பிறை, தேய்பிறை

பிறை தோன்றிப் பதினைந்தாம் நாள் நிறைவு பெறும்வரை உள்ள பகுதியே வளர்பிறை. இப் பிறைகள் திங்களின் இயற்கைக் கலையாகிய ஒற்றைக் கலையுடன் சேர்ந்து, பதினாறு கலைகளோடு கூடிய நிறைமதியாகிக் காட்சியளிக்கும். பின், இப் பதினாறு கலைகளோடு கூடிய மதி தேய்ந்து வரும். நிறை மதியை அமரர் உணவாகக் கொள்

ளுதலினால் தேய்கிறது என்பது ஒரு புராணக் கொள்கை. இதுவே தேய்பிறைப் பக்கம்.

‘ அணிநிழல் வயங்குஒளி, ஈர் - எண் தீங்கதிர்,
பிறைவளர் நிறைமதி உண்டி,
அணிமணிப் பைம்பூண், அமரர்க்கு முதல்வன் நீ! (பரி. 3 : 51-53)

அலர்தரு பக்கம், வழியது பக்கம்

வளர்பிறைப் பக்கம் ‘அலர்தரு பக்கம்’ என்றும் ‘முற்பக்கம்’ என்றும் குறிக்கப்படும். தேய்பிறைப் பக்கமோ, ‘வழியது பக்கம்’ என்றும் ‘பிற் பக்கம்’ என்றும் சுட்டப்பெறும். நிறைமதி உவா ‘பெரும் பக்கம்’ எனப் படும். அதாவது, பௌர்ணமி நாள். அமாவாசை நாள் ‘இருள் உவா’ எனப்படும். இக் குறிப்புக்கள் பதினொன்றாம் பரிபாடலால் தெரிய வருகின்றன:

‘ ஆம்நாள் நிறைமதி அலர்தரு பக்கம் போல்,
நாளின், நாளின், நளிவரைச் சிலம்பு தொட்டு,
நிலவுப் பரந்தாங்கு நீர்நிலம் பரப்பி,
உலகு பயம்பகர; ஓம்பு பெரும்பக்கம்
வழியது பக்கத்து அமரர் உண்டி
மதிநிறைவு அழிவதின் வரவு சுருங்க;
எண்மதி நிறை, உவா இருள் மதிபோல
நாள் குறை படுதல் காணுநர் யாரே?
சேண் இகந்து நல் ஊர்ந்த மாண் இழை வையை ’
(பரி. 11 : 31-39)

என வையையில் நீர் மிகுதலுக்கும் குறைவுபடுதலுக்கும் இரு பக்கங் களின் மதியின் நிலைமையை ஒப்புக்குக் காட்டியுள்ளார் கவிஞர்.

‘ குடமுதல் தோன்றிய தொன்று தொழு மரபின்
வழிவழிச் சிறக்க, நின் வலம்படு கொற்றம்!
குணமுதல் தோன்றிய ஆர்இருள் மதியின்
தேய்வன கெடுக நின் தெவ்வர் ஆக்கம் ’
(மதுரைக். 193 - 196)

எனவரும் மதுரைக்காஞ்சி அடிகளில் பெருகுதலுக்கும் சுருங்குதலுக் கும் வளர்பிறை தேய்பிறைகள் உவமம் காட்டப்பட்டுள்ளமை காணலாம்.

தேவாரம் முதலியவற்றில் திதிக் குறிப்பு

அட்டமி என்னும் திதிப் பெயரும் உவாவும், பதினாறு திதிகளும் பற்றிய குறிப்புகள் தேவாரம் முதலிய இடைக்கால இலக்கியங்களிலும் பயின்று வந்துள்ளன.

'உச்சிஅம் போழ்தோடு இடையாமம், சந்தி,
மிக்க இருதேவர் நாளோடு உவாத்திதி நாள்,
அட்டமியும், ஏனைப் பிறந்தநாள், இவ் அனைத்தும்
ஒட்டார் — உடன் உறைவின் கண்'. (ஆசாரக். 43)

'அட்டமியும் ஏனை உவாவும், பதினான்கும்
அப்பூமி காப்பார்க்கு உறுகண்ணும், மிக்க
நிலத் துளக்கு விண் அதிர்ப்பு வாலாமை — பேர்ப்பாள்
இலங்குநூல் ஓதாத நாள்.' (ஆசாரக் 47)

'அழல் சேர் குட்டத்து அட்டமி ஞான்று' (சிலப். கட்டுரை 134)

'பண்ஆர் பதினெண் கணங்கள்தம் அட்டமிநாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய்'

(தேவா. 2 . 47-8)

'தீர்த்தர்ஆர் அட்டமி முன் சீருடை ஏழுநாளும்
கூத்தராய் வீதி போந்தார், குறுக்கை வீரட்டனாரே.'

(தேவா. 4:50,2)

'உவாக் கதிர்த்திங்கள் அம்மென்
கதிர்விரித்து உடுத்தது ஒத்தான்' (சிந்தாமணி. 12:67)

'ஓவாது இரண்டு உவாவும், அட்டமியும்
பட்டினி விட்டு ஒழுக்கம் காத்தல்
தாவாத் தவம் என்றார்' (சிந்தாமணி 6 136)

'அட்டமியில் ஓதினால் ஆசானுக்கு ஆகாது;
சிட்டருக்குப் பன்னான்கு தீதாகும்; — கெட்ட உவா
வித்தைக்கு நாசம் ஆம்; வெய்ய பிரதமையில்
பித்தநூல் போல் பிழை' (பெருந்தொகை. 258)

என்பது ஒரு பழைய தனிப்பாடல்.

நிகண்டுகளில் திதி — பக்க விளக்கம்

நிகண்டுகளில் பழமையான திவாகரம், பிங்கலம் என்பனவும் திதி, பக்கங்களின் இயல்புகளை விளக்குகின்றன.

'திதியே பக்கம்' (திவா. தெய்வப்.)

'பக்கம் முதலது நந்தை ஆகும்' (திவா. தெய்வப்.)

'பத்திரை என்பது இரண்டாம் பக்கம்' (திவா. தெய்வப்.)

'மூன்றே சயை பக்கம்' (திவா. தெய்வப்.)

'நான்கே இருத்தை' (திவா. தெய்வப்.)

'ஐந்தாம் பக்கம் பூரணை ஆகும்' (திவா. தெய்வப்.)

இச்சூத்திரங்களை அப்படியே பிங்கல நிகண்டுடையார் தமது நூலின் இரண்டாவது தொகுதியான வானவர் வகையில் எடுத்தாண்டுள்ளார் (194, 198, 199, 200, 201, 202). நந்தை, பத்திரை, சயை, இருத்தை, பூரணை என்னும் ஐந்தும் ஒரு பக்கத்தில் முமமுறை வருவதாகும். அதாவது 1, 6, 11 நந்தை என்று கொள்ள வேண்டும். இவ்வாறே பிறவற்றிற்கும் கொள்ளுதல் வேண்டும்.

'மீனத்திடை நாள், கிழமை வெள்ளி, சயை பக்கம்' (சீவக 590)

எனச் சிந்தாமணி 'சயை' என்னும் திதியை எடுத்தாண்டுள்ளமை காணலாம்.

திங்கள் (மாதம்)

திங்கள் என்னும் பெயர்

திங்களைக்கொண்டு (சந்திரன்) மாத அளவு கணிக்கப்பட்டமை-பற்றித் 'திங்கள்' 'மதி' என்னும் பெயர்கள் மாதத்தைக் குறிக்கவும் வழங்கப்பட்டன. 'மதியே திங்கள் மாதம் ஆகும்' (திவா தெய்வப்.) என்பது திவாகரம்.

பிறைநோக்கிக் காலங்கணித்தல்

கண்ணகிக்கு இமயத்தில் எடுத்த சிலையைக் கங்கையில் நீராட்டியபின் சேரமன்னன் செங்குட்டுவன் தம் வீரர்க்குப் பெருஞ் சிறப்புச் செய்து, கங்கைக்கரைப் பாடியில் வீற்றிருக்கிறான். அப்பொழுது அங்குவந்த மாடலமறையோனுடன் உரையாடிக் கொண்டிருந்தான். கதிரவன் அந்திவானை நெருங்கவே செக்கர் வானில் வெண்பிறை எழுந்தது. அதனைக் கண்ட கணி 'வஞ்சி

நகரைவிட்டு வந்து இன்றோடு 32 மாதங்கள் ஆயின எனக் கூறுகின்றான். கணியின் உரை வருமாறு.

"பகல்செல முதிர்ந்த படர்கூர் மாலை
செந்தீப் பரந்த திசைமுகம் விளங்க
அந்திச் செக்கர் வெண்பிறை தோன்ற,
பிறைநுதல் வண்ணம் பெருந்தகை நோக்க,
இறையோன் செவ்வியின் கணி எழுந்து உரைப்போன் :

'எண் – நான்கு மதியம் வஞ்சி நீங்கியது
மண்ஆள் வேந்தே ! வாழ்க !'

(சிலப் நீர்ப்படை. 144 – 150)

இந்நிகழ்ச்சியிலிருந்து மதிக்கொழுந்தாம் பிறையின் தோற்றம் நோக்கி, திதி, பக்கம், மாதம் கொண்டனர் என்பது போதரும்.

பாரிமகளிர் பாடிய புறப்பாட்டில், அம் மகளிர் தம் தந்தையையும் அரசச் செல்வத்தையும் இழந்து நலிவுற்றிருந்த காலத்திலே திங்கள் தோன்றக் கண்டு, தமது முந்தைய மாதத்து நிலையை உன்னி, நிகழ்கால நிலைக்கு இரங்கி மொழிந்ததாகக் காணப்படுகிறது.

'அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்,
எந்தையும் உடையேம்., எம்குன்றும் பிறர் கொளார்.,
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்,
வென்று எறிமுரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் ; யாம் எந்தையும் இலமே !'

(புறம் 112)

இங்கே 'அற்றைத் திங்கள்', 'இற்றைத் திங்கள்' என்பன மாதங்களைக் குறித்துத் திங்களின் பெயர் வழங்கப்படுதலையும், திங்களை நோக்கி மாதப் பாகுபாடு கொள்ளுதலையும் புலப்படுத்தல் காணலாம்.

முற்பக்கமும் பிற்பக்கமும்

உவா நாளின்பின் பிறையின் தோற்றம் முதற்கொண்டு பதினான்கு நாள்களையும அலர்தரு பக்கம், முற்பக்கம் என்றும் நிறைமதி நாளின்பின் பதினான்கு நாள்கள் வழியது பக்கம், பிற்பக்கம் எனவும் வழங்கப்படுதலைப் பக்கத்தைப் பற்றி முற்கூறிய பகுதியில் பார்த்தோம். அதோடு 'எண்நாள் திங்கள்' (பெரும்பாண் 11-12;

புறம் 118.,) என்னும் வழக்கு எட்டாம் நாள் காணும் பிறையைக் குறித்தலினால், பிறை தொடக்கமாகத் திங்களின் தொடக்கமும் கொள்ளப் பெற்றது என்பதைக் குறிப்பிக்கும்.

மாதத் தொடக்கம்

மேற்குறித்த ஒருசில குறிப்புக்களினால் திங்கள் அமாந்தமாய் முடிவுற பிறை தொடக்கமாக அடுத்த திங்களின் நாட்களைக் கணக்கிட்டனர் என்று கொள்ளலாம்.

'பங்குனி உயர் அழுவத்துத்
தலைநாள்மீன் நிலை திரிய' (புறம். 229 : 5-6)

எனவரும் பகுதி பங்குனி மாதத்தினது முதற் பதினைந்தின்கண், அம்மாதத்திற்குச் சிறப்பான உத்தர நாள் உச்சியினின்று சாய்தலைக் குறிப்பிடுகிறது. இதனாலும் மேலே சுட்டிய அமாந்த முறை வழக்கம் உணரலாகும்.

மாதப் பெயர்கள்

ஒவ்வொரு மாதத்தும் நிறைமதி நாளில் சந்திரனோடு சேரும் நட்சத்திரப் பெயரைக் கொண்டு மாதப் பெயர்கள் அமைந்திருத்தல் கவனிக்கத்தக்கது. சங்கப் பாடல்களிலும் பிற இலக்கியங்களிலும் பயின்று வரும் சில குறிப்புக்கள் இவ்வுண்மையைத் தெளிவுபடுத்துகின்றன.

சித்திரை

காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழா நிகழ்த்தப் பெற்றது, சித்திரை மாதத்துச் சித்திரை நாளில் வரும் பூரணையிலாகும்.

'சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென' (சிலப். இந்திர. 64)

என்பது சிலப்பதிகாரம். இதில் 'சேர்ந்தென' என்பதற்குச் 'சிறந்தென' எனவும் பாடம் உண்டு. இவ்வாறு பாடம் கொண்டவர் அரும்பதவுரைகாரர். 'சித்திரை மாதத்துச் சித்திரை நாள் சிறந்தது என்கையால், சித்திரா பூரணை என்க' என்பது அரும்பதவுரை.

வைகாசி

வைகாசி விசாகம் புத்ததேவனுக்கு உரியநாள். மணிமேகலை மணிபல்லவத் தீவிலுள்ள கோமுகிப் பொய்கையில் அமுதசுரபி பெற்றதும் இந் நாளில்தான்

இருது இளவேனில் எரிகதிர் இடபத்து
ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்,
மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்,
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்'

(மணி. பாத்திரம் பெற்ற 40-43)

முன்பு அமுதசுரபிக்கு உரியனாயிருந்த ஆபுத்திரன் என்பான் மறு பிறப்புத் தோற்றம் செய்ததும் வைகாசி மாதத்து விசாக நாளில் தான் என்பர் சாத்தனார்.

'இருது இளவேனில் எரிகதிர் இடபத்து,
ஒரு பதின் மேலும் ஒரு மூன்று சென்றபின்,
மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்
போதித் தலைவனொடு பொருந்திய போழ்தத்து'

(மணி பாத். பிச்சைபுக்க. 23-26)

என்பது சாத்தனார் வாக்கு இந்த இரண்டு இடங்களிலும் மீனத்து இடைநிலை மீனம் என்றது 27 நட்சத்திரங்களுள் நடுவில் நிற்றலையுடைய விசாகம். இங்கே கார்த்திகையை முதலாகக் கொண்டு எண்ணும் பழையமுறைப்படி விசாகம் 27 நட்சத்திரங்களுள் பதினான்காவதாய் நடுவில் வருதல் காணலாம்.

கார்த்திகை, மாசி

கார்த்திகை மாதத்தில் நிறைமதியுடன் அறுமீனாகிய கார்த்திகை சேர்ந்து வருதலை,

'குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகல் இருள் நடுநாள்'

(அக 141 : 7—8)

எனவரும் அகநானூற்றடிகள் புலப்படுத்துகின்றன

மழை நீங்கிய மாக விசும்பில்
மதி சேர்ந்த மக வெண்மீன்'

(பட்டின. 34—35)

என்பதனால் மகவெண்மீன் மதிசேரும் மாசி மாதம் உணர்த்தப் படுதல் தெளிவு

மார்கழி

ஆண்டாள் தமது திருப்பாவையில் மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளில் பாவை நோன்பு செய்வார் நீராடத் தொடங்குதலைக் குறிப்பிடுகின்றார். மார்கழிப் பூரணையில் மிருகசீரிட நாளில் இந்த நோன்பு தொடங்குதலினால, 'மார்கழி நீராடல்' என ஆண்டாள் அருளிச் செய்கின்றார்

'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்நாளால்
நீராடப் போதுவீர், போதுமினோ நேரிழையீர்'

(திருப்பாவை. 1)

என்று அழைக்கின்ற அம்மையார், பின்னரும்,

'வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்து—ஏல் ஓர் எம்பாவாய்!

(திருப்பாவை. 4)

என மழையை வேண்டிக் கூறுகிறாள்.

'மாலே மணிவண்ணா மார்கழி நீர் ஆடுவான்'

என மாலை நோக்கிப் பேசுமிடத்தும் 'மார்கழி நீர்' எனக் கூறுதல் கவனிக்கத்தக்கது

தைந்நீராடல்

இங்ஙனமாகவும் சங்கப் பாடல்களோ மகளிர் தைந்நீராடி நோன்பு நோற்றமையைக் குறிப்பிடுகின்றன. பரிபாடல் திருவாதிரையில் அந்தணர் விழா தொடங்கியதையும், அப்பொழுது முதுபார்ப்பனிமார் நோன்பு முறை காட்டக் கன்னிப்பெண்கள் 'அம்பாவாடல்' என்னும் தைந்நீராட்டம் தொடங்குதலையும் விளக்குகிறது இங்கே திருவாதிரை என்பது மார்கழியில் மதி நிறைந்த மிருகசீரிட நாளுக்கு அடுத்த நாளாகும். பூர்ணிமாந்த முறையில் பார்ப்பின் ஆதிரை தையின் தொடக்கநாள் ஆகும். எனவே, தையில் தொடங்கும் நீராடல் தைந்நீராடல் ஆயிற்று. தைந்நீராடி மகளிர் நோன்பு இயற்றுதலை,

'தையில் நீராடிய தவம் தலைப்படுவாயோ?'

(கலி 59)

எனக் கலித்தொகையும் குறிப்பிடுகின்றது. திருப்பாவை குறித்ததும் இப் பாவை நோன்பைத்தான் திருப்பாவையை அடுத்து வரும்

நாச்சியார் திருமொழியில, 'தை ஒரு திங்களும் தரை விளக்கி' எனக் குறிப்பித்தது மார்கழிப் பூரணமையில் தொடங்கி, தை மாதம் முழுவதும் நோன்பு இயற்றியதனைப் புலப்படுத்தியவாறாம்.

மாசியில் காம நோன்பு

இதன்பின், மாசி முன்னாளிலிருந்து காமநோன்பு தொடங்குகிறாள் ஆண்டாள். இங்கே மாசி முன்னாள் என்பது தை மாத நிறைவாகிய தைப்பூசப் பூரணையைக் குறிக்கும். ஆகவே, ஆண்டாள் மார்கழிப் பூரணமையில் தொடங்கிய பாவை நோன்பைத் தை மாதப் பூரணை வரையில் நிகழ்த்தி, மாசி முன்னாளாம் தை மதிநிறை நாளில் காமநோன்பு தொடங்குகிறாள்.

'தை ஒரு திங்களும் தரை விளக்கி.
    தண்மண்டலம் இட்டு மாசி முன்னாள்
ஐயநுண் மணல் கொண்டு தெரு அணிந்து,
    அழகினுக்கு அலங்கரித்து அனங்கதேவா!
உய்யவும் ஆங் கொலோ? என்று சொல்லி
    உன்னையும் உம்பியையும் தொழுதேன்;
வெய்யது ஓர்தழல் உமிழ் சக்கரக்கை
    வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே' (நாச். 1)

என்பது கோதை திருமொழி. இங்கே தை ஒரு திங்களும் தரை விளக்கியது என்றது திருப்பாவையில் குறித்த பாவை நோன்பை இதைப் பூர்த்தி செய்ததும் மாசி முன்னாளாம் தைநிறைவில், நிறைமதி நாளில் காமனை நோக்கி நோன்பு இயற்றத் தொடங்குகிறாள். இந் நோன்பு பங்குனி மாதம் பூர்த்தியாகும் கடைநாளாம் உத்தரம் வரை கொண்டாடப்படுகிறது இதனைப் பின்வரும் நச்சியார் திருமொழிப் பாசுரங்களில் காணலாகும்.

பங்குனி உத்தரம்

'உருவு உடையார் இளையார்கள் நல்லார்
    ஒத்து வல்லார்களைக் கொண்டு, வைகல்
தெருவிடை எதிர்கொண்டு பங்குனிநாள்
    திருந்தவே நோற்கின்றேன் காமதேவா:' (நாச். 1 ; 6)

என்பதனால் பங்குனி மாதத்து நாள்கள் முழுவதும் மாசி முன்னாளில் தொடங்கிய இக் காம நோன்பு இயற்றப்பெறுதல் பெறப்படும்

'நாமம் ஆயிரம் ஏத்த நின்ற
நாராயணா! நரனே! உன்னை
மாமிதன் மகன் ஆகப் பெற்றால்
எமக்கு வாதை தவிருமே;
காமன் போதரு காலம் என்று பங்-
குனி நாள் கடை பாரித்தோம்.
தீமை செய்யும் சிரீதரா! எங்கள்
சிற்றில் வந்து சிதையேலே!' (நாச். 2 : 1)

இங்கே பங்குனி நாள் கடை வரையில், அதாவது உத்தரநாள் வரையில் காமன் போதரும் காலமாகக் கொண்டு போற்றி இந்நோன்பு பூர்த்தி செய்யப்படுதல் தெரியவரும். ஆண்டாள் பாசுரங்களின் போக்குபபடி பார்த்தால், பூர்ணிமாந்த முறை வழக்கப்படி நோன்பு முதலியன இயற்றப் பெறுதல் புலனாகின்றது.

நிறைமதியில் விழாக்கள்

பங்குனி நிறைமதியில் திருவிழாக் கொண்டாடுதல் எங்கும் பெரு வழக்காய் இருந்து வந்ததொன்றே. உறையூரில் பங்குனியில நிகழ்ந்த பெருவிழாவை, 'பங்குனி முயக்கம்' (அக 13 : 9) என அகநானூற்றுத் தொகை நூல் குறிப்பிடுகின்றது இங்கே, 'பங்குனி முயக்கம்' என்றது பங்குனி நிறைமதி நாளாம் உத்தரத்தில் நடந்த பெருவிழாவைக் குறிக்கும் இங்ஙனமே பிறமாதங்களிலும் நிறைமதி நாளில் விழாக்கள் கொண்டாடப்பெற்று வந்தமை இலக்கியங்களால் தெரியவரும்.

சித்திரைத் திங்களில் சித்திரைநாள் சேரும் நிறைமதி நாளில் இந்திரவிழா நிகழ்ந்தமையை முன்பு சுட்டினோம். வைகாசி விசாக நாளைப் புத்ததேவனுக்கு உரிய நாளாக மணிமேகலை கூறும் மாயோனுக்குரிய ஓண விழா ஆவணி நிறைமதி நாளில் நிகழ்த்தப்பெறுவதாம். மார்கழி மிருகசீரிடத்தில் வரும் நிறைமதியோடு அடுத்து வரும் ஆதிரை சிவபெருமானுக்கு விழா எடுக்கும் பெருநாளகும அதோடு மார்கழி மதிநிறை நாள் பாவை நோன்பு தொடங்கும் காலமும் ஆகும் தைப் பூசம் தை மாதப் பூரணையில் வருவது. காமன் நோன்பு தொடங்கியதும் இப் பூசநாளில்தான் மகநாளில கடலாடும் விழாச் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. பங்குனி உத்தரம் பெருவிழா நாள் என்பது கண்டோம். இவ்வாறாக நிறைமதி நாளில விழா நடைபெறு தல், பூர்ணிமாந்த முறையில் திங்களின் நிறைவையும் அடுத்த திங்க

ளின் தோற்றத்தையும் கொண்டாடும் நோக்கமாக இருந்திருத்தல் கூடும்.

மயிலையில் மாதத் திருவிழாக்கள்

'சம்பந்தர் தமது மயிலாப்பூர்த் தேவாரமாகிய 'மட்டு இட்ட புன்னை' (2 : 47) எனத் தொடங்கும் பூம்பாவைப் பதிகத்தில் ஐப்பசி முதல் பங்குனி வரையில் அங்கு நிகழும் திருவிழாக்களைக் குறிப்பிட்டுள்ளார்.

'ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய்! (2:47:2)

'துளக்குஇல் கபாலீச் சரத்தான் தொல்கார்த் திகைநாள்
தளத்து ஏந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்! (2 : 47 : 3)

'கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்! (2 : 47 : 4)

'நெய்ப் பூசும் ஒண் புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்!' (2 : 47 : 5)

'மடல் ஆர்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்!' (2 : 47 : 6)

'பலி விழாப் பாடல் செய் பங்குனி உத்திரநாள்
ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாய்! (2 : 47 : 7)

பன்னிரு மாதப் பெயர்கள்

ஆண்டு என்பதனைக் குறிக்கச் சிந்தாமணி 'பன்னிரு மதியின்' (சீவக. 1220) என்றும் 'ஆறு-இரு மதியின்' என்றும் சுட்டுகிறது. எனவே தமிழ் ஆண்டின் பகுதியாக வழங்கும் சித்திரை முதல் பங்குனி ஈறாக மாதப் பெயர்கள் பழமையாகவே வழங்கி வருவன என்பதும், சங்கப் பாடல்கள் முதலியன இம்மாதப் பெயர்களைச் சுட்டுதலும் இவ்வழக்கின் தொன்மையைப் புலப்படுத்தும் என்பது விளக்கமாகிறது.

தொல்காப்பியர் கூறும் திங்கட் பெயர்களின் ஈறுகளை வைத்து நோக்கினால் சித்திரை முதலிய மாதப் பெயர்களை அவர் குறிப்பிட்டுள்ளமை தெரியவரும். இகர ஈற்றுத் திங்கட் பெயர் (மாதம்) ஐகார

ஈற்றுத் திங்கட் பெயர் ஆகியவற்றிற்குச் சந்தி விதியைத் தொல்காப்பியர் கூறுகிறார்.

'திங்கள் முன்வரின் இக்கே சாரியை (தொல். எழுத். உயிர். 46)

'திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன (தொல். எழுத். உயிர். 84)

என்பன தொல்காபபிய விதிகள். இவை முறையே இகர ஈறு, ஐகார ஈறுகளில் முடியும் திஙகட்பெயர்களுக்குரிய விதிகள். திங்கட் பெயருடன் இக்கு ' என்னும் சாரியை சேர்ந்து வழங்கப்பட வேண்டும் என்பது விதி. 'ஆடிக்குக் கொண்டான்', 'சித்திரைக்குக் கொண்டான்' என்றாற் போன்று வரும் மாதப் பெயர்களில் இகர ஈற்றில் முடிவன, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, மார்கழி, மாசி பங்குனி என்னும் ஒன்பதும ஆம். எஞ்சிய சித்திரை. கார்த்திகை, தை என்னும் மூன்றும் ஐகாரவீற்றையுடைய மாதப் பெயர்கள் இப் பெயர்களுக்கே மேற்குறித்த தொல்காப்பிய விதி அமைதலின், சித்திரை முதலிய மாதப்பெயர் வழக்கு தொல்காப்பியர் காலத்திற்கும் முற்பட்டது என்பது போதரும்.

பருவம் (இருது)

அறுவகைப் பருவம்

இரு திங்கள் சேர்ந்த காலப் பகுதி பருவம் அல்லது இருது எனக் கொள்ளபபடும். ஆவணி தொடங்கி இரண்டிரண்டு மாதங்களாக முறையே கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என அறு பருவங்கள் கொள்வர் உலகம் வளம் பெறுதற்கு ஆதாரமாயிருத்தல கருதிக் கார்ப்பருவத்தை முதன்மையாய் வைத்துப் பிற பருவங்களை எண்ணினர் போலும். ஆவணி தொடக்கமாகப் புதிய ஆண்டு முன்னாளில் தொடங்கிய வழக்கும் இங்குக் கருதற்பாலது.

முப்பெரும் பருவம்

இந்த ஆறு பருவங்களையும் முக்கியமாக மழை பனி, வெயில் என மூன்று பெரும் பகுதியாகவும கொள்ளலாம். மழைக் காலத்தின் முன்பகுதி கார் எனவும் பிற்பகுதி கூதிர் எனவும் கொள்ளப்படும். முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பனவும் அவ்வப் பருவத்தின் முற்பகுதி பிற்பகுதி நோக்கிக் கொள்ளப்பட்ட தனிப் பெயர்களே.

'காரே கூதிர், முன்பனி, பின்பனி,
சீர் இளவேனில், முதுவேனில், என்றாங்கு
இருமூன்று வகைய பருவம்.
அவைதாம்,
ஆவணி முதலா இரண்டிரண்டு ஆக
மேவின திங்கள் எண்ணினர் கொளலே' (திவா தெய்வப்.)

என்பது திவாகரம்.

தொல்காப்பியர் விளக்கும் பருவம்

தொலகாப்பியர் அகத்திணை இயலில், ஐவகை நிலங்களுக்குரிய பொழுதுகளை வகுத்துரைக்குமிடத்து, 'கார்' (தொல் பொரு அக. 6) 'பனி எதிர்பருவம்' (முன்பனி) (ஷை 7), 'பின்பனி' (ஷை 10), வேனில் (ஷை 9) என்னும் பெரும்பொழுதுகளைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர், மழை பனி, வெயில என்னும் மூன்று பருவப் பெயர்களுக்கும் உயிர் மயங்கியலிலும், புள்ளி மயங்கியலிலும் சந்திவிதி கூறுதலும் குறிப்பிடத்தக்கது.

'மழை என்கிளவி வளி இயல் நிலையும்' (உயி. மய. 85)

'பனி என வருஉம் காலவேற்றுமைக்கு
அத்தும் இன்னும் சாரியை ஆகும்.' (உயி. மய. 39)

'வெயில் என்கிளவி மழைஇயல் நிலையும்.' (புள். மய. 82)

பருவத் தோற்றங்கள் பற்றிய பல குறிப்புக்கள் சங்கப்பாடல்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

கார், கூதிர்

'கார் செய்தன்றே கவின்பெறு கானம்' (அக 4 : 7)

'கானம் கார் எனக் கூறினும்' (குறு. 21 : 4)

'கை தோய்வு அன்ன கார் மழைத் தொழுதி
தூஉய் அன்ன துவலை துவற்றலின்
தேஎம் தேறாக் கடுப்பரிக் கடும்பொடு' (மலைபடு. 362-364)

'முழங்கு கடல் முகந்த கமஞ்சூல் மாமழை
மாதிர நனந்தலை புதையப் பாஅய்' (நற். 347 : 1-2)

'பெயல் கால் மறைத்தலின் விசும்பு காணலரே
நீர் பரந்து ஒழுகலின் நிலம் காணலரே' (குறுந். 380 : 1-2)

'கூதிர் நின்றன்றால் போதே' (நெடுநல். 72)

'குன்று குளிப்பன்ன கூதிர்ப் பானாள்' (நெடுநல். 12)

முன்பனி, பின்பனி

முன்பனியை அற்சிரம், அச்சிரம் எனவும் வழங்குவர்.

'பின்பனி அமையம் வரும் என, முன்பனிக்
கொழுந்து முந்துறீஇக் குரவு அரும்பினவே' (நற். 224 : 3-4)

'பெரும்பெயல் பொழிந்த தொழில எழிலி
தெற்கு ஏற்பு இரங்கும் அற்சிரக் காலையும்' (நற். 5 : 5-6)

'பின்பனிக் கடைநாள், தண்பனி அற்சிரம்
வந்தன்று, பெருவிறற் தேரே' (குறுந். 338 : 5-6)

'தண்வரல் வாடை தூக்கும்
கடும்பனி அற்சிரம் நடுங்கு அஞர் உறவே' (குறுந். 76 ; 5-6)

'நோற்றோர் மன்ற தோழி - தண்ணெனத்
தூற்றும் துவலைப் பனிக் கடுந்திங்கள்.' (குறுந். 344 : 1-2)

இளவேனில், முதுவேனில்

'இருங்கண் ஞாலத்து ஈண்டு தொழில் உதவிப்
பெரும்பெயல் பொழிந்த வழிநாள் அமையத்து,
பல்பொறி அரவின் செல்புறம் கடுப்ப
யாற்று அறல் நுணங்கிய நாட்பத வேனில்' (நற். 157 : 1-4)

'போது அவிழ் மரத்தொடு பொருகரை கவின்பெற
நோதக வந்தன்றால் இளவேனில் மேதக' (கலி. 26 : 7-8)

'நாம்நகை உடையம் நெஞ்சே ! — கடுந்தெறல்
வேனில் நீடிய வான் உயர் வழிநாள்' (அகம். 121 : 1-2)

'கல்காயும் கடுவேனிலொடு
இருவானம் பெயல் ஒளிப்பினும்.' (மதுரைக். 106-107)

சிலப்பதிகாரத்தில் அறுவகைப் பருவ வருணனை

சிலப்பதிகாரம் ஊர்காண் காதையில் கார் முதலிய அறுவகைப் பருவமும் முறையே சுட்டப்பெற்றுள்ளன. கடைகழி மகளிர் காலத்திற்கு ஏற்ற இன்பங்களில் ஈடுபட்டமையை விளக்கவந்த

இடத்திலே கார்காலம், கூதிர்க்காலம், முன்பனிக்காலம், பின்பனிக் காலம், இளவேனில் வேனில் என்னும் பருவங்களையும் அவ்வக் காலங்களில் அம் மகளிர் பொழுது போக்கும் வகையையும் இளங்கோவடிகள் விவரிக்கின்றார்.

'கார் அரசாளன் வாடையொடு வருஉம்
காலம் அன்றியும் - நூலோர் சிறப்பின்
முகில்தோய் மாடத்து ; அகில்தரு விறகின்
மடவரல் மகளிர் நெருப்பு அமர்ந்து ;
நறுஞ் சாந்து அகலத்து நம்பியர் தம்மொடு
குறுங்கண் அடைக்கும் கூதிர்க்காலையும் —
வளமனை மகளிரும் மைந்தரும் விரும்பி,
இளநிலா முன்றிலின் இளவெயில் நுகர,
விரிகதிர் மண்டிலம் தெற்கு ஏர்பு, வெண்மழை
அரிதின் தோன்றும் அச்சிரக் காலையும் —
கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்
வெங்கண் நெடுவேள் வில்விழாக் காணும்
பங்குனி முயக்கத்துப் பனியரசு யாண்டு உளன் ? —
கோதை மாதவி கொழுங்கொடி எடுப்ப,
காவும் கானமும் கடிமலர் ஏந்த,
தென்னவன் பொதியில் தென்றலொடு புகுந்து,
மன்னவன் கூடல் மகிழ்துணை தழூஉம்
இன் இளவேனில் யாண்டு உளக்கொல் ? என்று
உருவக்கொடியோர் உடைப்பெருங் கொழுநரொடு
பருவம் எண்ணும் படர்தீர் காலை—
கன்று அமர் ஆயமொடு களிற்றினம் நடுங்க
என்றூழ் நின்ற குன்றுகெழு நல் நாட்டுக்
காடு தீப்பிறப்பக் கனைஎரி பொத்தி,
கோடையொடு புகுந்து, கூடல் ஆண்ட
வேனில் வேந்தன் வேற்றுப் புலம்படர
ஓசனிக்கின்ற உறுவெயில் கடைநாள்.' (சிலப். ஊர்காண். 96–125)

தேவார திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களிலும் பிற்காலக் காவியங் களிலும் வரும் பருவ வருணனைப் பகுதிகள் பலப்பலவாம். பருவ வருணனையைக் காவியத்திற்கு ஓர் அங்கமாகவும் நூலோர் கூறுவர்.

ஞாயிறும் அயனமும்

இருசுடர்

இரவில் ஒளி செய்து திகழும் திங்களையும் பகலில் ஒளி செய்யும் ஞாயிறறையும் 'இருசுடர்' (புற. 65 : 7) எனத் தொகைப் பெயரால் குறிப்பிடுவர். மேலும், 'ஞாயிற்றுப் புத்தேள்' கலி. 106 : 13), 'திங்கட்புத்தேள்' (புற. 27 : 14) என இவ்விரு சுடரையும் தமக்கு வாழ்வு நல்கும தெய்வங்களாகவே கொண்டு மககள் போற்றினர்.

ஞாயிற்றின் இயல்பும் சிறப்பும்

ஞாயிற்றைச் சுட்டி உரைக்கும் பொழுதெல்லாம் பெயர் அளவில் சுட்டாது அதன் இயல்பினையும் சிறப்பினையும் புலப்படுத்தும் அடை-மொழிகள் சேர்த்தே சங்கப் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். 'பகலசெய் மண்டிலம்' (பெரும். 442), 'மலர் வாய் மண்டிலம்' (புற. 175 : 9), 'வீங்கு செலல் மண்டிலம்' (நெடுநல். 161 புற 8 : 6), தேயா மண்டிலம்' (பரி. 17 : 32), 'சுடர் மண்டிலம்' (அக. 367 : 1) 'சுடர் கெழு மண்டிலம்' (அக 378 : 14), 'பருதிஅம் செல்வன்' (அக. 360 : 2., கலி. 26 : 2), 'மைஅறு மண்டிலம்' (கலி. 141 : 12)

ஞாயிற்றினின்று வெளிப்படும் கதிரின் விளக்கம், வெம்மை முதலிய இயல்புகளைப் பாராட்டும் தொடர்களும் உள. 'விரிகதிர் ஞாயிறு' (புற. 228 : 8), 'கதிர்ச் செல்வன்' (பட்டின. 122), 'அலங்குகதிர்க் கனலி (புற. 35 : 6), 'தெறு கதிர்க்கனலி' (புற. 397 : 24), 'அழல் போல் வெங்கதிர்' (அக. 1 : 10) 'உருகெழு ஞாயிற்று ஒண்கதிர்' (புற. 160 : 1), 'வெவ்வெஞ் செல்வன்' (பொருந. 136), வெம்மையால் தெறுதலால்' 'கனலி' (புற. 35 : 6 , கலி. 16 : 12) என்றும், பெருவிளக்க மான கதிர்களை உடைமையால் 'சுடர்' (கலி 100 : 1) என்றும் இஞ் ஞாயிறு வழங்கப்படடிருக்கிறது. ஞாயிறு உலகத்திற்கு இன்பத்தையும் நலத்தையும் நல்குதலைச் சுட்டி, 'ஏமுற விளங்கிய சுடர்' (நற். 283 : 7) எனவும் பாராட்டப்படுகிறது.

ஞாயிறு முதலாப் பிறகோள்கள் – சுடர்ச் சக்கரம்

ஞாயிற்றை முதலாகக் கொண்டு பிற கோள்களும், நாள்மீன்களும் மேரு மலையைச் சூழ வருகின்றன என்பர் ஞாயிறு முதலிய சுடர் களின் போக்கைத் தெரிவிப்பதே 'சுடர்நிலை' எனப்படும் சுடர்ச்சக்கரம்.

'என்றூழ் உறவரும் இருசுடர் நேமி
ஒன்றிய சுடர்நிலை உள்படுவோரும்' (பரி. 19 46-47)

என்பது பரிபாடல்

இவை சூழ்வரும் தெரு (வீதி) மூன்று. அவையாவன, ஆடு (மேட ராசி), ஏறு (இடபராசி), மிதுனம் (மிதுனராசி) என்பன. இவற்றுள் மேடராசியை முதலாகக் கொண்டு ஏனைய ராசிகளிலும் ஞாயிறு, திங்கள், நட்சத்திரங்கள் ஆகியவை வரும் ஒவ்வோர் இராசியும் ஒன்பது ஒன்பது நட்சத்திரங்களை உரித்தாகக் கொள்ளும். இச்செய்திகள்,

'தெரு இடைப்படுத்த மூன்று ஒன்பதிற்று இருக்கையுள்' (பரி. 11 : 3)

எனவும்,

'திண்நிலை மருப்பின் ஆடுதலை ஆக,
விண் ஊர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து' (நெடுநல் 160-161)

எனவும் வருவனவற்றால் புலனாகின்றன.

ஞாயிற்றின் போக்கும் அயனமும்

ஞாயிறு செல்லும் வீதியை,

'செஞ்ஞாயிற்றுச் செலவும், அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும், பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்'

எனப் புறநானூறு (புற. 30 : 1-2) குறிப்பிடுதலும் கவனிக்கத்தக்கது ஞாயிற்றின் செலவினாலேயே அயனங்களும், பருவங்களும் உளவாகின்றன. தெற்கும் வடக்குமாகிய அயனங்களில் மாறிமாறி வரும் இயல்புடையது ஞாயிறு.

'கடந்து அடுதானைச் சேரலாதனை
யாங்கனம் ஒத்தியோ? — வீங்குசெலல் மண்டிலம்!
பொழுது என வரைதி; புறக்கொடுத்து இறத்தி;
மாறி வருதி, மலைமறைந்து ஒளித்தி;
அகல் இரு விசும்பினானும்
பகல் விளங்குதியால் பல்கதிர் விரித்தே' (புறம். 8 : 5-10)

என்பது புறப்பாட்டு. இங்கே ஞாயிறு மிக்க செலவை உடைத்தாதலும், பகற்பொழுதைத் தனக்கெனக் கோடலும், திங்கள் மண்டிலத்திற்கு முதுகிட்டுப் போதலும், தெற்கும் வடக்கும் ஆகிய இடங்களில் மாறி

மாறி வருதலும், மலையில் மறைந்து போகுதலும், பகலில் பலகதிர் பரப்பி விளங்குதலும் ஆகிய தன்மைகள் சுட்டப்பட்டுள்ளன. 'மாறி வருதி' என்பதற்கு அயனங்களில் மாறி வருதலைக் கொள்ளுதலே யன்றி, 'இராசி' தோறும் மாறி வருதலையும் குறிப்பித்ததாகவும் கொள்ளுவது உண்டு.

ஞாயிற்றின் தெற்கு நோக்கிய செலவு

ஞாயிறு தெற்கு நோக்கி நகர்ந்து செல்லும் காலத்துப் பனிப்பருவம் உளதாதலைச் சங்கப் பாடல்கள் சில குறிப்பிட்டுள்ளன :

'பெருர்பெயல் பொழிந்த தொழில எழிலி
தெற்கு ஏர்பு இரங்கும் அற்சிரக் காலையும்." (நற். 5 : 5 6)

'விழுமிது நிகழ்வது ஆயினும் - தெற்கு ஏர்பு
கழிமழை பொழிந்த பொழுது கொள் அமையத்து' (அக. 13 : 12-13)

'விரிகதிர் மண்டிலம் தெற்கு ஏர்பு, வெண்மழை
அரிதின் தோன்றும் அச்சிரக் காலையும்' (சிலப். 14 : 104-105)

ஞாயிற்று மண்டிலம் தெற்கே எழுதலால் வெண்முகில் அரிதாகத் தோன்றும் முன் பனிக்காலம் நிகழ்வது குறிக்கப்படுகிறது. 'தெற்கு ஏர்பு' என்பதற்கு, 'மிதுன வீதியிலே எழுந்து இயங்குதலானே' என அடியார்க்கு நல்லார் எழுதுகின்றார் 'தெற்கு ஏர்பு கழிமழை பொழிந்த பொழுதுகொள் அமையத்து (அகம் 13 : 12-13) என்பதில், 'பொழுது-காலத் தன்மை; அமையம் கூதிர' எனப் பழைய உரைக் குறிப்பு எழுதப் பட்டிருக்கின்றது ஞாயிற்றின் தெற்குநோக்கிய எழுச்சியால் கார், கூதிர், முன்பனி என்னும் பருவங்கள் தலைப்படுதலை மேற்குறித்த பாடல் பகுதிகளினின்றும் உணரலாகும்

ஞாயிற்றின் வடக்கு நோக்கிய செலவு

ஞாயிற்றின் வடக்கு நோக்கிய செலவைக் குறித்துச் சீவகசிந்தா-மணியில் ஒரு பாடல் உள்ளது. இங்கே 'அயணம்' என்னும் சொல்லையும் கவிஞர் ஆளுகின்றார்.

'காசு அறு துறவின் மிக்க
கடவுளர் சிந்தை போல
மாசு அறு விசும்பின் வெய்யோன்
வடதிசை அயணம் முன்னி,

ஆசு அற நடக்குந் நாளில்,
ஐங்கணைக் கிழவன் வைகி,
காசறைப் பரிவு தீர்க்கும்
பங்குனிப் பருவம் செய்தான். (சீவக. 851)

இப்பாடலுக்கு நச்சினார்க்கினியர் எழுதும் உரையும் ஞாயிற்றின் கதியை நன்கு விளக்குதலினாலே அதனையும் இங்கே பார்ப்போம். அவரது உரை வருமாறு :

'அயனம்' என்னாது 'அயணம்" எனப் பாகதத்தால் கூறினார் செய்யுட் சொல் என்று. வெய்யோன் வடதிசைச் செலவைக் கருதி இருடிகள் சித்தைபோல மாசு அற்ற விசும்பிலே குற்றம் அற நடக்கும் நாட்களில் பின்பனி நீங்கும் பங்குனித் திங்களிலே காமன் தங்கும்படி இளவேனிலைப் பிறப்பித்தான்'

இங்கே வடதிசை அயணம் ஆவது சூரியனுடைய வடதிசைச் செலவு இந்த வடதிசைச் செலவால் பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் பருவங்கள் உளவாகின்றன என்பது குறிப்பினால் பெறப்படும்

யாண்டு, ஊழி

மாத்திரை நாழிகை, முகூர்த்தம், யாமம், நாள், திங்கள், இருது, அயணம் எனச் செல்லும் காலப்பகுதியில் யாண்டு ஒரு பெருங்காலப் பகுதி யாண்டு இருது, மதி, நாள் ஆதிக் காலம்" என நன்னூலில (276) பவணந்தி முனிவர் காலம் என்பதற்கு விளக்கம் தந்துள்ளார். யாண்டுகள் பல கூடி ஊழிகளாக ஆகும்.

நாள், திங்கள், யாண்டு, ஊழி, வெள்ளம்

ஓர் யாண்டிக்கு பன்னிரண்டு மாதங்களும், ஆறு பருவங்களும், இரு அயணங்களும் உளவாதலை முன்பு திங்கள், இருது, அயணம் பற்றிக் கூறிய இடங்களில் பார்த்தோம்.

' நின்நாள் திங்கள் அனைய ஆக ! திங்கள்
யாண்டு ஓரனைய ஆக ! யாண்டே
ஊழி அனைய ஆக ! ஊழி
வெள்ள வரம்பின ஆக ! என உன்னிக்
காண்கு வந்திசின் யானே' (பதிற். 90 : 51-55)

'நின் வாழ்நாட்கள் மாதத்தைப் போன்றன ஆகுக. மாதங்கள் ஆண்டைப் போன்று ஒரு தன்மைய ஆக. ஆண்டுகள் ஊழி போன்றன ஆகுக. ஊழிகள் வெள்ளம் என்னும் பேரெண்ணின் எல்லையை உடையன ஆகுக. இவ்வாறு நினைத்து நான் உன்னைக் காணும் பொருட்டு வந்தேன்' என்பது இளஞ்சேரலிரும்பொறையை நோக்கிப் பெருங்குன்றூர் கிழார் கூறிய வாக்கு. இங்கே நாள், திங்கள், யாண்டு ஊழி, வெள்ளம் என்பன முறையே சுட்டப்படுதல் காணலாம். இங்ஙனம், செல்லும் காலங்களின் இயல்புகள் வேறுசில பாடல்களிலும் காணக் கிடக்கின்றன. அவை வருமாறு :

' ஊழியும் யாண்டு எண்ணி யாத்தன; யாமமும்
நாழிகை யானே நடந்தன" (நான்மணி. 71)

' உயிர்த் தொகை உண்ட ஒன்பதிற்று இரட்டி என்று
யாண்டும், மதியும், நாளும், கடிகையும்
ஈண்டு நீர் ஞாலம் கூட்டி எண்கோள ' (சிலப். 27 : 8-10)

' வெள்ள வரம்பின ஊழி போகியும்
கிள்ளை வாழிய பலவே ' (ஐங். 281)

' ஊழியின் பெரிதால் நாழிகை என்னும்.' (திருவாய். 2 : 7 : 4)

' கரிய நாழிகை ஊழியின் பெரியன
கழியும் ஆறு அறியேனே.' (பெரியதிரு 8 : 5 : 6)

' காலையும் மாலையும் ஒத்துண்டு, கங்குல்
நாழிகை ஊழியில் நீண்டு உலாவும்.' (பெரியதிரு. 9 : 5 : 3)

' பலபல ஊழிகள் ஆயிடும், அன்றி
ஓர் நாழிகையைப்
பலபல கூறிட்ட கூறு ஆயிடும்.' (திருவிருத்தம். 16)

பேரெண்கள்

' அடை அடுப்பு அறியா அருவி ஆம்பல்
ஆயிர வெள்ள ஊழி
வாழி, ஆத ! வாழிய பலவே ! (பதிற். 63 : 19-21)

இங்கே வெள்ளம் என்பது பேரெண்ணைக் குறிப்பிடுகின்றது. அடை அடுத்தலை அறியாத, பூக்கள் அரிதாகிய பல ஆம்பல் என்னும் எண்ணும், ஆயிரத்தால் பெருக்கிய வெள்ளம் என்னும் எண்ணும் ஆகிய எண்களின் அளவுள்ள பல ஊழிகள் வாழ்வாயாக என்பது பொருள்.

ஆம்பல், வெள்ளம் என்பன போலவே, நெய்தல், குவளை, சங்கம், கமலம் என்னும் பேரெண்களும் உள

‘ நெய்தலும், குவளையும், ஆம்பலும், சங்கமும்,
மைஇல் கமலமும், வெள்ளமும் நுதலிய
செய்குறி ஈட்டம் கழிப்பிய வழிமுறை.’ (பரி. 2 : 13-15)

‘ ஐ, அம், பல் என வரூஉம் இறுதி
அல்பெயர் எண்ணும் ஆயியல் நிலையும்.’ (தொல். புள்ளி. 98)

இங்கே ஐ, அம், பல் என வரூஉம் இறுதியாவது, தாமரை, வெள்ளம், ஆம்பல் என்னும் பேரெண்களாம் இவை பலநூறு ஆண்டு களைக் குறிப்பவை.

‘ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! உன்
சேவடி செவ்வி திருக்காப்பு ’ (பல்லாண்டு, 1)

எனப் பெரியாழ்வார் கூறுமாறு அளவைக்கு எட்டாது செலலும் மிகப் பேரளவினதாகிய எண்களைச் சுட்டிக் கூறும் மரபு இலக்கியங்களில் காண்கிறோம்.

மகளிர் கருப்பகாலம்

மகளிர் கருப்பகாலம் பன்னிரு திங்கள் கொண்ட ஓர் ஆண்டாம்.

‘ முந்நால் திங்கள் நிறை பொறுத்து அசைஇ
ஒதுங்கல் செல்லாப் பசும் புளி வேட்கைக்
கடுஞ்சூல் மகளிர்போல ’ (குறுந். 287 : 1-3)

‘ பன்னிரு திங்கள் வயிற்றிற் கொண்ட அப்பாங்கினால் ’ (பெரி. 2 : 2 : 8)

எனவரும் பகுதிகள் மேற்கூறியதனைத் தெளிவிக்கும்.

மனிதவாழ்வில் ஆண்டுகள்

மனிதர்க்கு ஆயுள் நூறாண்டு என வேதநூல் கூறுவதனையும், மனித வாழ்வில ஆண்டுகள் கழியும் வகையையும் தொண்டரடிப் பொடியாழ்வார் அறிவுறுத்தியுள்ளார்.

'வேதநூல் பிராயம் நூறு
மனிசர்தாம் புகுவரேனும்,
பாதியும் உறங்கிப் போகும்;
நின்றதிற் பதினை யாண்டு
பேதை பாலகன் அது ஆகும்;
பிணி பசி மூப்புத் துன்பம்
ஆதலால், பிறவி வேண்டேன் —
அரங்கமா நகரு ளானே' (திருமாலை 3)

என்பது ஆழ்வார் வாக்கு.

ஐயாண்டு எய்தி மையாடி
அறிந்தார் கலைகள் படைநவின்றார்
கொய்பூமாலை குழல் மின்னும்
கொழும் பொற்றோடும் குண்டலமும்
ஐயன்மார்கள் துளக்கு இன்றி
ஆறும் கலிமா வெருண்டு ஊர்ந்தார்;
மெய்ஆர் அலங்கல் மார்பற்கு
முப்பது ஆகி நிறைந்ததே' (சீவக 13 : 108)

என்னும் சிந்தாமணியில் ஐந்தாம் ஆண்டில் கலை பயில்தலும், காளைப்பருவத்தில் படைக்கலம் முதலிய பயிறலும் குறிப்பிடப்படுதல் காணலாம். இவ்வாறாக ஆண்டு என்பது வாழ்க்கையில் முக்கியமான ஒரு காலக்குறிப்பு என்பது தெரியவருகின்றது.

நால்வகை ஊழிகள்

ஊழி என்னும் பெருங்கால அளவில் நான்கு ஊழிகள் சொல்லப்பட்டுள்ளன.

'நால்வகை ஊழி எண் நவிற்றும் சிறப்பினை' (பரி. 3 : 80)

என்பது பரிபாடல்.

'நன்று பிணி மூப்புக் கையகற்றி நான்கூழி
நின்று நிலம் முழுதும் ஆண்டாலும், (முதல் திரு. 71)

என்பது பொய்கையார் வாக்கு.

நான்கு ஊழிகளாவன கிரேத, திரேத, துவாபர, கலியுகங்களாம்.

'சேயாய்! கிரேத திரேத, துவாபர
கலியுகா — இவை நான்கும் முன் ஆனாய்!'

(பெரிய திருமொழி. 7 . 7 . 6)

என்பது திருமங்கை மன்னன் வாசகம். மேலும் இவரே,

'கண்டேன் நான் கலியுகத்தின் தன்மை;
கருமம் ஆவதும் என்றனக்கு அறிந்தேன்–' (பெரியதிரு. 7 : 7 : 5)

என்று தாம் வாழும் யுகம் பற்றியும் கூறுகிறார்.

கலியுகம் நீங்கிக் கிருதயுகம் தோன்றும் என்றும் சடகோபர் பேசுகிறார்.

'பொலிக! பொலிக! பொலிக!
போயிற்று வல்லுயிர்ச் சாபம்;
நலியும் நரகமும் நைந்த;
நமனுக்கு இங்குயாதொன்றும் இல்லை;
கலியும் கெடும்; கண்டுகொண்மின்;
கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்து இசைபாடி
ஆடி உழிதரக் கண்டோம்.' (திருவாய். 5 . 2-1)

'திரியும் கலியுகம் நீங்கி,
தேவர்கள் தாமும் புகுந்து,
பெரிய கிதயுகம் பற்றி,
பேரின்ப வெள்ளம் பெருக,
கரியமுகில் வண்ணன், எம்மான்,
கடல்வண்ணன் பூதங்கள், மண்மேல்
இரியப் புகுந்து, இசைபாடி,
எங்கும் இடம் கொண்டனவே!' (திருவாய். 5 : 2-3)

'தொக்க அமரர் குழாங்கள்
எங்கும் பரந்தன; தொண்டீர்!
ஒக்கத் தொழகிற்றிராகில்,
கலியுகம் ஒன்றும் இல்லையே.' (திருவாய். 5 : 2-10)

நாள் (நட்சத்திரம்)

நாள்மீன்

'நாள்' என்பது 'தினம்' என்னும் பொருளில் வழங்குவதோடு நட்சத்திரங்களுக்கும் பெயராக வழங்கும். நட்சத்திரங்களை, 'நாள்மீன்'

எனறும் குறிப்பிடுவர். விண்மீன்கள், அளவிறந்தன. 27 நட்சத்திரங்கள் சிறப்பாகக் கொண்டு கூறப்படும். இவற்றை இப்பொழுது அசுவினி முதல் இரேவதி ஈறாக 27 எனக் கொள்ளுகிறோம்.

பண்டு முதல்நாள் கார்த்திகை

பண்டைக்காலத்தில் கார்த்திகையை முதலாகக்கொண்டு 27 நட்சத்திரங்களையும் எண்ணி வந்தனர். மணிமேகலையில் புத்த தேவன் தோன்றிய நாளை,

'இருது இளவேனில் எரிகதிர் இடபத்து,
ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்,
மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்'

(மணி பாத். பெற்ற. 40-42., பாத். பிச்சை. 23-25)

எனபர் சாத்தனார். இங்கே மீனத்து இடைநிலை மீனம் என்றும், பதின்மூன்று நட்சத்திரங்கள் சென்றபின் வருவது என்றும் விசாக நட்சத்திரத்தைக் கொள்கிறார். கார்த்திகையை முதலாகக் கொண்டு எண்ணினாலதான் இவர்கூறும் கணக்கு ஒத்து வருகிறது.

சம்பந்தர் பாடிய கோளறு பதிகத்தில் பிரயாணத்திற்காகாத தீய நாள்களும் இறையருளால் நல்லனவாம் எனச் சொல்ல வந்தவிடத்து,

'ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டொடு ஆறும்
உடன் ஆய நாள்கள் அவைதால்
அன்பொடு நல்லநல்ல. அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே' (சம்ப. தேவா. 2 . 85 :2)

இங்கும் கார்த்திகையை முதலாகக் கொண்டே எண்ண வேண்டும் என்பர். ஒன்பதாவது நாள் பூரம்; ஒன்று என்னும் முதல் நாள் கார்த்திகை; ஏழாவது நாள் ஆயிலியம்; பதினெட்டாவது நாள் பூராடம். கார்த்திகையிலிருந்து தலைகீழாக எண்ணும்போது ஆறாவது நாள் பூரட்டாதி. இவை பிராயணத்திற்கு ஆகாத நாட்களாகும்.

தொல்காப்பியத்தில் நாட் பெயர்கள்

தொல்காப்பியர் தமது பேரிலக்கணத்தில் 27 நட்சத்திரப் பெயர்களையும் ஈற்று வகையால் எண்ணி, அவற்றிற்குப் புணர்ச்சி விதி

அமைத்துள்ளார். அவர் நாட் பெயர்களை இகர ஈறு, ஐகார ஈறு, மகர ஈறு என மூன்று எழுத்துக்களை ஈறாகக் கொண்டு முடிவதாகக் கொள்கின்றார். 27 நட்சத்திரப் பெயர்களையும் பார்த்தால் அவர் குறித்துள்ள மூன்று ஈறுகளில் அவை அடங்குதல் புலப்படும்

இகர ஈற்று நாட்பெயர்		ஐகார ஈற்று நாட்பெயர்		மகர ஈற்று நாட்பெயர்			
2	உரோகிணி	1	கார்த்திகை	3	மிருகசீரிடம்	14	விசாகம்
13	சோதி	4	திருவாதிரை	5	புனர்பூசம்	15	அனுசம்
23	பூரட்டாதி	12	சித்திரை	6	பூசம்	17	மூலம்
24	உத்திரட்டாதி	16	கேட்டை	7	ஆயிலியம்	18	பூராடம்
25	இரேவதி			8	மகம்	19	உத்திராடம்
26	அசுவினி			9	பூரம்	20	திருவோணம்
27	பரணி			10	உத்திரம்	21	அவிட்டம்
				11	அத்தம்	22	சதயம்

இவற்றுள் இகர ஈற்று ஐகார ஈற்று நாட்பெயர்கள், வருமொழியில் வினைச் சொல் வருங்காலத்து, பரணியாற் கொண்டான், சோதியாற் கொண்டான், கேட்டையாற் கொணடான் என ஆன் சாரியை பெறும் என்பர். மகர ஈற்று நாட்பெயர்களோ ஆனொடு அதன்முன் அத்து என்னும் சாரியையும் பெற்று ஓணத்தாற் கொண்டான், மகத்தாற் கொண்டான் என்றாற் போல வழங்க வேண்டும் என்பர்.

> ' நாள் முன் தோன்றும் தொழில் நிலைக் கிளவிக்கு
> ஆன் இடை வருதல் ஐயம் இன்றே ' (தொல். எழுத். உயிர்மயங். 45)

என்பது இகர ஈற்று நாட்பெயர் பற்றிய விதி. ஐகார ஈற்றுப் பெயர் களும் இத்தகையனவே என,

> ' திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன ' (தொல். எழுத். உயிர். 84)

என விதிக்கின்றார். மகர ஈற்று நாட்பெயர்களைக் குறிக்குமிடத்து,

> ' நாட்பெயர்க் கிளவி மேற் கிளந்தன்ன;
> அத்தும் ஆன்மிசை வரைநிலை இன்றே.
> ஒற்று மெய் கெடுதல் என்மனார் புலவர் '
>
> (தொல். எழுத். புள்ளி. 36)

என்பர்

இங்கே, தாம் புதிதாக விதிப்பது அல்ல இவ்விதி என்றும், புலவர் மரபு இது என்றும் குறிப்பாராய், 'என்மனார் புலவர்' என்கிறார். எனவே நாட்பெயர் பற்றிய இவ்வழக்குகள் அவர்க்கும் முன்பிருந்தே வழிவழியாக வந்த மரபு என்பது பெறப்படும்.

சங்கப்பாடல் முதலியவற்றில் நாட்பெயர்கள்

சங்கப் பாடல்களிலும், தேவாரம், திவ்விய பிரபந்தம் முதலியவற்றிலும் இந்நாட்பெயர்களுள் பெரும்பாலன குறிக்கப்பட்டுள்ளன. இவ்விலக்கியங்களில் காணும் நாட்பெயர்கள் பற்றிய விபரம் வருமாறு:

கார்த்திகை

அறுமீன் கொண்ட கூட்டம். இதனை அறுமீன், எரி, அழல், ஆரல் என்னும் பெயர்களால் குறிப்பிட்டுள்ளனர். ஆரல் என்பது இடைக்குறையாக ஆல் எனவும் வழங்கும்

'குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகல் இருள் நடுநாள்' (அகம், 141 : 7-8)

'அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்
செல்சுடர் நெடுங் கொடி போல,
பல்பூங் கோங்கம் அணிந்த காடே' (நற். 202 : 9-11)

'அகல் இரு விசும்பின் ஆஅல் போல
வாலிதின் மலர்ந்தன புன்கொடி முசுண்டை' (மலைபடு. 100-101)

'நலம்மிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலைநாள் விளக்கின்' (கார் நாற்பது 26)

'கார்த்திகைச் சாற்றில் கழி விளக்கு' (களவழி, 17)

'தொல் கார்த்திகை நாள்' (சம். தேவா. 2 : 47 : 3)

'குன்றில் கார்த்திகை விளக்கிட்டன்ன
கடிகமழ் குவளைப் பைந்தார்' (சீவக சிந். 256)

பரணி

'எரி, சடை, எழில், வேழம்' (பரி. 11 : 2)

இங்கே வேழம் என்பது வேழத்திற்கு யோனியாகிய பரணியைக் குறிக்கின்றது

உரோகிணி

மதிசேர் உரோகிணி நாள் திருமணம் செய்வதற்குச் சிறந்த நாளாகக் கொள்ளப்பட்டது.

'அங்கண் இரு விசும்பு விளங்க, திங்கட்
சகடம் மண்டிய துகள் தீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணி" (அக 136 4-6)

'வான் ஊர் மதியம் சகடு அணைய வானத்துச்
சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட,
தீவலம் செய்வது காண்பார்கள் நோன்பு என்னை !
(சிலப். மங்கல. 50-53)

இங்கே 'சகடம்', 'சகடு' என்பன உரோகிணியைக் குறிக்கும்.

'விண் ஊர்பு திரிதரும் வீங்கு செலன் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய
உரோகிணி நினைவனள் நோக்கி' (நெடுநல். 161-163)

'விண்ணகம் இருள் கொள விளங்கு வெண்மதி
ஒண்ணிற உரோணியோடு ஒளித்தது ஒத்ததே' (சீவக சிந். 1 : 169)
ஒண்ணிற உரோணி ஊர்ந்த
ஒளி மதி ஒன்பொன் ஆட்சி'. (சீவக. சிந் 3 : 129)

ஆதிரை

'ஆதிரை முதல்வன் (பரி. 8 : 6)

'மா இருந் திங்கள் மதிநிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்க' (பரி 11 : 77-78)

'அருப்பெறல் ஆதிரையான்' (கலி 150 : 20)

'ஆதிரையான் ஆதிரையான் என்றே அறையுமால்
ஊர்திரை நீர் வேலி உலகு' (முத்தொள். 1)

மூவர் தேவாரத்திலும் ஆதிரை நாளைப் பற்றிய குறிப்புக்கள் பல உள.

ஆடலன் ஆதிரையன் ஆரூர் அமர்ந்தானே ' (சம். தேவா.
1 . 105 : 1)

ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய் ! (சம். 2 : 47 : 4)

'அந்தண் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்'
(திருநா. 4 : 21 : 1 -10)

'ஆதிரை நாள் ஆதரித்த அம்மான் தன்னை' (திருநா. 6 : 79 : 1)

'திங்களூர் திருவாதிரையான்' (சுந் 7 : 31 : 6)

புனர்பூசம்

'கடைக் குளத்துக் கயம் காய' (புறம். 229 : 6)

கயமாகிய குளவடிவு போலும் வடிவுடைய புனர்பூசம் இங்குக் குறிக்கப் பட்டுள்ளது.

பூசம்

'பூசம் புகுந்து ஆடிப் பொலிந்து' (தேவா 1 : 32 : 5)

'பூச நீர்ப் பொலியும் புனற் பொன்னியிற் பனிமலர்' (தேவா 2 : 2 : 6)

'தைப் பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்'
(தேவா 2 . 47 : 5)

'பொருந்திய தைப்பூசம் ஆடிப் பொலிவெய்த' (தேவா. 2 : 56 : 5)

'பூசநீர்க் கடுவாய்க் கரைபுத்தூர்' (தேவா. 5 : 62 : 8)

மகம்

'மழை நீங்கிய மாக விசும்பில்

'மதி சேர்ந்த மக வெண்மீன்' (பட்டினப். 34 : 35)

'மகத்திற் புக்கதோர் சனி எனக்கு ஆனாய்'
(சுந். தேவா. 7 : 54 : 9)

உத்தரம், மூலம், மிருகசீரிடம்

'பங்குனி உயர் அழுவத்துத்
தலைநாள் மீன் நிலைதிரிய
நிலைநாள் மீன் அதன் எதிர் ஏர்தர
தொல்நாள் மீன் துறை படிய' (புறம். 229 : 5 8)

'பங்குனி மாதத்தினது முதற் பதினைந்தின்கண் உச்சமாகிய உத்தரம் அவ்வுச்சியினின்றும் சாய, அதற்கு எட்டாம் மீனாகிய மூலம் அதற்கு எதிரேஎழாநிற்க, அந்த உத்தரத்திற்கு முன் செல்லப்பட்ட எட்டாம் மீனாகிய மிருகசீரிடம் ஆகிய நட்சத்திரம் துறையிடத்தே தாழ' என்பது இதன் பொருள்.

உத்தரம்

உத்தரம் என்னும் நட்சத்திரத்தின் பெயர் மாளிகையில் அமைந்துள்ள உத்தரத்திற்கும் அமைதல் கருதி,

'நாளொடு பெயரிய கோள் அமை விழுமரத்து' (நெடுநல் 453)

என நெடுநல்வாடை கூறுகிறது. 'உத்தரம் என்னும் நாளின் பெயர் பெற்ற உத்தரக் கவியிலே' என்பது இதன் பொருள்.

> 'பங்குனி உத்தர நாள் ஒலி விழாக் காணாதே
> போதியோ பூம்பாவாய்' (சம். தேவா. 2 : 47 : 7)
>
> 'ஒற்றியூரையும் உத்தரம் நீர் மகிழ்வீர்' (சுந். தேவா. 7 : 49 : 7)
>
> 'ஒத்தமைந்த உத்தரநாள் தீர்த்தம் ஆக
> ஒளிதிகழும் ஒற்றியூர் என்கின்றாரே'
> (திருநா. தேவா. 6 ; 45 ; 5)
>
> 'பாரூர் பரிப்பத்தம் பங்குனி உத்தரம்
> பாற்படுத்தான்' (திருநா. 4 : 102 : 2)

அனுடம்

'முடப்பனையத்து வேர் முதலா' (புறம். 229 : 3)
இங்கே முடப்பனை என்றது முடப்பனை போலும் வடிவுடைய அனுட நாளைக் குறிக்கும்.

சித்திரை

> 'சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென' (சிலப். இந்திர. 64)

ஓணம்

> 'கணம் கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
> மாயோன் மேய ஓண நல் நாள்" (மதுரைக். 590-591)
> 'திருவோணத் திருவிழவில்' (திவ். பல்லாண்டு. 5, 8)
> 'நீ பிறந்த திருவோணம்
> இன்று நீராட வேண்டும்' (திவ். பெரியாழ் 2 : 4 : 2)
> 'பன்னிரண்டு திருவோணம் அட்டேன்' (திவ். பெரியாழ். 2 : 19 : 7)
> 'ஆண் ஒப்பார் இவன் நேர் இல்லை காண், திரு
> ஓணத்தான் உலகு ஆளும் என்பார்களே' (திவ். பெரியாழ். 1 : 1 : 8)
> 'திருநாள் திருவோணம் இன்று ஏழுநாள்' (பெரியாழ்வார். 3 : 3 : 9)
> 'ஓண விழவில் ஒலியதிர, பேணி' (4 ஆம் திருவந்தாதி. 41)
> 'ஐப்பசி ஓண விழவும்' (தேவா. 2 : 47 : 2
> 'ஓணப் பிரானும்ஒளிர் மாமலர் மிசை
> உத்தமனும்' (தேவா. 4 : 105 : 10)

உத்திரட்டாதி

'ஊனத்தில் சிறந்த சீர்த்தி
உத்திரட்டாதியானே' (சீவக. சிந். 1 : 358)

இரேவதி

'இரேவதி வியாழ ஓரை.
இருஞ்சிலை முனைப்ப ஏறி' (சீவக. சிந். 3 : 14)

இருபத்தேழின் மேலாகச் சில சிறப்புடை நாள்கள்

இருபத்தேழு நட்சத்திரங்களுள் இலக்கியங்களில் கண்ட சில நட்சத்திரங்களைப் பற்றிய குறிப்புக்களை மேலே பார்த்தோம். இவை தவிர, எழுமீன், அருந்ததி, அகத்தியன் எனனும் நட்சத்திரங்களைப் பற்றியும் ஒரு சில குறிப்புக்கள் உள

எழுமீன் (சப்த ரிஷி மண்டலம்)

'மை அற விளங்கிய மணிநிற விசும்பின்
கைதொழு மரபின் எழுமீன் போல' (நற். 231 : 1-2)

வடமீன் (அருந்ததி)

'வடமீன் விளக்குஆல் உறை எழு மகளிருள்
கடவுள் ஒருமீன் சாலினி' (பரி. 43-44)

'பெருநல் வானத்து வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையும் கற்பின், நறுநுதல்' (பெரும் 302-303)

'இருண்டுதோன்று விசும்பின் உயர்நிலை உலகத்து
அருந்ததி அனைய கற்பின்' (ஐங். 442 ; 3-4)

'வடமீன் புரையும் கற்பின் மடமொழி' (புறம். 122 : 8)

'வடமீன் போல் தொழுது ஏத்த வயங்கிய கற்பினாள்' (கலி.2 : 21)

'விசும்பு வழங்கு மகளிருள்ளும் சிறந்த செம்மீன்
அனையள் நின் தொல் நகர்ச் செல்வி' (பதிற். 31 : 27-28)

'சாலி ஒருமீன் தகையாளை' (சிலப். மங்கல. 51)

'தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்' (சிலப். மங்கல. 27)

'அங்கண் உலகில் அருந்ததி அன்னாளை' (சிலப். மங்கல 63)

அகத்தியன்

> ' பொதியில் முனிவன் புரைவரை கீறி
> மிதுனம் அடைய ' (பரிபா 11 : 11-12)

இங்கே, 'பொதியில் முனிவன்' என்றது 'அகத்தியன்' என்னும் நட்சத்திரத்தினை.

நிகண்டுகளில் நாட்பெயர்

திவாகரம், பிங்கலம் என்னும் நிகண்டுகள் அசுவினி முதல் இரேவதி ஈறாக இருபத்தேழு நட்சத்திரங்களுக்கும் உரிய பெயர்களைத் தெய்வப் பெயர்த் தொகுதியிலும், வானவர் வகையிலும் முறையே கொடுத்துள்ளமையும் கவனிக்கத்தக்கது. ஏனைய நிகண்டுகளிலும் 27 நாட்பெயர்களுக்குரிய விளக்கம் காணலாகும்.

வானவீதியில் நாள்களின் செலவு

வானவீதியில் நட்சத்திரங்கள் செல்லும் வீதிகளைக் குறித்தும் பரிபாடல் கூறுகிறது. 27 நாள்களும் கோள்களுடன் கூட வானவீதியில உலாவரும் வீதிகள் மூன்றாம். அவை ஆடு (மேடராசி), ஏறு (இடபராசி), மிதுனம் (மிதுனராசி) என்பனவாம். இவற்றுள் மேடராசியை முதலாகக் கொண்டு ஏனைய இராசிகளிலும் ஞாயிறு திங்கள் முதலிய கோள்களும் நட்சத்திரங்களும் இயங்கும். மேற்குறித்த மூன்று ராசிகளும் ஒன்பது ஒன்பது நட்சத்திரங்களைக் கொண்டிருக்கும்.

> ' விரிகதிர் மதியமொடு, வியல்விசும்பு புணர்ப்ப.
> எரி, சடை, எழில்வேழம், தலைபெனக் கீழ் இருந்து,
> தெரு இடைப்படுத்த மூன்று ஒன்பதிற்று இருக்கையுள் '

எனவரும் பரிபாடல் (11 1–3) பகுதியால் இது புலனாம்.

இதற்குப் பரிமேலழகர் தரும் உரை விளக்கமும் கூர்ந்து நோக்குதற்கு உரியது. அது வருமாறு :

(அடி. 1 - 3) 'விசும்பு மதியத்தோடு புணர்ப்பனவாகிய எரியும், சடையும், வேழமும் முதலாக அவற்றின் கீழிருந்து வீதியாக வேறுபடுக்கப்பட்ட ஓரொன்று ஒன்பது நாளாகிய மூவகை இராசிகளுள்

மேலவாகிய நாள்மீன்களைக் கீழதாகிய மதி புணர்தலாவது அவ்வந் நேர்நிற்றல் மாத்திரமாகலின், 'அவற்றை விசும்பு புணர்ப்ப' என்றார்.

(அடி - 2) எரி, அங்கியைத் தெய்வமாகவுடைய கார்த்திகை. அதனால் அதன் முக்காலையுடைய இடபம் உணர்த்தப்பட்டது. சடை - சடையையுடைய ஈசனைத் தெய்வமாகவுடைய திருவாதிரை; அதனால் அதனையுடைய மிதுனம் உணர்த்தப் பட்டது. வேழம் - வேழத்திற்குதிய யோனியாகிய பரணி; அதனால் அதனையுடைய மேடம் உணர்த்தப்பட்டது.

இவை முதலாக இவற்றின் கீழ் இருத்தலாவது, இவற்றது பெயரான், இடபவீதி, மிதுன வீதி, மேடவீதி என வகுக்கப்பட்டு அம் மூவகை வீதியுள்ளும் அடங்குதல். அவற்றுள் இடபவீதி கன்னி, துலாம், மீனம், மேடம் என்பன. மிதுன வீதி தேள், வில்லு, மகரம், கும்பம் என்பன. மேட வீதி இடபம், மிதுனம், கற்கடகம், சிங்கம் என்பன.

ஓர் இராசியாவது இரண்டேகால் நாள் ஆதலின், நந்நான்கு இராசியாகிய இவை ஓரொன்று ஒன்பது நாளாயின. கோள்களுக்கு இடனாகலான் இவை பன்னிரண்டும் 'இருக்கை' எனப்பட்டன

பிங்கல நிகண்டுதரும் விளக்கம்

இருசுடர் முதலிய கோள்களும் நாள்களும் இயங்கும் வீதிகளைக் குறித்துப் பிங்கல நிகண்டு கூறும் செய்திகளும் ஈண்டுக் கவனித்தல் பொருத்தமாகும்.

'மேடவீதி, இடபவீதி, மிதுனவீதி என ஒரு மூன்றே,
அவைதாம் இருசுடர் முதலிய இயங்கு நெறியே' (பிங். 2 : 182)

'இடபம் சிங்கம், மிதுனம், கடகம்
இனைய நான்கும் மேடவீதி' (பிங் 2 : 183)

'மீனம், மேடம், கன்னி, துலாமும்,
ஆன இடப வீதிக்கு அமைந்தன.' (பிங். 2 : 184)

'வில்லு, மகரம், குடமே, விருச்சிகம்,
சொல்லிய மிதுன வீதித் துறையே.' (பிங். 2 : 185)

இவற்றுள்.

'சொன்ன இராசி தொகுத்த மாதங்கள்
மன்னிய கதிர் முதல் கோள் வரு நெறியே'. (பிங். 186)

முற்கூறிய மூன்று இராசிகளுள் இடபம் முதல் விருச்சிகம் ஈறாகத் தொகுத்த மாதங்களில் சூரியன் முதலிய கிரகங்கள் வரும் என்பது குறிக்கப்பட்டுள்ளது.

நாள் பார்த்து நற்காரியம் செய்தல்

நாள்பார்தது நற்காரியம் செய்தல் என்பது பழமையாக வரும் ஒரு மரபு. திருமணம் முதலிய சுபகாரியங்களுக்கு நாள் கேட்டு, அதன்படி அவற்றை நடத்தினர்.

'நாள் ஆய்ந்து வரைதல் அறம்'. (திணைமாலை, 52)

'பல்லார் அறியப் பறை அறைந்து, நாள்கேட்டு,
கல்யாணம் செய்து கடிபுக்க மெல்இயல்
காதல் மனையாளும் இல்லாளா' (நாலடி. 9 : 6)

எனக் கீழ்க்கணக்கு நூல்கள் நாள் கேட்டுக் கலியாணம் செய்தமையைக் குறிப்பிடுகின்றன. சந்திரன் உரோகிணியுடன் சேர்ந்திருக்கும் நாளே திருமணத்திற்கு மிகச் சிறந்த நாளாகக் கருதப்பட்டு வந்தமையும் இலக்கிய வழக்குகளால் தெரிய வருகின்றது. (உரோகிணி பற்றிய முன் பகுதி பார்க்கவும்)

நல்லோரையில் மன்னர் போருக்கு எழுதல்

மன்னர்கள் போருக்கு எழுங்காலத்துக் குறித்த நல்லோரையில் தாம் செல்ல வேண்டும் திக்கில் தமது வாள், குடை முதலிய அரச சின்னங்களை எடுத்துச் சென்று பெயர்த்து வைத்தல் மரபு. இம் மரபு சிலப்பதிகாரத்தில் இரண்டு இடங்களில் குறிக்கப்பட்டிருக்கிறது.

கரிகால் வளவன் வடநாடு சென்ற காலத்தும், செங்குட்டுவன் கண்ணகிக்குக் கற்கால் கொண்டுவர வடநாடு சென்றபோதும் இந் நிகழ்ச்சி நடைபெற்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'செருவெங் காதலின் திருமா வளவன்
வாளும் குடையும் மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து, நண்ணார் பெறுகஇம்
மண்ணக மருங்கின்என் வலிகெழு தோள்எனப்
புண்ணிய திசை முகம் போகிய அந்நாள்'. (சிலப். இந்திர. 90-94)

செங்குட்டுவன் கணி குறித்த நாளில் 'வாளும் குடையும் வடதிசை பெயர்க்க' (கால்கோள் 33) என ஆணையிட, அவ்வாறே செய்தமையை,

'மறமிகு வாளும் மாலை வெண் குடையும்
புறநிலைக் கோட்டப் புரிசையுள் புகுத்தி' (கால்கோள். 44-45)

என வரும் அடிகளால் உணரலாகும்.

பிறந்தநாட் பெருமங்கலம்

மன்னர்கள் தாம் பிறந்தநாளில் செற்றம் விடுத்து, தமது துணைவர்க்கும் பிறர்க்கும் தக்க பரிசுகள் தந்து பாராட்டுவர். இங்ஙனம் மன்னர்கள் கொண்டாடும் பிறந்த நாள் 'வெள்ளணி நாள்' எனவும் கூறப்படும். இந் நிகழ்ச்சியைத் தொல்காப்பியர்,

'சிறந்த நாள் அணி செற்றம் நீக்கிப்,
பிறந்த நாள் வயின் பெருமங்கலமும்'

என இதனைப் 'பெருமங்கலம்' என்னும் பெயரால் குறிப்பிடுவர்.

'பேர் இசை நன்னன் பெருப்பெயர் நல்நாள்
சேரி விழவின் ஆர்ப்பு எழுந்தாங்கு' (மதுரைக். 618–619)

என்பதில் 'பெரும்பெயர் நல்நாள்' என்பது நன்னனுடைய பிறந்த நாள் விழாவைக் குறிப்பிடுவதாகும்.

'குடவர் கோமான் வந்தான் நாளைப்
படுநுகம் பூணாய் பகடே; மன்னர்
அடித்தளை நீக்கும் வெள்ளணியாம் எனும்
தொடுப்பு ஏர் உழவர் ஓதைப் பாணியும்' (சிலப். நீர்ப். 227-230)

என்னும் பாடலடிகள் செங்குட்டுவனது வெள்ளணி நாளைக் குறிப்பிடுவதாகும்.

பிணியுற்றார்க்கு பிறந்தநாள் துன்பம்

நோயுற்றார்க்குப் பிறந்த நாள் அடுப்பின் அது வருத்தந்தரும் என்பது ஒரு நம்பிக்கை.

'பிணி கிடந்தார்க்குப் பிறந்தநாள் போல
அணியிழை அஞ்ச வருமால் — மணியரவை

மாறன் வழுதி மணவா மருள் மாலைச்
சீறிஓர் வாடை கிளர்ந்து' (முத்தொள். புறத் 1560)

எனவரும் முத்தொள்ளாயிரப் பாடல், 'பிணி கிடந்தார்க்குப் பிறந்த நாள் போல' என்பதைப் பழமொழி போலக் கொண்டு கூறுகிறது.

நாள் நிமித்தம் புள் நிமித்தம் பார்த்தல்

நாள் நிமித்தம், புள் நிமித்தம் முதலியன பார்த்தலும் உண்டு தீய நாள் நிமித்தம் முதலியன கண்டவழி அது நிகழாது விலகல் வேண்டும் எனக் கூறுதலை ஓம்படை என்பர். ஓம்படை என்றால பாதுகாவல் என்பது பொருள்.

'நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்,
காலம் கண்ணிய ஓம்படை உளப்பட,
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே' (தொல். புறத் 36)

என்பது ஓம்படை பற்றிய தொல்காப்பியர் விளக்கம். 'நாள் நிமித்தத்தானும், புள் நிமித்தத்தானும், பிறவற்றின் நிமித்தத்தாலும் பாடாண் தலைவர்க்குத் தோன்றிய தீங்கு கண்டு அஞ்சிய அச்சமும், அது பிறத்தற்குக் காரணமாகிய அன்பும் ஒழிவு இன்றிப் பரிசிலர்க்கு நிகழ்தலின், அவர் தலைவர் உயிர் வாழும் காலத்தைக் கருதிய பாதுகாவல் முற்கூறியவற்றோடே கூட' என்பது முற்கூறிய சூத்திரப் பகுதியின் பொருள்.

இதனை விளக்கி மேலும் நச்சினார்க்கினியர் கூறும் கருத்துக்கள் வருமாறு :

ஒருவன் பிறந்தநாள்வயின் ஏனைநாள் பற்றிப் பொருந்தாமை பிறத்தலும், அவன் பிறந்த நாண்மீனிடைத் கோண்மீன் கூடியவழி, அவன் நாண்மீனிடைத் தீது பிறத்தலும், வீழ்மீன் தீண்டியவழி அதன்கண் ஒரு வேறுபாடு பிறத்தலும், போலவன நாளின்கண் தோன்றிய நிமித்தம். 'புதுப்புள் வருதலும் பழம் புட்போதலும்' பொழுதனறிக் கூகை குழறலும் போல்வன புள்ளின்கண் தோன்றிய நிமித்தம். ஓர்த்து நின்றுழிக் கேட்ட வாய்ப்புள்ளும் ஓரிக்குரல் உளளிட்டனவும், கழுதுடன் குழீஇய குரல் பற்றலும், வெஞ்சுடர் மண்டிலத்துக் கவந்தம் வீழ்தலும், அதன்கண் துளை தோன்றுதலும், தண்சுடர் மண்டிலம் பகல்

நிலவு எறித்தலும் போல்வன பிறவற்றுக்கண் தோன்றிய நிமித்தம்.' (தொல். புறத். 36 உரை)

'நின்று நிலைஇயர் நின்நாள்மீன் ; நில்லாது
படாஅச் செலீஇயர், நின் பகைவர் நாளே' (புறம். 24 : 24-25)

என்பது நாள் பற்றிய ஓம்படை, வீழ்மீன் தீண்டியவழிக் கேடு நிகழ்ந்தமையை 'ஆடு இயல் அழற்குட்டம்' எனத் தொடங்கும் புறப்பாட்டு (229) அறிவிக்கின்றது.

மேற்கூறிய சிலசெய்திகளினால் மக்களுக்கு நாள் நிமித்தம் முதலியன பார்த்தலில் உளவாயிருந்த பெருநம்பிக்கை நன்கு விளங்கும்.

கோள்

ஒன்பது கோள்கள்

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்னும் ஏழும் பாம்புகோள் இரண்டும் ஆக ஒன்பதும் கோள்கள். இவற்றுள் ஞாயிற்றுக் கோளை முதலாகக் கொண்டு பிறகோள்களும் நட்சத்திரங்களும் மூவகை வீதியில் வலம் வருதலைப் பற்றி முந்திய 'நாள்' பற்றிய பகுதியில் விரிவாகக் கூறப்பட்டது இங்கும் நினைவு கூர்தற்கு உரியது.

'ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி,
சனி, பாம்பு இரண்டும் உடனே'

எனத திருஞானசம்பந்தர் தமது கோளறு பதிகத்தில் நவகோள் களையும் குறிப்பிட்டுள்ளமை காணலாம். தேவாரப் பாசுரங்களில் வேறு சில இடங்களிலும் இக்கோள்கள் பற்றிய குறிப்புக்கள்[1] உள.

'விலங்கல் அமர் புயல் மறந்து
மீன் சனி புக்கு.
ஊன் சலிக்கும் காலத்தானும்' (தேவா. 1 : 129 ; 3)
'சனி புதன் ஞாயிறு வெள்ளி திங்கட்பல தீயன
முனிவது செய்து உகந்தானை' (தேவா. 3;10 : 7)
'சனியும் வெள்ளியும் திங்களும் ஞாயிறும்
முனிவனாய் முடி பத்துடையான்தனை' (தேவா. 5 ; 21 : 10)
'மகத்திற் புக்கதோர் சனி எனக்கு ஆனாய்' (தேவா. 7 : 54 ; 9)

இக்கோள்களால் வரும் தீயவற்றை நீக்கி இறைவன் அருளுவான் எனத் திருஞான சம்பந்தர் அறிவுறுத்துகின்றார்.

'கோளாய நீக்குமவன்
கோளிலி எம் பெருமானே   (தேவா 1 : 62 : 1)

'கோளும் நாளவை போய் அறும்'   (தேவா 2 : 10 : 7)

என வருவன திருஞான சம்பந்தரின் திருவாக்குகளாம்.

கோள்களின் தன்மை

இக்கோள்களுள் சனி, இராகு, கேது என்னும் மூன்றும் தவிர ஏனையவை ஒளி படைத்தவை நாள்களும் ஒளிபடைத்தனவே. இதனை,

'நாள், கோள், திங்கள், ஞாயிறு, கனைஅழல்
ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்துஅனையை'
(பதிற். 14 : 3-4)

எனவரும் உவமை வாயிலாக உணர்ந்து கொள்ளலாம்.

'பகற் செய்யும் செஞ்ஞாயிறும்
இரவுச் செய்யும் வெண்திங்களும்'   (மதுரைக் .7-8)

கவிஞர்களால் பலபடியாகச் சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளன.

பதினொன்றாம் பரிபாட்டு, மழைக்கோளைப் பற்றிக் கூறவந்த இடத்தில் சில கோள்களின் நிலையையும் விளக்குகிறது.

'உரு கெழு வெள்ளி வந்து ஏற்று இயல் சேர,
வருடையைப் படிமகன் வாய்ப்ப, பொருள்தெரி
புந்தி மிதுனம் பொருந்த, புலர் விடியல்
அங்கி உயர்நிற்ப, அந்தணன் பங்குவின்
இல்லத்துணைக்கு உப்பால் எய்த; இறையமன்
வில்லிற் கடைமகரம் மேவ, பாம்பு ஒல்லை.
மதியம் மறைய, வருநாளில்.'   (பரி. 11 : 4-10)

இங்கே 'படிமகன்' என்றது செவ்வாய்க் கோளை. புந்தியாவது புதன். பங்கு, இறையமன் என்பன சனிகோளைக் குறிக்கும். பாம்பு என்பது பாம்புக்கோளாகிய இராகு. மதியம் ஆவது சந்திரன்.

வெள்ளி

‘சீர்சால் வெள்ளி’ (பதிற். 24 : 24)

‘பயங்கெழு வெள்ளி’ (பதிற். 69 : 14)

‘வசை இல் புகழ் வயங்கு வெண்மீன்’ (பட்டினப். 1)

வெள்ளி–செவ்வாய்

‘அழல் சென்ற மருங்கின்,
வெள்ளி ஓடாது’ (பதிற். 13 : 25)

வெள்ளி–வியாழம்

‘வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று’ (ஆண்டாள். பாவை 13)

‘நறவினை வரைந்தார்க்கும், வரையார்க்கும் அவை எடுத்து,
அறவினை இன்புறூஉம் அந்தணர் இருவரும்’ (கலி. 99 : 1–2)

இங்கே அந்தணர் இருவராவார் தேவர்க்கும் அசுரர்க்கும் குருவாக விளங்கும் வியாழனும் வெள்ளியுமே.

வெள்ளி-சனி

‘மைம்மீன் புகையினும், தூமம் தோன்றினும்’
தென்திசை மருங்கின் வெள்ளி ஓடினும்’ (புற. 117 : 1–2)

விடியலில் வெள்ளி

‘விரிகதிர் வெள்ளி முளைத்த நள் இருள் விடியல்’ (பொருந. 71–72)

‘இலங்கு கதிர் வெள்ளி’ (புறம். 35 : 7)

‘வைகுறு மீன்’ (அக. 17 : 21, பெரும். 318)

செவ்வாய்

‘செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்’ (புறம். 60 : 2)

‘அழல் சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது’ (பதிற். 13 : 25)

‘படிமகன்’ (பரி. 11 : 4)

சனி

‘மைம்மீன்’ (புறம். 117 : 1)

புதன்

‘புந்தி மிதுனம் அடைய’ (பரி. 11 : 5)

பாம்புக்கோள்

‘அரவு நுங்கு மதி’ (குறுந். 395 : 4 நற் 377 : 6-9, அக. 313 : 7)

‘அரவுக் குறைப் படுத்த பசுங்கதிர் மதியம்’ (நற். 367 : 6-7)

‘பாம்பு ஊர் மதி’ (நற். 128 : 2)

‘பாம்பு சேர் மதி’ (கலி. 15 : 17)

‘அரவு செறி உவவுமதி’ (பரி. 10 : 75)

மழைக்கோள்

மழை பெய்வதற்கு ஏற்ற கோள்நிலை அமைப்புக்களைப் பதினொன்றாம் பரிபாடலில் விளங்கக் காணலாம் (பரி. 11 : 1-15). மழைவளம் இல்லாமற் செய்யும் கோள்நிலையைப் பதிற்றுப்பத்து முதலிய தொகை நூல்களில் காணலாகும் (பதிற். 24 : 23-25, 13 : 25 28 ; புறம். 386 : 20-25 , 35 : 6-8,. 117 : 1-3., 388 : 1-2.; மதுரைக். 106-109., பட்டினப். 1-2)

சோதிடர்

சோதிடர் என்பது சந்திரன், சூரியன், மற்றைக் கோள்கள், நட்சத்திரங்கள், தாரகைகள் என்னும் ஐந்து வகையினரையும் குறிக்கும். இவரைப் ‘பஞ்சவர்’ என்றும் உரைப்பர்.

: சந்திரரும், சூரியரும்,
தாரகையும், நாள்மீனும்,
வெந்திறல கோள்களும் ஆம்
என விளங்கி விசும்பு ஆறா
மந்தரத்தை வலம் சூழ்ந்து
வருபவரும் நிற்பவரும்
சுந்தரம் சேர் மணி முடியாய்
சூடப்பவரும் சோதிடரே’ (சூளா. துறவு - 206)

என்பது சூளாமணி.

மாடத்து இட்ட நறும்புகை பஞ்சவர் விமானத்தையும் கடந்து அப்பாற்சென்றது என்று கவிஞர்கள் வருணிக்கின்றனர்.

‘அன்னரும் பேர் அழல் ஆக்கிய கமழ் புகை
மாதிரந்து இயங்கும் சோதிடர் வீதியும்
வாசம் ஊட்டும் வகையிற்று ஆகி — (பெருங். 2 : 18 : 49-51)

‘முகில்தலை மதியம் அன்ன
முழுமணி மாடத்து இட்ட
அகிற்புகை தவழ்ந்து வானத்து
அருவிசுப்பு அறுத்து நீண்டு
பகற்கதிர்ப் பரப்பிற்று ஆகி
பஞ்சவர் விமானம் முட்டி,
புகற்கு அரும் அமரர் கற்பம்
புக்கு, அயா வுயிர்த்த தன்றே. (சீவக. 600)

கணி

கணி என்பான் நாள்கோள்களின் நிலை உணர்ந்து உரைக்கும் சோதிடன் ஆவன். கணித மேதையாகிய இச் சோதிடர் அரசனுடன் உடனுறையும் சுற்றத்தாருள் ஒருவராவர்.

‘ஆசான், பெருங்கணி, அறக்களத்து அந்தணர்
காவிதி மந்திரக் கணக்கர் தம்மொடு’ (சிலப். 22 ; 8-9)

‘ஆசான், பெருங்கணி அருந்திறல் அமைச்சர்
தானைத் தலைவர் தம்மொடு குழீஇ’ (சிலப். 26 . 3-4)

‘பொன் அணி புதுநிறல் பொருந்திய நங்கையை
அறக்களத்து அந்தணர், ஆசான், பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடும் சென்று’ (சிலப். 28 : 221-223)

எனவரும் சிலப்பதிகாரப் பகுதிகளால் கணியின் பெருமதிப்புப் புலனாகும்.

‘ஆயுள் வேதரும் காலக் கணிதரும்’ (சிலப். 5 : 44)

என்பதில் ‘காலக்கணிதர்’ என்றது சோதிட நூலாரைக் குறிக்கும். ‘காலக்கணிதர் — கணியர்; காலத்தை எண்ணியிடுவார்’ என அரும்பத உரைகாரர் இதற்கு விளக்கம் தருகின்றார்.

இவர்கள் ஐந்து வகையான கேள்வியை உடையவராயிருப்பர்.

‘ ஆறு இரு மதியினும் காருகவடிப் பயின்று
ஐந்து கேள்வியும் அமைந்தோன் ’ (சிலப். கால்கோள். 25-26)

என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இங்கே ஆறு இரு மதியினும் என்பது இராசி பன்னிரண்டிலும் என்றவாறாம். காருகவடியாவது கிரகநிலை. ஐந்து கேள்வி என்பதற்கு ‘திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம்; நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசக்கோளும் ஆம்’ என்று அரும்பத உரைகாரர் விளக்கம் தந்துள்ளார்.

திதி, வாரம் நட்சத்திரம், யோகம், கரணம் என்னும் ஐந்தையும், ‘பஞ்சாங்கம்’ என்று வழங்குவர்.

நட்பு, ஆட்சி உச்சம், பகை, நீசக்கோள் என்பன நாள் கோள்களின் நிலையை உணர்த்தும். இந்த நிலைகளை உணர்த்துவதனைச் ‘சாதகம்’ என்று உரைப்பர்,

‘ தத்தம் நிலையும், உயர்வு இழிவும்
பகையும், நட்பும், தம் தரையும்,
வைத்து வழு இல் சாதகமும்
வகுத்த பின்னர்த் தொகுத்த நாட்
சச்சந்தனனே சுதஞ்சணனே
தரணி கந்துக்கடன் விசயன்
நந்தன் பரதன் கோவிந்தன்
என்று நாமம் தரித்தாரே . (சீவக. 13 : 107)

பஞ்சாங்கம் கணித்து நாள் நிலை உரைத்தலைச் சிறுபஞ்சமூலச் செய்யுள் ஒன்று பின்வருமாறு விளக்குகின்றது :

நாள் கூட்டம், மூழ்த்தம், இவற்றொடு நன்று ஆய
கோள்கூட்டம், யோகம் குணன் உணர்ந்து — தோள்கூட்டல்
உற்றானும் அல்லானும் — ஐந்தும் உணர்வான்நாள்
பெற்றானேல் கொள்க, பெரிது. (சிறுபஞ்ச. 42)

வானநூற் புலவர்

வானநூற் புலவரின் இயல்புகளை முப்பதாம் புறப்பாட்டு நன்கு விளக்கியுள்ளது. அது வருமாறு :

'செஞ்ஞாயிற்றுச் செலவும்,
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்,
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்,
வளி திரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும், என்று இவை
சென்று அளந்து அறிந்தார்போல, என்றும்
இனைத்து என்போரும் உளரே'. (புறம். 30 1-7)

இச் செய்யுட் பகுதிக்கு உரிய பழைய உரை விளக்கம் பின்வருமாறு :

'செஞ்ஞாயிற்றினது வீதியும், அஞ்ஞாயிற்றினது இயக்கமும், அவ் வியக்கத்தால் சூழப்படும் பார்வட்டமும், காற்று இயங்கும் திக்கும், ஓர் ஆதாரமும் இன்றித் தானே நிற்கின்ற ஆகாயமும் என்று சொல்லப்பட்ட இவற்றை ஆண்டாண்டு போய் அளந்து அறிந்தவர்களைப் போல நாளும் இத்துணை அளவை உடையன என்று சொல்லும் கல்வியை உடையோரும் உளர் — 'செலவு' என்றது செலப்படும் வீதியை. 'பரிப்பு' என்றது இத்துணை நாழிகைக்கு இத்துணை யோசனை செல்லும் என்னும் இயக்கத்தை'.

இவ்வுரைகாரர் தரும் விளக்கத்தால் பண்டு வாழ்ந்த வானநூற் புலவரின் இயல்பும் சிறப்பும் நன்கு புலனாம்.

நிறைவுரை

வானத்தில் தோற்றமளிக்கும் நாள் கோள்களைக் கொண்டு காலங்கணிப்பது உலகில் தொன்றுதொட்டு வரும் முறை பிற இயற்கைத் தோற்றங்களும் காலத்தை நினைவூட்டுவது உண்டு இரவு நடுயாமத்தில் சாமக்கோழியின் கூப்பீடும் விடியலில் கோழி கூவுதலும் காகம் கரைதலும் என்றும் உள்ளவை. வேங்கைப் பூ மலரும் காலம் திருமணத்திற்கு ஏற்ற காலம் என்று இலக்கியங்களில் பேசப்படுகிறது. ஒவ்வொரு நாளிலும் காலை மாலை, இரவு எனக் குறித்த நேரத்தில் மலரும் மலர்களும் பல. மலையில் உள்ள குறிஞ்சிமர மலர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்கிறது இப்படி எத்தனை எத்தனையோ இயற்கைத் தோற்றங்களும் நிகழ்ச்சிகளும் மாந்தர்க்கு அனுபவ வாயிலாகக் காலங்களை நிர்ணயிக்க உதவுகின்றன

'காலம்' என்பது கடவுளாகவும் போற்றப்படுகிறது. 'காலம் உலகம்' எனத் தொடங்கும் தொல்காப்பியச் சூத்திரவுரையில், (சொல். 57) 'காலம் என்றது காலக்கடவுளை' என்று கூறுகிறார் சேனாவரையர். உரிய காலத்தில் வந்து உயிர்த் தொகுதிகளைக் கவர்ந்து செல்லும் மரணதேவதை காலன் என்னும் பெயரால் வழங்கப் படுகிறது. எல்லாவற்றையும் படைத்துக் காத்து அழிக்கும் முழுமுதற் கடவுளையே காலத்தொடு பிணைத்து 'ஆதிரையான் ஆதிரையான்' என்று கற்பித்துக் கூறுகிறது உலகம். கால எல்லைக்குக் கட்டுப் படாதவர் யார்?

'காலம் என்பது கறங்குபோற் சுழன்று
மேலது கீழா கீழது மேலா
மாற்றிடுந் தோற்றம்...... (மனோன்மணீயம் I. 1, 94-96)

என்று கணித்துக் கூறுகிறார் தத்துவப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை.

'புலர்ந்து விடியும் பொழுதினிலே
பொய்கைக் கரையஞ் சோலையிலே
மலர்ந்து நல்ல மணம்வீசி
மகிழும் மலர்கள் ஆயிரமாம்;
உலர்ந்து வாடிச் சேற்றினிலே
உதிரு மவையும் ஆயிரமாம்;
கலந்த உலக வாழ்க்கையிதில்
கண்ணாற் கண்டு தெளிவாயே!

'வசந்த ருதுவும் வந்திடுமோ?
வாச மலர்கள் பூத்திடுமோ?
கசிந்து பாடும் குயில் இசையும்
காதுகுளிரச் செய்திடுமோ?
இசைந்த இளமைப் பருவத்தின்
இனிமை இனியும் எய்துவனோ?
அசைந்த உள்ளத் தேறுமொழி
ஆரே கூற வல்லாரே?